'சுகர் நாடி' என்னும்

ஜோதிட சிகாமணி

B. இரத்தின நாயகர் ஸன்ஸ் பதிப்பு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கிடைக்குமிடம்
கெங்கா புக் ஸ்டால்
பெரியமாரியம்மன் கோவில் அருகில்
சேலம்-1

M. Gopalakrishnan. Grad. I.T.E.,
ENGINEERING SUPERVISOR (P.&T. DEPT)
92, Town Railway Station Road,
SALEM-1

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ஸ்ரீராமஜெயம்

'சுகர்நாடி' என்னும்

ஜோதிட சிகாமணி

மூலமும் - உரையும்

M. Gopalakrishnan

திரிசிரபுரம் பியாககாம் ஜோதிட சித்தாந்தி

கா. இராமசாமிப்பிள்ளை

அவர்களால் இயற்றியது.

மேற்படியார் மருமகரும், மாணாக்கருமாகிய

சுவாமிமலை ஜோதிட பண்டிதர்

வீ. ஆரியமுத்துப்பிள்ளை அவர்களால்

இதற்கு உரையும், உதாரணச் சக்கரங்களும் இயற்றிச்

சேர்க்கப்பட்டிருக்கின்றன.

கிடைக்குமிடம்
கெங்கா புக் ஸ்டால்
பெரியமாரியம்மன்கோவில் அருகில்
சேலம்-1

சென்னை :

B. இரத்தின நாயகர் அண்டு ஸன்ஸ்,

அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது.

பதிப்புரிமை] 1967 [விலை ரூ. 10—00.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

Copy-Right and Rights of Translation in any other Languages, are reserved by the Publishers.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

முகவுரை

மாட்சிமை தங்கிய என் ஜனன தேசத்து சுதேசாபிமான முள்ள சகோதரர்களே! இந் நூலினை யான் வெளிப்படுத்த நேரிட்ட காரண மின்னதென இதனடியில் கூறப்படும் விஷயங்களால் பகலைப்போல இகலற மிகத் தெளிவாய் விளங்கும்.

சோதிடமென்னும் வார்த்தையின் சாதாரணக் கருத்தாவதென்னெனில், இராசி மண்டலத்தில் சூரியன் முதலிய கிரகங்களானவை சுற்றி வருதல், ஒன்றோடொன்று சந்தித்தல், ஒரு ஸ்தானத்தில் சங்கமமாயிருத்தல் ஆகிய பலவித விகற்பங்களைத் தெரிந்து அவற்றால் நேரிடும் சூரியசந்திர கிரகணங்கள், மழை காலம், கோடை காலம், வேனிற் கால முதலிய கால விகற்பங்கள், ஜலப் பிரவாகம், பெரும்புயல் முதலிய விசேட அற்புதங்கள் ஆகியவைகளைத் தெரிந்துகொள்ளும் கணித முறையேயாம். இந்த சாஸ்திரமானது பண்டைக் காலந் தொடுத்து நாகரிகமென்னும் வாசனையுள்ள ஒவ்வொரு ஜாதியாரிடத்திலும் வழங்கி வந்ததாக அந்தந்த் தேச சரித்திராசிரியர்களாலும், அந்தந்த ஜாதியார்களின் வேதாகம சாஸ்திர புராண கீதங்களினாலும், பூரணமாக அனேக திருஷ்டாந்த உதாரண அத்தாக்ஷிகள் மலிந்து கிடக்கின்றன. நமது இந்து வேதாதாரப்படி சோதிடமானது ஷஷ்டாங்கங்களில் முதன் முதலாகிய நேத்திராங்க மென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். ஏனெனில், நமது கொள்கையின்படி இகபரத்திற்குச் சாதனமாகிய ஒவ்வொரு நற்கருமங்களையும், துர்க்கருமங்களையுஞ் செய்ய நக்ஷத்திரம், திதி, நாள், வார முதலியவைகள் ஏற்படுத்தப்பட்டு, அவ்விதமே அனேககோடி நமது இந்து ஜனங்கள் நடந்து வருவது பிரசித்தம்.

இவ்விதமே கிறிஸ்தவர்கள் சத்தியவேத புத்தகமாகிய சுவிசேஷத்தில் ஜோதிடமானது பூர்வ காலத்தில் வழங்கி வந்ததாகவும் அனேக திருஷ்டாந்தங்க ளிருக்கின்றன. இந்த சோதிடமானது இந்தியாவில் பிரபலமா யிருந்ததுபோலவே இதர தேசங்களாகிய அரேபியா, ஐரோப்பா என்பது துருக்கி குருசான், ஈரான், தூரான் முதலிய தேசங்களிலும் பிரபலமா

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

யிருந்ததாகவும் அனேக சரித்திராசிரியர் மூலமாய் பற்பலவித அத்தாட்சிகளிருக்கின்றன. இன்னும் குரூசான் தேசத்திலும் எகிப்து தேசத்திலும், அரேபியா தேசத்திலும் அனேக ஜோதிட சித்தாந்திகள் உண்டா யிருந்ததாய் அவரவர்கள் கோர்வை செய்திருக்கிற நூல்களினாலேயே விளங்குகிறது. மேற்கண்ட தேசங்களில் இந்த சாஸ்திரத்தை அரசர்கள் முதல் அடிமைகளீறாக எல்லோரும் கையாண்டு வந்ததாக விளங்குகின்றன; பிரதேசங்களாகிய மேற்கண்ட இடங்களில் கையாண்டு வந்ததுபோலவே, இவ்விந்து தேசத்தையரசாண்ட இந்து ராஜாக்கள், மகம்மதிய பாக்ஷாக்கள் ஆகிய பல வம்ச அரசர்களினாலும் வழங்கப்பட்டுவந்து, இந்த சோதிட பண்டிதர்களுக்கு அவரவர்களின் வித்தையின் திறமைக்குத் தக்கபடிக்கு பூஸ்திதி முதலிய வெகுமதிகளையும், விருதுகளையும் கொடுத்திருப்பதையும் இன்றும் காணலாம். மேற்கண்ட ஐரோப்பியர், மகம்மதியர், இந்துக்கள் ஆகிய அரசர்கள் சமூகத்தில் இந்த சாஸ்திரத்தில் மிக அனுபோகமும், பாண்டித்தியமுமுடைய சோதிடர்கள் அவ்வப்போது வெற்றியைப்பற்றியும், தோல்வியைப்பற்றியும், மற்றுஞ் சில விசேஷ நடவடிக்கைகளைப்பற்றியும், சிலரின் மரணாந்தத்தைப்பற்றியும் கணித்தபடியே நடந்திருக்கிறதாய்ப் பின்வரும் திருஷ்டாந்தங்களினால் நன்கு புலப்படும்.

பூலோக சாஸ்திர நூலில் எழுதி யிருக்கிறதாவது:—ஐரோப்பா கண்டத்தில் றாம் தேசத்தை யரசாண்ட ஆஸ்டஸ் என்னும் அரசருக்கு இராஜ குமாரன் பிறந்தபோது ஜோதிடத்தில் வல்லவராகிய ஒரு பண்டிதர், இந்த இராஜ குமாரர் தம்முடைய 21-வது வயதில் 7-தேசங்களை ஜெயித்து அவற்றை யாள்வார் என ஜாதகம் கணித்தனர். ஆனால் அப்போதிருந்த நிலைமையினால் இந்த சோதிட சாஸ்திரியின் பேச்சை நம்புவதற்கேதுவில்லாதிருந்தது. ஆனால் அவர் கணித்தபடியே 21-ம் ஆண்டில் மேற்கண்ட 7-தேசங்களையும் ஜெயித்து அவற்றிற்கு அதிபதியானா ரென்பதே.

சக்கரவர்த்திகளின் சரித்திரம் என்னும் நூலில் சொல்லப்பட்டிருக்கிறதாவது:—இந்திய சக்கரவர்த்தியாகிய **தைமூ ரென்னும்** அரசர் ஒரு காலத்தில் தம்முடைய பகைஞர்களினாலும், உள்நாட்டுக் கலகத்தினாலும் வருத்தப்பட்டவராயிருக்கும்போது, **அபுதுல்லா லிஸ்சாம்** என்னும ஜோதிடர் வந்து சொன்னதாவது

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இப்போது வல்லமை ஸ்தானுதிபதியும், கீர்த்திஸ்தானுதிபதியும் குரு நோக்கம் பெற்று வைசேடி காங்கிஷமும், கோபுராங்கிஷமும் மடைந்து லாப ஸ்தானத்திற்கு இம்மாதம் 21-ம்தேதி வருகிறபடியால், அப்போது ராஜசமூகத்தின் சகல கவலையும் சூரியனைக் கண்ட பனியைப்போ லாகிவிடும், எல்லாப் பகைஞர்களையும். கலகக்காரர்களையும் அடக்கி அவர்கள் நகரங்களை யெல்லாம் தாங்களே கைக்கொண்டு அந் நகரங்களுக்குத் தாங்களே சக்கரவாத்தியாவீ ரெனச் சொன்னூர் என்பதே; ஆனுல், அப்போது எதிரிகள் நான்கு திக்கிலும் வளைத்துக் கொண்டு பாம்பின் வாய்த் தேரையைப்போல் விழித்துக் கொண்டிருக்கும் சமயமா யிருந்த படியாலும், கலகங்கள் அதிக விமரிசையா யிருந்தபடியாலும், இவர் வார்த்தையை நம்புவதிற் கிடமில்லா திருந்தபோதிலும், அவர் கணித்த படியே அந்த 21-ந் தேதி அந்த எதிரிகள் தத்தமக்குள்ளேயே சண்டை நேரிட்டு ஒருவரோ டொருவர் எதிர்த்துப் பொருது, தத்தம் பலங்குன்றிப் பின்னடைய, இதுவே தக்க சமயமென அவர்களை எதிர்த்து ஜெயித்து அவர்களின் நகரங்களை ஒவ்வொன்ருய்க் கைக்கொண்டு ஜோசியர் சொன்னபடியே தான் அரசாண்டு வந்தனர்.

பிரான்சு தேசத்தை யரசாண்ட 14-வது லூயீஸ் என்னும் அரசர் பிறந்தபோது, அப்போதிருந்த மந்திரி முதலானவர்கள் விலை மதிக்கக் கூடாத பதக்கமொன்று செய்வித்து, அரச குமாரருடைய ஜாதகத்தின் இராசிச் சக்கரத்தை மேற்படி பதக்கத்திற் பதிப்பித்து வைத்தனர்கள். A

அதன் விவரம்:—விருச்சிக லக்கினம் 4-ல் சனியும், இராகுவும், 5-ல் குருவும், 6-ல் சூரியனும், புதனும், 7-ல் சுக்கிரன், 8-செவ்வாய், 9-ல் சந்திரன், 10-ல் கேதுவுமாம்.

இதன் பயனுவது:—ரத்தின மகுடஞ்சூடி யாதொரு குறைவின்றி சிங்காசனபதியா யிருப்ப ரென்பதாம். இதற்கு எத்தனையோ வருஷங்களுக்கு முன் நம்முன்னோர்களால் இயற்றப்பட்ட இதன்சாஸ்திர சுருதியைஉதாரணமாகஇங்கெழுதுவாம்.

கவி

பண்ணவர்சாமிதானவர்சாமி பாக்கியசாமியிம்மூவர்
பாவுறுகோணகேந்த்ரமாளிகையிற் பதிவுறவவ்வவர்க்கைவையேவா
திண்ணமாமாட்சியுச்சங்களாகச் சிறந்திடத்தீயவர்பார்வை [ண்
திகைக்கப்பாலொழியநல்லவர்கருணை செழித்திடக்கிடைத்தஜாதக

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வண்ணமா மகுடஞ்சூடியிராச மாளிகையரியணேமேவி
மதகஜதுரகபதாதிகள்சூழ் வாழ்விடைத்தாழ்விலாதிருந்து
தெண்ணிலாவனேயசத்ரசாமர பூசிதையுநீ இவதைபுரியாது [தீர்ந்தோர்
செந்தனிப்பெருங்கோல்செலுத்துவானென்று செப்புவரொப்புவர்

பிரான்ஸ் தேசத்து **நெப்போலியன்** சக்கரவர்த்தியவர்களின் ஜாதகத்தில் கீர்த்தி ஸ்தானத்தில் சனியிருந்தபடியால், அந்தச் சனி திசையில் அவர் இராச்சியத்தை யிழந்து சிநேகிதர்களால் கைவிடப்பட்டு தனித்து விடுவாரென்று அப்போதிருந்த ஜோசியரால் சொல்லப்பட்டது போலவே நிறைவேறின விஷயத்தை பிரான்சு பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டதை நாம் கண்டிருக்கிரும்.

இன்னும் தற்காலத்தில் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் பிரசுரிக்கப்படும் அநேக பஞ்சாங்கங்களில் பேர்பெற்றதும் வருஷம் 1-க்கு சுமார் லக்ஷம் காப்பிகள் செலவாகின்றதுமான ஜாத்கில் என்னும் பஞ்சாங்கத்தில் கண்டிருந்ததுபோல் துருக்கிக்கும் கிரீசுக்கும் சண்டை யுண்டானதையும், இந்தியாவில் பம்பாய் முதலிய இடங்களில் வியாதியினுலும், க்ஷாமத்தினுலும் பல்லாயிரம் ஜனங்களிறந்து போனதையும் பிரமாண காட்சியாய் நாம் கணடோம்.

இவ்விதம் அனேக அத்தாக்ஷிகளினுல் பூர்வ காலந் தொடங்கி இந்த ஜோதிட சாஸ்திரமானது நடைபெற்று வருகிறதும் அனேக ரதை யனுசரித்து வருகிறதும் யாவருக்குந் தெரிந்த விஷயமே. இவ்வித அற்புதமான சாஸ்திரமானது ஜோதிட வேஷதாரிகளினுல் நாளுக்கு நாள் க்ஷீணதிசை யடைந்து அநேகருக்கு நம்பிக்கை யற்று வருகிறது. மேலும் இப்போது வெளிப்பட்டிருக்கிற ஜோதிட கிரந்தங்கள் அந்த சாஸ்திரப் பயிற்சியை யுடையவர்களுக்கன்றி மற்றவர்களுக்கு வெகுவாய் உபயோகப்படாதவைகளா யிருக்கின்றன.

இன்னின்ன காரணங்களினுல் தத்தம் ஜாதக முதலியவைகளை பிறருதவியின்றி தாங்களே தெரிந்து கொள்ளும்படியான ஒரு கிரந்தம் வெளுப்படுத்தப்பட வேண்டுமெனப் பெருத்த ஆவலுண்டா யிருந்தது. இந்த நன்னேக்கத்துடன் பல நூல்களையும் ஆராய்ந்து வருகையில் சப்த ரிஷிகள் முன்னிலையில் அரங்கேற்றப்பட்ட "சுக்கிரநாடி" யென்னும் நூலானது, மேற்கண்ட கருத்திற் குடன்பாடானதாகக் காணப்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பட்டது. ஆனால் அந்தக் கிரந்தம் 12000-ம் செய்யுட்களுள்ள தாகையால், விரிவைப்பற்றி யெல்லோரும் அவ்வளவாய்க் கவனித்தல் கூடாமை. மேலும் அதில் சொல்லப்பட்ட எல்லா விஷயங்களையும் யாவரும் அவ்வளவு எளிதாய்க் கண்டு கொள்ள வதும் கூடாமை யாகையால், எனக்கு ஜோதிட ஆசிரியரும், மாமனாருமாகிய கா. இராமசாமிப் பிள்ளை சோதிட சித்தாந்தியவர் களால் ஷை சுக்கிர நாடி சுப்பிரமணியக் கடவுள் 1200-ம் பீரங்கித் திரட்டு முதலிய கிரந்தங்களில் முக்கியாம்சங்களைத் திரட்டிப் படிப்போருக்கும், கேட்போருக்கும் ஆனந்தத்தை யுண்டாக்கத்தக்க பலவிதச் சந்தங்களுள்ள பாடல்களாய்ச் செய்வித்திருந்தார். அந்த நூலினால் எல்லோருந் தங்கள் தங் களுக்கு அவசியமானவைகளைத் தெரிந்து கொள்ளக் கூடுமா யினும், அப்பாடல்கள் சற்றுக்கருதலானபடியால் கற்றவர்க ளன்றி மற்றவர்களுக்குப் பயன்படாதென அடியேன் அவற் றிற்கு உரை யெழுதினேன். அவ்வுரையுடன் அவற்றின் ராசிப் படங்களுமிருக்கின், யாவருக்கும் களங்கமறத் தெற் றென விளங்குமென நமது நண்பர்களுள் அனேகர் நம்மை வாதித்தபடியால் அவர்களிட்டத்திற்கிணங்கி அதிக கஷ்டத் தோடு ஒவ்வொன்றிற்கும் ராசிப் படங்களமைத்து எழுதி யிருக்கின்றேன். இதில் சற்றேறக்குறைய 1500-படங்களி ருக்கின்றன. இவை ஒவ்வொரு லக்கினத்திற்கு உதாரண மாக எழுதப்பட்டவைகளானபடியால், மற்ற லக்கினங்களும் இவ்வாறே யமைத்துக் கொள்ளக் கூடுமாகையால், மொத்தம் (1500 x 12 = 18000) படங்களாம். மேலும் இதிலடங்கி யிருக் கின்ற போக பாவக முதலியவைகளைத் தெரிந்து கொள்ள இங்கு சங்கிரகிப்பாம். அவையாவன:—

இங்கிலீஷ் மாதாரம்ப கணித சக்கரம்

இதனால் சென்ற வருஷங்க ளெத்தனையானாலும், இனி வரும் வருஷங்க ளெத்தனையானாலும், அந்தந்த வருஷத்தின் ஒவ்வொரு மாதாரம்பத்தையும், தேதிகளையும் மிகவும் இலகு வாய்த் தெரிந்து கொள்ளக்கூடும்.

நட்சத்திர மண்டலம், கிரக மண்டலம் ஆகியவற்றின் வடிவம்

1. ராசி மண்டல வடிவம் ஒவ்வொரு ராசியிலும் நட்சத் திரங்கள் நிலைத்து நிற்கும் வடிவம்.

2. ராசிகளின் பிரகிருதி முதலானவைகள்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

3. ராசியின் லக்ஷணங்கள்.

4. கிரகங்களின் லட்சண முதலியவைகள்.

5. சூரியன் ஒவ்வொரு ராசிகளிலும் செல்லும் தினங்களைக் காட்டும் படம்

6. சூரியன் ஒவ்வொரு நட்சத்திரங்களிலும் செல்லும் விவரம்.

7. சந்திரன் ஒவ்வொரு ராசிகளிலும், நட்சத்திரங்களிலும் நிற்குஞ் சுத்த நாட்களைக் காட்டும் படம்.

8. கிரகப்பிருதி முதலானவைகள்.

9. நவக்கிரக நட்பாட்சி, உச்சம். பகை மூலதிரிகோணங்களடங்கிய படம்.

10. கிரகாதிபத்தியங்கள் முதலியவைகள்.

11. லக்கின மெடுக்கும் விவரம்.

12. இலகுவாய் லக்கின நிச்சயம் அறியும் படங்கள்.

மங்கள பாவம்

இது இன்னின்ன காலங்களில் பக்தியுள்ள மனைவி முதலியவர்களை விவாகஞ் செய்து, நற்புத்திரரைப்பெற்று செல்வங் குறையாமல் வாழ்பவர் இன்னார் என்பதாம்.

பாலாரிஷ்டம்

இது குழந்தை பிறந்தவுடனே அது அரிஷ்டப் படுவதும், 1-2-3-4-5-6-7-8-9-10 ஆகிய இந்த வருஷத்திற்குள் இன்னின்ன நோயினால் அரிஷ்டப் படுவதும் கூறுவதாம்.

மத்திம ஆயுசு

இது-யௌவன வயதில் இழிவான நோயினால் துன்பமடைந்து மாரகமாவதும், துட்டர்கள் கையாயுதத்தினால் மாரகமாவதும், யானை, குதிரை முதலிய வாகனங்களினால் மாரகமாவதும், அக்கினி, ஜலம், விரணம் முதலியவைகளினால் மாரகமாவதும் கூறுவதாம்.

பூரண ஆயுசு

இது பூரண ஆயுசு வாழ்ந்திருந்து மாரகமாவது இன்னின்னார் என்பதாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பூரண பிதுர் பலன்

இது பூரண வயதிருந்து செல்வத்தில் மாரகமாகும் பிதுரை யுடையவர் இன்னு ரென்பதாம்.

அவபிதுர் பாவகம்

இது துன்பத்தோடு பிதுர் மாரகமாவது ஜாதகன் கர்ப் பத்திலிருக்கும்போதே பிதுர் மாரகமாவதும், பிதுர் பரதேசி யாவரென்றது, அதிக நோயினுல் பிதுர் துயரப்படுவது இன் னின்னுர்க ளென்பதாம்.

பூரண மாதுர் பலன்

நற்குணம் நற்செய்கையை யுடைய தாயார், பூரண வய துடைய தாயார், பூரண வயதோடு மங்கிலியத்துடன் மாரகமா கும் தாயார், பதிவிரதா தர்மமுடைய தாயார் ஆகியவர்கள் இன்னின்னுர்க ளென்பதாம்.

அவமங்கல தாயார் பலன்

மங்கிலிய மிழந்தும் கற்புநிலை தவருத தாயார், மங்கிலிய மிழந்தும் துர்க்குணத்தையுடைய தாயார், மங்கிலிய மிழந்து விரணம், கடன், துன்பம் ஆகியவைகளை யுடைய தாயார் இன்னின்னு ரென்பதாம்.

அற்பாயுள் தாயார் பலன்

ஜாதகன் பிறந்த அறையிலும், ஜாதகன் பிறந்த இரண்டு வருஷத்திலும், ஐந்து வருஷத்திலும் மாரகத்தை யடையும் தாயார் ஆகியவர்கள் இன்னின்னு ரென்பதும், கங்காதீரத்தி லிருந்து தாயார் கர்மஞ் செய்பவ ரின்னு ரென்பதுமாம்.

துன்மார்க்க தாயார்

புருஷன் மனமும், புத்திரன் மனமும் கொதிக்கும்படி அடாத காரியஞ் செய்யும் தாயார், மங்கல மிழந்தும் அடாத காரியஞ் செய்யுந் தாயார் ஆகியவர்கள் இன்னின்னு ரென்ப தாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சகோதர பாவகம்

உத்தம சகோதரம், அதிக சகோதரம், சுகம், தனம், தைரியம் முதலியவைகளுடைய சகோதரம், பூரண ஆயுளுள்ள சகோதரம், வீரமுள்ள சகோதரம், மூன்று சகோதரம், உயிர்த் துணையாம் சகோதரம், ஜேஷ்டனுக்குள் அடங்கிநடக்கும் சகோதரம் ஆகியவர்களின்னின்னு ரென்பதாம்.

அவ சகோதரம்

சகோதரமின்றித் தனித்தவர், தமக்குமுன் மாரகத்தை யடையும் சகோதரத்தை யுடையவர், எப்போதும் சகோதர மின்றித் தனித்தவர் ஆகியவர்கள் இன்னின்னு ரென்பதாம்.

களத்திர பாவகம்

உத்தம குணத்தையுடைய ஸ்திரீ, ஏகதாரமாகிய ஸ்திரீ, பூரண ஆயுளுள்ள ஸ்திரீ, மங்கிலியத்தோடு பூரண வயதுள்ள ஸ்திரீ, சுகபோக பாக்கியமுடைய ஸ்திரீ ஆகியவர்கள் இன்னின்னூர்க்குக் கிடைக்கு மென்பதாம்.

சமகளத்திர பாவகம்

களத்திர மிழந்து மறு களத்திர முண்டா மென்பதும், தூரதேசம்போய் வாழுங் களத்திரம், குடும்பத்தில் நிந்தை, துர்க்குணம், துர்ச்செய்கை, குடும்பத்தை நாசப்படுத்தும் களத்திரம் ஆகியவர்கள் இன்னின்னூர்க் குண்டாகு மென்பதாம்.

அவகளத்திர பாவகம்

துர்ச்செய்கையுள்ள ஸ்திரீ, பாவ ஜெனன ஸ்திரீ, நீச ஸ்திரீ, விருத்தை, நொண்டி, குருடு ஆகிய குரூப ஸ்திரீகள், நித்திய தரித்திர ஸ்திரீ ஆகியவர்கள் இன்னின்னூர்க்குண்டு என்பதும், ஏழு ஸ்திரீ விவாகஞ்செய்தும் தளர்ந்த காலத்தில் புத்திரனல் பணிவிடை செய்யப் படுவார்கள் இன்னின்னு ரென்பதுமாம். அன்றியும், புருஷனைக் கொல்வதற்கு ஏதுவும் செய்யும் ஸ்திரீயை யுடையவர் இன்னின்னு ரென்பதுமாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

களத்திர மாரகம்

அவரவர்கள் களத்திரம் இன்னின்ன காலத்தில் மாரக மடைவார்க ளென்பதாம்.

புத்திர பாவகம்

விசேட புத்திரர்கள், யோக புத்திரர்கள், ஏகபுத்திரர்கள், கல்வியும் இராஜரீகமுமுடைய புத்திரர்கள் இன்னின்னார்க் குண்டா மென்பதாம்.

மத்திம புத்திர பாவகம்

அறிவிலி புத்திரன் கர்மம் செய்தல், ஏழுபெண் பிறந்து அதன்மேல் ஒரு ஆண் புத்திர னுண்டாதல், விழலுக் கொப் பாகிய புத்திரனுண்டாதல், அனேக புத்திரர்க ளிருந்தும் கருமத்திற்கொரு புத்திரனுண்டாதல் ஆகியவை இன்னின் னார்க் கென்பதாம்.

சுவிகார புத்திர பாவகம்

தத்தாக வேறொருவருடைய பிள்ளையை யெடுத்தல், மகள் பிள்ளையையெடுத்தல் ஆகியவை இன்னின்னார்க் கென்ப தாம்.

நபுத்திர ஜாதக பாவகம்

ஆயுள் முழுவதும் புத்திர னில்லாமை இன்னின்னார்க் கென்பதாம்.

துவேஷ புத்திர பாவகம்

பிதாவை வருத்தப்படுத்தி தூஷிக்கும் புத்திரன், நாச கால புத்திரன், கண், மூக்கு, வாய் இவை யில்லாக் குரூபியான புத்திரன் ஆகியவர்கள் இன்னின்னார்க் குண்டா மென்ப தாம்

புத்திர மாரக பாவகம்

புத்திரர்கள் பிறந்தும் நிலைத்திராமல் மாரக மடைந்து சந்ததி யில்லாதிருத்தல் இன்னார்க் கென்பதாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

யோக பாவகம்

இராஜ யோகங்கள், பிரபல பாக்கிய யோகங்கள், கன பாக்கிய யோகங்கள், தனபாக்கிய யோகங்கள், பிரபுத்வ யோகங்கள், விற்பன்ன யோகங்கள், சோதிட விற்பன்ன யோகங்கள், பிரபல விற்பன்ன யோகங்கள், சம விற்பன்ன யோகங்கள், யோக்யதா யோகங்கள், அதிகார யோகங்கள், வாகனுதிகார யோகங்கள், சமபாக்கிய யோகங்கள், கிரக பாக்கிய யோகங்கள், தியாக யோகங்கள், பிரபல பூபாக்கிய யோகங்கள், சுகானுபவ யோகங்களாகியவை யின்னினூர்க்குண்டா மென்பதாம்.

அவ யோகம்

தாய் பசித்திருக்கத் தான் புசிக்கும் தரித்திரர்கள், குட்டிச் சுவரிலிருந்து ஆயுள் பரியந்தமுங் காலந் தள்ளுபவர்கள், சாவடி சத்திரமலேபவர்கள், சட்டி யெடுத்து வீடுகள்தோறு மலேபவர்கள், வேலே கிடைத்தாலும் கூலி கிடைக்காதவர்கள், வீணுக் குழைப்பவர்கள், பரத்தையர்க்குப் பொருளேக் கொடுத்துவிட் டலேபவர்கள், பந்துக்களால் சுகம் பெறுபவர்கள், பாவஜென்மத்தை யுடையவர்கள் ஆகியவர்கள் இன்னின்னூ ரென்பதாம்.

ஆயுட் பாவகம்

ஜெனன கால நிச்சயம், இலக்கின ஸ்புடம், ஜெனன நாளின் செலவு, தசவர்க்க ஸ்புட விதி, உடல் மகாதிசை விதி, திசை வரிசை விவரம், மகா திசையின் புத்தி விவரணம், உயிர்த் திசையின் விதி, உயிர்த் திசாபுத்தி விவரணம், இரு திசை கலந்து வருங்கால் நேரிடு மாரக விவரணங்கள், காலச் சக்கர திசைகள், அட்ட வர்க்கங்கள் மாதுர், பிதுர், சகோதரம், களத்திரம், புத்திரன் முதலியோர் மாரக விதி, அரணம், விரணம் நீக்கும் விவரம், எழுவகைத் தோற்றங்கள், தசவர்க்க மடைக்கும் விவரம், தேவாங்கிஷம் 60-ம் எடுக்கும் விவரம், துவாதசாம்சச்சக்கரத்தில் முதலாவது இராசிச்சக்கர விவரம், 2-வது ஓரைச் சக்கரம், 3-வது கடிகைச் சக்கரம், 4-வது ஆரூடச் சக்கரம், 5-வது நட்சத்திரச் சக்கரம், 6-வது காரகச் சக்கரம், 7-வது ஆதரிசச் சக்கரம், 8-வது ஆயுர்பாகச் சக்கரம், 9-வது திரேக்காணச் சக்கரம், 10-வது அங்கிஷச் சக்கரம், 11-வது நவாங்கிஷச் சக்கரம், 12-வது பாபச்சக்கரம் ஆகிய விதிகளேக் கூறுவதுமாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மங்கலப் பொருத்தம், தினப் பொருத்தம், கணப்பொருத்தம், கேந்திரப் பொருத்தம், ஸ்திரீ தீர்க்கப் பொருத்தம், யோனிப் பொருத்தம், இராசிப் பொருத்தம், இராசி நாயகர் பொருத்தம, வசியப் பொருத்தம், ரச்சுப் பொருத்தம், வேதப் பொருத்தம், மரப் பொருத்தம், புட்பப் பொருத்தம், ஆயுட் பொருத்தம், திசை, புத்தி வலுச்செலவு விவரம் ஆகியவைகளைக் கூறுவதுமாம்.

முதற் பாவகம்

யோகம், யோக்கியதாம்சை, கல்வி, புகழ், வாய்மை, தர்ம குணம், சற்குணம், பாக்கிய சுகம், தருமம், அழகு, கல்விச் செல்வம், கலை ஞானதீரம், கவிதா தீரம், வாகட வித்தை, தெய்வ பக்தி, பிரபுத்வ யோகம், அன்னிய தேச வாச சுகம், இரக்ஷிக்கும் தன்மை, வீரத்துவம், புண்ணியம், ஆசாரமுடைமை, வைணவ பக்தி, சுதேச வாசம், அன்னிய தேச வாசம், அயோக்ய தாம்சை, பூரண ஆயுள் ஆகிய இவை இன்னின்னார்க்குண்டா மென்பதாம்.

இரண்டாம் பாவகம்

பிரபல தனம், இராஜரீகம், மிகுந்த தர்மம், வாக்குவளம், சோதிட வித்தை, தமிழ் வித்தை, தவம், ஞான நூலுக் காசரியத்துவம், கணித வல்லபம், விநோத வித்தை, சம்பிரதாய வித்தை, வாக்குஊனம், துற்சவனம், நேத்திர ஊனம், தங்கம் வெள்ளி, இலை, சட்டி முதலியபாத்திரங்களி லுண்ணல், மிடறு மயிர், பல்லூனம், செவி நோய், உண்ணும் சுவைப் பிரிவுகள், இரணக் களத்தில் மாரகமாதல் ஆகியவை இன்னின்னார்க் குண்டாமென்பதாம்.

மூன்றும் பாவகம்

சுக சகோதரம் அனேக ரிருத்தல், எத்தனை சகோதரமிருந்தாலும் மாரக மடைதல், முன்னும் பின்னுஞ் சகோதரமில்லாதிருத்தல், மூன்றிலொரு சகோதர நிலைத்தல், பாவவுருவமே சகோதரமாக வருதல் ஆகியவை யின்னின்னார்க் கென்பதும், பொன்னுபரணமும், முத்து நவரத்தினமு மணிபவர், ஆபரண மிருந்தும் அணிய விதியில்லாதவர், வீரியமுடையவர், புண்ணியமுங் கண்ணியமு முடையவர், அச்சமுள்ளவர், பரத்தையர் பிரியமுள்ளவர், அண்டினபேரை யாதரிப்பவர், தர்மவான், அடிமையாள் மிகுதியுடையவர் ஆகியவர்கள் இன்னின்னா ரென்பதுமாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

நான்காம் பாவகம்

பூரண வயது, மத்திம வயது, நற்குணம் ஆகிய வைகளு டைய மாதர், பசுமாடுகள் அதிகமாய் பால் கொடுக்கும் யோக முள்ளவர், பல மனைகளுள்ளவர், வித்துவத்துவம், கணக்கில் லாத பூஸ்திதி ஏவலாட்கள் ஆகியவைகளுடையவர்; சத்திரம், மடாலயங்கள் ஆகியவைகளில் அலைபவர், கன்று, காலி, பசு முதலியவை விர்த்தியுடையவர், பால் விர்த்தியில்லாதவர்கள், அன்னிய மனையிற் போய்ச் சுகம் பெறுபவர், அயலார் சுகத் தைக் கண்டு பொறாமை கொள்பவர்கள் ஆகியவர்கள் இன் னின்னா ரென்பதாம்.

ஐந்தாம் பாவகம்

சுப்பிரமணியக் கடவுளைத் தியானிப்பவர், தெய்வமே யில்லையென்பவர், அந்திய காலத்தில் புத்திரரைப் பெறுபவர், புத்திர பௌத்திரர்களை யுடையவர், 6-7 புத்திரர்கள் நிலைக்கப் பெற்றவர், சுகபுத்திரர்களை யுடையவர், அதிக புத்திரர்களை யுடையவர், யௌவன காலத்தில் புத்திரனைப் பெறுபவர், மல டர்கள், புத்திருண்டாகியும் நிலைக்கப் பெறாதவர்கள், பூரண வயதுடைய பிதுரை யுடையவர், மாதுர்பிதுர் இருவரும் ஏக காலத்தில் மாரகத்தையடையும் யோகத்தையுடையவர், மாதுர் பிதுர் கருமம் செய்யாமல் அயல் தேசம் போபவர்கள், ராஜரீ கனுயிருந்து தன் மகனுக்குச் செல்வ பாக்கியங்களைக் கொடுத்து மாரகமடைபவர், யானை, குதிரை, சிவிகை, பூமி, அடிமையாட்கள், தெய்வபக்தி முதலியவைகளை யுடையவர்கள் ஆகியவர்கள் இன்னின்னா ரென்பதாம்.

ஆறாம் பாவகம்

முடிவு நாள் வரையில் பாதகனுய்ப் பொருளையழித்துதான் மாரகமான பின் கடன் தீரும் யோகத்தையுடையவர், மார்பு நோய், புண்கள், தொந்த மேக ரோக வியாதி, சுரம், உதிர நோய், அம்மை முதலியவைகளில் மாரகமாகிறவர்கள், திடசரீர முடையவர்கள், நோயில்லா யோகமுடையவர், காராக்கிரக முடையவர், பகையை வெல்பவர், ரொணமுள்ளவர் ஆகியவர் கள் இன்னின்னா ரென்பதாம்.

ஏழாம் பாவகம்

1-3-4 தாரமுடையவர்கள், இத்தனை தாரமுடையவர்கள், இன்னகாலத்தில் கல்யாண முடிக்கப் பெறுபவர், தங்கம், பொன் வியாபாரஞ் செய்பவர், புலால் விற்பவர் ஆகியவர்கள் இன்னின்னா ரென்பதாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

எட்டாம் பாவகம்

திருடர்கள் பூரண வயதுடையவர்கள், காயத்தினுலும், சூட்டினுலும், பிளவை நோயினுலும், அச்சத்தினுலும், மாரக மடைபவர்கள் இன்னின்ன ரென்பதும், பிதுர், மாதுர், சகோதரம், களத்திரம், புத்திரன் முதலியோர் மாரகமாகும் விதிவிவாகமாகும் காலம் ஆகியவை கிரக ஸ்புட ரீதியாய் எடுக்கும் விதி யின்னின்ன தென்பதுமாம்.

ஒன்பதாம் பாவகம்

பாக்கிய யோகம், பாவ ஜெனனம், ஆடை யன்னமில்லா தலைதல், சற்குருவை யடுத்து முத்திபெறுதல், குருத்துரோகம், பிதுர்த்துவேஷம், வித்தையும் பக்தியுள்ள மனைவி, பாக்கிய யோகங்கள், பிதுர்மாரகம் ஆகியவைகள் இன்னின்னர்க் குண்டா மென்பதாம்.

பத்தாம் பாவகம்

சந்நியாசியாயிருந்து உண்மை யறிபவர்கள், சைவ சித்தாந்தியாகிறவர்கள், மகா தீர்த்த மாடுபவர்கள், யாகாதி கிர்த்தியம் செய்பவர்கள், சிவனடியார்கள், உத்யோகம், பூமி, யோகமுள்ளவர்கள், அன்பில்லார், மாதுர், பிதுர்,களத்திரம், சகோதரம், புத்திரன் முதலியவர்களுக்கு கர்மஞ் செய்பவர்கள் ஆகியவர்கள் இன்னின்ன ரென்பதாம்.

பதினோராம் பாவகம்

வாகனம், கல்வி, பாக்கியம், தர்மம், சத்தியம், லாபம் மோக்ஷம்,புதை பொருளிச்சை முதலியவற்றையுடையவர்கள், நட்ட மில்லாமல் யோகமுள்ள தமையனை யுடையவர்கள், விதியில்லாமல் மார்க்கமற்று அலைபவர், பரத்தையர்களுக்கு பொருளழித்து வருத்தப்படுபவர், தொட்ட காரியங்களெல்லாம் பலிதமில்லாதவர், யாவரையும் மனம் வெறுக்கப்பேசுபவர், நற்செய்கையில்லாதவர், நரகர்களுக்குக் குருக்களாகுபவர்கள், சூதாடுபவர்கள், வீணர், தமையனைச் சதாகாலமுந் துன்பஞ் செய்பவர்கள் ஆகியவர்கள் இன்னின்ன ரென்பதாம்.

பன்னிரண்டாம் பாவகம்

பூமி, பொருள், தந்தைமுதலியவர்களை யிழந்து அலைபவர்கள், புத்திரசம்பத்து, ராஜரீகம், தனம், சிவயோகம், பூரணயுள், தர்ம முதலியவைகளை யுடையவர்கள், பரதேசியாய்த் திரிபவர்கள், தலைவனையிழந்து செயலற்று அலைபவர்,தாய்க்கு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

நன்மை செய்யாத தீயர்; அருமையில்லாதவர்கள், சிலநாள் குறைந்துபோபவர்கள் ஆகியவர்கள் இன்னின்னாரென்பதாம்.

இன்னின்ன விஷயங்கள் இவ்வளவு தெளிவாயும், பூரண ஆதார பலத்துடனும், ஒவ்வொன்றிற்கும் தனித்தனி உதாரண ராசிச் சக்கரத்துடனும் அடங்கியகிரந்தம் இதுவரையில் தமிழில் வெளிப்பட் டிருப்பதாய்த் தோற்றப்படவில்லை. "கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டினது போல்" அந்த பெரு நூற்களை யிவ்வளவு சங்கிரகமாகவுங் கூடியவரையில் தேடிப் பிடித்து ஆடியைப்போல மிகவுந் தெளிவாகவுஞ் செய்யப்பட் டிருக்கின்றது. இதற்காக எடுக்கப்பட்ட தேக சிரமமும், திரவிய விரயமும் எத்துணைத் தென்பது இந்நூலை வாசிக்கும் ஒவ்வொரு நுண்ணறிவாளர்களும் பிற ரெடுத்துரைக்காமலே தாம் தாமே தெரிந்துக்கொள்ளக் கூடுமென்பது உலகறிந்த விஷயம். இவ்வளவு விஷயங்களடங்கிய அருமையாகிய இக்கிரந்தம் ஒவ்வொருவரிடத்தும் கட்டாயம் இருக்கற்பாலது. ஏனெனில் ஒரு கெடுதி சம்பவிக்கு முன் அதை முற்றிலும் நிவர்த்தித்துக் கொள்ளக் கூடாவிட்டாலும் ஒருவாறு கூடிய வரையில் ஜாக்கிரதையாயிருக்க ஒரு தூண்டுகோல் போலாம். ஜாதகமாவது என்னேவெனில், ஒருவர் நடந்தொழுக வேண்டிய ஒழுங்கைக் காண்பிக்கும் படமேயாம். ஆகையால் மேற்படி ஜாதகத்தின் விதிமுறைகளை இந்நூல் மிகவும் விரிவாகவும், தெளிவாகவும் எடுத்துக் காட்டுமாகையால், உற்ற சமயத்தில் ஊன்றுகோல்போல் நின்று அருகிலிருந்து அறிவைப் புகட்டும் ஒரு மந்திரியைப்போல் இகபரத்திற்குச் சாதகமாகிய காரியங்களில் நற்புத்தியையும், தந்திரோபாயங்களையும், உற்சாகத்தையும் இந்நூல் தன்னைக் கைக் கொண்டு ஆதரிக்கும் ஒவ்வொருவருக்கு முண்டுபண்ணி யுதவிபுரியும். ஆகையால் இதனாலுண்டாகும் பிரயோசனங்கள் பல இதனைக் கைக்கொண்டு ஆதரித்து அனுபவித்து வருபவர்களே தெரிந்து கொள்ளக் கூடுமாகையால், அவை யெல்லாவற்றையும் இங்கு எழுதுவது அனாவசியம்.

என தருமைத் தந்தையாகிய மகா கனம் பொருந்திய **ஜோதிட சித்தாந்தி-வீரப்பிள்ளை** யவர்களின் மாணாக்கரும், எனது ஆசிரியரும் மாமனாருமாகிய **கா. இராமசாமிப் பிள்ளை** ஜோதிட சித்தாந்தி யவர்கள் செய்த மூல பாடத்திலுள்ள யாப்புப் பிழை முதலியவைகளைக் களைந்து சொன்னயம், பொருள் நயம்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பெறத்திருத்திக்கொடுத்தவரும், ஷெகிரந்த கர்த்தர் அவர்களுக்கு அன்னியோன்ய சிநேகிதருமாகிய வித்வசேகரர் - கனம் வீரப்ப செட்டியார் அவர்களுக்கும்,

இந் நூலினை அச்சிட முயற்சி செய்தவரும், இந் நூலுக்கு வேண்டிய சில முக்கிய விஷயங்களை பார்ஸி, இந்துஸ்தானி முதலிய ஜோதிட நூற்களிலிருந்து எடுத்துதவினரும், எனது பால்ய சிநேகிதரும், யூநானி வைத்திய தாதுவிர்த்தி போதினி முதலிய பல யூநானி வைத்திய சாஸ்திர கிரந்த கர்த்தாவுமாகிய மகா கனம் பொருந்திய ஹக்கீம்-பா முகம்மது அப்துல்லா சாயபு அவர்களுக்கும்,

இதனை அச்சிடப் பொருளுதவியும், மற்றும் பற்பல சகாயமுஞ் செய்தவருமாகிய மகா கனம் சேருக்கூர் - கோட்டைய நாயுடு அவர்களுக்கும், நான் எனது இருதய பூர்வமாய் நன்றியறிந்தவனா யிருக்கிறேன்.

இந் நூலிற்குச் 'சுகர் நாடி' யென்னும் ஜோதிட சிகாமணி யெனப் பெயர் கூறியது யாது காரணம்பற்றி யெனில், இஃது சுக்கிர நாடி, சுப்பிரமண்யம், பன்னீராயிரம், பீரங்கித் திரட்டு முதலிய ஜோதிடப் பெரு நூல்களின் முக்கியாம்சங்களையே எடுத்துச் சொன்னபோதிலும், பெரும்பாலும் சுக்கிர நாடி கிரந்த முக்கியாம்ச சங்கிரகமானபடியால் மிகுதிபற்றி சுக்கிர நாடியென்னும், ஜோதிட சிகாமணி, ஜோதிட நூல்களுக்கெல்லாம் சிரோரத்தினம் போன்ற நூல் என அருத்தமாவதுமேயாம்.

இந் நூலானது தன்னை மிக்க சிரத்தையோடும் உண்மையான மனதோடும் விரும்பிக் கைக்கொண்டு, அலட்சியஞ் செய்யாமல் ஆதியோடந்தமாய் ஆராய்ச்சி செய்யும் ஒவ்வொருவருக்கும் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலமாகிய முக்காலங்களையும் பகற்காலத்தில் காட்சிப்பொருள் யாவற்றும் கண்ணிற்குப் புலப்படுவது போல விளக்கிக் காட்டும்.

குடும்பமாகிய பிதுர், மாதுர், பாலர், சகோதரம், மனைவி ஆகியவர்களின் யோகாவயோகங்களையும், குணகுணங்களையும் இந்நூல் எடுத்துக் காண்பிப்பதால் இது ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். ஆகையால் இந் நூலிற் சொல்லப்பட்டிருக்கிற ஒவ்வொரு பாவகங்களையும், விதிகளையும் ஆதியோடந்தமாய்க் கவனித்து முறையாக

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வாசித்துத் தத்தம் புத்தியில் அவகாசப் படுத்திக் தங்கள் தங்கள் ஜாதக முதலியவைகளின் பலாபலன்களைக் கண்டு தெரிந்து முறையே இகபர சாதக காரியங்களை நிறைவேற்றி இனிது வாழ்வார்களாக.

அவையடக்கம்

சீர்பெற்ற ஜோதிடர்கள் கவியிலக்கண மகிமை
 தேர்ந்தநற்புலவ ரென்னுஞ்
செய்ய தினகரன் முன்னொரு மின்மினியி னொளியெனத்
 திறமையறியாத சிறியன்
பேர்பெற்ற சுகர்நாடி ஜோதிட சிகாமணிப்
 பெயர்கொளிந்நூற் குறைதனைப்
பேதையாகிய வறிஞ னெழுதினே னிதிலுள்ள
 பிழையகற்றிடுவர் பெரியோர்
பார்மேவு மறிவுடைய ஞானியர்கள் கலைவலோர்
 பாவாணர் சோதிடர்களும்
புண்புதைய வோடுமன முற்றுமிவன் மீதுநற்
 பக்ஷமறவா திருக்க
நேர்பெற்ற ராமனடியும்மெனது நாவதனி
 னின்றுவிளையாடுபவளும்
நீங்கா திருந்தருட் டந்திந்த நூற்குமா
 நிலைமைதந் தாள்க நிதமே.

முற்றிற்று

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சிறப்புப்பாயிரம்

தஞ்சாவூர் ஜில்லா, மேகளத்தூர், வித்வ சேகரர்

வீரப்ப செட்டியாரவர்கள்

இயற்றியது

ஆசிரியப்பா

திங்கள்வளைந்துவிண் கங்கைநமுடியளவி
மங்குன்மிலைந்தொரு சங்கரனிகரிய
திரிசிரகிரியி னெருசிறைவிரியுந்
தண்டாமரைமலர் வண்டாரோடையின்
முழுநீர்நீந்திக் கழுநீர்மாந்திக்
கவையடிக்கவரி துவையடித்துளக்கலின்
வெருவியுகண்டெழு பருவியற்செஞ்சேல்
அள்ளற்பள்ளத் தகளீரம்பண்ணையின்
வள்ளக்கமல மணமலிகுவளை
களைதெறுமுழத்தியர் வளைதெறக்கைநெரித்
தமுகரிற்புகுந்துதங் கொழுநரைத்தழுவவக்
கள்ளுண்டயர்ந்து தள்ளுண்டநிலையினர்
பறித்தநாரெறிந்து வெறித்தனரோடி
மலைக்கெதிரிட்ட குலைகதிர்ச்சூட்டிடைத்
தாவினரேறக் காவிடைமேய்ந்த
பசுநிரைகன்றொடு முசுரிரைக்கணம்வெறீஇ
அறங்கோடேறுபு பெருங்காடேறப்
பாய்ந்துமைம்முகிலுட ரேய்ந்துகிழித்தாங்
கிந்துமண்டலத்துக் கொந்தளித்தெழுந்து
குமுதநண்புறுமத னமுதமுங்குதட்டி
யுழன்றுகுழன்று சுழன்றுகழன்று
நளிர்மீனென்னவிண் மிளிர்மீன்குலப்பணை
குதர்த்துச்சிதர்த்து மதர்த்துநின்றுதிர்த்து

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மேற்போய்வானப் பாற்பாய்தங்கையை
இருகரையலேயப் பெருகுநீர்க்கலக்கியுட்
பாந்தியுநீந்தியு மாந்தியும்வாந்திசெய்
தெழுந்துமேற்போகித் தொழுந்தகைத்தருவின்
பொதும்பரின்மலர்த்தேன் றதும்புறப்பாய்ந்து
சுரும்பினம்விரும்பின வரும்பினமுகுத்தாங்
கெண்டினவண்டின வண்டினமண்டின
பொம்மெனவெழும்ப வம்மலர்ச்சினைபல
முறித்துச்செறித்துக் கறித்துக்கொறித்தாண்
டண்டமுகட்டினை விண்டறக்கீண்டு
திறந்தொடுங்கலிலாப் புறந்தொடுமுந்நீர்
சுறவொடும்விளையாட் டுறநெடிதுறீஇயிவன்
மீண்டளிமருங்குழல் பூண்டளிகருங்குழல்
அரும்பின்முறுவற் கரும்பின்மொழியினர்
சுணங்கமிழ்ந்தொளிருஞ் சுணங்கமிழ்வனமுலை
மலைக்கணநின்றிழி யலைக்களபச்செங்
குங்குமவோடையிற் றங்குமக்குளிரிற்
சோகமும்வெருளும் போகநின்றுலவும்
வீமநகரினன் காமனிகரினன்
முல்லைப்புலத்தவர் தொல்லைக்குலத்தவன்
காத்தபெருமாள் கழலினைமறவாக்
காத்தபெருமாள் கடுந்தவத்துதித்தோன்
வானாட்சிகொண்ட வடமீனனைய
மீனாட்சிதிருமணி மெல்வயிற்றுதித்தோன்
சீரகநிவந்த வேரகமுவந்த
வாசன்வீரப்ப சோசியனமைத்
திருமாணுக்கற் கொருமாணுக்கன்
அன்றியுமவனுக் கொன்றியமருமான்
ஈதலாலந்த மாதயாநிதிதன்
புத்திரனரிய முத்துவிவேகிக்
குவந்துபெண்கொடுத்துத் தவந்திகழ்சோதிட
வித்தையுங்கொடுத்த மெய்த்திருவாளன்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வேலைமலைக்கொட மிழ்தமெடுத்தாற்றெழுஞ்
சோலைமலைக்குச் சுதந்தரமாமன்
சச்சிதானந்த மெய்ச்சிதாம்பரத்துக்
குறவுபூண்டுலகுடல் மயலொருமுப்பகைத்
துறவுபூண்டமைந்த சுதந்தரஞானி
பொன்னினைப்பெண்ணினைப் புவியினைவெறுத்துமற்
றென்னினைப்பெரும லிட்டம்வைத்துடையோன்
வரதராசேந்திரன் மாதவமைந்தன்
றுரைசாமிவேட்குச் சொந்தச்சினேகன்
சுப்பிரமணிய உடையாரெப்பிறந்
துள்ளநட்பாட்சியை யுள்ளவுள்ளுருகுவோன்
பண்ணுச்சாமி பதந்தொழுமாரை
யண்ணுச்சாமிமாற் கருமைச்சினேகிதன்
மங்கிலியத்திரு வளர்கடையக்குடிச்
சங்கிலிமுத்து தணபூரமுத்து
இழுக்குதன்மதத்து வழுக்கித்தளர்நடைப்
பொருப்பையூர்வீதித் திருப்பையூராட்சிக்
கரசிரகுபதிமாற் கிரசிதகுன்றம்
தராசுநாக்கென்னநி சந்தெரிந்துரைக்கு
மிராசுநாயக்கற் கிரண்டுகண்ணனையான்
துங்கர்நாயக்கர் தொல்குலத்துதித்த
சிங்கர்நாயக்கர் செல்வச்சினேகன்
விச்சுவகுலத்தி லுச்சனெனத்தச
நூறுமுகன்புக ழாறுமுகம்பெயர்
ஒருவனுக்கிசைந்த திருவருணையன்
ஏகநாயகன்சீ ரிறைஞ்சியநீல
மேகநாயக்கர் விரும்பியமணியனன்
மந்தாப்பிள்ளை மணிமலைநிகர்புயச்
சுந்தரப்பிள்ளை சுகிர்தசினேகன்
தன்மரணப்பெருஞ் சற்குணம்படைத்த
தன்மரணத்தையான் சக்குறுந்தன்மைபின்
என்மரணந்தா னிருந்துகாணுமையிச்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சொன்மராணுந்தத் துங்கொளண்டத்தோன்
இராமசாமி யெனும்பெயர்தழைத்த
பராவருசோதிடம் பாவலர்சிங்கம்
அயன்குகன்கும்ப னாதியோர் தொகுத்த
வியன்பெறுங்கணித வேதம்விரித்துப்
பாலியம்வாலிபப் பருவங்கல்வி
வாலியசெல்வம் வண்மைதிண்மை
யாயுட்காலத் தளவைதிசைபுத்தி
போயுட்புகுங்கதிப் புணப்பொடுணர்ப்புத்
துன்னிருபி றவிச் சூழ்ச்சிமாட்சி
பன்னிருதானப் பயன்முதலியாவையும்
துணிதருசொற்பொரு டுளக்கிவிளக்கிக்
கணிதசிகாமணி யெனும்பெயர்காட்டி
தந்தன னுலகிடைத் தவத்தோர்
அந்தணர்புலவ ரனைவரும்பெறவே.

இதுவுமது

வேறு

செங்கரும்புபோற்கணிதநன் னூலைக்குமாரவேள்செய்தானந்தப்
பைங்கரும்பின்சாறேபோற்சுக்கிரனுடிக்கிரந்தம்பகர்ந்தான்வெள்ளி
பொங்கமிகும்பாகாக்கியகத்தியன்றந்தான்வீமபுரத்தோர்கோமான்
எங்கள்மணிராமசாமிக்குரிசில்சருக்கரையாவியற்றினனே.

முன்னருளைப்பெற்றதந்தைகாத்தபெருமாளுரவோன் முதற்றன்வாக்காற்
சொன்னபெயரதிராமசாமியுன்குரவனெடுமாதுலன்வீரப்ப
மன்னனுனக்கிட்டபெயர்சோதிடசித்தாந்திநீமதியாற்கொண்ட
தென்னபெயரெனினுலகோர்கணிதசிகாமணிநீயேயென்கின்றாரால்.

புலவுநீர்க்கடலுலகிற்கணிதசிகாமணியெனவோர்புதுநூற்கண்டோம்
உலவுமதன்சொற்கனிவுபொருட்செறிவுத்திட்நுட்பமுய்த்துநோக்கிற்
குலவுமிந்நூற்செயராமசாமிப்பேர்தாங்கியயன்கும்பன்சுங்கன்
இலகுருவொன்றெடுத்தனரோவிவனேசோதிடக்கலையோஎன்சொல்வே
[மால்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இதுவுமது

சதையினிக்குமணியுகக்கும்பணைவீமபுரிராமசாமிசெய்த
விதையினிக்குவலயமுளார்கணிதசிகாமணியென்பாரிதுகேட்டோர்க்குச்
சுதையினிக்குமாபுலவோர்கவியினிக்குமாமுனுள சுகிர்தமான
கதையினிக்குமாவெனின்மற்றிதன்மதுரப்பதமெவரேகணிக்கவல்லார்.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

எப்புலவரெக்கணிதரெவர்க்குமேலோய்
இறந்தனையேயெனவருந்தியிருந்தேனிப்பாற்
சொப்பனத்துமழியாநூற்சொரூபனுகிச்
சோதிடசிகாமணிப்பேர்சூடிநீடி
இப்புவனத்தெந்நாளுமிருக்கின்றாய்நீ
யென்றுகண்டபிறகுதுயரெல்லாந்தீர்ந்தேன்
விப்பர்குலமணிவிளக்கேவிமலைமேவும்
வீமபுரிராமசாமிக்கோமானே.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

திரிசிரபுரம், வரகனகர், இலக்கண உபாத்தியாயர்

ஆ. கா. பிச்சை யிபுறூஹீம் புலவர்

இயற்றியது

நேரிசையாசிரியப்பா

பெருங்கட லுடீஇய மருங்குடை யுலகத்துப்
பெருமையுஞ் சிறுமையும் புதுமையு மார்க்கமு
மாயபல் பொருளு மேயதன் னுண்மை
மருட்கையிற் றெளிக்கு மருட்கை வானவன்
விரா அய்மனம் படுக்கும் பரா அய் தாபதர்
மாறுவழி சென்மார் தேறு பூரியர்
செய்வினை விருப்பொடு வெறுப்பு வையாது
சமநிலைத் தாயின் வியனிலைக் கடவு
ளறிவுப்பயன் பெறுவான் செறீஇய நோக்கத்து
மண்ணென்று தலைஇய வெண்ணென் பொருண்முத
லெழுமையு முணர்த்தும் விழுமிய பொருளுண்
மாக்களின் கரும நிகழ்ச்சி யாக்கங்
காலங் கண்ணிய மும்மைத் தாதல்
விளக்குபு வதூஉம் வினைமுதல் பலவு
மல்லபிற யாவு மெல்லை காண்மார்
நான்குதலை யிட்ட வறுபான் கலையுட்
சோதிடப் பெயரிய மாதிடத் ததனைக்
கூறியருண் முதனூ லூறுடை நாளு
மிகுதலிற் குறைதலிற் செகுதரு வளிபிற
மாய்வினை தரூஉ நோய்பல பலவு
மறிவுபுறம் போக்கும் வறுமையு மேனவும்
முடைமையிற் சீரிய தடைதரு மறிவினர்
கடைபோக வுணர்தற் கிடையீடு படுதலி
னுனித்துணர் வான்றோர் கனிப்பொடு பெறீஇ
யுச்சிமேற் கொளூஉ மெச்சுபு மகிழப்
பிறந்த ஞான்று சிறந்தமர் காலப்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பகுதிமுதல் குறித்த மிகுதிறத் தெவருந்
தத்தமக் கியன்றது தழீஇ யுத்தமத்தி
னிகழ்கின்றது நிகழ் வதுபிற புகழ்
வெளிமையிற் கொளூஉ விடாகன் றிருப்ப
வோதுநர்க் கினிய சோதிட சிகாமணி
யெனத்தகு பெயர்கொடு வனைத்தொ மளித்தனன்
குங்குமக் குயவழித் தங்குஞ் சேஎய்க்குத்
தாயமு தளித்தென வாய்பல மடைக்கட்
சூட்டுநெல் லகனிக் கூட்டுறூஉம் புனற்பெருக்
கார்ப்பரு தடைகரை பேர்ப்புரு தாணைச்
சென்னிநோக் கெதிர்ந்து பொன்னியா றெழுகுந்
திரிசிர புரத்தின் விரிசிய வாழ்க்கை
யடுக்கன்முடி விளக்கென வெடுக்குமெண் ணளவையிற்
பொருளினை யளக்கும் பொருணூல் சொன்னூ
லாருடஞ் சோதிட மங்கமனை முதற்பிற
தன்னிகர் போக்கித் துன்னிய வுணர்ச்சியின்
முனிவனென் சிறப்புத் தனிமையிற் பெறத் தகு
நாம மிய விராம சாமியம் புலவ
என்னூ லின்னூன் முன்னூ லெனப்படு
நன்னூ லின்னூ லென்னுமந் நூற்குக்
கனியிற் பாலி னினிமைபிரித் தெடுத்தென
கருத்துப் பதப்பொருள் காட்டொடு திருத்து
மின்றியமை யாவுரை யொன்றிவண் டருகெனக்
கலையினவ் வாசான் றலைமா ணுக்கனென்
றமையப் பெற்ற கமைஇய மருகன்
பேரிய லொருங்குண ராரிய முத்தெனுந்
தலைமைப் புலமைகொ ணிலைமையோன் றன்பாற்
பன்முறை வேண்டுபு மன்னுமது பெறீஇத்
தன்னையொப் புறுத்தலிற் சென்னை யகவயிற்
கெழீஇய வாழ்க்கை தழீஇய மதிப்பி
னுயுள்வே தத்தின் மேயபதி னெண்மரு
மோருரு வெடுத்தென நேருறூஉந் தவமுற்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

றபுதரா மூகம்ம தபுதுல்லா வென்
றேவரும் புகழு மாவரும் பெயரினன்
வாணிபத் துறையெனு மாணியற் கடலுள்
மூளக்குமிள ஞாயிறெனு விளக்குமதி யின்பினன்
கோட்டைய நாயுடெனக் குலவிய புகழின
னுய விருவரு மச்சிற்
பதித்துவெளிப் படுத்தினர் மதிப்புமிகப் பெறவே.

———

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

திரிசிரபுரம் வரகநகர்

மு. சோமசுந்தர உபாத்தியாயரவர்கள் இயற்றியது.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

கடல்புடைசூழ் புவியதனிற் றிரிகால மூணர்ந்திடுவான் கனத்தமாக்க
டிடமுறுநற் கணிதரில்லஞ் சேரலுமன் னோர்மகிழ்ந்து செப்பாராகி
லடல்முழுதும் பறிகொடுத்து நிலைகலங் குந்தன்மையறிந் தவரியாற்றுமே
படர்மதியாற் காலமொரு மூன்றினையுந் தேர்ந்துகொள்ளும் பரிசாய்மாதோ.

சோதிடசிகா மணியென் றொருநூலையீன் றளித்தான் சோதிடத்தில்
வாதிடவே றொருவரின்றித் தானேநின் றரசுபுரி மகிபனெப்பா
வோதிடவென் றூற்புகழும் பொன்னுமலாற் பிறருவமைக் குரிமையாகா
மாதிடவா ளுகுமொரு ராமசாமிப் பெயர்கொண் மாட்சியோனே.

இப்பெரியோன் புகலிந்நூற் குரைபுனைந்தா னவன்மாட்டே யெண்ணிற்றேர்ந்த
செப்பரிய சீடனுமாய் மருகனுமாய்த் தோன்றிவளஞ் செறிந்துலாவு
மெய்ப்பெரு நூலேனுமொரு பதினான்கா முறையிலிழைக்கு மியலோனெய்மோ
டப்பமுதமென நட்டோ னரிய முத்தெனுநாம னதிவல்லோனே.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இந் நூலாசிரிய ரவர்கள் மருமகனும், சிஷ்யருமாகிய சாமிமலை

சோதிடம் வீ. ஆரியமுத்து பிள்ளையவர்கள்

இயற்றியது.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

என்குரு வென்றரன்புகழுங் குமாரவேள் பொதியமலைக்
 கிருந்தோன்சூரன்
றன்குருவிம் மூவர்சொன்ன நூற்றிரட்டிக் கணிதசிகா
 மணிப்பேர்சாற்றி
நன்குருவ விளக்கெனத்தந்தான் வீமபுரிக் குடைய
 நாதனென்மா
மன்குரு வென்னத்தைமக னிராமசாமிப் பெரும்பேர்
 வனைத்துளானே.

இதுவுமது

மூருகனகத் தியன்புக ரிம்மூவர்சொன்ன சோதிடநூன்
 மூறையையாரும்
பருகககத்திடை யெழுத்தின் பான்மைபோற் கணிதசிகா
 மணிப்பாச்சொன்னான்
மருகனகத் தன்புடைய மாணுக்க னென்னவென்னை
 மகிழ்ந்துரைக்கொண்
டருகனகக் கலையுணர்ந்து யிராமசாமித் திருப்பே
 ரமைந்தகோவே.

இதுவுமது

கணக்கரிய விருசரணங் கனவிடத்து மறவாதான்
 கணிதநூலுக்
கெணக்கரியந் தணன்படைத்தா னெனக்கணித சிகாமணிநூ
 லியற்றினனென்
றணக்கரிய மாமனூர்சோ திடநூற் காசிரியன்
 றமிழ்நூலான்றோன்
சினக்கரிய கழிவீம புரிராம சாமிச்சோ திடச்
 சிங்கேறே.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

திரிசிரபுரம் பீமநகர்

சோதிடம் ரா. சோலைமலைப் பிள்ளையவர்கள்

இயற்றியது

பூமணமாருச்சோலைசூழ்வீம
புரத்தினன்பொதுவர் தங்குலத்தோன்
புண்ணியவான்காத்தபெருமாளீன்ற
புத்திரசிகாமணியெனக்கு
மாமனுங்குருவுமாமணிஞான
மணிசிந்தாமணிதபோமணியின்
மணிநவமணியிராமசாமிப்பேர்
மகாமணிகண்மணிமதுரத்
தேமணநிறைந்தபாக்களாற்கணித
சிகாமணியென்றொருபெருநூற்
றிரட்டினனதுதான்சோதிடக்கலைஞர்
செல்வமோவவர்மனத்தேனோ
சேமநன்னிதியோவவர்விளைநிலமோ
செங்கணோவவர்திருமுகமோ
திரவியமிருப்போவவர்மனைவிளக்கோ
சிவனேயாதெனத்தெரியேன்.

திரிசிரபுரம் பீமநகர் டிராப்ட்ஸ்மேன்

துரைசாமி நாயக்ரவர்கள்

இயற்றியது

மன்னுமெழில் வீமபுரி வாதரா சேந்திரமால்
மைந்தனுழிப்
பொன்னுரியற்கடிமை துரைசாமியென்பே ரெனக்கிளமைப்
போதேவாய்த்த
வின்னுயிர்நேய னிராமசாமி மஹாகணித நன்னூற்
கிறைவன்செய்த
மின்னுமிகழ்கணித சிகாமணியவன்றன் மெய்யுருப்போல்
விளங்கிற்றம்மா.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

குன்றத்தூர்

மதுரகவி மாணிக்க முதலியாரவர்கள்

இயற்றியது

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

பன்னுதமிழ்ப்புலமை மிகுமிராமசாமிப்
　　பாவலன் செய்சோதிடநூற் கினியபாவின்
நன்னர்நவநீதமெடுத் துதவுமாங்கே
　　நனிவலஞ்சேர்பீமநகர் நயக்கவந்த
உன்னருசீரார்யமுத்துப் பெரியோனுய்ந்த
　　வுரைவரைந்தான தற்குவமை யுளதாச்சேடன்
சொன்னபெருந்தோஷத் தானுப்பிளந்து
　　தொய்யலுறீ இத்தலைமேன் மண்சுமக்கின்றனே.

திரிசிரபுரம் வரகனேரி,

ஸ. பொன்னுசாமி பிள்ளையவர்கள்

இயற்றியது

மாதிரிசிரபுரமிராமசாமிசொன்ன கணிதசிகா
　　மணியைக்கேட்டு
வேதமதிற்சாகைகள் போற்பாகம்வகையிப்படியார்
　　விரிப்பரிந்த
மேதகுநூலச்சியன்றவுடனெனக்குமொன்றுதர
　　வேண்டுமென்னப்
போதனும்வந்திவனகரிப்பொருப்பினிடையிருந்துதவம்
　　புரிகின்றனே.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

திரிசிரபுரம் பீமநகர்

இராசு நாயகரவர்கள்
இயற்றியது

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

போதிடவன் கலைகளுணர்புலவனிரு வருங்கயிலைப்
பொருப்புட்போத
மாதிடவன் வீமபுரிராமசாமிக் கணித
வல்லோன் சொன்ன
சோதிடசிகாமணி போற்சொன்மினென முன்புசிகைச்
சுடர் கண்டேனென்
றோதிடப்பெற்றதுபோது மென்றகல குகன்மலைவா
யொதுங்கினனே.

திரிசிரபுர-பீமநகர்

வே. சுப்பிரமணி யுடையாரவர்கள்
இயற்றியது

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

பொங்கவரும்பாற்கடலி னமுதையரி திரட்டிமுற்றும்
புலவர்க்கீந்தான்
இங்கவருங்கல்லாத வெவருமுக்காலத் தெளிவாமமுதை
யின்பாய்
நுங்கவருந்தாது கணிதக்கடலைக் கடைந்துசிகாமணி
நூற்றந்தான்
றுங்கவருந் தீபமன்ன ராமசாமிக் கணிதத்
துரைச்சிங்கேறே.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சென்னை - இந்து யூனியன் அச்சுக்கூடத்தின் அதிபர்

பிருங்கி - இராமசாமி முதலியாரவர்கள்
இயற்றியது

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

நவராசக்கோண் முறையுநாண் முறையுமாண் முறையி
னன்காராய்ந்த
தவராசசங்கரமா முனியும்வியந்தரிதென் ருன்
ருனன் நூலை
விவராசறுதிநிரப்பத்தமிழ்க்கவியாலியாவருக்கும்
விளக்கினன்பொ
துவராசகுலதீபன் றுரைராமசாமியிளஞ்
சுடரோன்மன்னே.

சென்னை - சோதிடம்

உருத்திரகோடியா பிள்ளையவர்கள்
இயற்றியது

திரிகாலங்கண்டறிந்த சித்தர்களுமொருகாலந்
திகைப்புந்தேர்ந்து
புரிகாலமொன் றுமுள வெனக்குறிக்குஞ் சோதிட நூற்
புணர்ப்பையாருந்
தெரிகாலமிவன்கால மென்றெவரும் வியப்பமறை
திறந்துதந்தான்
அரிகாலங்கடுத்தவ னிராமசாமிக்கணித
வரசரேறே.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சென்னை :

அ. பெ. தம்புசாமி பிள்ளையவர்கள்
இயற்றியது

தெள்ளுவர்நீர்க்கட லுடுத்தசெகதலத்து முனிவரருஞ்
சித்தராரும்
விள்ளுவர்மற்றெவர்க் கெளிதென்றுரைக்க விரீஇக்
கிழக்கணிதநூலை [கிடந்த
வள்ளுவர் புரோகிதர்க்கு மற்றெவர்க்குங் கற்றுரைக்கும்
வண்ணஞ்செய்தான்
றுள்ளுவராற் புனல்வீமபுரிராமசாமி மஹா
சுகிர்தவானே.

சென்னை மாபுஸ்கான்தேவடி யூனானி தாதுவிர்த்தி போதினி எனும்
நூலாசிரியராகிய

அக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள்
இயற்றியது

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

இரவியாதிநவநலோரிராசிமண்டலத்திலே
இருபதோடுமேழுமானதாரகைக்கணிடையிலே
விரவியோடிமீள்வுறுஞ்சதாகதிப்படர்ச்சியில்
மேவுகாலவரையறைக்கணிதநூல்விரித்தனன்
புரவியோடியிரதமோடவதினெழும்சராகமேற்
பொங்கியோடிவானகம்புதைக்குட்வீமபுரியுளான்
அரவிநாடகங்குளித்தவண்ணலார்குலத்தினன்
அறமுருக்கொடுதையனுமிராமசாமியறிஞனே.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

தஞ்சாவூர் ஜில்லா திருப்பையூர்

இரகுபதி மளவராயரவர்கள்

இயற்றியது

மனவாக்குக்கெட்டாது மண்ணுவிண்ணுந்திசைமுகனும்
மயங்கமுன்னோர்
சொனவாக்கம் படைத்தகன்ற சோதிடவண்பாற்கடலைத்
துருவிமாவிற்
பனவாக்கு நயவமுதைக் கணிதசிகாமணிநாமம்
பரப்பித் தந்தான்
கனவாக்குமூலகேனு மிராமசாமித் தவச்சிங்
காரன்மாதோ.

திரிசிரபுரம் பாலக்கரை யாதவாள் தெருவிலிருக்கும்

சோதிடம் - முத்தையக் கோனரவர்கள்

இயற்றியது

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

மணப்பொருத்தம்பாலர்தன்மைமளப்பருவங்கல்விசெல்வம்
வண்மைதத்தங்
குணப்பொருத்தமாயுணிலைக்குறிப்பனைத்தும்பன்னிரண்டு
கோளும் [தானக்
வணப்பொருத்தப்பாக்களினல் வகுத்துரைத்தான்கணிதசிகா
மணிநூலன்பாற்
றணப்பொருத்த ரிடத்துமிலி ராமசாமிப் பெரும்பேர்
தழைத்துளோனே.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மஹாவித்வான் சித்தாந்த ரத்திநாகரம், அரண்வாயல்

வெங்கடசுப்பு பிள்ளையவர்கள்

இயற்றியது

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

சொல்வளரு முத்தமிழின் சங்கவொலிச் செய்யுளெங்குஞ்
சுவையரு நாற்
சொல்வளரு முத்தமிழின் சங்கவொலிச் செய்யுளெங்குந்
தோலா வெற்றி
வில்வளருஞ் செங்கைமுடிக் காவலர்க ளொழுக்கமெங்கு
மீயளாவி
வில்வளருஞ் செங்கைமுடிக் காவலர்க ளொழுக்கமெங்கு
மிளிர்சோ ணாட்டுள்,

அந்நாட்டு மங்கைதிருப் பங்கேரு கானனமென்
றறைதற் பாற்று
யந்நாட்டு நகர்நாப்ப ணவண்முலைபோல் வளர்ந்தோங்கு
மசலக் கோயிற்
பைந்நாட்டக் குவளையருட் சுகந்தகுந்த ளாம்பிகையோர்
பாகர் மார்பிற்
பைந்நாட்டப் பணித்தாயு மானசெல்வர்க் கினியசிராப்
பள்ளி தன்பால்,

காமபுரி போலுமெனப் பற்பலகா மரைக்காட்டுங்
கருணை பூத்த
சோமபுரி போலுமெனக் குளிர்முகசோ மரைக்காட்டுஞ்
சொன்னத் தாலா
மேமபுரி போலுமெனப் பொன்னெடுமா ளிகைகாட்டு
மிணையில் சீரார்
வீமபுரி புரிந்தபெருந் தவப்பயனு யங்கவுளிர்
விளக்க மிக்கோன்,

மாதவனங் கண்ணபிரான் முன்னமவ தரித்ததிரு
மரபென் றோங்கும்
யாதவர்தங் குலத்துவந்தோன் மாராம சாமிப்பே
ரியற்பா வல்லோன்

5

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வேதவழி விரிந்தொளிர்சோ திடமுழுது முணர்ந்தவற்றை
விளங்க யார்க்கும்
ஓதவருள் கொடுதமிழாற் சோதிட சிகாமணியென்
றொருநூ லாக்கி,

திங்களின் முற்பிறையின் வளர்ந்துறக் கிரகநாயகர்பேர்
திகழு மன்னோர்
தங்களர சாட்சியுச்சம் பகைநீசந் தானுதி
பதிக டம்பேர்
இங்களவி லவருதவும் பயனியம்பி நாற்குப்பா
யிரமா வைத்து
மங்களபா வந்தொடங்கிப் பாலாரிட் டத்திறெடு
வரிசை யாக,

ஆயுளுறு பிதுர்மாதுர் துணைவர் களத்திரமைந்த
ரவர்சேர் யோக
மேயவிலக் கினகிரக புடந்தசவர்க் கந்தெளித்து
விளங்கு சீவன்
பாயவுடற் கெய்துதிசா புத்திமிகு காலசக்ரப்
பாங்கு காட்டி
நேயமுடன் னட்டவர்க்க நிரியாண காலமிவை
நிகழ்த்திப் பின்னர்,

துவாதசரா சிகளினவக் கிரகநிலை பலாபலங்கள்
சோதித் தோதித்
தவாதவொரு மெய்க்கணித ஞானக்கண் மானிடர்க்குத்
தந்தாங் கீந்தா
னிவாதவர்கண் மணியனையான் புகழுடம்பே போற்சிறக்கு
மிந்நூ லோடிங்
கொவாதபிற சோதிடநூற் கீதிறமை பூண்டொளிர்மாண்
புளக்க ணோர்ந்து,

விஞ்சைபல விளைபதியென் றுலகமெலா மதிக்கநனி
விளங்கா நிற்குந்
தஞ்சைவள நகர்க்கணித்தா மேல்வளமென் கிராமத்திற்
றழைந்து வாழ்வோ

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

னெஞ்சையற நெறிக்காக்கும் வணிகவே ளாண்மரபி
னிலவுஞ் சைவன்
மஞ்சைநிகர் கவிமழைபெய் வீரப்பசெட்டியென
வருபா வாணன்,

எட்டுறுபல் காலிகித வழுக்களைந்தி யாப்பியலோ
டியை பிலாத
பாட்டுகளைச் சொன்னயமும் பொருணயமும் பெறத்திருத்திப்
பரிவோ டிந்நீர்
நாட்டுறைசெந் தமிழுணரு மாந்தரெளி துணர்ந்துவப்ப
நல்கப் பாடந்
கேட்டுளவா றிந்நூலிற் றன்குருமா துலன்கருத்தின்
கிளர்ச்சி தோன்ற,

சீரியசோ திடப்புலவர் கருத்தொடுதன் னநுபவமுந்
திகழ்வித் தூழின்
காரியகா ரணங்காட்டுஞ் சோதிடசி காமணியைக்
கருணை யாலே
மாரியைநேர் சற்குணவா னீரகங்கொ ளேரகத்து
வளர்வே ளன்னு
ஞரியமுத்துப் பிள்ளையுரை வரைந்து பதிப்பித்தா
னச்சின் மாதோ.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தர முதலியாரவர்கள் இயற்றியது

பதினான்குசீர் விருத்தம்

தேர்ந்துணர்த்தண் டலைகளுறுஞ் சிரபுரத்துப் பீமநகர்த்
திலகனென நாளும் வாழ்ந்த
திகழ்கணித வாருடச் சிங்கமிரா மச்சாமி
திரள்வேந்தர் நனிகொண் டாட

வீந்தனனற் சோதிடசி காமணியென் றொருபனுவ
லேய்ந்தபத் தழகு மேவி
யிலங்குறுகற் பனையலங் காரநவ ரசமனைத்து
மேற்றபல பாக்க டம்மா

லேந்துபுக ழிந்நூலி னருமையனு பவித்தெவர்க்கு
மிசைக்குமவன் மருக னுனை
வெண்ணருஞ்சீர் வாய்ந்தவா ரியமுத்துக் கவிஞனிங்கா
விருங்கடனீ ருண்டு விண்ணரி

னீந்துமழை யெனச்சந்தக் கவிபொழியும் வீரப்ப
னெனும்புலவர் சிகாம ணிநன்
னேர்மையுடன் புரைதிருத்தித் தரவச்சி லினிதேற்றி
நிலைத்தபுகழ் பெற்றிட் டானால்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

பாட்டு — எண்

அ

அகதி தரித்திர ஜாதகம் 638
அக்கினி குண ஜாதகம் 981
அக்கினியால் மாரகமுண்டாம் ஜாதகம் 1239
அங்கிச சக்கரம் 878
அசுபதியின் பெயர் 1
அச்சமில்லா ஆண்மை யுண்டாம் ஜாதகம் 966
அடிமையாளுண்டாம் ஜாதகம் 1172
அடுக்குப் பல்லுடைய ஜாதகம் 1101
அட்டக வர்க்கம் 732-734
அதம சகோதர ஜாதகம் 217-220
அதிகார யோக ஜாதகம் 477-483
அதிக நோயினால் மாரகமுண்டாம் ஜாதகம் 1123
அதிக புத்திரருண்டாம் ஜாதகம் 1202
அதிக பொருள் வைத்து வியாபாரஞ் செய்யும் ஜாதகம் 1284
அத்தை மகளை விவாகம் செய்யும் ஜாதகம் 29
அந்தியத்தில் சகோதரமில்லா ஜாதகம் 1132
அந்திய கால புத்திரருண்டாம் ஜாதகம் 1199
அந்திய வரையில் உத்தம ஸ்திரீ சம்பந்தமுண்டாம் 1170

பாட்டு — எண்

அமங்கலை களத்திரம் 347-359
அமங்கலை மாதுர் ஜாதகம் 174-179
அம்மை நோயினால் மாரகமுண்டாம் ஜாதகம் 1219
அரணம் விரண மெடுக்கும் விதி 809-821
அரிஷ்டமுண்டாம் ஜாதகம் 1207
அவகளத்திர ஜாதகம் 350-365
அவசகோதர ஜாதகம் 221-239
அவபிதிர் பாவக ஜாதகம் 122-160
அவபிதிர் மாரக ஜாதகம் 144-160
அவயோக ஜாதகம் 629-660
அவிட்டத்தின் பெயர் 5
அழகிய புத்திரருண்டாம் ஜாதகம் 40
அழகிய ஸ்திரீ சம்பந்த ஜாதகம் 1171
அழகுஞ் செல்வமுமுடைய புத்திரரைப் பெறும் ஜாதகம் 370
அழகுந் தர்மமு முண்டாம் ஜாதகம் 935
அளவில்லா தர்மமுண்டாம் ஜாதகம் 931
அறுபத்தியாறு வயதுடைய ஜாதகம் 1007
அறுசுவையிலும் பிரியமுண்டாம் ஜாதகம் 1117
அற்பாயுள் தாரமுண்டாம் ஜாதகம் 356-357-358-359-360-361
அற்பாயுள் பிதிர் ஜாதகம் 150
அற்பாயுள் மாதுர் ஜாதகம் 180

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பாட்டு — எண்

அற்பாயுள் வாழ்வுடைய ஜாதகம் 1236-1237
அற்ப வாழ்வு தரித்திரிய ஜாதகம் 647-649
அனீத சம்பந்தமுடைய ஜாதகம் 347-348-349
அனுஷத்தின் பெயர் 4
அன்ன சத்திரம் ஆளடிமை யுண்டாம் ஜாதகம் 1167
அன்னிய தேசம் போய் பாழ் நிலம் வாங்கும் ஜாதகம் 974
அன்னிய தேசம் போய் வாழும் ஜாதகம் 612-613-953-973
அன்னிய ஸ்திரீ மனமுள்ள ஜாதகம் 361
அன்னிய ஸ்திரீ சம்பந்தமுண் டாம் ஜாதகம் 1227-1163
அஸ்வ யோக ஜாதகம் 502-572
அஸ்வத்தின் பெயர் 3

ஆ

ஆசார முண்டாம் ஜாதகம் 963
ஆடையாபரண மிருந்தும் அணிய விதியில்லாத ஜாதகம் 1149-1150
ஆண்தேவதையைக் கொண் டாடும் ஜாதகம் 1196
ஆண்ரூபமுள்ள களத்திர ஜாதகம் 364
ஆதரிச சக்கரம் 876
ஆபோகிலியம் 50
ஆயிலியத்தின் பெயர் 2
ஆயுட்பாகச் சக்கரம் 877
ஆயுட்பாவகம் 662-674
ஆயுட் பொருத்தம் 904-905-906
ஆரிய நூலினும் தமிழிலுஞ் சிறந்த ஜாதகம் 1504

பாட்டு — எண்

ஆரூட லக்கினம் 876
ஆளடிமை செல்வ முண்டாம் ஜாதகம் 967
ஆறும் பாவகம் 1215
ஆறுமிடத்தின் பெயர் 21
ஆறு எழு புத்திரர் நிலைக்கு ஜாதகம் 1202

இ

இடிவிழுந்து மாரகமாகும் ஜாதகம் 1241
இந்திர சுகமும் அன்னிய சம்பந்த முண்டாம் ஜாதகம் 1191
இரண்டாமிடத்தின் பெயர் 19
இரண்டு மனைவியை விவாகஞ் செய்யும் ஜாதம் 34
இரண்டு வருஷ பாலாரிஷ்டம் 54
இரத்தின மாலையணியும் ஜாதகம் 1144-1145
இரக்ஷிக்குந் தன்மையுண்டாம் ஜாதகம் 955
இராகு காரகாதிபத்தியம் 52
இராசிகளின் பெயர் 7-8
இராகுவின் பெயர் 13
இராசி குணகாரம் 771-775
இராசிச்சக்கர விவரணம் 870
இராசி நாயகர் பொருத்தம் 891
இராசிப் பொருத்தம் 890
இராஜ சபையில் வெட்கப் படும் ஜாதகம் 1160
இராஜசுகமுண்டாம் ஜாதகம் 935
இராஜயோக ஜாதகம் 427-428-429-430-494-495-496-503-509-513-515-548-599
இராஜரீக சேவக ஜாதகம் 1285
இராஜரீகத்தில் வீரியமுண் டாம் ஜாதகம் 1153

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பாட்டு	எண்
இருதிசை கலந்துவரும் மாரக விதி	687-693
இரோபதியின் பெயர்	6
இலக்கண சாஸ்திர வல்லப ஜாதகம்	939
இலக்கண விலக்கிய முணரும் ஜாதகம்	939-949-1074-1055
இலக்கண விலக்கிய வாகட சோதிட வல்லப ஜாதகம்	1044
இலக்கினத்தின் பெயர்	19
இலக்கின பலமும் நாளுதி பலமு மறிய	1121
இலக்கின மடைக்கும் விவரணம்	851
இலக்கினராசிபாதச் செல்கலை யறிய	677
இலக்கினஸ்புடவிவரணம்	827-836
இலட்சாதிபதி யோக ஜாதகம்	543
இலட்சுமிகர யோக ஜாதகம்	504
இலட்சுமிபோல் மனைவியுண்டாம் ஜாதகம்	297
இழிவான சம்பந்தத்திற் பொருளளிக்கும் ஜாதகம்	351
இளமையிற் புத்திரருண்டாம் ஜாதகம்	405
ஈ	
ஈன தரித்திர ஜாதகம்	633-636-637-639-640-641-642
ஈனமாதுர் ஜாதகம்	659
ஈனமான பானங்களைச் செய்யும் ஜாதகம்	1120
ஈன ஸ்திரீ சம்பந்தமுடைய ஜாதகம்	350-351-356
உ	
உடலின்பொருத்தமறிய	910
உடல் உயிர்ப் பொருத்த விதி	919-920
உடல்மகாதிசை விதி	680-683
உடற் பொருத்தம்	911
உத்தம அதம களத்திரம்	36
உத்தம ஏககளத்திர ஜாதகம்	295-299-300
உத்தம களத்திர ஜாதகம்	295-337-330
உத்தமகளத்திரமும் புத்திர தோஷமும் உண்டாம் ஜாதகம்	332-335
உத்தம குணமும் செல்வமுமுடைய களத்திர முண்டாம் ஜாதகம்	32
உத்தம சகோதர ஜாதகம்	202 218-220
உத்தம மாதுர் ஜாதகம்	168-172
உத்தியோகமிழந்து அலையும் ஜாதகம்	1285
உத்தியோகமும் கீர்த்தியு முண்டாம் ஜாதகம்	1284
உத்தியோகமும் பூமியுமுண்டாம் ஜாதகம்	1286
உத்திரட்டாதியின் பெயர்	6
உத்திரத்தின் பெயர்	3
உத்திராடத்தின் பெயர்	5
உயிர்த்திசா புத்திவிவரம்	686
உயிர்த்திசை விதி	685
உயிர்த்துணையாம் சகோதரம்	212
உயிர்ப் பொருத்தம்	912-915
உரோணமில்லா ஜாதகம்	505
உரோகணியின் பெயர்	1
உலகோர் ஒப்பாத ஜாதகம்	978
உஷ்ணத்தால் மாரகமுண்டாம் ஜாதகம்	1219
ஊ	
ஊமையாயும் வாய் குளறலாயுமிருக்கும் ஜாதகம்	1072
ஊமையா யிருக்கும் ஜாதகம்	1071
ஊனம் நிவர்த்தியாம் ஜாதகம்	1073

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பாட்டு	எண்
எ	
எட்டாமிடத்தின் பெயர்	22
எட்டாம் பாவகம்	1231
எண்பது வயதுண்டாம் ஜாதகம்	1018
எண்பத்திமூன்று வயதுண்டாம் ஜாதகம்	977-1009
எண்பத்தியாறு வயதுண்டாம் ஜாதகம்	1008
எண்பத்தியெட்டு வயதுண்டாம் ஜாதகம்	1009
எண்பத்தியேழு வயதுண்டாம் ஜாதகம்	996
எத்தொழிலினும் லாபமுண்டாம் ஜாதகம்	1298
எவ்வன காலத்தில் புத்திருண்டாம் ஜாதகம்	1024
எழுவகைத் தோற்றம்	837-840
எழுவது வயதுண்டாம் ஜாதகம்	1003-1004-1005-1006
என்ஞளும் செல்வமடையாத ஜாதகம்	1031
என்ஞளும் தனமுண்டாம் ஜாதகம்	1031
ஏ	
ஏக களத்திர ஜாதகம்	304-338 1224-1225
ஏக சகோகதரமுள்ள ஜாதகம்	2010
ஏக சகோதர மிருந்தும் லாபமில்லாத ஜாதகம்	1133
ஏகாதிபத்திய சோதனை	762-770
ஏகாந்த சஞ்சார தரித்திர ஜாதகம்	634
ஏகாந்தியா யிருக்கும் ஜாதகம்	341-343
ஏழாம் பாவகம்	1223
ஏழாமிடத்தின் பெயர்	22
ஏழுக்குடையவர் திசை மாரகமென் றறிய	1230
ஏழுவருஷத்தில் பாலாரிஷ்ட ஜாதகம்	54
ஏழ்மையுடன் கோழைப் புத்தியும் பயமும் உடைய ஜாதகம்	116
ஐ	
ஐந்தாம் பாவகம்	1194-1195
ஐந்தாமிடத்தின் பெயர்	21
ஐந்து வருஷத்தில் பாலாரிஷ்டமுண்டாம் ஜாதகம்	54
ஐஸ்வரிய முண்டாம் ஜாதகம்	944
ஒ	
ஒரு கண் பார்வையுண்டாம் ஜாதகம்	1089
ஒரு ராசியில் இரட்டைப் பிள்ளை பிறக்கும் விவரம்	841-849
ஒரு வருஷத்தில் பாலாரிஷ்ட ஜாதகம்	54
ஒன்பதா மிடத்தின் பெயர்	23
ஒன்பதாம் பாவகம்	1255
ஒன்பது வருஷத்தில் பாலாரிஷ்டமுண்டாம் ஜாதகம்	54
ஒழுக்கமில்லாத துற்குண ஜாதகம்	983
ஒன்றுக்குதவாத சகோதர ஜாதகம்	1141
ஓ	
ஓராச் சக்கர விவரணம்	852-854
ஓரைச் சக்கர விவரணம்	871

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பாட்டு	எண்
க	
கடவுளுக் கன்புள்ள நடையுடைய ஜாதகம்	978
கடிகாச் சக்கரம்	872
கணப்பொருத்தம்	884-886
கணித சாஸ்திர வல்லப ஜாதகம்	139-1066
கண் மங்கிப்போகும் ஜாதகம்	1088
கந்தமூல துவர்ப்பில் விருப்புள்ள ஜாதகம்	1115
கபடகளத்திர ஜாதகம்	345
கப ரோகத்தால் மாரக முண்டாம் ஜாதகம்	1219
கரந்துறைக் கிரகப் பெயர்	14
கரிகி மாரக மடையும் ஜாதகம்	1241
கருப்பத்தி லிருக்கும்போது (சிசுவானது) அதன் பிதுர் மாரக மடைந்த ஜாதகம்	153-154-156
கரும பல மறிந்து கூற வேண்டுமெனல்	1290
காலாங்கிஷச் சக்கர விபரம்	863
கலியாண கால நிர்ணயக் குறிப்பு	27-37-38-39-49
கல்வியும் அறிவு முண்டாம் ஜாதகம்	1061
கல்வியும் உண்மையு முண்டாம் ஜாதகம்	941-942-1051-1063
கல்வியும் கீர்த்தியு முண்டாம் ஜாதகம்	954
கல்வியும் கேள்வியும் மிகுதியுண்டாம் ஜாதகம்	1061 1062-933
கல்வியும் ஞானமு முண்டாம் ஜாதகம்	1059
கல்வியும் சிறப்பு முண்டாம் ஜாதகம்	958
கல்வியும் செல்வமு முண்டாம் ஜாதகம்	646-947-1293
கல்வியும் தவமும் தனமு முண்டாம் ஜாதகம்	1060
கல்வியும் தவமும் பூமியு முண்டாம் ஜாதகம்	945-946
கல்வியுந் தெய்வ பக்தியு முள்ள ஜாதகம்	951
கல்வியும் பொருளும் சத்தியமு முண்டாம் ஜாதகம்	1050-1053
கல்வியும் பொருளும் அஸ்வ முண்டாம் ஜாதகம்	1292-1294
கல்வியும் வீரமு முடைய ஜாதகம்	1063
கவி மாலை செய்து சிவனடியிற் சாற்றும் ஜாதகம்	1052
களத்திரம் உடனே மாரகமாகும் ஜாதகம்	343
களத்திரத்தை உடைத்தாயிருக்கும் ஜாதகம்	345
களத்திர மாரகவிதி	366-367-801-1251
களவும் சூதும் செய்யும் ஜாதகம்	1309
கற்பிற் சிறந்த ஏக களத்திர ஜாதகம்	297-298
கற்பு நிலையுள்ள மாதுர் ஜாதகம்	169-171
கனதன யோக ஜாதகம்	507-609-612
கனகபாக்கிய யோக ஜாதகம்	438-439-517-522-529
கஜவாகன யோகம்	582
கா	
காமவிகார முண்டாம் ஜாதகம்	343-663

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பாட்டு	எண்
காயப்பட்டு மாரக முண்டாம் ஜாதகம்	1240
காரக லக்கினம்	875
காரகாதிபத்தியம்	50-53
காருண்ய யோகம்	603
கார்த்திகையின் பெயர்	1
கார்ப்பு சுவையில் விருப்புள்ள ஜாதகம்	1114
காலச் சக்கர திசை	694-730
காவிய நூல் வல்ல ஜாதகம்	1045-1075

கி

பாட்டு	எண்
கிரக ஆக்ஷி வீடுகள்	15-18
கிரக குணாகாரம்	776-778
(அமரபக்ஷ ஜாதகருக்கு) சனி, ராகு, சூரியன் முழுச்சுபர்கள்; செவ்வாய், கேது முக்காற் சுபர்கள்; புதன் அரைச் சுபன்; குரு, சந்திரன் முழுப் பாவிகள்; சுக்கிரன் முக்காற் பாவி.

தக்ஷிணாயன சுக்கில பக்ஷத்தில் சுபக் கிரகங்கள் வலியவர்கள்.

உத்தராயண கிருஷ்ண பக்ஷத்தில் பாவக் கிரகங்கள் வலியவர்கள்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

புதன், குரு இவர்கள் உதையத்தில் வலியர்.

சனி, ராகு, கேது அந்தியத்தில் வலியர்.

சூரியன், செவ்வாய் உச்சத்தில் வலியர்.

சந்திரன், சுக்கிரன் ஜல ராசியில் வலியர்.

3. கிரக ராசி பலம்

(1) பெண் கிரகங்களாகிய சந்திரன், சுக்கிரன் ஆகிய இவர்கள் பெண் ராசியிலும், ஆண் அலி கிரகங்களாகிய மற்றவைகள் ஆண் ராசியிலும், இருந்தால் பலமுள்ளவர்கள்; அதாவது பெண் கிரகங்கள் ஆண் ராசியிலும், ஆண் அலி ஆகிய கிரகங்கள் பெண் ராசியிலு மிருந்தால் பலஹீன மென்றும் தெரிந்துகொள்ள வேண்டும்.

(2) ஆனால் சந்திரன், சுக்கிரன் இவர்கள் தங்கள் சிநேகிதர் வீட்டிலும், வியாழன், புதன் இவர்கள் தத்தம் முதல் வீட்டிலும், சனி, சூரியன், செவ்வாய் ஆகிய இவர்களுக்குரிய பெண் ராசியிலும் மேன்மையுடையவர்களும், பலமுடையவர்களும் ஆவார்கள்.

(3) சூரியன், சுக்கிரன், குரு பகலிலும்; சந்திரன், செவ்வாய், சனி இரவிலும்; புதன் இரவு பகல் இரண்டிலும் பலவானென்றுங் கூறப்பட்டது.

(4) சூரியன் ஞாயிற்றுக்கிழமையிலும், சந்திரன் திங்கட்கிழமையிலும், செவ்வாய் செவ்வாய்க்கிழமையிலும், இம்முறையே அவரவர்களுக்குரிய நாட்களில் பலவானென்றறியவும்.

4. கிரக சுபாவம்

(5) சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது கடின சுபாவமுடையவர்கள். வியாழம், சுக்கிரன், சந்திரன், புதன் மிருதுவான சுபாவமுடையவர்கள். ஆனால் புதனுக்கு மாத்திரம் கடின சுபாவ முடையவர்களுடன் கூடில் கடினமும் சாந்த சுபாவ முடையவர்களுடன் கூடில் சாந்த சுபாவத்தையு முடையவராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கிரக வயது

சூரியனுக்கு	வரு	6
சந்திரனுக்கு	வரு	10
செவ்வாய்க்கு	வரு	7
புதனுக்கு	வரு	17
குருவுக்கு	வரு	16
சுக்கிரனுக்கு	வரு	20
சனிக்கு	வரு	19
ராகுவுக்கு	வரு	18
கேதுவுக்கு	வரு	7

கிரக தாரதரம்

புதனுக்கு செவ்வாய் வலிது.
செவ்வாய்க்கு சனி வலிது.
சனிக்கு குரு வலிது.
குருவுக்கு சுக்கிரன் வலிது.
சுக்கிரனுக்கு சந்திரன் வலிது.
சந்திரனுக்கு சூரியன் வலிது.
சூரியனுக்கு ராகு கேது வலியர்.

கிரக பார்வை

சூரியனுக்கு	7 - ம்	பார்வை
சந்திரனுக்கு	7	ஷை
செவ்வாய்க்கு	7, 4, 8	ஷை
புதனுக்கு	7	ஷை
குருவுக்கு	7, 5, 9	ஷை
சனிக்கு	7, 3, 10	ஷை
ராகு கேதுக்கு	7, 11, 3	ஷை

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கரிக்குமூன் றீரைந்துங் கனலுக்கோர் நான்கெட்டா
மரசற்கோ ரைந்தொன்பதாகுமே—அரவுக்கு
பதினொன் றுடன்மூன்றும் பகரொம்ப தேவர்களும்
பதியேழைத் தான் விழிப்பரே.

இன்னின்ன நக்ஷத்திரங்களில் கிரகங்கள் வருமாயின் பலவானென் றறியும் சக்கரம்

சூரியன்	சந்திரன்	செவ்வாய்	புதன்	குரு	சுக்கிரன்	சனி	ராகு கேது
திருவாதிரை	மகம்	அஸ்தம்	அனுஷம்	அவிட்டம்	கிருத்திகை	பூராடம்	உத்திரட்டாதி
புனர்பூசம்	பூரம்	சித்திரை	கேட்டை	சதயம்	ரோகணி	உத்திராடம்	ரேவதி
பூசம்	உத்திரம்	சுவாதி	மூலம்	பூரட்டாதி	மிருகசீரிடம்		அசுபதி
ஆயிலியம்	0	விசாகம்	0	0	0	திருவோணம்	பரணி

கேந்திரம், திரிகோணம், கிரக கேந்திரம், கிரக திரிகோண மென்கிற நான்கு வகையு மறியவும்

லக்கினத்திற்கு 1-4-7-10 கேந்திர மென்றும், லக்கினத்திற்கு 1-5-9 திரிகோணமென்றும் உலகத்தில் வழங்கி வருகிற தாயிருப்பினும்,

கேந்திர மென்றால் லக்கினத்திற்கும், கிரக நிற்குமிடத்திற்கும் மத்தியில் 60-பாகை யிருந்தால் மாத்திரம் கேந்திர மென்று பெயர். அப்போதுதான் கேந்திர பலனையும் கொடுப்பாரெனக் கொள்ளவும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

திரிகோணமென்ருல் லக்கினத்திற்கும், கிரக நிற்குமிடத் திற்கும் 90-பாகை யிருந்தால் மாத்திரம் திரிகோணமென்றும் பெயர். அப்படியானுற்ருன் திரிகோண பலனையும் கொடுப் பராம்.

அஸ்தமான கிரக மறியவும்

சூரியனி னின்று செவ்வாய் பதினேழாம் பாகையிலும், புதன் பதின்மூன்ரும் பாகையிலும், குரு பதினென்ரும் பாகையிலும், சுக்கிரன் ஒன்பதாம் பாகையிலும், சனி பதி னைந்தாம் பாகையிலும் நிற்பார்களாகில் அஸ்தமான மென் றும் பெயராம்.

அதி யுச்ச மறியவும்

பனிரெண்டு ராசிக்கும் முந்நூற்று அறுபது பாகையாக விதித்திருப்பதால் ஒரு ராசி யொன்றுக்கு 30-பாகையாம். இவற்றுள்,

சூரியனுக்கு மேடம் உச்சமானதால் அம்மேடத்தில் பத் தாவது பாகையிற் சூரியன் வரில் பரமோச்ச மென்றும், சந்தி ரனுக்கு இடபமுச்சமானதால் அவ் விடபத்தில் மூன்ருவது பாகையில் சந்திரன் வரிற் பரமோச்சமென்றும், இவ்விதமே செவ்வாய்க்கு மகரத்தில் 28-பாகையிலும், புதனுக்கு கன்னி யில் 15-வது பாகையிலும், குருவுக்கு கடகத்தில் 5-வது பாகை யிலும், சுக்கிரனுக்கு மீனத்தில் 27-வது பாகையிலும், சனிக்கு துலாத்தில் 20-வது பாகையிலும் பரமோச்சமெனக் கொள்க.

அதி நீச மறிய

முன்னுச்சம் நின்ற ராசியில் எத்தனையாவது பாகையில் அந்த உச்சக் கிரகம் வந்தால் அதியுச்ச மெனக் கொண்டது போல, அதற்குரிய நீச ராசியில் அத்தனை பாகையில் வரும் போது அதிநீசமென் றறிந்துகொள்ளவும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கிரகங்களின் காரகாதிபத்திய மறியவும்

சூரியன் : ஆத்ம, பிரதாப, சாத்திய சத்திய இலக்ஷண, உஷ்ண, பைத்திய, சௌரிய, உத்யோக, சைவத்துவ, அனுஷ்டான, ஸ்திரீபோக, அசுவாதீன, சிரரோக, சுர சிவ தேவத, பிதுர் காரகனுன சூரிய பகவான்.

சந்திரன்: அன்னை மனம், வஸ்திரம், நேத்திரம், முகம், மனு, பிரசாதம், சயித்தியம், சிலேர்ப்பணம், வாமநேத்திர, வாமபாகம், சீதசுரம், வதுரக்ஷீரம், தேசாடனம், சீதரோகம், கந்தம், புஷ்பம், கணபதி, சுகபோஜனம், முத்தாபரணம், மாதுருகாரகனுன சந்திர பகவான்.

செவ்வாய்: சத்துவம், காமம், பிரியம், டம்பம், குரோதம், சபலம், பூமி, பைத்தியம், பராக்கிரமம், அக்கினி, வெருவல், இரணம், பிளவை, யுச்சம், குலை மாரகம், உக்ர அனுமம், படைத்தலைவன், சும்மனம், சகோதர காரகனுன குஜ பகவான்.

புதன் : மாதுலசீபந்து, விபகார வியாபார வர்த்தக, சங்கீத சாயுச்சிய, சத்தியவசன, அபுத்திர, அருபீசம், விஷ்ணு தேவதை, சாதுரியன், உபாசனை, புத்தி வித்தையா காரகனுன புதன்.

வியாழன்: புத்திரீ புத்திர பீதமகற்கு, ஸ்ரீவேத சாஸ்திர சம்பன்ன அர்த்த கர்மம், சொர்ன ப்ரபு மாணிக்க வைடூரிய, வகார சிவத்துவம், ஞானம், பிராமணன், ராசியாதி, உபதேசம், சாந்த தேவதை புத்திர காரகனுன குரு.

சுக்கிரன்: வாகன, சுகிர்த, பசுக்கிர்காவா, ரோக்கிய, மதன, புஷ்ப, கேளிக்கை, சுகந்த, வைதிய, தியாக, மணி மந்த்ர, வாம, போக, நேத்திர, கப்பல், வியாபார, ரதி லீலை ரத்தினம், களத்திர காரகனுன சுக்கிரன்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சனி : கிரேசுபசிதாப, ஜீவனலாப, உல்லாச,சம்பந்த, அலசிய, வாதரோக, அன்னிய, அடிபடல், சோம்பல், ஆயுள்வேத விரோதம், அங்கக்குறைவு, தெண்டனை, அபாத்திரன், சித்தப்பிரமை, ஊன ஸ்திரீபோகன், நீசத்துவன், எருமை, ஆபாசிகாரகனுன சனி பக பகவான்.

இராகு : தீர்த்த யாத்திரை, தியான, ஐஸ்வரிய, சாஸ்திர, சம்பன்ன, சராய், மாவைத்திய, லோக எந்திரகுடில், தைரிய, தாம காம யோக, வெட்டுக்காயம், ஜலகெண்டம், பிளவை, படைத்துயரம், செய்யாத் தொழில் செய்தல், அங்கபின்னம், குன்மம், வலிப்பு போக்கிய பிதா மகிகாரகனுன இராகு பகவான்.

கேது : மோக்ஷ, சாம்பிராஜ்ஜிய, சையோக, அப்பியாச, சன்யாச, வைராக்கிய, கைவல்லிய, நெருப்பின் பாதை, மயக்க வஸ்து, அசவ்வியம், அகங்காரி, தரித்திரம், பரதேச ஜீவனம், மாதரமகிகாரகனுன கேது பகவான்.

கோசார பலன்

சூரியன் இலக்கினத்திற்கு 3-6-10-11-ல் நிற்கில் நற்பல ஸ்தானம்
ஷை 1-2-9-4-5-12-ல் நிற்கில் வேதை ஸ்தானம்

சந்திரன் இலக்கினத்திற்கு 10-7-9-11-ல் நிற்கில் நற்பல ஸ்தானம்
ஷை 1-3-6-2-4-8-5-12-ல் நிற்கில் வேதை ஸ்தானம்

செவ்வா, சனி, இராகு, கேது } இலக்கினத்திற்கு 6-3-9-11-ல் நிற்கில் நற்பல ஸ்தானம்
ஷை 1-2-4-7-8-5-10-12-ல் நிற்கில் வேதை ஸ்தானம்

புதன் இலக்கினத்திற்கு 1-2-3-4-5-6-7-9-10-11-12-ல் நிற்கில் நற்பல ஸ்தானம்
ஷை 8-ல் நிற்கில் வேதை ஸ்தானம்

குரு இலக்கினத்திற்கு 2-5-7-9-11-ல் நிற்கில் வேதை ஸ்தானம்
ஷை 1-6-12-3-8-4-10-ல் நிற்கில் வேதை ஸ்தானம்

சுக்கிரன் இலக்கினத்திற்கு 1-2-7-4-5-6-8-9-12-11-ல் நிற்கில் நற்பலன்
ஷை 3-10-ல் நிற்கில் வேதை ஸ்தானம்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பத்துடனே மூன்ருறும் பரிதி மிகநல்லன்
பகுந்தபத்தே ழொன்பதுவெண் பனிமதியி னல்லன்
உத்தபொன்னன் ரெண்டைந்தே ழொன்பதுவு நல்லன்
உயர்வெள்ளி மூன்ருெழிய பந்தொழிய நல்லன்
இத்தனைக்குஞ் சனிசெவ்வாய் இராகுகேது
இருமூன் றும் ஒருமூன் று மும்மூன் றும் நல்லன்
பக்தியுடன் புதனுக்கு எட்டொழிய நல்லன்
பதினோரா மிடந்தனிலே பலகோளு நன்றே.

லக்கினம் எடுக்கும் விபரம்

விகுர்தி௵ புரட்டாசிமீ 5௳ ஹிஜ்ரி 1309௵ சபர்மீ 4௳ இங்கிலீஷ் 1890௵ செப்டம்பர்மீ 19௳ வெள்ளிக் கிழமை காலை 2½ நாழிகைக்கு ஜனனம்; இதற்கு லக்கின மெடுக்கும் விபரம்.

புரட்டாசிமீ ஆகையால் சூரியன் கன்னியிலிருப்பர். இப் புரட்டாசிமீ 1-ந் தேதியில் சூரியன் நாழிகை-22 விநாடி 21-க்கு கன்னியில் வந்தார். ஷை புரட்டாசிமீ 31௳ நாழிகை-49 விநாடி 43-க்கு இக்கன்னியை விட்டு அடுத்த ராசிக்குச் செல்கிருர். ஆகையால் அந்த மாதத்தின் சுத்த தேதியாவது :

நா.நா.வினு நா வினு

1௳யில் கன்னியில் சூரியனின்ற நாழிகை60-(22-21)—37—39
31௳யில் ௸ (49-43)—49—43
ஆகையால் இந்த 2௳யில் கன்னியில் சூரியன்87-22-1-27—22
அந்த மாதம் தேதி பஞ்சாங்க ரீதியாய் கண்ட தேதி 31½க்கு ஷை 2௳ நீக்கி பாக்கி தேதி 29—1-27-22-சுத்த தேதி நாள்-30

நாழி-27 வினுடி - $22 = \frac{54821}{1800}$

கன்னி ராசிக்குள்ள நாழிகை—5 = 5—60—300-வினுடி

30-நாள் 27-நாழிகை 22-வினுடி அல்லது $\frac{54821}{1800}$ தேதிக்குள் 300 வினுடியானுல்,

1-தேதிக்கு 300 $\frac{54821}{1800}$ $\frac{300—1800}{54821}$ $\frac{540000}{54821}$
ஜெனனம் 5௳

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1உ நாழிகை-37-39
2உ ,, 60
3உ ,, 60
4உ ,, 60
5உ ,, 2-30

ஆக 3உ 40 நாழிகை 9-விநாடி.

54000
முன் கண்டபடி 1உக்கு———விநாடி
54821

		விநாடி.	விகலை.
4403	54000		330872
——	———36		
1200	54821		54821

மேற்படி கன்னிக்குரிய நாழிகை 5-ல் 36-விநாடி 8-விகலை நீக்கி 4-23-52.

0—36—8
2—30—0
————
3—6—8கன்னியில் செல்லு.

ஆகையால் லக்கினம் கன்னி. இதற்கு கிரக பாதசாரம் எடுக்கும் விபரம்; ஜாதகன் ஜெனித்த தேதி நாழிகையி லிருந்து முன் தேதிகளை மாதவாரியாயினுஞ் சரியே, தேதி வாரியாயினும் சரியே பார்த்து கிரகபாத சாரங்களை யெடுத்து இச்சக்கரத்தி லடைக்கவேண்டும். இவ்விதம் எடுத்தபின் சக்க ரத்தைப் பார்த்து முறையே அடைத்துக் கொள்ள வேண்டும்.

		ராகு	
	இராசி		
குரு			சனி
செ	கே	சந் சுக்	லக் கு-பு

சூரி	உத்திரம்	3-ல்
சந்	விசாகம்	3-ல்
செ	மூலம்	4-ல்
புத	உத்திரம்	2-ல்
குரு	திருவோணம் வக்கிரி.	1-ல்
சுக்	சுவாதி	4-ல்
சனி	பூரம்	2-ல்
ராகு	மிருகசிரம்	1-ல்
கேது	கேட்டை	3-ல்

பின்பு நவாம்சம் எடுக்கவேண்டும்.

அதன் விபரமாவது

ஜென்ம லக்கினத்தின் மொத்த நாழிகையை 9-பாகஞ் செய்து அந்த லக்கினம் எத்தனையாவது பாகத்தில் முடிகி

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

றதோ அதை தெரிந்து அந்த லக்கினத்திற்கும் திரிகோண ராசி மூன்றில் சர ராசி யெதுவோ அது ஆரம்பமாக அடைக்கவேண்டும்.

ஆகையால் கன்னியா லக்கினத்திற்கு மொத்த நாழிகை.
விநாடி விநாடி. விகலை.

$$5 - \frac{300}{}\ \text{இதை 9-ல் வகுக்க} — 33\text{-}20\text{-}2000$$

300

5— 300 இதை 9-ல் வகுக்க———33-20-2000 பாகம் ஒன்றுக்கு லக்கினத்திற் சென்ற நாழிகை 3-6-8-111-68-விகலை.

1168
11168—5——இது கன்னியா லக்கினமாகையால் மகர ராசி
2000

முதல் கணக்கிட 6-வது ஆகிய மிதுனத்தில் முடிகிறபடியால் அதுவே அம்ஸ லக்கினமாம்.

மேஷ லக்கினத்திற்கு-மேஷ முதலாகவும்
ரிஷப லக்கினத்திற்கு-மகர ,,
மிதுன லக்கினத்திற்கு-துலா ,,
கற்கடகலக்கினத்திற்கு-கற்கடக ,,
சிம்ம லக்கினத்திற்கு-மேஷ ,,
கன்னியா லக்கினத்திற்கு-மகர ,,
துலா லக்கினத்திற்கு-துலா ,,
விருச்சிக லக்கினத்திற்கு-கடக ,,
தனுசு லக்கினத்திற்கு-மேஷ ,,
மகர லக்கினத்திற்கு-மகரம் ,,
கும்ப லக்கினத்திற்கு-துலாம் ,,
மீன லக்கினத்திற்கு-கடகம் ,,

சுக்	குரு		ல
சூரி கே	நவாம்சம்		செ
புத			ராகு
			சனி

ஒரு நக்ஷத்திரத்திற்கு 4-பாதமாக பாதம் 1-க்கு ஒரு ராசியாக அசுவினி முதலாக அடைக்க வேண்டும்.

(உதாரணம்) மிருகசீரிடம் 1-ல், ராகு என்றதற்கு அசுவனி-4, ரோகணி-4, மிருகசிரம்-1, ஆக 17க்கு மேஷ லக்கினம் முதலாக ஒரு சுற்றுகி இரண்டாவது சுற்றில் சிங்கத்தில் வருகிறதைக் காண்க. இதற்காக நட்சத்திரங்களின் எண்ணை 4-ல் பெருக்கி 12-ல் வகுத்து வந்த பாக்கித் துகையை மேஷ முதலெண்ணி எந்த ராசியில் முடிகிறதோ அதுவேஅம்ச ராசியில் அந்த கிரகத்திற்குரிய வீடாம்.

(உதாரணம்) உத்திரம் 3-ல் என்றதற்கு அசுவினிமுதல்
47
பூரம் வரையில் 11-11-4—44—உத்திரம்-3-ஆக—பாகிக்க 11-
12

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மேஷ முதல் ஒன்பது கும்பத்தில் முடிகிறபடியால் அதுவே சூரியனுடைய வீடாம். மற்றவைகளையும் இப்படியே காண்க.

முதற் சக்கரம்

7 பங்குனி	7 சித்திரை	8 வைகா	10 ஆனி
8 மாசி	முதற் சக்கரம்		11 ஆடி
10 தை			11 ஆவணி
11 மார்கழி	11 கார்த்தி	11 ஐப்பசி	11 புரட்டா

இரண்டாஞ் சக்கரம்

3 41 பங்குனி	3 41 சித்தி	3 13 வைகாசி	5-நாழி 4விஞடி ஆனி
4 13 மாசி	இரண்டாஞ் சக்கரம்		5 42 ஆடி
5 4 தை			5 45 ஆவணி
5 42 மார்கழி	5 45 கார்த்தி	5 35 ஐப்பசி	5 35 புரட்டா

இவை லக்கின நிச்சயந் தெரிந்துக்கொள்வு முறை

ஒருவர் ஜனித்த தேதியையும் முதல் சக்கரத்தில் அம் மாத ராசியில் குறித்த தொகையும் பெருக்கி வந்த ஈவு விநாடி யாம். அதை நாழிகையாகச் செய்து, ஜனன நாழிகையில் மேற்படி ஈவைக் கழித்து வந்த மிச்சத்துடன் இரண்டாவது சக்கரத்தில் அந்த மாதத்தில் குறித்திருக்கின்ற விநாடித் தொகையுங் கூட்டிச் சேர்த்து வைத்துக்கொண்டு மூன்ருவது சக்கரத்தில் அந்த மாதத்திற்கு எதிரில் கொடுத்திருக்கிற எண்களில் பார்க்க எந்தத் தொகையுடன் நெருங்கி வருகி றதோ அதுவே ஜாதகருடைய ஜன்ம லக்கினமாக வருமெனக் கொள்கவும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மூன்றாவது சக்கரம்

மாதப் பெயர்	லக்கினம் கணக்கு	மேடம்	ரிஷபம்	மிதுனம்	கடகம்	சிங்கம்	கன்னி	துலா	விருச்சிகம்	தனுசு	மகரம்	கும்பம்	மீனம்
சித்திரை மாதம்	நாழி	3	7	12	18	24	30	35	41	47	52	56	0
	விநா	41	54	58	40	25	0	35	20	2	6	16	0
வைகாசி	நாழி	60	4	9	14	20	26	31	37	43	48	52	56
	விநா	0	13	17	59	44	19	54	39	21	25	38	19
ஆனி	நாழி	55	60	5	10	16	22	27	33	39	44	48	52
	விநா	43	0	4	46	31	6	41	26	8	12	25	6
ஆடி	நாழி	50	54	60	5	11	17	22	28	34	39	43	47
	விநா	43	56	0	42	37	2	37	22	4	8	21	2
ஆவணி	நாழி	45	49	54	60	5	11	16	22	28	33	37	41
	விநா	1	14	18	0	45	20	55	40	22	26	39	20
புரட்டாசி	நாழி	39	43	48	54	60	5	11	16	22	27	31	35
	விநா	16	29	33	15	0	35	10	55	37	41	54	35
ஐப்பசி	நாழி	33	37	42	48	54	60	5	11	17	2	26	30
	விநா	41	54	58	40	25	0	35	2	2	6	19	0
கார்த்திகை	நாழி	28	32	37	43	48	54	60	5	11	16	20	24
	விநா	6	19	23	5	50	25	0	45	27	31	44	25
மார்கழி	நாழி	22	26	31	38	43	48	54	60	5	10	16	18
	விநா	21	34	38	20	5	40	15	0	42	46	59	40
தை	நாழி	16	40	25	31	27	43	48	54	60	5	9	12
	விநா	39	52	56	38	23	58	47	18	0	4	17	58
மாசி	நாழி	11	15	20	26	32	37	43	49	54	60	2	7
	விநா	35	48	52	24	19	54	29	14	56	0	3	54
பங்குனி	நாழி	7	11	16	22	28	33	39	45	50	55	60	3
	விநா	32	35	39	21	6	41	16	1	43	47	0	41

மேற்கண்ட விதமாகவே எல்லா ஜாதகங்களையும் கணித்து நிச்சயித்து அறிந்து கொள்க.

ஜோதிட சிகாமணி அநுபந்தம் முற்றிற்று.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இரக தேவதைகள் வணக்கம்

கணபதி தோத்திரம்

தங்கமான் மழுவோடேந்தித்
தண்மணிதலையிற் கொண்டோர்
மங்கையர் பதிக்குச்சொன்ன
மஹாமொழிச் சோதிடத்தை
யிங்குநா முரைப்பதற்கோ
ரிமையெனும் பிழைவராமற்
செங்கண்மால் மருகன்யானைச்
சிவன்பதங் காப்பதாமே.

நல்லசொற்பொரு ணளுநடாத்தவும்
எல்லைகாணரும் பேரின்பமெய்தவும்
வெல்லும்யானை முகத்தினைமேவிவாழ்
வல்லபைக்குரி யானைவழுத்துவாம்.

ஐந்தாருவானதொடுக் காடர்சோதிடகிரக
சிந்தாமணிமாலை செப்பவே—கொந்தார்
குழலுமையாள் தந்த குலக்குஞ்சரமுங்
கழலணிவேன் வாணியுமே காப்பு.

வீமேசுரர் வணக்கம்

கதிரவனுமதியுமங் காரகன்புந்தியுங்
கருணையுள சுரர்குரவனுங்
காரவன்காரியு மிராகுவுங்கேதுவுங்
கருதும்வெகு சுபமாகநற்
பதினொராமிடமுவந் துச்சநிலையாய்நின்ற
பரிவினின் மகிழ்ந்தருள்செயப்
பங்கயன் செங்கண்மான் முதலானதேவரும்
பாரதி பரிந்துகாக்க
மதிநுதலிகுமரிசங் கரித்திரியம்பகிசூலி
மலையரையன் மகளென்னுமோர்
வடிவுடையகவுரிநகை முகவல்லிபாகனே
மருமலர்ச் சடைமுடியனே

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

யதிகபெலனுடையமுப லகன்முதுகுநெறநெறென
வாடிய பதத்தழகனே
யடியவருளத்தமுத மேவீமநாதநின்
னருளளித்திடல் வேண்டுமே.

சூரிய பகவான் வணக்கம்

காசினி யிருளைநீக்குங் கதிரொளியாகியெங்கும்
பூசனையுலகோர்போற்றப் புசிப்பொடுசுகத்தைநல்கும்
வாசியேழுடையதேர்மேல் மகாகிரிவலமாய்வந்த
தேசிகாவெனை ரட்சிப்பாய் செங்கதிரவனேபோற்றி.

சந்திர பகவான் வணக்கம்

அலைகடலதனினின்று மன்றுவந்துதித்தபோது
கலைவளர்திங்களாகிக் கடவுளரெவருமேத்துஞ்
சிலைநுதலுமையாள்பங்கன் செஞ்சடைப்பிறையாய்மேரு
மலைவலமாகவந்த மதியமே போற்றி போற்றி.

செவ்வாய் பகவான் வணக்கம்

வசனநற்றைரியத்தோடு மன்னவர்சபையில் வார்த்தை
புசபலபராக்ரமங்கள் போர்தனில்வெற்றியாண்மை
நிசமுடனவரவர்க்கு நீணிலந்தனிலளிக்குங்
குசனிலமகனுஞ்செவ்வாய் குரைகழல்போற்றிபோற்றி.

புத பகவான் வணக்கம்

மதனநூன்முதலாநான்கு மறைபுகல்கல்விஞானம்
விதமுடனவரவர்க்கு விஞ்சைகளருள்வோன்றிங்கள்
சுதன்கனபவுசுபாக்கியஞ் சுகம்பலகொடுக்கவல்லன்
புதகவிப்புலவன்திருமால் பொன்னடிபோற்றிபோற்றி.

குரு பகவான் வணக்கம்

மறைமிகுகலைநூல்வல்லோன் வானவர்க்காசான்மந்திரி
நரைசொரிகற்பகப்பொன் னாட்டினுக்கதிபனாகி
நிறைதனஞ்சிவிகைமண்ணி னீடுபோகத்தைநல்கு
மிறையவன்குருவியாழ மிருமலர்ப்பாதம்போற்றி.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சுக்கிர பகவான் வணக்கம்

மூர்க்கவான் சூரவாணன் முதலினோர் குருவாம்வையல்
காக்கவான் மழைபெய்விக்குங் கவிமகன்கனகமீவோன்
தீர்க்கவானவர்கள் போற்றச் செத்தவர் தமையெழுப்பும்
பார்க்கவன்சுக்ராசாரி பாதபங்கயமேபோற்றி.

சனி பகவான் வணக்கம்

முனிவர்கடேவரேனும் மூர்த்திகண்முதலினோர்கள்
மனிதர்கள்சகலவாழ்வுன் மகிமையதல்லாதுண்டோ
கனிவுளதெய்வநீயே கதிர்சேயேகாகமேறுஞ்
சனியனேயுனைத்துதிப்பேன் றமியனேற்கருள்செய்வாயே.

இராகு பகவான் வணக்கம்

வாகுசேர்நெடுமான்முன்னம் வானவர்க்கமுதமீயப்
போகுமக்காலையுன்றன் புணர்ப்பினாற்சிரமேயற்று
பாகுசேர்மொழியாள்பங்கன் பரன்கைபில்மீண்டுபெற்ற
ராகுவேயுனைத்துதிப்பேன் ரட்சிப்பாய்ரட்சிப்பாயே.

கேது பகவான் வணக்கம்

பொன்னைத்த னுரத்திற்கொண்டோன் புலவர்தம்பொருட்டா
தன்னையேகடைந்துமுன்னந் தண்ணமுதளிக்கலுற்ற [லாழி
பின்னைநின்கரவானுண்ட பெட்பினிற்சிரம்பெற்றுய்ந்தா
யென்னையாள்கேதுவேயிவ் விருநிலம்போற்றத்தானே.

நவக்கிரக தெய்வங்கள்

இரவிசங்கர னீஸ்வரிதிங்கள்சே
யினியகந்தனி சைதிருமால்புதன்
குருவயன்சுரர் கோன்வெள்ளிசுன்னெமன்
குலவிராகு குறிபத்திரகாளியா
மருவுசித்திரபுத்திரன் கேதுவாம்
வானவர்முனி வோராசிமற்றுநா
ளரிமுதற்கிர கத்தாற்பரசிவ
னண்டபிண்டம் படைத்தளித்தாற்றுமே.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

உ

ஸ்ரீ ராமஜெயம்

சுகர் நாடி என்னும்

ஜோதிட சிகாமணி

சடகோபர் துதி

நேரிசை வெண்பா

மாதிடசி காமணியாம் வல்லவர்க்கே யேன்றவொரு
சோதிடசி காமணிநூல் சொல்லுமென்னு—யாதுங்
திருக்குருகைத் தொண்டர்கண்முன் சேர்வதற்குத் தாழாத்
திருக்குருகைத் தொண்டரருள் சேர்ந்து. (1)

அரங்கநாயகர் காப்பு

எழுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்

குரங்கத்துமோதைகேட்ட தன்கன்றுங் கூப்பிடும் வழக்கெனப்பருணி
தரங்கத்துளுறைத்தமுறைய சோதிடசிகாமணிதன்னையான்புகலத் [ர்தாங்
தரங்கத்துமணிச்சூட்டா விடைக்கிடந்துதங்கமும் பொன்னும்போர்த்தணி
கரங்கத்துளிலங்குநீலமாமணியை யகமெனும்பேழையுளமைப்பாம். (2)

பிரதமகுரு வணக்கம்

எண்சீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்

கருணைமழைபொழிந்துலகிலடியார்தங்கள்
கருத்திலின்பப்பயிர்விளைக்குங்கடவுட்டெய்வத்
தருணமுகிலனையவறுமுகத்தெங்கோமான்
தந்தருளுங்குமாரசாமியத்திற்கண்ட
அருமைமொழிப்பெருமைவழிபதனையாரும்
அறிந்துபயன்றெரிந்துகொள்ளவரிதில்லாமற்
பொருள்விளங்கவிளக்கமுதற்குருவாய்தந்த
புனிதர்சின்னுபாத்தியர்தாள்போற்றினேனே. (3)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

காரணகுரு வணக்கம்

மாதிடநூன்முறைப்படியேதன்னைப்போற்று
வாரகத்துமேரகத்தும்வாழ்வோன்சொன்ன
தீதிடமிலாமுறையேகணிதநூலைச்
சிகாமணியென்றொருபெயராற்செப்புமாறு
போதிடமின்னுருவமெடுத்தாற்போன்ற
புண்ணியவான்கண்ணியவான்புலவர்பெம்மான்
சோதிடநூற்குருவுமாமனுமாவாய்த்த
சுந்தரன்வீரப்பமுகிற்றொழுகின்றேனே. (4)

சோதிட நூலாசிரியர்கள் வணக்கம்

முன்னுரைத்தகுமாரவேள்சுக்கிரக்கோள்
முனியரசிம்மூவர்களின்முளரிபூத்த
மின்னுரைத்ததண்டயந்தாள்கணிதநூலை
விரித்துரைத்தசோதிடநூல்வேந்தர்பூந்தாள்
பின்னுரைத்தபாற்கடலின்மணியேபோலப்
பிறந்ததிருத்தாயாரின்பேரின்பத்தாள்
இன்னுரைத்தபோதனர்தாள்புலவர்செந்தாள்
இத்தனையும்பத்தியுடனிறைஞ்சினேனே. (5)

அவையடக்கம்

இலக்கியநூலிலக்கணநூலிருந்தவூரி
விறைப்பொழுதுமிருந்தறியாவெளியோன்சொல்லிக்
கலக்கியவிப்பிழைமொழியைநல்லோர்கண்டாற்
கருத்திலருவருத்துவிடார்கணிதநூற்கு
விலக்கியனூலென்னவிடார்பாடாணத்த
மிழ்துவிளைக்கும்வைத்தியவிவேகரேபோற்
றுலக்கியரும்பிழைநீக்கியிந்தநூற்குச்
சோதிடசிகாமணிப்பேர்சூட்டுவாரால். (6)

ஆக்கியோன் பெயரும்-நூற்பெயரும்-அவையடக்கமும்

நொண்டிச்சிந்து

அமிர்த சஞ்சீவி யெனுஞ் - சிகாமணி
யன்பாய்ச் சோதிடந் தன்னிற் றென்பாகவே

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சமர்புரி ராக்ஷ சரை - வே ரறுத்துத்
தண்டகா ரணியத்துத் தவர் நிலைக்க
வைத்திடு மிரகு ராமன் - மலர்ப்பாதம்
வணங்கி யிதனை யானும் கனிந்துரைக்கப்
பத்தியாய்த் திருமார்பி - லமர்ந்திடும்
பாக்கிய லட்சுமி பதந்தூக்கிப் பணிந்து
திருவருடனைக் கிடைத்துப் - பரத்துவஞ்
சேர்ந்த தும்பிக்கை யாழ்வார் பதம் போற்றி
மருமலர் மீ தமர்ந்த - கலைமகள்
மலரடித் துணை சிரமணி யாக்கி
எந்தங் குருசாமி - மலரடி
யெப்போது மறவாம லொப்பிப் பணிந்து
சிந்தைத் தடமலரிற் - கற்றுணர்ந்தோர்
திருவடி தனைத்தினஞ் சிரத் தணிந்து
வாசித்துத் தெரியாத - சிறுவன் யான்
வணங்கி யுரைத்த சிகாமணியிதனை
நேசித்துப் பெரியோர்கள் - குற்றமிக
நிறைந்திருந் தாலந்தப் பிழைகளைந்து
திருத்து மகாத்மாக்கள் - மலர்ப்பதந்
தெண்டஞ் செய்தே னனந்தங் கோடிகோடி
வருத்தித் தள்ளாமலிதனைப் - பெரியோர்க்கு
வணங்கி யாயிரங்கோடி வந்தனஞ்செய்தேன்
எந்தங் குலப்பேருந் - திருவடி
யேற்ற வாசாரியர் தம்பேரு
முந்தியவுண் மைப்படியே - வெளியிட்டு
மொழியக் கருணையொடு முகங்கொடுப்பீர்
ஆயர்குலத் துதித்தோர் - எங்குல
வாசாரி திருநம்பி பதஞ் சேர்ந்தோன்
மாயன் வள ரரங்கப் - பதியினில்
மனது மங்களமாக வசித்திருந்தோன்
தசரதன் குலத் துதித்துச் - சீதையைத்
தனிமணஞ் செய்து வனவாசி யாகிப்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

புஜபல வல்லமையினற் - சீதையைப்
புவியொ டெடுத் திலங்கை புகுந்துகொண்ட
தானவர்க் கதி பதியை யிருபது
தலையுந் துணிப்பே னென்று சபதஞ்சொல்லி
வானரப் படை யெடுத்து - நடுவுள்ள
வாரி மீதினி லணைவகுத்துக் கட்டிக்
கவர்மன ராவணன் றன்னைப் - போரிடைக்
கதறப் பதற வெட்டிக் களத்திலிட்ட
கவனவில் வீரன் பாத - மறவாத
காத்த பெருமாள் வரத்திற் பூத்த புதல்வன்
ஏரகம்வாழ்வு பெறும் - பாக்கியவான்
எங்குரு வீரப்பிள்ளை யன்பு மருமான்
சேரகம்பீ மாநாயக்கன் - பாளையஞ்
செழித்த ராமசாமிச் சோதிட வித்துவான்
இலகொளிச் சாலிவாகன - னுயிரத்
தெழுநூற் றெண்பத்தா று நிகழ்வதிலே
கலியுக முப்பத் தைந்தாண்டு - பாக்கியிற்
கழியவை யாயிர மிரக்தா க்ஷியிற்
கார்த்திகை பூச நாளி - லிந்நூலைக்
கட்டுரைக்க மனதிலே திட்டப் படுத்தித்
தேர்த்தொழில் விசைய னுக்கு - முன்னளிற்
செய்த பெரு மான்பத மெய்தமனத்துள்
சொன்னே னிந் நூற்றுவக்கம் - பொறுப்பது
தூயவர் கடனெனத் துணிவுகொண்டு
பனிரண்டு புயக்குமர - வேள்சொன்ன
பன்னிரண் டாயிரம் பாட்டி லுளவும்
பினுமுள்ள சுக்ரநாடி - தெற்கில்வந்த
பீரங்கித் திரட்டிவை பேசியனவும்
பின்புத்தி யறியாத - சிறுவன் யான்
பேதைவயதுக் குள்ளாயோதித் தெரிந்த
என்புத்திக் கெட்டின மட்டுந் - திரட்டியிங்
கியம்பு சிகாமணியை நயந்து கொள்வீர்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சோதிடங் கொஞ்ச மறிவேன்-பஞ்சபக்ஷி
சொல்லும் பெரியோர் பாதம் பணிந்தறிவேன்
ஆதியில் சிவனுரைத்த-சரமென
வம்புவியி லெல்லோருஞ் சொல்ல வறிவேன்
அயனுடைப் பதத் துதித்த-விசுவன்முன்
அருமையுடனே செய்த பெருநூலு
மயனுடைச் சாஸ்திரமுஞ்-சல்லியமு
மந்திரமுந் தந்திரமு மறந் தறிவேன்
செம்பொருட் கலையனைத்தி-லொன்றேனுந்
தேர்ந்தறியேன் மனமோர்ந்து மறியேன்
ஐம்பெரு மிலக்கணமு-மிலக்கியமும்
அணுவளவுந் தெரியேன் றுணி விதுவே
துஷ்ட நிக்கிரகஞ் செய்யத்-தூணிடைத்
தோன்றிய நரசிங்க ஸ்வரூபியுடைய
அஷ்டாக்ஷரஞ் செபிப்பே-னித்தவத்தா
லருந்தமிழ்க் கவிசொல்ல வாக்குக் கிடைத்தேன்
அரும்பிடைத் தேனையுண்ண-வண்டினம்
அம்மலரை மலர்த்திய செம்மை போலே
கரும்பிடைச் சக்கை நீக்கி-ரசங் கொள்ளுங்
கருத்துப்போ லிக்கவியைப் பொறுத்துக் கொள்வீர்.

தனனதனதனன

———

குரு வந்தனம்

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

ஆண்முத லாய காமற் கழகன்வீ ரப்பநாமன்
றுண்மலர்ப்பூபோதையாண்டுந் தணிந்துகொண் டாடிக்கொண் [டு
நாண்முதற் கோள்களீறு நண்ணிய நாமமெல்லாம்
பாண்முதற் கவியாக்கோத்துப் பழகிய வாறுசொல்வாம். (8)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அசுபதி-பரணி-கார்த்திகை-உரோகணியின் பெயர்

பதினன்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

இரலையாசென்னியைப்பசிழ்முதனுளேறுபுரவிபரிவாசி
யிவுளிபச்சுவினிமறுத்துவநாளேயீரறுபேரசுபதிக்காம்
பரணிகாட்டுப்புத்தருமாள்கிழவன்பகலவன்றுராசுமுக்கூட்டு
பாகுபூதம்போதம்பருந்தாழிதாசிசோறுடுபதின்மூன்றும்
எரிதழல்வாணனுலிதன்றுமீனிருலழகங்கிநாளறுவாய்
இலங்கியவாரல்கிருத்திகைநாடனளக்கர்கார்த்திகைப்பெயர்பதின்மூன்
றருள்சதியநாள்பண்டிதேர்சகடமுரோகணிபார்வையம்விமானம்
உருளியூற்றுல்சகடுபதின்மூன்றுமுரோகணிக்கமைந்தபேரென்ப. (1)

மிருகசிரம்-திருவாதிரை-புனர்பூசம்-பூசம்-ஆயிலியம் இவற்றின் பெயர்

மான்றலையும்மீனிந்தரனைந்தானமார்கழிநரிப்புறம்வெய்யோன்
மாழ்குபேராளன்பாலையேமதிநாள்பதினொன்றுமிருகசீரிடப்பேர்
ஆன்றபேரீசனுள்செங்கையாழேயாதிரைதிமூரையைம்பேர்
அரியசீர்த்திருவாதிரைக்குரித்தென்பவதிதிநாளாவணம்பாலை
தோன்றெரிகரும்புகழைபிண்டிபுணர்தஞ்சொலுமெண்பேருறும்புனர்பூசம்
துலங்குதைவண்டுநாற்குளங்குருநாள்கொடிறைம்பேர்துகளறுபூசம்
என்றபாம்பாயிலரவுநாள்கௌவையீரிரண்டாயிலியப்பேர் [பாம்.
இவைமுதலொன்பானுட்களின்பெயராமிடையொன்பானுட்பெயரிசைப்

மகம்-பூரம்-உத்திரம்-அஸ்தம் இவற்றின் பெயர்

வேட்டுவனெழுவாயெழுஞ்சனிபிதிர்நாள்விளம்புமாதிச்சனிமாசி
வேள்விவாய்க்காலேகொடுநுகமெட்டும்விளங்கியமகத்தின்பேராகும்
காட்டெலிநாவிதன்பகலதிநாள்கணையிடையெழுஞ்சனியைந்தும்
கருதியபூரநாட்பெயராகுங்கடையெழுஞ்சனியிளங்கதிர்நாள்
சேட்டுமானேறுபாற்குனிகதிர்நாள்செங்கதிர்பிறந்தநாள்பொய்கை
செப்புபங்குனியெட்டுத்திரநாளின்றிருப்பெயராமங்கியைமீன்
காட்டுமைவிரல்காமரங்கன்னிகௌத்வங்களிறுகையீனவ்விகைனீ
கழறியபத்துமத்தநாட்பெயராக்கணித்தனர்நுனித்தநூற்கவிஞர். (3)

சித்திரை-சுவாதி விசாகம்-அனுடம் கேட்டையின் பெயர்

அறுவைமீனடுநாள்செவ்விதச்சன்றூசாடைநெய்சுவைதுவட்டநாள்
ஆம்பயறேகாதசமுஞ்சித்திரைப்பேரநிலநாள்துணிமரக்காலே

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வெறுநுகர் துளக்கங்காற்ருெடுதீபம்விளக்குவீழ்க்கைமிவையொன்பான்
விளங்கியசோதிநாட்பெயரென்ருவிளம்புவர்சேட்டைவைகாசி
முறஞ்சுளகனிலமுற்றிலேகாற்றுமுந்துநாளேழ்விசாகப்பேர்
முடப்பனைபெண்ணைதாளிபுல்போந்தைமுனையதேள்மித்ரநாலெழுபேர்
சிறந்தவனுடமாம்வேதிவல்லாரைசெந்தழலெரிந்த்ரனுனே [ளே.
சேட்டையிவ்வாறுங்கேட்டைநாட்பெயராஞ்செப்புவாங்கடையென்பாளு

மூலம்-பூராடம்-உத்திராடம்-திருவோணம்-அவிட்டம் சதயம்-பூரட்டாதி-இவற்றின் பெயர்

அசுரநாள்குருளுகொக்கன்றில்சிலைவில்லா ணிதேட்கடையெண்பேர்மூலம்
ஆகுநீர்நாள்முற்குளமுடைகுளநீராயநாற்பெயரும்பூராடம்
விசுவநாளானிகடைக்குளமாடிமேவுநாற்பெயருத்திராடம்
விண்டுநாளுலக்கைசேனைநள்ளோணமேசிரவணமுக்கோல்வயிரம்
வசையிலெண்பெயரும்பெருந்திருவோணம்வசுத்தினங்காகப்புள்புள்ளா
வணிபறவையைந்துமவிட்டநாளாகும்வருணனுள்குண்டுபோர்கண்டன்
விசைபெறுசெக்கோடைந்தசதையமாமிளிர்புரட்டாசிமுற்கொழுங்கோல்
விளங்கியநாழிபுரட்டைநாற்பெயராம்பூரட்டாதிக்கென்பர்மேலோர். (5)

உத்திரட்டாதி-இரேவதி இவற்றின் பெயர்

முசுபிற்கொழுங்கோலறிவனுன்மன்னன்மொழிந்திடுநீபமிவைந்தும்
முனைவருத்திரட்டாதிபெயரென்பர்மும்முனைச்குலநாவாயோ
டிாவிநாள்கடைநாள்கலங்குந்தோணியிரும்பெரும்நாட்டொழும்பஃறி
யியம்பிடுபுருடநாள்பதினென்றுமிரேபதிநாட்பெயரென்பர்
உரைசெயுமிப்பேரன்றியுமவைகட்குரியவர்பெயர்களும்வைகட்
குளபரியாயநாமமுமேற்குமுணர்விளுங்கறிகுவருயர்ந்தோர்
வரைபுரைகுணத்தெம்வள்ளல்வீரப்பமழைமுகில்வனசமாமலர்த்தாள்
வாழ்த்திமுந்நான்கிராசியின்பெரும்பேர்வரன்முறைவழுத்துவாமாதோ.

மேடமாதி-ராசிகளின் பெயர்

வருடைமையாடுதகர்கொறியுதளேமறியுடனுடெட்டுமேடம்
மால்விடைபுல்லம்பாறல்சேநந்திமாப்பசுபாண்டிலேகுண்டை
நரைவிடையேறுபதினென்றுமிடபம்நற்சயமகள்தண்டுவிழவு
நட்புறுமிரட்டைபாடவல்யாழ்பாடவைமிதுனத்தின்பேரேழாம்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அருமதிநள்ளிருளிர்கள்வன்சேக்கையலவனண்டேழுங்கர்க்கடகம்
ஆளியேயரிமாபுவியையானனஞன்கன்றியும்புவிசிங்கத்தின்பேர்
மருவுமாஞ்சிங்கராசிபெண்பொதுப்பேர்வனேயுமக்கன்னியிராசி [மாம்.
வணிகன்சீர்நிறைகோல்கட்டளைதராசுவருந்துலைதூக்கெண்பேர்துலா

பறப்பன்றேள்தெறுக்கால்விருச்சிகங்காண்டிபங்கொடுமரந்துரோணஞ்சா
பஞ்சிலையன்றுவிற்பெயரெல்லாம்பகருவர்தனுவிராசிக்கே
சுறுக்கலைதைமான்பங்குக்கிராகஞ்சொலுமைந்துமகரவிராசி
சுயகுடங்குடங்கர்சாடிகரீரந்தோற்றுநாற்பெயர்கும்பமாகும்
சிறப்புயர்சலசஞ்சலசாமயிலைமச்சநாற்பெயர்செழுமீனம்
செப்புமீதன்றியவ்வவ்விராசித்திரிப்பரியாயமும்பொருந்தும்
இறப்பொடுபிறப்புமிம்மைக்கண்வென்றவென்குருவீரப்பாமன்
இருசரணிறைஞ்சிக்கிரகநாயகர்பேரியம்புவானிசைந்தனமென்றே. (8)

நவக்கிரகநாயகர் பெயர்-சூரியன் பெயர்

இனனொளியொளிபோனரியமாவருக்கன்
எல்லைபகலவன்மார்த்தாண்டன்
ஏழ்பகலோன்விண்மணியரிசூரன்
எல்லழலவன்வெயில்வெய்யோன்
கனவிபங்கயன்வெஞ்சுடர்சண்டன்
சவிதாகதிரவன்பனிப்பகை
பானுகதிர்விகர்த்தனன்மித்திரன்
பதங்கன்செங்கதிரவன்ஞாயிறுசோதி
தினகரன்றரணிவிரோசனன்பரிதி
சித்திரபானுவேசான்றேன்
திவாகரன்கிரணமாலியருணனு
தித்தனபோமணியென்றாழ்
அனலிதினமணிபகல்சுடருதைய
னுதவன்விரிசகிகன்றபனன்
ஆயிரஞ்சோதியிருள்வலியிரவி
யலரிசூரியன்பெயராமே. (9)

சந்திரன் பெயர்

கலவுமானேந்திமதிமுயற்கூடுநிசாகரனிராக்கதிர்வேந்தன்
நிசாபதிமதியந்தண்சுடர்திங்கள்நிலாச்சுதாகரன்சீதன்
கலையினன்விதுவீபத்துடுபதிவெண்கதிர்மகரனிந்துசோமன்
களங்கனம்புலிதெவ்வரிசிகனமுதகதிரயினன்பசுங்கதிர்த்தே

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அலவனேகுபேரன்தண்ணவன்றாரைக்கன்பினன்றானவனுலோன்
அல்லவன்குரங்கிகலாநிதியுடுவினரசனேகுமுதநண்பாளன்
இலகுமிந்நாற்பத்திரண்டுபேரன்றியிளம்பிறைகுழவியுமாகும்
இவன்முன்பாற்பூர்வஞ்சுக்கிலம்பின்பால்கிருட்டினபரமென்றிசைப்
பர். (10)

செவ்வாய்-புதன் பெயர்

ஆரல்சேய்குருதிகுஜன்செந்தீவண்ணனறிவனங்காரகனுதிரன்
அரத்தன்மங்கலன்வக்கிரனிலமைந்தனழலழலோன்பௌமன்பதினைம்
பேருளான்செவ்வாயருணன் ஞானுபிரபலப்புலவன்றேர்ப்பாகன்
பெருமதிமகன்மாலவன்புந்திபாகன்பிறழ்ப்பச்சைசவுமன்மால்சிந்தை
கூறியன்கணக்கன்மேதைதூதுவன்சற்குணபண்டிதன்சௌமிய
கோள்நிபுணன்சாமானனுவழியேகூறுமூவேழுதிருநாமம்
சீருயர்புதன்பேரென்பர்நூலுணர்ந்தசெந்தமிழ்ப்பாவலரினிமேற்
றேவர்முப்பத்துமூவரும்வணங்குந்திருக்குருநாமஞ்செப்புதுமால். (11)

குரு-சுக்கிரன் பெயர்

அரசன்மாமறையோன்சிகண்டிசன்சீவ
னந்தணன்வேதன்பொன்னாசான்
ஆண்டளப்பான்பீதகன்குருவேந்தன்
அமைச்சன்றாராபதிநற்கோள்
சுரகுருப்பிரகற்பதிசிகண்டிதன்மா
சுகிர்தக்கோள்தெய்வமந்திரியே
சுந்தரத்தாரைகேழ்வன்மூவேழு
தொல்பெயர்வியாழனுக்குரித்தாம்
பிரசுரனாசான்புகர்புயல்மழைக்கோள்
பெருங்கவியநாவிலன்சுங்கன்
பிருகுசல்லியன்காப்பியன்பளிங்குசனன்
பேரொளியோன்சிதன்சுபக்கோள்
மருவுசீதகன்பார்க்கவன்வெள்ளிதைத்ய
மந்திரியசுரமந்திரியே
வழுத்துமூவேழுபெயருஞ்சுக்கிரனாம்
வானவற்குரித்தென்பர்வல்லோர் (12)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சனி-இராகு-கேதுவின் பெயர்

கதிர்மகன்சவுரிசாவகனீலன்காரிகீழ்மகன்மந்தன்மேற்கோள்
கரியன்வக்கிரனேயந்தகன்சந்தில்கருந்தமனியன்பங்குதீக்கோள்
முதுமகன்சாயாபுத்திரனந்தன்முடவனேய்முகனந்தணன்சுன்
மொழியிருபதினென்றுஞ்சனிக்குரித்தாமுழுமதிப்பகைகரும்பாம்பு
மதியுணிதமமேகாமகோடீக்கோள்வருமிருமூன்றிராகுவின்பேர்
மதிகதிர்ப்பகைசெம்பாம்புஞானக்கோள்மதியுணிசிகியைந்துங்கேது
இதையெலாமன்றியவரவர்க்குரியவிராசியாற்காரகச்செயலால்
ஏற்பர்பேரிருவர்க்கொருபெயர்வரினுமிடஞ்சமையங்கண்டுகொள
லே. (13)

கரந்துறை-கிரகர் பெயர்

சனிமகன்மாந்திசூரியன்பௌத்ரன்றண்டனீலன்மகனைம்பேர்
தகுங்குளிகனுக்கேயிவனெடுகாலன்சாற்றுமிமகண்டனின்னும்
முனிவுறும்அர்த்தப்பிரகரணனுநால்முனைவருங்குளிகனுதியர்கள்
மோதியதூமகேதுபகேதுமுதிரிந்திரதனுபரிவேடம்
இனிவிதிபாதனிவரைவர்தூமாதியரெனமுன்னுளார்வகுப்பர்
என்றென்றுங்காணுக்கிரகங்கள்தீக்கோளிருட்கிரகர்மாரகர்துட்டர்
சனிமகார்கோரர்எனப்பொதுநாமஞ்சாற்றுவர்நூற்றுறைத்தக்கோர்
தந்தமத்திவாலனுபவச்செயலாற்சாற்றுவர்பற்பலபெயரே. (14)

ஆக்ஷி-யுச்சம்-நீசம்-நட்புப் பகையாவன

செங்கதிர்மேடம்பசுங்கதிரிடபஞ்சேய்மகரம்புதன்கன்னி
சிகண்டிசன்கடகம்சுக்கிரன்மீனம்திருக்கதிர்மகன்றுலாமிராகு
வெங்கொடுந்தேளேஞானிமிதுனமாம்விளம்பிவையுச்சமாமிதனேழ்
விருப்பறுநீசமாமென்பர்ஆக்ஷிவீடினிவிள்ளுவாங்கதிரோன்
சிங்கம்வெண்மதியங்கடகம்வக்கிரற்குத்தேள்மறிபுதன்கன்னிமிதுனம்
சீவன்வில்மீனம்புகர்துலாமிடபம்தீச்சனிமகரகும்பமுமாம்
பங்கயன்மீனம்தனுசுசந்திரன்மீன்பாவைவில்மிதுனமுமாகும்
பார்மகன்மிதுனம்கன்னிதுலையிடபம்புதன்னட்பினிபகர்வாம். (15)

மேடமிடபங்கடகர்துலார்தனுசுவிருச்சிகமகரகும்பங்கள்
வியாழனிடபஞ்சிங்கங்கன்னிகும்பமிதுனந்துலாமுமாம்வெள்ளிக்
காடுமிதுனம் விர்ச்சிகந்தனுமகரமங்குடமாம்சனியற்கே
அணங்குவில்மீன்யாழிடபமாமிராகுக்கருந்துலைமகரமுமீனும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

நாடுசெம்பாம்புக்காடுதேள்கன்னிநட்டபென்பர்பகையினிச்சொல்வோம்
ஞாயிறுக்கிடபந்தேள்கும்பமகரநண்டொடுகும்பமிதுனமாம்
நீடுறுமதிக்குமறிசுறுக்கும்பநிறைசிங்கமாமங்காரகற்கு
நிறைசிங்கக்குடமீன்புதனுக்குச்சிங்கம்நீசக்குருவுக்குத்தேள்மடம். (16)

கவிக்கொருசிங்கஞ்சனிக்குநண்டரிதேள்கரியபாம்பாடரிநண்டாம்
கதிர்பகைவனுக்குச்சிங்கங்கர்க்கடகம்கடும்பகைவீடென்பர்கற்றோர்
புவிக்கணக்கிரகர்பார்வையினிலக்கம்புகலுவாமிரவிக்கேழிடமாம்
புந்தியின்றந்தைக்கேழதாஞ்சேய்க்குப்பொருந்துநாலேழெட்டாம்பார்
சவிச்சுடர்பச்சைக்கேழதாம்குருவைந்தாமிடமேழொன்பானிடமாம் [வை
தைத்யமந்திரிக்குமேழதாஞ்சனிக்குமூன்றுபத்தேழென்பர்பார்வை
துவித்தெழுமிராகுகேதுவேழ்பதினொன்றேடுமூன்றென்பராவிதினும்
சுரர்குருவொன்பான்மற்றையர்க்கேழாந்துலங்கியமுழுகண்ணோக்காமே

நேரிசை வெண்பா

கன்னிமிதுனந்தனுசு காரரவுக்காட்சியாம்
பன்னுதுலாகும்பமிட பம்மகரம்—மின்னியமீன்
கேதுவுக்காட்சி கிடைத்ததாமென்றமுன்னோர்
ஓதுவர்களென்றே யுணர். (18)

இலக்கினாதி-தேவர்களின் பெயர்

பதினான்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

தலைநிறஞ்சொருபமுபாங்கநித்தியமு
தயமுடிமூர்த்தியேமெய்கீர்த்தி
சன்மமொன்றபிடேகங்கல்விசிந்தி
தம்பிரகிருதிசந்தோஷம்
மலையுபஞ்சென்மமேருயிர்தேக
மனுவொடெண்மூன்றிலக்கினமாம்
வழுத்திவைபல்லாதிவையின்பிரதிநா
மங்களும்பொருத்துவர்வல்லோர்
வலதுகண்பல்வாய்மூக்கொடுநாக்கு
வாக்குநன்னுதல்முகம்புருவம்
மாரகங்குடும்பந்தனஞ்சவுபாக்ய
மாரணஞ்சென்மமேற்சென்மம்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

நிலைமைபூருவமுன்சத்தியமன்னம்
நெற்றிபாத்திரஞ்சனரட்சண்
ணியமொடுபாண்டங்கேள்வினையிரண்டா
நெறிப்பெயரிருபத்தைந்தென்ப. (19)

வல்லபம்விசயம்வெற்றிபராக்ர
மந்தைரியம்பலம்விக்ர
மஞ்சகோதரங்காவியந்தொழும்படிமை
வளதுகாதாயுளாபரணம்
நல்லபூடணம்பின்சேவகம்வலக்கன்
னந்திரிகேள்விபோகமுமா
நவிலுமுன்றேழுநாமமுமூன்றாய்
நாட்டுவர்கணிதநாவலவர்
சொல்லுயர்கல்விவாகனம்பூமி
சுகம்சயனஞ்சவுக்கியம்பந்
துக்கணிட்சேபம்வத்திரநன்னீர்த்
துறைதடாகங்கிணறன்னை
மெல்லணைகன்றுகாலிதன்பாகம்
மேன்மைவர்த்தங்கண்டம்வலக்கை
வேதநூல்கடவுள்பணியிவையைந்தும்
மேலவர்நான்கிடைவிரிப்பர். (20)

தந்தைசேய்பத்திபுத்திமந்திரம்வித்
தாரமன்பளவுஞானம்போ
சனம்ப்ரபுமார்புபுத்திரன்மாமன்
தாயனுனிருதயம்பாசம்
சிந்தனைசித்தங்கருப்பம்பஞ்சமமாச்
செப்புபேரிருபதுமஞ்சாந்
திருமனைப்பயனென்றருமைநற்கணிதா
செப்புவரொப்புவர்தெரிந்தே
தொந்தறைகாயம்பிணியுத்தமுரோகஞ்
சோரந்தீயாயுதபீடை
துயரமிரணமாபத்துவயிறுத்த
துருகடன்றத்தபமிருத்து
வெந்தெழுபசிஞாதிப்பகைமரணம்
வேதனையிகழ்ச்சியிம்மூவேழ்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வினைப்பயனுருமனைப்பயனென்று
விளம்புவர்கணிதநூல்வீரர். (21)

களத்திரம்போகச்சுகந்தம்விவாக
கன்மஞ்சன்மானம்வர்த்தகஞ்சற்
கருமம்யாத்திரைநல்லறமனமகிழ்ச்சி
கால்கையிரேகைநல்யோகம்
தளப்புறுமரணமிருபத்துநான்குஞ்
சத்தமங்கேந்திரமென்னுச்
சாற்றுறுமேழாமிடப்பயனென்பர்
சக்கரன்றண்டனைகொடுமை
இளைப்புறுபிணியபானநோயாயு
ளிடும்பைவெங்கொலையவமதிப்பே
இரணநோய்கிலேசம்விதியறிவின்மை
யெளியசீவிதங்கடுன்மரணம்
பிளக்குறுமாயுதப்பகைவிரோதம்
பெருந்துயர்விக்கினமிகுபாழ்
பிழையெலாமட்டமப்பலனென்னுப்
பேசுவர்மாசுவர்பெருதார். (22)

நிதிதிரவியம்பாக்கியம்பயிர்ச்செயனன்
னேயர்சற்குருபத்திதிருப்ப
ணிதருமந்தவஞ்சுகுணம்பத்திநவம
ணிபுத்திரர்வித்தைமாளிகையே
பிதிர்சுகம்பிதிர்மாரகமுபதேசம்
பெருங்கொடையோகபாகங்கள்
பெறற்கருஞானம்வாவிநீரோடை
பேசியவிருபத்துமூன்றும்
துதிபெறுமொன்பதாமிடங்கொடுக்கும்
துடையடியுடல்வலிமையிட
துகைவெகுமானங்காரியங்கருமங்
தொழில்வியாபாரமுத்யோகம்
கதிதெய்வபக்திபிரட்டைபூர்வகருமஞ்
சற்கருமமெய்ஞ்ஞானங்
கருணைவேளாண்மைமூன்றுபயனுங்
காட்டுவதுபத்திடமாமே. (23)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பொன்னிலமிடத்தசெவிகண்கால்குரங்கு
புதையல்செல்வந்துயர்நிவர்த்தி
புகலிடஞ்சேட்டசோதரபகைவம்
புகளவுமூர்க்கந்துற்சேர்க்கை
மின்னியசெல்வஞ்சேட்டசோதரன்பால்
விருப்பஞ்சூதாட்டிலேவேட்கை
வெள்ளிபொன்வாதங்கபடமிகழ்ச்சி
விருத்தியவிருத்திதுன்மார்க்கம்
அன்னியமாதர்சங்கமமுயற்சி
யறிவுசிவிகையெழுநான்கும்
ஆயமாதாயமிலாபமாம்பதின்மூன்
ருமிடப்பயனென்பரறிஞர்
இன்னமும்விரையங்கடைவியமீறே
இலக்கினமூலஞ்சன்மாதி
யெனப்பெயர்பெற்றபனிரண்டாமிடத்தி
லெய்துறுபலன்சிலவிசைப்பாம். (24)

சீவனம்வேள்வுவியாச்சியக்கவலை
செல்வம்சன்யாசம்சௌக்யம்
கீர்த்திசர்வவிர்த்திபூழியமயனந்
திரவியச்சேதந்தேசாந்திரம்
சாவுதாப்பானசங்கமஞ்செலவ
சாத்தியமோக்ஷந்தியாகஞ்
சயனமழிவுபதவிசிவயோகம்
சமாதிவாமக்கண்வெண்கவரி
மேவிவையைந்தும்பனிரண்டா
மிடத்தால்விள்ளுவர்சோதிடவீரர்
மேலுமிப்பனிரண்டிடமுமொவ்வொன்றில்
விளம்பியபேர்கள்மற்ருென்றில்
பாவினவாகிலவணவண்கூறும்
பலன்களால்கிரகர்நிலைகளால்
பார்வையாலவர்தஞ்சேர்வையால்நடப்புப்
பண்பினுற்பகுத்தனர்கொளலே. (25)

———

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

உ

ஸ்ரீ ராமஜெயம்

நூலாரம்பம்

மங்கள பாவகம்

குரு வணக்கம்

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

பொன்குருவிற்பூத்தகொன்றைபுனைந்துளாற்குப்
புனிதமறைவடித்தருளும்புலவர்கோமான்
றன்குருகிரியிலமைந்துகணிதநூற்குச்
சற்குருவாயவதரித்தசார்வபூமன்
என்குருவீரப்பமழைமுகிலைப்போற்றி
யிலங்குகணிதக்கடலுக்கிறைவர்ப்போற்றி
நன்குருவக்காளையர்க்குமணங்கள்பூணு
நான்முறையைக்கோன்முறையானவிற்றுவேனல். (26)

இலகினத்தோனின்றநவாங்கிசத்தோன்ராசிக்
கிந்துவுடனந்தனுமிராகுவந்தால்
அலக்கணின்றிமணங்கூடுமென்பரேமோன்
அசுரர்க்குருவிருவரிராசியிலேயாலோன்
துலக்குமறையவன்வந்தாலுடனேரல்ல
சுககலியாணங்கூடுந்துலங்குமேழிற்
பலத்துடையபுதனிருந்தால்மாமன்பெண்ணைப்
பரிந்துமணம்புணர்ந்துசுகப்பயன்றுய்ப்பானல். (27)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சத்தமத்தோன் றிரிகோணத்திருந்துமேருத்
தலநோக்கவேழ்க்கேழோனுதாயத்தில்
உத்தமனுங்குருவிருந்துமதியினேக்க
முறக்காமியைந்தினல்லோருடனே கூட
சுத்தவாக்கதிபனுச்சமுயர்ந்தோனேடுஞ்
சொச்சேத்ரனெடுங்கூடித்துலங்குவானேற்
பத்தியுள்ளமனையவளை மணந்துநல்ல
பாலகரைப்பெற்றுமின்பம்பயன் றுய்ப்பானல். (28)

சத்தமத்தோனுட்சிபெற்றுவாக்கு மன்னன்
ருனுகிக்களத்திரக்கோளாதாயத்தோன்
ஒத்திவர்களுடன்சேரக்குருவின் வீட்டில்
உயர்பாக்யபதியுறப்பொன்வெள்ளிசோமன்
இத்தனைபேர் கூடியிலக்கினத்தில்வாழ
இவனுமத்தைமகளைமணந்தினிதுவாழ்ந்து
புத்திரரைப்பெற்றுமனமகிழ்ந்துநல்ல
புண்ணியமுங்கண்ணியமும்பொருந்திவாழ்வான். (29)

ஏழுடையோன் றிரிகோணகேந்திரமேல்
இந்துதிரிகோணமுறநிதியிற்பச்சை
வாழவேழவனேழைமகிழ்ந்துநோக்க
மகிழ்களத்ரகாரகனுர்வலுக்கொண்டேறச்
சூழுமதிசப்தமனைமறையோனேக்கத்
தூயசெவ்வாய்கேந்திரிக்கக்காமிபாயம்
வீழுறச்சந்திரன்காமிதன்னைநோக்கில்
விண்ணிலருந்ததியனையாள்விவாகஞ்சேர்வன். (30)

சாமபதிசந்திரமங்களயோகத்தே
கலந்துறையக்குருகேந்த்ரங்கதிக்கவேழிற்
காமிபுறப்பாக்யபதிலக்னகேந்த்ரங்
கலக்கவேழுக்கேழோன் கண்ணுய்நிற்க
பூமிமிசையோக்கியபாக்கியங்களோங்கும்
பூவையைநன் மணம்புணர்ந்துபுத்ரபாக்கியம்
சேமநிதிகிடைத்துபின்னல்வழியாற்செல்வச்
சேர்க்கையும்பெற்றுயர்வனெனச்செப்புவாரால். (31)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

களத்திரத்தானாதிபதிகேந்த்ரமேறக்
காமிதிரிகோணமுறநிதிக்கோன்றானே
களத்திரகாரகனாக்கிரியோன்கூடக்
கலந்துமங்களாதிபனைக்கனிந்துகூடக்
கிளைத்தமதிகுருவுக்காதாயமேறக்
கிடைப்பாரேலருந்ததிபோற்கீர்த்தியோங்கித்
திளைத்தபதிவிரதைமணம்பெற்றுவாழ்வர்
செல்வமவளுள்ளளவுஞ்சிதைவுறாதே. (32)

காமத்தோன்கேந்திரிக்கவேழுக்கேழோன்
கனகோணமேறவெள்ளிகண்டமேற
வாமத்தோனாட்சிபெற்றசெவ்வாயோடு
மருவிநிற்கக்காமக்கோள்வியத்துவாழச்
சோமற்கேழிடைநிதியோன்காமியோடு
துணைக்கூடப்புகர்வீட்டிற்றாதன்வாழப்
பூமற்கேழவன்சுகத்தேபுகுந்துநின்றார்
புண்ணியநன்மனைவியொடுபொருந்திவாழ்வன். (33)

சத்தமனார்சேய்வீட்டிலிருக்கவேழ்க்குத்
தனியேழோன்களத்திரகாரகனைச்சார்ந்து
சித்திபெற்றுவாக்கிலுறநிதிக்கோன்காமி
சேயொடுசேர்ந்தந்தணனார்திருட்டிவாழப்
பத்தவனார்பார்வைபெற்றுநாலோனைந்தோன்
பனிமதியின்றலத்திலுறப்பலித்தானல்ல
உத்தமியார்மணமிரண்டுகிடைத்துப்பாலர்
ஓங்குசெல்வத்தொடுநெடுநாளுலகின்வாழ்வான். (34)

களத்திரகாரகன்களத்ரத்தானவேந்தன்
காரியாதிபனுடனேகலந்துவாழக்
கிளைத்தகுருதிரிகோணகேந்த்ரமேறக்
கேந்திரத்திற்புதன்மதியுங்கிடைக்கச்செவ்வாய்
விளைத்திடுகேந்திரமேறச்சந்த்ரகேந்த்ரம்
வெற்பரசுபெறக்காமிவியத்தேநிற்க

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மூளத்திடுசாதகனிரண்டுமூன்றுபெண்கள்
முழுப்பதிவிரதைகளுடன்முயங்கிவாழ்வான். (35)

சத்தமத்தோனொடுகூடிநின்றோர்பாலும்
தனிவாக்கோனுடன்கூடிநின்றோர்பாலும்
சித்திபெற்றவலுச்செலவையறிந்துநோக்கிச்
செயங்காணிலுத்தமிப்பெண்சேர்வளென்பர்
ஒத்தவலுக்குறைந்துபலவீனமேறில்
உதவியற்றகழிசிறைபெண்ணுறுவளென்பர்
உத்தமரையெண்ணிநற்பெண்தொகையுந்தீயோ (ல்)
ருற்றதெண்ணித்தீப்பேணெண்ணுமுறைசெய்வாரா

தலையிறைவனேழிறைவன்புடங்கள்கூட்டிச்
சக்கரத்தால்வகுத்துவந்தநாளின்பாதத்
துலைவிலும்பர்குருவருங்கால்மணநாளாகுஞ்
சுத்தகுணரத்தினமாய்த்துலங்கிவாழ்வள்
நிலையதிலேபாபர்வந்தான்மணநாளெய்து
நீசகுணபூஷணியாய்நின்றுவாழ்வள்
மலையிறைவன்சந்திரனைக்கூடிநின்றால்
மாதாவின்வீடடையுமனையைச்சேர்வன். (37)

சுங்கனுக்கேழோனேழிற்சுபர்கூட்டத்துட்
டுலங்குறவேழோன்வாக்கோன்றுணையாய்ச்சேர்ந்து
செங்கணிடையிருக்கிலொன்பான்பத்திம்மன்னர்
திசையிலவர்புத்தியிற்கல்யாணஞ்சேரும்
மங்கலத்தோன்பாக்கியத்தோன்சுபருத்தந்தம்
மனைமாறிநிற்கவியமகிபன்பூண்ட
பங்கமிலாத்திசையிலவன்புத்திநாளிற்
பாக்யமணநிரம்புமென்றுபாடுவாரே. (38)

சந்திரன்வாழ்பதிக்கிறைவன்புடத்தோடந்தச்
சந்திரசத்தமன்புடமுஞ்சாரக்கூட்டி
முந்துரைத்தபடிவகுக்கக்குருவந்தாலும்
முழுத்தலைவன்புடம்வாக்கோன்புடத்தாலேற்றி

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வந்திரவிநின்றபதிபுடமுங்கூட்டி
வகுக்கவதிற்செங்கதிரோன்வந்துற்றாலும்
செந்திருவைநிகர்த்தபெண்ணை மணஞ்செய்காலஞ்
சேர்ந்ததென்றுதேர்ந்துநின்றுசெப்பலாமே. (39)

பதினான்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

பஞ்சமன்குருவின்றலத்திலேகேந்த்ரம்
பாய்ந்துறப்பஞ்சமன்றலத்திற்
பண்ணவர்க்காசான்பதிந்திடவாட்சிப்
பனிமதிகுருமுகம்பார்க்கச்
செஞ்சுடருச்சமேறிப்பாக்கியத்தோன்
றிங்களின்பஞ்சமனுடனே
சேர்ந்திடச்சந்த்ரபாக்கியாதிபதி
திருக்கண்ணேக்கடைந்தராசியற்குக்
கொஞ்சியமக்கள்பலருளராவர்
கூடுநாள்விளக்குவாங்கேந்த்ரங்
கூடியபுந்திதிசையிலேதேவ
குருபுத்திசேட்டனைக்கூட்டும்
வஞ்சகமின்றித்தந்தசேயிவனே
மாநிலத்தனந்தநாள்வாழ்வன்
மற்றையர்நிலைப்பதரிதுபெண்ணாக
வரிற்சிலநிலைக்குமென்றறியே. (40)

புத்ரகாரகனுங்காரியாதிபனும்
புகரொடுகூடிலக்கினத்திற்
பொருந்துறச்சந்த்ரபாக்யவான்குருவின்
பொன்மனைக்கிருந்திடவைந்தோன்
சித்திரச்சந்த்ரபஞ்சமனாகிச்
சேய்க்குநல்லாயத்தேசெழிக்கச்
சிறந்தநற்கோணகேந்திரத்தாட்சி
சீதகனிருந்திடவைந்தில்
உத்தமகுருநோக்குறக்கிடைத்தவனுக்
குளர்பலர்மைந்தர்கள்சேட்டன்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

உதவுநாள்குறிக்கிற்குருநிசைஞானி
யுயர்புத்தியென்பராலுரவோர்
சுத்தனுமிச்சேய்பிதாமகற்கடுத்த
சுகத்தொழிற்பணிவிடைபுரிந்து
துயரிலாத்தாதைக்குமுறைசெய்து
துலங்கியபுகழ்பெறுவானல். (41)

ஐந்தவனுவிற்கேந்திரமேற
வந்தனன்சுக்ரகேந்த்ரத்தோ
டன்றியுமிலக்னகேந்த்ரமுமேறி
யாட்சியும்பெறமதிக்கைந்தோன்
சுந்தரவருணுக்கிலக்கினத்தேறச்
சுகசந்த்ரபாக்கியனுட்சி
துலங்குசேயுடனேவெள்ளிக்குமுன்றிற்
றேய்ந்திடப்புதன்றிரிகோணம்
வந்துறக்குருவாயத்திடைபிரவி
வயங்குறக்கிடைத்தசாதகற்கு
மைந்தர்கள்பலராமிதிலொருவினையம்
வழுத்துவாம்புகர்திசையிடத்தே
புந்திபுத்தியிலேகொடுத்தசேய்திலைத்துப்
புத்தியுஞ்சித்தியும்பெறுவன்
புதுநிலாத்திசையிற்சேய்திசைதன்னிற்
புத்திரர்கிடைப்பரென்றறியே. (42)

கேந்திரத்தலத்திற்பஞ்சமன்குருவின்
கிருபைக்கண்பெற்றுமூன்றவனைக்
இ[illegible]த்தினிதிருக்கச்சந்த்ரபாக்கியத்திற்
[illegible]ளர்குருவிருக்கவத்தலத்தோன்
ஏந்தியசந்த்ரபஞ்சமத்திருக்க
விவனையுங்குருகடாட்சிக்க
இரவிசந்த்ரற்குக்கேந்திரத்திருக்க
விந்துவுங்கோணமீதேற

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வாய்ந்தபாக்கியத்தோன்பாக்கியகேந்த்ரம்
வாழ்வுறக்கிடைத்தசாதகற்கு
வாளராத்திசையிற்புந்திபுத்தியிற்பெண்
மகளுண்டாய்க்குருதிசைவரவே
காந்தியசனிமால்கேதுபுத்திகளிற்
கன்னியர்மூவரைத்தந்து
கமழ்குருதிசையிற்சந்திரன்புசிப்பிற்
காளையர்தோன்றுவர்காணே. (43)

புத்திரதானத்ததிபதிசொச்சேத்
ராங்கிசம்பொருந்துறவவன்ருன்
புக்கவங்கிசத்தோனமிசசொச்சேத்ரம்
புகுந்துறப்பிறந்தசாதகற்குப்
புத்திரனுண்டேயவன்ருேகையொன்றே
பூரணவாயுளுநன்றே
பொன்மலையிருந்துநோக்கியுமுரிமை
பொறுத்துநின்றுளார்புதல்வர்
இத்தலத்துதித்தவிலக்கினம்புண்ய
மேறியகோட்கள்நோக்களித்தோர்
இவருடனின்றேர்புண்ணியரென்று
விளமையிற்புத்திரர்கிடைப்பர்
ஒத்தவைந்தோனேந்திடைவல்லோர்நல்லோ
ருடனின்றுகுருகடாட்சமும்பெற்
றேங்கிடங்கிடைத்தசாதகன்சிறந்த
உறுதிமக்களைப்பெறுவானல். (44)

சன்மலக்கினத்துக்கைந்திலேகதிரோன்
றுவுறப்பஞ்சமன்வலுக்கத்
தாரைமணளன்கோணகேந்த்ராதி
தகைவவிசிறந்துறக்கிடைத்தோன்
பொன்மயமானமக்களைப்பெற்றுப்
பூரிப்பன்பலசுகம்பூண்பன்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

புரோகிதனைந்திற்புகமைந்தோன்வலுக்கப்
புண்யர்நோக்கினுமகார்புக்கும்
நன்மைசெய்குருவைகேசியங்கிசத்தே
நணுகியைந்தவன்முகம்பார்க்க
நல்லவர்பார்வையின்னமுங்கிடைக்க
நாயகப்புதல்வரைப்பெறுவன்
மென்மையாயுரைத்தவிவ்வகைகொண்டே
விளம்பலாங்கணிதமென்றெண்ணேல்
மேலவர்குழுவிற்றெரிந்தெடுத்துரைத்த
வீரரைப்புடங்கொண்டுகாணே. (45)

சன்மலக்கினத்தோனைந்திலேநிற்கச்
சர்ப்பமொன்றவனுடன்சேரச்
சாற்றுமைந்ததிபன்வலுப்பெறவதில்வே
தனுமுறவல்லதுபார்க்கப்
பண்மகர்வாலிபத்திலேவருவர்
பஞ்சமனங்கிசந்தொட்டுப்
பகருமிலக்கினத்தளவெண்ணிப்
பாலகர்தொகைதெரிந்திடுக
சன்மலக்கினதியேழிடமேறச்
சத்தமனுலவன்கூடித்
தாழ்ந்தசட்டாட்டவியமலாநல்ல
தானத்திலேறவாக்காதி
நின்மலசன்மலக்கினத்தோனும்
பஞ்சமத்தோனுமின்றிடப்பொன்
நேத்திரமிவைகளெதிற்கிடைத்தாலும்
நிலைத்தபுத்திரர்பிறப்பாரால். (46)

ஐந்திறைநின்றபுடத்தையுஞ்செங்கே
ழுலரியின்புடத்தையுங்கூட்டி
யளந்தராசியிலேகுருவருங்காலத்
தழகியநன்மக்கள்வருவர்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

முந்துசொலேந்தாதிபன்புடத்திடையே
முதுமகன்புடத்தினைநீக்கி
முதிர்ந்தராசியிலேகுருவரிற்சிறுவர்
முத்தினுவிசேடராய்க்கிடைப்பர்
ஐந்தவன்சுபனுயுச்சமீதேறி
யாயநட்படைந்திலாபத்தே
அமர்ந்திடிற்சுகுணமைந்தர்கள்கிடைப்ப
ரைந்தவர்கூடினேர்தொகையே
மைந்தர்கடொகையாமிலக்கினத்தலத்து
மதியுறச்சுக்கிரனுறில்
வாழ்வுறிலிவனுக்கொருவனேமைந்தன்
வடகிரியாதிசெய்திடுவன். (47)

கதிர்மதியிருவரினியகேந்திரத்துக்
கலந்துமேற்சொன்னசக்கரத்துட்
காணிலிக்காளைபிள்ளையைக்கிடத்துங்
கருமம்பெறுன்மகனிடத்தே
துதிபெருமைந்தோன்சூரியனுடனே
தோன்றிடிற்பன்றிபோற்பலசேய்
தோன்றுவரென்பார்இரவிகேந்திரத்திற்
சோமனின்றிடிற்புதிர்க்கிளைத்தோன்
மதியமாக்கடவுள்பண்பரத்திருக்கில்
வலிபிதாவுடன்சமமாவன்
மாமதியாபோகிலியத்திலிருக்கில்
வளர்புகழ்தந்தையின்மேலோன்
இதுவலாலலேந்தேழொன்பதுவியத்து
ளிந்துநட்பாட்சியுச்சஞ்சேர்ந்
திறையருள்பெற்றூற்றன்னிலும்பத்தா
யிரங்கொண்டபுதல்வனைப்பெறுவன். (48)

இடபலக்கினத்தோர்க்கைந்திலேகுருவீற்
றிருந்திடவப்பதிநாதன்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இந்துமண்டலத்தில்சத்தமகோணத்
தெழிற்குசகோணம்பெற்றேற
உடுபதியிராசகேந்திரத்திறைவீட்
டொள்ளியோனேக்கடைந்திருக்க
ஓங்கியசந்த்ரகேந்திரத்தறிவ
னுயர்குருநோக்கடைந்திருந்தால்
மடலவிழ்கோதைசுக்கிரன்றிசையின்
மத்தியில்வாய்ப்பள்பெண்மக்கள்
மதிதிசைவருவாரிவர்களிலிளையாள்
மலர்மகளனையபாக்கியத்தாள்
திடமிவளாலேசெல்வமும்புகழுஞ்
சித்திரமாடமுங்கிடைக்கும்
செழுநிலாத்திசைசேய்திசைகளில்வருவர்
செல்வபுத்திரரென்பர்தெளிந்தோர். (49)

கேந்திராதி தானங்களுங் கிரகாதி காரங்களும்

ஒன்றுநான்கேழுபத்தென்பகேந்த்ர
மொன்றைந்தோடொன்பதுகோணம்
ஒருபதினென்றின்கேந்த்ரம்பண்பரமா
மொன்பதின்கேந்திரத்தலங்கள்
என்றுளதாபோகிலியமாமிவைக
ளிராசிமண்டலநிரையென்பார்
இயலுளகாரகாதிபருரிமை
யியம்புவாமலர்கதிரிரவிக்
கொன்றுகாரகங்கள்பிதிர்பிரதாப
முட்டணஞ்சத்தியஞானம்
உதயமான்மாவுத்யோகமஸ்மார
உரோகமுபாலனசித்தம்
நன்றிவைபத்துமன்றியுந்தான
நாயகத்தன்மையாற்கதியால்
நாட்டியவுரிமையாவையும்பூட்டி
நவிலுவார்கணிதநூனுதர். (50)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சந்திர னுரிமைமாதுருவாமஞ்
ஞசைத்தியம்வதனஞ்சீதளம்பூச்
சந்தனனுபவந்தருமங்கணேசோச்
சாரணமெட்டென்பர்தக்கோர்
செந்திருமேனியரத்தனதுரிமை
செப்புவாஞ்சகோதரவிருத்தி
சிறந்தவிடம்பம்போர்ச்செயல்பூமிச்
சேர்க்கைபித்தாதிக்கம்வீரம்
ஐந்தென்பரறிஞர்புதனுரிமைகளை
யறைகுவாமாதுலன் றீர்க்கம்
அரியநற்பந்துகல்விகேள்விகள்செட்
டறிவுகானத்தெளிவைந்தாம்
அந்தணனுரிமைபுத்திரலாபம்
அருமறைத்தெளிவுபொன்னிலயம்
அரசர்சமானமரதனுபரணம்
ஐந்துமாமென்பராலறிஞர். (51)

சுக்கிரனுரிமைகளத்ரமுல்லாச
சுகமணிமந்திரம்போகம்
சுகந்தமங்களமுதாரம்வாகனம்ப
சுக்குலச்சேர்க்கைநற்சுகிர்தம்
ஒக்குமீராருஞ்சனியனுக்குரிமை
யோதுவாம்ஆயுளினிலைமை
யுறுபசிதாகந்துற்பலமபாயம்
உபத்ரவம்வாதநோய்ப்பீடை
யிக்குணமேழாமிராகுவினுரிமை
யியம்புவாந்தீர்த்தயாத்திரைநூல்
ஏற்றுமைஸ்வரியங்காமசம்போக
மெக்ஷணியாட்டம்பொய்குடிலம்
பக்குவவைத்யந்தைரியம்பகைமை
பாண்டுரோகாதிக்கங்களவு
பரக்ரகப்பிரவேசம்பதின்மூன்றுய்ப்
பகருவர்கணிதநூல் படித்தோர். (52)

கேதுவினுரிமைகூறுதும்ஞான
கேவலந்தெய்வத்தியானம்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கிடைப்பருந்தவசுமௌனவைராக்கியம்
  கிரியைசன்னியாசநிதானம்
மாதுர்மகிகாரகந்திடசித்த
  மனவெறுப்பிலாகிரிவழக்கம்
வறுமைவீடின்னமோக்ஷசாம்ராஜ்யம்
  வாழ்வொடீரேழெனவகுப்பர்
ஈதெலாமிராசிகாரகர்செயலாம்
  இறைவனுப்பலமல்லதீனம்
இவையுச்சமாக்ஷிபகைநட்புநீச
  மென்பதேவனுச்செலவென்பர்
ஓதியதல்லாலவரவர்க்குள்ளு
  மூட்பகைநட்பெனவுண்டே
உரைத்தனகொண்டுசொலாதனவறித
  லுத்தமர்செயலென்பருயர்ந்தோர். (53)

பாலாரிஷ்ட விபரம்

கலி வெண்பா

எட்டில்மூன் றிற்பாபரேகமதிகாரி
தொட்டரவுக்கேழில்வரச்சூரியற்குத்-திட்டமுடன்
நாலிலிருகுருவுநண்ணினுற்றீவிரமாய்ப்
பாலன்மடிவான்படியிலிரு-நாலவனுக்
காறிற்சனிசேர்ந்ததனுவிற்சேயேறக்
கோறுவிதியோன்கேந்த்ரங்கூடவே-கூறுததி
மைந்தருதிக்கிலவர்மாண்டிடுவரோராண்டிற்
சிந்தைதெளிந்தவர்க்குஞ்செப்புசருப்-பந்தனக்கு
நாலிற்சனிமேவநற்சனிக்கும்பத்தில்வெய்யோன்
மாலவன்வெள்ளிமருவியுறக்-கோலி
மதிவிதியுங்கேந்திரிக்கவந்தவரீராண்டில்
விதிவலியான்மாள்வரெனவிள்ளாய்-கதிரவனுக்
கட்டமத்தோன்மேருவுறவந்தவனுக்கெட்டாமிடத்தோன்
வட்டமதிலக்கினத்தில்வாயவே-யெட்டவனுக்
கட்டமனேழெய்தவதிற்சுபர்கண்ணுேக்கமறத்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

திட்டமுடனோராண்டிற்செத்திடுவர் - தொட்டொருநாள்
மந்தனுறப்பாம்பிரண்டில்வாவவிரையத்திரவி
புந்திசேய்பத்திலுறப்பொன்னுளில் - வந்துறவே
மேவினமைந்தர்மிகவிருந்தானுலாண்டே
யாவிமடிவாரிதற்கோரையமில்லை - யேவுமெட்டோன்
ஈனமுறவேழோனிழிகுலமாய்மேருவிற்போ
யானியடையமதியந்தனிவர் - ஊனமாய்க்
கேந்திரத்திலேறக்கிடைத்தமைந்தரோராண்டின்
மாந்தமதனலேமடிந்திடுவ - ராந்துணைவன்
எட்டவனுங்கூடியீரைந்தில்வீற்றிருக்கப்
பட்டவேழோன்பகையாய்ப்பார்வையிட - நட்டமாய்க்
கார்மதிகூடக்காளையீராண்டினுக்குட்
சாரிபோவானியமன்றன்பதிக்கே - யோராறோன்
சந்திரற்குமூன்ருறோன்ருன்மூவர்கூடிடவே
சுந்தரக்கோணேக்கமறச்சொல்லக்கேள் - வந்தமைந்தர்
மாண்டிடுவர்நாலாண்டின்மன்னியிதைநினைவாய்
ஆண்டுதனைநோக்கியறைகநீ-தூண்டுமதி
பத்தினலேழிற்பதியச்சனிசேயுஞ்
சித்தமேருங்கூடிச்சேரவிரை - யத்தினிலே
யேமனீராண்டிலிழுத்துப்போவானிசமே
நீமதியினலேநிதானிப்பா - யாமூன்றோன்
எட்டவனுமாறோனுமேகமதிக்கோர்நான்கிற்
பட்டிவன்போவானெனவேபாடுகநீ-ரெட்டைரெண்டோ [ன்
சந்திரனுக்காறோன்ருன் கூடத்தீவிதியும்
பந்தமுடனேக்கவந்தபாலகனும் - விந்தையாய்
மாளுமாளும்பிழையான்மண்ணிலிதையறிந்து
கோளின்பலனய்ந்துகூறுவாய் - நீளுமெட்டோன்
நாலின்மதிவிதியினண்ணக்கரிக்கேழிற்
சாலரவியேகமைந்தன்ருனரிட்ட - மேழிற்
சனியேகவேழோனுக்கட்டமனுஞ்சார
வினியசுபர்நோக்கோயவெட்டிற் - பனிமா
மதிபாவர்கூடவந்தமைந்தனைந்தாண்டுக்குள்
விதியிழந்துகாலனூர்மேவும் - பதியோன்
மதிக்கெட்டோன்கர்மன்விதிமாகேந்த்ரமேற
விதமாயிரண்டோன்விழிக்க - மதியேழ்
கரிமேவவைந்தாண்டிற்காளைமடிவான்காண்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

திரமுடனேகோளறிந்துசெப்பாய் - கரிவிதியும்
கூடிவியமேகக்குன்றியொருகோணீசம்
பாடச்சனிக்கொரெட்டிற்பாவியர்கள் - நீடியுற
மாண்டிடுவன்மெய்யாகமண்ணிலிவனேந்தான
வாண்டுக்குள்ளாகவறைகுவா - யீண்டு
விதிகருமமேறமேவுகர்மனேழோன்
மதியின்பிதிமூவர்மன்னவாய - மதிசுபர்கள்
நோக்கமறவந்தமைந்தனுண்மையாயேழாண்டிற்
போக்குறுவான்காலன்புதுக்குடியாய் - வாக்காதி
ரோகன்றலைநாதனேடிவிதியேகத்
தாகமதிக்கட்டமத்தோன்சப்தமத்தி - லேகச்
சுபர்நோக்குமில்லாயிற்சொல்லுமொன்பதாண்டிற்
சுபநோக்காற்காலனூர்காண்பான் - றுவனுரேன்
அந்தமெட்டின்மேவவெட்டோனறில்வரமுத்திபிடை
வந்துவிடப்பாந்தள்மருவவே - நொந்துபவர்
நோக்கிடவேபத்தாண்டிஞெயாய்சமனும்வந்து
தாக்கிடுவானென்றறிந்துசாற்றுவாய் - தீர்க்கமில்லா
மைந்தருதிக்கில்வரும்பாலாரிட்டமிதென்
றந்தரங்கமாகவறிவிப்பா - யிந்தவிதி
சொல்லாதசாதகர்க்குஞ்சூக்குமத்நாலாய்ந்துசுக
மெல்லாமுரைப்பாயினி. (54)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மத்திமவாயுசு

ஈரடிக் கப்பற் பாட்டு

அட்டமத்திராகுயுற - யேழோ
　　னட்டமனும்லாபம்வரத்
துட்டர்விழியானோக்க - விதிற்
　　றோன்றுமந்தப்பாலகர்க்குச்
சொல்லுவாய்ராகுதிசைசுயபுத்திதன்னில்
　　அல்லதேலவ்வீட்டுநாதன்புசிப்பிற்
கொல்லுமேநட்டநடுவாயுளிடையந்தோ
　　குவலயத்தோரறியக்கூறுவாய்நீயே. (55)

சந்த்ரவிதியட்டமனுங்கர்மன்
　　றுன்கூடிக்கண்டம்வர
வெந்துதனத்தவனோக்கவிதில்
　　மேவுமந்தசாதகர்க்கு
விழியோன்றன்றிசையதிற்பத்தோன்புசிப்பி
　　லழிவானநோயினாலல்லன்மிகப்பட்டுக்
கழிவானேயழகுள்ளகாளைப்பருவத்திற்
　　காலனகர்செலுமென்றுகண்டுமொழிவாயே. (56)

அட்டமன்காரியும்பகையா - யிருவ
　　ரனல்விழியானோக்குமுறத்
துட்டர்களும்விதியேகமேருஞ்
　　சொல்லியனுங்கேந்திரிக்கத்
துஞ்சிடுங்கரும்பாம்பிரண்டிலேவாழ
　　· மஞ்சுலவியவ்வன்னமத்திமவயதில்
நஞ்சுமிழ்ராகுதிசைநீலன்புசிப்பில்
　　நமனூரைக்காண்பனெனநாடிமொழிவாயே. (57)

மூன்றில்வியத்தோன்வரவேயெட்டோன்
　　மூவிரண்டில்வரவதன்கோன்
ஊன்றுகிரிதிரிமூவர்மதி
　　யோன்விதியிலேபடவே

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

உற்றவிரையாதிபதிபெற்றதிசைதன்னி
லட்டமத்தாதிபன்புத்தியிலிவர்க்கே
மத்திமப்பருவத்தில்மடிவுவருமென்றே
மண்ணினிடையறிவாகவெண்ணிநீகூறே. (58)

சந்த்ரவிதியட்டமனும் - காரி
தான்மூவர்வியமேகச்
சுந்தரர்களேறுக்கறவே - வியன்
தோன்றிசையவாதாயமதிற்
சொல்லிநம்விரையாதிபன்பெருந்திசையில்
வெல்லுமவன்பதியேகினவர்புத்திதன்னிற்
கொல்லுமேமத்திமவாயுளிடையந்தோ
குவலயத்தோரறியக்கூறுவாய்மெய்யே. (59)

ஏழாறேனிவர்கூடி - நான்கி
லேகவிதிகரிக்கிரண்டில்
மாலோனும்நோக்கறவேயிதில்
மருவியுதித்தோர்களெல்லாம்
மன்னியேழாதிபன்மகாதிசைதன்னி
லுன்னியேரோகாதிபதிதன்புசிப்பில்
வன்னமிகுமத்திமவாலைப்பருவத்தில்
வஞ்சகமனக்காலன்வசமாகுவாரே. (60)

எட்டோன்கண்டமதிலேகக் - கரியும்
இந்துவுக்கெட்டதின்மேவச்
சட்டமுடன்கரிக்கேழில் - ரவி
தாவவிடந்திரிமேவத்
தங்குமூன்றுதிபன்றந்திடுந்திசையில்
மங்கிடுமெட்டாதிபதிதன்புசிப்பிற்
பங்கமாய்மத்திமவாயுசுதன்னிற்
பரமனார்திருவடிப்பதவிபுகுவானே. (61)

மதியினெட்டோன்விதிகருமன் - மூவர்
மன்னிடவாதாயமதில்
இதமுடனேகருமமதிலாய
னேகிடவேமத்திமத்தில்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

எண்ணியேலாபாதியிருந்தவன் றிசையில்
மண்ணினிடையட்டமனிருந்தோன்புசிப்பில்
வின்னங்களாகியேகாலன்பதிக்கே
மேவுவான்காளையெனவிள்ளுவாய்மெய்யே. (62)

இரண்டோனுறேன்காரியெட்டி - லுற
இதன்பதியுரோகமுறத்
திரண்டவிடந்தசமேற - வகைத்
தீக்கோள்கணேக்கமிடத்
திண்ணமாரோகன் றிசைக்கணவன்வீட்டில்
கண்ணினவன்புசிப்பிலந்தநாகரிகக்காளை
வண்ணமன்மதனிகரும்வாலைப்பருவத்தில்
மறலியூர்குடிபுகுந்துவாழ்வனெனக்காணே. (63)

சுகபாக்யாப்பனிரண்டோ - னிவர்கள்
சுடுபகையோடுடன்கூடி
மிகுகேந்த்ரமுறவாறே - னுய
மேவவிஷமதிவிதியில்
விந்தையாயாறவன்மகாதிசைதன்னிற்
சந்திரற்கட்டமன்றந்திடுபுசிப்பிற்
சுந்தரக்காளையிளவாலைப்பருவத்தில்
துள்ளுகுட்டியந்தகன்சொந்தநகர்புகுமே. (64)

சத்துருவெட்டேகவெட்டோ - னேழோன்
தான்கூடிக்கண்டம்வர
நத்திக்கரிக்கேழில்குஜன் - நாட
நன்மையுள்ளோர்நோக்கமற
நாடியேயாறவன் றந்திடுந்திசையிற்
போடவருமேழோன்புசிப்பிலிந்தக்காளை
வாடியேமத்திமவாயுளிடையந்தோ
மரணமடைந்தேபரமன்சரணம்புகுவானே. (65)

எட்டிற்சனியேறிடவேசனிக்
கெட்டிற்குருமாறிடவே
அட்டமனுக்கேழில்விஷஞ்சேர
அதைத்தீயர்நோக்கமிட

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அந்தன் மகாதிசையிலேழோன்புசிப்பில்
விந்தைதருமத்திமவிடனவயதிற்
சுந்தரநிறைந்திடுமதன் றரனிலந்தோ
சொல்லலாமாரகந்துணிவுபெறமன்னே. (66)

தானத்திறைமெலிவாகப் - பாபர்
தழல்விழியானேக்கவட்ட
மானத்திறைசெயமாகச் - சுபர்
மலர்விழியினேக்கமற
மன்னிடுமேருவிறைதன் னுடன்சேர்ந்தோன்
பொன்னவன் றிசையினிடையட்டமன்புசிப்பில்
நன்னயக்காளையிளவாலைப்பருவத்தில்
நமனுரைக்காண்பனெனநாட்டுவாய்நீயே. (67)

காளைபிறர்பொருள்கவரான்கருதான்றீமை
மூனம்வாய்த்தமுடிக்கரசன்கருமனூறேன்
மூவர்களுஞ்சாக்கடையின்மோதநோக்கத்
தனதாக்கமிழந்துபந்துவர்க்கத்தாராற்
சன்மானரக்ஷணியஞ்சார்வனம்மா. (655)

சன்மபதிசுகபதிசேய்மூவர்கூடித்
தசமேவவிரைபவனைசார்ந்தவெய்யோன்
வன்மமுடன்முதன்மூவர்வதனநோக்க
வந்தமகன்றனங்கள்பலவழியாற்றேயும்
சின்மபதிமகரபதிகன்னிநாதன்
செப்புமிவர்மூவர்களுஞ்சேர்ந்தாதாய
நன்மனையிலிருக்கவதற்குடையவேந்த
னுசமுறிலிவன்பொருளுநாசமாமால். (656)

பஞ்சமன்சந்திரனூறேன்மூவர்கூடிப்
பசுந்தனத்தில்வீற்றிருக்கத்தனத்தோனேழோன்
நஞ்சனவுரோகத்தானத்தில்வீழ
நலமிழந்திச்சாதகன்பொய்நவின்றுவாழ்வன்
விஞ்சுசுகபாக்கியனட்டமத்தில்வீழ
விரையபதியத்தலத்தினுச்சமேவில்
கொஞ்சமல்லபலவருந்திப்பந்துநேசர்
கொடையாலுநாடையாலுங்குளிர்ந்துவாழ்வன். (657)

நிலாமதியினேய்வீட்டின்மலையோன்சேர்
நெரியானனவனுடனேநிற்கப்பாபர்
விலாவிரண்டும்மளைந்துநிற்கவிணைந்தோன்சால
மிடிபடுவனிடிபடுவன்மின்னுள்கையால்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கலாமதியுஞ்செம்பாம்புமைந்திற்கூடக்
களத்திரத்திலட்டமனுங்கரியுங்கூட
குலாவுநிதிபதியாறிற்கிடைக்கவாய்த்தோன்
குணமனைவிவிழுந்துசுகங்குறைவான்காணே. (658)

கரும்பாம்புஞ்சனியுமொன்றுகூடிச்சன்மம்
கலந்துநிற்கப்பகன்மதியைக்கனன்றுநோக்கப்
பெரும்பாம்புகேந்திரத்தைப்பிடித்துக்கொள்ளப்
பெலத்தமாரகன்பாக்யபீடமேறில்
வரும்பாகஞ்சுகியனுய்த்தன்னையீன்ற
மாதுர்பலரைப்புணரமானம்போக்கிக்
கரும்பாலையிட்டாற்போலுடைந்துசோர்ந்து
கைப்பொருளுமிழந்தலையுங்கடமையோனே. (659)

குடும்பாதிபதிவாக்கோனுதாயமனைக்கிருக்கக்
குளிர்நிலாநாற்
கடும்பாலினினிதிருக்கநிதியில்வெள்ளிகுருவாக்கி
லமர்ந்துங்காரி
கொடும்பாம்போடுச்சமுற்றகோணகண்டநிலையடைந்து
குன்றினின்றுள்
இடும்பாம்புலமெயடைந்துகுருவைநித்தைபுகல்வனிந்த
விழிஞன்காணே. (660)

———

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ஆயுட் பாவகம்

வெண்பா

வார்சடையோன் தன்னருளால் வந்தமறைமுதலே
பார்புகழுஞானப் பனிமலையே - சீர்பெருகுந்
தந்திமுகத்தைந்துகரச் சந்திரனே வந்தனங்காண்
சந்ததமு நீதுணையைத் தா.

ஆனந்தக் களிப்பு

இலக்கின ஸ்புடம் வினவிடை

வாசிப்பரிநிலைகண்ட - எங்கள்
மாமுனியேயுன் றன்றாளிணைகள்போற்றி
தாசனுப்வந்தனனன்றோ - வென்னைத்
தற்காக்கவேணுந்தயாபராசாமி (661)

யோகந்துணைவர்களன்னை - புத்ரர்
ஓங்குங்களத்ரநல்லாயுட்கடந்தை
தாகமிகுபேரன்பினாலே - அதன்
சாரமுமசாரமுந்தந்தருளினீரே. (662)

அதனையோசித்திடுமளவில் - ஏழை
அடியேன்மனத்திலேசலனமுண்டையா
சுதனேசஞ்சலம்வந்ததென்ன - மதைச்
சொல்லுவாய்வேரறக்கெல்லுவேன்பின்னால்

மண்டலமாண்டிடுமிராசன் - அரண்
மனையிலொருமைந்தன்பிறக்குமக்காலை
அண்டாய்பரச்சேரிதன்னில் - மைந்தன்
னரைநிமிடமுன்பின்னதாகப்பிறந்தும். (663)

ராசனிராசாங்கம்பண்ண - நீசன்
நலிவுபெற்றாழியத்தொழில்புரிந்துய்ய
வாசியிராசனுமேற - நீசன்
வாசியின்பின்றலையிற்சிமையோடுமோட. (664)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மங்களமதாகக்களத்ரம் - நூறு
மகராசன்செய்திடப்புலையனொருதாரம்
சங்கடப்பட்டுப்பின்செய்தும் - புத்ரர்
தடையின்றிப்பலவரப்பிறப்பதென்னசாமி (665)

அதுவன்றியின்னமுங்கோவே - இங்கோர்
அரிவையிருநிமிடத்துளாகவிருமக்கள்
உதையரவிமதிபோலப்பெறுவ - ளிதி
லொன்றுபெண்ணொன்ருனுதிப்பதூஉமென்னே.

இன்னுமதிலொருபிள்ளைசாக - மற்றொன்
றினியபூரணவாயுளெய்துவதுமென்னோ
பின்னுமிரண்டாணுயுந்தோன்றி - யாயுள்
பெறவொன்றுமற்றொன்றுதொலைவதூஉமென்னே

இருவரும்பூர்ணுயுள்பெற்று - மண்ணி
லிருந்திடினுமியோகவேறுவதென்னகோவை
மருவியிருவோரும்பெண்ணுகில் - ஒருவி
மங்கலையொருத்தியவமங்கலையினென்னே. (667)

சகலகலைவிதியுந்தெரிந்த - வெங்கள்
சற்குருபராவிவைகடாமுமல்லாமல்
இகவுலகுதித்திடுஞ்சீமள் - அவை
எழுவகைத்தோற்றத்திலெண்பத்துநான்கு. (668)

லட்சபேதங்களிற்பலவா - யொரு
லக்கினத்திடைவந்துதிப்பதென்னையா
பட்சந்திருச்சித்தம்வைத்தே - யருள்
பாலித்தென்மனதிலுள்சந்தேகந்தீர்ப்பாய். (669)

சந்தேகந்தோன்றியேநீதான் - மெத்தச்
சஞ்சலங்களடைந்தாயேகொஞ்சமதியாளா
வந்தசந்தேகங்கடெளிய - நன்றாய்
வருத்துகின்றேனதனையமுத்தமாய்க்கேளே. (670)

ஏழுவகைத்தோற்றங்களறியப் - பாரி
லெடுத்தகிரகஸ்புடங்கள்தொடுத்துநீசெய்து

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வழுவதிலில்லாமற்கணக்கை - நன்ரு
வழுத்துக்கண்டாய்ந்திதைப்பகுத்துக்கொள்ளாயே.

சரணமிகுசரணமென்குருவே - ஏழை
தமியனுற்புடவித்தையறியத்தகாது
பரனேயவிரிவைக்குறுக்கி - யதன்
பயனைத்திரட்டாகத்தயைசெய்யுமையா. (672)

ஆயுட்பாகத்திலேதானே - ஸ்புடம்
அறிவாகவிரிவாகத்தெரிவிக்கிரேம்யாம்
தோயவிப்போதினுமூனக்கு - மிகு
சூட்சமாய்க்கொஞ்சங்கடாட்சஞ்செய்கின்ரேம்.(673)

ஒருசொல்விற்பலபொருளிருக்கும் - உன
தூகத்திலைதைபாகித்துக்கொள்ளு
அருமைமகனேயுனக்கீசன்றயை
அத்தனையுமெத்தனையுஞ்சித்தியுறவாழி. (674)

ஜெனனகால நிச்சயம்

பதினன்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

சாதகன்செனித்ததேநிச்சயங்கேள்
சனித்தமாதத்திலேகதிரோன்
றலைப்பட்டிகடிகைமுதலந்தமதியிற்
றங்கினின்றெழுங்கன்னலீருய்ப்
போதுநாழிகையையறுபதால்வகுக்க
புகுந்ததேதேதியாமிதற்குப்
புகன்றமாதத்தினிராசியைவிநாடிப்
போதுசெய்தீந்திடவந்தப்
பேதமில்விநாடிசென்றதேதியினுற்
பெருக்கவந்ததைக்கன்னற்படுத்திப்
பெற்றதம்மாதராசியின்செலவாம்
பின்னுள்ளநாழிகைதுவக்கி

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ஆதவனுதித்தாங்கான நாழிகைமட்
டளந்ததேசென்மலக்கினமாம்
அறிந்துகொளின் னுமிலக்கினப்புடத்தை
யறிந்தவாமொழிகுதுமம்மா. (675)

இலக்கினஸ்புடம்.

தருமிலக்கினத்தின் காலவிநாடி
தனையொன்பதாவகுத்திட்டுத்
தந்தவிநாடிதொகையஃதொருபா
தத்தொகையாமெனக்கண்டு
பகரிராசிக்குப்பாகைமுப்பதுகாண்
பாகையொன் றறுபதுகலையிப்
படிக்கலையொன் றுக்க றுபாதம்விகலை
பார்த்து றுவிகலையொன் றுக்குப்
பகுதிதற்பரையோர றுபதாமதற்குப்
பகுதிவிதற்பரையறுபான்
பரந்தவிராசிக்கொன்பதாம்பாதம்
பாதக்குக்கலையிருநூறுந்
தொகைக்கொளிற்கலையப்பாதவிநாடித்
தொகையினல்வகுத்ததன்பாதத்
தொலைவிநாடியினுற்பெருக்கவந்தகலை
பாதத்தின்செல்லெனச்சொல்வார். (676)

செனனநாளின் செலவு

நேரிசை வெண்பா

பாதத்தின்செல்லாப்பகர்கலைரண்டேகாலாற்
றேதிற்பெருக்கிமுப்பதுக்கீய — யாதுவந்த
தத்தொகையங்காட்பாதத்தாயினசெல்லாமெனவே
சித்தத்தறிந்துதெளி. (677)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ஆயுட் பாவகம்

குரு வந்தனம்

பதினான்கு சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

நிலைபெறுமாயுளியல்பெடுத்துரைத்த
நிருமலசோதியாயருவாய்
நிராமயப்பொருளாயென்றென்றுவிளங்கு
நித்தியவந்தணற்கல்லால்
அலைபெருசனனக்கொடுங்கடற்படிந்தோர்க்
காவதோவாவதோர்கல்லா
அறிவினனனுப்புகல்கலேன்மேலோ
ரறைந்தவைமொழிபெயர்ப்பாகக்
கலைபெறுபுலவன்சோதிடக்கணித
காவலன்காவிரிநாடன்
கமழ்மலர்முல்லைத்தலத்தவர்குலத்தோன்
கருணைமாக்கடலெனுநலத்தோன்
தலைபெறுகுருவுமாமனுமாயென்
சாமியுமாகியசான்றோன்
தருணமாமழையாம்வீரப்பநாமன்
றாண்மலர்பணிந்துவசனிப்பாம். (678)

தசவர்க்க புடவிதி

ஆயுளினிலைமையறிவுறவேண்டி
லருமஹாதிசையுயர்த்திசையோ
டாகியகாலச்சக்கரத்திசையு
மளந்துகணிதப்படியறிந்து
மாயிருஞ்சோதிசம்பவராக
வளருமாநவக்கிரகபுடம்
மற்றுளவுபக்கிரகபுடம்பதினெண்
மார்க்கமுந்தீர்க்கமாவடித்துத்
தூயநவக்ரகர்தசவர்க்கமிராசி
துகளறுமோரைத்ரேக்காணம்
சொலுந்திரிமிசஞ்சத்தமநவந்தசமே
துவாதசங்கலாமிசஞ்சட்டி

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ஆயவித்தசவர்க்கங்களும்வாய்ப்பா
டாகவேதெளிவுறக்குருவின்
அருளினுற்றெரிந்தாற்றிசைபுடாமிசவா
ராய்வினனுகுவனறிஞன். (679)

உடல் மகாதிசை விதி

அசுபதிமகமூலஞ்சிகிக்குரித்தா
மடுப்பொடுபூரம்பூராடம்
அநாவிலற்குரித்தமிரு லுத்ரமுத்தி
ராடமிரவிக்குரித்தாகும்
அசையுரோகணியத்தந்திருவோண
மம்புலிக்குரித்துமான்றலேமீன்
அவிட்டஞ்சேய்க்குரித்தாதிரைசுவாதிசதை
யங்கரும்பாந்தளுக்குரித்தாம்
இசைபுநர்பூசம்விசாகம்பூரட்டா
தியுமெழில்வியாழனுக்குரித்தாம்
இலங்கியபூசமனுடம்பிற்கொழுங்கோ
விருஞ்சனிக்குரித்தென்பவின்னும்
வசையிலாயிலியங்கேட்டைரேவதியு
மாலவற்குரித்தென்பர்செனித்து
வந்தவர்திசைக்குமுதல்வரிந்நாளின்
மன்னவராயுடல்வருவார். (680)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

திசைவரிசை விவரணம்

நேரிசை வெண்பா

அசுபதியேயாதிநாட்காயினரைச்சொன்னேம்
அசைசனனநாட்டலேவராதி—திசைமுதல்வர்
பின்னேவரிசைபெறுவார்திசைவரிசை
தன்னேரறிந்துதழை. (681)

மஹாதிசையின் புத்தி விவரணம்

பதினான்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

உடற்றிசையானமஹாதிசைக்கறிஞ
ருணர்த்தியபுத்தியின்விவரம்
ஓதுவாநவநாயகர்க்குளதிசைக
ளொன்பதின்வருடமுமொன்று
வெடுத்தெவர்திசையின்புத்திசோதனையோ
விவர்திசைவருடத்தாற்பெருக்க
வேன்றதிற்பத்திலொன்றுமாதங்க
ளிதில்வருஞ்சில்லரைத்தொகையைத்
தொடுத்துமூன்றுலேபெருக்கிடவந்த
தொகையெலாநாட்களாங்காண்டி
சொலுமஹாதிசையின்வழக்கெலாநாண்மீன்
சோதியால்விளங்குவதாகும்
அடுத்துயிர்த்திசையிராசிமண்டலத்தி
லமைதியால்விளங்குமிரண்டும்
அளவளாய்வருங்கானேரிடுமார
காதிபலாபலமறைவாம். (682)

இதுவுமது

சூரியனூறண்டம்புலிபத்தாஞ்
சுடரழலேழதாமதியின்
சுதன்பதினேழாம்பொன்பதினறுஞ்
சுக்கிரனிருபதாஞ்சுத்தக்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

காரிபத்தொன்பானிராகுழுவாருங்
கதிர்மதிப்பகைவனுண்டேழாம்
கணிதநூன்முறையினவரவர்திசையாக்
காட்டுவர்கேட்டுவர்கழிந்தோர்
பாரிடையுதித்தோர்க்குடற்றிசைவிவரம்
பகருவோஞ்செனித்தநாட்குள்ள
பரமநாழிகைதானறுபதுக்கதிகப்
பட்டதேலதிகநாழிகையைச்
சீருறவறுபதாற்பெருக்கிட்டுச்
சேர்தொகைவிநாடியாச்செய்து
சென்மநாட்கடிகையால்வகுத்தீவைச்
சென்றநாழிகையினுற்பெருக்கே. (683)

இதுவுமது

பெருக்கவந்ததுவேவிநாடியாமதனைப்
பின்னறுபானுக்கீந்தெடுத்த
பிண்டநாழிகையைச்சென்றநாழிகையிற்
பிட்டுமீந்துள்ளதேசெலவாம்
திருக்கிளர்பரமநாழிகையறுப
திற்குறைந்துள்ளதேற்பிண்டஞ்
சேர்த்திடக்கண்டநாழிகைசெலவாஞ்
சென்மநாட்கடிகையறுபதேல்
இருக்கிறபடியேசென்றதுசெலவா
மிருந்தனசுத்தமாமிதற்கு
மிப்படித்தெரிந்தசுத்தநாழிகையை
யேற்பட்டதிசைவருடத்தாற்
பெருக்கியைந்தாலேவகுக்கவந்ததுவே
பெருங்கருவிற்சென்றமதியாம்
பின்னின்றபாக்கிமுதற்றொடர்ந்தோட்டிப்
பெருந்திசைதெரிந்திசைபிறர்க்கே. (684)

உயிர்த்திசை விதி

கிரகநாயகரொவ்வொருவருங்கொடுக்கக்
கிடைக்குநல்லாயுளினிலைமைக்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இரகங்கள்பகர்வரமிரவிநான்காண்டு
    இளர்மதியைந்துவருடமாம்
குருதிமூன்ருயிராகுவேழாகுங்
    குருவிருமூன்றதாச்சனியன்
கொடுப்பதுநவமாம்புதனெட்டேகேதுக்
    கோளொருமூன்றதாம்புகரோன்
தருவதுபத்தாமுயிர்த்திசைவருடந்
    தந்தகோள்வரிசையிதேனும்
தலைத்தலைநின்ருேர்தமிற்றலைவன்முன்
    றந்துமற்றதினின்ருேர்முன்சொல்
வரிசையிற்றந்துமறுமனைநின்ருேர்
    வரிசையின்வழங்கியிவ்வாறே
மற்றுளமனைக்குங்கோணிலைவரிசை
    மனைநிரைவரிசையிவ்வரம்பே. (685)

உயிர்த் திசாபுத்தி விவரணம்

கருப்பத்திற்செலவைக்காண்பதற்குறுதி
    காட்டுதுமுயிர்த்திசையாண்டைக்
கணக்கொடுநூற்றுமுப்பத்தைந்தாலே
    கழித்துமீந்திருந்ததொகையினை
வரப்பெருந்திசைக்கோட்புடத்திடைத்தேர்ந்து
    வருகடிகையைக்கொடுபெருக்கி
வருடமுமதியுந்தினமுநாழிகையும்
    வந்ததேகருப்பத்துட்செலவாம்
இருப்புநாட்டுலக்கித்திசைநடத்திடுங்கா
    லேற்படுதிசைவருடத்தில்
இயல்புறநாலிலொன்றைப்பன்னிரண்டா
    லேற்றிடில்வருந்தொகைநாளாம்
திரப்படவுடலின்றிசையிலிக்கோட்குச்
    செப்பியதிசைத்தொகையால்முன்
செப்புநாட்டொகையைப்பெருக்கவந்ததுவே
    தினமுயிர்ப்புத்திபின்றினமாம். (686)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இருதிசை கலந்துவருங்கா னேரிடு மாரக விவரணங்கள்

இருதிசைகலந்துவருகின்றகாலை
யெதிர்ப்படுமாரகமொழிவா
மெண்ணியமேடவிலக்கினத்துதித்தார்க்
கிறைவன்மால்சனியுடற்றிசையா
யெரிபுகருயிராயெய்தினுமாறே
ழிரண்டுமூன்றெட்டிலாபத்தே
யிருந்தவர்தம்மிற்சிலருடல்சிலரு
யிருக்கலந்துதிசையில்வரினும்
வருமிவர்தாமேமுன்னெடுத்துரைத்த
வானவராயினும்பகைவர்
மாரகஞ்செய்வர்திசைவலிதான
வலிபெறிற்கொலைசெயாதொழியார்
எருதிலுற்பவித்தோர்க்குடதிற்பொன்மதிசே
யிசைந்துயிர்புதன்சனிவெள்ளி
யேற்கினுமாறெட்டொருபதிலிருந்து
விரைவர்களுடற்றிசையெய்தி. (687)

இதுவுமது

சத்தமம்வியங்கண்ணிருந்தவருதிர்த்தி
சாமுகங்கூடினும்பகைவர்
சாற்றுமக்கோட்களிப்படிநேர்ந்தாற்
றப்படிமுழக்கலிற்றடையோ
மைத்துனத்துதித்தோர்க்கிரவிசேயரசன்
வல்லுடற்றிசைவருகாலை
மதிபுதன்வெள்ளியுயிர்த்திசைகலந்து
வரத்தலைவிதிகிடைத்தாலும்
பத்துசட்டாட்டவியத்தலத்திருந்தோர்
பகருடற்றிசைவிழிதிரிநோய்ப்
பதிகளிலிருந்தோருயிர்த்திசைபுயனும்
பகைஞரேமுன்சொன்னகோட்க
ளித்துணைகிடைத்தாற்புற்றுறையாவுக்
கிராசரீகங்கொடுத்தற்றே
யிமையவரமுதங்கொடுக்கினுந்தடுத்தாண்
டிவர்தொழில்நடத்துருதேகார். (688)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இதுவுமது

அலவனிற்செனித்தோற்கரசன்மால்சனிய
னணிமகாதிசைவருகாலை
யலரிசேய்வெள்ளியுயிர்த்திசைவரினு
மாறிரண்டெட்டிலேநின்றோர்
வலவுடற்றிசையாய்மூன்றிரண்டிருந்த
வானவருயிர்த்திசைவரினும்
வழுத்தியவவரேயுடலுயிர்த்தான
வலிபெற்றாற்புவியிற்றாமாய்ப்பார்
மெலிவறுசிங்கத்துதித்தவர்க்கரசன்
வெள்ளிசுன்னுடற்றிசைவருங்கால்
வியாழனும்புதனுமுயிர்த்திசைவானு
மிகுபுணிசுகந்தசமிருந்தோர்
இலகுடற்றிசையாயிரண்டுமூன்றேழி
னிருந்தவருயிர்த்திசைவரினும்
இகலினராமேயிவ்வலியவரே
யெடுத்திடிற்கெடுத்திடாதேகார். (689)

இதுவுமது

கன்னியிற்சனித்தோர்க்கரசன்சேய்திங்கள்
கனவுடற்றிசைகொளவுயிரிற்
கரிமால்வெள்ளிவரினுநோயன்னைக்
கண்ணின்றோருடல்கொளப்பத்தோ
டன்னைசோதரனின்றவருயிர்கொண்டா
லரும்பகையாவரேயவரே
அவர்வலியடைந்தாலெவருயிர்கொல்லார்
அணிதுலாத்துதித்தவர்க்கருக்கன்
பொன்னிலமைந்தன்மதியுடல்கொள்ளப்
புகர்புதன்றேய்பிறையுயிரிற்
பொருந்தினும்பகையேயாறுமூன்றெட்டிற்
புக்கவருடற்றிசையாக
மன்னியேழிரண்டுபத்திலேநின்றோர்
வாழுயிர்த்திசைகொளிற்பகையே
வழுத்துமக்கோளிப்பலம்பெற்றாலுயிரை
மாற்றுவரேற்றுவர்வானில். (690)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இதுவுமது

விருச்சிகப்பிறந்தோர்க்கரிச்சிகன்மைந்தன்
வெள்ளிகாரியுமுடலாகி
வியாழன்மங்களன்சூரியனுயிர்த்திசையாய்
மேவினும்பாவியராவர்
பிரிச்செறிவிதியேழிரண்டொன்றினின்றோர்
பேருடல்கொளப்பத்துமூன்று
பிணியிவைநின்றோருயிர்த்திசைகொண்டாற்
பெரும்பகையாவரிவ்வலியுந்
தரிச்சிமுற்குறித்தகோட்கள்வந்துற்றாற்
சடுதியிற்சுடுதியிற்றகப்பர்
தனுவிடைச்செனித்தோர்க்கந்தன்மால்வெள்ளி
தனுத்திசைகொளக்குருரவிசே
யெரிச்சுயிர்த்திசைகொண்டாற்பெரும்பகையே
இரண்டுமூன்றேழ்பிணிநின்றோ
இலங்குடல்கொள்ளத்திரிவிழிகரும
மிசைந்தவருயிர்த்திசைகொளினே. (691)

இதுவுமது

சத்துருவாவரித்தலப்பலமுற்
சாற்றியகோட்கள்பெற்றாலோ
சத்தியங்கொல்லாதொழிகலர்மகரஞ்
சனித்தவர்க்கினித்தமால்மதியோன்
மொய்த்துடலாகப்புகர்கதிர்செவ்வாய்
மூவருமுயர்த்திசைவந்தால்
மோதுவரிரண்டுமூன்றெட்டேழ்நின்றோர்
முதுசடத்திசைகொளலாபம்
மெய்த்தலையாறுவியநின்றோருயிராய்
மேவிடிற்பாவியராவர்
விளம்பியகோட்களிவ்வலிபெற்றால்
விடுவரோசுடுவரோர்விநாடி
சுத்தகும்பத்திற்பிறந்தவர்க்கிரவி
சுடுசனிசேய்மதியுடலாய்ச்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சுரர்குருபுதனுமுயிர்த்திசையாகிற்
றெலைக்குருபெரும்பகையாவர். (692)

இதுவுமது

இரண்டுமூன்றேழெட்டிருந்தவருடலா
யிலாபநோய்தலைவ்யத்திருந்தோர்
இலகுயிர்த்திசையாய்வருவரெற்பகைஞ
ரிவரினும்வேறிலையென்ப
திரண்டவித்தானவலியையுமிதிலே
செப்பியகோட்கள்பெற்றெழுந்தாற்
சித்திரத்தினுமெய்வைத்திடாரருப்பர்
சிறந்தமீனத்திடைச்சென்த்தோர்
தெருண்டமால்வெள்ளிரவிசனியுடலாய்ச்
சேய்சனிபுதன்குருவுயிராய்ச்
சேர்ந்திடிற்கொலைஞராவர்கண்விதிநோய்
செவ்வினின்றேருடற்றிசையாய்
வரும்பதினெனன்றேழ்பத்திடைநின்றோர்
வல்லுயிர்த்திசைவரிற்கொல்வர்
வழுத்தியவவரேயிவ்வலிகொண்டால்
மாட்டுவர்காட்டுவர்வானே. (693)

காலச்சக்கர திசை

நொண்டிச் சிந்து

மூலக்கணபதியை - நெஞ்சக
மூளரிக்குட்பத்தியொடுகளறிக்கொண்டு
காலச்சக்கரதிசையை - நொண்டிசிந்தாக்
காட்டுகிறேனிதைக்கேட்டுக்கொள்வாய். (694)

குஜனுக்கேழாண்டாகும் - புகருக்குக்
கூறுவாரீரெட்டாண்டாகவுமே

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

தசமெனப்பொன்னவனுக்குக் - கூறுவர்
சந்திரன்றனக்கிருபத்தொன்ருண்டு. (695)

புதனுக்குநவமாகும் - இரவிக்குப்
பொங்கும்வருடமோரைந்தாகுமே
விதமுடன்கரியவற்கே - திசையும்
வேதமாகவேமுன்னேரோதலுற்ருர். (696)

கலவாப்பொன்னனையமைந்தா - வினியந்தக்
காலச்சக்கரநடைக்கோலஞ்சொல்வோம்
வலவோட்டுமிடவோட்டு - மிதனில்
மருவிமதனையறிவின்றி. (697)

அசுபதிமுதல்மூன்றும் - வலவோட்
டடுத்தமூன்றிடவோட்டாகமாறி
வசையறமும்மூன்றதாய் - மாறிவர
வலவோட்டுமுவைந்துமிடமுந்நான்காம். (698)

அசுபதிபரணிகார்த்திகை - புனர்பூச
மப்பூசமாயிலியமத்தஞ்சித்திரைச்
சுவாதிமூலம்பூராடம் - உத்ராடம்
சொல்பூரட்டாதியுத்ரட்டாதிரேவதி. (699)

பதினைந்தும்வலவோட்டுநாள் - மற்றையவை
பன்னிரண்டுமிடவோட்டுப்பார்த்தறிக
திதிபெறவேபுசிப்பை - யோட்டுஞ்
சேதியைச்சொல்லுகிறேனீதியுடனே. (700)

பரியெரிபீண்டிபாம்பு - அத்தம்
பகரும்விளக்குச்சிலையாடியுடன்
புரட்டையிரேவதியும் - வலவோட்டுப்
பொங்கும்நட்சத்திரம்ஒருபதுக்கும். (701)

முதற்கால்மேடமுதலாய்ச் - சரியாய்
முயன்றுசிலவரையினூருய்க்கொள்வாய்
இதம்பெறவிரண்டின்பதம் - கலைகுடம்
எண்ணுமீன்தேள்கோலரிவைநண்டு. (702)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அரியாளெனவிதற்கு - முன்னோர்கள்
அன்புடனெண்பத்தஞ்சாண்டெனவே
திரிகாலேறுமறிமீன் - சால்கலை
சிலைகொறியேறியாமெண்பத்திமூன்றும். (703)

வேதமேநண்டுமுதல் - மீன்வரை
மிக்கவேகொள்வையெண்பத்தாறுகவே
மீதியடுப்புவண்டு - சித்திரை
விளங்குபூராடமுமூரசோடைந்தில். (704)

ஆதிபதங்தேள்கோல் - கன்னி
யலவனேடரியாமேழறுமறிமீன்
சோதனையாகமுன்னே - ராண்டுஞ்
சொல்லினர்நூறுகவல்லபுலவர். (705)

வினையின்பதங்கும்பம் - கலைசிலை
மேடமெருதியாழ்நண்டரிகன்னி
இளையவுக்கெண்பத்தைந்தே - யாண்டென
விசைத்தனர்முன்னோர்கள்திசைக்கியல்பே. (706)

குணங்கோல்தேள்சிலைமான் - சால்மீன்
கொட்டும்விரிச்சிகமுஞ்செட்டிகன்னி
மணமுடனென்பதற்கும் - வருஷம்
மகிழ்ந்தெண்பத்துமூன்றுகுமென்ப. (707)

நான்குகற்கடகஞ்சிங்க - மிதுனமி
நத்திமேடமீனகும்பமகரந்தனு
பாங்குறவெண்பத்தாறே - யாண்டெனப்
பாடினர்நற்கோளசாஸ்திரத்திலே. (708)

திடம்பெறவலவோட்டுத் - திசைக்குச்
செப்பினேனென்புத்தியதுதப்பாமலே
இடவோட்டுநாளதற்குப் - புத்தி
யியம்புகிறேன்மனநயந்துகொள்ளு. (709)

வேட்டுவன்சுளகுரு - கோணத்தோடு
மேவிடும்நான்கினுக்குமுதற்காலில்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ஓட்டிடுமார்க்கமதைச் - சொல்ல
வொருமித்துமனத்தினைநிருமித்துக்கேள். (710)

சிலைகலைசால்கயனு - மறியேறு
செப்பும்மிதுனமரிநண்டொன்பதும்
தலையுடனெண்பத்தாறு - மாண்டுக்கும்
தப்பாமல்நடக்குமேபுத்திதானே. (711)

இரண்டில்மடந்தைதுலாம் - தேள்மீ
னினியகும்பவன்கலைசிலைதேள்கோல்
விரைவுடனென்பதற்கு - மாண்டு
விளம்பினுரெண்பத்துமூன்றாக. (712)

திரிகன்னியரிநண்டியாழ் - ஏருடு
செப்புஞ்சிலைகலையுஞ்சாலொன்பதும்
வருமேயெண்பதஞ்சு - வருடமா
வகுத்துநற்புத்தியதையோட்டுவார்கள். (713)

வேதமீன்மறியேறுயா - ழரிநண்டு
மிக்கவேகன்னிகோற்றேளொன்பதுஞ்
சோதனையாகவொருநூ - றாண்டுக்குஞ்
சொல்லுவார்புத்தியதுவிள்ளுவோமே. (714)

மார்கழிசெங்கையெலி - பங்குனி
மன்னியதேள்சேட்டைபறவைசெக்கு
தீர்க்கமாயிருநான்கு - தாரைக்கும்
செப்புவேன்புத்தியதுதப்பாமலே. (715)

ஏகம்மீன்முதலாய் - நண்டுவரை
யெடுப்பனவதாரைக்குமெண்பத்தாறாய்த்
தாகமுடனேயிதனைக் - கண்டு
தாஷ்டகமாகவேநீயுரைப்பாய். (716)

இரண்டுமிதுனமிடப - மேடந்தனு
சியம்புமகரகும்பமீன்மறியான்
திரண்டெழுமொன்பதுக்கும் - புத்திவிதி
செப்புவாயெண்பத்துமூவாண்டதாய். (717)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

திரிபதமிதுனஞ்சிங்கம் - நண்டுகன்னி
செட்டிவிருச்சிகமீனங்கும்பமகரம்
வருமிந்தவொன்பதுக்குப் - புத்தி
மாட்டுவாயெண்பத்தஞ்சாண்டாக. (718)

நாலிடைவிற்றேள்கோல் - கன்னிசிங்க
நண்டுமிதுனநந்திமேடமொன்பதும்
சாலவுநூறுவருடம் - முன்னோர்கள்
சாற்றினர்கேட்டறிந்துபோற்றிக்கொள்ளே. (719)

புத்திபிரிக்கவகையை - மொழிகுவேன்
பொருந்தியொருமனதாயிருந்துகொள்ளே
நத்தியபுசிப்புமோட்டும் - கோள்கள்
நண்ணுந்திசைவருடமெண்ணியறிந்து. (720)

திசைகோள்வருடந்தன்னை - யதற்குத்
தீங்கறக்கொடுத்தந்தாவைவைத்துப்
புசிப்பெனத்திசைவருடம் - அதனில்
பெருக்கிடப்புத்தியதுவருங்காணே. (721)

மீனத்திலேயிருந்து - கிரகங்கள்
விருச்சிகத்திற்பாயுங்காலமதில்
ஆனியாயுடற்றிசையு - மிருந்திடி
லதற்குப்பலன்கேளுவிரித்துரைப்பேன். (722)

இராசனினமித்துரு - விரோதம்
நண்ணுஞ்சிறைகாவலக்கினிபயம்
நீசனுலவமானம் - சோரபயம்
நிலைக்குஞ்சரீரபீடைவலுத்திடுமே. (723)

சுபன்றிசையுடலாகி - லதற்குச்
சொல்லுவாய்புத்திபினுல்வெல்லுவாயென்றே
தபமுடன்மேடத்தினின்று - தனுசிற்
றூண்டிலதற்குப்பலன்வேண்டுமேகேளு. (724)

தரகலோகாபனமா - மிதற்குச்
சொல்லுபிதிர்புத்திரகளத்திரங்களும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

திரமுடனிரணபயமு - மிதற்குத்
　　தீட்டுமகாதிசையையோட்டியறிந்து. (725)

கன்னியில்நின்றகிரகம் - புன்னகக்
　　கடகத்திற்றண்டிடில்மண்டூககதி
மண்ணிடைக்களத்திரங்கள் - தனக்கும்
　　மாரகஞ்சொல்லுடல்திசையோட்டி. (726)

சிங்கமிருந்துபின்னல் - மிதுனத்திற்
　　சிக்கெனவேதாண்டவதுசர்ப்பகதியாம்
மங்கும்பிதிர்பாது - ரதனொடு
　　மகிழ்ந்துமகாதிசையுமறிந்துசொல்லே. (727)

தண்டிவிருந்துசிங்கத்தில் - பாயுமத்
　　தாண்டல்மற்கடகமெனச்சாற்றினரே
விண்டிடுமரைக்குமேலே - விரணம்
　　விளம்புமகாதிசைதனையோட்டி. (728)

பாவிதிசையுடலாகச் - சக்ரதிசை
　　பலுக்குந்தீயோர்திசைதானுகை
ஒவியமானபுசிப்பு - மிரண்டையு
　　மொத்துவிநயமதிபுத்தியுடனே. (729)

கூறுவாய்புவியோர்க்கே - சொன்னசொற்
　　குறிதவறுதிந்தநெறியிடையே
ஆறுவாய்சந்தேக - மின்னமு
　　மட்டவர்க்கவிவரமுந்திட்டமாய்க்கேளே. (730)

———

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அட்டவர்க்கம்

விருத்தம்

ஆலிலைமேற்பள்ளிகொண்டோனருளினாலே
யருமறையைத்தேர்ந்துநின்றவையாவிந்தப்
பாலர்சிறுமனத்தில்வருஞ்சந்தேகத்தைப்
பட்சம்வைத்துநிவிர்த்திசெய்யும்பாங்குள்ளோனே
காலசக்கரத்திசையின்கருத்தைக்கண்டேன்
கர்த்தனேகருணைசெய்துமுன்னேசொன்ன
சாலவுள்ளவட்டவர்க்கப்பலனேரெட்டுந்
தாமரைவாய்மலர்ந்தருளுந்தருணமீதே. (731)

நொண்டிச்சிந்து

அட்டவர்க்கமினிக்கேளு - சொல்லுகிறே
னன்பானகுருபதந்தென்பாய்பணிந்து
திட்டமுடனேரவிக்கு - நாற்பத்தெட்டுச்
செப்பினர்பரலதுஒப்பினர்முன்னோர். (732)

சந்திரற்குநாற்பத்தொன்பது - பரல்பரல்
தழல்நிறச்செவ்வாய்க்குமுப்பத்தொன்பதே
புந்திக்கைம்பத்துநாலு - பரலெனப்
பூட்டினர்முன்னோர்கள்காட்டினரே. (733)

குருவுக்கைம்பத்தாறதாஞ் - சுக்கிரற்குக்
குறித்தவைம்பத்திரண்டுவிரித்தனரே
கரியற்குமுப்பத்தொன்பது - பரலெனக்
காட்டினர்முன்னோர்கள்கூட்டிக்கொள்ளே. (734)

இரவி அட்டவர்க்கம்

நவக்கிரகங்களுக்கும் - தனித்தனி
நாட்டுகிறேன்சமுதாயப்பரலை

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ரவியிடசமுதாய—விவரத்தை
நன்மையாய்ச்சொல்லுகிறேனுண்மையாய்க்கேளே.

ஒன்றிரண்டுநாலேழெட்டே—யொன்பது
மொருபதுபதினென்றுபரனூட்டு
நின்றமதிக்குமூன்ரு—ரீரைந்து
நிலைத்தவேகாதசம்பரனூன்று. (736)

செங்கதிருக்கெப்படிபர—லப்படிச்
செவ்வாய்க்கும்வைத்துகொள்ளுமெய்வாக்குமே
துங்கப்புதற்குமூன்றைந்—தாறென்பது
பத்துப்பதினென்றுபன்னிரண்டென்பவே. (737)

அந்தணற்கைந்தாறென்பது—பதினென்ரு
மாறேழுபனிரண்டுசுக்கிரனுக்கே
அந்தனென்றிரண்டுநாலே—ழெட்டொன்பதீ
ரைந்துபதினென்றுபரலிந்தவிதமே. (738)

சந்திர அட்டவர்க்கம்

மேருக்குமூன்றுநாலா—ரீரைந்து
மேவுபதினென்றுபனிரண்டாம்பரல்
பாருக்குள்மதியுடைய—சமுதாயம்
பாடுகிறேன்குருபாதம்போற்றி. (739)

பருதிக்குத்திரியாதே—ழெட்டுப்பத்துப்
பதினொருபரல்விதிப்படியூன்று
வருமதிக்கொன்றுமூன்ரு—றேழுபத்து
வருபதினென்ருகவகுத்துக்கொள்ளே. (740)

செவ்வாய்க்கிரண்டுமூன்றைந்—தாறுநவம்
தெசம்பதினென்றுவரவிசைந்துகொள்ளே
இவ்வாறுபுதற்கொன்றுமூன்—றீரிரண்டைக்
கேழெட்டுப்பத்துப்பதினென்றுநாட்டு. (741)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பொன்னவற்கொன் றிரண்டுநாலே—ழெட்டுப்பத்துப்
பொங்குபதினொன் றுபரல்இங்கிதமீதே
பன் னுபுகர்மூன் றுநாலைந்தேழு—நவம்
பத்துப்பதினொன் றுபரல்வைத்துக்கொள்ளப்பா.

செவ்வாய் அட்டவர்க்கம்

சனிக்குமூன்றைந்தா று—பதினொன் று
தலைக்குமூன்ரு றுபத்துப்பதினொன் றதாம்
இனிச்சேய்பாகத்தைச்சொல்வோம்—ரவிமூன்றைந்
திருமூன் றுபத்துபதினொன்ருகுமே. (743)

மதியொருமூன் றிருமூன் று—பதினொன் று
மண்மகனொன் றிரண்டுநாலேழெட்டுப்பத்துப்
பதினொன் றுபரலூன் று—புதனுக்குப்
பார்மூன்றைந்தா றுபதினொருபரலே. (744)

வியாழனுக்கா றுபத்து—பதினொன் று
விரையம்புகர்க்காறெட்டுலாபம்விரையம்
தயாளமில்சனிக்கொன் று—நாலே
ழெட்டொன்பதுதசம்லாபம்பரலூன் று. (745)

தலையொன் றுமூன்ரு றுபத்துப்—பதினொன்ரும்
தாக்குபுதன்பாகந்தனைக்கேளு
நிலைபெறுகுருபாத—மலரினை
நினைத்துக்கொண்டேயுனக்கனைத்துஞ்சொல்வேன்.

தனதன தனன

புதன் அட்டவர்க்கம்

ஆனந்தக்களிப்பு

விருதிட்டபுதனட்டவர்க்க—மினி
விள்ளுவேன்கவனமுடன்கொள்ளுவாய்மகனே

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பருதிக்கஞ்சாறென்பதேகா - தசம்
பனிரண்டுபரலுண்டுநிலவுக்கிரண்டும்
நாலாறெட்டுப்பத்துபதினொன்றும் - அழலுக்கு
நாட்டொன்றிரண்டுநாலேழெட்டொன்பதுபத்தே
லாபம்புதனென்றுமூன்றைந் - தாறே
டேழுநவந்தசமேகாதசம்வியமே. (746)

குருவுக்காறெட்டுப்பதினொன்று - பனிரண்டு
கூறுபுகரொன்றிரண்டுமூன்றுநாலைந்தெட்
டுருவிற்றநவலாபமாகும் - சனிக்
கொன்றிரண்டுநாலேழெட்டொன்பதுபத்தாயம்
மேருவுக்கொன்றிரண்டுநாலா - றெட்டுபத்து
மேவுபதினொன்றுகத்துவுபரல்கொள்வாய்
சீருலவுகுருவட்டவர்க்கம் - நன்றாகச்
செப்புவேன்கணக்கறிந்திப்புவியில்மகனே. (447)

குரு அட்டவர்க்கம்

இதுவுமது

குருவுக்குப்பரலைம்பத்தாறும் - வருமாறு
கூறுகின்றேனிதைக்குறிப்பாகக்கேளே
இரவிக்கொன்றிரண்டுடன்மூன்று - நாலே
ழெட்டொன்பதுபத்துபதினொன்றேமதிக்கு. (748)

துதியைந்தேழொன்பதுலாபம் - சேய்க்கொன்று
துவநாலேழெட்டுபத்துபதினொன்றுகாணே
புதனொன்றிரண்டுநாலைந்தன் - றென்பான்
புகல்பத்துப்பதினொன்றுகுருவொன்றிரண்டு. (749)

மூன்றுநாலேழெட்டுப்பத்துப் - பதினொன்று
முழுவெளிரண்டஞ்சாறென்பதுபத்துலாபம்
தோன்றுசனிமூன்றேடைந்தாறு - பனிரண்டு
தோன்றுதலைக்கொன்றிரண்டுநான்கைந்தாறேழு. (750)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சுக்கிர அட்டவர்க்கம்

நொண்டிச்சிந்து

ஒன்பதுபத்துப்பதினென்று - பரல்களை
யூன்றிக்கொளினிச்சுக்ரனட்டவர்க்கங்கேளே
அன்புடனேயுனக்குச்சொல்வே - னிதைநன்ரு
யறிந்துகொள்ளறிவொடுதெரிந்துகொள்மகனே. (751)

சுக்கிர அட்டவர்க்கம்

இதுவுமது

நொண்டிச்சிந்து

ரவியட்டம்லாபம்விரையம் - மதியொன்
றிரண்டுமூன்றுநாலைந்தெட்டொன்பதுபதினென்
றீராறுபரனூன்று - குசன்மூன்
றீரிரண்டாறேன்பதேகாதசம்வியமே
சீரானபுதன்மூன்றைந் - தாறேன்பது
செப்புபதினென்றுடரற்றப்பிதமில்லை. (752)

பொன்பரலைந்தெட்டொன்பதுபத் - தேகாதசம்
புகரோன்றிரண்டுமூன்றுநாலைந்தெட்டோ
டொன்பதுபத்துலாபம் - கரிமூன்
றேருநான்கைந்தெட்டொன்பதுபத்துலாபம். (753)

லக்னமொன்றிரண்டுமூன்று - நாலைந்தெட்டு
நவம்பதினென்றுபரல்நாட்டிக்கொள்ளு
சுக்கிரற்குப்பின்னேன்வர்க்கம் - விவரமாச்
சொல்லில்ரவிக்கொன்றிரண்டுநாலேழெட்டு. (754)

பத்துப்பதினெருபரலாம் - மூன்ருறு
பதினென்றுமதிக்கெனப்பாடுவரே

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ரத்தன்மூன்றைந்தாறுபத்து - பதினொன்று
நான்மூன்றுபுதனுறெட்டொன்பதுபத்து. (755)

பதினொன்றீராறுபரலாம் - குருவுக்குப்
பஞ்சமாறுபதினொன்றுபனிரண்டதாம்
சீதனுக்கோராறுலாபம் - விரையமாம்
திரிபஞ்சமாறுலாபங்கரியவற்கே. (756)

லக்கினமொன்றுமூன்று - நாலாறு
நல்லபத்துப்பதினொன்றுசொல்லலாமே
இக்கணக்கின்பிரகாரம் - அட்டவர்க்க
மெடுத்துச்சர்வாட்டவர்க்கந்தொடுத்துக்கொள்ளே.

குருபாதம்பணிந்துகொண்டு - சோதனைக்
குறிப்பின்றரமுனக்குவெளிப்படவே
திரிகோணசோதனைவிதி - முறையுடன்
றெரிவிக்கிறேனதிற்குறிவைத்துக்கேள். (758)

திரிகோண சோதனை

இதுவுமது

நீடியதிரிகோண - சோதனை
நினைவாகச்சொல்லுகிறேன்முனையாய்க்கேளு
மேடசிம்மந்தனுசும் - பின்னுல்
விடபகன்னியாமகரமொருமூன்று. (759)

மிதுனதுலாகும்பங் - கற்கடகம்
விர்ச்சிகமீனமுமும்மூன்றும்
சதிருறுதிரிகோணமாம் - இவைகளிற்
சாரவேபரல்மூன்றுஞ்சரியானுல். (760)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பரிமுதலாகமேமூன்று - ராசிப்
பாலையெடுத்துவிடுதிரமுடனீ
ஒருராசிதனில்பரல்கள் - சூனியம்
மூற்றிடில்மூன்றுக்குஞ்சோதனையில்லை. (761)

ஏகாதிபத்யசோதனை - தன்னை
யின்பமுடன் கூறுகிறேனன்புடன்கேளு
வாகாதமேடங்தேளுக்கும் - அதில்
வருமேறுகோலுக்குந்தண்டுகன்னிக்கும். (762)

வில்லுமீனுக்குஞ்சோதனை - பின்னும்
வெளியானகுடத்துக்குஞ்சோதனையாகும்
நில்லுங்கடகமரிக்கும்இது
ரெண்டுக்குஞ்சோதனையுண்டென்றெண்ணுதே.

கோளிருந்திடும்ராசிப் - பரல்
குறையவேகோளில்லாராசியிலேறில்
தாழுமிராசிப்பரல்போல் - இரண்டும்
சமனுகச்செய்வதேசோதனையின்னம். (764)

இருராசியினுஞ்சமமாய்ப் - பரல்கள்
இருக்கினுங்கோள்களில்லாராசியில்
அருகிப்பரல்குறைந்தாலும் - அதனை
அடியோடேநீக்குவாயின்னமுங்கேளாய். (765)

இருராசியிற்கோளில்லாமல் - பரல்
ஏற்றங்குறைச்சலாவிருந்திடினே
வருமேகுறைந்தபரல்போல் - நின்ற
மற்றைப்பரல்களையுஞ்சுத்தப்படுத்து. (766)

சரியாகப்பரலிரண்டில் - வந்தாற்
தப்பாமலடியோடேகுப்புறத்தள்ளு
தெரிவாயிவைகளெல்லாங் குருமுன்பு
தேட்டையாவிளங்கும்படிகேட்டறிந்துகொள். (767)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கோளிருராசிதன்னில் - நிற்கக்
குறையினுமேறினும்பரலதுதான்
நீளவிரண்டிற்சரியாய் - இன்னம்
நிற்கிலொருராசிசூன்யமாயினும் (768)

கிரகமிரண்டிலில்லாமற் - பரல்
கிட்டியொருராசியிற்சூன்யமாயினும்
வரலுறுமிவைகட்கெலாம் - சோதனை
வல்லமையாலில்லையென்றுசொல்லுவாயே. (769)

ஒருராசிகோளிருக்க - அதில்
ஒப்பிப்பரலுமேசூனியமாகில்
வருராசிப்பரலையகற்றி - யிந்த
மார்க்கமாயேகாதிபத்தியஞ்செய்வாய். (770)

இந்தச்சோதனைகளெல்லாஞ் - செய்தபிற
கிருக்கும்பரற்களுக்குவிதிகேளு
வந்திடுமிராசிகுண - காரத்தை
வரிசையாய்ச்சொல்லுகிறேனுரிமையாக்கேள். (771)

மறிகோவிரண்டின்பரலை - ஒன்றுக்கொன்று
மாட்டியேயேழினிற்கூட்டிப்பெருக்கு
குறியாகவரியிடபப் - பரற்களைக்
கூட்டியொருபத்தினனீட்டிப்பெருக்கு. (772)

தண்டுதேளில்வரும்பரலை - யெட்டிற்
ருக்குவாய்கண்டையும்காவிற்பெருக்கு
பேண்டொடுசுறவின்பரல் - அஞ்சினற்
பெருக்கிக்கொள்ளின்னமும்பேசக்கேளு. (773)

சிலையிலிருக்கும்பரலை - நீயும்
செப்பமாய்நவத்தினிலொப்பிப்பெருக்கி
நிலையானசாலின்பரலை - நீயும்
நிச்சயமாய்ப்பதினொன்றில்வைச்சுப்பெருக்கி. (774)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மீனிலிருக்கும்பரலை - பன்னிரண்டால்
ஷிரைவிற்பெருக்கிக்கொள்ளுமுறையிதுவே
ஆனபரலையெல்லா - மிவ்வளவென்
றறிந்துதொகைகூட்டித்தெரிந்துகொண்டு. (775)

கிரககுணகாரத்தை - யானும்
கீர்த்தியாயுரைக்கவேபூர்த்தியாய்க்கேளாய்
இரவிமதிகரிபுந்தி - நால்வர்
இருக்கும்பரலையெல்லாமஞ்சிற்பெருக்கு. (776)

மங்கலன்வாழும்பரலை - எட்டினல்
மாட்டிப்பெருக்கித்தொகைகூட்டிக்கொள்ளு
சுங்கனர்நின்றபரலை - யேழினற்
சூட்டிப்பெருக்கித்தொகைகூட்டிக்கொள்ளே. (777)

பொன்னவர்நிற்கும்பரலைப் - பத்தினற்
பொங்கமுடன்பெருக்கிச்சங்கைப்படுத்தித்
தன்னையொன்ருகக்கூட்டி - லிது
தானே கிரககுணகாரமாகும். (778)

குண சமுகம்

ராசிகுணகாரலக்கமும் - பின்னும்
நாடுங்கிரககுணகாரலக்கமும்
பாசமாய்ரெண்டையுமொன்ருய்க் - கூட்ட
பாரினிலேகுணசமுகமுமாகும். (779)

மாரகபலனறியும்படி

இந்திந்தவிதமாக - நீதான்
ஏழுகிரகத்துக்குமின்பமாய்ச்செய்வாய்
அந்தமார்த்தாண்டனுக்கு - வந்த
அட்டவர்க்கக்குணசமுகங்கண்டு. (780)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மாரகங்கூறும்வகைகேள் - ரவிநின்ற
மனைக்கொன்பதின்பரலைக்குணசமுகத்தால்
நேராகப்பெருக்கிக்கொண்டு - வந்ததொகை
நீட்டியிருபத்தேழினலேவகுத்து. (781)

முற்பக்கமாகிலதனை - யசுபதி
முதற்கொண்டுகணக்கெண்ணவந்தநாளிலும்
பிற்பக்கமெனிற்சித்திரை - முதலெண்ணப்
பிரிந்துள்ளநாளிலுங்காரிவருமேல். (782)

அந்தநாட்டந்தைகடைநாள் - மாரக
மாகுமென்றேயறிந்துநீகுறிப்பாய்
மைந்தனேகணக்கிலக்கம் - கூட்டவும்
வகுக்கப்பெருக்கமனம்வதங்காதே. (783)

இன்னமொருவிதமாக - இரவி
யேற்குங்குணசமுகமிதுகேளு
முன்னமேயேழில்பெருக்கி - யதனை
மொழியுமிருபத்தேழுக்குக்கொடுத்து. (784)

வந்திடுநாளைக்கண்டு - முன்னே
மன்னிப்பெருக்குந்தொகைபன்னிரண்டுக்கீந்
தந்தமாய்ராசியைக்கண்டு - காரி
யதில்வருங்காலத்திற்பிதிர்மாரகம். (785)

அதனையுமல்லாம - வின்னமும்
அட்டவர்க்கத்திடைச்சோத்தியஞ்செய்து
பதியெலாநின்றபரலைக் - கூட்டிப்
பார்க்கவனுக்கொன்பதாமிராசிப்பிந்தால். (786)

பெருக்கியிருபத்தேழுக்கீந்து - முன்
பேணுந்தொகையையீராறுக்கீந்து
வருநாள்ராசியுங்கண்டு - இதில்
வந்திடக்காரியுந்தந்தைமாரகம். (787)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இந்தவிதமூன்றுமாரகம் - நீயும்
எடுத்திடரெண்டுமொன்றாகவேகூடும்
சொந்தவினயமூஞ்சேர்த்துக் - காரி
தோன்றிடிற்கோணத்திற்றந்தைமாரகம். (788)

பொன்னவனின்றபரலை - யிரவி
பொங்குங்குணசமூகத்தாற்பெருக்கித்
தன்னைமூவொன்பதுக்கீந்து - சேடங்
தாக்கவந்நாளிடைக்குருவருங்காலை (789)

ஆதித்தனின்றபரலை - எடுத்துக்கொண்
டன்பாய்க்குணசமூகத்தாற்பெருக்கி
நீதிமூவொன்பதுக்கீந்து - மீதி
நிற்குநாள்சனிவரிற்றந்தைமாரகம். (790)

ஏத்துங்குணசமூகத்தைத் - தானே
எட்டில்பெருக்கியீராறுக்கீந்து
பார்த்துக்கிடைத்தராசி - தன்னிற்
பனிப்பகைவந்திடினுந்தந்தைமாரகம். (791)

சந்திரன்

அம்புலிநின்றபரலைத் - தப்பாமல்
அன்பாய்க்குணசமூகத்தாற்பெருக்கி
நம்பிமூவொன்பதுக்கீந்து - நின்று
தங்கியநாளிடைமதிவருங்கால். (792)

லக்கினம்

பாக்கியநின்றபரலைத் தானே
பண்பாய்க்குணசமூகத்தாற்பெருக்கித்
தாக்கியீராறுக்கீந்த - மீதியில்
தப்பாமலேகண்டலக்கினந்தன்னில். (793)

முன்புரைத்திடுமைவர் - அவர்
முக்கியமாகவந்துதிரிகோணந்தன்னில்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

தென்பாகவேயவர்களும் - வந்திடச்
செப்புவர்பிதாவுக்குத்தப்பின்மாரகம். (794)

இதுவுகையன்றியுமின்னும் - திசையுட
னேற்கும்புசிப்புமவையிரண்டுமொன்ருய்
அதுவுமொத்திடுங்காலே - யிவையுடன்
அந்தகக்காலச்சக்கரமதுகூடில். (795)

தந்தையுநமன்பதிக்கே - சேர்வனென்று
தப்பாமலேஎடுத்துச்செப்பாயப்பா
இந்தவிதமாகத்தானே - மற்றை
யேழாதிபதியர்க்குமெடுகணக்கே. (796)

தாய் முதலியோர் மாரக விதி

அம்புலியட்டவர்க்கங் - தன்னி
லமையுங்குணசமுகமதைத்தானே
தென்புடனேமதிக்கு - நாலிடைத்
திண்ணமாய்நின்றபரல்எண்ணமாயேற்றி. (797)

அன்னைமாரகமுரைப்பாய் - சேயின்
அட்டவர்க்கக்குணசமுகமதில்
வன்னமாமங்கலனுக்கு - மூன்றில்
வந்தபரலைக்கொண்டுதாக்கியேபாலா. (798)

விந்தையாய்த்துணைவருக்குப் - பலன்களை
விரித்துரைப்பாய்புதன்குணசமுகத்தில்
புந்தியிருந்தபரலைத் - தாக்கிப்
புகலுவாய்மாமன்பலனனைத்தும். (799)

இராசன்குணசமுகத்தில் - குரு
நண்ணியராசிக்கஞ்சின்பரல்கொண்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

டாசறநாக்கிக்கண்டு - புத்திரர்கள்
அழியும்வகையெடுத்துமொழிகுவையே. (800)

சுங்கன்குணசமுகத்தில் - புகர்
தோன்றுமிராசிக்கேழின்பரலைக்கொண்டு
வங்கணமாகநின்ற - களத்திரத்து
மாரகந்தன்னைச்சொல்லுபாரகத்தில். (801)

சவுரிகுணசமுகத்தில் - காரி
தங்கியராசிக்கெட்டின்பரலைக்கொண்டே
அவனியிலுதித்துவந்த - சாதக
ரழியுமாரகபலன்றெளிவுசொல்லு. (802)

ஆதித்தன்முதலான - நவக்கிர
காதிபர்நின்றநிலைநீதியையெல்லாஞ்
சோதித்துச்சாதகருக் - கேழதிபர்
சொந்தமாய்த்தந்துதவுமாயுளைச்சொல்லு. (803)

குணசமுகத்தைத்தானே - யேழைக்
கொண்டுபெருக்கிமூவொன்பதுக்கீந்தே
எணவருமீவாண்டா - மதில்
வந்தவெச்சத்தையீராறிடைப்பெருக்கி. (804)

மதியுடனிருபத்தேழ்க்குக் - கொடுத்திட
வந்திடுமீவதுமாதமாகும்
அதனில்வருஞ்சேடத்தை - முப்பதி
லமையப்பெருக்கியேயொன்பதிற்கீந்து. (805)

நின்றிடுமீவுநாளா - மதில்
நிற்குஞ்சேடத்தையிருபதிற்றாக்கி
அன்றிருபத்தேழுக்கே - யீந்திட
வதிற்கண்டவீவினைநாழிகையென்பாய். (806)

மீதியீயாதசேட - மதனை
மேவியவிநாடியெனநீவகுப்பாய்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ஆதினமாயாண்டுயர்ந்தால் - நீயும்
பண்பாகவேயிருபத்தேழிற்கழித்து. (807)

நிற்குஞ்சேடத்தைத்தானே - நல்ல
நிலையுள்ளவாண்டெனக்குறித்துக்கொள்ளே
கற்குந்திங்களுந்தேதியு - நாழிகையுங்
காணும்விநாடியுமென்றுணிக்கொள்ளே. (808)

அரண விரணம்

இந்திந்தவிதமாக - வாயு
வெடுத்துக்கொண்டரணவிரணமுஞ்செய்வாய்
அந்தவிதங்களைத்தானே - யுனக்
கறியச்சொல்வேனதையன்புடன்கேளாய். (809)

விரையத்திற்பாபரேகி - லந்த
வீரர்தந்தவாயுளைதூரத்தள்ளு
நிரைபதியுச்சமாகி - லந்தவுச்சர்
நீட்டுமாயுளிற்பாதிதாட்டிவிடு. (810)

புண்ணியர்வியமேறி - லவர்களாற்
புக்கிடுமாயுளிற்பாதிநிற்கு
தண்ணியமாய்ப்பதிநட்பாகி - லதில்கண்
டதில்மூன்றிலொன்றுகொன்றுநீக்கு. (811)

பதியவனுட்சியாகி - லதில்
பாங்குடனீக்குவாய்நான்கினிலொன்று
நிதியவருச்சமாகி - லதில்
நீக்குவாயஞ்சினிலொன்றைத்தானே. (812)

ஏறிடிற்பகையிடத்தி - லவர்தந்த
தின்பமாய்மூன்றிலொன்றைப்பின்புறத்தள்ளு
பாரினில்லாபப்பதியிற் - கோளும்
பாபியாயிருந்திடிற்பாதிதள்ளு. (813)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பத்திடைப்பாபியேகில் - நீயும்
பாங்காகமூன்றிலொன்றைநீங்கிடத்தள்ளு
நத்திசுபராகிற் - கொடுத்ததில்
நண்ணியவாறிலொன்றுசண்ணிப்போடு. (814)

நிதியிடப்பாபரேகில் - நீயும்
நீக்குவாய்நான்கினிலொன்றதைத்தானே
அதிசுபர்தர்மத்திலேறில் - நீயும்
அந்தமாயெட்டினிலொன்றுசிந்தத்தள்ளே. (815)

எட்டிடைப்பாபரிருந்தா - லவர்க
ளீந்ததிலைந்திலொன்றுதேய்ந்திடவிடு
தொட்டசுபர்விதியேகில் - நீயுந்
தூக்கியபத்திலொன்றைநீக்கிவிடு. (816)

ஏழிற்பாபியுமிருந்தா - லவர்தந்த
விலக்கத்திலாறிலொன்றைவிலக்கித்தள்ளு
வாழுஞ்சுபரேகில் - நீயும்
வரத்திலீராறிலொன்றுதுரத்திவிடு. (817)

அத்தமானத்துக்குமைந்தா - நீயு
மகற்றுவாய்பாவிபைச்சகத்திடையே
சத்துருதானங்களேறும் - கோளுக்குத்
தள்ளிவிடுமூன்றிலொருபுள்ளியைப்பா. (818)

பொல்லார்சத்துருக்குட்பட்ட - வதிலவர்
புகட்டுந்தொகையிற்பாதியகற்றிவீடே
அல்லாமற்குஜற்குச்சத்ரு - நோக்க
மப்பதியேகிடினரணமில்லை. (819)

சந்திரனுடனிருகோள் - கூடில்
சகியாலிருவர்க்கும்புத்தங்களுண்டு
விந்தையாயிருவருக்கும் - வந்ததொகை
விள்ளுவாய்பாதியைத்தள்ளுவாய்பாலா. (820)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ஓர்மனையில்மூவர்நால்வர் - கூடி
ஓுயர்ந்தவராயுளைக்கயந்துதள்ளு
ஆர்மதிகூடிடினும்நோக்குப் - பட்டோர்
ஆயுளில்பாதியைநீயும்விட்டிடு. (821)

சொன்னேனிவ்விதம்நீக்கி - லதிற்
றேற்றியவாண்டுக்குச்சாற்றுவேன்கேளு
மூன்றூற்றிருபத்தினுவிற் - பெருக்கி
மூன்றூற்றறுபத்தைந்துக்கீந்து. (822)

மீதிமூவொன்பதுக்கீந்த - வீவினை
விண்டிடுமாண்டென்றுகண்டுகொள்ளப்பா
சோதனையாய்நின்றசேடந் - தன்னைத்
துலங்கவீராறிலிலங்கப்பெருக்கி. (823)

இருபத்தேழுக்கொடுத்த - வட்ட
மெண்ணியவாதமென நண்ணிக்கொள்ளே
வருமிந்தவிதிப்படியே - செய்துகொண்டு
வருடமாதந்தேதிநாழிகையுமாக. (824)

கண்டுமுன்சொன்னதையைந்து - பாகம்
கருத்துண்மதித்துக்கொண்டாயுளைக்கூறு
வண்டலர்ச்சோலையேரகம் - வாழும்
மன்னனுமரங்கையபூபனீன்ற. (825)

என்குருவீரப்பபிள்ளை - கனிவா
லிந்தவிதமெனக்குபதேசஞ்செய்தார்
மன்னுசங்கரமுனியுஞ்சொன்ன
மறைவுமிவ்விதமென்றுநிறையவறி. (826)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இலக்கின ஸ்புட விவரணம்

ஐஞ்சீரடி யாசிரிய விருத்தம்

வாக்கியப்படிவழங்கிடுசுத்தபஞ்சாங்கம்
தூக்கிமா நவநாயகர்வரத்தொடுதொலைவில்
ஆக்குகாலத்தினுதியந்தத்தொகையாய்ந்து
வாக்கினுற்புடம்பாடவென்குருபதம்வாழி. (827)

இமைக்குங்காலமோர்மாத்திரையிப்படிமுப்பான்
சமைக்கநின்றதற்பரையறுபஃதுவிகலையாம்
அமைக்குமீதறுபதுகலையக்கலையறுபான்
ரமித்தபாகையாம்பாகையோர்முப்பதிராசி. (828)

அழகதாயிவன்செனித்திடுங்கடிகையையறிந்து
பழகுதாரையிற்சென்றிடுகடிகையைப்பதிந்து
ஒழிவிராசியிலொன்பதுகூறிலோர்கூறு
வழுவிலாமலேபாகையைநவபங்குவகுத்தே. (829)

படுத்தியேயிதைப்பகுத்ததற்கீந்திடுமீவை
நடத்தும்பாதத்தில்நாழிகைச்செலவினையறிந்து
தடுத்தவீவுக்குத்தாக்கிடவருபலன்புடமாங்
கொடுத்திடச்சென்றநாழிகையறியக்கூறுவனுல். (830)

கூறநாலரைவிநாடியுங்கலையொன்றைக்கூட்டும்
ஏறவேயெந்தப்பாதத்திற்சென்றிடுங்கலையோ
மாறுநாலரைவிநாடிக்குங்கலைக்கும்நீமாட்டித்
தேறுநாழிகைவிநாடியாப்படுத்திநீசெப்பே. (831)

செப்புவாயிதுலக்கினபுடமெனத்தேர்ந்து
தப்பிலாநவக்கிரகத்தின்புடந்தனைச்சாற்ற
ஒப்பியேயெந்தக்கிரகமோவதுவொருபாதம்
கப்பியாதியுமந்தத்தின்கடிகையுங்காணே. (832)

கண்டுநீயொருபாதத்தின்கலைதனைப்பகுத்துக்
கொண்டுமேலங்குநாழிகைக்கிதனைநீகொடுத்தே
அண்டியேகிரகவாதிபின்முதலிவன்செனித்த
மண்டுநாழிகைகண்டுமுன்னீவதால்மாட்டே. (633)

மாட்டுவாய்முன்னம்வழிச்சென்றபாதத்தின்புடத்தைக்
கூட்டியேபாகைகலையொடுவிகலையுங்கூறு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பூட்டுவாயிதில்நாழிகைகாணவேபுகல்வேன்
நாட்டுநாலரைவிநாடியுங்கலையொன்ருனத்தே. (834)

நத்துவாயிந்தப்படிநவக்கிரகத்தின்புடமாம்
கொத்துவெங்குணப்பாம்புடன்வக்கிரக்கோள்கள்
பத்தியாய்த்தலைகீழதாயோட்டிடும்பாகை
புத்தியாலிதைக்கண்டுநீயுலகர்க்குப்புகலே. (835)

உரைத்திடுமெழுவகையொடுதோற்றமுமதனிற்
பெருந்திடெண்பத்துநான்குலட்சத்திடபிறப்பை
விரித்துமேகுருவீரப்பமேகம்வாய்மலர்ந்த
அருத்தம்போலவேமொழிந்திடக்கவனம்வைத்தறியே.

எழுவகைத் தோற்றமறியும்படி

பதினுன்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

வையகத்திடைதேவர்மானிடர்விலங்குடன்
மருவுபறவைச்சாதியும்
மண்ணினிடையூர்வநீர்வாழ்வதாவரபேத
மாற்றெழுவகைத்தோற்றமாம்
மெய்பெற்றமாமறையினுலதைக்கண்டிட
விளம்புவேன்கேண்மைந்தனே
மிக்கவொருலக்கினந்தன்னை நவபங்காய்
விரித்துவருகடிகைதனிலே
பையவிருநூறுகலையாய்ந்திடும்முன்சொன்ன
படியதைக்கண்டுகொள்வாய்
படுமெழுவகைத்தோற்றமிருநூறுகலையையும்
. பரவிவரும்விபரமதுகேள்
செய்யுமேதேவரொடுமக்களும்விலங்கினம்
செப்புநீநாலேழதாச்
செல்பறவையூர்வநீர்வாழ்வதாவரபேத
சீவர்நாலேழொன்பதே. (837)

உண்டவிருநூறுகலையும்மெழுவகைத்தோற்ற
முள்ளதைச்சரியாக்கியே

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ஒங்குமொருகலையிலெழுதோற்றமதுதிக்கின்ற
வுண்மையின்விபரமுங்கேள்
கண்டிடுந்தேவரொடுமக்களும்விலங்கினம்
விகங்கமூர்வனதாவரங்
கயம்வாழ்வமேழுமோரமிசமினியேழேழு
கண்டரிவிலங்குபறவை
ஒண்டியூர்வனதாவரமுநீர்வாழ்சீவ
ருயர்வுடையதேவர்மக்கள்
ஒன்றுநீர்வாழ்வதாவரமூவர்புள்விலங்
குயர்மக்கடேவரொன்ரும்
அண்டநீர்வாழ்வமானிடர்தாவரமும்விலங்
கவையூர்வபறவைவானோர்
ஆயநாலேழுவகையுந்தேவவமிசமவ
ரடையவிருபத்தொன்பதே. (838)

ஆகுமிருபத்தொன்பதமிசமுந்தேவருக்
காதிதொட்டெண்ணுமக்கட்
கட்டமுதனுலேழ்விலங்கெனிற்பத்தாதி
யாகநாலேழமிசமா
நீகுறிபறவையெனிற்பதினைந்துமுதலாக
நேர்கவூர்வனவிற்பதி
னேழாதியாக்குதாவரமெனிவிருபதா
நீர்வாழ்வநாலேழ்முதல்
ஏகும்விபரம்தெரிந்தெண்ணியவ்வமிசமொன்
றிட்டறிந்தோஸைகண்டால்
இராசிக்குமுற்பதந்தேவரங்கிசமா
மிரண்டுமனுடாம்சமாகும்
பாகமூன்ரும்விலங்கீரிரண்டாகுமப்
பறவைகட்கைந்தூர்வன
பகராறுதாவரமொரேழுநீர்வாழ்வன
பகுத்தறிந்தாய்ந்துகாணே. (839)

அட்டமமுதற்றேவராதிபாமுன்சொன்ன
வடைவிற்பகுத்தேவேழ
தாக்கழித்துக்கண்டுகொள்ளுக்மமென்னிலோ
வவ்வரிசைதலைகிழதாத்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

தொட்டிசைந்தெழுவகைத்தோற்றமுங்கண்டுதேர்
சுராமிசமக்கடோன்றிற்
றூயதேவரில்மக்களாமவரினெழுவகைத்
தோற்றமுண்டெனவறிதிபிற்
பட்டமற்றையவங்கிசங்களுமிவாறே
பகுத்தறிந்தமிசமொன்றிற்
பலர்வரினும்மிசாகுணகுணம்பெறுவராம்
பனிமதிமுடித்ததேவுக்
கிட்டகுருராசன்வளர்திருவேரகப்பதி
யிருந்தெய்வீகசித்தன்
எங்கள்குருராசன்வீரப்பமழைமுகிலெனக்
கிவ்விதமொழிந்தனனரே. (840)

வேறு

கலி விருத்தம்

அருமறைம்முதலானவகீசொன்ன
விரிவியாவும்விளங்கக்கண்டேனின்னம்
பெருமையாயொரிராசியிரண்டுபேர்
வரவும்யோகம்வேறுதல்வழங்குவீர். (841)

சொல்லவேயொருலக்கினத்தோய்விடை
வல்லயோகனும்கீசனும்வந்திட
வெல்லும்யோகமிருவர்க்கும்வேறுறப்
புல்லுங்காரணப்பூட்டினைக்காட்டுவேன். (842)

கூறுவேனெரிலக்கினங்கொள்கலை
யேறுமாயிரத்தெண்ணுறதாமிதைத்
தேறவேபனிரண்டிற்சிதைத்திட
மீறிநின்றதைவிண்டிடக்கண்டிடே. (843)

ஓசையென்பதுமுக்குமமென்பதும்
வீசுமேடந்தொட்டொன்றைவிட்டொன்றதாம்
ஓசையாறுமிடபந்தொட்டொன்றைவிட்
டாசிலாதெண்ணவுக்குமமாகுமே. (844)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கண்டவோசைக்கதுவேதானுதியாய்
கொண்டுபார்க்கவிலங்கினங்கூடுமே
அண்டியுக்குமமாகிற்றலைகீழாய்
எண்டுருத்தியிலக்கினம்போட்டிடே. (845)

போடுவாய்நவக்கிரகமுமிவ்விதம்
நாடியோர்கலையும்மொருராசியாய்
ஓடுமோசையுமுக்குளமேகண்டு
பாடியேயிதைக்கொண்டுபலன்சொல்லே. (846)

பலனைக்காணவும்பக்குவங்கேளுநீ
விலகிடாதவிராசியின்சக்கரம்
வலுவதானசதமஷ்டசக்கரம்
குலவியேயிதைக்கொண்டுபுகன்றிடே. (847)

புகழராசியினற்பலன்பூர்த்தியாய்
மகிழவேசதமட்டமத்தின்பலன்
திகழவேயிரண்டின்பலன்கண்டுபின்
சகலமுங்கண்டறிந்திடச்சாற்றிடே. (848)

அறிந்தபின்பதுதானுமல்லாமலே
மறந்திடுந்தசவர்க்கமுங்கண்டுநீ
உறுந்தவாதசக்கரமுள்ளதூஉ
நிறைந்துகண்டுபலனைநிலைத்திடே. (849)

திட்டமானதிருக்குருநாதநீ
சட்டமாவுரைதந்ததையோர்ந்தனேன்
கட்டியதசவர்க்கத்தைக்கண்டிட
இட்டமாகவெடுத்துரைசெய்குவீர். (850)

———

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

தசவர்க்கம்

வேறு

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

பாலனே தசவர்க்கத்தைப் பாடவோர்மன தாய்நில்லு
சாலவேயிவனுதித்த சதிர்பெறுங்கடிகைகண்டு
கோலமாய்லக்கினத்தைக் குறிப்பிட்டுநவக்கிரகத்தின்
சீலமாம்பாதங்கண்டே தெரிந்திடிவிராசிதானே. (851)

ராசியாமிரண்டாஞ்சக்ரம் நண்ணிடிலோரையாகும்
பேசுமாறிராசிதன்னைப் பிரித்திடாமிரண்டாய்நீதான்
வாசமுற்பதமாதித்த மதியம்பிற்பாகமுன்னும்
ஓசைக்கிங்கிதுவேயாகும் உக்குமந்தலைகீழ்நாட்டே. (852)

நாட்டுமோசையினின்றோரி ரவியோரைபெறுவாராகில்
சாட்டியேயந்தராசி தனின்மருவுவர்நிலாவின்
பூட்டியவோரைபெற்றோர் பொங்கமாயிரண்டாம்ராசி
தாட்டிகமாகநிற்ப ருக்குமஞ்சாற்றக்கேளே. (853)

கேளுநீமதியினோரை கிடைத்தவரேழிற்போவார்
நீளவேரவியினோரை நிண்ணயமாகப்பெற்றே
கோளினைச்சப்தமத்தைக் கொண்டுநீவியத்தினுட்டே
யாளுடைச்சுக்கிரநாடி யதுசொன்னபடிநீகாணே. (854)

போட்டிடுமிதற்குநாமம் புகலோரைச்சக்ரமாகு
நாட்டிடத்திரேக்காணத்தை நவிலவோர்மனதாய்நில்லு
நீட்டியோரிராசிதன்னை நிகழ்திரிபாகஞ்செய்தே
வோட்டந்தத்திரிகோணத்தி லுட்சக்ரமாதிதானே. (855)

ஆதியாஞ்சரந்திரந்தா னுபயமூன்றாய்வட்டத்தைக்
கோதியேவரிசையாகக் கொண்டுநீயடைப்பாயின்னம்
போதனைகேளுகோட்கள் புக்குமிவ்விதங்களாகத்
தீதரப்பலனைக்காணத் திரிமிசாமிசத்தைச்செப்பே. (856)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

செப்புமுப்பதுபாகைக்குஞ் சேயைந்துகாரியைந்தே
வொப்பும்பொன்னவற்கெட்டாகு மோங்குமாற்கேழதாகும்
தப்பில்லாப்புகர்க்கைந்தாமோ சைக்கிந்தவிதமேகொள்வா
யிப்படியுக்குமத்துக் கெண்டலைகீழாய்மாட்டே. (857)

மாட்டுமோசையினின்றோர்கள் மங்களபாகம்பெற்று
லாட்டினிலடைப்பாயுக்கு மத்திலேயணுகுவாரேன்
மூட்டுதேளதனிற்போடு முறையிந்தவகையேகண்டு
பூட்டுசத்தாங்கிசத்தைப் புகலவோர்மனதாய்க்கேளே. (858)

ஏய்ந்தவரிராசிதன்னை யேழுகூறுகச்செய்து
வாய்ந்ததாணிராசியாகில் வரிசையாயோட்டிக்கொள்வா
யரய்ந்ததுக்குமமேயாகி லதனினேழாதியாகத் [ளே. ()
தோய்ந்துநீயோட்டிக்கொள்வாய் சொன்னவாங்கிசத்தைக்கே

அங்கிசங்கிரகராசி யதைநவபாகஞ்செய்து
பொங்குமத்திரிகோணத்துட் புகழுள்ளசரத்தைக்கண்டே [ளு
அங்கதைமுதலாக்கொண்டே யடைத்துக்கொள்ளின்னங்கே
சங்கைகளறவேநன்கு தசாங்கிசமுரைசெய்வேனே. (860)

நிரலுறக்கிரகநின்ற நிலைதசபாகஞ்செய்து
தெரியுறுமோசையாகிற் செய்யதைமுதலாயெண்ணித்
தருவதுக்குமமேயாகிற் றருமமேமுதலாய்ப்போடு
சரிநவாங்கிசமீதென்றே சாற்றினரான்றநூலோர். (861)

சாற்றிடுமிதிற்றுவாத சாமிசமறியக்கேளு
பாற்றிடுமிராசிதன்னைப் பனிரெண்டுபாகஞ்செய்தே
ஏற்றிடுமாணும்பெண்ணு மூதயத்திலிருந்தேயோடும்
போற்றியேபெரியோர்பாதம் புகன்றனவறிந்திடாயே. (862)

அறியவேகலாங்கிசத்துக் கதைப்பதினாறுசெய்தான்
மறிமுதனேராயோடும் பிரமன்மாலரன்மார்த்தாண்டன்
பெறுகவுக்குமமேற்பேசு மார்த்தாண்டன்முதலாப்பேணு
நெறியிலசவ்வியமாக நீட்டவேவிளங்குந்தானே. (863)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

விந்தைசஷ்டாங்கிசங்கோள் மேவியவிராசிதன்னில்
வந்ததையறு பதாக வகுத்தொற்றைராசிக்கெல்லாஞ்
சந்ததம்வரிசையாகச் சாற்றினருக்மமாகி
லந்தமேயாதியாகக் கீழ்நின்றுமேலாய்வாயே. (864)

செப்பிடவறுபதுக்குஞ் செயல்பெற்றவமிசந்தன்னை
யொப்பியானுரைக்குமார்க்க முயர்நவக்கிரகந்தன்னைக்
கொப்பெனவமிசங்கண்டு கூறிடிற்பலன்பொய்யாது
தப்பிலாதறுபதுக்குந் தனித்தனிப்பெயர்சொல்வாமே. (865)

தேவாங்கிசமறியும்படி

பதினன்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

செய்யகோராமிசமிராக்கதாமிசமகா
தேவாங்கிசங்குபேரன்
திகழிரட்சோகணங்கின்னரமருட்டஞ்
செழுங்குதக்கினுமிசம்
ஐயமில்கிரளகோளம்மக்கிமாயம்
பரேதாங்கிசம்புரிபதி
அமராமிசங்காலம்ராகியமமுதமுமதி
யதன்மயக்கமுமிருத்துவும்
துய்யகோம்ளம்வனவசம்லட்மிவாகீசந்
திகம்பரந்தொடர்மித்திரம்
சூட்டிகலிநாசபாசம்பூமிசுரமுந்
துலங்குகமலாகாரமும்
மெய்குளிகனவமிருத்துங்காலமுந்தவாக்
கினியகோ ரமிமகண்டம்
மேவுஞ்சுதாங்கிசமமிர்தமும்பூரணமதி
விடப்பிரிதிகுலநாசனம். (866)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

முக்கியஞ்சேதமுற்பாதமுங்காலவுரு
மொழிசௌமியமுமிருந்து
முதிர்சீதளஞ்சந்த்ரமுகமுஞ்சுபாக்கியமு
முதியபிரதக்கணந்தண்
டொக்குநிருமலமுடன்சுபமசுபமதிசீத
மோங்கியபயோததியுடன்
ஓங்கும்பிராணயமுஞ்சந்திராமிசமி
வோராறுபதமிசமாகும்
தக்கபடியோசைக்குவரிசைகொள்ளுக்குமந்
தலைகடையிருந்துகொள்க
தசவர்க்கமுன்சொன்னவிதிகண்டுகொண்டுநீ
சஷ்டியமிசத்திலேற்றிப்
பக்குவமதாகவேயிவ்விதங்கிரகாதி
பதிகளதுகதியையோர்ந்து
பகருவாயாகிலுன்சொற்படிபலாபலம்
பாலிப்பர்நவதேவரே. (867)

சதுர்பெருகுதசவர்க்கமதனிடைநவக்கோள்கள்
தங்கியதுசுபவர்க்கமாய்த்
தனிமையுற்றுலகதுதுற்பலமிரண்டெனிற்
றருபாரிசாதமாகும்
சந்ததஞ்சுகியாவான்மூன்றென்னினுத்தபந்
தாங்குவாகனனுரோகி
சரியாகநாலெனிற்கோபுரம்வாகனந்
தனமும்பதிபாக்கியமுண்டாம்
கதிபெருகுமைந்துசிங்காசனஞ்செல்வனுங்
காணுறுபார்க்கவதமாம்
கடலுலகில்வித்தையும்புத்தியாமேழெனிற்
கண்டறிகதேவலோகம்
கனயோகமெட்டுவைசேடிகமதன்பலன்
கண்யமிகுதன்யபதியாம்
கருணைபெறுநவமதுக்கயிராவதம்பலன்
காணுமஷ்டைசுவரியம். (868)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

நிதிபெருகுதசமெனில்தேவேந்திராமிசம்
நீணிலத்திந்திரயோகி. (868)

நிச்சயமதாய்ச்சார்வபௌமனுமிவ்வாறு
நீயறிந்துரைசெய்குவாய்
நிலமையாக்கோள்களினவஸ்தையதனிண்ணய
மிராசியைக்கூறுசெய்து
நிற்கும்வாலிபமோடுயௌவனங்கௌமார
நெடுவிர்த்தமரணமைந்தும்
பதிவுகம்மாகிலிருபாம்புக்குமேயதைப்
பார்த்திடுதலைக்கீழதாய்ப்
பாம்புகரிவார்த்திகஞ்சுக்ரன்வாலிபமரண
பயமதாமற்றவைசுபம்
பார்மகன்விருத்தமரணந்தவிரமற்றதும்
பச்சைக்குமரணமொழியப்
பார்க்கவன்பொன்மரணமொழியமதியௌவனம்
பகன்றதிதுவுத்தமமதே. (869)

துவாதசாமிசச் சக்கரம்

முதலாவது இராசி சக்கரம்

துவாதசாமிசச்சக்கரச்சூட்சியிற்
தவாதுகேள்முதற்சக்கரத்தன்மையை
யவாவிராசியின்சக்கரமாமெனுச்
செவாய்விரித்திடுவேதனைப்போற்றியே. (870)

2 - வது ஓரைச் சக்கரம்

இரண்டின்சக்கரமெப்படியென்பையேற்
றெருண்டுபார்தசவர்க்கத்திற்செப்பிய
சுருண்டவோரையின்சக்கரச்சூட்சியே
மருண்டிடாதுசொல்வார்த்தைபொய்யாமலே. (871)

3 - வது கடிகைச் சக்கரம்

வேறு

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

உன்னியேகடிகாலெக்ன
மொருராசியறுபதாக்கி

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மன்னியப்பங்கொன்றுக்கி
ராசியைவகுத்தபின்னர்
மன்னவனுகிற்பாலன்
வரிசைநின்றெடுப்பாய்பெண்ணேல்
பின்னுளமரணமாதி
மேல்வரப்பெரிதுகொள்ளே. (872)

4 - வது ஆரூட லக்கினமறியும்படி

போட்டவாரூடலக்னம் புகலக்கேளிலக்னமாதி
நாட்டியவிராசியோனை நவில்புடங்கண்டுகொண்டு
பூட்டியாங்கவனிருந்த புக்கிலை முதலதாக்கொண்
டேட்டிலேயடைப்பாய்நீதா னிவ்விதங்கிரகங்காணே. ()

5 - வது நட்சத்திர லக்கினமறியும்படி

காணநட்சத்திரலக்னம் கருதவத்தாரைதன்னில்
ஊனமில்லாமற்சென்ற கடிகையைப்புடத்தாலோர்ந்து
போனநாழிகையைந்துக்கோ ரிராசியாய்ப்புகுத்திக்கண்டு
வானுறுகுதிரைமூல மகமிவைவக்கிடமாக்கூறே. (874)

6 - வது காரக லக்கினமறியும்படி

காரகச்சக்கரத்தின் கதிதனைச்செப்பக்கேளு
கோருமோரிராசிதன்னைக் கூறறுபதுதான்செய்து
பாரினிலைந்துகூறு பதியொன்ருய்ப்பாகஞ்செய்து
தீரதிற்பாகையந்தக் கிரகத்தின்முதலாச்சேரே. (875)

7 - வது ஆதரிச் சக்கரம்

வேறு

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

ஆதரிச்சக்கரத்தையறையக்கேளா
யன்பானவிலக்கினநட்சத்திரம்பின்னும்
பாதமதைப்புடமதனுல்கண்டதாகிப்
பாதமதையைம்பத்தஞ்சாகப்பார்த்துச்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சாதகமாயவரவர்களிந்தப்பாதந்
தான்முதலாயைம்பத்தஞ்சாம்பதத்தைக்
கோதறவேயடைந்துவகைகூறவேண்டுங்
குறிப்புடனேவிரிப்பறிந்துகூறுவாயே. (876)

8-வது ஆயுர்பாகச்சக்கரமும் 9-வது திரேக்காண சக்கரமும்

சுந்தரமாயாயுருசக்கரத்தைக்கேளு
துலங்குமொருராசிதனைப்பனிரெண்டாக்கிச்
சந்திரனிருந்தநவாமிசாதியாகத்
தானடைப்பாய்திரேக்காணச்சக்கரங்கேள்
விந்தையாயிராசியொன்றைமூன்றுசெய்து
மேவுதிரிகோணசரமாதிகண்டு
சந்ததமாய்க்கண்டடைத்துப்பலனைக்கூறில்
தப்பாதுபலன்களொன்றுந்தாக்கிக்காணே. (877)

10-வது அங்கிசச் சக்கரவிதி

அங்கிசச்சக்கரமதனையறியக்கேளா
யந்தமுள்ளராசியொன்றைத்தசமாய்ச்செய்து
பொங்குமதிகாரகச்சக்கரத்தினின்ற
புகர்பதியைத்தொட்டடைப்பாயின்னங்கேளு
மங்கைதடராசிதனிலிருந்தபேர்க்கு
மதினின்றபதியொன்பான்மனையைத்தொட்டுச்
சங்கையதில்லாமலடைகுடந்தைவாழும்
சற்குருவீரப்பபிள்ளைசாற்றுமாறே. (878)

11-வது நவாங்கிச சக்கரமும்

12-வது ப்ாவசக்கர விதிகளுங் காண்க

என்குருமுன்னருளுநவாங்கிசத்தைக்கேளா
யின்பமுள்ளராசியொன்றைநவமாச்செய்து
நன்குதிரிகோணசரமுதலாக்கொண்டே
நாட்டிடுவாய்பாவகசக்கரத்தைச்சொல்வேன்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பின்குறிக்குந்தாரைதுவாதசக்கூருக்கிப்
பேசுமறிமுதல்வலமாயடைப்பாயின்னம்
முன்கொள்பதியுக்குமமேயானுன்மீன
முதலாக்கொண்டிடமாகவடைத்திடாயே. (879)

துவாதசாமிசசக்கர பலனறியும்படி

இராசியின்சக்கரப்பலனதையிலக்கினத்
திறைவனைக்கண்டுமோரைக்
கிரண்டாதிபதிதனைக்கண்டுமக்கடிகைக்
கிசைந்தமூன்றுதிகண்டும்
விராவுமாரூடபலனுன்காதியைக்கண்டும்
விள்ளுநட்சத்திரபலன்
மேவுமைந்ததிபனைக்கண்டுமுரைகாரகம்
விளக்கிலாருதிகண்டும்
பராவுமாதரிசமெனிலேழாதிபற்கண்டு
பகராயுவட்டமாதி
பதியினைக்கண்டுரைதிரேக்காணமென்னிலொன்
பதினதிபனைக்கண்டுரை
தராதலத்தங்கிசந்தசனுதனைக்கொண்டு
சாற்றிடுநவாம்சமேகா
தசபதியையாய்ந்துமுரைபாவகமெனிற்றுவா
தசபதியையாய்ந்துமுரையே. (880)

மங்களப் பொருத்தங்கள்

கடவுள் வணக்கம்

ஐஞ்சீர் விருத்தம்

தற்பரானந்தசொரூபனேஞானசற்குருவே
விற்பனுபெண்ணுக்காணுக்கும்பொருத்தங்கள்விளம்ப

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

எப்படிச்சுபவிதியிதையேழையேனறிய
நற்பரத்துவநாயகாதயைசெய்துநவில்க. (881)

தினமகேந்திரம்யோனியிராசிராசிக்கோன்
கனமிரச்சுதீர்க்கம்பட்சியாயுள்சோதனையே
நினையும்வேதமும்வசியமுமரமுமாய்நின்ற
மனமயக்கறுபொருத்தமுங்நான்கொன்ருய்வகுப்பர். ()

1. வது தினப் பொருத்தம்

மங்கைநாள்முதல்மணமகனுள்வரையெண்ணி
அங்கிரண்டுநாலாறெட்டொன்பதுபத்துபனிரண்
டிங்கிரேழ்பதினறுபத்தொன்பதீர்பதினென்
றங்கிரண்டுபத்தெற்றமூன்ருறெட்டொன்பதுமாம். (883)

2 - வது கணப் பொருத்தம்

குதிரைமான்றலைபுனர்வசுகாற்குளமஸ்தம்
உதயசோதியுமனுடமுமோணமுங்கடைநாள்
கதியதாமிதுவொன்பதுங்தேவர்கள்கணமாம்
பதியமாநரர்கணந்தனைப்பாடிடக்கேளே. (884)

பரணிரோகணியாதிரைபகருமுப்பூரம்
கரவிலாத்திரியுத்ரமொன்பதுநரர்கணமாம்
கருதுமற்றையவொன்பதுமிராக்கதகணமாம்
அருமைமாதொடுமணமகன்கணங்களையறிந்தே. (885)

சித்தமாயிருவருமொருகணம்வரிற்செழிப்பாம்
பத்தியாய்ச்சுரராட்சதகணம்வரிற்பகையாம்
நத்தியேநரராக்கராய்வரினுயிர்நாசம்
மத்திமம்நரர்தேவருமாய்வரில்மதியே. (886)

3 - வது கேந்திரப் பொருத்தம்

கன்னிநாள்முதற்கணவன்றனைளயுங்கண்டு
முன்னியொன்றுநான்கேழ்பத்துப்பதின்மூன்றீரெட்டுப்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பன்னுபத்தொன்பதிருபத்திரண்டிருபத்தைந்
தின்னலக்கங்களுத்தமமகேந்திரமென்ப. (887)

4 - வது ஸ்திரீ தீர்க்கப் பொருத்தம்

கன்னிநாள்முதலாகவேகணக்கிடும்போது
மன்னநாட்பதின்மூன்றுக்குமேலதாய்வரினே
நன்னயந்தருந்தீர்க்கமுத்தமமெனநாட்டு
மன்னர்யோனியின்பொருத்தமும்பேசுவோங்கேளே. ()

5 - வது யோனிப் பொருத்தம்

இருவர்யோனியுமுள்ளவாறிருக்கினுமேலும்
வருமிரண்டும்பெண்ணுகினன்றிருவருமாண்
உருவமாயினுமாறின்றுலுமொவ்வாதே
பெருகியோனியின்பெரும்பகைபெறவுமொண்ணுதே. ()

6 - வது இராசிப் பொருத்தம்

நலமதாம்பெண்ணினுட்குளராசிதொட்டாறில்
நிலவிராசிதானுறுக்குமேற்பட்டுநின்றுற்
குலமுமாயுளுஞ்செல்வமுங்கீர்த்தியுங்கூடும்
உலகமீதிராசியின்பொருத்தமாமுணர்தி. (890)

7 - வது இராசிநாயகர் பொருத்தம்

மங்கைராசியின்மன்னனிராசிபதியோர்
துங்கமாகநட்பாகவேயிருந்திடிற்சுகமாம்
பங்கமாய்ப்பகையாகிடிற்பழுதென்றுபகர்வார்
அங்கிராசியினதிபதிபொருத்தமென்றறையே. (891)

8 - வது வசியப் பொருத்தம்

மேடமாகிடிற்சிங்கமுந்தேள்மிகுவசியம்
மாசிலாநந்தியாமெனினண்டுகோல்வசியம்
ஆசையாமிதுனத்துக்குக்கன்னியும்வசியம்
வாசமாக்கடகத்துக்குத்தேள்வில்லுவசியம். (892)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வசியமாஞ்சிங்கமாமெனின் மகரமுவசியம்
இசைவினுற்கன்னியாகிடவிடபமீன்வசியம்
அசையுங்கோலுக்குமகரமும்விருச்சிகமாகில்
வசையிலாதநண்டரிவைபால்வசியமென்றுரையே. (893)

தறைக்கும்வில்லுக்குமீனமும்முதலைக்கோகும்பம்
தறைக்குட்சாலுக்குமீனமும்மீனத்துக்கேதான்
உறக்குமேசுருவிப்படித்தம்பதியொத்தாற்
சிறக்கவாழுவர்வசியத்தின்பொருத்தமாஞ்செப்பே. (894)

ரச்சுப் பொருத்தம்

வேறு

நேரில்மூன்றுமுக்கோணங்கள்கீறியே
பாரில்நான்குவரைகுறுக்காகவே
தீருவாயிருபத்தேழ்பொருத்தமாம்
சாருங்கீழ்வரிவாசிவைத்தெண்ணிடே. (895)

எண்ணுவாய்கீழ்வரைக்குக்காலாமிதை
அண்ணுமேல்குறங்காம்வயிருமதை
நண்ணுமேல்வரிமேல்வரிநற்களம்
வண்ணமாமுடிமாமுடியென்பவே. (896)

கேளுகாலுற்பொருளொடுகேடுமாம்
நாளுமேதொடையின்மலடாநலாள்
மீளுவெவ்வயிற்றிற்சுதர்வீவரால்
வாளுலாங்கழுத்தில்லவமங்கலை. (897)

சிரசதாகிற்பெண்சிக்கெனத்தீங்குறும்
வருகுறங்கினுங்காலினுமத்திமம்
திருவுலாங்கழுத்திற்சிரத்திற்பொலாங்
கொருவிரிற்பதேயுத்தமமாகுமே. (898)

வேதப் பொருத்தம்

உய்த்தமுக்கோணங்கீறியோர்மூலைக்குச்
சித்தமாகவறைநாலுகீறியே

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

நத்திக்கீழ்வரியிற்பரிநாட்டியே
சுத்தநாளிருபத்தேழுஞ்சூட்டியே. (899)

நாட்டவேதம்மதியிருநாட்களும்
காட்டவேகுறுக்காநேர்வரைதனிற்
சாட்டியேவரிற்றன்ளிடாகாதெனப்
பூட்டுவேதப்பொருத்தமிதாகுமே. (900)

மரப் பொருத்தம்

ஆகும்மன்னன்வயிரம்பெண்பால்மரம்
ஓகையாய்வரிற்புத்திரருண்டுண்டு
பாகமாதுவயிரமாண்பால்மரம்
மோகமாகில்முழுமலடாவளே. (901)

இருவரும்வயிரம்மரமாகிடிற்
பெருகும்புத்திரர்சேதம்பெலத்திடும்
உரிமையாவிழுவோர்க்கும்பாலோங்கினு
லருமையோவவர்க்கானந்தசெல்வமே. (902)

புட் பொருத்தம்

இருவர்பட்சியுநல்லுறவேயெனிற்
பெருகிவாழ்வர்பகைதனைப்பெற்றிடில்
அருகிவாழ்வதுமற்பமெனுமுனோர்
தெரியக்கூறினரென்பர்சிறந்துளோர். (903)

ஆயுட் பொருத்தம்

கண்டுமங்கைதன்னுண்முதற்காவலன்
கொண்டநாளினதெண்ணிணைக்கூட்டியே
கண்டதேழிற்பெருக்கிமுவொன்பதில்
விண்டுதந்துமிருந்ததைவைத்திடே. (904)

மன்னனுண்முதன்மங்கையினுள்வரை
உன்னியேழிற்பெருக்கிமுவொன்பதிற்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பின்னமீந்துமேனின்றதைப்பெற்றிடு
முன்னம்வைத்ததொகையையுமுன்கண்டே. (905)

கூறுவாரிதிற்ருழ்தொகைகொண்டுளோ
ரேறுவார்பதவிக்குமூன்னென்பரால்
பாரவேபதின்மூன்றுபொருத்தமும்
ஓருவாய்முனஞ்செப்புமுரைக்கணே. (906)

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

செப்புகின்றவென்குருவேயுமதுபாதஞ்
சிரத்தணிந்தோர்விண்ணப்பஞ்செப்புகின்றேன்
இப்புவியில்மங்கையர்க்குமணவாளர்க்கு
மிருப்பதேபதின்மூன்றுபொருத்தமெல்லாம்
தப்பிலாதெப்பொருத்தமிருக்கவேண்டும்
சங்கைதனைப்பங்கமறச்சாற்றுமையா
ஒப்பெதிர்வுமுயர்வுமிகத்தின்றியோங்கு
முத்தமாசித்தமாய்ந்தோதுவீரே. (907)

கலி விருத்தம்

அருள்செய்வாயென்றவன்புள்ளபாலகா
பெருகுந்தாரைகணம்ரச்சுவேதமும்
புரியுமேயிந்தநான்குபொருத்தமும்
வருகமங்களஞ்செய்யவழுத்துவாய். (908)

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

வருகவொருமன்னவனுங்குதிரைதன்னில்
மகந்தனிலேமங்கையருமுதிக்கவேதான்
இருவருக்குமணம்புரியமகவில்லாமல்
இடர்படாமனவெறுப்பாய்க்கலகமேய்வர்
வருபரியோன்மகந்தனிலேயுதித்தபெண்ணை
மணம்புரியவவனுமொரேதாரமாகப்
பெருகுபொருள்மைந்தர்களும்பெறுவாளிந்தப்
பெட்பதனைத்திட்பநுட்பம்பேசுவீரே. (909)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கலி விருத்தம்

செப்பயானுந்திடமனதாகநில்
இப்புவியிலுடலின்பொருத்தமுந்
தப்பிலாவுயிரின்பொருத்தங்களு
மொப்பவேயிரண்டுண்டதுகண்டிடே. (910)

உண்டுசொன்னதுடலின்பொருத்தமே
அண்டியபதின்மூன்றுஞ்சரிவரில்
விண்டுயிர்ப்பொருத்தம்விலக்காய்விடில்
தண்டுளுச்சகடங்களிதாகுமே. (911)

அண்ணலேவுடலாம்பொருத்தங்களை
யுண்ணுமாமொழிந்தீரதையோர்ந்தனே
திண்ணமாமுயிர்சேர்பொருத்தங்களை
எண்ணியேமொழிந்தேதழையாள்கவே. (912)

மேருசுங்கன்மதிநின்றராசிமே
லேர்கொளொன்றிரண்டேழெட்டிற்பாபர்கள்
யாருநின்றிடில்பாபமொன்றாகுமே
சேருநான்குமிராறுக்குஞ்செப்புவாம். (913)

செப்பச்சேயுமிருக்கக்காற்பாபமா
மொப்பிமற்றத்தீக்கோளுறவாட்சியில்
வெப்பமாகவிரித்தரைப்பாபமாம்
அப்பதியுச்சமாகின்முக்காலதே. (914)

நந்திலாதனன்னட்புக்குக்காலதாம்
வந்திடப்பகையின்முழுப்பாபமாம்
உந்துநீசத்திலொன்றேகால்பாபமா
மிந்தமார்க்கமெடுபாபந்தன்னையே. (915)

மங்கையாணுக்குமிவ்வண்ணமாகவே
பங்கமாகியபாபத்தைக்கண்டிடு
அங்குப்பெண்ணுக்கமைந்ததைப்போலவே
தங்குமாணுக்கிரட்டிதான்வேண்டுமே. (916)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இரண்டுபாபங்கள் மன்னனுக்கேவரிற்
றிரண்டுபுத்திரர்போகஞ்செழிப்பதாம்
உருண்டவொன்றினுக்கொன்றரையாயினும்
தெருண்டுகாணினுநன்கெனச்செப்புவார். (917)

பெண்ணின்பாபத்திற்பெற்றிடமேலதா
வண்ணல்பாபங்கால்கூடினுமாக்கமே
பெண்ணின்பாபங்கால்கூடிற்பெறும்பிழை
யண்ணலாயுளறுத்திடுமென்பரே. (918)

ஐஞ்சீர் விருத்தம்

வையகத்தினிலுடற்பொருத்தங்களுமலிய
வெய்யதாகவேயுயிர்ப்பொருத்தங்களும்விளைந்தாற்
செய்யவேமணஞ்சிறப்பொடுபுத்திரர்செழிக்கும்
உய்யுயிர்ப்பொருத்தஞ்சடப்பொருந்தத்தினுயர்வே. (919)

ஐயனேயிதுவரையில்யான்கேட்டதையறைந்து
மெய்யனேமனத்தையத்தையறுத்துநீர்விட்டீர்
துய்யனேயினிதுவாதசபாகமும்சொல்வி
வையகத்துளோர்மதிப்புறவிதிப்படிவழுத்தீர். (920)

கிரக வலிமை

அசைவற்றநிலையுற்றகுருவெற்பினிடைவைத்தொ
ரானுக்குமறைசொற்றவன்
அருள்பெற்றுநிறைவுற்றகணிதக்கடலைமுற்று
மறிவுற்றுமிருசித்திசேர்
வசையற்றபேர்பெற்றவீரப்பனுமெத்த
வள்ளலார்திருவடித்தா
மரைமலர்த்துணைமலர்வனைந்துபூத்துநவ
மாக்கோள்படைத்துநின்ற
திசைபுத்திவிவரமிஃதொருவாறுபெறுமாறு
தேர்ந்தமட்டுஞ்செப்புவாம்
சென்மலக்னம்புருடராசியெனில்வலமாத்
திரித்துமதுபெண்ணேவிடம்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இசையத்திரித்துலக்கினமுதல்வியமெலா
மிவ்வாறுகண்டுகோலி
லேற்றவலமுன்பார்வையிடமெனிற்பின்பார்வை
யிராசியின்ருனமுமதே. (921)

செப்புமுறையவரவரிராசிநிறைகண்டுபின்
றேவர்செலவுந்தெரிந்து
சென்மமதுபுண்யமோபாவமோவென்பது
தெரிந்துபின்றந்தையோக
மெய்ப்பலன் றீப்பலன்கண்டுமுன்சொல்லிய
விதிப்படியமைந்தவெண்ணில்
மேவுபத்தவனுலவன்வலிதெரிந்துபலன்
விணகோசரங்குறித்துத்
தப்பிலாவிவ்வகைத்திறனெலாங்குருவினுற்
சாற்றத்தெரிந்துபின்பு
தடையறத்திசைபுத்தியந்தராந்தரநுண்மை
தக்கவருரைப்பரன்றிச்
சொற்பிழைபடும்படிபகட்டவாராய்ச்சியிற்
றுடிதுடித்துத்தறையினுற்குஞ்
சொன்னசோதிடர்களுக்கும்பழுதுவருமென்று
தொல்லைநூல்சொல்லுமாறே. (922)

ஒன்றிரண்டொருநான்குபஞ்சமந்தசலாப
மோதுமேழதிபர்நன்மை
உதவுவாரிவரிற்சிரேட்டர்நான்கொடுபத்து
முடையராறெட்டுமூன்றேழ்
அன்றியும்வியத்தொடிவ்வதிபரெவர்திசையென்னு
மற்பசுகமுங்கொடுத்தார்
அவரைந்துபேர்களுந்தீங்குதருதொழிலின்முத
லாட்களாமின்னுநல்லோர்
தன்றிசையினற்பலன்செய்பாதியாகவே
தருவர்தீயோரென்னிலோ
தமதுதிசைநற்பலன்றருவதுவழக்கமிது
சந்ததமுநிலைநிலாது
துன்றியவிரண்டதிபனுச்சமேறிடினன்மை
சொல்லலாகாதுவியமேற்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சுபர்கூடில்வியபதிதிசைகணிவர்புத்தியிற்
சுகவாழ்வுதருவர்காணே. (923)

இடமொன்றிலிருவர்மூவர்களெய்தினுலிவரி
லெவன்வலியனேவவன்றன்
இதரர்வலிகைக்கொண்டுதன்றிசையிலீவன்மற்
றிவன்வலியவற்களிப்பன்
தொடமென்றநாளுதனுக்கட்டமத்துளான்
சுபனெனின்முனுயகன்
சொந்தமாந்திசையினிற்பயனளிப்பான்றீய
சூரனெனினிழிவுதருவன்
மிடல்கொண்டநட்சத்ரநாதனுங்கவன்வலியை
மேவியவனதுதிசைக்கண்
வீறுபெறுதன்பலனைமறவாதளிப்பனிவ்
விதங்கண்டுபுகல்வர்வீரர்
அடல்கொண்டசரதிரோபயராசிதோன்றின
வவர்க்குறுபலாபலன்கள்
அத்தனையுமறியுமாறுய்த்தவிதிமுறைவழா
தறிவுறுப்பாமினியரோ. (924)

சரராசிதோன்றினோர்க்குபயசரராசியோர்
தருவர்நற்சுகபலன்கள்
சாற்றுதிரராசியோர்தீப்பலன்றருவரித்
தன்மையேபோலமற்றுந்
திரராசிதோன்றினோர்க்கு பயருந்திரருநற்
சீர்கொடுப்பார்சரத்தோர்
தீப்பயனளிப்பராலுபயராசியினிற்
செனித்தவர்க்குபயர்திரரே
வரமீவர்சரராசியதிபரோகொடியரா
மலையென்னைமனைவிகருமம்
வருமிந்நநால்வர்களையட்டமாதிபனேக்கில்
வாங்கியவர்பயனையொருதான்
தரவேகமடைவனைத்தொன்பத்திபரைவியத்
தானுதிபதிநோக்கினுல்
தன்பலனவர்க்களித்தவர்பலனைவவ்வியே
தன்றிசைகொடுப்பனுமே. (925)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

தனபதிசகோதரப்பதியிவரையாறவன்
சார்கினும்பார்வைசெயினுஞ்
சற்பலன் றீயதாந்துர்ப்பலனெலாநல்ல
சற்பலனதாகமாறும்
இனமூநற்சூட்சமுளவகைசொல்வோமொருவற்
கிரண்டாதிபத்யம்வந்தும்
இராசியதிபத்தியம்பெற்றுமட்டமனேக்க
மெய்தியுஞ்சரமேறியும்
சினமறுநலோர்மூவர்கூடினுமொருவாறு
தீங்குமொருவாறுநன்கும்
சேருமேலிவையெலாங்கத்திமுனைநிற்பவர்கள்
சிந்தைபோற்கூர்ந்துநோக்கி
அனகனேற்றிசைநாதனவன்வலுவுமிடருநன்
காய்ந்துவருதீமையெல்லாம்
அற்பமென்பாய்நன்மையொன்றுக்கிரண்டா
யளிப்பனென்றுரைசெய்கவே. (926)

திசைநாயகன்பாவியாகினுல்முன்சொன்ன
செயலெலாமுற்றிருந்தாற்
றீங்கையெல்லாமற்பநன்மையாய்நன்கெலாந்
தீங்கினுந்தீங்கதாக
நிசமேயளிப்பனினுமொருவன்திசைக்காணே
நின்றபேர்வலியராகில்
நிரைகேந்திரத்தோனுமவனுடனிருந்தோரும்
நெடுவிழிபடைத்துளோரும்
பசைமேவுதிரிகோணநின்றவருமத்திசைப்
பதிபலனிறுத்திவைத்துப்
பாங்குபெறுதங்களில்வலுத்தபேர்முற்பலன்
பாலிப்பர்வரிசைதவறுர்
விசைமேவியதிரிதனலாபாதிபதியர்திசை
மேவினுலுடன்வலுத்தோர்
விழிநோக்கினேர்திசைப்பதிபலனிறுத்திதம்
வீறுபலனீவர்பின்பு
மேவுமத்திசையரசுபயனெனக்கண்டுதாம்
விண்டிடுவராய்ந்துளோரே. (927)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

விதியரசுவியநாதன் ஒருவற்கொருவர்மாறி
மேவிநின்ருர்களென்ருல்
வேண்டுமவர்திசைநடக்குந்திறமைசொல்வாம்
விரும்பியவரோடிருந்தோர்
துதிபெறப்பார்த்துளாரிவர்களின் றம்பலன்
றுணைநின்றபேர்பலன்பின்
துரிதமாப்பார்த்ததேபேர்பலன்வரிசைதவருது
சொற்பெறவளிப்பரம்மா
இதிலொருகுறிப்புநாங்கூறுவோமாரக
மெவர்க்குரித்தென்னிலந்த
இயல்மாரகாதிபருடன்சேர்ந்திருந்தபே
ரேற்றவரைநோக்கினேர்கள்
அவைதநன்கறிந்துநிலைபெற்றமேலானவதி
காரிதிசைகண்டுகொண்டே
அக்காலமற்றுளவர்வலியரெவரோவவ
ரரும்புத்தியென்பதறிவே. (928)

———

முதற் பாவகம்

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

இலக்கினமதனுற்கீர்த்தி யியல்பெறுங்குணங்கள்யோகந்
துலக்கியவழகேயாயுள் சுதேசத்தில்வாசநன்றி
பலுக்குநல்கிளைகள்கல்வி பக்குவவறிவுதூய்மை
வலுக்களையுரைக்கஞான வள்ளலார்காப்புத்தானே. (929)

யோக்யதாமிசை

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

பாக்கியத்திற்றனவானுமூன்றுளானும்
பஞ்சமத்தோன்றனத்திடையேபதிந்துவாழ
யோக்கியத்தோரிலக்கினத்திலிருப்பாராகில்
யோகவானிதிற்சனித்தோனுண்மையுண்மை
பாக்கியமெய்ச்சாமிசுகத்தமரவாக்கி
லமலகுருவுடன்சுபருமமர்ந்துநின்றாற்
றேக்கமழ்கல்வியும்புகழுந்தனமும்வாய்த்த
செல்வவானெனவிவனைச்செப்பலாமே. (930)

வாய்மை

நவநிதிக்கோனுச்சமுறத்தனவானந்த
நலங்காணவிலக்கினத்தேநல்லோர்நின்றால்
உவமையிலாக்கொடையாளனுவன்மூன்றோ
னென்னேன்றந்தலமாறியுறையவானத்
தவர்குருநல்லருள்விழியானோக்கப்பெற்றாற்
சத்தியவானுவன்வர்க்கபலமுஞ்சார்ந்தால்
இவனைரகுதசரதனென்றியம்பலாமற்
றெதிரிலாக்கொடையனுமாயிருப்பன்காணே. (931)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சற்குணம்

பஞ்சமன்பத்தவன் கூடிச்சனிக்குமூன் றிற்
பதிந்திவரிலொருவனுச்சம்பாய்ந்துநின்றால்
வஞ்சமிலாக்கொடையாளன் றனவானென்ன
வழுத்தலாமதிக்கிரண்டோன்வானோர்நாதன்
கொஞ்சுதுணையாய்க்கூடிச்சந்த்ரகேந்த்ரங்
குலவினுற்சௌரியவான்குணவானென்ப
மஞ்சுகண்டமயிலேபோலிவனைக்கண்டோர்
மனங்களித்துச்செழிப்பரெனவழுத்தலாமே. (932)

உதார குணம்

பஞ்சமன் பத்திடையிருக்கச்சனிக்கோரைந்திற்
பதினோராமிடத்தனுச்சம்பாயக்கண்டால்
வஞ்சமற்றகொடையாளன்கல்விகேள்வி
வல்லவனென்றேயுறுதிவார்த்தைகூறு
பஞ்சமமேசனிவீடாயதிலேயிந்து
பதிந்திருக்கச்செங்கதிரோனுச்சம்பாயிற்
கொஞ்சமேனுங்கபடமிலான்கபடியானோர் [ணே.
குணந்தெரிவோனன்னடையான்கொடையான்கா

பாக்ய சுகம்

திருமாலும்பாக்கியனுமைந்தினனுந்
திரியவனுங்கேந்திரமாளிகையிற்சேர்ந்தால்
ஒருமாவிங்கிவனெனவுமுலகஞ்சொல்லு
முதயமதிக்கொருமூன்றோனுச்சமாகக்
கருமாதிபதிபாக்யபதியொன்றாகிக்
கனிவுபெற்றுமூன் றிடத்திற்கதிந்துநின்றாற்
றருமாவிங்கிவனெனவேசொல்லற்பால
தனபதியென்றேயொருக்காற்சாற்றறப்பாற்றே. (934)

தருமமு மழகும்

சன்மபதிசுகபதியொன்றாகிக்கேந்த்ரத்
தானத்தேவீற்றிருக்கத்தாரைகேள்வன்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வன்மமின் றிநட்பாகிக்கடைக்கணோக்கம்
வழங்கிலிதுகிடைத்தோன் மன்னவர்போலாவன்
நன்மலையோன் மூன் றவனென்ருகிக்கேந்த்ர
நடுமனையிற்குடிபுகுதப்பாக்யநாதன்
மென்மலர்க்கண்ணேக்கருளக்கிடைத்தாலிந்த
வின்மதனைத்தன்மனென்றேவிளம்பலாமே. (935)

கல்வி செல்வம்

இலக்கினத்தோன் கருமனிவர்கோணமேற
விவரையந்தோனருணோக்கமிட்டாலிந்த
நலக்கணத்தோன் பொருளிரண்டுங்கிடைத்துவாழ்வன்
நல்லலக்கினதிபதிதிரிபிராசன்
துலக்கமுறவுச்சமாளிகையிலேறிற்
சுகவானுயிருப்பனென்றேனுச்சந்தோயத்
தலத்திறைவன்கோணத்தேநிற்கவைந்தோன்
ருன்கண்டாலிவன்பெரியதனவான்காணே. (936)

பாக்கியமும் யோக்கியமும்

தலையிறைவன்கோணகண்டத்தலங்களேறத்
தக்கோர்களருணோக்கந்தழைந்தாலிந்த
நிலையுடையான் பாக்கியவான் கனவானீதி
நிறையுடையான் றரையுடையானேயனென்பர்
நிலவுதனபதிநிதியோனிலக்கினேச
னிருவரிவராட்சியுச்சனேயமூன் று
தலனைநிறைப்படியடைந்தாலிவனேநல்ல
தர்மவான் றனவான் மெய்ச்சார்ந்தவானே. (937)

கல்வியுஞ் செல்வமும்

முடியுடையான் றனமுடையான் வாக்கினதன்
மொழியுமிவர்தமிலொருவனுச்சமாகிற்
படியுடையான் றனமுடையானென்பாருச்சம்
பாய்ந்தபதிதரும்பலனேயதிகம்பாராய்
முடியுடையான் கண்டமுறநாலோன்கோண
முந்தினற்பாக்கியவானுவான்கோணப்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

படியடைவோன் றரும்பலனேநிலேப்பாங்கேந்த்ரம்
பாய்ந்ததுரைப்பலன்வரும்போம்படித்தாம்பாரே. (938)

கலேஞான நீரம்

தனபதியுந்தைரியனுங்கோணஞ்சேரத்
தாரைபதியருட்கடைக்கண்டருங்கால்வந்த
கனபதியைச்சோதிடநூல்சிற்பநன்னூல்
கணிதநூல்மூன்றுணர்ந்தகலேமானென்ப
தனதனதன் சரராசிமேவவந்தத்
தலத்திறையுமிலக்கினனுங்கண்டஞ்சார்ந்தால்
இனதரவான்குருவருளேமுடிமேற்கொண்டா
விலக்கணமுமிலக்கியமுமிசைந்துளானே. (939)

கவிதா நீரம்

சன்மபதிகேந்திரிக்கவாக்குநாதன்
ருரைபதிகேந்திரத்திற்றழைத்துவாழத்
தன்மபதியாட்சிபெற்ருலிந்தக்காளே
தமிழ்நூலுக்காசிரியதானியாவான்
நன்மைபெறுமிலக்கினத்தோனுட்சிமேவ
நயவாக்கில்வாக்கிறையுமாட்சிநண்ணப்
பொன்மயக்கோன்கேந்திரிக்கக்கிடைத்தகாளே
புலவருக்குப்புலவனெனப்பொருந்துவானே. (940)

கலேஞான நீரம்

தலேயிறைவனுதாயத்தலத்தும்வாக்கோன்
ருரையிறைவாக்கிடத்துந்தழைக்கப்பாக்யன்
நிலவின்மகனெடுகூடிமூன்றில்வாழ
நேர்ந்தமகன்றமிழ்நூலினேயமிக்கோன்
மலேயிறைவனுட்சிபெறவாக்கிலாசான்
வந்திருக்கக்குருகேந்த்ரம்வாக்கோன்வாய்த்தால்
கலேபலகண்டறிந்தநல்லமெய்யான்வேதக்
கல்விமானென்றிவனேக்கழறலாமே. (941)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பூபாக்கியமுங் கல்வியும்

முடியிறைபாக்கியத்திருக்கவாக்குநாதன்
முதற்புலவன்கேந்திரத்தின்மூளக்கப்பெற்ருேன்
படியிறையாயிருப்பதொடுமிதிகாசங்கள்
படித்துணருங்கல்விநிலைபடைத்தோனென்பர்
அடியிறையுந்தைரியனுங்கோணமேற
வருள்வாக்கோன்புதன்வாக்கிலமரப்பெற்ருேன்
நெடியகடலுலகுபுகழ்கணிதநூலு
நீடியசோதிடநூலுநிலைப்புள்ளோனே. (942)

தனபாக்கியமுங் கல்வியும்

இலக்கினத்தோன்பிரபுவொடுதனத்தின்மேவ
எழிற்றனத்தோனிலக்கினத்தேயிருக்கநாலோன்
நிலைத்தகுருகோணமாளிகையில்வாழ்ந்தா
ணிதிபதியாமிவனெனவேநெடுநூல்கூறும்
மலைக்கிறைவன்கேந்திரிக்கமலைமேற்செம்பொன்
வதிந்திருக்கத்தனத்திறையுமலைமேல்வாழத்
துலக்கினலக்கினத்துதித்தோன்றனவான்கல்வித்
துறையறிந்துநிறைவடைந்தசோமன்காணே. (943)

வாகடவித்தையு மைஸ்வரியமும்

மூளைத்தெழுந்ததலத்திறையிலாபனேடு
முழுத்தனத்திலரசிருக்கவாக்குநாதன்
கிளைத்ததைரியத்திருக்கக்கிடைத்தகாளை
கிருபைமிக்கவாகடநூற்கிரியைதேர்ந்தோன்
விளைத்தமுடிக்கரசுவிரையத்தின்மேவ
விரையபதிமாறிமுடிமீதுவாழ
வளைத்ததிரிகோணமைஸ்வரியன்வாழின்
மைந்தனைஸ்வரியனெனவாழ்த்துவாரே. (944)

தலத்திறைவன்சந்திரகோணத்தில்வாழத்
தனத்திறைகேந்திரத்திலுறச்சந்க்ரசாமி
நிலைத்தகேந்திரத்திருக்கக்கிடைத்தகாளை
நீணிதியுங்கல்வியொடுநெடிதுள்ளோனும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மலைக்கரசன்கேந்திரிக்கத்தனபாக்யேசன்
வான்குருகோணத்திலுறச்சுகத்தோன்கோண
நிலைக்கிலிவன்புவிபுகழுங்கல்வியோங்கி
நிறைந்தசுகமடைந்துதவநெறிநிற்பானே. (945)

சகல பாக்கியம்

சன்மத்தான்றனத்தான்றம்மாட்சிக்காகத்
தனிப்பாக்யன்சுகத்தானந்தழைத்துவாழக்
கன்மத்தான்சன்மத்தேகலந்துவாழக்
கண்டவன்மெய்க்கல்விசெல்வங்கதித்துவாழ்வன்
தன்மத்தானுதாயத்தலத்தான்கூடித்
தைரியத்தானத்திலுறத்தழைத்தான்சத்ய
ஜென்மத்தானற்குணத்தானிலத்தான்கல்வித்
திரந்தெரிந்தான்கொடைக்கரத்தான்செல்வத்தானே.

தானமுங் கல்வியும்

மலைமுகட்டிற்செங்கதிரோனுதயமாக
வாக்கிலேபுதனிருக்கப்பாக்யநாதன்
நிலைபொருத்தவாதாயத்தலத்துவாழ
நிலத்துதித்தவிளங்காளைநிதியோனுவன்
தலைபடைத்தோன்றைரியத்தோன்சுகத்தோன்கூடித்
தனிக்கோணமாளிகையிற்றழையவாக்கோன்
கலைபடைத்தகுருலாபத்திருந்தகாளை
கல்விசெல்வமெனும்பொருட்கள்கைக்கொள்வானே.

தெய்வ பக்தி பாக்கியம்

இலத்திறைவனிலத்திலுறத்தனத்தோனந்த
விருந்தனத்திலிருக்கநிதிக்கிறைவன்மோட்ச
நிலத்திருக்கக்கிடைத்துவந்தோன்மோட்சபாக்ய
நிலைக்கநெடுங்கலைக்கண்மனநிலைக்குங்கோளோன்
தலத்திறைவன்காரியத்திலிருக்கவாய்த்த
தனத்திறைவன்பாக்கியத்திற்றழையநாலோன்
இலத்திலுறக்கிடைத்தவன்பாக்யவானுகி
யிருதயத்திற்சிவயநமவெனுங்கோளானே. (948)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கலைஞான வித்துவத்து

தலையிறைவன்கேந்திரிக்கவதற்குநாதன்
சத்தியகோணத்திருக்கச்சந்த்ரசாமி
நிலையிறையாயாட்சிபெறமோட்சசாமி
நிலாக்குருநேத்திரத்திலுச்சநிலையிற்சேரச்
சிலையிலேந்தோன்கேந்த்ரமுறக்கிடைத்தகாளை
செல்வமுற்றுலிராசசெல்வஞ்சேர்வனன்றேல்
கலையறிவில்வாகடசோதிடசித்தாந்தக்
கணிதவிலக்கணவிலக்யகவிஞனுமே. (949)

பூபாக்யம்

தலத்திறையுந்தனத்திறையுந்தலத்தேவாழத்
தாயிறைகாரியத்தலத்திலைஸ்வர்யேசன்
நலத்துணையாக்கொடுவாழக்கிடைத்தோன்பாக்ய
நாயகனுய்வாழ்வன்லீலாவினோதன்
மலைக்கிறைவன்கேந்திரிக்கவதற்குநாதன்
மலைக்கேழிற்கேந்திரிக்கப்பாக்யநாதன்
நிலைத்தவைதரியத்திருக்கக்கிடைத்தகாளை
நிலநிதியுமிகுபுகழுநிலைத்துள்ளோனே. (950)

கல்வி

சென்மநாயகன்றனத்தோன்கேந்த்ரமேறச்
செழுஞ்சுகத்தான்பாக்யத்திற்சிறந்துவாழக்
கன்மநாயகன்கோணமேறமேன்மை
கண்டுகுருமனமகிழ்ந்துகனியவாய்த்தோன்
தன்மநாயகனுகிநெடுநாள்வாழ்வன்
றந்தைசொத்துக்கெழுமடங்குதழைத்துச்சேர்வன்
நன்மனுலயத்திடைமெய்யென்னுந்தேவை
நாட்டினுன்கல்விநிலைத்தேட்டினனே. (951)

பிரபுத்வம்

இலக்கினத்தோன்சுகவாட்சிக்கிருக்கப்பாக்ய
னிருந்தனத்தோன்குருகோணத்தினிதுவாழத்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

துலக்கியகாரியமாதன்கேந்த்ரமேறத்
தோன்றினேன்சிவவிரையன்சுகவாழ்வுள்ளான்
தலத்தோனுமாதாயத்தலத்துவாழத்
தாய்தலத்தோன்பாக்கியமாத்தலத்துவாழ
நிலத்தகுருவீக்ஷணத்திற்பிரபுவாழ
நேர்ந்தவனைப்பிரபுவென்றேநிறுத்தலாமே. (952)

அன்னிய தேசவாச சுகம்

முடிப்பதியான்பாக்கியத்திலிருந்துவாழ
முதிர்தனவான்லாபத்தேமுயன்றுவாழத்
தடித்ததனத்திடைக்குருவைக்கிடைத்தாலிந்தச்
சாதகன்வேற்றூரிருந்துதழைத்துவாழ்வான்
அடிப்பதியிற்பிரபுகுருகோணமேவி
யமர்ந்திருக்கச்சுகன்பாக்யத்தமரவாலோன்
படித்தகுருகேந்திரத்திலமரப்பெற்ற
பாலனுமவ்வாறிருந்தேபவிப்பான்காணே. (953)

கல்வி

கலி விருத்தம்

சரத்தின்மூன்றவனேறச்சரத்தனும்
கிரிக்குநாதனுங்கேந்திரமேறிடின்
விரித்தகீர்த்தியுங்கல்வியுமேவுமே
தெரித்தகுன்றிடைத்தீபமிட்டாலென. (954)

இரக்ஷணியம்

பாக்கியகேந்திரமூன்றவன்பற்றுற
ஆக்குநாதனேடம்புலிகேந்திரத்
தூக்கமாயுறவொள்ளியநோக்குறில்
காக்குந்தன்மைக்கருணையுளானரோ. (955)

தன தானியம்

ஆயன்செந்தணன்கூடவதுற்றினேர்
தாயனுச்சந்துலங்குறப்பெற்றிடின்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பாயும்வாகனன்கண்ணருள்பட்டதேல்
தாயநற்றன தானியமோங்குமே. (956)

வீரத்துவம்

தீரன்சன்மனிருவருஞ்சேரிடஞ்
சேரமாறியிருந்துசெழிக்கவே
சூரராரியன்கண்ணருடோயுமேல்
வீரர்வீரனெனப்பெயர்மேவுமே. (957)

கல்வி

நான்கிரண்டுக்குநாயகர்கூடியே
வான்குலாமலைமாமுடிதோன்றுறத்
தேன்குலாமதிமைந்தன்றிருக்கணேர்
தான்குலாவத்தழைத்திடுங்கல்வியே. (958)

தனுநி வாகனம்

மூன்றிரண்டுபதினொன்றின்முன்னவர்
ஆன்றபாக்கியத்தண்ணலைவந்தாதிபன்
தோன்றநோக்கிற்சுகந்தனம்வாகனம்
ஈன்றதந்தைக்கிரட்டிகிடைப்பனே. (959)

வாய்மை

சத்தமத்தன்றனன்றுணைக்கூடியோர்
சுத்தநான்கிற்றுலங்கச்சுகப்பதி
தத்தியுச்சந்தலைப்படிற்சந்திய
ருய்த்துநோக்கிலுறுதிச்சொல்லாளனே. (960)

சற்குணம்

சன்மனுட்சித்தழைத்திடவைந்திலே
நன்மைச்சந்த்ரசுகாதிபனண்ணதே
தன்மதேவதைசற்குருநோக்கினுற்
பொன்மயக்குணபூரணனுவனே. (961)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

புண்ணியம்

மதிக்குமூன் றவனுச்சத்தில்வாழ்வுறப்
பதித்தவுச்சம்படைத்துமனைக்கிறை
கதித்தவைந்திடைக்காவற்கிருப்பனேற்
றுதித்தசாந்தன்சுகிர்தனென்றெண்ணவே. (962)

ஆசாரம்

ஓங்குசெந்தனன்மூன் றவனென் றியே
தீங்கிலாப்ரபுத்தானத்திற்சேர்வுறீ இத்
தீங்கர்நோக்கமில்லாதுசெழிப்பரேல்
சாங்கமாகத்தழைக்குநற்சீலமே. (963)

வைணவ பக்தி

தீரனைத்தனன்சீர்பெறநோக்குற
மேருநாயகன்கண்ணிடைமேவுறின்
வீரமால்விழிமேவக்கிடைத்தவ
னாரணன் றிருநற்பதியாளனே. (964)

கீர்த்தி

தீர்த்தவேதியன்சென்மத்திருப்பது
பார்த்துப்பஞ்சமன்மெய்த்தனபாக்கியன்
ஆர்த்துக்கெக்கலித்தானந்தங்கூர்ந்திடிற்
கீர்த்தியோங்கிக்கிளைத்திருப்பானரோ. (965)

வீரத்துவம்

மெய்ச்சுகத்தனலாட்சிவிளைந்திட
வுச்சனுய்க்குருவுத்தமநோக்கிடிற்
கொச்சைதீங்கர்க்குக்கோடாரியாயிவன்
அச்சமின் றிநல்லாண்மைபடைப்பனே. (966)

பல பாக்யம்

குருவுஞ்சாமியுநான்கிடைக்கூடுற
மருவுநான்கன்மகிழ்ந்திதுநோக்கினுற்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

றிருருங்கல்வியுஞ்சீலமுந்தாலமும்
உருவும்வாய்த்தங்குயர்ந்துசெழிப்பனே. (967)

கீர்த்தி

மலையனல்லவரத்திற்சிறந்துறச்
சொலும்வரத்தன்சுகத்திற்பதிந்திட
நிலவுதீரத்திற்பாக்கியநிற்குமேல்
நிலையதாம்புகழ்நீடுநிறுத்துவான். (968)

உதையன்கேந்திரத்தோங்கிச்சிறப்புறச்
சுதன்மனைக்குட்சுரகுருமேவிடப்
பதவியோன்குருகேந்திரம்பற்றினுற்
சிதைவிலாப்புகழ்சேர்ந்தறந்தேடுமே. (969)

சுதேச வாசி

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

உலப்பரியநிதியோனுஞ்சுகனுங்கூடி
யுயர்கிரியிலேறியுற்றவுறுதியோனும்
தலைப்பதியுபயமேவியதற்குநாதன்
தன்னோடுவலுத்திருக்குந்தகைமையோனும்
இலக்கினத்தோன்றிராசிகேந்த்ரமேற
வினியகுருநோக்கடைந்தாலிவனுமேரு
துலக்குதிரமாகவதிலுரியோன்மேவச்
சுபர்பார்க்கிலிவனுநல்லசுதேசவாசி. (970)

சுதேச வாசம்

எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

உதையமேசரமாயுரியனுஞ்சரத்தே
யுறைந்திடச்சரத்தவனேக்கச்
சிதைவிலாத்தனவானுய்ச்சுதேசத்தே
செழித்துவாழ்ந்திருப்பனென்றறிக

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வுதையமேதிரமாயுபயனேடுரிய
ளென்றியவ்வுபயத்தேயுறைய
இதையுளான்சுதேயத்தலத்திலேதனத்தோ
டிருந்துவாழ்வானெனலியல்பே. (971)

சுக யோகம்

ஐஞ்சீர்விருத்தம்

செனனமேருவேசரமதாத்தலைவன்கேந்திரத்தே
தனனேடேகிநற்சரத்திலேவசித்திடிலிவனும்
தனதனேயெனத்தம்பதிவீட்டயற்பதியிற்
கனதையோடிவன்வாழுவானென்பதுகருத்தே. (972)

அன்னிய வாசம்

செனித்தராசியேதிரமதாயுரியவன்சரத்தே
தனித்துநின்றிடத்தலைபிலைசுவரியன்றழைந்தா
லினித்தசெந்தனனிலாபத்தேயிருந்திடிலிவன்றான்
சனித்தவூர்விட்டுமற்றவூர்ச்சுகமுண்டுதழைப்பன். (973)

அன்னிய வாசம்

உதயராசியேயுபயமாயுரியனுபயத்துப்
பதியிலேவிரையாதிபனெடுநிற்கப்பௌமன்
புதர்கொள்புன்செயாம்பூமிகாரகனெடும்புகுந்தாற்
பதியைவிற்றிவன்பாழ்நிலம்வாங்கிவாழ்வானல். (974)

அயோக்கிய தாமிசை

கொச்சகம்

சென்மத்தோனெட்டுவியஞ்சேரத்திரிநாதன்
வன்மத்தோனுகிமரணத்தேவாய்ந்திருக்கத்
தன்மத்தோனுறிற்றனைப்பட்டாலிக்காளை
கன்மத்தாற்பாவிநிந்தைக்கைப்பொருளாக்கொள்வா
[னே. (975)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ஒன்றுனிரண்டானுறுநோய்மரணமுற
வென்றேங்குதீரன்விதியடையப்புண்ணியனுர்
அன்றேமரணமடைந்திருக்கவந்தமகன்
பொன்றுதகீர்த்தியையோர்போதுமடையானே. (976)

தாடாளனெட்டோன்றைறியத்திலொன்றுகத்
தாடாளனுக்குநல்லார்தண்ணருள்செய்யாதிருக்கக்
கேடாகநோய்க்கதிபன்கேந்திரிக்கச்சுன்சிறக்கில்
ஓடேறுங்கையானெருகாசுபோதானே. (977)

சந்த்ரசுகன்மோக்ஷத்தலைவனென்றியெட்டடைய
அந்தவிதிநோயடையவாறேன்கதிக்கேற
வந்தவினையோனுலகோர்வாந்திசெய்யப்பேர்பூட்டி
யந்தரங்கத்தேகடவுட்காளாயிருப்பானே. (978)

நீசமனைக்குனிலாவிரைப்பாம்புசனி
நேசமொடுநோக்கநெறியோரொதுங்கிவிடப்
பாசமாயிந்தப்பதவிபெற்றுவந்தமகன்
காசுபெறுனுகிக்கடுங்குணனுய்க்காய்வானே (979)

சாமிபகையேறத்தைரியனுமீற்றேனு
நேமிநட்புற்றீங்கொருவனீசமனைக்கடையத்
தோமில்குருசற்றேனுந்தோன்றப்பாராதுவிட்டாற்
பூமிமிசைவந்தோன்புலைக்குணத்துப்புல்லியனே. (980)

எட்டோன்சுகனேடிகலடைந்துமூன்றிலுற
வொட்டாப்பகையரசனுய்த்துவியத்துநிற்கக்
கெட்டோர்தைரியத்திற்கிட்டிநிற்கவந்தமகன்
றிட்டாந்தங்கூறிற்சிறுநெருப்பையொப்பானே. (981)

புல்லோர்சுகத்திற்புலையடையவப்பதியோன்
பொல்லாப்பகையேறப்போர்த்தீரன்கண்ணேக்க
நல்லோர்கண்ணேக்கமறஞாலத்தேவந்தமகன்
எல்லாப்பொருளுமிழந்தலைவானென்பாரே. (982)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

எட்டோன்கண்ணேக்கமந்த வீச்சுரகண்மன்மதனைச்
சுட்டாலெனச்சுகனைச் சுட்டுவிடமூன்றிலவன்
கெட்டோடிநீசக் கிணற்றில்விழக்கிட்டுமகன்
சுட்டாலுநல்லோர் துறைமிதியாத்துர்க்குணனே. (983)

புண்ணியவான்மோக்ஷம் புகுதவியத்தோன்சுகத்தே
நண்ணியிருக்கத்தீர னந்துபகையேறத்
தண்ணியர்நோக்கந் தலைக்கடைந்தாலன்றியிவன்
பண்ணியதாய்தந்தைசெய்த பாவமுருக்கொண்டவனே. ()

புறனடை

சொல்லிவந்ததீமை தொலைக்கும்புறனடையொன்
றெல்லவுரைப்பமிகீ துண்மையுண்மையுண்மையுண்மை
வல்லகுருசாமி மலர்விழிகீர்த்திக்கடைந்தாற்
சொல்லிவந்ததோஷந் தொலைந்துபுகழோங்கிடுமே. ()

பூரண வாயுள்

ஆயுட்காரகற்கொருநான்கிடத்திலெட்டோ
னச்சனிக்கிரண்டில்மதியமரவெட்டோன்
தாயொப்பாநட்படைந்துதலையைநோக்கிற்
சாகாமலிருப்பனென்றுஞ்சாற்றவுண்டே
வாயப்போய்மூன்றில்விதிநிற்கப்பக்கம்
மருவியிருகுருமாரும்வாழச்சோமன்
தூயப்பாலவெள்ளிக்கோரேழில்வாழிற்
றெண்ணூறுவயதெனவேசொல்லலாமே. (986)

பூர்ணுயுள்

செங்கதிரோன்றிருமகற்குநாலிற்பானு
சேயிருவரின்றிமதிசகடத்தின்றி
மங்கியறுபலமின்றிவியன்வாக்கோனிம்
மன்னர்சுபராகிலிவன்வயதுபூர்ணம்
துங்கமுறுகேந்த்ரரெல்லாங்கோணமேறச்
சுன்னிடத்திற்பாபரின்றித்துலங்கக்கண்டால்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

புங்கமுறுசாதகற்குவயது நூறு
புகலலாமென்றுமுன்னோர்புகன்றவாறே. (987)

இதுவுமது

செவ்வாய்நற்சனிமுகத்தைப்பாரானுகத்
திருக்குருவின்கருணைவிழிசனிக்குச்சேரத்
தெவ்வோடுமூன்றவனுமுடியினானுஞ்
சேர்ந்துநல்லோர்மனைக்கிருக்கத்திரியோனட்பேல்
இவ்வாறுகிடைத்தவற்குவயதுநூறே
எட்டிறைவன்மதிசுபாமிசத்தேநிற்க
அவ்வானமதிவிதியோனின்றராசிக்
காதிபர்கள்வலுத்தேறிலாயுள்நூறே. (988)

இதுவுமது

மதிசனிக்கெட்டிடைப்புலவனறிவனிற்க
வாய்த்தவிதிநாதன்வியமன்னவேழ்நால்
துதிபொறுத்தநல்லவர்களிருக்கத்தீயர்
தூரநிற்கிலிவன்வயதுதொண்ணூறென்ப
விதியிறைவற்கிருபுறமூந்தூயர்வாழ
மேற்கோளுக்கேழ்நாளில்வெள்ளிசெம்பொன்
பதியுறநன்மதிரவிக்குவியத்துவாழ்ந்தால்
பல்லாண்டுநூறெனவேபாடலாமே. (989)

பூரண வாயுள்

நல்லாயுட்காரகன்கேந்திரத்துவான
நாயகனூர்திரிகோணநயத்துவாழ
வல்லாயுட்பதிமதிசுக்கிரனிம்மூவர்
வானவர்கோன்கேந்திரத்துமலைக்கோணத்துஞ்
சொல்லாயுட்காரகனதாதாயத்துஞ்
சோதரகாரகன்கோணத்துங்கண்டாலிவ்
வுல்லாசநடையுடையானேய்க்காடின்றி
யொருநூறுவயதிருப்பனுண்மைதானே. (990)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இதுவுமது

ஆயுட்காரகனுயுட்கீசனுகி
யட்டமத்துக்கட்டமத்தேயமரவந்த
ஆயுட்காரகற்கிருபானல்லோர்வாழ
வணிமுடியினிருபுறமூநல்லோர்காக்க
ஆயுட்கோர்சஞ்சீவியாகிவானத்
தரசுபத்திற்கேந்திரிக்கவநிட்டம்வாய்த்தோன்
ஆயுட்காலங்களெல்லாநோயில்லாம
லாக்ஷேபமின்றிநூறுண்டுவாழ்வான் (991)

இதுவுமது

ஒருமலையிலிருகுருவுமதியும்வாழ
வோரெட்டோனிலாபனுடனுட்சியூன்றப்
பருமலைபோலாயுட்காரகனுயுட்குப்
பதிலாப ாாமனையிற்பதிந்துவாழத்
திருமலைக்குத்தைரியத்தேபாக்யநாதன்
சிறந்திருக்கக்கிடைத்துவந்தசெல்வக்காளை
பெருமலைபோலொருநூறுவயதுவாழ்ந்து
பேரன்மக்கள்காணமுத்திபெறுவன்மாதோ. (992)

இதுவுமது

அட்டமத்திலிலாபத்தான்பாக்யன்வாழ
வாயுட்காரகன்குருகோணத்துவாழ
இட்டகருமாதிபதிகேந்த்ரம்வாழ
வெட்டாறுக்குடையர்வெள்ளிக்கிலாபம்வாழச்
சிட்டர்குருசுககேந்திரத்தாட்சிவாழச்
சிறப்படைந்துபுவியில்வந்தசெல்வக்காளை
திட்டமாயெண்பத்தேழாண்டின்மேலே
செல்வமக்கள்காணமுத்திசேர்வன்காணே. (993)

இதுவுமது

ஆயுட்காரகனுயுட்கீசனுகி
யணிசுகலாபத்தனெடுங்கும்பனேடும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

போயுட்கேந்திரத்திருக்கவாயுள்வீட்டிற்
புதனிருக்கக்கேந்த்ரமதிப்புத்தேள்வாழத்
தாயொப்பாமிலாபபதிகோணமேவத்
தைரியத்தேகுருவாழத்தலத்துவந்தோன்
மாயப்போர்நோய்க்கணுகானுய்த்தொண்ணூறு
வயதிருந்துசிவன்பாதமலர்சேர்வானே. (994)

பூர்ணயுள்

அட்டமத்துக்கட்டமத்தேயாயுட்கார
காதிபதிநிற்கவந்தவட்டமேசற்
கொட்டிபிருபுறத்திலுநல்லோர்கணிற்க
வுயர்தலையினிருபுறமுத்தமரேவாழ
அட்டமந்தான்குருசாமிக்கிலாபமாக
வடித்தலத்தோன்கேந்திரத்தேயமர்ந்துவாழத்
துட்டர்கள்கேந்திரத்தலத்தேநிற்பாராகிற்
றெண்ணூறுவயதிவற்குச்சொல்லலாமே. (995)

இதுவுமது

சனிமதிக்கெட்டவன்சந்த்ரம்கேந்த்ரவாழத்
தலைமலைக்கிலாபத்தேசான்றேன்வாழப்
பனிமதியின்கேந்திரத்தாதாயன்வாழப்
பகருமட்டமேசன்வியத்தானம்பாயக்
கனிமதியிலாத்தீயர்கேந்த்ரமேவக்
கண்டசாதகன்வயதுகணக்கிடேடே
இனிமதிப்பாறுறெனலாமெனிலுங்காலன்
எண்பத்தேழாண்டினுக்குள்ளதிர்தோன்றுனே. 996

இதுவுமது

அட்டமத்தானதிபதியாட்சிமேவ
வாயுட்காரகன்கேந்திரத்தேவாழ
வட்டமதியிலாபத்தேயாட்சிமேவ
மலைக்கரசுகேந்திரத்தேமகிழ்ந்துவாழத்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

துட்டர்களுக்குடன் றுணையாத்தூயோர்நிற்கச்
சுரர்குருகோணத்தலத்தேதுலங்கிநிற்க
இட்டுவந்தஜாதகற்குவயதுகூறில்
எண்பத்துமூன்றெனவேயிசைக்கலாமால். (997)

இதுவுமது

இலக்கினத்தேயிருகுருவுமிருந்துவாழ
வெழிற்கருமனல்லாரோடிசைந்துவாழக்
கலக்குசனிசட்டாட்டவியத்தேநிற்கக்
கடியசட்டாட்டவிரயத்தோர்சுபராய்க்காக்கத்
துலக்குவியன்றைறரியத்தேயிருந்துவாழச்
சுகிர்தநயம்பெற்றுவந்துதோன்றுங்காலை
நிலக்கினியனுயிருந்துதொண்ணூறுண்டி
னிருமலசைதன்யசுகநிரம்புவானே. (998)

இதுவுமது

எட்டவன்சொச்சேத்திரத்திலிருந்துவாழ
வினியசனியாட்சியுச்சங்கேந்த்ரமேறத்
துட்டரல்லாருட்கடைக்கண்டோயக்கண்டாற்
சொல்லலாமிவன்வயதுதொண்ணூறென்றே
எட்டவனுக்கிருபுறமுஞ்சுபர்கள்வாழ
வெழிலாயுட்காரகனுந்திரமேறத்
தொட்டவிரண்டேழுடையார்நட்பிற்கூடச்
சொல்லலாமிவன்வயதுமுழுநூறென்றே. (999)

இதுவுமது

மூன்றவனுமெட்டவனுமாட்சிமேவ
முழுதுநல்லோர்கருணைவிழிமோதவெள்ளித்
தோன்றியமாமலையுதிக்கநல்லோர்பார்க்கிற்
சொல்லுமிவன்பெறுவயதுதொண்ணூறுமே
ஊன்றும்விதியிரண்டில்வரச்சத்தமேசன்
உதயமுடிக்குதிக்கவொன்பான்வீட்டின்மிக்க

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வான்றவர்களிருக்கவிதிக்கரசைப்பார்ப்பா
னருள்விழித்தாலிம்மகவுக்காயுணூறே. (1000)

இதுவுமது

எட்டோனுமாறேனும்வியத்துவாழ
விலக்கினத்திற்குருவுசனனிருக்கக்கண்டால்
தட்டாமல்வயதுநூறென்றேசொல்வர்
சந்திரனுசனற்கேழிற்றழைக்கப்பொன்னேற்
குட்டேறசத்தமத்தான்சுகத்தில்வாழ
வுயர்சவுரிநட்பேறப்பாவர்கூட்டங்
கெட்டோடவிதிநோக்கங்கிடைத்தகாளைக்
கேடிலாப்பூரணனுய்க்கிளத்தலாமே. (1001)

இதுவுமது

முடிமனையிற்பகையிறந்துசுபர்கள்வாழ
முழுக்குருவும்விதியவனுமுகத்திலேற
வடிவுமதிவிதியோனைக்கடைக்கணோக்க
மங்களஜாதகன்றனக்குவயதுநூறே
கெடிபொறுத்தசனிவிதியோன்மதியோடொன்றேன்
கிளத்துமொருநால்வருச்சமாட்சிபெற்றால்
படியிலிவனூறுண்டுசெல்வத்தோடும்
பசந்திருப்பானென்றுமுன்னோர்பகர்ந்தவாறே. ()

இதுவுமது

அட்டமத்தோனுயுட்காரகனுங்கூடி
யழகியகேந்திரத்திருந்க்கோணமீது
வட்டமதியிருக்கவிலக்கினத்தின்மீது
வானவர்கோனிலைத்திருக்கமலைக்கிராசன்
இட்டதிரிகோணமாளிகைக்கேவாழ
வீராறேன்சட்டாட்டவிரையமேவ
இட்டுவந்தசாதகனேரெழுபதாண்டி
லின்பசுகமோக்ஷநிலைக்கெய்துவானே. (1003)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இதுவுமது

எட்டுடையோன் றிரிகோணபீடமேற
ஈராறேனாட்சிபெறவிலக்கினேசன்
றெட்டவிலக்கினமலையிற்காணிகாக்கச்
சுகிர்தவுயிர்க்காரகனுர்மோக்ஷந்தோய
வட்டமதிகேந்திரிக்கக்கிடைத்தகாலை
மண்ணிடத்திலோரெழுபான்வயதுவாழ்ந்து
விட்டுலகபாசபந்தங்கடந்துபோகி
மீண்டுவராமோட்சகதிமேவுவானே. (1004)

இதுவுமது

உயிர்க்கிறையுமட்டமனுமொருவனுகி
யோரேழிற்கேந்திரிக்கவிரையநாதன்
செயிர்த்தவட்டமத்திருக்கத்தன்னிலாபன்
சேர்ந்துகண்டகோணத்தேசெறிந்துவாழப்
பயிர்க்கெழுந்தமழைமுகில்போற்றைர்யவீட்டிற்
பண்ணவர்கள்குருவிருந்துசனியைப்பார்க்க
வுயிர்த்தெழுந்தசாதகனேரறுபதாண்டில்
உயர்பதிக்கெழுந்திருப்பானுண்மைதானே. (1005)

இதுவுமது

ஆயுளிறைகுருகோணத்திருக்கவெட்டோன்
அவ்விரையனெடுகூடியாறில்வாழத்
தூயபுகரட்டமத்தேதுலங்கநான்கிற்
சுகிர்தகுருகேந்திரிக்கக்கருமத்தோன்றல்
நேயமொடுகேந்திரிக்கக்கிடைத்தகாலை
நீணிலத்திநெடுங்காலநிலைத்துவாழ்ந்து
வாயுமெழுபத்தாண்டிற்சடத்தைநீக்கி
வானவரோடுடன்கூடிவாழ்வன்காணே. (1006)

இதுவுமது

உயிர்க்கிறைவன்கேந்திரத்தேயிருந்துவாழ
வுயிர்த்தலத்தோன்கருமத்தேயுவந்துவாழ

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வயிர்த்தவட்டமந்தனிலேவிரையன்வாழ
மதிகுருவோராறிடத்தேமகிழ்ந்துவாழச்
செயிர்த்தவிடப்பாம்பிரண்டிலெட்டில்வாழச்
சென்மமெடுத்துலகின்வந்தசெல்வக்காளை
அயிர்ப்பிலறுபத்தாறுண்டிருந்துவானத்
தமரர்பதிக்கெழுந்திருப்பானறுதிதானே. (1007)

இதுவுமது

நல்லவர்கள்விதிக்கிருக்கச்சனியனட்பி
னண்ணவெட்டோனிரண்டோனுஞ்சுகத்தில்வாழ
வல்லகுருகண்விழிக்கக்கிடைத்தகாளை
வயதெண்பத்தாறுபெற்றுவாழ்வானென்பச்
சொல்லுசனிக்கிருபுறத்துஞ்சுபரேவாழத்
தூயசனிக்காறிடத்துஞ்சுபரேநிற்க
வெல்லும்விதியாட்சிபெறக்குருநால்வாழ
விதிகிடைத்தோன்றெண்ணூறில்விளிவன்காணே.

இதுவுமது

அட்டமத்தோற்கீராறினிலவுவாழ
வந்தனுக்காறிடத்தில்வெள்ளிநட்பினுகைக்
கட்டமிலாக்குருகாதன்கருணைவாய்த்த
காளையெண்பத்தெட்டாண்டுகனிந்துவாழ்வன்
அட்டமன்விரையனுரேனுமூவர்
அவரவரும்நாற்குநாலமரத்தூயர்
இட்டவருணேக்கடையக்கிடைத்தகாளை
யெண்பத்துமூன்றுண்டிவிறப்பன்காணே. (1009)

இதுவுமது

விதிக்குவிதியோன்கிரியோன்கருமமேவ
வேதவேதியன்மூன்றில்விளைந்துதோன்ற
மதித்தசனியட்டமனுங்காணிகாக்க
வந்தமகன்றெண்ணூறுவயதிற்சாவன்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மதிக்கடவுள்வலுக்கவிதிநல்லோர்கூட்டில்
வாய்த்திருக்கச்சுபத்தலத்தின்மந்தன்வாழப்
பதிக்கிறைவனுட்சிபெறக்கிடைத்தகாலே
படைத்தவயதொருநூறுபாடுவோமே. (1010)

இதுவுமது

பாவரெல்லாம்வலிகுறையநல்லோரோங்கப்
பரிதிமகன்தந்தைதாய்ப்பதியோனுக
மேவுசட்டாட்டவிரையங்கள்சுபர்வீடாக
வியாழபகவான்கருணைவிழிபெற்ருனேத்
தேவரெல்லாங்காலனுக்கேசகாயராகிச்
சினந்தாலுநூருண்டுசென்ருலன்றிக்
கேவலமாயுயிர்விடுமோவிடிவிந்நூலேக்
கிழித்தெறிந்துவிடுவார்த்தைகெட்டிதானே. (1011)

இதுவுமது

தலேக்கிறைவன்கேந்திரிக்கவட்டமேசன்
சந்த்ரசுக்ரசங்கமனுப்கோணமேவப்
பலத்தகுருவாதாயத்திருந்தேயாயுட்
பதிகளிருவர்க்குமருட்பார்வைதாவ
வலுத்தபிணித்தானத்தேவிரையநாதன்
வைத்தியனுய்வந்திருக்கவாய்த்தகாலே
நிலேத்துலகிற்ருெண்ணூறுவயதுவாழ்ந்து
நெறியினின்றுபரமபதநேர்வன்காணே. (1012)

இதுவுமது

தைரியத்திற்சனியிருக்கச்சந்த்ரகேந்த்ரந்
தலேக்கடையமுழுச்சுபனுதாயமேவச்
செயிர்படைத்தவெட்டாறுக்குடையோர்நல்ல
தேவராய்வாய்த்திருக்கக்குருகோணத்தி
லுயிர்படைத்துப்புவியில்வந்தசெல்வக்காலே
யொருநூறுவயதிருந்துமோட்சவீட்டிற்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பயிர்படைத்தவேளாளனுகித்தூயப்
பரமபதமடைவனென்றுபாடலாமே. (1013)

இதுவுமது

ஒருகுருகேந்திரத்திருக்கவவன்கோணத்தி
லுயிர்க்கிறைவரிருக்கமலைக்குடையோன்கோணம்
பெருகுறநல்லமுதமதிபிணிக்குவாய்க்கப்
பெரியமோட்சாதிபதிசுகத்திற்பின்னக்
குருகருணைதலைக்கடையக்கிடைத்தகாலை
குலவியொருநூறுண்டுகுறித்துவாழ்ந்து
திருமகணுயகன்கருணைக்கருகனுகித்
தேவபதிசேர்வனெனச்செப்பலாமே. (1014)

இதுவுமது

கேந்திரத்திற்குருவிருந்துசனியைப்பார்க்கக்
கெடிபொறுத்தவட்டமத்தோன்கேந்த்ரகோணஞ்
சாந்தகுணனுயிருக்கத்தைர்யதானஞ்
சந்திரனுமிரண்டவனுஞ்சார்ந்துவாழப்
போந்துலகில்வந்துதித்தகாலையாண்டும்
புனிதனுய்த்தொண்ணூறுவயதுவாழ்ந்து
நீந்தரியமோட்சபதநெறியைச்சார்ந்து
நிலையடைவானென்றுறுதிநிகழ்த்தலாமே. (1015)

இதுவுமது

புண்ணூறுபிணுக்கதிபன்மதியினேடு
புகுந்தாட்சியட்டமனைப்பொருந்திவாழ
விண்ணூறுமோட்சபதியறிவனேடும்
வெற்றியொடுங்கருமத்தேமேவிவாழத்
தண்ணூறுமலைக்கிறையாதாயம்வாழத்
தவம்புரிந்துவந்தமகன்றரணிமீது
தொண்ணூறுவயதிருந்துவாழ்ந்துபின்பு
சொர்க்கபதமடைவனென்றுசொல்லலாமே. (1016)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இதுவுமது

உரைத்ததெல்லாம்மெய்யேயாம்பொய்யொன் றில்லை
உயிர்த்திசையுமுடற்றிசையும்விரோதமாகி
நிறைத்தவராய்மரணம்வந்துநேர்ந்திட்டாலும்
நிறைவயதோராறுபதுக்குணீங்கார்நீங்கார்
நரைத்தவறுபதுவயதுகடந்துவாழ்ந்தால்
நானிலத்தினிறைவயதாய்நாட்டிகந்து
அரைத்தரமாயைம்பதுக்குளிறப்போரெல்லா
மற்பவயதாளரென்பாரறிவினோரே. (1017)

மண்புதல்வன்புதன்றலத்திலிருக்கவெள்ளி
மதிதலத்திலிருக்கவுயிர்வளர்ப்போனுட்சித்
தண்பதுமகேந்திரத்திற்றுயாய்நிற்கச்
சந்திரனுங்குருவுமமுதத்தினோடும்
பண்புதெரிவைத்தியனுமாய்நோய்வீட்டிற்
பதிந்திருக்கப்புந்தியெட்டிற்பலித்தபாலன்
எண்பதுசம்வற்சரம்வாழ்ந்தரனார்பாத [னே.
விணைமலரைத்துணையெனச்சேர்ந்திருப்பன்மன்

இரண்டாம் பாவகம்

குரு வணக்கம்

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

இந்திரதருவாய்ந்தோங்கு மேரகப்பதியில்வாழ்வோன்
விந்தைவாழ்புயத்தோனை வீரப்பமுகிலின் பூந்தாள்
சொந்தமாய்ப்பணிந்துபோற்றிச் சொல்லவேயிரண்டாம்பாகம்
சந்ததங்கலைவலாளென் றுலத்துவசிக்கின்றாளே. (1019)

இரண்டதைநோக்கியாரு மெண்ணியகருமஞ்சொல்லத்
திரந்தரும்வாக்குவித்தை சிறந்தநற்றனங்கணேத்ரந்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

தரம்பெருங்குடும்பமியோகஞ் சாற்றியமணங்கள்யாவுங்
கரந்திடுமரணமற்றுங் காட்டுவோங்கேட்டுவாவே. (1020)

தன பலன்

பாக்கியன்றனவான்கூடிப் பசந்தகேந்திரத்திற்பாய
நோக்கியேமேருச்சாமி நுணித்தருள்செய்வானுகிற்
றூக்கியேசிறிதுகாலந் துன்பமூற்றுப்பானல்ல
யோக்கியதனவானுவன் யுகாந்தவாழ்வுடையனென்னே. ()

தலைக்கிறைலாபசாமி தனபதிமூவர்தாந்தாம்
நிலைக்குறுகோணகேந்த்ர நெறியிடைவாழ்வரேனும்
பலத்தனத்திலாபனேறப் பாக்கியத்திரண்டோன்பற்ற
வலுத்தபாக்கியன்காணிக்கே வாழினுந்தனவானுவர். (1022)

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

ஆட்சிபெற்றசாமியதின்றனவான்கூட
வறிவனிதிக்கிருக்கவெள்ளையவனைநோக்கக்
காட்சிபெற்றகுருகருணைமலைக்குவாய்த்த
காளையுமூன்றிறையிரண்டோன்கலந்துகூடி
மாட்சிபெற்றபாக்கியத்திநிற்கப்பொன்னோன்
மலைக்கிருந்துகடைக்கணருள்வழங்கினுலும்
நீட்சிபெற்றதனமோங்கிநிலைத்துவாழ்வர்
நிதிபதியென்றொருநாமநிலைப்பார்காணே. (1023)

தனபாக்யபதிமலையோன்விரையன்மூவர்
தலைமலையில்வீற்றிருக்கச்சந்த்ரசாமி
சொனபாக்யத்துறைந்தாரேன்வதனம்பார்க்கச்
சோதரனிலாபத்தேதுலங்கிவாழ
நினைவாக்கம்பெருகுகுருகேந்த்ரமேறி
நின்றுதனசுகவீட்டைநெடிதுபார்த்தாற்
கனபாக்யபதியாகிச்சதுரங்காதி
காவலனுயுலகமெல்லாங்கமழ்வான்காணே. (1024)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

தனபதியுமூன்றவனுந்தலத்துவாழத்
தனத்திறையும்புத்திரனுந்தலத்துவாழச்
சினமறுபாக்யாதிபதிகுருபார்வைக்குட்
செழித்திருக்கக்கிடைத்தமகன்செல்வவானே
தனபதியேதலத்திருக்கத்தலத்துநாதன்
றனிச்சுகத்திலிருந்திடமால்சந்த்ரனேடு
சினமறுகேந்திரத்திருக்கக்கிடைத்தகாளை
செல்வவானெனத்துணிந்துசெப்பலாமே. (1025)

தனபாக்யன்சந்திரற்குத்தனத்தில்வாழச்
சத்தமசுகாதிபதிதலையில்வாழச்
சொனபாக்யன்கேந்திரத்திற்றலைவன்வாழச்
சொற்பெரியதைரியன்சத்தமத்தேதோய
இனபாக்யம்படைத்துவந்தசெல்வக்காளை
யின்பாதிமனைவியெனவிசைந்துவாழ்வன்
கனபாக்யபதியெனவேகொடையாலோங்கிக்
காசினியிற்பரிமளிப்பன்கண்டுதேரே. (1026)

பாக்யபதிகாரியத்தேபதிந்துவாழப்
பருந்தனவானிலக்கினத்தேபடர்ந்துநிற்கக்
காக்குமுடியரசுகேந்திரத்தேநிற்கக்
கனசுகத்தோன்விரையத்தேகலந்துநிற்கத்
தூக்கியலக்கினத்திரண்டுபாலுநல்லோர்
சூழ்ந்துநிற்கக்கிடைத்தமகன்றுயரிலானய்
யோக்கியனுத்தனவானுயிருப்பானயத்
தூறவிரையஞ்சமமெனவுமுரைக்கலாமே. (1027)

தனபதியுஞ்சந்திரனும்விரையமேவச்
சத்தமத்தோன்றைரியத்தேசார்ந்துவாழக்
கனமூறுபாக்யாதிபதிகுருகோணத்தே
கலந்துநிற்கக்குருலாபங்கதித்துவாழச்
சொனலாபாதிபதியைசுவரியனேடு
சுகப்பதியிற்கலக்கவந்துதோன்றுங்காளை
வினவுறிற்பாக்கியனெனவேசொல்லாஞ்செம்பொன்
விரையமிட்டுப்புகழ்படைத்துவிளங்குவானே. (1028)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

குடும்பபதிசுகலாபனேடுகூடிக்
குலவியகேந்திரத்திருக்கப்பாக்யகோமான்
நெடும்பற்ருந்தைரியத்தேயிருக்கப்பாக்ய
நிலத்திடைக்காரியப்பதியோனின்றுவாழப்
படும்பற்பாம்பொடுசுகத்தேமதியநிற்கப்
பதங்கிடைத்துவந்தமகன்பாக்யவானுய்க்
கொடும்பற்ருர்க்காளரியாயிருந்துவாழ்வன்
குன்ருதவாழ்வனெனக்கூறலாமே. (1029)

பாக்கியவானுட்சிபெற்றகதிரோனேடும்
பனிமதியினெடும்வாழப்பத்திலாட்சி
யோக்யமுறும்புகருடனேகுருசேய்வாழ
வுயர்லாபத்திடைத்தலேவனேங்கிவாழ
ஆக்குதனத்தைஸ்வரியன்வாழவாய்த்த
வதிட்டமுளான்தனகனவானுகியாண்டு
நீக்கமிலாநன்செய்புன்செய்நிலத்தினேடு
நெடுவாழ்வுவாழ்வனெனநிலேக்கலாமே. (1030)

நாலவனுமிரண்டவனுமலேயிலேற
நாலிலேநிதிபதிதானண்ணினுலும்
சீலமுறுசத்தமனனுந்தனுங்கூடிச்
செப்பியசத்தமத்தலத்தேசெழித்துவாழக்
கோலவெள்ளியாட்சிபெறவிவனுக்கேழோன்
குளிர்ந்தநட்புப்பெற்றிருக்கக்கூடினுலும்
பாலரிவரோரிருவரெந்நாளும்
பாக்கியவானுவரென்றுபாடுவோமே. (1031)

பாக்கியவான்குருகோணம்பலித்திலாபன்
பாங்கனுய்வாழ்வுறச்சத்தமகாமேசன்
யோக்கியகேந்திரத்துறலக்கினசுகேச
னுயர்ந்தசுகத்தானத்தேயோங்கிவாழக்
காக்குமதிகுருதைரியத்தில்வாழக்
காசினியிலவதரித்தகாளேயாண்டும்
ஆக்கியபாக்கியவானுயோக்யவானு
யழியாதவாழ்வுடையனுகிவாழ்வான். (1032)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

தனபதிகேந்திரத்திடையைஸ்வரியனேடுந்
தழைக்கநாலோன்பாக்யத்தானமேவச்
சினமறுசுக்கிரனுட்சிகிடைத்துச்சந்த்ர
தேவனெடுகோணமிசைச்சிறந்துவாழக்
கனகுருவாதாயத்தேகனிந்துவாழக்
கதித்ததவஞ்செய்துவந்தகாலையாண்டுந்
தனபதியாய்விளைநிலமும்பசுக்களோடுந்
தழைத்துலகில்வாழ்வனென்றுசாற்றலாமே. (1033)

தனத்திலேயைஸ்வரியன்றழைத்துவாழத்
தனபதிபாக்கியத்தலத்திற்றனித்துவாழக்
கனத்தசுகனுட்சிபெற்றுக்குருவாதாயக்
களத்திருந்துகுருச்சந்த்ரக்காட்சிகாண
முனர்த்தலைவன்காரியத்தேயிருந்துவாழ
முயன்றுலகிற்பிறந்தமகன்முழுதுநாளும்
தனத்திலேயுயர்ந்தவனுயிருந்துவாழ்வன்
சத்தியவானென்றிவனைச்சாற்றலாமே. (1034)

புண்ணியவான்றனவான்செங்கதிரோன்மூவர்
புனிதகண்டகோணமிசைப்பொருந்தவைந்தோன்
தண்ணியநன்னேக்கருளக்கிடைத்தகாலை
சன்மார்க்கபாக்கியவான்றனேயின்னுந்
திண்ணியநற்றனபதியுஞ்சுகனுங்கூடித்
திரிகோணகேந்திரத்தேசிறந்துவாழ்ந்தாற்
பண்ணியபாக்கியத்துதித்தகாலையாண்டும்
பாக்கியவானென்றுநிசம்பகரலாமே. (1035)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அவதன பாகம்

கலி விருத்தம்

தனனுநோயனுநீசஞ்சரித்திடச்
சினமுறுங்கொடுந்திங்கர்கண்பார்க்கவன்
மனம்வருந்தித்தன்மங்கைபொருட்டினாற்
றினமுங்காலஞ்செலுத்துவனென்பரே. (1036)

மதியும்பானுவும்வாக்கில்வந்திடப்
பதியுநோயிடைவாக்கிறைபற்றுறத்
துதிபொறுத்தபொன்னோன்வியந்தோய்ந்திடிற்
பதியிழந்துபதைத்துத்திரிவனே. (1037)

உச்சமாறவனிச்சயமாயுற
வொச்சமாய்த்தனனச்சுவியத்துறக்
கொச்சைவீரர்கண்கூடக்கிடைப்பனேற்
பிச்சையன்றிப்பிழைப்பொன்றுமில்லையே. (1038)

மேருநாதன்வியன்கடுங்காமிழுப்
பேருங்கூடிப்பெருத்தவிழிவிழச்
சீருள்ளார்கண்டிருட்டியுநீங்கினாற்
சேருஞ்செல்வங்களுவிலுஞ்சித்தியான். (1039)

சந்திரன்தனன்கூடத்தழலவன்
சுந்தரக்கண்டந்தோன்றத்தலைக்கிறை
வெந்துநீசம்விதியிடம்வீழ்வனேற்
கந்தையின்றிக்கலங்கிடுவானரோ. (1040)

சந்திரற்கிரண்டோனிரண்டாறினேன்
வந்தவாறவன்வாக்கவனுல்வரும்
வெந்தவெட்டிடைவீழக்கிடைத்தவன்
னெந்துகாலநுணுக்கத்திற்போக்குவான். (1041)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

விரித்தநல்லவர்தீப்பதிமேவிடப்
பருத்ததீயவர்நற்பதிபற்றுறக்
கரித்தசாவகன்கண்ணெதிர்நோக்கினற்
றரித்திரத்திற்றரித்திரனுவனே. (1042)

வாக்கு வளம்

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

தலையரசுநாலவனுங்குருவுநல்ல
தானத்தேகோணகேந்திரங்கள்சார
நிலவுவெள்ளிபுதனிவரிலொருவர்வாக்கி
னின்றிடிற்சோதிடவானுநெடியபொன்னேன்
இலகுதிருகேந்திரத்திலிருக்கவெள்ளி
யிலங்குசுகத்திருக்கமால்கோணமேற
நிலவுபுதன்வாக்கிலுறக்கிடைத்தகாளை
நீணிலத்திற்சோதிடத்திநிபுணனுவான். (1043)

இதுவுமது

குருகோணத்திருக்கவெள்ளிகுருவின்கேந்த்ரங்
கூடிநிற்கப்புதன்கேந்த்ரங்குலவிவாழக்
குருகேந்த்ரத்திடைமதியம்ஞானியோடு
கூடிநிற்கக்கிடைத்துவந்தகுணவான்யாண்டும்
பெருகோகையிலக்கணநூலிலக்கியாதி
பெருநூலும்வாகடசோதிடங்கள்யாவும்
தருகோடைமழைபோலத்தருவானுகித்
தமிழ்ப்புலவனெனப்பெரும்பேர்தழைப்பன்கானே.

இதுவுமது

தலையிலேகுருவிருக்கப்புதனுர்பாக்யத்
தானத்தேவீற்றிருக்கப்புதற்குப்பத்திற்
கலையிலேசிறந்தபுகரிருக்கப்பெற்றேன்
காவியநூலுணர்ச்சியுளான்கனிந்தவாக்கி

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

நிலையிலேசுகநிலைக்கட்புகரோன்மின்ன
நெடுமாலுந்தைரியத்தேநிற்கப்பார்ப்பான்
சிலையிலேபிறந்தவற்காதாயத்தானஞ்
சேரநல்லவாக்குவளஞ்சிறப்பன்காணே. (1045)

இதுவுமது

வாக்கிலேபுதனிருக்கக்கோணமாடம்
வானவர்தங்குருவிருந்துவாழநாவிற்
றேக்கமுதகதிரோன்வாழ்ந்திருக்கப்பெற்றத்
திருவாளன்புலவருக்குச்சீமானுவன்
வாக்கிறைவன்மலைத்தலையில்வாழவேழில்
மதிபுதனும்பொன்னவன்கண்வலுப்பெற்றேறப்
பாக்கியஞ்செய்துலகில்வந்தகாளைசெல்வப்
பண்டிதனுய்ப்பலசுகமும்படைப்பன்காணே. (1046)

இதுவுமது

வாக்கரசுதலைக்கிருக்கமதிமால்கேந்த்ர
மன்னிநிற்கச்சுகத்தரசுலாபம்வாழக்
காக்குமறிவாளன்கேந்திரம்பெற்றேங்கக்
காப்பியன்சேய்தைரியத்தேகலந்துவாழப்
பாக்கியஞ்செய்துலகில்வந்தசெல்வப்பாலன்
பலபாஷைப்பண்டிதனுய்ப்பாக்யமான
மாக்கடலிற்பள்ளிகொண்டதிருமால்போல
வாழ்ந்திருப்பனெனத்தெளிவாய்வழுத்தலாமே. ()

இதுவுமது

வாக்கிடத்திற்புதனிருக்கவாக்குநாதன்
மலைக்கிருக்கச்சுகத்திலேமதியம்வாழ
மாக்குருகாரியத்திருக்கவவற்குமூன்றில்
மழைக்குநாயகனிருக்கவந்தகாளை
யோக்கியவாக்குடையவனுய்க்கல்விமானு
பூகனுமாயோகனுமாயுகந்துபூவிற்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

றேக்கமழுங்கவிதைமழைபொழியுஞானச்
சீரூதமாயிருந்துசெழிப்பன்காணே. (1048)

இதுவுமது

தலையரசுதலைக்கிருக்கவாக்கிற்புந்தி
தழைத்திருக்கச்சுகத்தில்மதிதனித்துவாழ
நிலைமைதருகுருகோணமாடமேவி
நெடுங்கிரியைக்கண்ணுேக்கநிலைத்தமைந்தன்
கலையறிவிலகத்தியனுய்த்தேனும்பாலுங்
கலந்திமயமூகட்டிடைப்பெய்கனமேபோல
மலைதனுவாக்கொண்டசிவபெருமானருட்கு
வளந்திருந்துமுத்திநிலைவாய்ப்பன்காணே. (1049)

இதுவுமது

வாக்கிலேகுருவிருக்கவாக்குநாதன்
வானகுருநோக்கருளில்வாழக்கல்விக்
காக்கமருள்பண்டிதனுர்குருவாதாயத்
தமரவளர்கவிதலைமேலமர்ந்துவாழ
யோக்கியபாக்கியம்படைத்துப்பிறந்தோன்கல்வி
யூகனுயோகனுயுத்திமானுய்
நீக்கரியசத்தியநன்னிலையுள்ளானுய்
நீணிலத்துவாழ்வனென்றுநிலைக்கலாமே. (1050)

இதுவுமது

தலையிடத்துக்குருபுகர்சந்திரனும்வாழத்
தைரியத்தேபுதனிருந்துதழைக்கவாக்கு
நிலையிடத்திலறிவனுதாயன்வாழ
நிலத்துதித்தோன்கல்விநெறிநிபுணனென்பர்
கலையறிவன்புதகேந்த்ரத்திருக்கச்சோமன்
கவிஞனுடன்கோணமனைகலந்துவாழ
நிலைமைதருகுருலாபங்கிடைத்தமைந்த
னெடியகலையாராய்ச்சிநிரம்புவானே. (1051)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

குருவாக்கில்வாக்கிறைவன் குலவிவாழக்
குளிர்ந்தமதியவனோடுங்கூடிவாழப்
பெருவாக்குத்தருபுதன்றைரியத்துவாழப்
பிரபலபுண்ணியன்புதனைப்பின்னிவாழ
மருவாக்குஞ்சுகத்தவத்தேபுகரோன்வாழ
வந்தமகன்கல்விநெறிவரம்புதேர்ந்து
திருவாக்கிற்பிறந்தகவிமாலையீசன்
றிருவடிக்கேபுனைந்துசுகச்செயல்காண்பானே. ()

புகர்புதன்வாக்கிடத்தமையவிவரைஞானப்
புனிதகுருதிருவருட்கண்பூட்டினுலு
நிகரின்மதிபுகர்புலவன்வாக்கினிற்க
நெடியகுருவருணோக்கநீட்டினுலும்
பகரிரண்டுமூன்றுநான்கைந்தேழொன்பான்
பத்திவைகள்சுபராட்சிபரவினுலும்
புகலுமிவர்மூவர்களுங்கல்விமானைப்
புகழ்பெறுவரென்றுமுன்னோர்புகன்றவாறே.(1053)

சூரியனைவாக்கிறைவன்பார்க்கச்சேயைச்
சுரர்குருபார்த்திடக்கிடைத்தசுதனுஞ்சிந்தை
கூரியனையிலக்கினத்தான்பார்க்கக்காரி
குளிர்ந்தநட்புப்பெறக்கிடைத்தகுமரன்றானுஞ்
சீரியநற்புகருபயமேவநேரிற்
றிங்கள்புதன்குருவிருக்கச்செனித்தசேயும்
ஆரியநூல்செந்தமிழ்நூற்புலவராகி
யலர்தலைமாநிலம்புகழவணிசேர்வாரால். (1054)

இரண்டவனும்புகருமொன்றுகூடமாலோ
னெதிர்நோக்கக்கிடைத்தவனுமிரண்டோன்மாலோ
திரண்டொருவனுச்சமுறமலையிலாசான் [ன்
சேர்ந்துநிற்கக்கிடைத்தவொருசெல்வச்சேயும்
இருண்டநிறக்காமபதிகோணமேற
யசமானன்கேந்திரிக்கவிசைந்துள்ளானுங்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

தெருண்டவிலக்கணநன்னூற்றெளிந்தோராகிச்
செந்தமிழ்ப்பாவல்லவராய்ச்சிறந்துவாழ்வார்.(1055)

இதுவுமது

பண்டிதனும்வாக்கிறையுங்குருவுங்கோணம்
பதிந்திருக்கக்கிடைத்தவனும்பௌமனேடி
ரண்டிறையும்வாக்கிருத்தல்புதனேர்பார்க்க
ரமித்தவனுஞ்சேய்புதனிரண்டில்வாய்த்தல்
அண்டர்பிரான்மலர்விழியானேக்குங்காலத்
தமைந்தவனும்புதன்வாக்கிற்சேய்கோணத்தில்
மிண்டர்குருநிலைமேவக்கிடைத்துள்ளோனு
மேதினியிற்புலவனெனவெளிப்பட்டோனே.(1056)

இதுவுமது

மலர்வாக்கிற்புதன்செவ்வாய்கோணமாட
மழைக்கிறைவனுட்சிநிலைமதியேநட்பாய்ப்
பலர்வாக்கைத்துலக்குகுருநிதிக்கேநின்று
பகர்ந்தவொருநால்வரையும்பார்ப்பானுனல்
சிலர்வாக்குப்படியிரவிகீர்த்திசேரிற்
செனித்தமகனினித்புகழ்திகாந்தமன்றே
அலர்வாக்குமின்னுரைத்தனக்கேசொந்த
மாக்கியுயர்காவியங்களமைப்பான்காணே. (1057)

இதுவுமது

திரிகோணமாளிகையில்வானோர்போற்றுந்
தேவர்பிரானிருந்துமலர்த்திருக்கண்ணோக்கம்
விரிகோடைக்கதிரவனைப்புகரைச்சேயை
வெண்மதியையிலக்கினத்தைவிரும்பிப்பார்க்கக்
கரிகோணகேந்திரத்திற்பொருந்தவாய்த்த
காளையுலகுள்ளளவுங்கழியாக்கீர்த்திக்
கிரிகோட்டின்மணிவிளக்காய்ச்சிவன்முன்பாடற்
கிணைவிளக்குநிலைநிறுத்துங்கெடிபெற்றேனே. ( )

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இதுவுமது

ஐந்திலேகுருவிருந்துஞானவானை
யசுரகுருவைத்தலையையருளாநோக்கில்
வந்தமகன்ஞானவான்றவவான்கல்வி
மானெனவேதேனெனவேவழுத்தலாகும்
ஐந்திலேகுருவிருந்துகரியபாம்பை
யசுரர்குருவைத்தலையையருளாநோக்கில்
வந்தமகன்மேற்குறித்தவண்ணனேயாம்
வன்மனத்தன்சினத்தனெனவழுத்திக்காணே. ( )

இதுவுமது

தலையிலேகுருவிருந்துபுதனைவாலச்
சந்திரனைச்சுக்கிரனைத்தளிர்த்துநோக்கத்
தலைமனையுந்திரமனையேயானுலிந்தத்
தவமுடையோன்புலமையொடுதனவானுவன்
தலையிலேகுருவிருந்துஞானவானைச்
சந்திரனையறிவனைப்புதனைக்கண்ணுேக்கும்
நிலையிலேயுதித்தமகன்கல்விமானன்
னேயவான்றனவானன்னிலைமையோனே. (1060)

இதுவுமது

ஆதாயங்குருவிருந்துபுதனைவாலை
யவிர்மதியைமெய்ஞ்ஞானத்தவனைநோக்கில்
ஆதாயமாயுதித்தோன்கல்விகேள்விக்
கதிபதியாய்த்துதிபதியாயமைந்துவாழ்வன்
ஆதாயங்குருவிருந்துசோமனுசா
னலர்கதிரோன்சனிராகுவைவரார்க்கும்
ஆதாயங்கருணைசெயில்வந்தோன்கல்வி
யறிவுடையன்பொருளுடையனுவன்காணே. (1061)

இதுவுமது

ஆதாயங்குருவிருந்துபுதனைப்பார்க்கில்
ஆதிபதியைக்கருணையமுதலாட்டும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ஆதாயங்கிடைத்துவந்தோன் கல்விகேள்விக்
காசிரியபீடமெனவமைந்துவாழ்வன்
ஆதாயங்குருவிருந்துபுகர்மால்சந்த்ர
னழல்ஞானிதலைத்தலமிவ்வாறும்பார்க்கு
மாதாயம்பெற்றுவந்தோன்ஞானநூலுக்
காசிரியபீடமென்றேஅறையலாமால். (1062)

இதுவுமது

இலாபத்தேகுருவிருந்துபுதனைவானத்
தெரிகதிரையிளமதியையினிதுநோக்கில்
நிலாவப்பேரடைந்தகல்விநிலையனுகி
நிலநிலையுமுடையோனய்நெடிதுவாழ்வன்
இலாபத்தேகுருவிருந்துபுகரைச்சேயை
யிளநிலவைப்புதனைநெடிதினிதுநோக்கிற்
குலாவிப்பூவுலகில்வந்தோன்கலைகளாய
குலக்கடலைக்கடைந்தவடற்குன்றொப்பானே.(1063)

புறனடையங்கம்

வடித்தெடுத்துமேலுரைத்ததுண்மையேனும்
வழுத்துமந்தநாயகர்கள்வருக்கமேறித்
துடித்தசுபவர்க்காங்கிசங்களேறித்
தலங்கினற்பிடித்தபிடிதோலார்மாக்கள்
தடித்தவர்க்காங்கிசந்தளர்ந்துகலையுமானற்
சாதகருங்கல்விநிலைதளர்வரேனும்
படித்தவர்க்கமுயர்வோர்க்குத்தளர்வாரன்றிப்
பண்டிதராவதிற்றடையோபகருங்காலே. (1064)

புறனடையங்கம்

சொல்லியநன்னிலைமைகளிற்கிரகநாதர்
தோய்ந்துசிலர்தோயாதுதுரத்தோயிற்
சொல்லியநற்பலங்கள்பலதோய்ந்துங்கொஞ்சந்
தோஷமுமாய்நிற்குமிதிற்சொல்லார்வந்துச்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சொல்லியநற்றலங்களிலேநிற்பாராகிற்
ஸ்ரேஷமன்றுவேறுபலந்துலங்கித்தோன்றும்
வல்லியனற்குருதலையைந்தொன்பானுயம்
வரக்கிடைத்தாற்கல்விநிலைவலியர்தாமே. (1065)

கணித நூல் வளம்

நாலவனுந்தலையவனுங்கூடிக்கோண
நன்மனையில்வீற்றிருந்துவானோர்நாதன்
சீலவிழிகிடைத்தாலுந்தலையோனைந்திற்
செங்கதிரோருடனிருக்கத்தலையிலாசான்
கோலவிழிநேர்ந்தாலுமசுரர்தேவன்
குருவிழிக்கமறுவிழிதான்கொடுத்திட்டாலும்
பாலரிவரொருமூவர்கணிதநூலிற்
பண்டிதர்களாவரென்றுபகரலாமே. (1066)

வைத்திய வளம்

நாலிலேகுருவிருந்துசனியைப்பார்க்க
நல்லபுதனில்லக்கினத்தேநண்ணவாக்கிற்
சீலவெள்ளிசூரியனோடிருந்துசொன்ன
தீச்சனிமேலருணோக்கஞ்செழித்திட்டாலும்
நாலிலேசனியிருந்துசுக்ரகோண
நற்கோளின்கேந்த்ரவலிநண்ணினாலும்
பாலரிவரிருவரும்வாகடநூல்வல்ல
பண்டிதராவாரெனவேபாடலாமே. (1067)

விநோத வித்தியா வளம்

ஏழவனுமாறவனுநாலில்வாழ
விலக்கினத்தேபாம்பிருக்கவிசைந்துள்ளோனும்
வாழொளியோன்சந்திரனட்புச்சமேற
வாக்கிலேசுகன்கருமன்வந்துற்றேனும்
சூழுமலையோனுலோனிதியிலேறச்
சுடுநாகந்தொடர்ந்தேறப்புதனைந்தேறக்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கேமொழியதலையினின் றுகுருவேபார்க்கக்
கிடைத்தோனுவிநோதவித்தைக்கீர்த்திமானே. ()

கண்மயக்க வித்யா வளம்

இரண்டவனுநாலவனும்புதனுங்கூடி
யிருந்திதிக்கணே றவிதியொருவனுச்சந்
திரண்டொருவனுட்சிபெறக்கிடைத்துற்றோனுந்
திரிவீட்டில்விதிசுகனேய்த்தீரன்கூடத்
தெருண்டநிதியிடையிருந்தசெவ்வாய்நோக்கஞ்
சேருங்காற்பிறந்தவனுஞ்செகத்தோர்மெச்ச
மருண்டசிலவித்தைகளைத்தெரிந்துந்தத்த
மனத்திருத்தியடைதவிலாவாய்ப்பினரே. (1069)

சம்ப்ரதாய வித்யா வளம்

பத்திலேயிரண்டவனுஞ்சனியுஞ்சேயும்
பதிந்திருக்கக்குருநோக்கம்படைத்திலானுஞ்
சுத்தமதிக்கிரண்டவனுந்தனனுமேழிற்
றேயவருட்குருநோக்கந்துலங்கிலானுஞ்
சத்தமத்தேயிருக்கவிறைதயைசேரானும்
சால்புடனேபார்க்கவனும்சசியுஞ்சேர
ஒத்தவிவர்மூவர்களுஞ்சம்ப்ரதாய
வுபாயவித்தையாளரெனவுரைப்பர்முன்னோர். (1070)

வாக்கூனம்

குறம்

வாக்கிறையுஞ்சுக்கிரனும்பண்டிதனுங்கூடி
வன்பிணியிலிருக்கச்செம்பொன்மறைந்திருக்குமாகில்
வாக்கறியாமூங்கையெனவழுத்துவெனுனம்மே
வானவர்கோன்பார்வைபட்டும்வாயுளறும்பாராய்
ஆக்கிறைவெண்புகர்தாமனுறிலெட்டிலிருக்க
வட்டமனும்வாக்கவனுமந்தரத்தேதவிக்க

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வாக்கறியாவூமையென்பேன்குருபார்வைவாக்கில்
வாய்ந்திருந்துந்நோய்ந்திருந்தும்வாய்குளறுமம்மே. ()

இரண்டவனுங்குளிகனும்பன்னிரண்டுறையத்தலையி
லியமகண்டனுறத்தூமனிரண்டதனைநோக்க
மருண்டுவந்தோன்வாயூமையாவனடியம்மே
வாக்கிடத்திற்குருவிருந்தும்வாய்குளறும்பாராய்
இரண்டவனுந்தூமனுடனேமகண்டன்மூவ
ரெட்டிலுறக்குருபார்வையில்லையெனில்வாயூமை
தெருண்டகுருவாக்கிற்சிலவிசைவாயுளறுந்
திங்களும்வாக்கிடத்திருக்கிற்பங்கமிலவாக்கே.(1072)

ஊன நிவர்த்தி

சனிநாலிலிருக்கமலைத்தலனீசமடையச்
சந்திரற்குப்பத்திடத்தேவந்துவிதிதரிக்க
அரியாயவூமனெனவறைவனடியம்மே
ஆங்குரைத்தபடியவர்களப்படியேயிருக்க
இனிதானவைந்திடத்தேயிமையவர்கோனிருந்தா
லெவ்விதப்பீடையுந்தொலையுமித்துடனுயத்தே
பனிமதியம்ஞானியுடன்பதிந்திருப்பானுற்
பாரியகாவியங்களெல்லாம்பகருமிவன்வாக்கே.(1073)

இதுவுமது

பிணிவீட்டிற்சுக்கிரனும்பாம்புமொன்றுகூடிப்
பெருஞ்சனியனுதாயப்பேழையைக்கைப்பற்ற
மணிவீடுஞ்சூனியமேலூமையடியம்மே
வழுத்துமந்தநாயகரவ்வண்ணமிருந்திடவே
தணியாதமலைத்தலைபிற்சத்யகுருவிருக்கச்
சந்திரனும்பண்டிதனுஞ்சத்தமத்தில்வாய்த்தால்
கணிதாதியிலக்கணநூலாரியநூல்கற்ற
கவிஞனிவனென்றெடுத்துக்காட்டுவனனம்மே. ()

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இதுவுமது

புதன் சனிசூரியன் கூடிவிரையமனை புகுதப்
பூமகனுர் விதியடைந்தாலூமையடியம்மே
இதன்படியேயவரிருக்கப்புகர் தலேமேலேற
விரண்டிற்குருசெருண்டுநின்ருலிவன் றமிழிற்புலவ
மதம்பிடித்தசனித்தேவன்மதியினெடுங்கூடி [ன்
மண்டலத்தின் கடைக்கிருக்கில்வாய்குளறுமம்மே
கதந்துறந்தகுருலாபங்கதித்துநின்ருலிவனைக்
காவியநூலளவெடுத்தகவிஞனெனக்காணே. (1075)

புறனடை யங்கம்

நீசனின் றராசியிறையாட்சியுச்சமேவி
னீசபங்கம்ராசசுகமெனவுரைத்தநெறிபோல்
பேசிவந்தவூமரதன்பின் னுரைத்தவிதியாற்
பெரும்புலவரானதன்மைபிரித்துணர்ந்துகோடி
மாசிறந்தவாக்குவலிநாலிரண்டைந்தொன்பான்
வளராயமிவைகளையும்வானவர்கோன்சுங்கன்
ஆசில்புதன்மதியறிவனுமிவைகடமைய
மளந்தறிதிபுதன்குருவுமதிகரிதிலம்மே. (1076)

இந்தவிதமேலெடுத்துங்கீழெடுத்துமுரைத்த
விவர்களல்லாச்சாதகர்களெத்தரத்தரென்ருல்
மந்தவிதக்கல்விநிலேவலியுடையராவர்
வந்தகடிதம்படிக்கவல்லவனென்றறியே
முந்துரைத்தபுலவர்கள்போலல்லர்பின்னருரைத்த
முழுப்புலவர்போலுமல்லர்மூங்கையர்போலல்லர்
தந்தரத்தெழுதப்படிக்கச்சமர்த்தரிவராவர்
தமிழ்முதலெப்பாஷைகட்குஞ்சமமாமிவ்விதியே. ()

———

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

துர்வசனம்

கட்டளைக் கலிப்பா

வாக்கினேன் றிரியோன்சுகன்மேருவோன்
வழுத்துநால்வருந்துற்பலமன்னினும்
காக்குநாலவனேந்தவனெட்டவன்
கடையிற்காந்தக்கடைக்குலமாயினும்
வாக்குக்காரகனுலவனீசத்தே
வதியட்டமன்வன்கண்கிடைக்கினும்
வாக்கினின் றுபிறப்பதெல்லாம்பொய்யும்
வன்புந்துன்புமேமற்றதொன் றில்லையே. (1078)

நீலன்வாக்கிலுமைந்திலிராகுவு
நெடியவட்டமனுன்கிலுநீண்முடி
காலேச்சூரியனுங்கட்டவட்டமக்
கதியிற்புந்தியுங்கார்முகிற்கீசனும்
கோலலாபத்திற்பாம்புங்கிடைத்தவன்
குளிர்ந்தவார்த்தைகுறித்தும்புகன் றிலன்
சாலம்வஞ்சகந்தப்பொடசத்தியஞ்
சலிப்புவீண்சொற்றழைத்துடையானரோ. (1079)

புறனடை யங்கம்

புதனைப்பார்பின்புநான்கினைப்பார்பின்பு
புகரைப்பார்மதிபோக்கினைப்பார்பின்பு
சுதனுக்காதினம்பார்தனம்பாக்கியஞ்
சுத்தலாபமித்தானங்கள்சுற்றிப்பார்
இதனைப்பார்த்ததெல்லாம்பெரிதன் றுவா
னிறைவனிற்குமியற்கையைநன்குபார்
அதனத்தேவருந்தானமுநன்மையே
லவர்க்குவாக்கினதிட்டமுநன்மையே. (1080)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

நேத்ரஊனம்

கண்ணையட்டமன் கவ்வுறநான்கினைக்
கடுமையாளர்கள்கைப்பற்றிக்கொண்டுற
விண்ணையாள்பவன் கண்விழியானெனில்
விழியிரண்டுமிலேசமுமில்லையே
நண்ணும்பன்னிரண்டாதிபன் கண்ணுற
நான்கைப்பாம்புநறுக்கெனக்கவ்விறை
புண்ணிருப்பதுபோலிருகண்களும்
புகைந்தெரிந்துபுலன்பற்றிடாதரோ. (1081)

இதுவுமது

கண்ணுக்காதிபனேயுறக்கண்ணினைக்
காவில்சூரியன் கண்கொண்டுநோக்குறிற்
கண்ணிரண்டுமிழப்பர்முற்கூறியக்
கதியர்மூவருமித்திரர்யாவருந்
திண்ணச்சுக்கிரனுட்சியுச்சங்களுந்
திங்கள்பாலகன்கோணகண்டங்களுந்
தண்ணிலாமதியைந்திலுமந்தணன்
றலையிலும்பெறிலோர்கண்டழைப்பாரே. (1082)

இதுவுமது

நேத்திராதிபனீசமும்பாவமு
நேரவங்கவனேடுடன் கூடியே
காத்தலக்கினத்தாதிபனீற்றெடுக்
கட்டவட்டமநோயிற்கலங்குதல்
கோத்தவெஞ்சனிகண்கொண்டுநோக்கினற்
குழந்தைகர்ப்பக்குருடெனக்கூறுவர்
ஆத்தன்மெய்யருளப்படியாமெனி
லந்தப்பாலன்முன்செய்வினையாமரோ. (1083)

இதுவுமது

கண்ணுக்காதிபனுதவன் கூடியே
கடியநோயிடைக்கட்டுணக்காரிதன்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

புண்ணுெப்பாங்கண்ணைக்கண்ணிலுங்கண்ணெனும்
பொறியினயகன்பேரிலும்போக்கினல்
விண்ணுக்காதிபன்சுக்கிரன்கண்ணருள்
விழிவிழிப்பதிமேலும்படாவிடிற்
பண்ணப்போதவன்பாரிடைத்தோன்றினும்
பலித்திடாதுகண்பாலைப்பழிக்குமே. (1084)

இதுவுமது

ஆடுஞ்சிங்கமுநேத்திரத்தானமா
யதிற்சுன்சேயவனத்தலத்தோனுற
நீடுஞ்சுக்கிரன்கண்ணருளங்கணே
நேரிடாதெனிற்பேரிவற்கந்தகன்
தேடுந்தங்கமும்வெள்ளியுங்கர்மனுந்
தீப்பிணிக்கிறையும்பிணித்தீயுறில்
ஈடிலாதகண்பெற்றுநடுக்கணே
யிறைவர்தண்டனையாற்கண்ணிழப்பனே. (1085)

இதுவுமது

விழிக்குநாதனுஞ்சேயொடுமாந்தியும்
விழித்தலத்துறவேதன்கண்மேவுறில்
வழிக்குளான்கண்கிடைத்துநடுக்கணே
வலியநோயினல்மாண்டிடுங்கண்ணனே
பழிப்பிலாவிழிநாதனுஞ்சுங்கனும்
பனிநிலாவும்பகைத்துடன்கூடினல்
அழிக்கிலார்கண்கொடுப்பர்நடுக்கணே
யருகிமாலைக்கணுமிவற்கென்பவே. (1086)

தலைக்குநாயகன்கண்ணுக்குநாயகன்
சத்தமன்கறைச்சந்திரனல்வருங்
கலக்கவாறெட்டினேரிட்டுச்சுக்கிரன்
கண்ணெனுங்கிடைக்காவிதிநேர்ந்தகண்
குலைக்குநோய்களிற்குற்றுண்டுரிப்புண்டு
கொடுங்கலிக்கங்கள்கொட்டுண்டும்பட்டுண்டும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

நிலைப்பதின் றிக்கரைந்திடுமென் றுநீ
நிரம்பக்காட்டிமருந்தைநிறுத்திடே. (1087)

சுக்கிரன் கடுஞ்சூரியன் கண்ணிலே
தோயப்பொன்னருட்சோதியுமில்லையேல்
வக்ரமேகப்படலத்தினுல்விழி
மங்குமென் றுவலுத்துச்சொல்வெள்ளியு
மூக்ரமந்தனுஞ்சாமியுங்கூடியே
யொளிவிழிக்குப்பழியெனவுட்புகிற்
சக்கிரேஸ்வரன்கணபெறினல்லது
தலம்பழிக்கவிராக்குருடாவனே. (1088)

கண்ணைச்சாவகன்கவ்வுறமூன் றிலே
கதிருதிக்கக்கரக்கவிராக்கதிர்
கண்ணின்காரகனுறிற்கலங்கினுற்
கண்ணினேய்தொனூற்ருறையுங்கண்பெறும்
கண்ணின்காரகன் கண்ணுக்குநாதனுப்க்
கடும்பிணிக்குட்டனிப்பட்டுகாந்தினுற்
கண்ணுஞ்சூனியமாகிற்கண்சூனியமே
கடவுள்மெய்யுறிற்கண்ணெனன் றிநல்குமே. (1089)

தலைக்குநாயகனுறவன் சூரியன்
றலையைக்கண்ணைத்தழுவுறப்பெற்றவன்
நிலைக்குங்கண்களப்பூனையின்கண்ணென
நிறங்கொடுக்கும்பழுதில்லைநிச்சயம்
வலுத்தகண்ணிறையெட்டுறச்சந்திரன்
மந்தனேடுகண்மாடத்தைநோக்கவக்
குலக்கொடுங்கதிர்கண்ணுறிற்பூனைக்கட்
குணங்கொடுக்கும்பழுதன் றுகூறிடே. (1090)

நண்ணினுதனீராறிற்கலங்குறக்
கண்ணைவெஞ்சனிகண்ணுறக்காண்பனேற்
கண்ணுஞ்சூனியமாகக்கிடக்குமேற்
கண்ணிழப்பதற்கேதுவுங்காணுமால்;

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கண்ணின்காரகன்சந்திரகோணத்தே
　　கதித்தநல்லசுகாலயமேவினுற்
கண்ணிற்கண்ணடிசாத்தவிடான்முழுக்
　　கமலம்போலக்கலந்தொளிகாட்டுமே. (1091)

உண்ணும் பாத்திரம்

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

தனபதியுமதியும்விண்ணோர்குருவுங்கண்டத்
　　தலமலதுகோணமாத்தலத்திலேறக்
கனபதியாம்வெள்ளிதருத்திருக்கவாய்த்தோன்
　　களிம்பில்லாச்சுத்தவெள்ளிக்கலத்திலுண்பான்
தனபதியுஞ்சுகபதியுமதியும்பாம்புந்
　　தனத்திருக்கக்கிடைத்தவனத்தகையனுவான்
கனபதியாம்வெள்ளிமதிபொன்னும்வாக்கிற்
　　கலந்தவனுஞ்சுத்தவெள்ளிக்கலத்துண்பானே.

இரண்டவனுந்தலையரசுமவியத்தினுனு
　　மிலக்கினத்தேதுலக்கினபொன்னென்னத்தோறன்
விரண்டையிருங்குருபார்க்கவிந்துபாக்யத்
　　திருக்கவந்தோன்பொன்கலத்திலினிதுண்பானுல்
திரண்டகலையரசுமுழுக்குருவுமைந்திற்
　　சிறந்திவரிலொருவருச்சஞ்சேரவெள்ளி
தெருண்டதனபாக்கியனுய்க்கேந்த்ரமேறச்
　　செழித்தவனும்பொன்கலத்திற்றினமுண்பானே.

தனத்தரசுதலைக்கிருக்கப்பச்சைமாலும்
　　சந்திரனுங்கேந்திரத்தேதழைக்கப்பெற்றோன்
கனத்தவெள்ளிப்பாத்திரத்திலினிதுண்பானுங்
　　கதிர்முடிமேற்சந்திரனுங்கதிரும்வாய்க்கத்
தனத்தில்வெள்ளிபுதனிருக்கக்கிடைத்தோன்வெள்ளித்
பதினோராமிடப் பாவகம்

குரு வணக்கம்

எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

பாக்கியமிலாபநல்லறிவாக்கஞ்
செட்டனும்பலன்றனையெடுத்துத்
தாக்கியேபதினொன்றாமிடவிகற்பாற்
சாற்றுபுதுணிந்ததுகணித
மாக்குருராசன்குடந்தைவீரப்ப
மழைமுகிலுபயதாமரைத்தாள்
நாக்கிடைநின்றுசொற்பிறழாது
நடத்துமென்றுறுதியினயந்தே. (1291)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பாக்ய பாவகம்

கட்டளைக் கலிப்பா

பத்தவன்பதினொன் றவனன்னிதி
பாயப்பாக்யனிரண்டிற்பதிந்திட
நத்திக்கண்ணவன்கண்ணுறிற்சாதக
னன்குபாக்கியயோக்கியனண்ணுவான்
தத்திலாபனுமுச்சத்திற்கேந்திரந்
தங்கவாகனன்சௌமியன்கூடியே
யுய்த்துநோக்கக்குஜன்கோணமேறினு
லுறுதிக்கல்விநிதிபரியோங்குமே. (1292)

முகனிலாபன்றனைக்கொடுகண்டத்தில்
முந்திமேருசுகன்விழிபெற்றிடில்
அகமிரண்டுமூன்றுக்கித்துணைவரோ
டாக்கமோங்குவனுயம்பத்தாதிபர்
சுகபரத்துறச்சத்தமன்பஞ்சமன்
றேயவாயஞ்சுரேசன்விழித்திடிற்
புகழுங்கல்வியுஞ்செல்வமும்பெற்றுநற்
புனிதனுச்சிவபோகங்கிடைப்பனுல். (1293)

ஆயன்சந்திரற்காயனிரண்டுபே
ரைந்தினிற்கக்கர்மாதிநிதிப்பதி
தூயலக்கினத்தேறிடிற்கல்வியுஞ்
சுகமும்வாகனத்தோற்றமுங்கூட்டுமால்
மேயபஞ்சமன்கேந்திரமேறவவ்
வீரன்பஞ்சமன்வீட்டிலிருந்திட
வாயனுயனுக்காயனுங்கேந்திரித்
தமரக்கல்வியுஞ்செல்வமுமாக்குமால். (1294)

கண்ணினுன்விதியானிதியானிவர்
கலவியெட்டில்வியத்திற்கயங்கினும்
தெண்ணிலாவுக்கிலாபன்றனுதிபன்
விதியிற்சேய்சனிகண்பெறச்சேர்ந்துபொன்
வண்ணமாநிதியாறெடிராறிடை
வதியினுந்தலைமன்னவற்காயனுந்
திண்ணவாயனுஞ்சந்திரன்சாமியு
மாறிராறிற்றியங்கினுந்தீனரே. (1295)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பத்துநாலவராயத்திருந்திடப்
பச்சைலாபத்திருந்திவர்பார்த்திட
மத்தகப்பதிநாலிடைநட்புறீ இ
வாழினுஞ்செல்வவாணிவனுயனு
நத்தியாயனுறுபதிக்காயனு
நளிர்நிலாவுக்கிலாபனுமாயன்வாழ்
உய்த்தநற்பதியோனுமொருவருக்
கொருவர்கண்டமுதிக்கினுஞ்செல்வனே. (1296)

சந்த்ரலாபனிதிவிழிமூவருஞ்
சந்த்ரலாபத்திற்றங்கிடவேழினின்
றந்தனுளன்விழிக்கினுமேருவோ
டாயன்மெய்த்தனன்மூவருங்கண்டங்கள்
வந்திடத்திருத்தாய்நட்பிலாட்சியில்
மருவப்பாவர்மறைந்துகிடக்கினுஞ்
செந்திருப்பெண்மணுளனெனப்புவி
செப்பவாழ்வரிச்செல்வரிரண்டுபேர். (1297)

குருவுஞ்சந்த்ரசுகாதியுங்கண்டத்திற்
குலவப்பாதன்ககத்திற்குதித்திட
விரியிலாபத்திற்சந்திரகர்மனுர்
மேவினுலுநல்லுத்தமர்மத்தியில்
அரியலாபனுச்சம்பெறவப்பதிக்
கரசனுயத்தமர்ந்திடினும்மிவர்
இருவரெத்தொழில்செய்யினும்லாபமே
யேறுமன்றியிறங்குவதில்லையே. (1298)

மலையிராசனிலாபனென்ருகியே
மாந்திகண்ணின்மறைந்தனர்நின்றிடக்
குலவுபுத்திரத்தானத்தன்காந்தியாய்க்
கூடினுலுநிதிக்கிறைபஞ்சமன்
றலையில்வாழ்வுறச்சந்திரபஞ்சனு
தாயமேவத்தலைவன்சுகன்சுப
நிலையின்மேவினுமிவ்விருசாதகர்
நெறிவழாதுநிதிபடைப்பார்களே. (1299)

புத்திராதிபன்சாமிபிலாபத்திற்
புதுதவைந்திடைப்பொன்பசைக்கோன்புக
நத்துகோணத்துநாக்கிறைநண்ணினும்
லக்கினன்சந்த்ரலக்கினனிலாபத்தோன்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மொய்த்துமூவரும்பஞ்சமத்தேசுப
மூர்த்தராகினுங்கன்னிமின்மால்புகர்
அத்துவண்ணன்புகுந்ததுலக்கின
மாகினுஞ்செல்வராவரிம்மூவரே. (1300)

மதியிருந்தவிராசிக்கிரண்டவன்
வாழலாபத்திலாபனைந்தேறிடின்
நிதிமிகுந்திடுநல்லறிவோங்கிடு
நேத்திரப்பிணிபீடிவதைக்குமால்
துதிசெய்மேருவில்மூன்றவன்பத்தவன்
லக்கினதிபனேக்குறவக்கிரன்
உதயபானுவொடாட்சிபெற்றேரங்கின
லுயருஞ்செல்வம்வைத்தொண்டொடிபின்செல்வான். ( )

அட்டமத்திற்றனனுறக்கண்ணிலே
வாயன்சாரக்குசன்மனந்தன்னின்மெய்ச்
சிட்டராரியன்கண்பெறவன்னையோன்
றிங்கள்வீட்டிடைத்தங்கிவிங்கிவற்
கிட்டசோதரர்மூவரையாயுள்மட்
டிடைவிடாதுகிடைத்தநமட்டுக்கும்
அட்டபாக்கியயோக்கியசிலாக்கியத்
ததிபராய்ப்பின்னரன்பதஞ்சேர்வரே. (1302)

அந்தணன்பதினொன்றுறவப்பதிக்
கரசன்சந்திரனுபத்திற்சேய்விழி
தந்திடப்பெறச்சத்தமன்புத்திரத்
தானத்தானிடமாறித்தழைக்கினும்
வந்தலக்கினன்மங்களனுபத்தோன்
மருவுமப்பதியோர்பதினொன்றுறச்
சந்திரனுபத்திற்பொன்னுறினுமிவர்
தமையன்செல்வத்துட்சந்ததம்வாழ்வரே. (1303)

ஆயத்தானத்திலக்கினன்கண்ணிறை
யமையக்கண்ணிற்பத்தாதிமதிவிதி
வாயத்தாபதமந்திரிநோக்கினும்
மைந்தன்சேட்டன்மகிழ்ந்திடுஞ்செல்வவான்
சேயப்பொன்னிதிலாபனிந்நால்வருஞ்
சீவன்வீடுறச்சத்தமன்மெய்ததனன்
தாயத்தான்கண்பெறப்பசையோன்பட
விரதவாதம்புதையலிச்சைக்குளான். (1304)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வேறு

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

எட்டிராறிடத்திலேகண்விதிநிதிக்கிராசரும்
இந்துவுக்குலாபனூர்தனேசனூரிரண்டுபேர்
துட்டவக்ரன்விதிமுகன்கண்ணேக்கவேவிதிக்கணே
தோன்றவேதனிதிவியத்துமாறினுந்துயங்கினும்
தொட்டலக்கினதிபற்கிலாபனேடிலாபனூர்
சோமலக்கினதிபன்னேருத்தருக்கொருத்தர்தாங்
கெட்டவாறுக்காறதாய்க்கிடந்திம்மூவர்கழியினுங்
கெதியிழந்தவிந்தமூவர்விதியிழந்துகெடுவரே. (1305)

ஆயமீதுசுகபதிக்கிலாபனேறவிதியிலே
அசலசாமிநிதியிருந்தபதியவற்கிலாபனூர்
வாயவந்தமைந்தன்மண்பொன்மங்யைாதிசெல்வமும்
வைத்திருந்துமென்னலாபமார்க்கமற்றமூர்க்கனும்
ஆயனேடுதிரியுமுன்பராயமேவவந்தணன்
அவரைநோக்கவேழிலிந்துவிதியில்வெள்ளியணுகவே
யேயமைந்தன்முந்தையோர்களீட்டிவைத்தநிதியெலாம்
எச்சிமாதர்கைக்கொடுத்திழந்துவாடுமீனனும். (1306)

நிலவிருந்தபதியிராசன்பொன்னிருந்தநிலைமையோன்
நேயசத்தமேசன்மூவர்நெறியிருக்கலாபனூர்
இலகுகண்கொடுக்கவாயமீதுரோகனிதிவிய
னிருக்கில்வம்பர்சோரராலிழப்பனுள்ளபொருளெலாங்
குலவுவேதனவனிருந்தபதியனுயமேறவக்
கோமகன்படுக்கைவீடுகூடவன்னவிதியிறை
மலர்விழிக்கிருக்கினிந்தமுகடிதொட்டதொழிலெலாம்
வரும்விழற்கிறைத்தநீரின்மட்கியுட்கிமாளுமே. (1307)

ஆறுமாறேடாறுமெட்டுமாயதாயவீட்டிலே
வாயனிற்கநட்டன்மேருமாறியங்குநிற்கவே
கூறுநாவினேன்மதிக்கொராறிலேகுதிக்கினிக்
குழவிதொட்டதொழிலெலாங்கடற்கரைத்தகோட்டமே
ஏறுதுக்கவீட்டிலானனத்தனிற்கவன்னவீட்
டிந்துவுக்குநாவினேனிருக்கமைந்தனிடம்விதி
தேறிநிற்கமதிவிழிக்கிராசன்மோகவீடுறிற்
செத்துவீழுமட்டுமின்மைதுய்த்தலைந்துதிரிவனே. (1308)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இடதுகாதினிறைவன்மூன்றினிறைவியத்திருக்கவே
இரவிமைந்தனோக்கினலிவன்றெழிற்களபழுதுறாஉம்
படவிநாலுமைந்துமாறுமுடையமூவர்கூடியே
பன்னிரண்டிருக்கவேதனுபன்மேருபதிமதி
கெடவுணங்கியாறிலெட்டில்வீழின்மூர்க்கனுக்குணக்
கேடடைந்துகளவுசூதுகிருஷிகத்தனுகுவன்
சுடுநெருப்பின்வறுமைபற்றத்துடிதுடித்துவாடுவான்
சுகிர்தவிட்டர்மனம்வெறுக்கவுரைபிதற்றுதோஷியே. ()

தன்னுடன்றனத்திலாபனிதிதிருட்டிதந்தனைந்
தலைவர்முன்றிருக்கமேருதரமிழிந்துகீழுறிற்
கனமிழந்துசூதுபொய்கொலைதொழிற்கிணங்குவன்
காரிசாமிவியமிருந்துகாதலன்றலத்திலே
தனைநிகர்த்தநிதிவிதிக்குமன்னர்நின்றுபஞ்சமன்
றுவநீசம்லாபமீதுதந்தசூகமேறினல்
நனவிலன்றுகனவிடத்துநல்லசெங்கைபெண்ணலா
நரர்களின்குருக்களாகிநாடுதூறவாழ்வனே. (1310)

ஐந்துநான்குமுடையர்கூடியட்டமத்தில்வீழவே
யாயமீதுவிழியிழுக்கடைந்துவீழின்மிடியனும்
தந்த்ரவானுமாயனுமிடக்கணின்றுசந்திரன்
தழைசுகத்தினிற்கவன்னைதலமடுத்துமூன்றவன்
வந்தபானுவுடனிருக்கநீசர்கண்களங்கனே
மானினத்தைவலைவனைந்தவண்ணமாவளைக்கவே
மந்தகாலம்வந்தபாலன்மாயதந்த்ரசூதெனும்
வழியிலேதிரிந்துழன்றுவயிறுதற்கும்வன்பனே. (1311)

கண்டமேற்பன்னொன்றுபன்னிரண்டினோன்கலக்கவே
கதிரையிந்துநோக்கலாபமீதுசேய்கதிக்கினே
உண்டுதம்பிநங்கையில்லையண்ணனில்லையென்பரால்
ஓதுமெட்டிலாபநாதர்சோமலாபமுற்றிடில்
அண்டிநட்டனிரவியாரலாபமேற்குதிக்கினே [ல்
அண்ணனென்றுசாவனென்றலைந்துசாவன்வினையின
விண்டபத்திலாயனுகமேவலாபமதிதசன்
மேவநட்டநிதியிருந்துசேய்விழிக்கின்வீணனே. (1312)

ஆயனிந்திடச்செவிக்கிராசன்மேவவிதியிடை
அவரைநொந்துசனிவிழிக்கமூகன்வியத்திலனுகவே

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

காயுமாறுமாறெடாறுமெட்டுமுள்ளகாவலர்
கதிக்கவேசுபத்தர்வீறுகரையவந்தசாதகன்
தூயதந்தையன்னசேட்டனோடுகாலமுழுவதூஉம்
துன்பியற்றிவன்பியற்றியவனின்முந்துதொலைவனும்
ஆயவிந்தைவகையனைத்துமறிவினாலளந்துகண்
டவர்கள்கொண்டதிசைபுசிப்பறிந்துசொல்வரறிவிலோர்.

பனிரெண்டாம் பாவகம்

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

வியனுஞ்சுகனும்பொன்னவனு நிதியிலுறைபின்மேவுசெல்வ
பயனும்புகழும்பரிமாவும் படைப்பர்வியனைப்பிணிபார்த்து [ப்
நலமிலாதாருடன் கூடில் நட்டன்றிசையிலவன்புசிப்பில்
துயரமடைந்துநிதியிழந்து தந்தையிழந்துசோர்வானல். (1311)

பாபர்குடும்பந்தனையடைய வேழைச்செவ்வாய்பார்ப்பதொடு
கோபருடன்சேய்கூடிடினுங் கொண்டமனைப்போய்பின்னொருபெண்
சோபமகற்றமக்கள்செல்வச் சுகமுமடைந்துதுலங்கிமணித்
தீபமனையபுகழோங்கிச் செழிப்பானென்பர்சிறந்தோரே. ()

அச்சமகலச்சந்த்ரவிதி நல்லதானத்தமர்ந்திருந்தால்
உச்சமாட்சிநிதிபனுறப் பொன்னோனவனையுறநோக்கப்
பிச்சங்குடைவெண்சாமரைபொன் னரசர்செல்வப்பெருக்கடைவன்
ஒச்சமிறையுமடையானென் றுயர்ந்தோர்நூலினுரைப்பாரால்.

பத்தாதிபனுவித்தருவும் பகையில்கோணம்பாய்ந்துமணி
முத்தாமதியுநாலவனுங் காணநின்றூன்முழுப்பாக்ய [டாஞ்
வித்தாய்வாழ்வன்பகைபிணியும் வெல்வான்மனைவிமக்களுண்
சத்தாமருளுநல்லறமுங் கடையவாயுள்பெறுவானல். (1317)

தனத்தோனிதியோனுடன்கூடிச் சயனத்தானத்துறங்கிடநல்
வினத்தோர்நோக்கமறப்பாவர் நோக்கம்வாய்ந்தாலேழையிவ
மனத்தேகவலைபெஞ்ஞான் றுமாறுதிருக்திவலைமான்போல்[ன்
தினத்தாயினுநன்கடையாத தீங்கனுகித்திரிவானல். (1318)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

எட்டிற்கண்ணுதிபனிருக்க விவனைப்பிருகுகண்ணோக்க
நட்டன்சுபத்தானத்திலுறிற் கண்ணேயடைந்துநலிபெறுவன்
கட்டவியத்தோன்சனியுடனே கலந்துகோணங்கண்டமுற்றுத்
தொட்டதருமநோக்கடைந்தால் சிவயோகத்தேதுலங்குவனல். ( )

பகைத்தானத்தோன்வியத்தானம் பார்க்கிற்படுபாதகனுகித்
திகைத்தாரழலார்நரகினிடைச் சேர்வனுதயவிலக்கினத்தை
நகைத்துமதிபார்த்திடிற்றுதை பதியையிழந்துநாடோடும்
பகற்றேவேழெட்டொன்பதற வுபயம்பாழேற்பரதேசி. (1320)

வியனைச்சனியுநாலவனு வெறுத்துநோக்கிற்பரதேசம்
பயனற்றலைவன்சுபர்வியத்தே பாயவாறெட்டிற்சுபக்கோள்
சபனச்சனியோடுடன்கூடிச் சாரநீலன்பார்ப்பானேற்
செயனற்றுணையோடிழந்துநெடுந் தீக்காணேடித்திரிந்துழல்வன்.

எட்டோன்கரும்பாம்பந்தன்வலு வேறிவியத்திலிருப்பானேற்
கெட்டோனுபிகௌரவத்துட் கிடைப்பான்பாபரொடுபளிங்கு [ள்ளி
தொட்டேவியத்திற்கிடைப்பானேற் றுயொப்பானைத்தோய்வன்வெ
துட்டாங்காரனுடன்வியத்தே துன்னினீசசுகந்துய்ப்பான். (1322)

எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

மங்கியவியத்திற்பாபர்கள்கூடி
வன்பகையோடுவந்துறினுந்
திங்களுஞ்சனியுஞ்சேயுமீராறிற்
சேரினுநோக்கினுமதியுஞ்
செங்கதிரவனும்வியப்பதியுறினு
மாறெட்டோர்தீயராய்வியத்தே
தங்கினும்வியத்தேநால்வர்கூட்டுறினுந்
தகர்ந்துபோம்நிலனெடுதனங்கள். (1323)

வியத்திலேநல்லோர்நாலவனுடனே
மேவினற்சினேகிதர்க்காக
நயத்திலேசெலவிட்டிழப்பன்மெய்ப்பொருள்க
ணற்குருபனிரண்டினனுகிற்
சுயத்திலேவல்லபுலவர்கள்மறையோர்
சொந்தபந்துக்களாதுலர்கள்
வயத்திலேதனங்களனைத்தையும்வாரி
வழங்குவன்வறுமையில்வாடான். (1324)

அதியுச்சம்பாகத்தமர்வியத்தோனை
யாட்சிசேர்பாக்கியனேக்கி

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ணிதிமிக்கசெல்வனுருவன்வியத்தோ
ணிறைசுபரோடுவெள்ளிநின்று
துதிபெற்றநல்லோர்கடாட்சமுங்கிடைத்தாற்
றூக்குபொன்னூசலிற்சுகிப்பன்
மதிசித்ரபானுவியத்துறிற்சிலநாள்
வாழ்ந்துபின்றாழ்ந்திடுவானுல். (1325)

வெள்ளியுஞ்சனியுந்திங்களுமொன்பான்
வீட்டிடைக்கூட்டுறச்சனித்தோன்
தெள்ளியவிராசயோகபாக்கியத்திற்
சிறந்தவனுவன்பன்னிரண்டோன்
ஒள்ளியவதியுச்சத்திடையமர்ந்தா
லூஞ்சலின்மாடத்துளுறங்கும்
அள்ளொளிமதிசுங்கன்குருவியத்தே
யமர்ந்திடிற்செல்வவானுவான். (1326)

கடைப்பூட்டுப் புறனடை

உரைத்தவிலக்கணங்களெல்லாமுணர்ந்தபின்பா
லோதுவதோருத்தியதனுண்மைகேளாய்
நிரைத்துநின்றவிலக்கினத்தோனந்தமாதி
நேர்ந்துவருஞ்சுபங்களெல்லாநெறியேசேர்த்துத்
திரைத்தெழுந்தவசுபமெலாஞ்சேர்த்தாதாயஞ்
செலவுசெய்துநன்குயரிற்செல்வஞ்சொல்லு
தரைக்குளசுவப்பலனேயோங்குமானுற்
றரித்திரவான்களற்கொளிற்றேசகலமாமே. (1327)

வாழி

வாழிமுதன்மறைநான்கும்வாழிவேத
மணத்திருக்கும்வாய்வாழிவடிவேவாழி
வாழிமறைமுதலாகியதற்கப்பாலாய்
மணியரங்கன்கோயில்கொண்டவள்ளல்வாழி
வாழிதிருவேரகத்தெங்குருவீரப்ப
மாக்கலைஞன்றிருவடித்தாமரைப்பூம்போது
வாழிதமிழ்க்கவிஞர்சோதிடநூல்வல்லோர்
மழைமுகிலும்புவிமகளும்வாழிதானே. (1328)

———

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

M. Gopalakrishnan,
Grad. I.T.E.

உ

சுகர்நாடி என்னும்

ஜோதிட சிகாமணியின் உரை

பாட்டின் இலக்கம்

27

(இதன் பொருள்)—[a] இராசிச் சக்கரத்தின் இலக்கினாதிபதியானவர் நவாங்கிஷச் சக்கரத்தில் எந்த இராசியில் நின்றாரோ அதற்குடையவர் இராசியில் சந்திரன், குரு, இராகு ஆகிய மூவரும் வருங்காலத்தில் ஜாதகருக்குத் தடையின்றி விவாகம் நடக்கும்.

(உதாரணம்.) இந்த இராசிச் சக்கரத்தில் இலக்கினம் துலாம்; இலக்கினாதிபதியாகிய சுக்கிரன், நவாங்கிஷ சக்கரத்தில் கன்னியிலிருக்கின்றார்.

	ராகு	சனி	
	இராசிச் சக்கரம்		
குரு			
சந் செவ்	சுக் சூரி	ல-பு கே	

			கு-ரா சந்
	நவாம்ச சக்கரம்		
			சூ சுக்

அக் கன்னிக்கும்மிதுனத்திற்கும் உடையவர் புதன் ஆகையால் அந்த மிதுனத்தில் சந்திரன், குரு, இராகு ஆகிய மூவரும் சுமார் 27-ம் வருஷம் கூடுவார்களாகையால் அப்போது கல்யாணம் நடக்குமெனக் காண்க.

[b]—7-க்குடையவரும், அசுரகுருவென்னும் சுக்கிரனும் ஆகிய இருவருமிருந்த இராசியில் ஆலோனென்னுஞ் சந்திரன், மறையவனென்னுங் குரு ஆகிய இருவரும் வரும்போது உடனே சுப கலியாணம் கூடும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy



(உ-ம்.) இராசிச் சக்கரத்தில் 7-க்குடையவர் செவ்வாய்; அவர் வீடாகிய மேஷத்தில் செவ்வாய், சுக்கிரன், குரு, சந்திரன் ஆகிய நால்வரும் சுமார் 28-ம் வருஷத்தில் ஒன்றாய்க் கூடுவார்களாகையால், அப்போது கலியாணங் கூடுமெனக் காண்க.

சுக்கிரன் வீட்டில் குரு சந்திரன் கூடும்.

உதாரணம் வந்தவிடத்திற் காண்க.

[c]—7 ம் இடத்தில் புதன் பல மடைந்திருந்தால், மாமன் பெண்ணை விவாகஞ்செய்து சுகமடைவான்.

(உ-ம்) இது மீனலக்கினம் ; இலக்கினத்திற்கும் 7-ம் இடம் கன்னி, அதற்கு உடைய புதன் அதில் ஆட்சியுச்சமடைந்து பலம் பெற்றிருப்பதைக் காண்க.

28

(இ-ள்) 7-ம் இடத்துக்குடையவர், 1-5-9 ஆகிய திரிகோணங்களி லொன்றில் நின்று இலக்கினத்தைப் பார்க்கவும், ஏழுக்கு ஏழாமிடமாகிய இலக்கினதிபதிக்கு ஆதாயமென்கிற 11-ம் இடத்திற் குருவிருந்து சந்திரபார்வை பெற்றும், காமியென்னும் இராகு சுபர்களோடு 5-ல் நிற்கவும், வாக்காதிபனென்னும் 2-க்குடையவர் உச்ச மடைந்தவரோடும் ஆட்சி பெற்றவரோடுங்கூடி நிற்கவும் பெற்ற ஜாதகர் பக்தியுள்ள மனைவியை விவாகஞ்செய்து நல்ல புத்திரரைப்பெற்றுச் சுகம் பெறுவார்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

புத	சுசெ கு		
	இராசிச் சக்கரம்		சந் கே
குரு ராகு			
			ல

(உ-ம்.) இந்தச் சக்கரத்தில் இலக்கினம் கன்னி; இதில் 7-ம் இடமாகிய மீனத்துக்குடைய குருவானவர் இதில் திரிகோணமாகிய 5-ம் இடத்தினின்று இலக்கினத்தைப் பார்ப்பதையும், இதில் 7-ம் இடமாகிய மீனத்திற்கு 7-ம் இடமாகிய கன்னிக்குரிய புதனுக்கு 11-ம் இடமாகிய மகரத்தில் குருவிருந்து கடகத்திலிருக்கிற சந்திரன் பார்வைபெற் றிருப்பதையும், இதில் 5-ம் இடமாகிய மகரத்தில் இராகுவானவர் சுபராகிய குருவோடு நிற்பதையும், இதில் வாக்குஸ்தானமாகிய துலாத்திற் குரிய சுக்கிரன் உச்சமடைந்த சூரியனோடும் ஆட்சிபெற்ற செவ்வாயோடு மிருப்பதையுங் காண்க.

29

(இ-ள்.) 7-க்குடையவர் ஆட்சியடைந்து, இரண்டாமிடத் துக் குடையவருமாகி களத்திரக்கோளாகிய சுக்கிரனோடும் ஆதாயத்தோனாகிய 11-க்குடையவரோடுங் கூடி நிற்கவும், குருவின் வீட்டில் பாக்கியாதிபதியாகிய 9-ம் இடத்துக்குரிய புத னிற்கவும் பெற்ற ஜாதகர் அத்தை மகளை விவாகஞ் செய்து சுகமாகிய புத்திரரைப் பெற்றுப் புண்ணியமுங் கண்ணியமும் பெறுவராம்.

	இராசிச் சக்கரம்		
புத	செ சு-கு	ல	

(உ-ம்.) இந்தச் சக்கரத்தில் இலக்கினம் துலாம்; இதில் 7-ம் இடமாகிய மேடத்துக்குடைய செவ்வாய் ஆட்சி யடைந்து 2-ம் இடமாகிய விருச்சிகத் திற்கு முடையவராகி களத்திரக்கோளாகிய சுக்கிரனோடும், ஆதாயத்தோனாகிய 11-ம் இடமென்னும் சிங்கத்துக்குரிய சூரியனோடும் கூடி யிருப்பதையும் குருவின் வீடாகிய தனுசு, மீனம் இவ்விரண்டில் தனுசில் 9-ஆம் இடமாகிய மிதுனத்துக்குரிய புதனிருப்பதையுங் காண்க.

குரு, சுக்கிரன், சந்திரன் ஆகிய இவர்கள் கூடி இலக்கி னத்திலிருக்க, இதிற் பிறந்த ஜாதகரும் மேற்கூறிய விதி யுடையவரேயாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

30

(இ - ள்.) 7-ம் இடத்துக் குடையவர் 1-5-9 ஆகிய திரிகோணங்களி லொன்றில் நிற்கவும், சந்திரனும் 1-5-9 ஆகிய திரிகோணங்களி லொன்றில் நிற்கவும், நிதியென்னும் 9-ம் இடத்தில் பச்சையென்னும் புதனிற்கவும், 7-ம் இடத்துக் குடையவர் 7-ம் இடத்தைப் பார்க்கவும், களத்திரகாரகனாகிய சுக்கிரன் வலுத்து நிற்கவும், சந்திரனுக்கு 7-க்குடையவரைக் குரு பார்க்கவும், செவ்வாய் 1-4-7-10 ஆகிய கேந்திரங்களி லொன்றில் நிற்கவும், காமியாகிய இராகு ஆயமென்னும் 11-ம் இடத்தினிற்கவும், அவரைச் சந்திரன் பார்க்கவும் பெற்ற ஜாதகர் அருந்ததிக் கொப்பாகிய பெண்ணை விவாகஞ் செய்வராம்.

(உ-ம்.) இந்தச் சக்கரத்தில் இலக்கினம் கன்னி; இதில 7-ம் இடமான மீனத்துக்குடைய குருவானவர் இதில் திரிகோணமான இலக்கினத்தில் நிற்பதையும், இதில் சந்திரன் திரிகோண மான 5-ம் இடத்தினிற்பதையும், இதில் 9-ம் இடமாகிய இடபத்தில் புதன் நிற்பதையும், இதில் 7-ம் இடமாகிய மீனத்துக்குரிய குரு 7-ம் இடத்தைப் பார்ப்பதையும், இதில் களத்திரக்காரகனாகிய சுக்கிரன் 6-ம் இடமாகிய கும்பத்தில் பலமடைந்து நிற்பதையும், இதில் சந்திரனுக்கு 7-ம் இடமாகிய கடகத்துக்குரிய சந்திரனைக் குரு பார்ப்பதையும், இதில் செவ்வாயானது 7-ம் இடமாகிய கேந்திரத்தி லிருப்பதையும், இதில் இராகு 11-ம் இடமாகிய கடகத்தில் நிற்பதையும், அந்த இராகைச் சந்திரன் மகரத்தினின்று பார்ப்பதையுங் காண்க.

செ		புத	
சுக்	இராசிச்		ராகு
கே சந்	சக்கரம்		
			ல கு

31

(இ-ள்.) 7-க்குடையவர் சந்திரமங்கள யோக மடையவும், குரு 1-4-7-10 ஆகிய கேந்திரங்க ளொன்றில் நிற்கவும், 7-ம் இடத்தில் காமியென்னும் இராகு விருக்கவும், 9-ம் இடத்துக் குடையவர் இலக்கினகேந்திர மடையவும், ஏழுக்கேழுக்குடைய

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வராகிய இலக்கினுதிபதி கண்ணென்னும் இரண்டினிற்கவும் பெற்ற ஜாதகர் பூமியின்கண்யோக்கியமும் பாக்கியமுமுடைய பெண்ணை விவாகஞ்செய்து புத்திர பாக்கியமும் பெற்றுக் களத்திர வழியாற் செல்வமும் பொருளும் மிகுதிபெற்று உயர் வடைவராம்.

(உ-ம்.) இச்சக்கரத்தில் இலக்கினந் துலாம்; இதில் 7-ம் இடம் மேடம். அதற்குடைய செவ்வாய் சந்திரனேடு கூடி சந்திர மங்கள யோகமடைந்திருப் பதையும், இதில் குருவானவர் 4-ம் இட மாகிய கேந்திரத்தில்நிற்பதையும், இதில் 7-ம் இடமாகிய மேடத்தில் இராகு இருப் பதையும், இதில் 9-ம் இடமாகிய மிது னத்துக்குடைய புதன் இலக்கின கேந்திரத்தி லிருப்பதையும், இதில் ஏழுக் கேழா மிடமாகிய இலக்கினுதிபதி 2-ம் இடத்தில் நிற்பதையும் காண்க.

	ராகு		
	இராசிச் சக்கரம்		
குரு			
செ சந்	சு	ல-பு கே	

32

(இ-ள்.) களத்திரதானுதிபதி யென்னும் 7-க்குடையவர் 1-4-7-10 ஆகிய கேந்திரங்களிலொன்றி னிற்கவும், காமியா கிய இராகு 1-5-9 ஆகிய திரிகோணங்களிலொன்றி னிற்கவும், நிதிக்கோனென்னும் 9-க்குடையவர் களத்திரகாரகனென் னுஞ் சுக்கிரனுகி கிரிக்கோனென்னும் லக்கினுதிபதியினேடும் மங்களாதிபனென்னும் செவ்வாயோடுங் கூடி நிற்கவும், மதி யென்னும் சந்திரனுனவர் குருவுக்கு ஆதாயமென்னும் 11-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் அருந்ததிக் கொப்பாகிய பதிவிர தையை விவாகஞ்செய்து அப் பெண்ணுள்ள வரையில் சிதை யாச் செல்வம் பெறுவராம்.

(உ-ம்.) இந்தச் சக்கரத்தில் இலக்கி னங் கன்னி; இதில் களத்திரத்தான மென்னும் 7-ம் இடமாகிய மீனத்துக் குரிய குருவானவர் கேந்திரமாகிய 10-ல் நிற்பதையும், இதில் இராகுவானவர் திரிகோணமென்னும் 5-ம் இடத்தி னிற் பதையும், இதில் 9-ம் இடமாகிய இட பத்துக்குடையவர் சுக்கிரனுகி லக்கினுதி பதியாகிய புதனேடும் செவ்வாயோடுங் கூடி நிற்பதையும்

	சந்		குரு
	இராசிச் சக்கரம்		கே
ராகு			சு-பு செ
			ல

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இதில் சந்திரனானவர் குருவுக்கு 11-ம் இடமாகிய மேடத்தில் நிற்பதையுங் காண்க.

33

(இ-ள்.) காமாதிபதி யென்னும் 7-க்குடையவர் 1-4-7-10 ஆகிய கேந்திரங்களிலொன்றில் நிற்கவும், ஏழுக்கேழுக்குடையவராகிய இலக்கினாதிபதி 1-5-9 ஆகிய திரிகோணங்களிலொன்றில் நிற்கவும், சுக்கிரன் 1-4-7-10 ஆகிய கண்டமென்னும் கேந்திரங்களிலொன்றில் நிற்கவும், வாமத்தோனென்னுஞ் சந்திரனானவர் ஆட்சியடைந்த செவ்வாயோடு கூடவும், காமக்கோளாகிய இராகு வியமென்னும் 12-ம் இடத்தி னிற்கவும், சோமனெனும் சந்திரனுக்கு 7-ம் இடத்தில் நிதியோனென்னும் 9-க்குடையவர் காமி யென்னும் இராகுவோடு கூடி நிற்கவும், சுக்கிரன் வீட்டில் தூதனென்னும் புதனிற்கவும், பூமனென்னும் செவ்வாய்க்கு 7-க்குடையவர் சுகதானமென்னும் நான்கினிற்கவும் பெற்ற ஜாதகர் புண்ணியமுடைய நல்ல மனைவியோடு பொருந்தி வாழ்பவராம்.

(உ-ம்.) இச் சக்கரத்தில் மிதுன லக்கினம்; இதில் 7-ம் இடமாகிய தனுசிற்குரிய குரு கேந்திர தானமென்னும் ஏழிலிருப்பதையும், இதில் ஏழுக்கேழாமிடமாகிய இலக்கினத்திற்குரிய புதன் திரிகோணமாகிய 5-ம் இடத்தி லிருப்பதையும், சுக்கிரன் கண்ட மென்கின்ற 4-ம் இடத்திற் கேந்திரித்திருப்பதையும்,

		ராகு சனி	ல
	இராசிச் சக்கரம்		
குரு	ச செ கே	புத	சுக்

சந்திரன் செவ்வாயோடு கூடி நிற்பதையும், இராகு 12-ம் இடமாகிய இடபத்தி லிருப்பதையும், இதில் சந்திரனுக்கு 7-ம் இடமாகிய இடபத்தில் 9-ம் இடம் ஆகிய கும்பத்துக்குரிய சனி இராகுவோடு கூடியிருப்பதையும், சுக்கிரன் வீட்டில் புதனிருப்பதையும், செவ்வாய்க்கு 7-ம் இடம் ஆகிய இடபத்துக்குரிய சுக்கிரன் 4-ம் இடமாகிய கன்னியி லிருப்பதையுங் காண்க.

34

(இ-ள்.) 7-ம் இடத்துக்குடையவர் செவ்வாயின் வீட்டினிற்கவும், ஏழுக்கேழுக்குடைய புதன் களத்திரகாரகனாகிய

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சுக்கிரனோடு கூடி வாக்குஸ்தானமாகிய இரண்டில் நிற்கவும், 9-க்குடையவரும் இராகுவுஞ் செவ்வாயோடு கூடி நிற்கவும், அவர்களைக்குரு பார்க்கவும், 4-க்கும் 5-க்குமுடையவர்கள் கூடி குரு பார்வையைப்பெற்று சந்திரனுடைய வீட்டினிற்கவும் பெற்ற ஜாதகர் இரண்டு உத்தம குணமுடைய பெண்களை விவாகஞ்செய்து ஓங்கிய செல்வத்தோடு நெடுநாள் வாழ்வராம்.

		ச-ரா செ	ல
	இராசிச் சக்கரம்		சுக் புத
	குரு		

(உ-ம்.) இச்சக்கரத்தில் மிதுன லக்கினம்; இதில் 7-ம் இடம் தனுசு; அதற்குடைய குருவானவர் செவ்வாயின் வீடுகளாகிய மேடம் விருச்சிகம் இவ்விரண்டில் விருச்சிகத்தி லிருப்பதையும், 7-க்கு 7-ம் இடமாகிய இலக்கினத்திற்குடைய புதனுனவர் களத்திரகாரகனுகிய சுக்கிரனோடு கூடி இரண்டாமிடமாகிய கடகத்தி லிருப்பதையும், 9-ம் இடமாகிய கும்பத்துக்குரிய சனியும் இராகுவும் செவ்வாயோடு கூடி நிற்பதையும், அவர்களை குரு பார்ப்பதையும் இதில் 4-ம் இடத்துக்குரிய புதனும் 5-ம் இடத்துக்குரிய சுக்கிரனுங்கூடிக் குரு பார்வை பெற்றுச் சந்திரனுடைய வீடாகிய கடகத்தி லிருப்பதையுங் காண்க.

35

(இ-ள்.) களத்திர காரகனும், களத்திர ஸ்தானுதிபதியாகிய ஏழுக்குடையவனும் காரியாதிபதி யென்னும் 10-க்குடையவரோடு கூடி நிற்கவும், குரு 1-5-9 ஆகிய திரிகோணத்திலொன்றில் நிற்கவும், 1-4-7-10 ஆகிய கேந்திரங்களிலொன்றில் புதனுஞ் சந்திரனுங் கூடி நிற்கவும், செவ்வாய் 1-4-7-10 ஆகிய கேந்திரங்களிலொன்றில் நிற்கவும், சந்திரனுக்கு 1-4-7-10 ஆகிய கேந்திரங்களிலொன்றில் இலக்கினுதிபதி நிற்கவும், காமியாகிய இராகு 12-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் 2-3 உத்தமப் பெண்களை மணஞ்செய்து வாழ்வராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

	சு-சூ கே	சந் புத	
செ	இராசிச் சக்கரம்		
	ல-கு	ரா	

(உ-ம்) இச் சக்கரத்தில் விருச்சிக லக்கினம்; இதில் களத்ர காரகரும், களத்ர ஸ்தானாதிபதியென்னும் 7-ம் இடமாகிய இடபத்துக்குரியவரும் சுக்கிரனாக இருந்து 10-ம் இடமாகிய சிங்கத்துக்குரிய சூரியனோடு கூடியிருப்பதையும், குருவானவர் லக்கின திரிகோணத்திலிருப்பதையும், கேந்திரமாகிய 7-ம் இடமென்னும் இடபத்தில் புதனும் சந்திரனு மிருப்பதையும், செவ்வாய் 4-ல் கேந்திரமேறி யிருப்பதையும், இதில் சந்திரனுக்கு 10-ல் இலக்கினாதிபதி கேந்திரமடைந்திருப்பதையும், இராகு 12-ம் இடமாகிய துலாத்திலிருப்பதையுங் காண்க.

36

(இ-ள்.) 7-க்குடையவரோடு கூடி நின்றவர்களும், இரண்டுக்குடையவரோடு கூடி நின்றவர்களும் ஆகிய இரு தரத்தாருடைய ஆட்சி யுச்சம் நட்பு முதலிய க்ஷேத்ர பலமும், தசவர்க்க பலமும் உயர்ந்திருக்கப்பெற்ற சாதகருக்கு உத்தமப் பெண் சேர்வளென்றும், க்ஷேத்ரவர்க்கபலங் குறைந்தால் அதமப்பெண் பொருந்துவாளென்றும், முன் கூறிய 7-க்குடையவரோடும் 2-க்குடையவரோடும் உத்தம கிரகங்கள் எத்தனை சேர்ந்தனவோ அத்தனை உத்தமப் பெண்களை மணம் புரிவரென்றும், பாபக் கிரகங்கள் எத்தனை கூடி நின்றனவோ அத்தனை அதமப் பெண்களை விவாகஞ் செய்வரென்றுங் காண்க.

குறிப்பு

37

	ராகு	சனி	
	இராசிச் சக்கரம்		
குரு			
சந் செ	சூ-சு	ல-பு கே	

(இ-ள்.) [1] தலைபிறைவ னென்னு மிலக்கினாதிபதியினுடைய ஸ்புடமும், 7-க் குடையவனுடைய ஸ்புடமுஞ் சேர்த்து இராசி, பனிரண்டில் வகுத்து வந்தமீதி இராசி, நாள், பாதத்தில் குருவருங்காலத்தில் விவாகம் நடக்குமென்றும், அப்படி விவாகம் நடக்கப்பெற்ற பெண் சுத்த குணமுடைய கற்புடையவளாக வாழ்வள்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] மேற்கூறிய மீதி இராசிநாள், பாதத்தில் பாபக் கிர கங்கள் வந்தால் ஒருவேளை மணநாளெய்தபோதிலும் நீசகுண முடையவளாயும் பூஷணியாயும் வாழ்வள்.

(உ-ம்) இத் துலா லக்கினச் சக்கரத் திற்கு லக்கினதிபதியினுடைய ஸ்புடம், ராசி-7, பாகை-6, கலை-59.

7-க்குடைய செவ்வாயின் ஸ்புடம், ராசி-8, பாகை-11, கலை-29, விகலை-59.

இவ்விரண்டு ஸ்புடத்தையும் கூட்ட ராசி-15, பாகை-19, கலை-28, விகலை-59.

	ராகு	சனி	
	நவாம்ஸ		
குரு	சக்கரம்		
சந் செ	சூரி சுக்	ல-பு கே	

இவற்றை ராசி 12-ல் கழிக்க மீதி ராசி-3, பாகை-19, கலை-28, விகலை-59.

ஆனதால் மேட முதல் மூன்று ராசியுந் தாண்டி நான்கா வது, கடகராசியில் ஆயிலிய நட்சத்திர முதற் பாதத்தில் குரு வரும்போது, விவாகமாம். அப்பெண் சுகுண வதியா யிருப் பாள்.

மேற் கண்ட இராசியில் சனி முதலிய பாவக்கோள் வருங் காலத்தில் ஒருவேளை விவாகம் நடக்கப் பெற்றபோதிலும் அப்பெண் அவகுண முடையவளா யிருப்பாளெனக் காண்க.

[3] இந்தத் துலா லக்கினச் சக்கரத் தில் லக்கினதிபதியுடன் சந்திரன் கூடி இலக்கினத்தில் நின்றால், தாய் வீட்டிற் சேர்ந்து வாழும் பெண்ணை விவாகஞ் செய்பவனெனக் காண்க.

	இராசிச்		
	சக்கரம்		
		ல-சந் சுக்	

38

(இ-ள்.) [1] சுக்கிரனின்ற ராசிக்கு 7-ம் இடத்துக்குடைய வர் இலக்கினத்திற்கு 7-ல் சுபக் கிரகங்களோடு கூடி நிற்கவும், 7-க்குடையவரும் இரண்டுக்குடையவரும் கூடி இரண்டில் நிற்க

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வும், பெற்ற ஜாதகருக்கு 9-க்குடையவர் திசையில் 10-க்குடையவர் புத்தியில் கலியாணம் நடக்கும்.

சனி			ல
	இராசிச்	சக்கரம்	சந் குரு
செ புத		சு	

(உ-ம்.) இச் சக்கரத்தில் மிதுன லக்கினம்; இதில் துலா ராசியில் சுக்கிரனிற்பதையும், அதற்கு 7-ம் இடமாகிய மேடத்துக்குரிய செவ்வாயானது சுபக்கிரகமாகிய புதனோடு கூடி இலக்கினத்திற்கு 7-ம் இடமாகிய தனுசில் நிற்பதையும், இதில் 7-ம் இடமாகிய தனுசுக்குடைய குருவானவர் 2-ம் இடமாகிய கடகத்துக்குரிய சந்திரனோடு கூடி இரண்டாமிடமாகிய கடகத்தில் நிற்பதையுங் காண்க. இச் சாதகருக்கு 9-ம் இடமாகிய மீனராசிக்குரிய குரு புத்தியில் கல்யாணங் கூடும்.

[2] மங்கலத்தோனாகிய செவ்வாயும், 9-க்குடையவரும் சுபக்கிரகங்களும் ஆகிய 3-தரத்தாரும் ஒருவர் மனையில் மற்றொருவர் மாறி நிற்கப்பெற்ற ஜாதகருக்கு பாக்கிய விர்த்தியோடுங் கூடி விவாக முடியும்.

செ		பு	சு
	இராசிச்	சக்கரம்	ல
	குரு		

(உ-ம்.) இச் சக்கரத்தில் லக்கினம் கடகம்; இதில் செவ்வாயும், 9-ம் இடமாகிய மீனராசிக்குரிய குரு ஆகிய இருவரும், செவ்வாயின் வீடாகிய விருச்சிகத்திற் குருவும், குருவின் வீடாகிய மீனராசியில் செவ்வாயும், ஆக ஒருவருக்ொருவர் மாறி யிருப்பதையும், இதில் சுபர்களாகிய சுக்கிரனும் புதனும் இருவரும் சுக்கிரன் வீடாகிய இடபத்திற் புதனும், புதன் வீடாகிய மிதுனத்தில் சுக்கிரனுமாக மேற்கூறியபடி ஒருவருக்கொருவர் மாறி யிருப்பதையுங் காண்க.

39

(இ-ள்.) சந்திரன் எந்த ராசியில் நிற்கின்றாரோ அந்த ராசியாதிபதியின் ஸ்புடமும், சந்திரனுக்கு 7-க்குடையவருடைய

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ஸ்புடமுஞ் சேர்ந்து இராசி யென்னும் 12-ல் வகுக்க வந்த பாக்கியின் இராசியில் குருவரும்போது, தலைவன் ஸ்புடமாகிய இலக்கின ஸ்புடமும், இரண்டுக்குடையவருடைய ஸ்புடமும் பெருக்கிச் சூரியன் நின்ற ராசியாதிபதியின் ஸ்புடத்தை அத் தொகையுடன்கூட்டி 12-ல் வகுக்க, வந்த பாக்கி யெந்த இராசியில் வருமோ அந்த ராசி மாதத்தில் சூரியன் வருங் காலத்திலும் இலட்சுமிக்குச் சமானமான பெண்ணை விவாகஞ் செய்யுங் காலஞ் சேர்ந்ததென்று திடமாகக் கூறுவாயாக.

	ராகு	சனி	
	இராசிச்		
கு	சக்கரம்		
சங் செ	சூரி சுக்	ல-பு கே	

(உ-ம்.) இதில் சந்திரனின்ற இராசியாதிபதி குரு; அவர் ஸ்புடம் ராசி-9, பாகை-4, கலை-11, விகலை-45. சந்திரனுக்கு ஏழுக்குடையவர் புதன்; அவர் ஸ்புடம் ராசி-6, பாகை-17, கலை-45, விகலை-15. இவ்விரண்டு ஸ்புடத்தையும்கூட்ட ராாசி-15, பாகை-21, கலை-57. இதை 12-ல் வகுக்க பாக்கி ராசி-3, பாகை-21, கலை-57. இதை மேட ராசி முதல் எண்ணும்போது கடக ராசியில் ஆயிலியம் இரண்டாம் பாதமானதால் அதில் குரு வரும்போதும்; இலக்கினாதிபதி சுக்கிரன்; அவர் ஸ்புடம் ராசி-7, பாகை-11, கலை-29, விகலை-15. இவ் விரண்டையும் பெருக்க 60-5/8-ராசி வந்தது. அதனோடு சூரியனின்ற ராசியாதிபதி செவ்வாய்; அவர் ஸ்புடத்தையுங் கூட்ட ராசி-69, பாகை-0, கலை-14, விகலை-15. இதில் 12-ல் வகுக்க பாக்கி இராசி-9, பாகை-0, கலை-14, விகலை-15 வந்தது. மேட முதல் எண்ண மகர ராசி வருகிறபடியால் அந்த ராசியில் சூரியன் வரும்போதும் விவாகம் நடக்குமெனக் காண்க.

40

(இ-ள்.) ஐந்துக்குடையவர் குருவினுடைய வீட்டில் கேந்திர மேறவும், ஐந்தாமிடத்தில் குருவிருக்கவும், ஆட்சிபெற்ற சந்திரன் குருவைப் பார்க்கவும், சூரியன் உச்சம் பெற்று ஒன்பதுக்குடையவரோடும் சந்திரன் பஞ்சமாதியோடுங் கூடியிருக்கவும், ராசியென்னும் சந்திரனைக் குரு நோக்கவும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பெற்ற ஜாதகருக்குக் கொஞ்சும்படியான புத்திரர் பலருண்டு. கேந்திரத்திலிருந்த புதன் திசையில் குரு புத்தியில் ஜேஷ்ட புத்திரனுண்டாம்; அப்புத்திரனே ஆயுசுடையவனும். மற்றப் புத்திரர் நிலைப்பது அரிதாகும். பெண்ணாகப் பிறக்கிற் சில நிலைக்குமென்று கூறுக.

புத	சுசெ சூரி		
	இராசிச்		சந்
குரு	சக்கரம்		
சனி			ல

(உ-ம்.) இச் சக்கரத்தில் கன்னியா லக்கினம்; இதில் 5-ம் இடமாகிய மகரத்துக்குரிய சனி குருவின் வீடாகிய 4-ம் இடமென்னும் தனுசில் கேந்திரமடைந்திருப்பதையும், இதில் 5-ம் இடமாகிய மகரத்தில் குருவிருக்க அவரை ஆட்சியடைந்த சந்திரன் கடகத்திலிருந்து பார்ப்பதையும், இதில் சூரியன் மேடராசியில் உச்சமடைந்து 9-ம் இடமாகிய இடபத்துக்குரிய சுக்கிரனோடும் சந்திரனுக்கு 5-ம் இடமாகிய விருச்சிக ராசிக்குரிய செவ்வாயோடுங்கூடி யிருப்பதையும், இதில் இராசி யென்னுஞ் சந்திரனை குரு பார்ப்பதையுங் காண்க.

41

(இ-ள்.) குருவும், 10-க்குடையவரும், சுக்கிரனோடு கூடி இலக்கினத்தி லிருக்கவும், சந்திரனுக்கு 9-க்குடையவர் குருவின்வீட்டிலிருக்கவும், 5-க்குடையவருமாகிய செவ்வாய்க்கு 11-ல் இருக்கவும், 1-4-7-10 ஆகிய கேந்திரங்களிலாகிலும், 1-5-9ஆகிய திரிகோணங்களிலாகிலும் சுக்கிரன் ஆட்சிபெற்று நிற்கவும், 5-ம் இடத்தை குரு பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு விசேட புத்திரருண்டு. குரு திசையில் கேது புத்தியில் ஜேஷ்ட புத்திரனுண்டாம். இப் புத்திரன் தந்தையின் தொழிலைச் செய்து தந்தைக்குப் பணிவிடை புரிந்து, பிதாமகற்கும் தந்தைக்கும் அவ்வாறு புரிந்து புகழுங் கீர்த்தியுமுடையவனுவான்.

(உ-ம்.) இச் சக்கரத்தில் துலா லக்கினம்; இதில் குருவும் 10-ம் இடமாகிய கடகத்திற்குரிய சந்திரனும் ஆகிய இருவரும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

	இராசிச் சக்கரம்		
புத	செ சூரி	ல-கு ச-சு	சனி

சுக்கிரனேடுகூடி கேந்திரமுந் திரிகோணமுமாகிய லக்கினத்தி னிற்பதையும், இதில் சந்திரனின்ற ராசிக்கு 9-ம் ராசியாகியமிதுனத்துக்குரியபுதன் குருவின் வீடாகிய தனுசில் நிற்பதையும், இதில் 5-ம் இடமாகிய கும்பத்துக்குரிய சனியானவன் செவ்வாய்க்கு 11-ம் இடமான கன்னியில் நிற்பதையும் இதில் கேந்திர திரிகோணங்களில் சுக்கிரன் ஆட்சிபெற்று நிற்பதையும், இதில் 5-ம் இடமாகிய கும்பத்தை குரு பார்ப்பதையுங்காண்க.

42

(இ-ள்.) 5-ம் இடத்துக்குடையவர் 4-ம் இடத்தினிற்கவும், குருவானவர் சுக்கிரனுக்குக் கேந்திரத்திலிருக்கவும், அதுவன்றி அவர் இலக்கின கேந்திரமேறி ஆட்சியடைந்திருக்கவும், சந்திரனுக்கு 5-க்குடையவர் லக்கினத்தைப் பார்க்கவும் அல்லது லக்கினத்திலிருக்கவும், சந்திரனுக்கு 9-க்குடையவர் ஆட்சிபெற்று விளங்கிய செவ்வாயோடு கூடி சுக்கிரனுக்கு மூன்றில் நிற்கவும், புதன் 1-5-9 ஆகிய திரிகோணங்களிலொன்றில் நிற்கவும், குருவுக்கு 11-ல் சூரியனிற்கவும் பெற்ற ஜாதகருக்குப் பல புத்திரருண்டாம்; இதில் ஓர் விசேஷயம் யாதெனில், சுக்கிரன்றிசையில் புதன் புசிப்பிற் கொடுக்கும் புத்திரன் நிலைத்து அப்புத்திரன் புத்தியுஞ் சித்தியு முடையவனும் என்பதே. அதன்மேல் சந்திர திசையிலும் செவ்வாய் திசையிலும் புத்திரருண்டாவ ரென்றுங் கூறுக.

புத	செ சூரி		ல
	இராசிச் சக்கரம்		
ராகு			
குரு			சுக்

(உ-ம்.) இச்சக்கரம் மிதுன லக்கினம்; இதில் 5-ம் இடமாகிய துலாத்துக்குரிய சுக்கிரன் 4-ம் இடமான கன்னியி னிற்பதையும் இதில் குருவானவர் சுக்கிரனின்ற ராசிக்குக் கேந்திரமென்னும், 4-ம் இடமாகிய தனுசிலிருக்க அல்லது இலக்கின கேந்திர ஸ்தானமென்னும் 7-ம் இடமாகிய தனுசிலிருந்து ஆட்சியுமடைந்திருப்பதையும் இதில் சந்திரனின்ற ராசிக்கு 5-ம் இட

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மாகிய மீன ராசிக்குரிய குரு, லக்கினத்தைப் பார்ப்பதையும், இதில் சந்திரனின்ற ராசிக்கு 9-ம் இடமாகிய கடகத்திற்குரிய சந்திரன் ஆட்சி பெற்ற செவ்வாயோடு கூடி சுக்கிரனின்ற ராசிக்கு 3-ம் இடமாகிய விருச்சிகத்தில் நிற்பதையும், புதனானவர் திரிகோணமென்னும் 5- ம் இடத்தினிற்பதையும், குருவுக்கு 11-ம் இடமாகிய துலாத்தில் சூரிய னிற்பதையும் காண்க.

43

(இ-ள்.) 1-4-7-10 ஆகிய கேந்திரங்களி லொன்றில் 5-க்குடையவர் 3-க்குடையவரோடு கூடிநின்று, அவர்களை குரு பார்க்கவும், சந்திரனுக்கு 9-ம் இடத்திற் குரு நிற்கவும், அக்குரு நின்ற ராசிக்குடையவர் சந்திரனுக்கு 5-ல் நின்று இவரையும் குருபார்க்கவும், சந்திரனுக்கு 1-4-7-10 ஆகிய கேந்திரங்களி லொன்றிற் சூரியன் நிற்கவும், சந்திரன் 1-5-9 ஆகிய திரிகோணத்தி லொன்றில்நிற்கவும், 9-க்குடையவர் 9-ம் இடத்திற்கு 1-4-7-10 ஆகிய கேந்திரங்களிலொன்றி னிற்கவும் பெற்ற ஜாதகருக்கு ராகு திசையில் புதன் புத்தியில் பெண் மக்களுண்டாம். குரு திசையில் சனி, புதன், கேது இவர்கள் புசிப்பில் மூன்று பெண்கள் உற்பத்தியாகி குரு திசையில் சந்திர புசிப்பில் ஆண் புத்திரருண்டா மென்க.

செ சனி	கு	புத	
சுக்	இராசிச் சக்கரம்		
சந்			
			ல குரு

(உ-ம்.) இச் சக்கரத்தில் கன்னியா லக்கினம்; இதில் கேந்திரஸ்தானமென்னும் 7-ம் இடமாகிய மீனத்தில் 5-ம் இடமாகிய மகரத்துக்குரிய சனியானவர் 3-ம் இடமாகிய விருச்சிகத்துக்குரிய செவ்வாயோடு கூடி நின்று அவர்களை குரு பார்ப்பதையும், சந்திரனின்ற ராசிக்கு 9-ம்இடமாகிய கன்னியில் குருவும், அக்கன்னிக்குரிய புதனனவர் சந்திரனின்ற ராசிக்கு 5-ம் இடமாகிய இடபத்தில் நிற்பதையும், இவரை குரு பார்ப்பதையும், இதில் சந்திரனின்ற ராசிக்கு கேந்திரஸ்தானமென்னும் 4-ம் இடமாகிய மேடத்தில் சூரியன் நிற்பதையும், சந்திரன் லக்கினத்திற்குத் திரிகோணமென்னும் 5-ம் இடமாகிய

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மகரத்தில் நிற்பதையும், 9-ம் இடமாகிய இடபத்திற்குரிய சுக்கிரன் 9-ம் இடத்திற்கு கேந்திர ஸ்தானமாகிய 10-ம் இடமாகிய கும்பத்திலிருப்பதையும் காண்க.

44

(இ-ள்.) [1] 5-க்குடையவர் நவாம்ச சக்கரத்திற் சொட்சேத்திரம் பெற அல்லது அவரிருந்த நவாம்சாதிபதி அந் நவாம்சத்திற் சொட்சேத்திரம் பெற்ற ஜாதகருக்குப் பூரண ஆயுளுள்ள ஏகபுத்திர னுண்டென்றுங் கூறுக.

[2] மேற்கூறிய 5-க்குடையவரை பொன்னென்னும் குரு பகவான் இலக்கினத்திலிருந்து நட்புடன் நோக்கினுலும் புத்திரனுண்டென்றுங் கூறுக.

[3] இலக்கினத்தி லிருந்தவர்களும், புண்ணியமென்னும் 9-ம் இடத்தி லிருந்தவர்களும், இவர்களைப் பார்ப்போரும், இவருடன் கூடி நின்றோர்களும், புண்ணிய கிரகங்களென்னும் குரு, சுக்கிரன், சந்திரன், புதன் ஆகிய இவர்களாகில் இளமையிற் புத்திரனுண்டா மென்றுங் கூறுக.

[4] 5-க்குடையவர், 5-ம் இடத்தில் வலிமை பெற்ற கிரகங்களோடும், சுபக்கிரகங்களாகிய சந்திரன், சுக்கிரன், புதன், குரு ஆகிய இவர்களோடுங் கூடி குரு வீட்சண்யமும் பெற்ற ஜாதகருக்கு சிறப்புப் பொருந்திய பூரண வயதுள்ள புத்திரருண்டு என்றுங் கூறுக.

(உ-ம்.) இச் சக்கரத்திற் கன்னியா லக்கினம்; இதில் 5-ம் இடமாகிய மகரத்துக்குரிய சனி 5-ம் இடத்தில் பலம்பெற்றிருக்கின்ற செவ்வாயோடும், சுக்கிரன் சந்திரன் இவர்களோடும் கூடி நின்று, இவர்களைக் குரு பார்ப்பதையுங் காண்க.



CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

45

(இ-ள்.) [1] இலக்கினத்திற்கு 5-ம் இடத்திற் சூரியனிற்க வும், 5-க்குடையவர் பலம் பெற்று நிற்கவும், தாரை மணாள ஞகிய சந்திரன் 1-5-9 ஆகிய திரிகோணங்களி லொன்றிற் சிறந்து நிற்கவும், பெற்ற ஜாதகன் பொன்னிறம் போன்ற புத்திரரைப் பெற்று பலவிதமான சுகங்களைப் பெறுவன்.

(உ-ம்.) இச் சக்கரத்திற் கன்னியா லக்கினம்; இதில் 5-ம் இடமாகிய மகரத் திற் சூரிய னிற்பதையும், அம் மகரத்திற் குரிய சனி உச்சமடைந்து துலா ராசியில் வலுப்பெற்று நிற்பதையும், இதில் சந் திரன் 9-ம் இடமாகிய இடபத்தில் திரிகோண வலுப்பெற் றிருப்பதையுங் காண்க.

[2] புரோகிதனுகிய குருவானவர் 5-ம் இடத்தி னிற்கவும், 5-க்குடையவர் பலமடையவும், அவர்களைச் சுபக்கிரகங்கள் பார்க்கவும், பெற்ற ஜாதகருக்குப் புத்திரருண்டா மென்க.



(உ-ம்.) இச்சக்கரத்தில் கடக லக்கி னம்; இதில் 5-ம் இடமாகிய விருச்சிகத் தில் குருவிருப்பதையும், அவ் வைந்துக் குடைய செவ்வாய் ஆட்சி யடைந்து வலுப்பெற்று 5-ம் இடத்தி னிற்பதை யும், அவர்களைப் புண்ணிய கிரகங்க ளென்னும் சந்திரன், சுக்கிரன், புதன் ஆகிய இவர்கள் பார்ப்பதையுங் காண்க.

[3] மேற்கூறிய கிரகங்களில் நன்மையைத் தருகின்ற குருவானவர், வைசேடி காங்கிஷமெனும் தசவர்க்கத்தில் ஆறு ராசியிலுமேறி மேற்கூறிய சுபர்களுடைய நேர் பார் வையும் பெறுவாராகில் மேன்மையான புத்திரரைப் பெறு வார்.

46

(இ-ள்.) [1] இலக்கினதிபதி 5-ம் இடத்தினிற்கவும், அவ ரோடு இராகு அல்லது கேது கூடவும், 5-க்குடையவர்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வலுப்பெற்று நிற்கவும், அவரோடு வேதனுகிய 4-க்குடையவர் கூட அல்லது பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு வாலிபத்திற் புத்திரனுண்டாம்.



(உ-ம்.) இச் சக்கரத்தில் மேட லக்கினம்; இதில் இலக்கினதிபதியாகிய செவ்வாய் 5-ம் இடமாகிய சிங்கத்தினிற்பதையும், அவரோடு கேது கூடியிருப்பதையும், 5-ம் இடமாகிய சிங்கத்துக்குரிய சூரியன் மேட ராசியில் உச்ச வலுவடைந்து நிற்பதையும், அவரோடு 4-ம் இடமாகிய கடகத்திற்குரியசந்திரன் கூடி நிற்பதையுங்காண்க.

[2] 5-க்குடையவர் நவாங்கிஷ சக்கரத்தில் எந்த ராசியில் நிற்கின்ருரோ அதுமுதல் ஜாதகனுடைய ஜென்மலக்கினம் வரையில் எண்ணினல் எத்தனை யிராசி வருமோ அத்தனை புத்திரர் பெறுவர்.

(உ-ம்.) இந்த நவாம்ஸ சக்கரத்தில் மேலெழுதிய மேட லக்கினத்திற்கு 5-க்குடையவர் சூரியன். அவர் இந்த நவாம்ஸ சக்கரத்தில் தனுசு ராசியிலிருப்பதால் அவை முன் ஜென்ம லக்கினமாகிய மேடமுதல் எண்ணும்போது 9-ராசி யாகிறபடியால் 9-புத்திருண்டாமெனக் காண்க.

[3] இலக்கினதிபதி 7-ம் இடத்தி னிற்கவும், 7-க்குடையவரும், 4-க்குடையவருங் கூடி பலஹீனமடையாமல் பலத்து நிற்கவும், 2-க்குடையவர் லக்கினத்திலாகிலும், 5-ம் இடத்திலாகிலு மிருக்கவும், அவரைக் குரு பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு நிலைத்த புத்திரனுண்டாம்.



(உ-ம்.) இச் சக்கரத்தில் கடக லக்கினம்; இதில் லக்னதிபதியாகிய சந்திரன் 7-ம் இடமாகிய மகரத்தி லிருப்பதையும், 7-க்குடையவராகிய சனியும், 4-க்குடையவராகிய சுக்கிரனும் கூடி உச்சமும் ஆட்சியுமடைந்து பலம் பெற்று நிற்பதையும், இரண்டாமிடமாகிய சிங்கத்துக்குரிய சூரியன் 5-ம் இடத்திலிருப்பதையுங் காண்க.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

47

(இ-ள்.) 5-க்குடையவர் நின்ற ராசியாதிபதியின் ஸ்புடத்தையும், சூரியன் ஸ்புடத்தையுங் கூட்டி 12-ல் வகுத்து வந்த பாக்கி ராசி-பாகை-கலை ஆகியவைகளில் குரு வருங் காலத்தில் அழகிய புத்திர னுண்டாம்.

(உ-ம்.) இந்தச் சக்கரத்தில் லக்கினம் துலாம்; 5-க்குடையவர் சனி, அவரிருந்த ராசி இடபம், அவ்விடபத்துக்குரிய சுக்கிரன் ஸ்புடம் ராசி-7, பாகை-6, கலை-59, விகலை-45 இதில் சூரியன் ஸ்புடம் ராசி-7, பாகை-23, கலை-45, விகலை-3¾ இவை இரண்டு ஸ்புடத்தையும் ஒன்ருய்க் கூட்ட மொத்தம் ராசி 15, பாகை 0, கலை-45, விகலை-15¾ இதை 12-ல் வகுக்க பாக்கி ராசி-3, பாகை-0, கலை-45, விகலை-15¾ இதை மேடம் ஆதியாக எண்ணும்போது கடகம் வருகிறபடியால், அக்கடகம் முதற்பாதத்தில் குரு வந்த காலத்தில் புத்திர னுண்டானதைக் காண்க.

		சனி	
	இராசிச் சக்கரம்		
	சு கு	ல	

[2] 5-க்குடையவர் புடத்தில் முதுமகனென்னும் சனியின் ஸ்புடத்தைக் கழித்து நின்ற பாக்கி ராசியில் குருவருங் காலத்தில் விசேட புத்திர னுண்டாம்.

(உ-ம்.) மேற்கண்ட சக்கரத்தில் 5-க்குடையவரும், சனியும் ஆகிய இருவரும் ஒருவராகி அவர் ஸ்புடம் ராசி-1, பாகை-17, கலை-39, விகலை-7, தற்பறை-3 வந்தன. இதை மேடமாதியாக எண்ணும்போது இடபராசியில் உரோகணி 3-ம் பாதம் வந்த படியால் அந்த ராசி பாதத்தில் குருவந்த போது விசேட புத்திரனுண்டானதைக் காண்க.

[3] 5-க்குடையவர் சுபனுகி உச்சமடைந்தாலும், அல்லது 11-ம் இடத்தில் நட்படைந்து நின்ருலும், சுகமாகிய புத்திர னுண்டாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

(உ-ம்) இச் சக்கரத்தில் மிதுன லக்கினம்; 5-ம் இடம் துலாம்; அதற்குடைய சுக்கிரன் சுபனாகி மீனத்தில் உச்சம் பெற்றிருப்பதைக் காண்க.



[4] இவ்விதச் சக்கரத்தில் 11-ம் இடமாகிய மேடத்தில் சுக்கிரனை அமைத்து நட்பு பெற்றிருப்பதைக் காண்க.

[5] 5-க்குடையவரோடு கூடினவர் எத்தனை பேரோ அத்தனை புத்திரருண்டாம்.

[6] லக்கினத்தில் சந்திரன் நிற்கவும், சுக்கிரன் 6-ம் இடத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு ஏக புத்திரனுண்டாம்.



(உ-ம்.) இதில் இடப லக்கினம்; இதில் சந்திரன் நிற்பதையும், 6-ம் இடமாகிய துலாத்தில் சுக்கிரன் நிற்பதையுங் காண்க.

48

(இ-ள்.) கதிரென்னுஞ் சூரியனும், மதியென்னும் சந்திரனும் ஆகிய இருவர்களுக்கும உரிய கேந்திர ஸ்தானங்களில் முன்கூறிய இடப லக்கினச் சக்கரத்தில் நிற்கப்பெற்ற ஜாதகருக்குப் புத்திரனிருந்தும் கருமஞ் செய்யானும்.

(உ-ம்,) [1] இதில் இடப லக்கினம்; சூரியன், சந்திரன் ஆகிய இருவர்களுக்கும், உரிமையான கேந்தரமாகிய 10-ம் இடத்தில் இருப்பதையுங் காண்க.



[2] 5-க்குடையவர் சூரியனோடு கூடி நிற்கப் பெற்ற ஜாதகருக்கு பன்றியைப் போல் பல புத்திரருண்டாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

(உ-ம்.) இதில் மிதுன லக்கினம்; 5-ம் இடமாகிய துலாத்துக்குரிய சுக்கிரன் சூரியனோடு கூடி நிற்பதைக்காண்க.

[3] சூரியனுக்கு 1-4-7-10 ஆகிய கேந்திரங்களி லொன்றில் சந்திரன் நிற்கப் பெற்ற ஜாதகர் தன் பிதாவுக்குக் குறைந்த யோக முடையவராம்.

(உ-ம்.) இச் சக்கரத்தில் மேட ராசியில் சூரியன் நிற்பதையும், அதற்கு 10-ம் இடத்தில் சந்திரன் நிற்பதையுங் காண்க.

சந்திரன் லக்கினத்திற்கு 11-2-5-8 ஆகிய இந்த இடங்களி லொன்றி லிருக்கில் பிதாவுக்குச் சமமா யிருப்பன். சந்திரன் ஆபோகிலிய மென்னும் 9-12-3-6 ஆகிய இந்த விடங்களி லொன்றி லிருக்கில் பிதாவுக்கு மேலா யிருப்பன். சந்திரன் 5-7-9-12 ஆகிய இந்த விடங்களி லொன்றில் நட்பாட்சி யுச்சம் பெற்று இராஜ பார்வையு மடைந்தால், தனக்கு மேல் பத்தாயிரம் பங்கு கொண்ட புதல்வனைப் பெறுவன்.

49

இடப லக்கினத்திற் செனிக்க, அந்த லக்கினத்திற்கு 5-ம் இடத்தில் குருவிருக்க, ஐந்துக்குடையவர் இந்த மண்டலமாகிய சந்திரன் வீட்டிலிருக்க; ஏழாம் இடத்திற்குத் திரிகோணத்தில் செவ்வாயிருக்க, உடுபதியாகிய சந்திரன், குரு வீட்டினும், குரு கேந்திரத்திலு மிருக்க, அவரை ஒள்ளியோனுகிய சுக்கிரன் பார்க்க, சந்திர கேந்திரத்தில் அறிவனுகிய செவ்வாயிருக்க, அவரைக் குரு நோக்க, செனனமான ஜாதகருக்கு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சுக்கிர திசை மத்தியில் விவாகம் முடியும்; சந்திர திசையில் புத்திரிகளுண்டாம். அதில் இளைய பெண் இலட்சுமிக்குச் சமமாக பாக்கியவதியாய் இப் பெண்ணால் செல்வமும் புகழுஞ் சித்திரமாட உப்பரிகையுங் கிடைக்கும். சந்திர திசை செவ்வாய் திசை இவற்றில் புத்திரன் கிடைப்பான்.

50

கேந்திரங்கள்

இலக்கினத்திற்கு இலக்கின கேந்திரமென்றும், இலக்கின முதல் 4-ம் வீட்டிற்கு சுக கேந்திரமென்றும், இலக்கின முதல் 7-ம் வீட்டிற்கு-சத்தம கேந்திரமென்றும், இலக்கின முதல் 10-ம் வீட்டிற்கு - தசம கேந்திரமென்றும் பெயராம்.

(உ-ம்.) இந்தச் சக்கரத்திற் காண்க:



திரிகோணங்கள்

1-5-9 - ஆகிய இடங்கள் திரி கோணமாம்.

(உ-ம்.) இந்த சக்கரத்தில் லக்கினம் துலாம்; இதில் 1-ம் 5-ம் 9-ம் இடங்கள் திரிகோண மென்னப்படும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பண்பரங்கள்

லக்கினத்திற்கு 11-ம் இடம், 2-ம் இடம், 5-ம் இடம், 8-ம் இடம் ஆகிய இந்நான்கு ராசியும் பண்பரங்களாம்.

ஆபோகிலியம்

லக்கினத்திற்கு 9-ம் இடம், 12-ம் இடம், 3-ம் இடம், 6-ம் இடம் இந்த நான்கு ராசிகளும் ஆபோகிலியமாம். மற்றைய நான்கு ராசியுங் கேந்திரமாம்.

மேற்சொன்ன கேந்திரம், திரிகோணம், பண்பரம், ஆபோகிலியம் ஆகியவைகளை இச்சக்கரத்தில் முறையே காண்க.

6 ஆபோகிலியம்	7 கேந்திரம்	8 பண்பரம்	9 ஆபோகிலியம்
5 பண்பரம்	இராசிச் சக்கரம்		10 கேந்திரம்
4 கேந்திரம்			11 பண்பரம்
3 ஆபோகிலியம்	2 பண்பரம்	1 ல கேந்திர	12 ஆபோகிலியம்

காரகாதி பத்தியங்கள்

[1] சூரியனானவர் - பிதிர், பிரதாபம், உட்டிணம், சத்திய வசனம், ஞான உதயம், ஆன்மா, உத்யோகம், பைத்தியம், பரிபாலனம், சித்தம் ஆகிய பத்து காரகாதி பத்தியமுடையவர். அதுவின்றி அவருக்கு தான வலுவாலும், கதியாலும், அவரடைந்த வுரிமையாலும், கணித முணர்ந்த நாதர்கள் இன்னும் பல காரகாதி பத்தியம் கூறுவார்கள்.

51

[2] சந்திரனானவர்-மாதுர், இடபாகம், அழகு, குளிர்ச்சி, முகம், சிலேற்றுமம், பூமுதலிய வாசனை திரவியங்கள், சந்தனு தியனுலேபனம், அறம், நேசம் ஆகிய எட்டு காரகாதிபத்திய முடையவர்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[3] செவ்வாய்-சகோதரம், சிறந்த போர், பூமி, பித்த ரோகம், பராக்கிரமம் ஆகிய ஐந்து காரகாதி பத்திய முடையவர்.

[4] புதன் - வித்தை, மாதுலன், தீர்க்கமாகிய அதிசெய பந்துத்வம், கேள்வி, செட்டு முதலிய காரகாதி பத்திய முடையவர்.

[5] குருவானவர் - புத்திரன், வேதத்தெளிவு, பொன் னிருக்குமிடம், ஆபரண முதலிய காரகாதி பத்திய முடையவர்.

52

[6] (இ-ள்.) சுக்கிரன் - களத்திரம், சந்தோஷம், சுகம், மாணிக்கம், மந்திரம், சம்போகம், களப கஸ்தூரி வாசனை, மங்களகரம், அலங்காரம், வாகனம், பசுக்குலச் சேர்க்கை, சுகிர்தம் ஆகிய 12-காரகாதி பத்தியங்க ளுடையவர்.

[7] சனி - ஆயுசு, பசி, தாகம், துற்பலம், ஆபத்து, அவஸ் தை, வாதரோகம் ஆகிய ஏழுகாரகாதி பத்திய முடையவர்.

[8] இராகு-தீர்த்த யாத்திரை, சாஸ்திர சம்பன்னம், ஐஸ் வரியம், காம சம்போகம், எக்ஷணியாட்டம், பொய்க்குடிலம், பக்குவம், வைத்தியம், தைரியம், பகைமை, பாண்டுரோகம், களவு, பரக்ரகப்பிரவேசம் ஆகிய 13-காரகாதி பத்தியங்க ளுடையவர்.

53

[9] (இ-ள்.) கேது - ஞானம், கேவலம், தெய்வத்தியானம், தவசு, மௌனம், வைராக்கியம், சன்னியாசம், நிதானம், மாதுர்மகீகாரம், திடச்சித்தம், மனவெறுப்பு, இலாகிரிப்பழக் கம், வீடின்மை, மோட்ச சாம்பிராச்சியம், வாழ்வு ஆகிய 14-காரகாதி பத்திய முடையவர்.

இந்த நவக்கிரக காரகாதி பத்தியங்களை அக் கிரகங் களின் பெலம், பெலஹீனம், ஆகிய உச்சம், ஆட்சி, நட்பு, பகை, நீசம், என்பனவற்றையே வலுச்செலவென்றுங் கூறு வர். அவையன்றி அந்தக் கிரகங்களுக்குள்ள உட்பகை, நட்பு இவைகளைக் கொண்டும் சொல்லாதவைகளை யறிந்துணர்ந்தும் சொல்லுவர் உத்தமர்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பாலாரிட்டம்

54

ராகு		குரு சுக்	
சூரி	இராசிச்		
	சக்கரம்		ல
		செ	சனி சந்

[1] (இ-ள்.) லக்கினத்திற்கு 3-ம் இடத்திற் பாவக்கிரகமும் 8-ம் இடத்திற் பாவக்கிரகமு மிருக்கவும், சந்திரனுஞ் சனியும், இராகுவுக்கு 7-ம் இடத்தி லிருக்கவும், சூரியனுக்கு நான்காமிடத்திற் சுக்கிரனும், குருவு மிருக்கவும் பெற்ற ஜாதகன் ஜீவியான்.

(உ-ம்.) இதில் சிம்மலக்கினம்; லக்கினத்திற்கு 3-ம் இடமாகிய துலாத்தில் செவ்வாயும், லக்கினத்திற்கு 8-ம் இடமாகிய மீனத்தில் ராகு இருப்பதையும், சந்திரனும் சனியும், ராகுவிற்கு 7-ம் இடமாகிய கன்னியிலிருப்பதையும், சூரியனுக்கு 4-ம் இடமாகிய ரிஷபத்தில் குரு, சுக்கிரன் ஆகிய இவர்களிருப்பதையுங் காண்க.

[2] 4-க்குடையவருக்கு 6-ம் இடத்திற் சனி யிருக்க, அந்தச் சனிக்கு 4-ம் இடத்திற் செவ்வா யிருக்க, இலக்கினத்திற்கு 8-க்குடையவர் கேந்திரமேறில் ஜாதகன் ஜீவியான்.

	சூ	ல குரு	
	இராசிச்		
	சக்கரம்		
செ			சனி

(உ-ம்.) இது இடப லக்கினம்; லக்கினத்திற்கு 4-க்குடைய சூரியனுக்கு 6-ம் இடமாகிய கன்னியில் சனி யிருப்பதையும், அந்தச் சனிக்கு நான்கா மிடமாகிய தனுசில் செவ்வாயிருப்பதையும், இலக்கினத்திற்கு 8-ம் இடத்திற்குரிய குரு லக்கின கேந்திரம்பெற்றிருப்பதையுங் காண்க.

[3] இராகுவுக்கு 4-ம் இடத்தில் சனி யிருக்கவும், அந்தச் சனிக்கு 10-ம் இடத்தில் சூரியன், புதன், சுக்கிரன் ஆகிய இவர்கள் இருக்கவும், சந்திரனும் 8-ம் இடத்திற் குரியவரும் ஆகிய இருவரும் 1-4-7-10 ஆகிய கேந்திரங்களி லொன்றில் நிற்கவும் பெற்ற ஜாதகன் 2-வருஷத்தில் அரிஷ்ட மடைவனும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

(உ-ம்.) இது சிங்க லக்கினம்; இடபத்தில் ராகு இருப்பதையும், அந்த ராகுவுக்கு நான்காமிடமாகிய சிங்கத்தில் சனி யிருப்பதையும், அந்தச் சனிக்கு 10-ம் இடமாகிய இடபத்தில் சூரியன், புதன், சுக்கிரன் இவர்கள இருப்பதையும், சந்திரனும், 8-ம் இடத்திற்குரிய குருவுங் கூடி 7-ம் இடத்தி லிருப்பதையுங் காண்க.

		ரா-பு சூ-சு	
குரு சனி	இராசிச்		
	சக்கரம்		சனி ல
	கே		

[4] சூரியனுக்கு 8-க்குடையவர் லக்கினத்தி லிருக்கவும், சனிக்கு 8-க்குடையவர் சந்திரனுடன் கூடி நிற்கவும், 8-க்குடையவருக்கு 8-ம் இடத்துக்குடையவர், லக்கினத்திற்கு 7-ம் இடத்தி லிருக்கவும், அவரைச் சுபக்கிரகங்களாகிய குரு, புதன், சந்திரன், சுக்கிரன் இவர்கள் பார்க்கா திருக்கவும் பெற்ற ஜாதகன் ஒரு வருஷத்தில் மரிப்பான்.

(உ-ம்.) இது மீன லக்கினம்; மிதுனத்தில் சூரியன், அச் சூரியனுக்கு 8-ம் இடம் மகரம், அதற்குரிய சனி லக்கினத்தி லிருப்பதையும், அந்தச் சனிக்கு 8-ம் இடம் துலாம், அதற்குரிய சுக்கிரன் சந்திரனோடு கூடி நிற்பதையும், லக்கினத்திற்கு 8-க்குடையவராகிய சுக்கிரனுக்கு 8-ம் இடத்துக்குரிய செவ்வாய் 7-ம் இடமாகிய கன்னியி லிருப்பதையும், அவரைச் சுபக்கிரகங்கள் பார்க்காதிருப்பதையுங் காண்க.

சனி ல	சந் சுக்	புத	சூரி
	இராசிச்		ரா
கே	சக்கரம்		
		குரு	செ

[5] லக்கினத்திற்கு 4-ம் இடத்தில் சனி யிருக்கவும், 2-ம் இடத்தில் ராகு விருக்கவும், 12-ம் இடத்தில் சூரிய னிருக்கவும், புதனும் செவ்வாயும் 10-ம் இடத்திலிருக்கவும், குரு 4-ம் இடத்திலிருக்கவும் பெற்ற ஜாதகன் 4-வருஷத்தில் சந்தேகமில்லாமல் அரிட்டமடைவனும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

(உ-ம்.) துலா லக்கினம்; லக்கினத்திற்கு 4-ம் இடமாகிய மகரத்தில் சனியும், குருவு மிருப்பதையும், 2-ம் இடமாகிய விருச்சிகத்தில் ராகுவும், 12-ம் இடமாகிய கன்னியில் சூரியனும், 10-ம் இடமாகிய கடகத்தில் புதனுஞ் செவ்வாயும் கூடி யிருப்பதையுங் காண்க.

		கே	
	இராசிச்		புத செவ்
குரு சனி	சக்கரம்		
	ராகு	ல	சூ

[6] 8-ம் இடத்திற்குடையவர் நீச பங்கமடையவும், 7-ம் இடத்திற்குடையவர் அதிபாபர்களாகிய சனி ராகுவோடுங் கூடி பங்க மடையவும், லக்கினாதிபதி சூரியனோடு கூடி அஸ்தங்க மடையவும், சனியும் சந்திரனும் பலக்குறைவடைந்து கேந்திர ஸ்தானத்தி லிருக்கவும் பெற்ற ஜாதகன் மாந்த ரோகத்தால் ஒரு வருஷத்தில் அரிட்டமடைவன்.

(உ-ம்.) இது கன்னியா லக்கினம்; லக்கினத்திற்கு 8-ம் இடம் மேடம்; அதற்குடைய செவ்வாய் 11-ம் இடமாகிய கடகத்தில் நீசமடைந்திருப்பதையும், 7-ம் இடம் மீனம்; அதற்குடைய குரு ராகுவோடு கூடி இழிவடைந்திருப்பதையும், லக்கினாதிபதியாகிய புதன் சூரியனோடு 6-ம் இடத்திலிருந்து அஸ்தங்க மடைந்திருப்பதையும், சந்திரனும் சனியும் பகைபெற்று, 7-ம் இடத்தில் கேந்திர மடைந்திருப்பதையுங் காண்க.

சந் சனி			
சூ-பு	இராசிச்		செ கே
குரு ராகு	சக்கரம்		
			ல

[7] சகோதரகாரகனான செவ்வாயும், 8-ம் இடத்துக்குடையவரும் கூடி 10-ம் இடத்திலிருக்கவும்; அவர்களை 7-க்குடையவர் 4-ம் இடத்திலிருந்து பகையாகப் பார்க்கவும், சந்திரனும் சனியும் பகையாகக் கூடி 3-6-8-12-ம் இடத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகன் இரண்டு வருஷத்தில் மரணமடைவன்,

(உ-ம்.) இது கன்னியா லக்கினம்; இதில் செவ்வாயும், 8-ம் இடத்துக் குரியவரும் ஒருவராயிருந்து 10-ம் இடமாகிய மிதுனத்திலிருப்பதையும், அவரை 7-ம் இடத்துக்குரிய குரு பகைத்துப் பார்ப்பதையும் சந்திரனும் சனியும் பகையடைந்து 6-ம் இடமாகிய கும்பத்திலிருப்பதையுங் காண்க.

			செ
சந் சனி	இராசிச்		
	சக்கரம்		
குரு			ல

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[8] இலக்கினத்திற்கு 6-க்குடையவரும், சந்திரனுக்கு 3-க்கும் 6-க்கு முடையவர்களுமாகிய 3-கிரகங்களும் ஒன்றுகூடியிருக்கவும், அவர்களை சுபக்கிரகங்கள் பாராதிருக்கவும் பெற்ற ஜாதகன் 4-வருடத்தில் அரிட்டப்படுவனும்.

(உ-ம்.) இது மகர லக்கினம்; லக்கினத்திற்கு 6-ம் இடம் மிதுனம்; அதற்குடைய புதனும் சந்திரனுக்கு 3-ம்இடத்துக்குரிய சனியும், 6-ம் இடத்துக்குரிய செவ்வாயும், இம்மூன்று கிரகங்களும் ஒன்று கூடி யிருப்பதையும், அவர்களை சுபக்கிரகங்களாகிய குரு, சுக்கிரன், புதன், சந்திரன் ஆகிய இவர்கள் நோக்கா திருப்பதையுங் காண்க.

[9] சந்திரனுக்கு 10-4-7 இம்மூன்று ஸ்தானங்களில் சனியும் செவ்வாயு மிருக்கவும், ஐந்துக்குடையவரும் இலக்கினுதிபதியும் கூடி 12-ல் இருக்கவும் பெற்ற ஜாதகன் இரண்டு வருஷத்தில் அரிட்டப்படுவனும்.

(உ-ம்.) இது இடப லக்கினம்; லக்கினத்திற்கு 7-ம் இடமான விருச்சிகத்தில் சந்திரன்; அந்த சந்திரனுக்கு 10-ம் இடமான சிங்கத்திற் சனியும் செவ்வாயு மிருப்பதையும், 5-ம் இடத்துக்குரிய புதனும், லக்கினுதிபதியுங் கூடி லக்கினத்திற்கு 12-ல் இருப்பதையுங் காண்க.

[10] 8-ம் இடத்துக்குடையவரும், 6-ம் இடத்துக்குடையவருங் கூடி சந்திரனுக்கு 4-ம் இடத்திலிருக்கப் பெற்ற ஜாதகன் அரிட்ட முடையவனும்.

(உ-ம்.) இது மீன லக்கினம்; லக்கினத்திற்கு 6-ம் இடமான சிங்கத்துக்குரிய சூரியனும், 8-ம் இடமான துலா ராசிக்குரிய சுக்கிரனும் ஆகிய இருவர்களும் சந்திரனுக்கு 4-ம் இடமான கும்பத்திலிருப்பதைக் காண்க.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[11] 4-ம் இடத்துக்குடையவரும், சந்திரனுக்கு 6-க்குடையவருமாகிய இருவருங் கூடி இருக்கவும், அவர்களை 8-க்குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகனுக்கு அரிட்டமுண்டாம்.

(உ-ம்.) இது கன்னியா லக்கினம்; 6-ம் இடம் தனுசு; அதற்குடைய குருவும், சந்திரனுக்கு 6-ம் இடத்துக்குரிய சனியுங் கூடி நிற்பதையும், இவர்களை 8-ம் இடத்துக் குரிய செவ்வாய் பார்ப்பதையுங் காண்க.

சனி குரு			
	இராசிச் சக்கரம்		
			சந்
			ல செ

[12] 8-ம் இடத்துக் குரியவர் 4-ல் இருக்கவும், சந்திரன் 8-ம் இடத்திலிருக்கவும், சனிக்கு 7-ம் இடத்தில் சூரியன் நிற்கவும் பெற்ற ஜாதகன் அரிட்டப்படுவன்.

(உ-ம்.) இது மேடலக்கினம்; 8-ம் இடம் விருச்சிகம்; அதற்குடைய செவ்வாய் 4-ம் இடத்திலிருப்பதையும், சந்திரன் 8-ம் இடமாகிய விருச்சிகத்திலிருப்பதையும், சனிக்கு 7-ம் இடத்தில் சூரியன் நிற்பதையுங் காண்க.

சூ	ல		
	நவாம்ச		செவ்
	சக்கரம்		
	சந்		சனி

[13] 7-ம் இடத்தில் சனியிருக்கவும், 7-க்குடைய சுக்கிரனுக்கு 8-க்குடையவரும் அவரோடு கூடி நிற்கவும், அவர்களைச் சுபர்கள் பார்க்காதிருக்கவும், 8-ம் இடத்தில் சந்திரனோடு பாவக்கிரகங்கள் கூடி நிற்கவும் பெற்ற ஜாதகன் 5-வருஷத்திற்குள் அரிட்டமடைவன்.

(உ-ம்.) இது லக்கினம் மேடம்; அதற்கு 7-ம் இடமாகிய துலாத்தில் சனியும், 7-ம் இடத்துக்குரிய சுக்கிரனுக்கு 8-ம் இடத்துக்குரிய செவ்வாயும், அச்சனியோடு கூடி நிற்பதையும், சந்திரன் 8-ம் இடத்தில் பாவரோடு கூடி நிற்பதையுங் காண்க.

	ல	கே	
	இராசிச்		
	சக்கரம்		
	சந் ராகு	சனி செ	சுக்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[14] லக்கினாதிபதியும், சந்திரனுக்கு 8-க்குடையவரும், லக்கினத்திற்கு 10-க்குடையவரும், 8-க்குடையவருமாகிய நால்வரும் 1-4-7-10 ஆகிய கேந்திரங்களிலொன்றில் நிற்கவும், இவர்களை 2-க்குடையவர் பார்க்கவும், சந்திரனுக்கு 7-ல் சனி இருக்கவும் பெற்ற ஜாதகன் 5-வருஷத்தில் அரிட்ட மடைவனும்.

(உ-ம்.) லக்கினம் விருச்சிகம்; லக்கினாதிபதியாகிய செவ்வாயும், சந்திரனுக்கு 8-க்குடையவராகிய சுக்கிரனும், லக்கினத்திற்கு 10-க்குடையவராகிய சூரியனும் 8-க்குரிய புதனும் ஆகிய நால்வரும் கேந்திரத்திலிருப்பதையும், இவர்களை 2-க்குடைய குரு பார்ப்பதையும், சந்திரனுக்கு 7-ம் இடத்தில் சனி யிருப்பதையுங் காண்க.

	சனி		குரு
செ சு சூ-பு	இராசிச் சக்கரம்		
	ல	சந்	

[15] சனியும் 8-ம் இடத்துக்குடையவருங் கூடி 12-ம் இடத்திலிருக்கவும், அதில் ஒரு கிரகம் நீசமடையவும், சனிக்கு 8-ம் இடத்தில் பாவர்கள் நிற்கவும் பெற்ற ஜாதகன் 5-வருஷத்தில் அரிட்ட மடைவனும்.

(உ-ம்.) இது தனுசு லக்கினம்; லக்கினத்திற்கு 8-ம் இடங் கடகம், அதற்குரிய சந்திரன் நீசமடைந்து சனியோடுங் கூடி 12-ம் இடத்தில் நிற்பதையும், அவர்களுக்கு 8-ம் இடமாகிய மிதுனத்தில் பாவக்கிரகங்களாகிய சூரியன்,செவ்வாய் நிற்பதையுங் காண்க.

			சூ செ
	இராசிச் சக்கரம்		
ல	சந் சனி		

[16] 8-க்குடையவர் 10-ல் நிற்கவும், 10-க்குடையவரும், 7-க்குடையவரும், சந்திரனுக்கு 8-க்குடையவருமாகிய மூவர்களும் 11-ம் இடத்தில் நிற்கவும், இவர்களை சுபக்கிரகங்கள் பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகன் 7-வருஷத்தில் அரிட்டப்படுவன்.

(உ-ம்.) லக்கினம் கும்பம்; லக்கினத்திற்கு 8-ம் இடம் கன்னி, அதற்குரிய புதன் 10-ம் இடமாகிய விருச்சிகத்தில்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சந்			
ல	இராசிச்		
	சக்கரம்		
சு செ சு	புத		

நிற்பதையும் 10-ம் இடத்துக்குரிய செவ்வாயும் 7-ம் இடத்துக்குரிய சூரியனும், சந்திரனின்ற ராசிக்கு 8-ம் இடத்துக்குரிய சுக்கிரனும் ஆகிய மூவரும் 11-ம் இடமாகிய தனுசில் நிற்பதையும், இவர்களைச் சுபக்கிரகங்கள் பார்க்காதிருப்பதையுங் காண்க.

[17] 2-ம் இடத்துக்குடையவரும் 6-ம் இடத்துக்குடையவரும் லக்கினதிபதியாகிய 3-கிரகங்களும் 8-ம் இடத்தில் நிற்கவும், சந்திரனுக்கு 8-க்குடையவர் 7-ம் இடத்தில் நிற்கவும், இவரைச் சுபர்கள் பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகன் 9-வருஷத்தில் கபரோகத்தால் அரிட்டப்படுவன்.

ல			
	இராசிச்		
	சக்கரம்		
	சந்	சு-கு செ	புத

(உ-ம்.) இது மீன லக்கினம்; 2-ம் இடம் மேடம்; அதற்குடைய செவ்வாயும் 6-ம் இடம் சிங்கம்; அதற்குடைய சூரியனும் லக்கினதிபதியாகிய குருவும் ஆகிய 3-கிரகங்களும் 8-ம் இடத்தில் நிற்பதையும், சந்திரனின்ற ராசிக்கு 8-ம் இடத்துக்குடைய புதன் 7-ம் இடம் ஆகிய கன்னியில் நிற்பதையும், இவரைச் சுபர்கள் பார்க்காதிருப்பதையுங் காண்க.

[18] 3-க்குடையவரும், 6-க்குடையவரும், சனியும் ஆகிய மூவரும் 8-ம் இடத்தில் நிற்கவும், 8-ம் இடத்துக்குடையவர் 6-ம் இடத்தில் நிற்கவும், 12-ம் இடத்தில் ராகு அல்லது கேது இருக்கவும், அவரைப் பாபக்கிரகங்கள் பார்க்கவும் பெற்ற ஜாதகன் 10-வருஷத்தில் அரிட்ட மடைவன்.

	கே	ல	
	நவாங்		
(இ-ள்.) சனி 7-க்குடையவரா யிருந்து 6-8-12-ல் நிற்கப் பெற்ற ஜாதகன் வேசை மனையில் சார்வனும்.

[2] 2-க்குடையவர் சனி, இராகு ஆகிய மூவரும் 6-9-12-ல் நிற்கவும் பெற்ற ஜாதகன் முன் கூறிய வண்ண முடையவனேயாம்.

	இராசிச்		ச- ரா புத
	சக்கரம்		ல

[3] ராகு, சுக்கிரன், 7-க்குடையவர் ஆகிய மூவரும் 7-ல் நிற்கவும், அவர்களைப் பாபர்கள் பார்க்கவும் பெற்ற ஜாதகன் ஆவி நொந்து தகப்பன் தேடிய பொருளை யெல்லாம் வேசைக்குக் கொடுத்து விட்டு இவன் பதடியாய் நிற்பானும்.

சனி			ல செ
	இராசிச்		
	சக்கரம்		
சு-கு ராகு			

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

352



(இ-ள்.) லக்கினம் குருவீடா யிருக்க அக் குரு சில பாபிகளுடன் கூடி நீச பங்கம் பகை யடைய அல்லது சந்திராம் சத்தில் நிற்கவும், 7-க்குடையவர் சனி வீட்டில் நிற்கவும், அவரைச் சனி பார்க்கவும், 7-க்கு 9-க்குடையவர் ஏழி லேனும் சனியிடத்திலேனும் நிற்கப் பெற்ற ஜாதகன் மனையாளைக் கொடு த்து ஜீவனஞ் செய்யுந் தரித்திரனும்.

353

(இ-ள்.) லக்கினத்தில் நீசர்கள் நிற்கவும், 7-ல் குருவும், ராகுவும் நிற்க வும், அல்லது 7-ம் இடத்தைப் பார்க்க வும் பெற்ற ஜாதகரின் மனைவியை ஆசைப்பட்டு வருந் துர்ச்சனர்களுக்கு நன்கு முறை பாராட்டிக் கொடுத்து இவனும் வேசி மனைகள் தோறுந் திரிந்து அலைவானும்.

354

(இ-ள்.) சந்திரன் 12-ல் ஆகினும், ஏழிலாகினும், பாபர் அம்சத்திலாகி னும் நிற்கவும், சுக்கிரன் கொடிய பாபிகளோடு கூடி 8-ம் இடத்தில் நிற்க வும் பெற்ற ஜாதகரின் மனைவி தன் கணவனுடைய பகைவரோடு கூடி புணர்வதுமன்றி பகைவன் சொற் கேட்டு புருடனுடைய உயிரை துர்மர ணப்படுத்தி விட்டு நரக மடைவளாம்.

355



(இ-ள்.) சந்திரன், சுக்கிரன், குரு, புதன் ஆகிய நால்வரும் 7-ம் இடத்திற் குத் திரிகோண மடையவும், அவர்களை 8-க்குடையவர் பார்க்கவும், அல்லது சேர்ந்து நிற்கவும், பெற்ற ஜாதகருக்கு மனைவி பலவிதமாகச் சேருவளாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy



[2] 8-ஆமிடத்திற் சுக்கிரனிற்கவும், 7க்குடையவர் 4ல் நிற்கவும், பாபர்கள் 9ல் நிற்கவும்பெற்ற ஜாதகன் வேசியர்கள் சுகத்தில் மயங்கி யிருப்பானும்.



[3] 2-ஆமிடத்திலும் 7-ஆமிடத்திலும் பாபர்கள் நிற்கவும், புதனும் செவ்வாயும் வலி குறைந்து நிற்கவும், 8க்குடையவரோடு சனிகூடி 5-ஆமிடத்தைப் பார்க்கவும் பெற்ற ஜாதகனுக்கு வேசியைப்போல் மனைவி வருவாளாம்.



[4] சந்திரன், சுக்கிரன், சனி, செவ்வாய் ஆகியநால்வர்களும் 7ல் நிற்கவும், இவர்களை பாபர்கள் பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு விவாக மில்லையாம். அப்படி விவாகம் நடக்கில் புத்திர ரில்லையாம்.

356

(இ-ள்.) சனிக்கு 7ல் சுக்கிரன் நீசமடையவும், செவ்வாயும் 4க்குடையவருங் கூடி புதனுக்கு 7ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் மூன்று பெண்களை மணஞ்செய்தும் அந்தியத்தில் ஒரு மனைவியும் இல்லாது மரண மாவர்களாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] 7க்குடையவர் 6-8-12ல் நிற்கவும், 7-ஆமிடத்திற் பாபர் நிற்கவும், சனி 2க்குடையவரைப்பார்க்கவும், பாபர்கள் சுக ஸ்தானங்களில் நிற்கவும் பெற்ற ஜாதகன் மதுபான முதலிய கொடிய வைகளைப் புசித்து காட்டினிடத்திலும் ஆறுகளிலும் பரஸ்திரீகளை மருவி தன் குடும்பமழிந்து உழல்கின்ற மடையரிற் கடைய னுவானும்.

கே			ல சனி
	இராசிச்		
குரு	சக்கரம்		சந்
சூரி	புத		செவ் ராகு

357

(இ-ள்.) குரு நீச மூட மடையவும், 3-ஆமிடத்தில் ராகு, செவ்வாய், 7க்குடையவராகிய மூவரும் நிற்கவும், 4-ஆமிடத்தில் சனி சுக்கிர னிற்கப் பெற்ற ஜாதகருக்கு இரண்டு தார மிருந்தும் அந்தியத்தில் மனைவி இல்லையாம்.

ல		செவ் ரா-பு	சுக் சனி
	இராசிச்		
குரு	சக்கரம்		

[2] லக்கினதிபதியும் 7க்குடையவருங் கூடி சனிக்கு 4-ஆமிடத்தில் நிற்கவும், சந்திரனுக்கு 7ல் குரு நிற்கவும், அக்குருவை பாபர்கள் பார்க்கவும் அல்லது கூடி நிற்கவும் பெற்ற ஜாதகனுக்கு இரண்டு தாரமிருந்தும் சில நாள் சுக மனுபவித்து துன்ப சமயத்தில் சுகந் தராமல் தொலைந்துபோவார்களாம்.

	சனி	ல	குரு கே
	இராசிச்		சுக் செவ்
	சக்கரம்		
சந் ராகு			

358

(இ-ள்) 9க்குடையவர் நீசமும் பகையும் பெற்று, 6-8-12ல் நிற்கவும், சுக்கிரன், செவ்வாய், ராகு ஆகிய மூவரும் 8ல் நிற்கவும் பெற்ற ஜாதகன் 9 பெண்களை மணந்தாலும் அந்தியத்தில் மனைவி யில்லையாம்,

புத		சு-செ ராகு	
	இராசிச்		
	சக்கரம்		
		ல	

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] 2-க்குடையவர் பகை ராசியில் நிற்கவும், 7-க்குடையவர் வலி குறைந்து சனி, சுக்கிரனிருந்த மனையில் நிற்கவும், 2-ம் இடத்தில் சூரியன், இராகு நிற்கவும் பெற்ற ஜாதகன் ஒன்றின்பின் ஒன்றாய் ஐந்து பெண்களை விவாகஞ் செய்திருந்தும் அந்திய காலத்தில் அருகிருந்து உதவி செய்யார்களாம்.

359

(இ-ள்.) சனியும், செவ்வாயுங் கூடி 7-ல் நிற்கவும், சூரியனும் சுக்கிரனுங் கூடி நிற்கவும், 7-க்குடையவர் 12-ல் நிற்கவும் பெற்ற ஜாதகன் விவாக விருப்ப மில்லாதவனும், சர்ச்சனர்களுடைய வெறுப்புள்ளவனாய் இருந்து விதவை ஸ்திரீ மாய்கைக்குள் அகப்படுவானும்.



[2] குருவும், சந்திரனும் 7-ல் நிற்கவும், அவர்களைத் தீயர்கள் பார்க்கவும், சனி 2-ம் இடத்தை பலமாகப் பார்க்கப் பெற்ற ஜாதகன் பெண் பலி கொள்ளும் பூதமாயிருந்து 7-மனைவியை விவாகஞ் செய்தும் அந்தியத்தில் மனைவியில்லாது புத்திரனற் கருமங் கொள்பவனும்.



360

(இ-ள்.) சுக்கிரன் பலஹீன மடையவும், குரு இலக்கினத்தில் நிற்கவும், 9-ம் இடத்தில் சனி நிற்கவும், அவரோடு இராகு கூடவும், சுக ஸ்தானங்களில் சுபர்கள் நிற்கவும், சூரியனுக்கு 7-ல் செவ்வாய் நிற்கவும் பெற்ற ஜாதகர் நூறு பெண்களை விவாகஞ் செய்தும் அந்தியத்தில் ஒரு மனைவியு மில்லையாம்.



CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

361

(இ-ள்.) சுக்கிரன் வலுப்பெற்று நிற்கவும், அவரைப் பாபர்கள் பார்க்கவும், 7-க்குடையவரும், சூரியனும், குருவுங் கூடிநின்ற இராசிக்கு 7-க்குடையவர் 12-ம் இடத்தில் நிற்கவும், அவரைப் பாபர்கள் நட்போடு பார்க்கவும் பெற்ற ஜாதகர் பல பெண்களை விவாகஞ் செய்தும், அந்தியத்தில் தாலி யறுக்க ஒருவரு மில்லையாம்.

[2] இராகு, சுக்கிரன், 4-க்குடையவர் ஆகிய மூவருங் கூடி 3-ம் இடத்தில் நிற்கவும், அல்லது மேற்படி இராசியைப் பார்க்கவும், 2-க்குடையவர் 6-ம் இடத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகன் மனைவியைத் தனியாக விட்டு வருந்தும்படி செய்து அன்னிய ஸ்திரீ மாய்கையில் அகப்பட்டுச் சரீரத்தை மடித்துக் கொள்ள எண்ணுவனும்.

362

(இ-ள்.) குரு 7-ல் நிற்கவும், 7-க்குடையவர் 8-ல் நிற்கவும், அவர்களைப் பாபர்கள் பார்க்கவும், அல்லது, கூடவும் சந்திரன், புதன், இலக்கினாதிபதி ஆகிய மூவர்களோடு சுபர்களுங் கூடி 12-ல் நிற்கவும் பெற்ற ஜாதகன் கொடிய வஞ்சகனாகி மனையாளை மயங்கும்படி செய்து விட்டுத் தான் வேசை மனை தோறுந் திரிந்து தன்னுயிர்க் கொப்பாகிய மனைவியையு மிழந்து நரகில் வாடுவனும்.

363

(இ-ள்.) சுக்கிரனும், 7-க்குடையவருங் கூடி செவ்வாய் வீட்டில் நிற்கவும், அச் செவ்வாய் 2-ம் இடத்தில் நிற்கவும், சனியும் சூரியனும் பலக் குறைவடைந்து ஒருவரை ஒருவர் பார்க்கவும் பெற்ற ஜாதகர் மன்மத மாய்கையில் அல்லும் பகலும் விகற்ப மில்லாமல் வரம்பு கடந்தவனா யிருந்து மரண காலத்தில் தாரமில்லாது அலைவானும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] 7ல் இராகு நிற்கவும், 10ல் புதனிற்கவும், அவரை 7க்குடையவர் பார்க்கவும், அல்லது கூடியிருக்கவும் பெற்ற ஜாதகர்விதவையைக் கோயிலில் புணர்பவரென்றும், பூமிக்குப் பாரமாய்ப் பிறந்ததுமன்றிப் பிரயோசனமற்ற பதராகுவராம்.



364

(இ-ள்.) சந்திரன் 6ல் நிற்கவும், சுக காரகனாகிய 7க்குடையவர் பேடாகிய அலிக்கிரகத்தில் ஒன்றாயிருக்கவும், சுக்கிரனிருந்த ராசியாதிபதியையும், பத்துக்குடையவரையும் சூரியன் ஆண் ராசியில் இருந்து பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு ஆண் ரூபமுள்ள மனைவியாய்க் கிடைப்பாளாம்.



[2] சந்திரன் 7ல் நிற்கவும், அவரைப் பாபர்கள் பார்க்கவும், 7க்குடையவர் நீசமடையவும், 2க்குடையவரும், ராகுவுங் கூடி நிற்கவும், அல்லது ராகு பார்க்கவும் பெற்ற ஜாதகன் மனைவி விபசாரியாம்.

[3] சுதன் வீடாகிய 5-ஆமிடத்தை 2க்குடையவர் பார்க்கவும், வெண்டாது வென்னும் சுக்கிரன் 7-ஆமிடத்தில் நிற்கவும், 7க்குடையவர் சனி, ராகுவோடு கூடி பலமாக நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு மனைவி முன் விதிப்படி யுடையவளேயாம்.



CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[4] 8க்குடையவரும் 5க்குடையவருங் கூடி 7ல் நிற்கவும், அவர்களோடு ராகு, சனி நிற்கவும்பெற்ற ஜாதகன் மனைவி மிகுந்த காமியாயிருந்தும் மாதவிடாய் இல்லாதவளாம்.

365

(இ-ள்.) 10க்குடையவரும் ராகுவும், 7க்குடையவருங் கூடி 6ல் நிற்கவும், செவ்வாய் சனியோடுகூடி ஒரு ராசியில் நிற்கவும் பெற்ற ஜாதகன் இறந்த பிறகும் இவன் மனையாள் விபசாரியாம்.



[2] சுக்கிரன் எந்த ராசியில் நிற்கின்றாரோ அந்த ராசியாதிபதியும், 2க்குடையவரும் கூடி நிற்கவும், அவர்களைச் சனி பார்க்கவும், 7க்குடையவருஞ் செவ்வாயுங் கூடி பலமடைந்து நிற்கவும் பெற்ற ஜாதகனுடைய மனையாள் மேற்கூறிய வண்ணமுடையவளாம்.



[3] 4-ஆமிடத்திற் சனி நிற்கவும், 7-க்குடையவர் ஆட்சிபெற்று நிற்கவும், குரு நட்படைந்து நிற்கவும், அவரை 8க்குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகருடைய மனையாள் சண்டாளியாய் சதா காலமுங் காம மொழியாதவளாம்.

ஆனல் இதுவரையில் அவகளத்திர சங்கையை யொருவாறு மொழிந்தனம். இதில் 7க்குடையவர் இருந்த செயலறிந்து வலியறிந்தோதில் தவறுபடாதென்றுங் கூறியது.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

களத்திர மாரகம்

366

இதுவரையில் களத்திரத்தின் குணங்களை யுரைத்தனம். இனி களத்திர மாரகங்களை ஒருவாறு கூறுவோமாக. 7-க்கு அட்டமாதிபதியும், அதிலிருந்தவர்களும், 7-க்கு 6-ல் இருந்தவர்களும், உடையவரும், 7-ல் இருந்தவர்களும், ஏழைப் பார்த்தவர்களும், 7-க்குடையவரோடு சேர்ந்தவர்களும், ஸ்தானுதிபதிகள் திசை புத்திகளிலும், 7-க்குடையவர் திசையில் இரண்டு மாரகர் புசிப்பிலும், களத்திர மாரகமென்னும், 12-க்குடையவர் திசையில் 5-ல் இருந்தவர் புசிப்பிற் களத்திர மாரகமாம். இன்னும் சிலவற்றைக் கூறுவோமாக.

367

(இ-ள்.) சுக்கிரனுக்கு 6-ல் இருந்தவர் திசையில் சுக்கிரனுக்கு 8-க்குடையவர் புசிப்பிலும், சந்திரனுக்கு 7-க்குடையவர் 7-ல் இருந்தவர் திசையிலும், சுக்கிரனுக்கு 8-க்குடையவர் புசிப்பிலும். 2-க்குடையவர் திசையிலும், லக்கினுதிபதி புசிப்பிலும், 12-க்குடையவர் திசையிலும், சந்திரனுக்கு 8-ல் இருந்தவர் புசிப்பிலும், 5-க் குடையவர் திசையிலும், சுக்கிரனுக்கு 8-க்குடையவர் புசிப்பிலும், 8-க்குடையவர் திசையிலும், குருவுக்கு 8-க்குடையவர் புசிப்பிலும், ஜாதகர்களுடைய களத்திர மாரகதிசை புத்தி யென்றும் மூதோர் கூறுவர். ஆனல் உத்தம களத்திர மென்றும், மத்திம களத்திர மென்றும் அறிந்தெடுப்பதே நூல் முறையாம்.

368

(இ-ள்.) 7-க் குடையவர் சூரியனேடு கூடி 3-ம் இடத்தில் நிற்கவும், 2-க்குடையவர் சந்திரனேடு கூடி 12-ல் நிற்கவும், 12-க் குடையவர் 10-ல் நிற்கவும், சுக்கிரன் ராகுவோடு கூடி 4-ம் இடத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு 3-மனைவியர்களுண்டு. அதில் மூத்தாள் லாபமில்லாதவளென்றும் இடையில் வந்த

சுக் ராகு			
சூரி புத	இராசிச்		
	சக்கரம்		
ல	சனி சந்		செ கே

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வள் சில நாளிருந்து ஜேஷ்ட புத்திரனையும் கனிஷ்ட புத்திர னையும் பெறுவளென்றும், உறுதியுள்ள இளைய களத்திரம் நிலைப்பா யிருக்குமென்றுங் கூறப்படும். இதில் புதன் திசை செவ்வாய் புசிப்பிலும் சுக்கிர திசை செவ்வாய் புசிப்பிலும் முன் களத்திர மிரண்டும் மாரக மாகுமாம்.

விசேட புத்திரர் பலிதம்

370



(இ - ள்.) 9-11-க்குடையவர் ராகுவு மாகிய மூவருங் கூடி 5-ல் நிற்கவும், 5-க் குடையவர் 4-க்குடையவரோடு கூடிச் சந்திரன் வீட்டில் நிற்கவும், சந்திரன் சூரியனோடு கூடி லக்கினத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகர் அழகிய புத்திரரைப் பெற்றுச் சுகமு மடைந்து புத்திரர்கள் வளர வளரப் பொருளும் வளருமாம்.

371

(இ-ள்) 7-க்குடையவரை லக்கினாதி பதி கூடி 9-ல் நிற்கவும், அல்லது மாறி நிற்கவும், அவர்களைச் சுபர்கள் பார்க்க வும் பெற்ற ஜாதகர் வஞ்சக மில்லாத மனத்தராயும் புத்திரப் பெருக்குள்ளவ ராயும் வாழ்வாராம்.

372



(இ-ள்.) 7-ம் இடத்தில் லக்கினாதி பதி நிற்கவும், 2-7-க்குடையவர்கள் கூடி 4-ம் இடத்தில்நிற்கவும், குரு திரிகோண மடையவும் பெற்ற ஜாதகர் மிகுதி புத் திரரைக் கிடைத்துப் புத்திரராலே புண் ணியம் பெறுவாராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] 5-க்குடையவரோடு 11-க்குடையவர் நட்பாகக் கூடி உச்ச ராசியில் நிற்கப் பெற்ற ஜாதகன் 10-பங்கு தந்தையினும் யோக முள்ளவனும்.

373

சந்			
	இராசிச்		
	சக்கரம்		
	ல		சூரி குரு

(இ-ள்.) 10-5-க்குடையவர்கள் நட்பாகக் கூடிச் சுபர்களுடைய வீட்டில் நிற்கவும், அவர்களை 9-க்குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகன் பல புத்திரர்களைப் பெற்று வாழ்பவனும்.

		குரு சந்	
	இராசிச்		
செவ்	சக்கரம்		
	ல சு-பு	சூரி	சனி

[2] 5-9-க்குடையவர்கள் கூடிச் சுபர்கள் வீட்டில் நட்பா யிருக்கவும், அவர்களைச் சுபர்கள் பார்க்கவும், அல்லது கூடி நிற்கவும் பெற்ற ஜாதகர் செல்வ புத்திரர்களைக் கிடைத்து வாழ்வு பெறுவராம்.

374

கே		சனி	ல
	இராசிச்		
	சக்கரம்		குரு சுக்
	செ	சந் புத	சூரி ராகு

(இ-ள்.) 5-ம் இடத்தில் சுபர்கள் நிற்கவும், 5-க்குடையவர் சுபரோடு கூடி நிற்கவும், அவர்களைப் பாபர் பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகர் புத்திரரரையும் பௌத்திரரரையும் பொருந்தி வாழ்பவராம்.

[2] 4-ம் இடத்தில் சுபர்கள் நிற்கவும், குரு 6-ம் இடத்தில் உச்ச மடையவும், 6-க்குடையவரும், 7-க்குடையவரும் 11-ம் இடத்தில் நிற்கவும், 12-ம் இடத்தில் பாபர்கள் நிற்கவும் பெற்ற நான்கு தரமுள்ள ஜாதகருக்கும் சுகமாகிய புத்திரருண்டாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

375

(இ-ள்.) லக்கினாதிபதி 11-ல் நிற்கவும், 5-க்குடையவர் கேதுவோடு கூடி லக்கினாதிபதிக்கு 12-ல் நிற்கவும், குரு மனையில் சுக்கிரன் அவரோடு கூடி உச்சம் பெற்று நிற்கவும், சூரியன் புதனோடு கூடி 3-ல் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு நிலைத்த செல்வம், கல்வி குணமுள்ள புத்திரர்கள் உண்டாம்.

சுக் ராகு			
சூரி புத	இராசிச்	சக்கரம்	
ல		குரு	செ கே

376

(இ-ள்.) 5-க்குடையவர் 2-ல் நிற்கவும், 9-க்குடையவர் லக்கினத்தில் நிற்கவும், 2-க்குடையவர் சந்திரனோடு கூடி 5-ம் இடத்திற்கு 11-ல் நிற்கவும், குரு லக்கினத்தில் நிற்கவும், லக்கினாதிபதி சூரியனோடு கூடி 2-ல் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு புத்திரர்கள் மிகுதியாயும் வாழ்வும் பெறுவாராம்.

	ல குரு	சூரி செ	சுக் சந்
	இராசிச்	சக்கரம்	

377

.(இ-ள்.) 5-க்குடையவர் 4-ம் இடத்தில் நிற்கவும், 5-ம் இடத்தில் குரு நிற்கவும், 10-க்குடையவர் கேந்திர மடையவும் 9-க்குடையவர் குருவுக்கு கேந்திரம் பெறவும், 11-ம் இடத்திற் சந்திரன் ஆட்சி யடைந்து நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு இளமையில் தீர்க்க புத்திரனுண்டாகி கண்ணியம் பெறுவாராம்.

புத	சுக்		
	இராசிச்	சக்கரம்	சந்
குரு			
சனி			ல

378

(இ-ள்.) 4-ம் இடத்தில் 9-க்குடையவர் நிற்கவும், குரு 6-ம் இடத்தில் வலுப்பெற்று நிற்கவும், அவரை 5-க்குடையவர் பார்க்கவும், 7-க்குடையவர் 11-ல் நிற்கவும், 12-ம் இடத்தில் பாபர்கள் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு இளமையில் உலகர் புகழும்படியான தேவ சுகமுள்ள புத்திர ருண்டாம்.

குரு கே			சனி
	இராசிச்	சக்கரம்	
புத			செ
		ல	ராகு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

379

(இ-ள்.) குரு திரிகோணமாகிய 1-5-9ல் வலுத்து நிற்கவும், செவ்வாய், சனி 5க்குடையவர் ஆகிய மூவரும் 6-8-12ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் பல புத்திரரைப் பெறுவராம்.



[2] குரு 5க்குடையவரா யிருந்து வலுத்து நிற்கவும், சூரியன், செவ்வாய், புதன், சனி ஆகிய நால்வரும் கேந்திரம் அல்லது திரிகோணங்களில் நிற்கவும், அவர்களைப் பாபர்கள் பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகருக்குப் புத்திரருண்டாம்.



380

(இ-ள்.) லக்கினாதிபதியும் 10க்குடையவரும் குருவும் ஆகிய மூவரும் கூடிநிற்கவும், செவ்வாயோடு 11க்குடையவரும் ராகுவுங் கூடி 2-ஆமிடத்தில் நிற்கவும், 4-5க்குடையவர்கள் 12-ஆமிடத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகருக்குப் புத்திரருண்டாம்.



381

(இ-ள்.) 5க்குடையவர் 4-ஆமிடத்தில் நிற்கவும், 4க்குடையவர் 5ல் நிற்கவும், அவரோடு ராகு கூடவும், 7க்குடையவர் ஆட்சியிற் கேந்திர மடையவும், 9-8க்குடையவர்கள் கூடி ஒரு ராசியில் நிற்கவும், அவரோடு செவ்வாய், சூரியனுட்சியுச்சமடைந்து நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு குணமாகிய கீர்த்தியுள்ள புத்திரருண்டாம்.



CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

382

(இ-ள்.) சங்கநிதியாகிய சுக்கிரனும், பதுமநிதி யென்னும் குருவும், 9க்குடையவரும் ஆகிய மூவரும் சுபர் வீட்டில் நிற்கவும், அவர்களைச் சந்திரன் பார்க்கவும், தீயர் நோக்காதிருக்கப் பெற்ற ஜாதகர் பாக்கிய புத்திரனைப் பெறுவராம்.

சந்தி			
	இராசிச்		
ல	சக்கரம்		
	சூரி		குரு பு-சு

[2] 10-5க்குடையவர்கள் ஒருவர் மனையில் ஒருவர் மாறி நிற்கவும், 4க்குடையவர் 11ல் வலுப்பெற்று நிற்கவும் பெற்ற ஜாதகருக்குக் கீர்த்தியோடு அழகிய புத்திர ருண்டாம்.

			சனி
	இராசிச்		குரு
புத	சக்கரம்		
			ல

383

(இ-ள்.) புத்திர ஸ்தானத்திற்கு 5க்குடையவரும் குருவுஞ் சேராமலும், பார்க்காமலும் நிற்கவும், அவர்களைச் சனியும், 5க்குடையவரும் பார்க்காதிருக்கப் பெற்ற ஜாதகருக்கு 10-புத்திரர் பிறந்து அதிற் சிலரிறந்தும், 5-புத்திரர்க்குக் குறையாமல் பிதிர் வாக்கியமும் சத்தியமுந் தவறு திருப்பார்களாம்.

	இராசிச்		
ல சனி	சக்கரம்		
	குரு	சுக்	புத

384

(இ-ள்.) குரு லக்கினத்தில் நிற்கவும், 5க்குடையவர் 7ல் நிற்கவும், அசுர குருவாகிய சுக்கிரன் 6ல் நிற்கவும், 5-ஆமிடத்திற் சந்திரனுங் கேதுவுங்கூட செவ்வாயின் ராசியை சூரியனுக்குக் கொடுத்து தான் 7ல் சனியோடு கூடி நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு முன் களத்திரத்திற்கு 4-பெண்களுண்டாகி மறு களத்திரத்திற்கு நிறைந்த புத்திர ருண்டாகுமாம்.

செ சனி	சூரி		
சுக்	இராசிச்		ராகு
சந் கே	சக்கரம்		
			ல குரு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

385

(இ-ள்.) 5-க்குடையவர் சுக்கிரனாகி 4-ல் நிற்கவும், 5-ம் இடத்திற் சூரியனோடு புதன் கூடி நிற்கவும், 7-க்குடையவர் 7-ல் நிற்கவும், 12-ல் 9-க்குடையவரும் ராகுவுங் கூடி நிற்கவும், சந்திரன் வளர்பிறையாகி செவ்வாயோடு கூடி 6-ல் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு சில புத்திரர் தோஷமுண்டாகி மேகத்தைக் கண்ட பயிர் போன்ற புத்திரனைக் கிடைத்துச் சிறப்பு பெறுவராம்.

		சனி ராகு	ல
	இராசிச் சக்கரம்		
குரு	செ சகே	சூரி புத	சுக்

386

(இ-ள்.) 5-க்குடையவர் 4-க்குடையவரோடுகூடி 2-ல் நிற்கவும், 7-க்குடையவர் சனியோடு கூடி சுக்கிரனுக்கு 12-ல் ஆட்சி பெற்று நிற்கவும், 9-ம் இடத்தில் கேது நிற்கவும், 4-ம் இடத்திற் சந்திரன் நிற்கவும், குரு 5-ம் இடத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகர் நாவலர்களுக்குத் தலைமை யுடையவராய் 3-புத்திரியைப் பெறுவாரென்று நூற் சம்மதமாம்.

	செ சனி	ல சுக்	சூரி புத
	இராசிச் சக்கரம்		ராகு
கே			சந்
			குரு

387

(இ-ள்.) 5-க்குடையவர் 8-ல் நிற்கவும், 7-க்குடையவர் சூரியனோடு கூடி ஆட்சி யடையவும், அல்லது 2-க்குடையவர் 11-க்குடையவரோடுகூடி 2-ல் நிற்கவும், அல்லது சந்திரனோடு 7-க்குடையவர் கூடிச் சனிக்கு 7-ல் நிற்கவும், குரு கேந்திர மடைந்து நிற்கவும் பெற்ற ஜாதகருக்குக் குறைவில்லாத செல்வத்தோடு புத்திரருண்டாகி உலகத்தில் ஜெயம் பெற்று வாழ்வராம்.

	ராகு	சனி	
	இராசிச் சக்கரம்		
குரு			
சந் செ	சூ சுக்	ல பு-கே	

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

388

(இ-ள்.) 3-ம் இடத்திற்கு 2-பக்கமும் பாபர்கள் நிற்கவும், 5-ம் இடத்தைச் சனி பார்க்காதிருக்கவும், குரு கேந்திரத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு வீடெல்லாம் புத்திரனுக விளங்குவார்களாம்.

குரு			
	இராசிச்		ல சனி
	சக்கரம்		
செ		சூரி	

[2] 5-ம் இடம் மேஷமா யிருக்கவும் அதிற் செவ்வாய் நிற்கவும், மீன ராசியில் குரு நிற்கவும், அவரைப் பாபர்கள் பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகருக்குப் பீமசேனனைப்போல் புத்திர ருண்டாம்.

குரு	செ		கே
	இராசிச்		
	சக்கரம்		சனி
ல ராகு			

389

(இ-ள்.) சந்திரனுக்கு 5-ம் இடத்தில் லக்கினத்திற்கு 5-க்குடையவர் நிற்கவும், அல்லது 9-க்குடையவருக்கு 11-ல் நிற்கவும், சந்திரனுக்கு 9-க்குடையவரும், குருவும் கூடி 5-ம் இடத்தில் நிற்கவும், சூரியன் லக்கினத்தில் நிற்கவும், சந்திரன் கேந்திர மடையவும், சந்திரனுக்கு 9-ம் இடத்தில் சுக்கிரன் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு அழகிய செல்வமுடைய புத்திரருண்டாம்.

	சந்		
குரு செ	இராசிச்		
	சக்கரம்		சனி
சுக்		ல-பு சூரி	

390

(இ-ள்.) விருச்சிகம் 5-ம் இடமாகவும், அதிற் சூரியன் நிற்கவும், தனுசில் லக்கினதிபதி நிற்கவும், அல்லது சனிக்குத் திரிகோணத்தில் நிற்காதிருக்கவும் பெற்ற ஜாதகருக்கு விருத்த வயதில் புத்திரருண்டாம்.

சனி	இராசிச்		ல
	சக்கரம்		
சந்	கு		

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] பெண் கிரகங்கள் 5ல் நிற்கவும், 5க்குடையவர் 4ல் நிற்கவும், இலக்கினதிபதி ஆண் கிரகமாகி 5க்குடையவர் பெண் கிரகமாகி நிற்கவும் பெற்றஜாதகர் புத்திரரால்பாக்கிய செல்வம் பெறுவராம்.



391

(இ-ள்.) 5-ஆமிடம் குரு வீடாகி அதிற் சுக்கிர னிற்கவும், குரு சந்திரன் வீட்டி லமரவும், பாபர் குரு வீட்டில் நிற்கவும் பெற்ற ஜாதகருக்குப் பெண்ணாகவே பிறக்குமென்றுங் கூறியது.



[2] 5-ஆமிடம்சுக்கிரன் வீடாகி அதிற் சந்திர னிற்கவும், 5க்குடையவர் சூரியனோடு கூடி நிற்கவும், பெற்ற ஜாதகருக்கு பிரமன் கிருபை யிருந்த போதிலும், அழகிய பெண் புத்திரி மட்டும் கிடைப்பாளாம்.



392

(இ-ள்.) சனியின் வீடே 5-ஆமிடமாகி அதிற் குருநிற்கவும், சனி 4-ஆமிடத்தில் நிற்கவும், சுக்கிரன் சூரியனாகிய இருவரும் ஆட்சிபெற்று செவ்வாயோடு கூடி நிற்கவும், 11-ஆமிடத்திற் சந்திர னிற்கவும் பெற்ற ஜாதகருக்கு பரிசுத்தமுள்ள ஏக புத்திரனும் 2-பெண்களுமுண்டாம்.



CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

393

(இ-ள்.) 5-ஆமிடத்திற் குருவிருந்து இலக்கினத்தைப் பார்க்கவும்,சந்திரன் கேந்திரமேறி இலக்கினத்தைப் பார்க்கவும், 5க்குடையவர் சந்திர கேந்திரத்தில் நிற்கவும், 9க்குடையவர் 11ல் நிற்கவும், சந்திரனுக்கு 9-ஆமிடத்தில் இலக்கினாதிபதியோடு கேது கூடி நிற்கவும் பெற்ற ஜாதகருக்குச் சுப்பிரமணியருடைய கிருபை யுண்டாகி புத்திர பவுத்திர சுகங்களோடு வாழ்வராம்.

394

(இ-ள்.) இலக்கினாதிபதி 11ல் நிற்கவும், 5க்குடையவர் கேதுவோடு கூடி இலக்கினாதிபதிக்கு 12ல் நிற்கவும், குரு வீட்டில் சுக்கிரனும், இராகுவுங் கூடி உச்சமடைந்து நிற்கவும்,சூரியன்,புதன் இவர்கள்கூடி 3ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் செல்வமுடைய புத்திரரைப் பெற்றுக்கல்வியிலுஞ் சிறந்தவரென்று கூறவும்.

395

(இ-ள்.) இலக்கினாதிபதியும் 9க்குடையவருங் கூடி 7ல் நிற்கவும், இலக்கினத்திற் சந்திரனும் குருவுங் கூடி நிற்கவும், அவரை இலக்கினாதிபதியும், 2க்குடையவரும் சேர்ந்தாலும் அல்லது பார்த்தாலும் கேந்திர கோணங்களில் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு வீடு நிரம்பப் புத்திரர்கள் உண்டாம்.

396



(இ-ள்.) புதன், சந்திரன், சனி, செவ்வாய் ஆகிய நால்வரும், 9-ஆமிடத்தில் நிற்கப் பெற்ற ஜாதகரும் மேற்கூறிய வண்ணமுடையவரேயாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] செவ்வாய், சந்திரன், சூரியன் ஆகிய மூவர்கள் கூடி 9-ஆமிடத்தில் நிற்கப் பெற்றாலும் மேற்கூறிய வண்ணமேயாம்.

[3] குரு, சனி, சந்திரன், ராகுவாகிய நால்வருங்கூடி 5-லாகினும் 11-லாகினும் நிற்கவும், அவர்களைப் பாபர்களுக்கா திருக்கப் பெற்ற சாதகருக்கு மேற்கூறிய வண்ணமேயாம்.

397

(இ-ள்.) செவ்வாய், குரு, புதன், சந்திரன், சுக்கிரன் ஆகிய ஐவரும் 4-ஆமிடத்திலாகினும், லக்கினத்திலாகினும் நிற்கப் பெற்ற ஜாதகருக்குப் பல புத்திரர்கள் உண்டாம்.



[2] சனி, புதன், சூரியன் ஆகிய மூவரும் நல்ல ஸ்தானத்தில் நின்றாலும் 11ல் இருந்தாலும் மேற்கூறிய வண்ணமே புத்திரருண்டாம்.



[3] குருவுஞ் சந்திரனும் கூடிச் சுகஸ்தானத்தில் நின்றாலும், அல்லது லக்கினம் 9-ஆமிடம் 5-ஆமிடம் இந்த ராசிகளில் நிற்கப் பெற்றாலும் மேற்கூறிய வண்ணமே புத்திர ருண்டாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

398

(இ-ள்.) 4-5க்குடையவர்கள் ஆட்சி பெற்றுக் கேந்திர மடையவும், குரு சந்திரனின்ற ராசிக்கு 11-ஆமிடத்திற்கு 5-ஆமிடத்திலும், 9க்குடையவருக்குத் திரிகோணத்திலும் நிற்கவும், 10க்குடையவர் 11-ஆமிடத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு மிகுதியாகியபுத்திரரும் செல்வமும் உண்மையும் அந்தியம் வரையில் உண்டாம்.

குரு	செவ்		
	இராசிச்		
சந்	சக்கரம்		
ல	சு	பு	

399

(இ-ள்.) தனுசு லக்கினத்திற்கு 5-12க்குடையவர் சந்திரனேடுகூடி குருவுக்கு 11-ஆமிடத்திலிருந்து ஆட்சிபெற்று நிற்கவும், அவர்களை 2க்குடையவர் பார்க்கவும், 9க்குடையவர் 11ல் நிற்கவும், 4க்குடையவர் 7ல் நிற்கவும், ராகு 9ல் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு ராகு திசையில் 7க்குடையவர் புசிப்பில் ஏக புத்திரனேடு 2-பெண் மக்களும் கிடைப்பார்களாம்.

	செவ் சந்		குரு
சனி கே	இராசிச்		
	சக்கரம்		ராகு
ல		சுக்கி சூரி	

400

(இ-ள்.) 5-10க்குடையவர் 9-ஆமிடத்தில் நின்று லக்கினதிபதி பார்வையைப் பெற்றும், 4-9-11க்குடையவர்களைத் தனக்கு 11ல் வைத்தும், அவர்கள் லக்கின கேந்திர மடையவும் பெற்ற ஜாதகருக்குக் குரு திசையில் 10-லிருந்தவர் புத்தி முதல் புத்திர ஆரம்பத்திற்கு ஏதுவாகுமாம்.

செவ்	சூரி புத		
	இராசிச்		ல
சுக் குரு	சக்கரம்		
			சந்

401

(இ-ள்.) குரு, லக்கின கேந்திரமடைந்து 5க்குடையவரையும், 5-ஆமிடத்தையும் பார்த்து நிற்கவும், சந்திரன் 11க்குடையவராயிருந்து குருவுக்கு திரிகோணமடைந்து குரு பார்வையைப் பெற்று நிற்கவும், 10க்குடையவர்சந்திரனுக்குத் திரிகோணமடைந்து நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு கொத்துமலர்போல் முன்

சனி		புத	
	இராசிச்		
சந்	சக்கரம்		
			ல குரு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பெண்கள் பிறந்து பிறகு குருதிசையில் சந்திரபுத்தியில் ஆண் புத்திரன் தீர்க்க முண்டாம்.

402

(இ-ள்.) 5-ஆமிடத்திற் குரு நிற்கவும், அவரை 5-க்குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகருக்குத் திரண்ட புத்திர ருண்டாம்.

[2] 5-க்குடையவரும் குருவுங் கூடி வைசேடிகா அம்சம் பெற்று நின்றாலும், மேற்கூறிய பலனேயாம். 7-ஆமிடத்திற் சந்திரனின்று 5-க்குடையவரைப் பார்த்தாலும் மேற்கூறிய பலனேயாம்.

403

(இ-ள்.) லக்கினாதிபதியும் 5-க்குடையவருங் கூடி நிற்கவும், அவர்களுக்கு குரு வீட்சண்யங் கிடைத்தாலும், மேற் கூறியவர்கள் ஒருவரை யொருவர் நோக்கினாலும், 5-ம் இடத்திற் கூடிக் குரு பார்வை பெற்றாலும், 1-5-9-க்குடையவர் கேந்திரம் ஆட்சி நட்பு அடைந்தாலும், இவைகளில் வளர்பிறையாகில் இச்சாதகருக்கு புத்திரரிருக்க இரண்டு வீடு வேணுமென்று கூறப்பட்டது.

404



(இ-ள்.) 7-க்குடையவர், லக்கினாதிபதி, 5-க்குடையவர், குரு ஆகிய நால்வரும் சுபர் அம்சங்களில்நிற்கவும், இவர்களுக்குச் சந்திரன் பார்வை யுண்டாகில் இச்சாதகர் அழகுள்ள புத்திரனைப் பெற்றுச் சுகத்திற் சேர்வாராம்.

[2] லக்கினத்திலாகினும், 5-லாகினும் குரு நிற்கவும், மற்றவர்கள் உபஜயத்தில் நிற்கப்பெற்ற ஜாதகர் பல புத்திரர் கிடைத்து பௌத்திரருடனும் வாழ்வாராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மத்திம புத்திரர் பலிதம்

405

	செ சனி		ராகு
	இராசிச் சக்கரம்		
ல கே		சூரி	

(இ-ள்.) 5-க்குடையவரும் 2-க்குடையவரும் ஈனப்பட்டு 5-ஆமிடத்தில் நிற்கவும், அவர்களைப் பாபர்கள் நோக்கவும் பெற்றஜாதகருக்கு இளமைப்பொழுதே புத்திர ருண்டாகுமாம்.

[2] 5-க்குடையவர் ஆட்சி யடைந்து சுபர்கள் பார்வை பெற்ருலும், மேற்கூறிய புத்திர காலத்தில் நற்பயன் கொடுக்குமாம்.

[3] 5-ஆமிடத்தில் 9-க்குடையவர் நிற்கவும், அவரைச் செவ்வாய் பார்க்கவும், அறிவில்லாத ஒரு புத்திரனுகிலும் கருமத்துக்குண்டென் றுங் கூறியது.

406

		சுக்	ல
சனி	இராசிச் சக்கரம்		சூகே புத
ராகு			
		குரு	செவ்

(இ-ள்.) 5-ஆமிடத்தில் குரு நிற்கவும் அல்லது பார்க்கவும், 5-க்குடையவர் ஆட்சி நட்படையவும், அவரைப் பாபக் கிரகங்கள் பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகராகிய வீரனுக்கு விழல்போல் அநேக புத்திர ருதிப்பாராம்.

[2] குரு 3-ல் நிற்கவும், அவ் வீட்டுக்குடையவர் 4-க்குடையவரோடு கூடி 5-ல் அல்லது 2-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் 5-6-7-பெண்கள் பெற்ற பிறகு நவரத்தினம்போல் ஏக புத்திரன் பிறப்பானும்.

407

ல			செ
	இராசிச் சக்கரம்		சந்
சனி			
குரு			

(இ-ள்.) 5-க்குடையவர் திரிகோணங்களில் நிற்கவும், குரு கேந்திர மடையவும், அவரைப் பாபர்கள் நோக்கவும் பெற்ற ஜாதகருக்கு அறிவில்லாத மூடனுய் ஒரு புத்திரன் பிறந்து கருமஞ் செய்வானும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] சுபாங்கிஷத்தில் 5-க்குடையவர் நிற்கவும், அவரை மூன்றிலிருந்து பாபர்கள் பார்க்காதிருக்கப் பெற்ற ஜாதகருக்கு மைந்தர்கள் பிறந்து பிறந்து மரண மடைந்து அந்தியத்திற் கருமக்கிரியை செய்ய மைந்த னுண்டாம். ஆனால் குரு பார்வை வேண்டுமாம்.

408

(இ-ள்.) சர ராசியிற் குரு நிற்கவும், அது 5-ம் இடமாகவும், 5-க்குடையவர் ஸ்திர ராசியில் நிற்கவும், அவரைச் சுபர்கள் நோக்கவும் பெற்ற ஜாதகருக்குப் புத்திரனில்லையென்பது திண்ணம். ஆனால் கண்ணுவருடைய கரும காண்ட விதிப்படி யாகாதி கிர்த்தியம் செய்தால் ஒருவாறு புத்திர ருண்டாகுமாம்.



[2] லக்கினத்தில் குரு நிற்கவும், 5-ம் இடம் சூன்யமாயும், 11-ம் இடத்தில் சனி நிற்கவும், செவ்வாய் 4-ம் இடத்தில் சிறப்படைந்து நிற்கவும், 7-ம் இடத்தில் சந்திரன் புதனேடு கூடி நிற்கவும், 6-ம் இடத்தில் சூரியன், சுக்கிர னிற்கவும் பெற்ற ஜாதகருக்கு அருமையான புத்திரன் கிடைப்பானென்றும் கூறியது.

சுவீகார புத்திர பலம்

409



(இ-ள்.) லக்கினதிபதியும், 5-க்குடையவரும் மாறி நிற்கவும், சனி சத்துருவாகி 5-ல் நிற்கவும், குரு பலங்கெட்டு நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு புத்திரரில்லை யென்றும், சுவீகார புத்திரனல் கிரியை முடியுமென்றுங் கூறியது.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] 5-க்குடையவர் சூரியனோடு கூடி 2-ம் இடத்தில் ஆட்சிபெற்று நிற்கவும், 12-க்குடையவர் அனுஷ்தானமென்னுஞ் சகோதர ஸ்தானத்தில் நிற்யவும், 8-க்குடையவர் 5-ல் நிற்கவும், ராகு 3-ம்இடத்தில் சத்துருவாய் நிற்கவும் பெற்ற ஜாதகருக்குப் புத்திரனில்லாது தன் மகள் புருஷனால் கிரியை நடக்குமாம்.



410

(இ-ள்.) 6-8-12-ல் 5-க்குடையவரும் புதனுங் கூடி நிற்கவும், அவர்களைப் புண்ணியர்களென்னுஞ் சுபர்கள் பார்க்கவும் பெற்ற ஜாதகருக்குச் சுய புத்திரனுக்கு மேற் சிறந்தவனாகத் தத்து புத்திரனுண்டாம்.

[2] 5-க்குடையவர் செவ்வாயோடு கூடி நட்படைந்து நிற்கவும், அவர்களைச் சனி பார்க்கவும் பெற்ற ஜாதகனுக்கு தன் வம்சத்திலும் புத்திரனில்லாது தன் பந்துக்களிலிருந்து வரும் தத்து மைந்தனால் சுகப்படுவானும்.



411

(இ-ள்.) சனியும் 5-க்குடையவரும், சந்திரனோடு கூடி 1-5-9-ல் இருக்கவும், அல்லது சனி செவ்வாயோடு கூடி 7-ம் இடத்தில் நிற்கவும், அவர்களைப் புண்ணியர்கள் நோக்காதிருக்கவும் பெற்ற ஜாதகருக்கும்.

[2] 5-க்குடையவர் லக்கினாதிபதி ஆகிய இருவரும் மாறி நிற்கவும, இவர்களைச் சுக்கிரன் குரு பார்வை யில்லாது ராகு பார்க்கப் பெற்றாலும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[3] லக்கினுதிபதியும் 5க்குடையவரும், பாபவர்க்க முற்றும் குரு பார்வை பெற்றிருந்த போதினும் இந் நான்கு தரமுள்ள ஜாதகர்களுக்கும் சுவீகார புத்திர ருண்டாகுமாம்.

412

(இ-ள்.) 5க்குடையவர் சனிக்கு நட்பாய்ப் பொருந்தி நவாங்கிச மேறினுலும், 12க்குடையவரேனும், 6க்குடையவரேனும், சூரியனுகி முன் கூறியவர்களோடு அங்கிசஞ் சேர்ந்த ஓரை ராசி இரட்டையா யிருக்கினும், 2ல் 5ல் குரு நிற்கவும், மற்றவர்கள் சுபவர்க்கமாய் நெருங்கினுலும், மிதுனங் கன்னி ஓரைனுயகர் 5-ஆமிடத்தில் நிற்கவும், சனி, செவ்வாய், குளிகனுங் கூடி நிற்கவும் பெற்றஜாதகர்களும் சுவீகார புத்திரனுற் சுகம் பெறுவாராம்.

413

(இ-ள்.) லக்கினுதிபதி 5ல் நிற்கவும், 5க்குடையவர் 9ல் நிற்கவும், பாபர்கள் சந்திரனேடு கூடி நிற்கவும், 6-5ல் சுபர்கள் நிற்கவும் அதற்குடையவர்கள் அவரோடு கூடாமலும் நோக்காமலும் நிற்கவும், சுக்கிரன் குரு தங்கள் வர்க்கத்தில் நிற்கவும், அல்லது சனியின் வர்க்கமேறி யிருக்கினும், 7ல் செவ்வாய், சனி, நிற்கவும், 12-ஆமிடத்தில் சந்திரனிற்கவும் பெற்ற ஜாதகர்களுக்கும் சுவீகார புத்திர னுண்டாம்.

நபுத்ர சாதக வியல்

414

(இ - ள்.) 12ல் 5-3க்குடையவர்கள் சூரியன் ஆகிய மூவரும் நிற்கவும், அவர்களைச் சுக்கிரன், குரு பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகருக்குப் புத்திரனில்லையாம்.

[2] 8க்குடையவர் 5ல் நிற்கவும், 5க்குடையவர் 12ல் நிற்கவும், குரு கேந்திர மடையவும் பெற்ற ஜாதகர்களுக்குக் கருமஞ் செய்யப் புத்திரனில்லையாம்.

[3] 5-ஆமிடத்திற் சனி நிற்கவும், 4லிலும் 12லும் ராகுவோடு பாபக் கிரகங்கள் நிற்கவும் பெற்ற ஜாதகருக்குப் புத்திரனில்லையாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

415

(இ-ள். சந்திரனுக்கு 5க்குடையவரும் சுக்கிரனுங் கூடிக் கன்னியில் நிற்கவும் அவர்களை பாபர்கள் நோக்கவும்பெற்ற ஜாதகருக்கு ஆண் புத்திரனில்லையாம்.

[2] 7க்குடையவர் 5ல் நிற்கவும், அவரோடு பாபர்கள் கூடவும் அல்லது பார்க்கவும், குரு சிறப்படைந்து நிற்கவும் பெற்ற ஜாதகருக்கும் புத்திர னில்லையாம்.

[3] 5க்குடையவர் ராகுவோடு கூடி 6-8-12ல் நிற்கவும் பெற்ற ஜாதகருக்குப் புத்திர னில்லையாம்.

துவேஷ புத்திரர்

416



(இ-ள்.) 5-ஆமிடத்திற் சூரியன் நிற்கவும், 5க்குடையவர் துர்ப்பல மடைந்து சனி செவ்வாய் நோக்கமடையப்பெற்ற ஜாதகன் பிதாவை வருத்தப் படுத்துவானும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] செவ்வாய், சுக்கிரன், குரு, சூரியன், சந்திரன் ஆகிய ஐவரும் கூடி ஒரு ராசியில் நிற்கவும், 9-ம் இடத்தில் சனி, ராகு நிற்கவும் பெற்ற ஜாதகன் நாசகால னென்றும், பிதாவின் துவேஷி யென்னவுங் கூறியது.

ல		கே	
	இராசிச் சக்கரம்		
			குரு-சந் செ சூ சுக்
	சனி ராகு		

417

(இ-ள்.) பிதிர் லக்கினம் எதுவோ அதற்கு 6-ம் இடம் 8-ம் இடம் புத்திரனுக்கு லக்கினமாய் நிற்கப் பெற்ற ஜாதகன் பிதிர்த்துவேஷியா யிருப்பானும்.

[2] லக்கினதிபதியும், 5-க்குடையவரும் பகையா யிருக்கப் பெற்ற ஜாதகர் வெந்து சீறும் பிதிர்த் துவேஷியாகிய ஜாதகனைப் பிள்ளையாகப் பெற்ற தவம் மேன்மைத் தவமேயாம்.

[3] 9- ம்இடத்திற் செவ்வாய், சூரியன், சனி ஆகிய மூவரும் நிற்கில், முன் கூறிய பலனேயாம்.

418

(இ-ள்.) 8-6-12-க் குடையவர்கள் பலம் பெற்று நிற்கவும், 4-9-7-க்குடையவர்கள் பலஹீன மடைந்து நிற்கப் பெற்ற ஜாதகன் பிதாவின் சுகத்தைக் கெடுக்க வந்தவனும்.

	செ	சந்	
	இராசிச் சக்கரம்		
குரு			
ல	சூ புத	சுக்	

[2] சந்திரன், சூரியன், செவ்வாய், குரு, சுக்கிரன், ஆகிய ஐவரும் ஒரு ராசியில் நிற்கப் பெற்ற ஜாதகன் துஷ்டனாய்ப் பிறப்பானும். அன்றியும் தன் தாயைச் சுடாதுபோற் சுட்டுத் துரத்தி விடும்படியான துரோகியாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

419

(இ-ள்.) 9-ம் இடத்திற் சுக்கிரன், சந்திரன், செவ்வாய் ஆகிய மூவரும் நிற்கப் பெற்ற ஜாதகன் தாயைப் பழிப்பவனும்.

[2] 5-ம் இடத்திற் சனி நிற்கவும், அச் சனிக்கு 5-ல் 9-க்குடையவர் நிற்கவும், 9-க்குடையவருக்கு 5-ல் செவ்வாய், குளிகன், ராகு அல்லது கேது நிற்கவும் பெற்ற ஜாதகன் வாய், கண், காது மில்லாத ஒரு புத்திரனைப் பெற்றுத் துயரப் படுவானும்.

புத்திர மாரகம்

420

(இ-ள்) இதுவரையிற் புத்திர பாவங்களைத் தெரிவித்தனம். இனிப் புத்திர மாரகப் பொருத்தங்களும் திசை புத்திகளும் தெரிவிக்கின்றனம்; புத்திர ஸ்தானத்தில் நின்றவர்களும், புத்திர ஸ்தானத்தில் அட்டமாதிபதி யிருக்கும் நேர்மைகளும், புத்திர ஸ்தானத்திற்கு 8-ம் இடத்தைப் பார்த்தவர்களும், இருந்தவர்களும், திசை புத்தியாளரெனப் பொருந்துவார்கள். அதில் எவர் திசை, எவர் புசிப்பு வெனத் தெரிந்து கொள்ளுமாறு அவரவர்கள் கிரக ஸ்புட பாகை, கலை விதிகளின் கணிதத்தாற் றெரிந்து கொள்ளவும்.

421

(இ-ள்.) புத்திர மாரகதிசை புத்தியின் விபரத்தை விளக்கமாகக் கூறுவோம். புத்திர ஸ்தானத்திற்கு 8-க்குடையவரும், அதிலிருந்தவர்களும், கூடினவர்களும், புத்திர ஸ்தானத்திற்கு 6-ம் இடத்திற் குரியவரும், 10-க்குரியவரும், இவர்களில் வலுப்பெற்றோரை யறிந்து அவர்கள் ஸ்புட கணிதத்தைச் சோதித்து ஏற்றம் பார்க்குமிடத்தில் புத்திரர்களுக்கு ஆயுள் வலுத்திருந்தால் கணிதம் சென்ற வரையில் ராசி மண்டல நக்ஷத்திர மண்டலத்திற் றள்ளி கடைசியில் சம்பவித்த சேடத்தைக் கண்டு கொள்ளவும்; அப்படிக் கண்டு கொள்வதே புத்திர மாரக நிக்ஷயமாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

422



(இ-ள்.) சந்திரனுக்கு 5-ல் சனியோடு குருவும், [illegible]-க் குடையவரும் நிற்கவும், அவர்களைப் பாபர்கள் நோக்கவும் பெற்ற ஜாதகருக்குவந்த3-தாரத்திற்கும் மலடி யென்ற பேருண்டாகும்.



[2] 5-ம் இடத்தில் 6-8-க் குடையவர்கள் நிற்கவும், 5-க்குடையவர் குருவுக்கு 3-க்குடையவராகி 6-8-12-ல் நிற்கவும் பெற்ற ஜாதகரை புத்திர னில்லாத மலடனென்றுங் கூறப்படும்.



[3] 9-க்குடையவர் 6-ம் இடத்தில் நீச்சரோடு கூடி நிற்கவும், 5-க்குடையவரும் லக்கினதிபதியுஞ் சந்திரனுக்கு 7-ல் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு மேற்கூறிய வண்ணமேயாம்.

423



(இ-ள்.) 5-க் குடையவரும், சனியும் மாறி நிற்கவும், குரு பாபரோடு கூடி 5-க் குடையவருக்கு 12-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் ஆணி சிந்தி மாய்வராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

குரு		ராகு	சனி
	இராசிச்		ல
	சக்கரம்		
செ	கே		

[2] 5-க்குடையவர் 6-ல் நிற்கவும், 6-க்குடையவர் 9-ல் நிற்கவும், அவரை பாபர்கள் பார்க்கவும் பெற்ற ஜாதகர் நூறு வேள்வி செய்தபோதிலும் புத்திர னில்லையாம்.

424

	இராசிச்		ல
	சக்கரம்		
	குரு	செ சந்	

(இ-ள்.) சந்திரன் செவ்வாயோடு கூடி 4-ல் நிற்கவும், 5-ம் இடத்தில் குரு சிறந்து நிற்கவும் பெற்ற ஜாதகருக்குப் புத்திரன் விழலுக்கிறைத்த ஜலம்போ லாகுமே தவிர புத்திரனில்லையாம்.

	சந் சனி		
	இராசிச்		செ ரா-ல
கே	சக்கரம்		

[2] சந்திரன் பாபர்களைத் துணை யாகக்கொண்டு 10-ம் இடத்தில் நிற்க வும், இலக்கினத்திற் பாபர்கள் நிற்க வும் பெற்ற ஜாதகருக்குப் புத்திரரில்லை யாம். மேற் கூறிய முறைகளெல்லாம் 5 க்குடையவருக்குரிய நன்மை தீமை யைக் கண்டு கூறவும்.

யோக பாவகம்

குரு வணக்கம்

425

அஷ்ட லட்சுமிகளுந் தெய்வ விந்திராணியும் போற்றும் படியான சிவபெருமானுக்கு வேதங்களை யுபதேசித்த தலமா கிய திருவேரகப் பதியிலுறையும் சுப்ரமண்யருடைய அனுக் கிரகம் பெற்று எனக்கு உபதேசித்த இராச குருவாகிய சோதிட வீரப்பபிள்ளையினது அடியை வணங்கி யோகபாவம் கூறுகின்றனம்.

426

(இ-ள்.) குருவும், இலக்கினதிபதியுங்கூடி 9-ல் நிற்கப்பெற்ற ஜாதகருக்கு நாவலர்கள் பாமழை பொழியவும், சந்திரசாமரை பொன்னுசனம் பொருந்திய சக்கரேஸ்பர யோகமடைவாராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] சந்திரன் 4க்குடையவரோடு சேர்ந்து 4ல் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு மேற்கூறிய பலனேயாம்.

[3] சுக்கிரனும், ராகுவுங்கூடி 7ல் இருந்து வர்க்கோத்திரம் பெறினும் மேற்கூறிய பலனும்.

[4] 2க்குடையவரும், குருவுங் கூடி புண்ணிய ஸ்தான மடைந்தாலும் மேற்கூறிய பலனேயாம்.

[5] சந்திரனுங் குருவுங் கூடி வர்க்க பலமடைந்து நல்ல ஸ்தான மடைந்தாலும் மேற்கூறிய பலனேயாம்.

[6] சூரியன் புதனோடு கூடி லக்கினத்தில் வர்க்கபல மடைந்தாலும் மேற்கூறிய பலனேயாம்.

427



(இ-ள்.) சர ராசிக்கு 10-பாகைக்குள்ளும், உபய ராசிக்கு 20-பாகைக்குமேல் 30-பாகைக்குள்ளும், ஸ்திர ராசிக்கு 10 பாகைக்குமேல் 20-பாகைக்குள் சந்திரனிற்கவும், அவரை புதன் முதலாகிய சுபக்கிரகங்களும், 4க்குடையவரும் பார்க்கப் பெற்றாலும்.



[2] மேற்கூறிய ராசிகளே லக்கினமாகவும், அதில் சந்திரனிற்கவும், அச்சந்திரனைச் சுபர்கள் பார்க்கவும், லக்கினாதிபதி நட்பாட்சி உச்சத்திலாகிலும், ஸ்திர ராசி திரிகோண கேந்திராதிபரோடுங் கூடி சிறந்து நிற்கவும், லக்கினாதிபனைக் குரு பார்க்கவும்,பாபர் நோக்கமில்லா திருக்கவும் பெற்ற 2-தரமுள்ள ஜாதகர் திரைகடலுடுத்தியபுவியெல்லாஞ் செங்கோல் செலுத்துவனென்றும், இவன் அரண்மனையில் திருமகள் நடனமாடுவாளென்று ங்கூறியது.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

428

(இ-ள்,) சூரியனும், புதனும் 4-ஆமிடத்தில் நிற்கவும், சந்திரனுஞ் சனியுங் கூடி 10ல் நிற்கவும், லக்கினத்தில் செவ்வாய் நிற்கவும், குருவுக்கு 1-5-9ல் சுக்கிரன் நிற்கவும், சந்திரன் பூரணமடையவும் பாபர்கள்6-8-12ல் நிற்கவும்பெற்ற ஜாதகர் உலகோர் முடிவணங்கும் அரசனாய் ஆயுளோடு தர்மஞ்செய்து மகத்துவம் பொருந்தி சிங்காசனத்திலிருந்து நாமகள் பூமகள் விலாசனாய் வாழ்பவராம்.

	கே	ல செ கு	
சனி சந்	இராசிச்		
	சக்கரம்		சூரி புத
		ராகு	சுக்

429

(இ-ள்.) லக்கினாதிபதியும், 4-9க்குடையவர்களுமாகிய மூவரும் 9-ஆமிடத்தில் நிற்கவும், 10க்குடையவர் லக்கினத்தில் நிற்கவும், சுபர்கள் லக்கினத்தைப் பார்க்கவும் பெற்ற ஜாதகர்இப்பூமிக்கு அரசனே யாவராம்.

ச-கு சுக்			சனி
சூரி	இராசிச்		செவ் ல
புத	சக்கரம்		

[2] லக்கினாதிபதியும், 11-9க்குடையவர்களுமாகிய மூவரும் 10-ஆமிடத்தில் நிற்கவும், 10க்குடையவர் லக்கினத்தில் நிற்கவும், அவரைப் பாபர் பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகர் பிரகாசம் பொருந்திய நவரத்தினம்பதித்த சிங்காசனத்திலமர்ந்து ரத-கஜ-துரக முடைய ராஜராம்.

பு செ சனி			ல குரு
	இராசிச்		
	சக்கரம்		
சந்தி			

430

(இ-ள்.) குருவுஞ் சுக்கிரனும் 9க்குடையவருமாகிய மூவரும் அவரவர்கள் தனித்தனியாய்க் கேந்திர கோணங்களில் ஆட்சி யுச்சமடைந்து நிற்கவும், இவர்களை பாபர்கள்பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகர் ரத்தின மகுடஞ் சூடி சிங்காசனமேறி செங்கோல் செலுத்துவராம்.

குரு		சுக்	புத
சனி	இராசிச்		சந்
	சக்கரம்		
	ல		

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பிரபல பாக்கிய யோகம்

431

சூரி	இராசிச்		குரு சுக்
சந் புத	சக்கரம்		சனி செ
	ல		

(இ-ள்.) 4-க்குடையவர் 10-ல் நிற்கவும், 10-க்குடையவர் 3-க்குடையவருடைய நோக்க மடையவும், சுக்கிரன் குரு இவர்கள் சேர்ந்து திரிகோண மடையவும், 9-க்குடையவரும், 11-க்குடையவருங் கூடி நிற்கவும், அவர்களை குரு பார்க்கவும், பாபர்கள் 10-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் துரகபதாதிகளோடு சாமரை வீசவும் இந்திர சுகம் பெற்றுத் தர்மத் தொழிலை அன்னியரால் செய்யத் தெரிந்து கொடை யளிக்குஞ் செங்கோலுடையவராம்.

432

		சந்	குரு ராகு
	இராசிச்		செ
	சக்கரம்		
கே	சனி		ல-பு சு-சூ

(இ-ள்.) சூரியன், சுக்கிரன், புதன் இவர்கள் கூடி லக்கினத்தில் நிற்கவும், 3-ல் சனி நிற்கவும், 4-ல் கேது நிற்கவும், 9-ல் சந்திரன் நிற்கவும், குரு ராகு ஆகிய இருவரும் 10-ல் நிற்கவும், செவ்வாய் 11-ல் நிற்கவும் பெற்ற புண்ணிய ஜாதகர் லட்சுமீகர முடையவராய் விஜயம் பெற்று மங்கள யோக மடைந்து பிரபுக்களெல்லாம் பக்கஞ் சூழவும், மன்மத லீலா விநோதராய் வாழ்பவராம்.

433

	சந்		குரு
	இராசிச்		
	சக்கரம்		
		ல-பு சனி	

(இ-ள்.) 9-4-க்குடையவர்கள் கூடி லக்கினத்தில் நிற்கவும், அவர்களைக்குரு அல்லது சுக்கிரனாகிலும் பார்க்கவும், 7-ம் இடத்தில் சந்திரன் நிற்கவும், அவரைப் பாபர் பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகர் கண்ணியமும், நிதிவாகனமும் பூமியும் ஓங்கி மேலான ஸ்திரீகள் கவரி வீசும் பிரபுவா யிருந்து ஆயுள் விர்த்தியு முடையவ ராவராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

434



(இ-ள்.) சூரியன் 10-ல் நிற்கவும், 4-ல் சந்திரனும் லக்கினத்திற் குருவும் 11-க் குடையவருங் கூடி நிற்கவும், 9-க் குடையவர் 4-க்குடையவரோடு கூடி சிறப்படைந்து நிற்கவும், பாபர்கள் பலங் குறையவும், 2-க்குடையவர் தேவாங்கிஷ மேறி நிற்கவும் பெற்ற ஜாதகர் தனயோக முடையவராம்.

435



(இ-ள்) 4-க்குடையவர் ஆட்சி யடையவும், அதற்கு 4-க்குடையவர் லக்கினத்தில் நிற்கவும், அவரைக் குரு பார்க்கவும், இதில் 4-9-க் குடையவர்கள் தேவாங்கிஷ மேறி நிற்கவும் பெற்ற ஜாதகர் ஜெகபதி யென்றும் உலகர் புகழ சிங்காசனத்தில் இருப்பவராம்.

436



(இ-ள்.) 4-9-க்குடையவர்கள் கூடி வலுத்த தேவாங்கிஷத்தில் பல மடையவும், 3-க்குடையவரும் செவ்வாயும் திரி கோண கேந்திரங்களில் உச்ச மடையவும் பெற்ற ஜாதகர் அஷ்ட லட்சுமீகரம் பொருந்தி அரண்மனையிற் சென்று நர வாகனம் பெற்று வாழ்பவராம்.

437

(இ-ள்.) 4-க்குடையவர் கோபுராங்கிச மேறவும், 9-11-10-க் குடையவர்கள் ஆகிய மூவரும் பார்க்கவும் பெற்ற ஜாதகன் மங்களகரமான கிரகத்திலிருந்து ஸ்திரீகள் குங்கும மிருகமத வாசனை பொருந்திய துணையோடுங் கூடி ஸ்தன்னியத்திற் சதா கண்வளரும் சுக முடையவனேயாம்.

[2] 5-9-க்குடையவர்கள் கூடி திரிகோண கேந்திரத்தில் நின்றாலும் மேற்கூறிய பலனும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கனபாக்கிய யோகம்

438

		செரா சனி	ல சூ-ச
	இராசிச்		சுக் புத
	சக்கரம்		
		குரு கே	

(இ-ள்.) மிதுனமே லக்கினமாக அதற்குடைய புதன் 2-ஆமிடத்திற் சுக்கிரனோடுகூடி நிற்கவும்,லக்கினத்திற் சந்திரன் மாறி நிற்கவும், குரு சுக்கிரனுக்கு 5ல் நிற்கவும்,சூரியன் சந்திரனோடு கூடவும், செவ்வாய், ராகு, சனி இவர்கள் 12ல் நிற்கவும்பெற்ற ஜாதகர் பாக்கியவந்தராயிருக்கினும் தர்மத்தைக் கற்று அறியாதவரெனினும் அண்டினவருக்கு உதவி செய்பவரென்றுங் கூறியதில் சுயார்ச்சிதம் பெற்று நஞ்சை புஞ்சை நிலங்களோடும் அஸ்வயோகம் பெற்று வாழ்வாராம்.

439

	சந்		ல
	இராசிச்		குரு கே
	சக்கரம்		
சனி	செ	புத சூ	சுக்

(இ-ள்.) லக்கினதிபதி 3க்குடையவரோடு கூடி சந்திரனுக்கு 7ல் நிற்கவும், சந்திரன் 11ல் நிற்கவும், சுக்கிரன் சுக கேந்திர மடையவும், குடும்பத்திற் குரு உச்சமடையவும், 9க்குடையவர் சந்திரனுக்கு 9ல் நிற்கவும், செவ்வாய் ஆட்சி பெற்றிருக்கவும், அவரைக் குரு பார்க்கவும், ராகு கேதுக்கள் பார்க்காதிருக்கவும்பெற்ற ஜாதகர் பாக்கியமும், சற்குணமும், சத்தியமும் பிதாவுக்கு உத்தமராகவும் வாழ்பவராம்.

தனபாக்கிய யோகம்

440

	கே	சந்	
ல குரு	இராசிச்		
	சக்கரம்		சுக்
		ராகு	

(இ-ள்.) சந்திர லக்கினதிபதி 7-ஆமிடத்திற்குக் கேந்திரமடைந்து குரு வீக்ஷண்ய மடையவும், 9-ஆமிடத்தில் ராகு நிற்கவும், அவரைக் குருபார்க்கவும் குரு லக்கினத்தில் நிற்கவும், சந்திரன் 4-ஆமிடத்தில் நிற்கவும், 8ல் கேது தனித்து நிற்கவும் பெற்ற ஜாதகன் இந்திர செல்வனாய் ஸ்ரீ ராமருக்குத் தம்பி வாய்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

த்தது போலவும், குரு திசையில் நல்ல புத்திரன் கிடைக்கு மென்றும், அன்னியரை நோகச்செய்யா னென்றுங்கூறியது.

பிரபுத்வ யோகம்

441

குரு	ல கே		
	இராசிச்		
சனி சந்	சக்கரம்		சுக்
		ராகு	சூ-பு செவ்

(இ-ள்.) 9க்குடையவர் ஆட்சி பெற்றும், 2க்குடையவர் 5ல் நிற்கவும், லக்கினாதிபதி புதன் 5க்குடையவர் கூடி நிற்கவும், அவர்களை குரு பார்க்கவும், சந்திர திரிகோணத்திற்சனி ஆட்சிபெற்று நிற்கவும், ராகு 7ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் லக்ஷாதிபதியாகி அன்பே களத்திரமாய்க் கிடைத்து அதுவால் நல்ல புத்திரர் பலரைப் பெற்று அவர்களாலும் சுகமடைந்து பூரண ஆயுளையும் பெற்று மகாவிஷ்ணுவுக்கு அடிமை யுடையவனெனவுங் கூறியது.

442

	சூ-சு கே	சந் புத	
செ	இராசிச்		
	சக்கரம்		
	ல குரு	ராகு	சனி

(இ-ள்.) செவ்வாய் வீடே லக்கினமாக அதற்குடைய செவ்வாய் கேந்திரமடையவும். அக் கேந்திராதிபதி 11-ஆமிடத்தில் நிற்கவும், 11க்குடையவர் கேந்திரமடையவும், 10க்குடையவர் சுக்கிரனோடு கூடி 6ல் நிற்கவும், 2க்குடையவர் லக்கினத்தில் நிற்கவும், சந்திரன் கேந்திரமடையவும், 6-12ல் ராகு கேது நிற்கவும் பெற்ற சுகிர்தமான ஜாதகனுக்கு சுதந்தர ராஜயோகனாகித் தன்னை யடுத்தவர்களுக்குக் கற்பகத் தருவைப் போலும் கொடையாளியாகிப் பலஇதிகாச நூலாராய்ந்திடும் துணிவாளனென்றுங் கூறியது.

443

	ராகு	சனி	
	இராசிச்		
குரு	சக்கரம்		
சந் செ	சுக் சூரி	ல-பு கே	

(இ-ள்.) துலா லக்கினத்திற் ஜனனமாக லக்கினாதிபதி சூரியனோடு கூடி 2ல் நிற்கவும்,லக்கினத்திற் புதன்நிற்கவும், சனி 8ல் அமரவும், செவ்வாய் சந்திரனோடு கூடி 3லிருக்கவும், 6க்குடையவர் கேந்திரத்தில் ஏகனா யிருக்கவும், ராகு 7ல் தனித்து நிற்கவும் பெற்ற ஜாதகர் கல்வியில்சிறந்தவராயும்தயாளத்தோடு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கை தொட்டு காப்பாற்றுவ னென்றும் மேலோர்கள் சலாஞ் செய்து வணங்கும் ஜனன முடையவரென்றும், மதியூகத்திற் சிறந்தவ ரென்றும், சத்திய வசனமுடையவ ரென்றும், பிதாவைப் பார்க்கினும் நூறு மடங்கு ஜாஸ்தியுடையவ ரென் றுங் கூறப்பட்டது.

தன யோகம்

444

	சந்		குரு
	இராசிச் சக்கரம்		சனி கே
ராகு			சு-பு செவ்
			ல சூரி

(இ-ள்.) இலக்கினத்திற் சூரிய னிற்கவும், 5-ல் இராகு நிற்கவும், சந்திரன் 8-ல் அமரவும், 10-ம் இடத்திற் குரு நிற்கவும், 11-ல் கேது சனி அமரவும், 12-ம் இடத்தில் செவ்வாய், சுக்கிரன், புதன் ஆகிய மூவருங் கூடி நிற்கவும் பெற்ற ஜாதகர் சேஷ்டரைப் பொருளாக மதித்தவராயும், தர்மசிந்தனை யுடையவ ராயும், வாக்குத் தவறுதவராயும், யூக முடையவராயும், நல்ல மனைவியைக் கிடைத்து மேல் வீடு வாசமுள்ளவ ரென்றுங் கூறியது.

445

	இராசிச் சக்கரம்		குரு
ல			செவ்
	சனி		

(இ-ள்.) 4-க்குடையவர் 8-ல் நிற்கவும், 11-ம் இடத்தில் 2-க்குடையவர் நிற்கவும், இவரைக் குரு பார்க்கப் பெற்றாலும்,

[2] சந்திரனும், இலக்கினாதிபதியும், குருவும், சுக்கிரனும் ஆகிய நால்வரும் திரிகோணகேந்திரத்தில் உச்சமடைந்து நிற்கப் பெற்றாலும்,

[3] சனி 10-ம் இடத்தில் உச்சம் பெறவும், அவருக்கு இலக்கினாதிபதி சுபர்கள் பார்வையடையவும் பெற்ற ஜாதகர்கள் பாக்கியவானென்றும் பெயரிருக்கினும் தருமங்கொடா னென்றும் கூறியது

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பிரபுத்வ யோகம்

446

(இ - ள்.) சந்திரன், சுக்கிரன், குரு இம் மூவருங் கூடி 2-ல் நிற்கவும், அவர்களை 9-க்குரியவர்பார்க்கவும், 12-க்குடையவர் 3-ல் நிற்கவும், இராகு 10-ல் அமர்ந்து நிற்கப்பெற்ற ஜாதகன் இராஜனென்று சொல்வதுமன்றி எதிரில்லாக் கொடையாளி யென்றும், கடவுளடியை மறவாதவ ரென்றும், கல்வியின் துறையை முற்றிலு மறிந்தவனென்றும், வசீகரமுள்ளவனென்றுங் கூறியது.

		ல	சந்-சு குரு
ராகு	இராசிச் சக்கரம்		செவ்
			கே
சனி			

447

(இ-ள்.) இலக்கனதிபதி இலக்கினத்தில் நிற்கவும், புதன் 12-ம் இடத்தில் நிற்கவும், 9-2-க்குடையவர்கள் கூடி 4-ல் நிற்கவும், அவர்களைச் சூரியன் பார்க்கவும், 4-க் குடையவர் 9-ல் அமரவும், அவரைப் பாபர் நீசர்கள் கூடாதிருக்கவும் பெற்ற ஜாதகன் பூமிக்கரசனாய்த் திடசரீரமும், பந்துக்கள் சேகர களத்திர சுக முள்ளவனும்.

சந் குரு	இராசிச் சக்கரம்		சனி
			சூ சுக்
	ல செவ்	புத	

448

(இ-ள்.) இலக்கினத்திற் குருவும், 6-ம் இடத்திற் சுக்கிரனும் 5-ம் இடத்திற் சந்திரனும், கேதுவும் நிற்கவும், 9-ல் புதன் நிற்கவும், சனி செவ்வாய் இருவருங் கூடிக் கேந்திரமடையவும், 8-ல் சூரியனிற்கவும் பெற்ற ஜாதகர் இராஜசமானம் பெற்று வீரமுந் தீரமும் பொருந்தி வித்வ சேகரனாய் மிகுந்த கொடையாளியாய்க் கெடாத செல்வமும், புகழுமுடையவராம்.

செவ் சனி	சூரி	புத	
சுக்	இராசிச் சக்கரம்		ராகு
சந் கே			
			ல குரு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

449

(இ-ள்.) குருவின் வீடு லக்கினமாகவும், குரு 11-ல் நிற்கவும், 10-ம் இடத்திற் கேது, செவ்வாய் கூடவும், 3-ம் இடத்திற் புதன், சூரியன்நிற்கவும், 4-ம் இடத்திற் சுக்கிரன் ராகுவோடு கூடி நிற்கவும், சந்திரன் சனி 12-ல் அமரவும் பெற்ற ஜாதகர் தருமனும், புஜபலமுடையவராயும், கல்வி விநயமுள்ளவரெனவுங் கூறியது.

ராகு சுக்			
சூரி புத	இராசிச்		
	சக்கரம்		
ல	சனி சந்	குரு	கே செ

450

(இ - ள்.) புதன் வீடு லக்கினமாகவும், புதன் கேந்திரமடையவும், புதனுக்கு 2-ம் இடத்திற் செவ்வாய், சூரியன், சுக்கிரன், கூடி ஆட்சி உச்சமடையவும், அல்லது குருவுக்கு கேந்திரம் பெறவும், சுக்கிரன்மனைக்கு திரிகோண கேந்திரத்திற் குரு நிற்கவும், சந்திரன் 11-ல் கேதுவோடு கூடி நிற்கவும், அவரைக் குரு பார்க்கவும், குரு விருந்த ராசியாதியும், குருவும் மாறி நிற்கவும் பெற்ற ஜாதகர் தமிழ் வித்வானென்றும், இனிய மனையாளுடையவரெனவுங் கூறியது

புத	சூ-சு செ		
	இராசிச்		சந் கே
குரு	சக்கரம்		
சனி			ல

451

(இ-ள்.) சுக்கிரன் வீடு லக்கினமாக சுக்கிரன், குரு, சந்திரனுடன் கூடி ஆட்சி பெற்று லக்கினத்தில் நிற்கவும், ராகு, சூரியன், செவ்வாய் கூடி 2-ல் நிற்கவும், புதன் 3-ல் அமரவும், 12-ல் சனி நிற்கவும் பெற்ற ஜாதகர் குருவருளால் கல்வியும், மேன்மையும், ஆயுளும் பெற்று வாழ்பவராம்.

		கே	
	இராசிச்		
	சக்கரம்		
புத	சூ-ரா செவ்	ல சசு குரு	சனி

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

விற்பன்ன யோகம்

452

	குரு ராகு		சுக்
செ	இராசிச்		ல சூரி
	சக்கரம்		புத
		சந் கே	சனி

(இ-ள்.) சந்திரன் வீடே லக்கினமாக சந்திரன் 4-ல்நிற்கவும், புதன் 2-ல் அமரவும், சுக்கிரனுக்கு 11-ல் குரு நிற்கவும், சூரியன் லக்கினத்தில் நிற்கவும், ராகு 10-ல் நிற்கவும், செவ்வாய் சந்திரனுக்கு 1-5-9-ல் நிற்கவும், சனி 3-ல் அமரவும், சுக்கிரன் புதனுக்கு 11-ல் நிற்கவும் பெற்ற ஜாதகன் வித்தையுடையவனும், குரு அருளும், லட்சுமீகரமுடையவரென்றும்கூறியது.

453

	செவ் சனி	ல சுக்	புத சூரி
	இராசிச்		ராகு
கே	சக்கரம்		சந்
			குரு

(இ-ள்.) லக்கினுதிபதி லக்கினத்தில் ஆட்சி பெறவும், 2-க்குடையவரும், ஆட்சியடையவும், 4-ல் சந்திரன் அமரவும், 7-க் குடையவர் ஆட்சி பெறவும், 2-ம் இடத்தில் 4-க்குடையவர் நிற்கவும், 11-க் குடையவர் 5-ல் அமரவும், 9-க்குடையவர் சந்திரனுக்கு 9-ல் நிற்கவும், கேது 9-ல் அமர்ந்திருக்கப் பெற்ற ஜாதகர் தத்துவகலைஞானங்களுக்குத் தலைவனுகிச் சற்குண மூடையவராயும், வித்வசேகரனுயும், கைலைவாழ் சிவபெருமானுக்கு ஏகாந்தனுயும், ராஜர்களுக்கு நேத்திரமாகவும் வாழ்பவராம்.

454

	கே	செவ்	
	இராசிச்		
	சக்கரம்		சந்
	குரு	ல சு-ரா	பு-கு சனி

(இ-ள்) 9-க்குடையவர் ஆட்சி உச்சமடையவும், 4-க்குடையவர் 11-க்குடையவருடன் கூடி 12-ல் நிற்கவும், 2-ல் குரு அமரவும், சந்திரன் 11-ல் நிற்கவும், 2-க் குடையவரைக் குரு பார்க்கவும், கேது கேந்திரமடையவும், அவரைச் சுக்கிரன் பார்க்கவும், லக்கினுதிபதி லக்கினத்தில் ஆட்சி யடையவும் பெற்ற ஜாதகர் ஆயுளுள்ள வரையில் தமையனைத் தந்தை ஆசிரியனைப்போலும் பணிவிடைபுரிந்து சிவபிரானுக் கடிமையாய்க் கல்வி அமிர்த வாக்குடையவராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

455

(இ-ள்.) 2-ல் புதனிற்கவும், 4-ல் சந்திரனமரவும், குரு சந்திரனுக்குக் கேந்திரத்திலேனும், லக்கினத்திற்கு 10-லேனும் நிற்கவும், 11-க்குடையவர் சந்திரனுக்கு 9-ல் அமரவும், 2-க்குடையவர் லக்கினத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகர் புலவர்கள் சிகாமணியாவாராம்.

	குரு		சுக்
	இராசிச் சக்கரம்		ல சூரி
			புத
		சந்	

456

(இ-ள்.) 2-க்குடையவர் சந்திரனுக்கு 2-ல் நிற்கவும், 4-க்குடையவர் லக்கினமேறவும், புதன் 9-ல் அமரவும், சந்திரன் 5-ல் நிற்கவும், 5-க்குடையவர் செவ்வாயோடு கூடி நிற்கவும் பெற்ற ஜாதகன் ராஜகுமாரனைப்போல் இதிகாச காவிய நூற்கரை கடந்தவனும் குணவானெனவுங் கூறியது.

சனி செ		புத	
சுக்	இராசிச் சக்கரம்		
சந்			
			ல குரு

457

(இ-ள்.) சந்திரனுக்கு கேந்திரஸ்தானத்தில் 9-க்குடையவரும் புதனும் கூடி நிற்கவும், 4-ம் இடத்திற் சுக்கிரன் அமரவும், 11-ல் குரு நிற்கவும், 2-க்குடையவர் சந்திரனோடு கூடி குருவுக்கு 2-ல் நிற்கவும் பெற்ற ஜாதகன் இலக்கிய லட்சணமும் லட்சுமீகரமு முள்ளவராம்.

சுக்			
சூரி புத	இராசிச் சக்கரம்		
ல	சனி சந்	குரு	

ஜோதிட வித்வ யோகம்

458

(இ-ள்.) 2-க்குடையவர் சந்திரனுகி 6-ம் இடத்தில் அரவோடு கூடி நிற்கவும், 4-ம் இடத்திற் சுக்கிரன் நிற்கவும், சூரியனும் புதனுங் கூடி 5-ல் அமரவும், குரு கேந்திர மடையவும் பெற்ற யோக்கிய ஜாதகன் ஜோதிட நூற்குச் சுக்கிரன் அகஸ்தியர் குமாரவேள் இவர்களுக் கொப்பானவராம்.

			ல
	இராசிச் சக்கரம்		
குரு	சந் கே	சூரி புத	சுக்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

459

(இ-ள்.) புதன் கேந்திரத்தில் நிற்கவும், 2-க்குடையவர் உச்ச மடையவும், சுக்கிரன் உபயராசியில் நிற்கவும், சுபர்கள் 3-ம் இடத்தில் நிற்கவும். அவரை குரு பார்க்கவும் பெற்ற ஜாதகர் உலகம் புகழத் தக்க ஜோதிட வித்துவானுவான்.

சுக்	சூரி புத		
	இராசிச்		ல
	சக்கரம்		
			குரு சந்

460

(இ-ள்.) சந்திரனுங் குருவும் ஒருவருக்கொருவர் கேந்திர மடையவும், 2-ல் புதன் அமரவும், புதனுக்கு 11-ல் சுக்கிரனிற்கவும் பெற்ற ஜாதகர் சோதிட வித்துவானுவானும்.

குரு		சுக்	ல
	இராசிச்		புத
	சக்கரம்		
			சந்

மேற்கூறிய கிரகங்கள் மேற்கூறிய வண்ணமிருந்து வர்க் கேந்திரங்களில் வலுப்பெற்றிருந்தால் இச் சாதகர் கலைஞான பண்டிதனென்றுங் கூறப்படும்.

பிரபல விற்பன்ன யோகம்

461

(இ-ள்.) சந்திரனும், குருவும் 2-க்குடையவருமாகிய மூவரும் திரிகோண கேந்திரங்களில் ஆட்சி பெற்று நிற்கவும், சிலர் உச்ச பலமடையவும், சுபர்கள் பார்க்கவும் பெற்ற ஜாதகர் தர்க்கீகத்திற்கும், இலக்கண இலக்கியத்திற்கும், வித்துவானெனவும் மேற் கூறியவர்கள் வர்க்கோத்தமங்களில் சிறந்து நிற்கில் மதுரவாக்குள்ளவனு மாவானும்.

ல		புத சுக்	சூரி
	இராசிச்		சந் குரு
	சக்கரம்		
	செ		

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சமவிற்பன்ன யோகம்

462

(இ-ள்.) 11-ஆமிடத்திற் குரு நிற்கவும், குருவுக்கு 2ல் சந்திரனும், சந்திரனுக்கு 4ல் புதனும், புதனுக்கு 2ல் சுக்கிரனும் நிற்கவும் பெற்ற ஜாதகர் வேதாந்த பனுவல்கண்ட வித்துவானுவானும். மேற்கூறியவர்கள் வர்க்கோத்தமங்களில் பொருந்தி நிற்கில் தார்க்கீகத்திலும் இலக்கண இலக்கிய நூலிலும் வல்லவனுவனும்.



463

(இ-ள்.) 9-ஆமிடத்திற் புதனிற்கவும், புதனுக்கு 9ல் சந்திரனும், சந்திரனுக்கு 9ல் குருவும் நிற்கவும் பெற்ற ஜாதகர் பெருநூலாகிய மகா வாக்கியங்களைப் புகல வல்லவனுய் முற்கூறிய தேவ வர்க்கோத்தமங்களில் நிற்கவும் பெற்றுல் கல்லாத கலையுந் தெரிந்தவனும்.



பிரபல விற்பன்ன யோகம்

464

(இ-ள்.) சனியில்லாதுசுபக்கிரகங்கள் கூடி உத்தமாங்கிசத்தில் நிற்கவும், 2-ஆமிடத்தில் புதன், குரு, சுக்கிரன் ஆகிய சுபர்கள் கூடி மேற்கூறிய பலத்தோடு நிற்கவும் பெற்ற ஜாதகர் சிறந்த கல்விமானுவனும். சுக்கிரன், குரு, புதன் வர்க்கோத்ர மேறில், இலக்கண இலக்கிய நூலிலும் வல்லவனும்.

465

(இ-ள்.) 2க்குடையவரும் குருவும் புதனுமாகிய மூவரும் கூடி 1-5-9ல் நிற்கவும்பெற்ற ஜாதகர் மிகுந்த கல்விமானெனன

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வுங் கூறியது. மேற்கூறிய கிரகங்கள் வர்க்கோத்திரங் களில் சிதருமலும் பாபர்கள் நோக்கமில்லாமலும் இருக்கில் பல நூல்களுக்கும் உரை செய்யும் வலிமை யுடையவனும்.

466

(இ-ள்.) குருவும் 7க்குடையவரும் புதனுமாகிய மூவரும் கேந்திர கோணங்களில் நிற்கவும் பெற்ற ஜாதகர் இராஜ சபை ஏறத்தக்க வல்லப வித்துவனுவனும். மேற்கூறிய கிரகங் கள் தனது மனையிலாகிலும், 2-ஆம் மனையிலாகிலும் நிற்பா ராகில் மேற்கூறியவற்ருேடு தார்க்கீக நூற்களை இயற்றும் வல்லவ னுவனும்.

467

(இ-ள்.) சந்திரனுக்குக் கேந்திரத்தில் குருவும், லக்கின திபதி கேந்திரத்திலுமிருக்கவும் பெற்ற ஜாதகர் இலக்கண இலக்கிய காவியமு மியற்றுவனும், மேற்கூறிய கிரகங்கள் வர்க்க முயர்ந்து சிறப்படைந்தால் யாவருக்கு மேலான வித் துவானுவராம்.

யோக்யதா யோகம்

468

(இ-ள்.) 3-2-12க்குடையவராகிய மூவ ருங்கூடி குருவுக்கு கேந்திரமடையவும், 4க்குடையவர் திரிகோண மேறவும், புதன் கேந்திரமடையவும், சந்திரன் 11-ஆமிடத்தில் நிற்கவும் பெற்ற ஜாத கர் அமுதகவி பாடுவனென்றும் மனைவி சுகிர்தமும், கீர்த்தியுமுடையவ ராவராம்.

புத	சூ-சு செவ்		
	இராசிச்		சந்
குரு	சக்கரம்		
			ல

469

(இ-ள்.) குரு லக்கினதிபதி 11க்கு டையவர் ஆகிய மூவருங் கூடி கேந்திர திரிகோண மேறவும், 9க்குடையவர் 3ல் நிற்கவும், 2ல் சூரியனுஞ் செவ்வாயுஞ் சிறப்படைந்து நிற்கவும், அவர்களுக்கு 11-ஆமிடத்தில் 4க்குடையவர் நிற்கவும் பெற்ற ஜாதகர் சிவபெருமான் கிருபை யால் கல்வியும், இன்பமும், வாக்குறு தியு முடையவராவராம்.

		கே	
	இராசிச்		
	சக்கரம்		
பு	சூ-ரா செ	கு-ச சு-ல	சனி

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy



[2] 8-க்குடையவர் சந்திரன் 12-4-க் குடையவர்கள் ஆகிய நால்வரும் ஒரு ராசியில் நிற்கவும், லக்கினாதிபதி, சூரியன், செவ்வாய் ஆகிய மூவருங் கூடி ஒரு இராசியில் நிற்கவும் பெற்ற ஜாதகன் இறந்த போதிலும் வாய்க்கரிசிக் கிட மில்லாத தரித்திரனும்.

633

(இ-ள்.) லக்கினாதிபதியுஞ் சனியும் நீச்ச மடையவும், அவர்களைப் பாபர்கள் கூடவும், குரு பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகன் வீடில்லாமல் அசுத்த முள்ளவனாகிய தரித்திரனும்.

[2] 4-ம் இடத்தில் சனியோடு பாபர்கள் கூடி நிற்கவும், 9-ம் இடத்தில் செவ்வாயோடு 8-6-க் குடையவர்கள் கூடி நிற்கவும், லக்கினத்தில் குளிகாதி பாபர்கள் நிற்கப்பெற்ற ஜாதகர் ஆயுள் வரையில் கேவல குடிசையிலிருந்து துயரப்படுவராம்.

634

(இ-ள்.) 4-க் குடையவர் சுக்கிரனோடு கூடி நீச ராசியில் நிற்கவும் பெற்ற ஜாதகன் பேய்போல் தனி மனையில் தனியா யிருந்து தவிப்பானும்.

[2] மேற்கூறிய கிரகங்களைச் சனி பார்த்தால், முகப்பில்லாத ஒதுக்கு வீட்டின் மூலையில் துயரப்படுவனும்.

[3] அச் சனியோடு கேது கூடி மேற்கூறியவர் பார்க்கப் பட்டால், ஜாதகன் சுயவீடில்லாது சத்திரம் சாவடியில் தூங்குவானும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

635



(இ-ள்.) 4-ஆமிடத்தில் ராகுவோடு பாபர்கள் கூடி நிற்கவும், அவர்களைச் சனி பார்க்கவும் பெற்ற ஜாதகன் வீடு நாஸ்தியடையுமாம்.

[2] 4-ஆமிடத்திலேனும், லக்கினத்திலேனும் 8க்குடையவர் வலி குறைந்து நிற்கவும், 4-ஆமிடத்தில் குளிகன் நிற்கவும், அவரைக் குரு பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகன் சாலை சோலைகளிற் றிரிந்து பகலிருந்த ஊரி லிரவி வில்லாமலும் பசி யென்னும் பெண்ணுக்குத் துணைவனு யிருப்பனும்.

636

(இ-ள்.) 8க்குடையவர் லக்கினுதிபதிக்கு 6ல் நிற்கவும், 6-ஆமிடத்தில் 2க்குடையவர் அமரவும் பெற்ற ஜாதகன் கட்டத் துணியற்று, உண்ணக் கஞ்சியுமற்று மங்குவானும்.

(இ-ள்.) 8-9க்குடையவர்கள் கூடி ஒரு ராசியில் நிற்கவும் லக்கினுதிபதி 8ல் நிற்கப் பெற்ற ஜாதகன் கையால் சட்டி கொண்டு வீடுகள்தோறும் பசியினுல் தவிப்பனும்.

637



(இ-ள்.) 4க்குடையவர் 12க்குடையவரோடு கூடி நிற்கவும், சுக்கிரன் 10க்குடையவரோடு கூடவும், அவரை 8க்குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகன் அன்னம் ஆடையென்று கோடி சந்தி திரிபவனும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அவயோகம்

[2] தேய்பிறைச் சந்திரன் 9க்குடையவரோடு கூடி 8-ஆமிடத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகனுக்குவேலை கிடைத்தாலும், கூலி கிடைக்காமல் வீணுக்கு உழைத்து மெலிந்து போவனும்.

		ல	
சூரி	இராசிச் சக்கரம்		
சனி சந்			

638

(இ-ள்.) குருவிருந்த ராசியாதிபதி 12க்குடையவரோடு கூடி 11ல் நிற்கவும் சுபக்கிரகங்களெல்லாம் 6-8-12ல் நிற்கவும் பெற்ற ஜாதகன் வீதியிலிருந்து கதியில்லாமல் வாடுவனும்.

	இராசிச் சக்கரம்		குரு
ல சூரி	சுக் புத	சந் செ	சனி

[2] லக்கினதிபதி யிருந்த ராசியிலும் சந்திரன் நின்ற ராசியிலும் இரண்டு பக்கமும் பருவிருந்ததுபோல் பாபர்கள் நிற்பாராகில் பேராசை கொண்ட தரித்திரனும்.

639

(இ-ள்.) சந்திரனுக்கு 8க்குடையவரை லக்கினத்திற்கு 4க்குடையவர் கூடி 6-ஆமிடத்தில் நிற்கவும்,4-ஆமிடத்திற் பாபர்கள் கூடி நிற்கவும் பெற்ற ஜாதகன் நாடோறுங் கூலி வேலையின்றி பொருளில்லா தலைவனும்.

	இராசிச் சக்கரம்		ல
			சந்
குரு சுக்	புத	செ ச சூரி	

[2] 9க்குடையவர் நீசமடையவும், 4-ஆமிடத்திலும், 10-ஆமிடத்திலும், லக்கினத்திலும் கொடிய பாபர்கள் நிற்கப் பெற்ற ஜாதகன் அம்பி லடிபட்ட மானைப்போல் அன்ன மாடை யில்லாது மயங்கி யலைவானும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

640

	செவ்		
	இராசிச்	சக்கரம்	
சனி			
ல	சந்	குரு	

(இ-ள்.) தேய்பிறைச் சந்திரன் நீச மடையவும், அவர் பக்கங்களில் இலக்கி னுதிபதி நிற்கவும், அந்த இலக்கினுதி பதிக் கேழுக் குடையவரும், 2-க்குடைய வருஞ் சனிக்கு 4-ம் இடத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகன் வறுமையி லிருந்து நொந்து விடுவானும்.

[2] 10-க்குடையவர் 8-ம் இடத்தில் நிற்கவும்,4-க்குடையவ ருக்கு பகை பெற்றவர்கள் சந்திரனுக்கு 6-8-12-ல் நிற்கவும் பெற்ற ஜாதகன் சிந்தை நொந்து நாடோறும் வறுமை யுடை யவனும்.

[3] செவ்வாய், சனி, சந்திரனுக்கு 8-க் குடையவர் ஆகிய மூவரும் 11-ம் இடத்தில் நிற்கவும், 11-க்குடையவர் 12-ல் நிற்க வும் பெற்ற ஜாதகன் பசியினு லலைந்து வாடுவானும்.

641

			கே செவ்
	இராசிச்	சக்கரம்	
			சந் சனி
ல-கு ரா-சு	புத	குரு	

(இ-ள்.) சனியோடு சந்திரன் கூடி 9-ல் நிற்கவும், இலக்கினுதிபதி நின்ற இராசிக்கு 8-க்குடையவர் இலக்கினத் திற் பாபர்கள் பார்வை கிடைத்து நிற்க வும் பெற்ற ஜாதகன் வறுமை சோம்ப லினுல் துயர மடைவனும்.

[2] சந்திரனும் 6-க் குடையவருங் கூடி நிற்கவும், அவர் கள் நின்ற இராசியாதிபதியும், அவ் விராசியாதிபதிக்கு 8-க் குடையவருங் கூடி லக்கினத்தில் நிற்கவும், லக்கினுதிபதி 6-8-12-லிருந்து பலக் குறைவு அடையவும் பெற்ற ஜாதகன் பொடிக்கேனும் ஒரு காசு கிடைக்காதவனும்.

642

		சனி	
சந்	இராசிச்	சக்கரம்	
ல			குரு

(இ-ள்.) 7-க்குடையவர் சனி வீட்டில் நிற்கவும், அவரைச் சனி பார்க்கவும், 7-க்கு 9-க் குடையவர் லக்கினத்திற்கு 8-ல் நிற்கவும் பெற்ற ஜாதகன் அன்னம் ஆடை யில்லாமல் தானிருக்க நிழலு மில்லாமல் வாடுவனும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] 7-ம் இடத்தில் சுக்கிரன் சிறப்படைந்து நிற்கவும், அவரோடு பாபர்கள் கூடி நிற்கவும் பெற்ற ஜாதகன் விதவையைப் புணரும் கழுதை போன்றவனும். இவன் தொடுங் காரியங்கள் பலியாவாம்.

643

(இ-ள்.) 7-8-க் குடையவர்கள் கூடி நிற்கவும், திரிகோண கேந்திரங்களைப் பாபர்கள் நோக்கவும், 2-க் குடையவர் 8-ல் நிற்கவும் பெற்ற ஜாதகன் முறையற்ற நீச மாதரையும், திரேக ஊனமுள்ள ஸ்திரீகளையும், தேவாலயம், குளக்கரை, மடம், கொல்லை முதலிய இடங்களில் புணர்ந்து வேறு கதியில்லா தலைவனும்.

சூரி	சுக்	ராகு	குரு செவ்
புத	இராசிச் சக்கரம்		
சனி			சந்
	கே		ல

644

(இ-ள்.) 7-ம் இடம் கன்னியா யிருக்கவும், அதில் 8-க் குடையவர் அமரவும், அவரைச் சனி பார்க்கவும், 12-ல் சுபர்கள் நிற்கவும் இராகு 9-லிருந்து கன்னியைப் பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு அனேக வித்தைக ளிருந்தும் இவன் மனையாள் பகைவர்களால் கூடிப் புணரப் படுவாளாம். அந் நடைக் குள்ளாகி இவ னெறியின்றி வாடுவனும்.

ல சனி		கே	
குரு சந்	இராசிச்		
	சக்கரம்		புத சூரி
	ராகு		சுக்

645

(இ-ள்.) 4-ல் சூரியன் நிற்கவும், அவரைச் சனி பார்க்கவும், 12-ல் சந்திரன் அமரவும், 2-ல் 12-க் குடையவர் நிற்கவும், அல்லது 6-ம் இடத்தி லமரவும், அவரை 8-க் குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகன் உடலெடுத்த நாள் முதல் அந்தியம் வரையில் தாரித்திரனும்த் துன்ப மடைவானும்.

சந்	ல		
செவ்	இராசிச்		சூரி
சனி	சக்கரம்		
			குரு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

646



(இ-ள்.) 4க்குடையவர், சந்திரன், 9க்குடையவர் ஆகிய மூவருங் கூடி 3-ஆமிடத்தில் நிற்கவும், அவர்களைப் பாபர்கள் நோக்கவும், 3க்குடையவர் 12ல் நிற்கவும், அவரோடு இலக்கினதிபதி கூடவும், சந்திரன் காலி ராசியை பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு செல்வம், குணம், நெறி முதலியவைகளு மில்லையாம்.

647



(இ-ள்.) சுக்கிரனும், 10-12க்குடையவர்கள் ஆகிய மூவருங் கூடி 9-ஆமிடத்தில் நிற்கவும், 9க்குடையவர் 2-க்குடையவரோடு கூடி 12ல் நிற்கவும் பெற்ற ஜாதகருடைய குடும்பம் அழிந்தே தீருமாம்.



[2] குருவுக்கு 10ல் 12-க்குடையவர் நிற்கவும், 6க்குடையவர் 2ல் அமரவும், 8க்குடையவர் 9ல் நிற்கவும்பெற்ற ஜாதகருக்குச் செல்வம் மிகுதியாகக் காண்பித்துப் புகைபோல் மாறிவிடுமாம்.

648



(இ-ள்.) லக்கினதிபதியும், சிங்கராசிக்குரிய சூரியனுங் கூடி நிற்கும் ராசி ஒருவருக்கு நீசமாகவும், அந்நீசக் கிரகத்தை நீசம் பெற்ற சனி பகை பெற்றுப் பார்க்கவும், லக்கினத்தை குரு, சுக்கிரன் இவர்களில் ஒருவர் பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகன் தன்குலத்தைச் சுடும் நெருப்பாகவும், சஞ்சலமும், அகட விகடங்களு முள்ளவனும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

649



(இ-ள்.) 12க்குடையவர் சர ராசியில் நிற்கவும், 10க்குடையவர் திர ராசியி லமரவும், உபய ராசியில் 2க்குடையவர் நிற்கவும், இவர்களைப் பாபர்கள் பார்க் கவும் பெற்றஜாதகர் குடும்பம் விழலைப் போலாகுமாம்.

[2] 9-10க்குடையவர்கள் பலஹீனமடைந்து 6-8-12ல் நிற்கவும், லக்கினாதிபதி 12ல் அமரவும் பெற்ற ஜாதகர் மத்தி யில் ஆடையாபரணங்களைத் தோற்பானும்.

650



(இ-ள்.) 12-ஆமிடம் சர ராசியாகவும், அதில் 2க்குடையவர் நிற்கவும், 12க்கு டையவர் 4ல் நிற்கவும், லக்கினாதிபதிசர ராசியில் அமரவும், அவரைக் குரு பார் க்காதிருக்கவும் பெற்ற ஜாதகர் துக் கமேவடிவாகக்கொண்டு மனையாள் ஏச வும், உறுதி யில்லாதவனு மாவனும்.

651

(இ-ள்.) 2ல் சூரியனும், ராகுவுங் கூடி நிற்கவும், 4க்குடையவர் 12ல் நிற்கவும், இருவர்களைக் குரு பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகன் ஒருவரிடத்திற் கடன் வாங்கானென்றும், தானும் கொடா னென்றும்,பொருளைச் சோரர் கைபுகா தென்னும் வலிமை யிருக்கினும், ஒரு பெண்ணாகிய தன் மனைவியால் மனங் கலங்கச் செய்து அவளோடேகித் தீயுறவாகிய நட்படைவனும்.

652



(இ-ள்) 2-9-11க் குடையவர்களாகிய மூவர்களுக்கும், 4-7ல் சனி, செவ்வாய், சூரியன் பகை யடைந்து நிற்கவும் பெற்ற ஜாதகன் அக்கினியில் பற்றிய உரோமம் போல் துயரப்படுவனும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] 5-ம் இடம் அல்லது 3-ம் இடத்திற் சனி, சூரியன், செவ்வாய் நிற்கவும், லக்கினாதிபதி 8-ல் அமரவும் பெற்ற ஜாதகன் பூமி யிழந்து தந்தை தேடிய பொருள்களெல்லாம் வேசியருக்குக் கொடுத்துவிட்டுக் கலங்குவானும்.



653

(இ-ள்.) 8-ம் இடத்தில் 2-11-க் குடையவர்கள் நிற்கவும், சூரியனும், சனியும் கூடி 11-ல் அமரவும், 6-8-12-ல் சுக்கிரன் நிற்கவும் பெற்ற ஜாதகன் முன்னோர்கள் கீர்த்தியும், தமையனால் கொடுக்கும் பொருளையும், வேசையர்களுக்கு அளித்துவிட்டுத் துயரப் படுவானும்.



654

(இ-ள்.) 3-1-11-9-2-க் குடையவர்களாகிய ஐவர்களையும், 6-8-12-க்குடையவரேனும், பாபர்களேனும் 2-பக்கமும் கட்டி நிற்கவும் பெற்ற ஜாதகன் பொருளை யெல்லாம் வேசியர்களுக்குக் கொடுத்துவிட்டு மயங்குவனும்.



655

(இ-ள்.) 2-9-க்குடையவரோடு குருவுங் கூடி 6-ம் இடத்தில் நிற்கவும், அவர்களை 6-8-க் குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகர் பொருளிழந்தவனனைலும், அன்னியர் பொருளை இச்சியாது கெடுதியும் நினையானும்.



CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] 1-10-6-க்குடையவர்களாகிய மூவரும் 12-ல் நிற்கவும், அல்லது பார்க்கவும் பெற்ற ஜாதகன் தன் பொருளிழந்து பந்துக்களால் சன்மானம் பெறுவனும்.

656

(இ-ள்.) 1-4-க் குடையவர்களும், செவ்வாயுமாகிய மூவருங் கூடி 10-ல் நிற்கவும், அவர்களை 4-லிருந்து சூரியன் பார்க்கவும் பெற்ற ஜாதகரின் பொருள் பலவிதங்களில் விரையப்படுமாம்.

[2] சிங்கம், மகரம், கன்னி இந்த ராசிகளுக்குரிய சூரியன், சனி, புதனுகிய மூவரும் 11-ல் நிற்கவும், 11-க்குடையவர் பலஹீனமடையப் பெற்ற ஜாதகரின் பொருள் அழிந்து விடுமாம்.

657



(இ-ள்) 5-6-க்குடையவர்களும், சந்திரனும் ஆகிய மூவரும் 2-ம் இடத்தில் நிற்கவும், 2-7-க்குடையவர்கள் 6-ல் நிற்கவும் பெற்ற ஜாதகன் பொய் சொல்லிப் பிழைப்பனும்.

[2] 4-9-க்குடையவர்கள் 8-ல் நிற்கவும், அவர்களோடு 12-க்குடையவர் உச்சமடைந்து கூடி நிற்கவும் பெற்ற ஜாதகன் பந்துக்களும், நேசர்களும் கொடுக்கும் பொருளாலும், தன்னடையினுலும் சுக மடைவானும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

658

(இ-ள்.) சந்திரனுக்கு 6-ஆமிடத்தில் லக்கினாதிபதி 8-க் குடையவரோடு கூடி நிற்கவும், அவர்களைப் பாபர்கள் 2-பக்கமும் கட்டி நிற்கவும் பெற்ற ஜாதகன் தன் மனையாளிடம் துன்பப்படுவனும்.

ல		புத	சூரி ராகு
சந்	இராசிச்		குரு சுக்
	சக்கரம்		செவ் சனி
கே			

[2] சந்திரனுங் கேதுவுங் கூடி 5-ல் நிற்கவும், 7-ல் 8-க்குடையவரும் சனியுங் கூடி அமரவும், 9-க்குடையவர் 6-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் குணமுள்ள மனைவியை யிழந்து சுகக் குறைவு படுவராம்.

செவ் சனி			
சுக்	இராசிச்		ராகு
சந் கே	சக்கரம்		
			ல

659

(இ-ள்.) ராகுவும் சனியுங் கூடி லக்கினத்தில் நிற்கவும், சூரியன் சந்திரனைப் பார்க்கவும், ராகு கேந்திர மடையவும், 8-க் குடையவர் 9-ல் நிற்கவும் பெற்றஜாதகன் தனக்குள்ள பாக்த்தை முற்றிலும் சுகியானென்றும், ஈனமாதுருடையவ னென்றும், அந்தியத்திற் கலங்குவ னென்றுங் கூறியது.

சூரி		ல-ச ராகு	
	இராசிச்		
குரு	சக்கரம்		
	கே		சந்

660

(இ-ள்.) 2-க் குடையவர் 11-ல் நிற்கவும், சந்திரன் 4-ம் இடத்தில் அமரவும், சுக்கிரன் 9-ல் நிற்கவும், குரு 2-ல் நிற்கவும், சனி ராகுவோடு கூடி உச்சம் பெற்றுத் திரிகோண மடையவும் பெற்ற ஜாதகன் இடும்பர்கிய வித்தையை யடைந்து, குருவை நிந்தை செய்யுந் தரமுள்ளவனும்.

	கே		சுக்
	இராசிச்		
சந்	சக்கரம்		செவ்
	குரு	ல-ச ராகு	

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ஆயுட் பாவகம்

662 - 674

(வினு) மங்கள பாவக முதல் யோக பாவகம் ஈருக பல பாவகங்களும், அவற்றின் சாரமும், அவசாரங்களும் தெரிந்தன. அரசனுக்கும், பறையனுக்கும் ஒரே காலத்தில் குழந்தைகள் பிறக்கின்றன. அரச குமாரன் ராஜாங்கஞ் செய்கின்ருன்; பறையன் அவ்வரச குமாரனுக்கு ஊழியஞ் செய்கின்ருன். இராஜன் நூறு பெண்களைக் கலியாணஞ் செய்கிருன். பறையனே அதிக வருத்தத்துடன் ஒரு பெண்ணை விவாகஞ் செய்து கொள்கின்ருன். அரசனுக்கோ புத்திர சந்தானம் அற்றுப் போகிறது. பறையனுக்கோ ஏராளமான புத்திர சந்தான முண்டாகிறது. ஒரு பெண் வயிற்றில் ஏக காலத்தில் இரண்டு பிள்ளைகள் பிறக்கின்றன; அதில் ஒன்று ஆணுகவும்,மற்ருென்று பெண்ணுகவும்இருக்கிறது. இன்னும் அதில்ஒருபிள்ளை உடனே சாகிறது; மற்ருெரு பிள்ளை பூரண ஆயுளுட னிருக்கிறது. ஒரு கருப்பத்தில் இரண்டும் ஆணுகப் பிறக்கின்றன; அதில் ஒன்று அரிஷ்டமும், மற்ருென்று பூரண ஆயுளுட னிருக்கின்றது. இதுவன்றி ஒரு கருப்பத்தில் இரண்டு ஆண்கள் ஏககாலத்தில் ஒன்ருய்ப் பிறந்தும் ஒன்று யோகமுள்ளதாகவும், மற்ருென்று அவயோக முள்ளதாகவும் இருக்கிறது. ஒரு கருப்பத்தில் இரண்டு பெண்கள் ஏக காலத்திற் பிறக்கின்றன. அதிலொன்று சுமங்கலியாகவும், மற்ருென்று அமங்கலியாகவும் இருக்கிறது. இவ் வுலகத்தி லுதிக்கும் ஜீவர்களாகிய எழுவகைத் தோற்ற முதலிய பல வகைகள் ஒரே லக்கினத்தில் பிறக்கின்றன. இவற்றின் பேதாபேதங்களைப் பட்சம் வைத்து அருள்செய்வீராகவும்.

மேற்கண்ட பேதாபேதங்களை யறிய கிரக ஸ்புடங்கள் செய்து வழுவில்லாமல் கணக்கை நன்ருய் வகுத்து நிதானித்தறிந்தால், அப் பேதங்களின் விவரம் நன்ருய் விளங்கும்.

ஜெனன கால நிச்சய மறிய

675 - 678

ஜாதகன்ஜனித்த மாதத்திலே சூரியன்வந்த நாழிகைமுதல் அந்த மாதத்தில் சூரியன் தங்கியிருந்த வரையில் தேதியை சுத்தமா யெடுத்து வந்ததே அம் மாத சுத்த தேதியாம். பிறகு,

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அம் மாத ராசியின் நாழிகையை மேலெடுத்த சுத்த தேதியி ணுல் வகுத்து வந்த ஈவை ஜாதகன் உதயாதி வரையில் சென்ற தேதியினுல் பெருக்கி வந்த தொகையை மேற்படி மாத ராசி நாழிகையிற் கழித்து பாக்கி நாழிகையுடன் அடுத்த ராசிகளின் நாழிகைகளைக் கூட்ட ஜாதகன் உதித்த நாழிகை யின் தொகைக்குச் சரியாய் வருகிற ராசியே லக்கினமாம். இவற்றுள் சுத்த தேதி எடுக்கும் விதங் காண்க. ரிஷப மாத மாகிய வைகாசி மாதம் முதல் தேதியில் சூரியன் 24-நாழிகை 17-விஞுடியில் ஷ ரிஷபத்தில் வந்தார். மேற்படி மீ 32வ 48-நாழிகை 29-விஞுடிக்கு மிதுனத்திற்குப் போகின்ருர். ஆகையால் 1வ நாழிகை(60-24-17) 35-43-32வ 48-29-வி.இவ் விரண்டையுங்கூட்ட 84-நாழிகை 12-விஞுடி. இதற்கு தேதி 1-24-12 முதல் தேதிக்கும் 32-ம் தேதிக்கும் இடையிலுள்ள தேதி 30-ஆகதேதி 31-24-12 இதுவே சுத்த தேதியாம். லக் கின மெடுக்கும் விபரம் முன் சொல்லப்பட்டிருக்கிறபடியால் அங்கு காண்கலாம்.

லக்கினமாகிய ராசியின் நாழிகையை 9ல் வகுத்து வந்த ஈவானது பாத மெனப்படும்.

லக்கின ராசியின் பாதச்செல் கலை அறிய

ராசியின் பாத நாழிகையினுல் ராசியின் பாத பாகையை வகுத்து வந்த ஈவை ராசியின் சென்ற நாழிகையினுல் பெருக்க வந்த தொகையே லக்கின ராசியின் செல் கலையாம்.

விபரம்

ராசி 1-க்கு பாதம்-9.

ஒவ்வொரு ராசிக்கும் நாழிகை இவ்வளவென்பது முன் சொல்லப்பட்டிருக்கிறது.

நாழிகை 1-க்கு	விஞுடி 60
ராசி 1-க்கு	பாகை 30
பாகை 1-க்கு	கலை 60
கலை 1-க்கு	விகலை 60

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

விகலை 1-க்கு தர்ப்பரை 60
தர்ப்பரை 1க்கு விதர்ப்பரை 60

(உ-ம்) ஒரு மிதுன லக்கினத்திற் செல்நாழிகை-2, விஞடி 25, 145-விஞடி.

மேற்படி மிதுன ராசியின்	நாழிகை-5, விஞடி-15.
இராசி 1-க்கு	பாதம்-9, 315-விஞடி.
ஆகையால்	பாதம் 1-க்கு $\frac{315}{9}$, 35-விஞடி.
இராசி 1-க்கு	பாகை 30, 1800-கலை.
∴ பாதம் 1-க்கு	$\frac{1800}{9}$, 200-கலை.

∴ இராசியின் பாத பாகை / இராசியின் பாத நாழிகை } இராசியின். செல் நாழிகை.

$\frac{200}{35}$—145

$\frac{5800}{7}$ $\frac{8284}{7}$ கலை

4-பாதம் $= \frac{284}{7}$ கலை செல்லாம்.

இலக்கின நட்சத்திர பாதசெல் நாழிகையறிய முன் சொன்ன இராசி பாத செல் கலையை 2¼-ல் பெருக்கி 30-ல் வகுக்க வந்த ஈவே இலக்கின நக்ஷத்திர பாதசெல் நாழிகை யாம்.

தசவர்க்க ஸ்புட விதி

679

ஆயுள் நிலைமை யறிய : மகா திசை, உயிர்த் திசை, காலச் சக்கரத் திசை, நவக்கிரக ஸ்புடம், உபக்கிரக ஸ்புடம், ஆகிய 18-வகைகள். நவக்கிரக தசவர்க்கங்களாகிய இராசி, ஓரை, திரேக்காணம், திரிமிசாம்சம், சத்தமாம்சம், நவாம்சம் தசாம்சம் துவாதசாம்சம், கலாங்கிஷம், சஷ்டியாங்கிசம் ஆகியவைகள் தெரிந்து கொள்ள வேண்டும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

உடல் மகாதிசை விதி

680 - 683

அசுபதி, மகம், மூலம், இம் மூன்றும் கேது திசை	வரு	7
பரணி, பூரம், பூராடம் மூன்றும் சுக்கிரதிசை	,,	20
கார்த்திகை, உத்திரம், உத்திராடம், சூரியதிசை	,,	6
உரோகணி, அஸ்தம், திருவோணம், சந்திரதிசை	,,	10
மிருகசீரம், சித்திரை, அவிட்டம், செவ்வாய் திசை	,,	7
திருவாதிரை, சுவாதி, சதயம், இராகுதிசை	,,	18
புனர்பூசம், விசாகம், பூரட்டாதி, குருதிசை	,,	16
பூசம், அனுஷம், உத்திரட்டாதி, சனிதிசை	,,	19
ஆயிலியம், கேட்டை, இரேவதி, புதன் திசை	,,	17

மகா திசையின் புத்தி விவரணம்

684

ஒரு கிரகத்தின் திசையில் ஒரு கிரகத்தின் புத்தியின் காலம் தெரிந்துகொள்ள இவ்விரண்டு கிரகங்களின் திசை வருஷங்களைப் பெருக்கி வந்த தொகையைப் பத்தால் வகுக்க வந்த ஈவு ஒருவர் திசையில் மற்றொருவர் புத்தி மாதங்களாம். வகுக்கப்படாமல் மீந்த பாக்கியை மூன்றால் பெருக்க வந்த தொகையே நாட்களாம். மகா திசைகள், நட்சத்திரங்களினுலும், உயிர்த் திசைகள் இராசியினுலும் விளங்கும். இவ்விரண்டும் அளவளாய் வரும்போது நேரிடும் மாரக பலாபலன்களைக் கூறுவாம்.

(உ-ம்.) சூரியன் திசையில் செவ்வாய் புத்தியின் காலம் வேண்டுமானுல் சூரியன் திசை வருஷம்-6, செவ்வாய் திசை வருஷம்-7, இவ்விரண்டையும் பெருக்க 6—7-42 இதை பத்தால் வகுக்க $\frac{42}{10}$-4 ஆகையால் சூரியன் திசையின் செவ்வாய் புத்தியின் காலம் 4-மாதம் வகுக்க மீதி 2, இதை 3-ல் பெருக்க 2—3-6 இது 4 ஆகையால் சூரியன் திசையில் செவ்வாய் புத்தி மாதம், நாள்-6, மற்றக்கிரகங்களின் புத்தியும் இவ்விதமேயாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ஜாதகன் ஜனித்த நட்சத்திரத்தின் பரம நாழிகை ஒரு தேதிக்குரிய நாழிகை 64-க்கு அதிகமாயின், அதிக நாழிகையை 60 ல் பெருக்கி வந்த தொகையை விஞடியாகச் செய்து அதை ஜனித்த நாழிகையால் வகுத்து வந்த ஈவை ஷை நட்சத்திரத்தின் நாழிகைகளினுல் வகுத்து வந்த ஈவை சென்ற நாழிகையிற் பெருக்க வந்ததே விஞடியாம். அதை நாழிகையாக்கி முன் சென்ற நாழிகையிற் கழிக்க வந்ததே சுத்த செல் நாழிகையாம்.

(உ-ம்.) a. ஒருவன் வைகாசிமீ 22உ. 18-நாழிகைக்கு ஜனனம், அன்று நட்சத்திரம் அசுபதி அன்று அதன் பரம நாழிகை 64, இதில் அந்தத் தேதிக்குரிய நாழிகை 60-போக அதிகம் 4-நாழிகை யிருக்கின்றது. இதனை விஞடியாக்க 60—4-240.

இதனை நட்சத்திரத்தின் பரம நாழிகையாகிய 64-ல் வகுத்து வந்த ஈவை அந்த ஜெனனமான நட்சத்திரத்தின் செல் நாழிகையினுல் பெருக்கவும், 22உ செல் நாழிகை-18, 21உ செல் நாழிகை 6, ஆக நாழிகை $24\text{-}\frac{240}{64}\text{—}20\text{-}\frac{240}{64}\text{—}24\text{-}$ 90. இதை நாழிகையாக்க 1-30, முன் செல்லாகிய 24-ல் கழிக்க $21\frac{1}{2}$-$23\frac{1}{2}$-நாழிகை ஆகையால் மேற்படி அசுபதி நட்சத்திரத்தின் சுத்த செல் நாழி $2\frac{1}{2}$ எனக் காண்க.

(b) ஒருவன் ஆடிமீ 20உ 10-நாழிகைக்கு ஜெனனம், அன்று நட்சத்திரம் உரோகணி, அதன் பரம நாழிகை-56, இதில் தேதிக்குரிய 60-ஆகையால் இதன் குறை (60-56) 4-நாழிகை யிருக்கின்றன; இதனை விஞடியாக்க (4—60) 240 இதனை ரோகணி நட்சத்திரத்தின் பரம நாழிகையாகிய 58-ல் வகுத்து வந்த ஈவை அந்த நட்சத்திரத்தின் செல் நாழிகையினுல் பெருக்கவும். மேற்படி ஆடிமீ 20உ செல்நாழிகை-10, 19உ செல் நாழிகை-18 ஆக நாழிகை (10—18) 28.

240-120-2-நாழிகை முன் செல்லாகிய 26-நாழிகையுடன் இதைக்கூட்ட (28-2) 30-ஆகையால் மேற்படி ரோகணி நட்சத்திரத்தின் சுத்த செல் நாழிகை 30 எனக் காண்க.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

(c) ஜெனன நட்சத்திரத்தின் பரம நாழிகை-60 ஆயின் அந்த நட்சத்திரத்திற்குள்ள செல்லே அதன் சுத்த பரம நாழிகையாம்.

d) ஜெனன நட்சத்திரத்தின் சுத்த செல்நாழிகை அந்த நட்சத்திரத்திற்குடைய கிரக திசை வருஷத்தினுல் பெருக்கி அஞ்சால் வகுத்து வந்த ஈவே கர்ப்பத்தில் செல் மாதமாம்.

(உ-ம்.) ஷை (a) உதாரணத்தில் அசுபதி நக்ஷத்திரத்தின் சுத்த செல் நாழிகை-23½ இதற்குரிய கிரகமாகிய கேதுவின் திசை வருஷம்-7.

23¾—7-329 மாதங்கள்.
10

5-32-மாதம் (9—30) 27-நாள்கள் ஆகையால் கர்ப்பத்தில்
10

கேது திசையில் ஸு-2, மீ-8, நாள்-27 செல்லென் றறிய வேண்டியது.

உயிர்த்திசை விதி

685

(இ-ள்.) கிரகங்கள் ஒவ்வொன்றும் கொடுக்கும் ஆயுள் கிரமங்களைக் கூறுவோம். சூரியன் ஸு-4, சந்திரன் ஸு-5, செவ்வாய் ஸு-3, இராகு ஸு-7, குரு ஸு-6, சனி ஸு-9, புதன் ஸு-8, கேது ஸு-3, சுக்கிரன் ஸு-10ம் கொடுப்பார்கள். இவ்வாருக இலக்கினத்தில் நின்ருேர்களில் தலைமை பெற்றவர் முன்னர்த் தனக்குரிய ஆயுளைக் கொடுப்பார்கள். மற்ற இராசியில் நின்ருேர் முன் கூறிய வரிசைப் பிரகாரம் கொடுப்பார்கள். அடுத்த மனையில் நின்ருேர் அவ்வரிசைப் பிரகாரமே கொடுப்பார்கள். இந்த முறைப்படியே மற்ற இராசிகளிலும் கண்டு கொள்ளவும்.

உயிர்த் திசாபுத்தி விவரணம்

686

(இ-ள்.) இதில் கர்ப்பத்தில் செல்லும் வழியைக் காண்பதற்குக் கூறுகின்றனம். உயிர்த் திசை வருஷத்தை எடுத்து 1.5-ல் கழித்து மீந்த தொகையினை இனிவரும் கிரக திசையை

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ஸ்புடஞ் செய்து தேர்ந்த கடிகையால் பெருக்கி வந்த ஷ மீ நாள் நாழிகையே கர்ப்பத்தில் செற்லறியவும். பாக்கி ஷ மீ நாள் நாழிகை துவக்கி திசையை நடத்துங்கால் அதற்கு ஏற்பட்ட திசை வருஷத்தில் 4-ல் ஒன்றை 12ஆல் பெருக்க வந்தது நாளாம்; உடல் திசையில் இக்கிரகத்திற்குச் சொல்லிய திசை தொகையாய் முன் கூறிய நாள் தொகையைப் பெருக்க வந்ததுவே உயிர்ப்புத்தி யின்நாளெனக் கொள்கவும்.

இருதிசை கலந்துவருங்கால் நேரிடும் மாரக விவரணம்

687

(இ - ள்.) இரு திசைகள் கலந்து வருகின்ற காலையில் எதிர்ப்படும் மாரகங் கூறுகின்றனம். (1) மேஷ லக்கினத்தி லுதித்தவர்களுக்கு இறைவன் புதன், சனி உடற்றிசையாயும், செவ்வாய், சுக்கிரன் உயிர்த் திசையாயும் வந்தாலும், 6-7-2-3-8-11-ல் இருந்தவர்களில் சிலர் உடலாயும், சிலர் உயிராயும் கலந்து திசையில் வரினும் இவர்கள் தேவரா யிருந்தாலும் பகைவர்களே; மாரகம் செய்வார்கள். திசை பலம் பெற்றிருந்தாலும் கொலை செய்வனும். (2) இடப லக்கினத்திற் பிறந்தவர்களுக்கு உடற்றிசை குரு, சந்திரன், செவ்வாயாகவும், புதன், சனி, சுக்கிரன் உயிர்த் திசையாய் வருவாராகில் 6-8-10-ல் இதிலிருந்தவர்கள் உடற் றிசையாயும்,

இதுவுமது

688

(இ-ள்.) 7-12-ல் இருந்தவர் பலஹீனமாய்க் கூடி யிருக்கினும் பகைக் கிரகங்களு மவ்வாறிருக்கில் ஜாதகன் மரணமாம். (3) மிதுன லக்கினத்திற் பிறந்தவர்களுக்குச் சூரியன், செவ்வாய், குரு உடற் றிசையாகவும், சந்திரன், புதன், சுக்கிரன் உயிர்த் திசையாய் வரினும் 10-6-8-12-ல் இருந்தோர் உடற் றிசையாயும் 2-3-6-ல் இருந்தவர் உயிர்த் திசையாக வரினும், இவர்களைப் பகைவர்கள் கூடினும், அமுத முண்கினும் மரண மடைவனும்.

689

(இ-ள்.) (4) கடக லக்கினத்திற் பிறந்தவர்களுக்கு குரு, புதன், சனி, உடற் றிசையாயும், சூரியன், செவ்வாய், சுக்கிரன் உயிர்த் திசையாய் வரினும், 6-2-8-ல் இருந்தோர் உடற்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

றிசையாயும் 3-2லிருந்தவர்கள் உயிர்த் திசையாக வரினும், அவர்களே உடல் உயிர் ஸ்தானத்தின் வலி பெற்ருல் மாரக மாவனும். (5) சிம்ம லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு குரு, சுக்கிரன், சனி உடற் றிசையாயும், குரு, புதன் உயிர்த் திசையாய் வரினும், 4-10லிருந்தோர் உடற் றிசையாயும், 2-3-7லிருந்தவர் உயிர்த் திசையாய் வலி பெறினும் ஜாதகர் மாரகமாம்.

690

(இ-ள்.) (6) கன்னியா லக்கினத்திற் பிறந்தவர்களுக்கு, குரு, செவ்வாய், சந்திரன் உடற் றிசையாகவும், சனி, புதன், சுக்கிரன் உயிர்த் திசையாய் வரினும் 6-4-2லிருந்தோர் உடற் றிசையாகவும், 10-4-3லிருந்தவர் உயிர்த் திசையாகவும் பகை வலியடைந்தாலும் ஜாதகர் மாரகமாம். (7) துலா லக்கினத்திற் பிறந்தவர்களுக்கு சூரியன், குரு, செவ்வாய், சந்திரன் உடற் றிசையாகவும், சுக்கிரன், புதன், தேய்பிறைச்சந்திரன் உயிர்த் திசையாகவரினும், 6-3-8லிருந்தவர் உடற் றிசையாகவும், 7-2-10லிருந்தவர் உயிர்த் திசையாகிப் பகைவர் பலம் பெறில் ஜாதகர் மாரகமாம்.

691

(இ-ள்.) (8) விருச்சிக லக்கினத்திற் பிறந்தவர்களுக்குப் புதன், சுக்கிரன், சனி உடற் றிசையாகி குரு, செவ்வாய், சூரியன் உயிர்த் திசையாகி 8-7-2-1லிருந்தவர் உடற்றிசையாகவும், 10-3-6ல் நின்றோர் உயிர்த் திசையாகவும் பகைவர் வலி பெறில் ஜாதகன் மாரகமாம். (9) தனுசிற் பிறந்தவர்களுக்கு சனி, புதன், சுக்கிரன், உடற்றிசையாகி குரு, சூரியன், செவ்வாய் உயிர்த் திசையாகவும், பகையுடன் வரில் 2-3-7-6ல் நின்றோர், உடற் றிசையாகவும், 3-2-10 இதிலிருந்தவர் உயிர்த் திசையாய்,

692

(இ-ள்.) இந்த ராசியில் சத்துரு வலிபெற்று நின்ருல் ஜாதகர் மாரகமாம். (10) மகர லக்கினத்தில் பிறந்தவர்களுக்குப் புதன், சந்திரன் உடற் றிசையாகி சுக்கிரன், சூரியன், செவ்வாய் உயிர்த் திசையாக வந்தாலும், 2-3-8-7ல் நின்றோர் 11-1-6-12ல் நின்றோர் உயிர்த் திசையாக வரினும் இப்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பாபர்கள் வலுமை பெறில் ஜாதகன் சீக்கிரம் மாரகமாம். (11) கும்ப லக்கினத்திற் பிறந்தவர்களுக்கு சூரியன், சனி, செவ்வாய், சந்திரன் உடற்றிசையாகி குரு, புதன் உயிர்த் திசையாகவும் பகைவர்கள்,

இதுவுமது

693

(இ-ள்.) 2-3-7-8விருந்தவர்கள் உடற் றிசையாகி 11-6-1-12விருந்தவர்கள் உயிர்த் திசையாக வரின் இவர்களே முழுப் பகையாவார்களாம். இதிற் கூறிய கிரகங்கள் இந்த ராசியில் வலிமை பெறில் ஜாதகன் மாரகமடைவானும். (12) மீன லக்கினத்திற் பிறந்தவர்களுக்கு புதன், சுக்கிரன், சூரியன், சனி உடற் றிசையாகி செவ்வாய், சனி, புதன், குரு உயிர்த் திசையாக வரில் 1-8-6விருந்தவர் உடற் றிசையாகி 11-7-10விருந்தவர் உயிர்த் திசையாகவரில் ஜாதகன் மாரகமாம். மேற் கூறிய ராசிக்குடையவரே இவ்வலி யடைந்தாலும் மாரகஞ் செய்து விடுவராம்.

காலச்சக்கரத் திசை

694

(இ-ள்.) ஆதி விநாயகரை என் னெஞ்சத்து ளமைத்து காலச் சக்கரத் திசையை நொண்டிச் சிந்தாகக் கூறி யிருக்கின்றனம கேட்பாயாகவும்.

695

(இ-ள்.) செவ்வாய்க்கு வருடம்-7, சுக்கிரனுக்கு வருடம்-16, குருவுக்கு வருடம்-10, சந்திரனுக்கு வருடம்-21.

696

(இ-ள்.) புதனுக்கு வருடம்-9, சூரியனுக்கு வருடம்-5, சனிக்கு வருடம்-4.

697

(இ-ள்.) பொன் போன்ற புத்திரா! இனி காலச் சக்கரத் திசையை நடத்தும் விதங் கூறுகின்றனம். வலவோட்டென்றும் இடவோட்டென்றும் கூறியதை மனமொன்றிக் கேட்பாயாகவும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

698

(இ-ள்.) அசுபதி முதல் 3-நக்ஷத்திரம் வலவோட்டென்றும், ரோகணி முதல் 3-நட்சத்திரம் இடவோட்டென்றும் இவ்வித முறையாகவே 27-நட்சத்திரங்களும் வருமெனக் கொள்க. இதில் வலவோட்டு திசை 15-ம் இடவோட்டு திசை 12-மாக நடந்து வருவதைக் காண்க.

699

(இ-ள்.) அசுபதி, பரணி, கார்த்திகை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், அஸ்தம், சித்திரை, சுவாதி மூலம், பூராடம், உத்திராடம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி இந்த 15-நட்சத்திரங்களும் வலவோட்டுத் திசையாம்.

700

(இ-ள்.) மற்ற 12-நட்சத்திரங்களும் இடவோட்டுத் திசையாம். இதில் புத்தியோட்டும் வகையை அடியிற் கண்டு கொள்கவும்.

701

(இ-ள்.) அசுபதி, கார்த்திகை, புனர்பூசம், ஆயிலியம், அஸ்தம், சுவாதி மூலம், உத்திராடம், பூரட்டாதி, ரேவதி இந்த 10-நட்சத்திரங்களும்,

702

(இ-ள்.) முதற்கால் மேஷ முதலாய் வலமாக தனுசு வரையில் 9-ராசிகளும் 100-வருடத் திசையாகுமாம். 2-ஆம் பாதத்திற்கு மகரம், கும்பம், மீனம், விருச்சிகம், துலாம், கன்னி, கடகம்.

703

(இ-ள்.) சிம்மம், மிதுனம் இந்த 9-ராசிகளுக்கும் 85-வருடத் திசையாம். 3-ம் பாதத்திற்கு ரிஷபம், மேஷம், மீனம், கும்பம், மகரம், தனுசு, மேஷம், ரிஷபம், மிதுனம் இந்த 9-ராசிக்கும் 83 வருடத் திசையாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

704

(இ-ள்.) 4-ம் பாதத்திற்குக் கடகமுதல் வலமாக மீனம் வரையில் 9-ராசிக்கும் 86-வருடமாம். மற்ற பரணி, பூசம், சித்திரை, பூராடம், உத்திரட்டாதி இந்த 5-நட்சத்திரங்களில்,

705

(இ-ள்.) முதற் பாதத்திற்கு விருச்சிகம், துலாம், கன்னி, கடகம், சிம்மம், மிதுனம், ரிஷபம், மேஷம், மீனம் இந்த 9-இராசிக்கும் 100-வருட மென்பதாம்.

706

(இ-ள்.) 2-ம் பாதத்திற்கு கும்பம், மகரம், தனுசு, மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி இந்த 9-ராசிகளுக்கும் 85 வருட மென்பதாம்.

707

(இ-ள்.) 3-ம் பாதத்திற்கு துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம், விருச்சிகம், துலாம், கன்னி இந்த 9 ராசிகளுக்கும் 83 வருட மென்பதாம்.

708

(இ-ள்.) 4-ம் பாதத்திற்கு கடகம், சிம்மம், மிதுனம், ரிஷபம், மேஷம், மீனம், கும்பம், மகரம், தனுசு இந்த 9-ராசிகளுக்கும் 86 வருடமாம்.

709

(இ-ள்.) மேற்கூறிய வலவோட்டுத் திசைக்கு புத்தியெடுக்கும் வகையைக் கூறினேன். இனி இடவோட்டு நட்சத்திரங்களுக்குப் புத்தியெடுக்கும் விதம் அடியில் வருமாறு காண்க.

710

(இ-ள்.) மகம், விசாகம், உரோகணி, திருவோணம் இந்த 4-நட்சத்திரங்களுக்கு முதற் காலுக்கு புத்தி வருமாறு காண்க.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

711

(இ-ள்.) தனுசு, மகரம், கும்பம், மீனம், மேஷம், ரிஷபம், மிதுனம், சிம்மம், கடகம் இந்த 9-க்கும் 86-வருஷம் புத்தியாக நடப்பதைக் காண்க.

712

(இ-ள்.) இரண்டாம் பாதத்திற்கு கன்னி, துலாம், விருச்சிகம், மீனம், கும்பம், மகரம், தனுசு, விருச்சிகம், துலாம் இந்த 9-க்கும் 83-வருட மென்பதாம்.

713

(இ-ள்.) 3-ம் பாதத்திற்கு கன்னி, சிம்மம், கடகம், மிதுனம், ரிஷபம், மேஷம், தனுசு, மகரம், கும்பம் இந்த 9-க்கும் 85-வருஷமாகப் புத்தியை யோட்டுவதாம்.

714

(இ-ள்.) 4-ம் பாதத்திற்கு மீனம், மேஷம், ரிஷபம், மிதுனம், சிம்மம், கடகம், கன்னி, துலாம், விருச்சிகம் இந்த 9-க்கும் 100-வருஷமாகப் புத்தியை யோட்டுவதாம்.

715

(இ-ள்.) மிருகசீரம், திருவாதிரை, பூரம், உத்திரம், அனுஷம், கேட்டை, அவிட்டம், சதயம் இந்த 8-நட்சத்திரங்களுக்கும் புத்தி வருமாறு காண்க.

716

(இ-ள்.) முதல் பாதத்திற்கு மீன முதல் அபசௌவியமாம் கடகம் வரையில் 9-இராசிகளுக்கும் 86-வருஷமெனக் கண்டுகொள்க.

717

(இ-ள்.) 2-ம் பாதத்திற்கு மிதுனம், ரிஷபம், மேஷம், தனுசு, மகரம், கும்பம், மீனம், மேஷம், ரிஷபம் இந்த 9-இராசிகளுக்கும் 83-வருடமெனக் காண்க.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

718

(இ-ள்.) 3-ம் பாதத்திற்கு மிதுனம், சிம்மம், கடகம், கன்னி, துலாம், விருச்சிகம், மீனம், கும்பம், மகரம் இந்த 9-இராசிகளுக்கும் 85-வருடமெனக் காண்க.

719

(இ-ள்.) 4-ம் பாதத்திற்கு தனுசு, விருச்சிகம், துலாம், கன்னி, சிம்மம், கடகம், மிதுனம், ரிஷபம், மேஷம் இந்த 9-இராசிகளுக்கும் 100-வருடமெனக் காண்க.

720

(இ-ள்.) காலசக்கர புத்தி பிரிக்கும் வகையை அடியில் வருமாறு; நின் புத்தியை நிறுத்திக் கேட்பாயாக. புத்தி யோட்டுங் கிரகங்கள் திசை வருடத்திற்கு.

721

(இ-ள்.) திசையின் கிரக வருடத்தைக் கொடுக்க வந்த ஈவை வைத்துத் திசை வருடத்தால் பெருக்கியதே புத்தியாம்.

722

(இ-ள்.) மீனத்திலிருந்து கிரகங்கள் விருச்சிகத்திற் பாயும் காலத்தில் உடற்றிசையு மிருக்குமானல், அதற்குப் பின்னல் பலன் கூறுவதைக் காண்க.

723

(இ-ள்.) இராஜாங்க பயம், சிநேக விரோதம், சிறை காவல், அக்கினி பயம், நீசர்களால் அவமானம், சோர பயம், சரீர பீடை வலுக்கு மென்பதாம்.

724

(இ-ள்.) உடற்றிசை சுபர் திசையா யிருக்கில் வெற்றி பெறுவரென்று கூறுக. மேஷத்திலிருந்து தனுசுக்குத் தாண்டினல் அதற்குப் பலன் கேட்பாயாகவும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

725

(இ - ள்.) துரகாபிலோபன கெதியென்றும், இதற்குப் பிதிர் புத்திரர்கள், களத்திரம், இவர்களுக்கு ரணமும், பயங்கரமும் உண்டாம். இதற்குத் திசா புத்தியினலும் பாகித்துக் கொள்ளவும்.

726

(இ-ள்.) கன்னியிலிருந்து கடகத்துக்குத் தாண்டுமாகில் மண்டூக கெதியாம். அதற்குப் பலன் களத்திரத்திற்கும், ஜாதகருக்கும் மாரகம் நேரிடுவதை திசா புத்தியின லறிந்துக் கொள்ளவும்.

727

(இ-ள்.) சிம்மத்திலிருந்து மிதுனத்திற்கு தாண்டுமாகில் சர்ப்பகெதியாம். இதற்குப் பலன் மாதுர் பிதிர் மாரக முண்டாகு மென்பதை மகா திசை புத்தியினலும் அறிந்து கூறல் வேணடுமாம்.

728

(இ-ள்.) மிதுனத்திலிருந்து சிம்மத்திற்கு தாண்டுமாகில் மர்க்கடகக் கெதியாம். அதற்குப்பலன் ஜாதகருக்குஅரைக்கு மேல் ரண முதலிய கொப்பளாதிக்கம் காணுமென்பதையும் மகாதிசை புத்தியாலு மறிக.

729

(இ - ள்.) பாவியின்றிசை யுடலாகவும், காலச்சக்கரத் திசை பாவி திசையாக ஏற்படுமாகில், இவ்விரண்டு திசை புத்திகளை யூகித்துக் கூறல் வேண்டுமாம்.

730

(இ-ள்.) மேற் கூறியபடி யூகத்துடனே கூறில் தவருமல் நடக்கு மென்பதாம். இனிப் பின்னல் வரும் அட்டவர்க்க பலனைக் கேட்பாயாக.

அட்டவர்க்கம்

732

(இ-ள்.) குருவின் பாதம் பணிந்து அட்டவர்க்கத்தை அன்பாக இனிக் கூறுகின்றனம்; கேட்பாயாக. சூரியனுக்கு 48-பரலென்று முன்னேர் கூறினர்கள்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

733

(இ-ள்.) சந்திரனுக்கு-49, செவ்வாய்க்கு-39, புதனுக்கு-54 பரலென்றும் கூறினர்களாம்.

734

(இ-ள்.) குருவுக்கு 56, சுக்கிரனுக்கு-52, சனிக்கு-39 பரலென்றும் கூறினர்களாம்.

இரவி அட்டவர்க்கம்

735

(இ-ள்.) ஒவ்வொரு கிரகங்களுக்குத் தனித்தனியாக சமுதாயப் பரலைக் கூறுகின்றனம்; சூரியனுடைய சமுதாயப் பரல் விபரத்தை நன்மை பொருந்தி உண்மையாகக் கேட்பாயாக.

736 - 739

(இ - ள்.)	சூரியனுக்கு	1, 2, 4, 7, 8, 9, 10, 11	ஆக 8.
„	சந்திரனுக்கு	3. 6, 10, 11	ஆக 4.
„	குஜனுக்கு	1, 2, 4, 7, 8, 9, 10, 11	ஆக 8.
„	புதனுக்கு	3, 5, 6, 9, 10, 11, 12	ஆக 7.
„	குருவுக்கு	5, 6, 9, 10	ஆக 4.
„	சுக்கிரனுக்கு	6, 7, 12	ஆக 3.
„	சனிக்கு	1, 2, 4, 7, 8, 9, 10, 11	ஆக 8.
„	இலக்கினத்திற்கு	3, 4, 6, 10, 11, 12	ஆக 6.
			ஆக பரல் 48.

சந்திரன் அட்டவர்க்கம்

740 - 758

(இ - ள்.)	சூரியனுக்கு	3, 6, 7, 8, 10, 11	ஆக 6.
„	சந்திரனுக்கு	1, 3, 6, 7, 10, 11	ஆக 6.
„	செவ்வாய்க்கு	2, 3, 5, 6, 9, 10, 11	ஆக 7.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

(இ-ள்.)	புதனுக்கு	1, 3, 4, 5, 7, 8, 10, 11	ஆக 8.
,,	குருவுக்கு	1, 2, 4, 7, 8, 10, 11	ஆக 7.
,,	சுக்கிரனுக்கு	3, 4, 5, 7, 9, 10, 11	ஆக 7.
,,	சனிக்கு	3, 5, 6, 11	ஆக 4.
,,	லக்கினத்திற்கு	3, 6, 10, 11	ஆக 4.
			ஆக பரல் 49.

செவ்வாய் அட்டவர்க்கம்

(இ-ள்.)	சூரியனுக்கு	3, 5, 6, 10, 11	ஆக 5.
,,	சந்திரனுக்கு	3, 6, 11	ஆக 3.
,,	செவ்வாய்க்கு	1, 2, 4, 7, 8, 10, 11	ஆக 7.
,,	புதனுக்கு	3, 5, 6, 11	ஆக 4.
,,	குருவுக்கு	6, 10, 11, 12	ஆக 4.
,,	சுக்கிரனுக்கு	6, 8, 11, 12	ஆக 4.
,,	சனிக்கு	1, 4, 7, 8, 9, 10, 11	ஆக 7.
,,	லக்கினத்திற்கு	1, 3, 6, 10, 11	ஆக 5.
			ஆக பரல் 39.

புதன் அட்டவர்க்கம்

(இ-ள்.)	சூரியனுக்கு	5, 6, 9, 11, 12	ஆக 5.
,,	சந்திரனுக்கு	2, 4, 6, 8, 10, 11	ஆக 6.
,,	செவ்வாய்க்கு	1, 2, 4, 7, 8, 9, 10, 11	ஆக 8.
,,	புதனுக்கு	1, 3, 5, 6, 9, 10, 11, 12	ஆக 8.
,,	குருவுக்கு	6, 8, 11, 12	ஆக 4.
,,	சுக்கிரனுக்கு	1, 2, 3, 4, 5, 8, 9, 11	ஆக 8.
,,	சனிக்கு	1, 2, 4, 7, 8, 9, 10, 11	ஆக 8.
,,	லக்கினத்திற்கு	1, 2, 4, 6, 8, 10, 11	ஆக 7.
			ஆக பரல் 54.

குருஅட்டவர்க்கம்

(இ-ள்.)	சூரியனுக்கு	1, 2, 3, 4, 7, 8, 9, 10, 11	ஆக 9.
,,	சந்திரனுக்கு	2, 5, 7, 9, 11	ஆக 5.
,,	செவ்வாய்க்கு	1, 2, 4, 7, 8, 10, 11	ஆக 7.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

(இ-ள்.) புதனுக்கு 1, 2, 4, 5, 6, 9, 10, 11 ஆக 8.
„ குருவுக்கு 1, 2, 3, 4, 7, 8, 10, 11 ஆக 8.
„ சுக்கிரனுக்கு 2, 5, 6, 9, 10, 11 ஆக 6.
„ சனிக்கு 3, 5, 6, 12 ஆக 4.
„ லக்கினத்திற்கு 1, 2, 4, 5, 6, 7, 9, 10, 11 ஆக 9.
ஆக பரல் 56.

சுக்கிர அட்டவர்க்கம்

(இ-ள்.) சூரியனுக்கு 8, 11, 12 ஆக 3.
„ சந்திரனுக்கு 1, 2, 3, 4, 5, 8, 9, 11, 12 ஆக 9.
„ செவ்வாய்க்கு 3, 4, 6, 9, 11, 12 ஆக 6.
„ புதனுக்கு 3, 5, 6, 9, 11 ஆக 5.
„ குருவுக்கு 5, 8, 9, 10. 11 ஆக 5.
„ சுக்கிரனுக்கு 1, 2, 3, 4, 5, 8, 9, 10, 11 ஆக 9.
„ சனிக்கு 3, 4, 5, 8, 9, 10, 11 ஆக 7.
„ லக்கினத்திற்கு 1, 2, 3, 4, 5, 8, 9, 11 ஆக 8.
ஆக பரல் 52.

சனி அட்டவர்க்கம்

(இ-ள்.) சூரியனுக்கு 1, 2, 4, 7, 8, 10, 11 ஆக 7.
„ சந்திரனுக்கு 3, 6, 11 ஆக 3.
„ செவ்வாய்க்கு 3, 5, 6, 10, 11, 12 ஆக 6.
„ புதனுக்கு 6, 8, 9, 10, 11, 12 ஆக 6.
„ குருவுக்கு 5, 6, 11, 12 ஆக 4.
„ சுக்கிரனுக்கு 6, 11, 12 ஆக 3.
„ சனிக்கு 3, 5, 6, 11 ஆக 4.
„ லக்கினத்திற்கு 1, 3, 4, 6, 10, 11 ஆக 6.
ஆக பரல் 39.

இக் கணிதப் பிரகாரம் அட்டவர்க்கங்களை எடுத்துக் கொண்டு சர்வாட்டக வர்க்கங்களைச் செய்து கொள்ளவும். பிறகு ஆசிரியரது திருவடி பணிந்து மேற்கூறிய பரலின் திரிகோண சோதனையை விதிமுறையுடன் கேட்பாயாக.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

திரிகோண சோதனை

759 - 780

(இ-ள்.) மேஷம் சிம்மம் தனுசு, இடப கன்னியா மகரம், மிதுன துலா கும்பம், கர்க்கடகம் விருச்சிகம் மீனம், இவ் வாறு மும்மூன்று ராசியாக எடுப்பது திரிகோணமாம். இத் திரிகோணங்களில் 3-ராசிப் பரலும் சரியாயிருந்தால், 3-ராசிப் பரலை யெடுத்துப் போடவும். ஒரு ராசியில் பரல் இல்லாதிருந் தால் 3-ராசிக்கும் சோதனை யில்லையாம். ஒரு ராசியில் பரல் குறைந்தால் குறைந்தபடி மற்ற ராசிகளையும் சரி பண்ணவும். பிறகு ஏகாதிபத்தியச் சோதனையைக் கூறுகிறேன் கேட்பா யாக. மேடம் விருச்சிகத்திற்கும், இடபம் துலாத்திற்கும், மிது னம் கன்னிக்கும், தனுசு மீனத்திற்கும், மகரம் கும்பத்திற்கும், சோதனை செய்வ துண்டாம். கடகம் சிம்மத்திற்குச் சோதனை யில்லையாம். பிறகு கிரக மிருந்த ராசிப்பரல் ஏறி நின்றால் குறைந்ததுபோல் சரி பண்ணவும் இவ்விரண்டு ராசியில் பரல் சமமா யிருந்தால் கிரகமில்லாத ராசிப் பரலை யெடுத்துப் போடவும். 2-ராசியிலும் கிரக மில்லாதிருக்க பரல் ஏற்றக் குறைச்சலா யிருந்தால் குறைந்தபடி சரி செய்யவும், 2-ராசியி லும் கிரக மில்லாதிருக்க பரல் சமமா யிருந்தால் 2-ராசிப் பர லையும் எடுத்துப் போடவும். இவ்வண்ணங் குரு முன்னிலையில் தெரிந்து கொண்ட பிறகு 2-ராசியிலும் கிரகம் நிற்கப் பரல் ஏற்றக் குறைச்சலா யிருந்தாலும், சமமா யிருந்தாலும் ஒரு ராசியிற் பரலில்லா திருந்தாலும் 2-ராசியிலும் கிரகமில்லாமல் ஒரு ராசியில் பரலில்லாம லிருந்தாலும் இவைகளுக்கெல்லாம் சோதனை இல்லை யென்றும், ஒரு ராசியிற் கிரக மிருக்க அதில் பரல் இல்லாதிருக்கில் மற்றைய கிரக மில்லா ராசிப் பரலை நீக்கிப் போடவும். இந்தப் பிரகாரம் ஏகாதிபத்தியஞ் செய்வாயாகவும், இந்தச் சோதனைகளெல்லாம் செய்த பிறகு ராசியிலிருக்கும் பரல்களுக்கு விதி கேட்பாயாக. ராசி குண காரஞ் செய்யும் விவரணம் மேஷம் துலாத்திலிருக்கும் பரலைச் சேர்த்து 7-ல் பெருக்கவும், இடபம் சிங்கத்திலிருக்கும் பரலைச் சேர்த்து 10-ல் பெருக்கவும், மிதுனம் விருச்சிகத்திலிருக்கும் பரலைச் சேர்த்து 8-ல் பெருக்கவும். கடகத்திலிருக்கும் பரலை 4-ல் பெருக்கவும். கன்னி மகரத்திலுள்ள பரலைச் சேர்த்து

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

5-ல் பெருக்கவும். தனுசி லிருக்கும் பரலை 9-ல் பெருக்கவும். கும்பத்திலிருக்கும் பரலை 11-ல் பெருக்கவும், மீனத்திலிருக்கும் பரலை 12-ல் பெருக்கவும். இப்படிப் பெருக்கின பரலெல்லாம் ஒன்றாகக் கூட்டி வைப்பதே இராசி குணகாரமாம். பிறகு கிரக குணகார விபரத்தைத் தெளிவாகக் கேட்பாயாக. சூரியன், சந்திரன், சனி, புதன் ஆகிய நால்வர்களுடைய பரலை 5-ல் பெருக்கவும், செவ்வாய் நின்ற இராசிப் பரலை 8-ல் பெருக்கவும், சுக்கிரன் நின்ற இராசிப் பரலை 7-ல் பெருக்கவும், குருவிருந்த இராசிப் பரலை 10-ல் பெருக்கவும். இவ்வாறு பெருக்கிய தொகைகளை ஒன்றாய்க் கூட்டியதைக் கிரக குணகாரமெனக் கொள்க. மேலெழுதிய இராசி குணகார லக்கமும் கிரக குணகார லக்கமும் ஒன்றாய்க் கூட்டியதைக் குண சமூகத் தொகையெனக் கொள்க.

மாரகபல னறியும்படி

இந்த இந்த விதமாக 7-கிரகத்திற்கு மிவ்வாறு கணிதஞ் செய்து சூரியனுக்கு வந்த அட்டவர்க்க குணசமூகங் கண்டு மாரகங் கூறும் வகை கேட்பாயாக.

781 - 788

(இ-ள்.) சூரியன் நின்ற இராசிக்கு 9-வது ராசிப் பரலை குண சமூகத்தால் பெருக்கிக் கொண்டு வந்த தொகையை 27-ல் வகுத்து பூர்வபக்ஷமாகில் மீதி நின்ற தொகையை அசுபதி முதற் கொண்டு எண்ணி வந்த நக்ஷத்திரத்திலும், அமரபக்ஷமாகில் சித்திரை முதல் எண்ணி வந்த நக்ஷத்திரத்திற் சனி வரும்போது பிதிர் மாரக மென்றுங் கூறுவதாம். இன்னமொருவிதம் சூரியனுடைய குண சமூகத்தை 7-ல் பெருக்கி 27-ல் கழித்து வந்த நக்ஷத்திரமும் டி தொகையை 12-ல் கழிக்க வந்த ஈவு எந்த ராசியோ அதிற் சனி வரும்போது பிதிர் மாரக மெனவும், இன்னமொரு விதம் சூரியனுடைய சோத்திய பிண்டத்தைக் கூட்டி சூரியனுக்கு 9-ல் ராசி பிண்டத்தால் பெருக்கி 27-க்கு ஈந்து மீந்த நக்ஷத்திரத்திலும் டி தொகையை 12-ல் கழித்து மீந்த ராசி யெதுவோ அதிற் சனி வரும்போது பிதிர்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மாரக மென்பதாம். இந்தப்படியே முன் கூறிய 3 வித மார கங்களில் இரண்டு விதம் கூடினுலும் பிதிர் மாரக மூண்டாம். அதுவல்லாமல் உன்னுடைய வினயமுஞ் சேர்த்து பார்ப்பா யாக.

789

(இ-ள்.) குரு நின்ற இராசிப் பரலே சூரியனிருந்த இரா சிக்கு 2-ம் ராசிப் பரலும், அல்லது குணசமுகப் பரலாலும் பெருக்கி 2-ல் கழித்த மீதி யெந்த நட்சத்திரம் ஏற்பட்டதோ அதன் திரிகோண ராசியில் குரு வரும்போது பிதிர் மாரக மென்பதாம்.

790 - 791

(இ-ள்.) சூரியன் நின்ற ராசிப் பரலே சூரியனுடைய குண சமுகத்தாற் பெருக்கி 27-க்கு ஈந்த மீதி நட்சத்திரத் திரிகோ ணங்களிற் சனி வரும்போது பிதிர் மாரகமாம். சூரியனுடைய குணசமுகத்தை 8-ல் பெருக்கி 12-க்கு ஈந்த மீதி ராசி திரிகோ ணங்களிற் சூரியன் வரும்போது பிதிர் மாரக மென்பதாம்

792

(இ-ள்.) சந்திரன் நின்ற ராசிப் பரலே சூரியனுடைய குண சமுகப்பரலால் பெருக்கி 27-க்கு ஈந்த மீதி நட்சத்திர மெதுவோ அந்த நட்சத்திர திரிகோணங்களிற் சந்திரன் வரும்போது பிதிர் மாரக மென்பதாம்.

793 - 794

(இ-ள்.) 9-க் குடையவர் இருந்த இராசியின் பரலே சூரிய னுடைய குணசமுகப் பரலால் பெருக்கி 12-ல் கழித்து மீந்த இராசி திரிகோண இலக்கினத்திற் பிதிர் மாரக மென்பதாம். இவ்விதமாக மேற்கூறிய ஐவர்களும் சேருங் காலத்திற் பிதிர் மாரகமென்பதாம். இது வல்லாமல் திசாபுத்தியும், காலச்சக் கர திசையும் சேர்த்து பார்க்கில் பிதிர் மாரகம் நிச்சயமாம். இவ்விதமாக மற்ற 7-கிரகத்திற்கும் கணிதஞ் செய்து கொள் ளவும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

தாய் முதலியோர் மாரக விதி

797 - 799

(இ-ள்.) சந்திரன் அட்டவர்க்கத்தின் குண சமுகப் பரலைச் சந்திரனுக்கு 4-ம் இடத்தில் நின்ற பரலைக் கொண்டு பெருக்கி மாதுர் மாரகங் கூறுவாயாகவும். செவ்வாய் அட்டவர்க்க குண சமுகத்தை செவ்வாய்க்கு 3-விருந்த பரலைக் கொண்டு பெருக்கி முன்போல் ஒவ்வொரு கணிதமுஞ் செய்து சகோதர பலாபலன் அனைத்துங் கூறுவாயாக. புதன் குண சமுகப் பரலை புதனுக்கு 2-லிருந்த பரலையும் புதனிருந்த பரலையுங் கொண்டு பெருக்கி முன்போல் கணிதம் பண்ணி மாமன்-வித்தை பலன் அனைத்தும் கூறுவாயாக.

800

(இ-ள்.) குருவின் குண சமுகப் பரலால் குருவிருந்த ராசிக்கு 5-ம் ராசிப்பரலைக் கொண்டு பெருக்கி முன்போல் கணிதம் பண்ணி புத்திரர்கள் அரிஷ்டங் கூறுவாயாக.

801

(இ-ள்.) சுக்கிரன் குண சமுகப் பரலை சுக்கிரனுக்கு 7-ம் ராசிப் பரலைக்கொண்டு பெருக்கி முன்போல்செய்து களத்திர மாரகங் கூறுவாயாக.

802

(இ-ள்.) சனி குண சமுகப் பரலை சனி 8-ம்ராசிப் பரலைக் கொண்டு பெருக்கி முன்போலச்செய்து ஜாதக மாரகங் கூறுவாயாக.

803

(இ-ள்.) சூரியன் முதலான நவக்கிரகாதிபதி நின்ற நிலையெல்லாம் சோதித்து ஜாதகருக்கு 7-க் குடையவர் சொந்தமாய்க் கொடுத்த வலியும் பார்த்து ஆயுளைக் கூறல் வேண்டுமாம்.

804 - 806

(இ-ள்.) குண சமுகப் பரலை 7-ல் பெருக்கி 27-ல் வகுக்க வந்தது வருஷமாம். அதில் வந்த மீதியை 12-ல் பெருக்கி 27-ல்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வகுக்க வந்த ஈவே மாதமாம். அதில் வரும் மீதியை 30-ல் பெருக்கி 27-ல் வகுக்க வந்த ஈவு நாளாகவும், அதில் மீந்த சேடத்தை 60-ல் பெருக்கி வகுக்க வந்த ஈவு நாழிகை யெனக் கொள்க.

807—808

(இ-ள்.) இதில் மீதியான சேடத்தை வினுடியாய் வகுத்துக் கொள்ளவும். முதன்மையில் வகுத்து வைத்த வருஷம் உயர்ந்திருந்தால் 27-ல்கழித்து வைப்பதே நிச்சய வருஷமென்றுங் குறிப்பிட்டுக் கொள்க. அவ்வாறே மாதம், நாள், நாழிகை வினுடி குறித்து வைக்கவும்.

அரண விரணம்

809

(இ-ள்.) இந்த விதமாக ஆயுளெடுத்துக்கொண்டு அரண விரணம் செய்யும் வகையைக் கூறுகின்றனம் கேட்பாயாக.

810

(இ-ள்.) 12-ஆமிடத்தில் பாபரிருந்தால் அப் பாபர்களால் தந்த ஆயுளைத் தள்ளிப் போடவும். அவர்கள் உச்சமாகில் அவர் கொடுத்த ஆயுளில் பாதி தள்ளவும்.

811

(இ-ள்.) புண்ணிய கிரகங்கள் 12-ல் நின்றால் அவர்களால் கொடுத்த ஆயுளில் பாதி நீக்கிப் போடவும். அவ்விராசி நட்பாயிருந்தால் அதிற் கண்ட ஆயுளில் மூன்றிலொன்று தள்ளவும்.

812

(இ-ள்.) லக்கினதிபதி ஆட்சி பெற்றால் அவர் கொடுத்த ஆயுளில் 4-ல் ஒன்று தள்ளவும், 9-க்குடையவர் உச்சமடைந்தால் 5-ல் ஒன்று தள்ளவும்.

813

(இ-ள்.) அந்த 9க்குடையவர் பகை பெற்றால் அவர் கொடுத்த ஆயுளில் மூன்றிலொன்று தள்ளவும், 11-ம் இடத்திற் பாபரிருந்தால் அவர் கொடுத்த ஆயுளில் பாதி தள்ளவும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

814

(இ-ள்.) 10-ம் இடத்திற் பாபர் நிற்கில் அவர் கொடுத்த ஆயுளில் மூன்றிலொன்று தள்ளவும், அதிற் சுபர்கள் நின்றால் அவர் கொடுத்த ஆயுளில் 6-ல் ஒன்று தள்ளவும்.

815

(இ-ள்.) 9-ஆமிடத்திற் பாபரிருந்தால் அவர்கள் கொடுத்த ஆயுளில் 4-ல் ஒன்று தள்ளவும், 9-ல் சுபர் நிற்கில் அவர் கொடுத்த ஆயுளில் 8-ல் ஒன்று தள்ளவும்.

816

(இ-ள்.) 8-ஆமிடத்திற் பாபரிருந்தால் அவர்கள் கொடுத்த ஆயுளில் 5-ல் ஒன்று தள்ளவும், சுபரிருந்தால் அவர்கள் கொடுத்த ஆயுளில் 10-ல் ஒன்று தள்ளவும்.

817

(இ-ள்.) 7-ஆமிடத்திற் பாபி யிருந்தால் அவர் கொடுத்த ஆயுளில் 6-ல் ஒன்று தள்ளவும், சுபரிருந்தால் அவர்கொடுத்த ஆயுளில் 6-ல் ஒன்று தள்ளவும்.

818

(இ-ள்.) அஸ்தமன மடைந்த கிரகத்திற்கு அவர் கொடுத்த ஆயுளைத் தள்ளிப் போடவும், சத்துரு ஸ்தானங்களில் நின்ற கிரகங்களுக்கு 3-ல் ஒன்று தள்ளவும்.

819

(இ-ள்.) துட்டக் கிரகங்கள் சத்துரு கிரகத்துக்குட்பட்டால் அவர்கள் கொடுத்த ஆயுளிற் பாதி தள்ளவும், செவ்வாய்க்கு சத்துரு பார்வையாகிலும், சத்துரு ராசியில் நின்றாலும் அரண மில்லையாம்.

820

(இ-ள்.) சந்திரனோடு 2-கிரகங் கூடினால் அந்தச் சந்திரனால் 2-கிரகங்களுக்கும் புத்தங்களுண்டு. அவ் விருவருக்கும் வந்த ஆயுள் தொகையில் பாதி தள்ளவும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

821

(இ-ள்.) ஒரு ராசியில் 3-4-கிரகங் கூடி நின்றால் அதில் உயர்ந்தவர் ஆயுளைத் தள்ளவும், மேற்கூறியவர்களோடு சந்திரன் கூடினாலும் பார்த்தாலும் அவர்கள் கொடுத்த ஆயுளில் பாதி தள்ளவும்.

822 - 826

(இ-ள்.) இவ்விதமாக நான் கூறியவண்ணம் நீக்கில் அதிலுண்டாகிய வருடத்தை செய்யும் மார்க்கம் கூறுவதைக் கேட்பாயாக. மூன்கூறிய வருடத்தை 324-ல் பெருக்கி 365-ஆல் வகுத்து வரும் ஈவை 27-ஆல் வகுக்க வரும் தொகை வருடமாகவும், பாக்கியை 12-ல் பெருக்கி 27-ஆல் வகுக்க வருந் தொகை மாதமாகவும், இவ்விதமாக வருடம், மாதம், நாள், நாழிகையாக கணித்துக்கொண்டு மூன் கூறிய ஐந்து பாகங்களை கருத்துள் மதித்துக்கொண்டு ஆயுளைக் கூறல் வேண்டுமாம். இந்தப் பிரகாரம் சோலை நெருங்கிய திருவேரகப்பதியில் வளரும் மன்னனாகிய அரங்கைய பூபனீன்றெடுத்த என் குருவாகிய வீரப்ப பிள்ளை அன்பு மிகுந்து எனக்குபதேசஞ் செய்தார். நிலைபெற்ற சங்கராசாரியார் வாக்கியங்களும் இவ்வாறு கூறுகின்றதென அறிவாயாக.

இலக்கின ஸ்புட விவரணம்

827

(இ-ள்.) சுத்தமாகிய வாக்கிய பஞ்சாங்கத்தைக் கொண்டு கிரக நாயகர் அருளைப் பெற்று ஒவ்வொரு கிரகங்களுக்குள்ள ஆதியந்தத் தொகையை ஆய்ந்தெடுத்து வாக்கினால் ஸ்புட கணிதங் கூற என் குரு பாதம் வாழி பெறக்கடவது.

828

(இ-ள்.) இமைக்கும் காலம் ஒரு மாத்திரை யென்றும், இப்படி 30-மாத்திரை கொண்டது தர்ப்பரை யென்றும், தர்ப்பரை 60-க்கு விகலை ஒன்றாகவும், விகலை 60-கொண்டது கலை யென்றும், கலை 60-கொண்டது ஒரு பாகை யென்றும், பாகை 30-கொண்டது ஒரு ராசி யென்றுங் கொள்ளவும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

829

(இ-ள்.) இச் சாதகன் ஜெனனமான நாழிகையும், மூன் நக்ஷத்திரத்திற் சென்ற நாழிகையும் அறிந்து கொண்டு பிறகு ஒரு ராசியை 9-கூறுசெய்து அதில் ஒரு கூறு வழுவில்லாமற் செய்தும், அவ் விராசிக்குள்ள பாகையை 9-பங்காய்ப் பகுக்கவும்.

830

(இ-ள்.) முன் பகுத்ததற்கு ஈந்துவரும் ஈவை நடத்துகின்ற பாதத்திற் சென்ற நாழிகை யறிந்து மேற்கூறிய ஈவுக்கு பெருக்க வரும் தொகை ஸ்புடமாம். பிறகு அதிற் சென்ற நாழிகையும் கூறுவோமாக.

831

(இ-ள்.) விஞடி நாலரையும், கலை ஒன்ருகவும் மதிந்து இவ்வாறு எந்த பாதத்தில் எவ்வளவு கலை செல்லுமோ அக் கலைக்கும், 4½-விஞடிக்கும் பெருக்கி அதில் வந்த நாழிகையை விஞடி செய்யவும்.

832

(இ-ள்.) இதுவே இலக்கின ஸ்புடமென் றறிந்து கொள்ளவும். இனி நவக்கிரக ஸ்புடம் செய்யும் விதம் காண்க. ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒவ்வொரு பாதத்திலுள்ள ஆதியந்த நாழிகையைக் கண்டெடுத்து,

833

(இ-ள்.) பிறகு அப் பாதத்திற்குள்ள கலைதனை பாகம் செய்து முன் எடுத்த ஆதியந்த நாழிகைக்குக் கொடுத்து வந்த ஈவை வைத்துக்கொண்டு கிரகம் அப் பாதம் ஆதிமுதல் ஜாதகன் ஜெனித்த நாழிகை வரையில் எடுத்து முன் வந்த ஈவினுல் பெருக்க வந்தது கலையாம்.

834

(இ-ள்.) பிறகு அவ் விராசியிற் சென்ற பாதத்தின் ஸ்புடத்தைக் கூட்டி பாகை, கலை, விகலை, தர்ப்பரை, விதர்ப்பரை யென்றெடுத்துக் கொள்ளவும். அப் பாதத்திற் சென்ற

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

நாழிகை இவ்வளவென்று கூறுவோமாக. முன் அப் பாதத்தில் பெருக்கி வந்த கலையை 4½-யால் பெருக்கி 60-ல் வகுக்க நாழிகையா மெனக் கொள்க.

835

(இ-ள்.) இந்த பிரகாரம் நவக்கிரக ஸ்புடம் செய்ய வேண்டுமாம்; இதில் இராகு, கேது, வக்ரக்கோட்கள் ஆகிய இவர்கள் தலை கீழாக வருபவர்கள் ஆனதால் புத்தி கூர்மையினுற் கண்டு கூறல் வேண்டுமாம்.

836

(இ-ள்) இனி எழுவகைத் தோற்றம், 84-லட்சம் பிறப்பை விரிவாக என் குருவாகிய வீரப்ப பிள்ளை யென்னும் கல்வி மேகம் திருவாய் மலர்ந்தருளிய வண்ணம் கூறுகின்றனம். கவனம் வைத்து கேட்பாயாக.

எழுவகைத் தோற்ற மறிய

837

(இ-ள்.) எழுவகைத் தோற்ற மறியும்படி பூமியின்கண் தேவர், மானிடர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரமென்னும் எழுவகைத் தோற்றமாம். அதை உண்மையான வேதங்களாற் கண்டு கூறுவேன் கேட்பாய் மைந்தனே! ஒரு லக்கினந் தன்னை 9-பங்கு செய்து ஒரு பங்கொன்றுக்கு 200-கலையென்று முன் கூறியபடி கண்டு கொள்வாய். எழுவகைத் தோற்றம், 200-கலையையும் விசாலித்து வரும் அது விபரங்கேள் : தேவர், மக்கள், விலங்கினம் இவைகளை 28-பாகமாகச் சொல்லவும். பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவர, பேத ஜீவர் 38-பாகமாகவுங் கூறல் வேண்டுமாம்.

838

(இ-ள்.) 200-கலையும், எழுவகைத் தோற்றமும் உள்ளதைச் சரிபண்ணி இதில் ஒரு கலையில் எழுவகைத் தோற்றம் உதிக்கின்ற உண்மையின் விபரமும் கேட்பாயாக. தேவர், மக்கள், விலங்கினம், ஊர்வன, தாவரம், பறவை, நீர்வாழ்வன முதலிய 7-ம் ஒரமிசம். இனி 49-ம் பார்க்குமளவில் விலங்கு,

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பறவை, ஊர்வன, தாவரம், புள், விலங்கு, மக்கள், தேவர் ஒன்றுகுமாம். தேவர், நீர்வாழ்வன. மானிடர், தாவரம், விலங்கு, ஊர்வன, பறவை, தேவர் ஆக 28-வகையும் தேவ அம்சமாம். அவருடன் 29 அம்சமாம்.

839

(இ-ள்.) ஆக 29-அம்சமும், தேவருக்கு ஆதியாக எண்ணவும் மக்கட்கு 8-முதல் 28-வரை எண்ணவும், விலங்கிற்கு 10-அம்ச முதல் 28-வரையில் பறவை யெனில் 15-முதலாகவும், ஊர்வனத்திற்கு 17-முதலாகவும், தாவரமெனில் 20-முதலாகவும், நீர் வாழ்வுக்கு 28-முதலாகவும் நடக்குமாம். இவைகளை விவரமாய்த் தெரிந்து எண்ணி அம்சத்தை ஒன்றிட்டு அறிந்த பிறகு ஓசை ராசியாகில் ராசியில் முற்பதந் தேவாங்கிசமாம். 2-மக்கள் அம்சமாம். 3-விலங்கு அம்சமெனவும், 4-பறவை, 5-ஊர்வன, 6-தாவரம், 7-நீர்வாழ்வன என்றறியவும்.

840

(இ-ள்.) 8-முதல் தேவராதியாக முன்கூறிய விதிப்படி 1-முதல் 7-வரையிற் கண்டு கொண்ட பிறகு உக்கும விராசியாகில் 7-முதலாக 1-வரையில் தலைகீழாக மாறி 7-வகைத் தோற்றமுங் கண்டு கொள்வாயாக. தேவரம்சத்தில் மக்கள் தோன்றுவாராகில் அவரில் மக்களென்றும், அவரில் 7வகைத் தோற்ற முண்டென அறியவும். பிற்பட்ட மற்றைய வங்கிசங்களு மிவ்வாறே பகுத்தறிந்து ஒரு அம்சத்தில் பலர் வரினும் அம்சத்தின்குணகுணம்பெறுவார்களென மூன்றும்பிறையை முடியிலணிந்த சிவபெருமானுக்கு குருவாய் விளங்கும் சுப்ரமண்யக் கடவுள் வளருந் திருவேரகப்பதியி லிருந்த தெய்வீக சித்தனென்னும் என் குருவாகிய வீரப்ப பிள்ளை கார்கால மேகம்போல் கூறலுற்ருர்.

841

(இ-ள்.) அருமையான வேதங்களுக்கு மூர்த்திகரமான என் குருவே! நீவிர் கூறிய விரிவாகிய பாகங்கள் யாவும் பிரகாசமாய்த் தெரிந்தேன். இன்னும் ஒரு லக்கினத்தில் இரண்டு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பிள்ளைகள் பிறக்க அவர்களுக்கு யோகங்கள் வெவ்வேறு கின்றமையால் அதன் விவரம் விளங்கச் செய்வீராக.

842

(இ-ள்.) ஒரு லக்கினத்தில் இரண்டு பிள்ளைகள் பிறக்க அக் காலையில் வலிமையான யோகக் கிரகங்களும் நீச கிரகங் களுந் தோன்றுமாகில், அவ்விரண்டு சாதகருக்கும் யோகங் கள் வேறுபடுமென்பதாம். அப்படி வேறுபடும் விதங்களை வெளிப்படையாகத் தெரிவிக்கின்றனன்.

843 - 844

(இ-ள்.) ஒரு லக்கினத்திற்கு கலை-1800 அக்கலையை 12-ல் கழிக்க மீதியான தொகையை ஓசை ராசி யென்பதும், உக் கும ராசி யென்பதும், ஆண் ராசி பெண் ராசியானதால் அதை மேஷ ராசி தொட்டு ஒன்றை விட்டு ஒன்று வருமாம். அதாவது மேடம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் இந்த 6-ராசியும், ஓசை ராசி யென்றும், இடபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் இந்த 6-ம் உக்கும ராசி யெனக் கொள்க.

845

(இ-ள்.) முன் கலையை 12-ல்கழித்து மீதியான தொகையை மேஷ முதலா யெண்ணும்போது ஓசை ராசியாகில் அதுவே ஜாதக ஜென்ம லக்கின மென்றும், உக்கும ராசியாய் வரில் தலை கீழாக வெண்ணி யோட்டுவதே சுத்த லக்கின மென்றும் கூறப்படும். இதுவே ஜெனன காலத்தின் ராசி லக்கின நிச் சய மெனக் கொள்க.

846

(இ-ள்.) இந்தப் பிரகாரமே நவக்கிரகங்களும், கலை ஒன் றுக்கு ஒரு ராசியாகவும் ஓடும் அதை ஓசையென்றும் உக்கும மென்றுங் கண்டு பலன் கூறல் வேண்டுமாம்.

847

(இ-ள்.) மேற்கூறிய பலன்களைக் காண்பதற்கு மார்க்கம் கேட்பாயாக. ராசி சக்கரத்துடன் ஒரு கலை ஒன்றுக்கு சத மஷ்ட சக்கர கருமத்தையும் விசாலமாகத் தெரிந்து பலன் கூறல் வேண்டுமாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

848

(இ-ள்.) ராசியின் பலன்களும், சதமட்டமத்தின் பலன் களும் ஆகிய இரண்டும் பூர்த்தியாய்த் தெரிந்து கொண்ட பின்னர்ச் சகலமும் தெரியும்படி கூறுவாயாகவும்.

849

(இ-ள்.) அதுவன்றியும் தசவர்க்க சக்கரங்களும் கண்டு துவாதசாம்ச சக்கர நிலையுங் கண்டு பலனை நிச்சயஞ் செய்ய வேண்டுமாம்.

850

(இ-ள்.) உண்மையுடைய அழகிய வென தாசிரியரே! நீர் கூறிய வண்ணந் தெரிந்து கொண்டேன். பிறகு தசவர்க்கத் தின் விபரந் தெரியப் படுத்துவீராகவும்.

தசவர்க்கம்

851

(இ-ள்.) புத்திரனே! தசவர்க்கம் அடைப்பதற்கு ஒரு மன தாய் நிற்பாயாக. ஜாதகன் உதித்த நாழிகையைத் தெரிந்து லக்கினத்தை அடைத்து நவக்கிரகத்தின் ஒவ்வொரு பதங்க ளைக் கண்டு தெரிந்து கொள்வது ராசிச் சக்கரம்.

852

(இ-ள்.) இரண்டாவது ஓரைச் சக்கரமாகும். 6-ராசியை இரண்டாகப் பிரித்து முதற்பாகம் சூரியவோரை யென்றும், பிற் பாகம் சந்திரவோரை யென்றும், ஓசை ராசிக்குச் சரியா கவும் உக்குமமானல் தலைகீழாகப் போட வேண்டுமாம்.

853

(இ-ள்.) ஓசை ராசியில் நின்றவர்கள் முதலிற் சூரிய வோரை பெறுவாராகில், அதுவே ராசியில் அடைக்க வேண்டு மாம். பிற்பாகம் சந்திரவோரை பெறுவாராகில், அது முதல் இரண்டாவது ராசியில் அடைக்கவும். இனி உக்கும ராசியின் விபரங் கூறுவோம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

854

(இ-ள்.) உக்கும ராசியில் முதற் பாகம் 15-பாகைக்குள் சந்திர வோரை பெற்ருல், அது முதல் 7-வது ராசியில் அடைக்க வேண்டுமாம். அதில் பிற்பாகம் 15-பாகைக்குள் சூரிய வோரை பெற்ருல், அதுமுதல் 6-ம் இடத்தி லடைக்கவும். இப் பிரகாரம் சுக்கிரநாடியிற் கூறியவண்ணம் நீ காண்கவும், இது ஓரைச் சக்கரமாம்.

855

(இ-ள்) இனி திரேக்காணச் சக்கரத்தை கூறுவோம். நீ நினைவாகக் கேட்பாயாக. ஒரு ராசியை 3-பாகஞ் செய்து அந்த திரிகோணத்தினுள் சக்கர மாதியாக.

856

(இ-ள்.) சரம், ஸ்திரம், உபயம் என்னும் 3-ராசியை வரிசையாகக் கொண்டு சரராசியானல் 1-5-9, ஸ்திர ராசியானல் 9-1-5, உபயராசியானல் 5-9-1எனவும் எண்ணி கிரகமடைக்க வேண்டுமாம். இனி திரிம்சாம்ச மடைக்கும் வகை கூறுவோமாக.

857

(இ-ள்.) ஒரு இராசி 30-பாகையில் ஓசை இராசிக்கு செவ்வாய்க்கு 5-பாகை, சனிக்கு 5-பாகை, குருவுக்கு 8-பாகை, புதனுக்கு 7-பாகை, சுக்கிரனுக்கு 5-பாகைக் குள்ளாகவும் அடைக்க வேண்டுமாம். உக்கும ராசியால் 5-பாகைக்குள் சுக்கிரனுகவும், 7-பாகைக்குள் புதனுகவும், 8-பாகைக்குள் குருவாகவும், 5-பாகைக்குள் சனியாகவும், 5-பாகைக்குள் செவ்வாயாகவும் இடமாக அடைக்கவும்.

858

(இ-ள்.) மேற்கூறிய வண்ணம் ஓசை ராசியில் 5-பாகைக் குள் நின்றோர்கள் மங்களனென்னும் செவ்வாய் பாகம் பெற்ருல் மேஷராசியி லடைக்கவும், உக்கும ராசியாயிருந்து மேற் கூறிய செவ்வாயின் பாகம் பெற்ருல் பெண் ராசியாகிய

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

விருச்சிகத்தி லடைக்கவும்; அதுபோலவே சனிக்கு கும்பம் மகரமாகவும், குருவுக்கு தனுசு மீனமாகவும், புதனுக்கு மிதுனம் கன்னியாகவும், சுக்கிரனுக்கு துலாம் இடபமாகவும் இவ்வாறு அடைத்துக் கொள்ளவும். இனி சத்தாங்கிசத்தை கூறுவோம்; ஓர் மனதாய் நின்று கேட்பாயாகவும்.

859

(இ-ள்.) மேற்கூறிய சத்தாங்கிசத்தின் விவரம் ஒரு ராசியை 7-கூறுகச் செய்து ஆண் ராசியாகில் வரிசையா யடைக்கவும். பெண் ராசியாகில் அதற்கு 7-ம் இராசி முதல் வரிசைக் கிரமமாய் அடைத்துக் கொள்ளவும். இனி நவாங்கிசத்தி னியல்பைக் கேட்பாயாக.

860

(இ-ள்.) ஒரு ராசியை 9-கூறுசெய்து அந்த ராசி திரிகோணத்துள் சரராசி முதல் அடைத்துக் கொள்ளவும். இனி தசாங்கிசத்தி னியல்பைக் கேட்பாயாக.

861

(இ-ள்.) ஒரு ராசியை 10-பாகம் செய்து ஓசை ராசியாகில் அந்த ராசி முதலாகவே அடைக்கவும். உக்கும ராசியாகில் 9-ஆம் இராசி முதல் நேராக அடைக்கவும், இவை தசாங்கிசமென்று அறிவுள்ள நூலோர் கூறிய முறையாம்.

862

(இ-ள்.) இனி துவாதசாம்சம் கேட்பாயாக; ஒரு ராசியை 12-பாகம் செய்து ஆண் இராசிக்கும் பெண் இராசிக்கும் அந்தந்த இராசி முதலாகவே அடைக்கவும்.

863

(இ - ள்.) கலாங்கிசத்தி னியல்பைக் கேட்பாயாக; ஒரு ராசியை 16-பாகஞ் செய்து ஆண் ராசிக்கு மேஷ முதலாக மீனம் வரையில் வந்தும் இராசி மண்டலத்துக்குள் பிரமன், மால், அரன், ரவி ஆகிய இராசியும் நேராயடைக்கவும். பெண் ராசிக்கு, ரவி, அரன், மால், பிரமன், மீனம், கும்பம், மகரம், தனுசு, விருச்சிகம், துலாம், கன்னி, சிங்கம், கடகம், மிதுனம், இடபம், மேஷம் என்று அவசௌவ்வியமாய் அடைத்துக் கொள்வது கலாங்கிசச் சக்கரமாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சஷ்டி யாங்கிசம்

864

(இ-ள்.) ஒரு ராசியை 60-பாகம் செய்து 12-ல் கழித்து வருந் தொகையை மேஷ முதல் மீனம் வரையில் அடைக்கவும். பிறகு வரும் தேவாங்கிசத்தை ஆண் ராசிக்கு நேராகவும் பெண் ராசிக்கு கடைசி முதல் நேராகவுங் கொள்கவும்.

865

(இ-ள்.) மேற்கூறிய சஷ்டியாங்கிசம் 60-க்கு அம்சத்தி னியல்பைக் கூறுகின்றனம். நவக்கிரகத்தின் அம்சந் தெரிந்து கூறுவோமாகில் பலன்கள் யாவும் தவறுமல் நடக்கு மாகையால் அந்த 60-அம்சத்தின் பெயரைத் தனித் தனியா கக் கூறுவோமாக.

தேவாங்கிச மறியும்படி

866

(இ-ள்.) கோராம்சம், இராட்சசாம்சம் தேவாங்கிசம், குபே ராங்கிசம், ரக்ஷக்ஷோகணம், கின்னரம், அருட்டம், குதக்கினம், கிரளகோளம், அக்கினி, மாயம், பிரேதபுரி, பதியாம்சம், அம ராம்சம், காலம், ராகியம், அமுதம், சந்திரன், மதிமயக்கம், மிருத்து, கோமளம், வனவாசம், லட்சிமி, வாகீசம், திகம்பரம், தொடர்ச்சி, மித்திரம், கலிஞசம், பாசம், பூமிசுரம், கமலாகா ரம், குளிகாங்கிசம், அவமிருத்து காலம், தவாக்கினி, அகோரம், யமகண்டம், சுதாங்கிசம், அமிர்தம், பூரணமதி, விடபரிதி, குல நாசனம்.

867

(இ-ள்.) முக்கியம், சேதம், உற்பாதம், காலரூபம், சௌமி யம், கொடிமிருத்து, சீதளம், சந்திரமுகம், சுபாக்கியம், பிரதக் கணம், தண்டம், நிர்மலம், சுபம், அசுபம், அதிசீதம், பயோததி, பிராணுபம், இந்து, அம்சம் ஆகிய 60-ம் தேவாம்சமாம். இத் தேவாம்சங்களை ஒசை ராசிக்கு கோராம்சம்முதல் நேராகவும் உக்கும ராசிக்கு இந்து அமச முதல் இடமாகக் கொள்கவும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

முன்கூறிய தசவர்க்கத்தின் வழிகளைக் கண்டு அதை சஷ்டியாம்சத்திலேற்றிப் பக்குவமாக மேற்கூறிய வண்ணம் கிரகாதிபதிகளது கதியையோர்ந்து கூறுவாயாகில் பலன் தவறாது நடக்குமாம்.

868

(இ-ள்.) தசவர்க்கங்களி லிருக்கும் கிரகங்களை அந்தந்த ஸ்தானப் பிரகாரம் அடைத்துப் பார்க்குங் காலையில் ஒரு கிரகம் ஆட்சி உச்சம் நட்பு ஆகிய சுபவர்க்கமேறினல் பாரிசாதாம்ச மென்றும் அதற்குப் பலன் சந்ததமும் சுகியா யிருப்பனும். 3-சுப வர்க்கமேறினல் உத்தமாங்கிச மென்றும், அதற்குப் பலன் வாகன முடையவராயும் அற்ப ரோகமுடையவராயுங் கூறப்படும். 4-சுபவர்க்கமேறினல் கோபுராங்கிச மென்றும், அதற்குப் பலன் வாகனம், தனம் உண்டாம். 5-சுபவர்க்கமேறினல் சிங்காசனங்கிஷம், அதற்குப் பலன் செல்வமுடையவராம்.

868

(இ-ள்.) 6-சுப வர்க்க மேறினல் பார்க்கவதம்ச மென்றும் அதற்குப் பலன் வித்தையும், புத்தியும் உடையவராம். 7-சுப வர்க்க மேறினல் கனக யோக முடையவராம். 8-சுப வர்க்க மேறினல் வைசேடிகாம்சமென்றும், அதற்குப் பலன் ராஜாதிபதியாம். 9-சுப வர்க்கமேறினல் ஐராவதாங்கிச மென்றும் அதற்குப் பலன் அஷ்ட ஐஸ்வரியமுடையவ னென்றும், 10-சுப வர்க்க மேறினல் தேவேந்திராம்சமாம், அதற்குப் பலன் இந்திர யோகி யென்றும், சார்வ பௌமனென்றுங் கூறப்பட்டது.

869

(இ-ள்.) நிலைமை பெற்ற கோட்களின் அவஸ்தையை நிர்ணயமாக ராசியை 5-கூறு செய்து முதல் வாலிபம்,யௌவனம், கௌமாரம், விருத்தம், மரணம் என 5-ம். இதில் இராகு, கேதுகளுக்கு மட்டும் தலைகீழாய் வருமாம். இதில் ராகு, கேது, சனி இவர்களுக்கு விருத்த அவஸ்தையும், சுக்கிரனுக்கு வாலிப மரணமு நீங்கலாகமற்ற அவஸ்தைகள் சுகமென்றும்;

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

செவ்வாய்க்கு விருத்த அவஸ்தை மரணவஸ்தையும் தவிர மற்றவை சுகமென்றும், புதனுக்கு மரண அவஸ்தை நீங்கலாக மற்றவை சுகமென்றும், சூரியனுக்குங் குருவுக்கும் மரண அவஸ்தையொழிய மற்றவை சுகமென்றும், சந்திரனுக்கு யௌவன அவஸ்தை சுகமென்றும் கூறியது.

துவாதசாம்சச் சக்கரம்

1-வது ராசிச் சக்கரம்

870

(இ-ள்.) துவாதசாம்சச் சக்கர சூட்சுமத்தை கேட்பாயாக; முதற் சக்கரத்திற் கூறிய தன்மையே ராசிச் சக்கரமாம்.

2வது ஓரைச் சக்கரம்

871

(இ-ள்,) இரண்டாவது சக்கரம் எப்படியெனில் முன் தச வர்க்கத்திற் சொல்லிய ஓரைச் சக்கர முறையெனக் கொள்கவும்.

3-வது கடிகைச் சக்கரம்

872

(இ-ள்.) ஒரு ராசியை 60கூறு செய்து கூறொன்றுக்கு ராசியை வகுத்த பின்னர் ஆண் ராசியாகில் நேராகவும், பெண் ராசியாகில் இடமாகவுங் கொள்கவும்.

4-வது ஆரூட லக்கின மறியும்படி

873

(இ-ள்.) லக்கினம் ஆதியாக ராசிநாதனை ஸ்புடரீதியாய்த் தெரிந்து அவரிருந்த ராசி முதற்கொண்டு லக்கின மடைக்க வேண்டுமாம்.

5-வது நட்சத்திர லக்கின மறியும்படி

874

(இ-ள்.) நட்சத்திரத்திற் சென்ற நாழிகையை ஸ்புட ரீதியாய்க் கண்டு 5-க்கு ஒரு ராசியாகவும் வகுத்துக்கொண்டு அசுபதி-மகம்-மூலம் இவைக்கு இடமாக அடைக்க வேண்டுமாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

6-வது காரகலக்கின மறியும்படி

875

(இ-ள்.) ஒரு ராசியை 60-பங்கு செய்து ராசி ஒன்றுக்கு 5-கூறாகப் பாகித்து யேறியதை அக் கிரக முதலாக அடைக்க வேண்டுமாம்.

7-வது ஆதரிச் சக்கரம்

876

(இ-ள்.) லக்கினம் நட்சத்திரம் பாதம் ஆகிய மூன்றையும் ஸ்புடரீதியாய்க் கண்டு அதுமுதல் பாதம் 55-போட்டவும், அவரவர்களிருந்த பாதந்தான் முதலாக 55-ம் பாதம் வரையில் அடைத்துப் பலன் கூறல் வேண்டுமாம்.

8-வது ஆயுர்ப்பாகச் சக்கரம்

877

(இ-ள்) ஒரு ராசியை 12-பங்கு செய்து சந்திரனிருந்த நவாங்கிச முதல் அடைப்பது ஆயுர்ச் சக்கரமாம்.

9-வது திரேக்காணச் சக்கரம்

877

(இ-ள்.) ஒரு ராசியை 3-கூறு செய்து அதிற் பொருந்திய திரிகோணத்தில் சரராசி முறையாகக் கண்டு அடைத்து பலன் கூறல் வேண்டுமாம்.

10-வது அங்கிசச் சக்கர விதி

878

(இ-ள்.) ஒரு ராசியை 10-பங்கு செய்து சந்திரன் நின்ற இராசியாதிபதி நின்ற ராசியைத் தொட்டு அடைக்கவும். பெண் ராசியி லிருந்தவர்களுக்குச் சந்திரன் நின்ற ராசிக்கு 9-ம் ராசியைத் தொட்டு அடைக்கவும். இந்தப் பிரகாரம் எனது சற்குருவாகிய வீரப்ப பிள்ளை கூறிய வண்ணம் இதுவே யாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

11-வது நவாங்கிச சக்கரமும் 12-வது பாவகச் சக்கர விதிகளும் காண்கவும்

879

(இ-ள்.) என்னுசிரியர் அருளிச் செய்த விதங் காண்க. ஒரு ராசியை 9-கூறுசெய்து திரிகோணங்களில் சரராசியைக் கண்டு அடைத்துக் கொள்ளவும். இனி பாவகச் சக்கரத்தைச் சொல்வேன் கேட்பாயாக: ஒரு நட்சத்திரத்தை 12-கூறு செய்து மேஷ முதல் வலமா யடைக்கவும். உக்கும ராசியாகில் மீனம் முதல் இடமாக அடைக்க வேண்டுமாம்.

துவாதசாம்ச சக்கர பலனறியும்படி

880

(இ-ள்.) முன் கூறிய ராசிகளில் பலன் கூறும் விதந் தெரிந்து கொள்வாயாக. 1-வது ராசியின் சக்கரத்திற்கு இலக்கினுதிபதியைக் கொண்டும், ஓரைச் சக்கரத்திற்கு 2க்குடையவரைக் கொண்டும், கடிகைச் சக்கரத்திற்கு 3-க்குடையவரைக் கொண்டும், ஆரூடச் சக்கரத்திற்கு 4-க்குடையவரைக்கொண்டும், நட்சத்திர பலத்திற்கு 5-க்குடையவரைக் கொண்டும், காரகச் சக்கரத்திற்கு 6-க்குடையவரைக் கொண்டும், ஆதரிச் சக்கரத்திற்கு 7-க்குடையவரைக் கொண்டும், ஆயுட் சக்கரத்திற்கு 8-க்குடையவரைக் கொண்டும், திரேக்காண சக்கரத்திற்கு 9-க்குடையவரைக் கொண்டும், அங்கிசச் சக்கரத்திற்கு 10-க்குடையவரைக் கொண்டும், நவாங்கிசச் சக்கரத்திற்கு 11-க்குடையவரைக் கொண்டும், துவாதசாம்சச் சக்கரத்திற்கு 12க்குடையவரைக் கொண்டும் பலன் கூறல் வேண்டுமாம்.

மங்களப் பொருத்தங்கள்

881

(இ-ள்.) தற்பரானந்த சொரூபராயுஞ் சற்குருவாயும் விளங்கா நின்ற விற்பன்னு! பெண்ணுக்கும் ஆணுக்கும் பொருத்தங்கள் சொல்வதற்கு சுப விதிகள் எப்படி? ஏழையாகிய யானறிய, பரத்துவநாயகா! தயவுசெய்து நவில்வீராகவும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

882

(இ-ள்.) தினம், மகேந்திரம், யோனி, இராசி, இராசிக் கதிபதி, கணம், இரச்சு, ஸ்திரீதீர்க்கம், பக்ஷி, ஆயுள்சோதனை, வேதம், வசியம், மரம் இப்படி உலகத்தாரின் மனமயக்கறுக்கும் 13-பொருத்தம் வகுத்திருக்கின்றனர்.

தினப் பொருத்தம்

883

(இ-ள்.) பெண் நாள் முதல் புருஷன் நாள்வரை எண்ணினால், 2-4-6-8-9-10-12-14-16-19-22 இவைகள் பொருத்த நட்சத்திர மென்றும், மற்றவைகள் பொருந்தா வென்றுங் கூறியது.

கணப் பொருத்தம்

884

(இ-ள்.) அசுபதி, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், அஸ்தம், சுவாதி, அனுஷம், திருவோணம், இரேவதி ஆக 9-நட்சத்திரமும் தேவகண மென்றுங் கூறியது. இனி மனுஷ கணம் கூறுகின்றனம்.

885—886

(இ-ள்.) பரணி, உரோகணி, திருவாதிரை, பூரம், பூராடம், பூரட்டாதி, உத்திரம், உத்திராடம் உத்திரட்டாதி ஆகிய 9-நக்ஷத்திரமும் மனுஷ கணமென்று கூறியது. மற்றை 9-நட்சத்திரமும் இராக்ஷத கணமென்றறியவும். இதில் பெண் நட்சத்திரம், புருட நட்சத்திரமும் ஒரேகணமாக வரில் பொருத்தமுண்டாம். தேவ கணமும், இராக்ஷத கணமும் வரில் பகையாம். மனுஷ கணமும், இராக்ஷத கணமும் வரில் உயிர் மரணமாம். மனுஷ கணமும், தேவ கணமுமாக வரில் மத்திமமாகப் பொருந்துமாம்.

3-வது கேந்திரப் பொருத்தம்

887

(இ-ள்.) பெண் நாள் முதல் புருடன் நாள் வரையில் எண்ணி வந்த தொகை 1-4-7-10-13-16-19-22-25 ஆனால் உத்தமப் பொருத்தமென்றுங் கூறியது.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

4 - வது ஸ்திரீ தீர்க்கப் பொருத்தம்

888

(இ-ள்.) பெண்ணாள் முதல் புருடனாள்வரையில் எண்ணும் போது 13-க்கு மேலானால் உத்தமப்பொருத்தமென்றும் கூறியது. இனி யோனிப் பொருத்தத்தின் விபரங் கேட்பாயாக.

5 - வது யோனிப் பொருத்தம்

889

(இ-ள்.) இருவர் யோனியும் ஒன்றாயிருந்தாலும், அல்லது பெண் யோனியானாலும் நன்மையாம். இரண்டும் ஆண் யோனியானாலும், அல்லது மாறி நின்றாலும், பகை யோனியானாலும் பொருந்தாதென்றுங் கூறியது.

6 - வது இராசிப் பொருத்தம்

890

(இ-ள்.) பெண் ராசி முதல் புருடன் ராசிவரையில் எண்ணும்போது 6-ராசிக்கு மேலானால் உத்தமமென்றும், செல்வம், கீர்த்தி, ஆயுள் ஓங்குமாம். இனி இராசி நாயகர் பொருத்தம் உணர்வாயாக.

7 - வது இராசிநாயகர் பொருத்தம்

891

(இ-ள்.) பெண் இராசியாதிபதியும், புருடன் இராசியாதிபதியும் நட்பு பெற்றால் சுக பொருத்தமென்றும், பகை பெற்றால் பொருத்தமில்லையென்றுங் கூறியது.

8 - வது வசியப் பொருத்தம்

892 - 893 - 894

(இ-ள்,) மேஷ ராசிக்கு சிங்கமும் விருச்சிகமும் வசியமென்றும்; இடப ராசிக்கு கடகம். துலாம் வசியமென்றும்; மிதுனராசியாகில் கன்னி வசிய மென்றும்; கடக ராசிக்கு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

விருச்சிகம், தனுசு வசியமென்றும்; சிங்க ராசியாகில் மகரம் வசிய மென்றும்; கன்னியா ராசியாகில் இடபம், மீனம் வசிய மென்றும்; துலா ராசியாகில் மகரம் வசிய மென்றும்; விருச்சிக ராசியாகில் கடகம், கன்னி வசிய மென்றும்; தனுசுக்கு மீனமும், மீனத்திற்கு கும்பமும், கும்பத்திற்கு மீனமும், மீனத்திற்கு மகரமும் இப்படியாக இராசிகள் ஒற்றிருந்தால் வசியப் பொருத்த முண்டென்றும், சிறக்க வாழ்வு பெறுவாரென்றுங் கூறியது.

ரச்சுப் பொருத்தம்

895 - 896

(இ-ள்.) நேரில் மூன்று முக்கோணங் கீறி குறுக்காக நான்குவரை கீறினல் 27-பொருத்தமாம். அதை முதல் கீழ் வரியில் அசுபதியை வைத்து மேல் கீழாக 27-நட்சத்திரமும் அடைத்துக்கொள்ளவும். பிறகு கீழிருக்கும்வரைக்கு காலென்றும், அதின்மேல் வரைக்கு தொடையென்றும், அதற்கு மேல்வரைக்கு வயிறென்றும், அதன் மேல்வரைக்கு கழுத்தென்றும், அதன்மேல் தலை யென்றுங் கூறவும்.

897 - 898

(இ-ள்.) இதன் காலின் வரைப்பொருத்தமாகில் பொருள் விரையமென்றும், தொடைப் பொருத்தமாகில் மலடாவாளென்றும், வயிறாகில் புத்திர சேதமென்றும், கழுத்தாகில் அவமங்கலையென்றும், சிரசாகில் சீக்கிரம் பெண் தீங்கு பெறுவாளென்றும், இதில் தொடையும், காலுமாகில் மத்திம மென்றும், கழுத்துஞ் சிரசாகில் பொல்லாங்கென்றும், மற்றவை உத்தம மென்றுங் கூறப்பட்டது.

வேதப் பொருத்தம்

899 - 900

(இ-ள்.) நேரே முக்கோணங் கீறி ஒரு கோணத்திற்கு நான்கு வரை கீறி அதில் முதல் கீழ்வரியில் அசுபதி முதலாக 27-நட்சத்திரமும் அடைத்துக்கொண்டு பெண் நட்சத்திரமும், புருட நட்சத்திரமும் குறுக்காகவிருக்கும் நேர்வரைதனில் வருமாகில் பொருத்த மில்லை யென்றும், மாறியிருக்குமாகில் உத்தமமென்றுங் கூறப்பட்டது.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மரப் பொருத்தம்

901-902

(இ-ள்.) புருஷன் வைர மரமும், பெண் பால் மரமுமானுல் புத்திரருண்டென்றும், புருஷன் பால் மரமும், பெண் வைர மரமு மானுல் மலடாவா ளென்றும், இருவரும் வைர மரமாகில் புத்திரசேத முண்டாகுமென்றும், இருவரும் பால் மரமானுல் புத்திரானந்த செல்வ பாக்கியம் ஓங்குமென்றும் கூறியது.

புட் பொருத்தம்

903

(இ-ள்.) இருவர் பட்சியும் உறவாகில் வாழ்வு பெருகுமென்றும், பகை பெற்ருல் அற்ப வாழ்வென்றுங் கூறப்படும்.

ஆயுட் பொருத்தம்

904-905-906

(இ-ள்.) பெண்ணுள் முதல் புருடனுள் வரையில் எண்ணிக் கூட்டி 7-ற் பெருக்கி 27-ல் கழித்து மீந்ததை வைத்துக்கொள்ளவும். புருடனுள் முதல் பெண்ணுள் வரையில் எண்ணி சேர்த்து முன்போல 7-ற் பெருக்கி 27-ல் கழித்து மீந்த தொகையை வைத்துக்கொண்டு இந்த 2-தொகையில் தாழ்ந்த தொகையெதுவோ அவர்கள் முன் பதவி அடைவார்களென்றுங் கூறியது. ஆக 13-பொருத்தமும் முன்னேர்கள் கூறிய வண்ணங் கூறியது.

907

(இ-ள்.) ஒப்பு உவமை யில்லாத உத்தம சித்தமுடைய எனதாசிரியரே! இப் புவியின்கண் மங்கைக்கும், மணவாளனுக்கும் 13-பொருத்தமுங் கூடி யிருப்பது அரிதாகையால், விசேடமாய் எவ்விதம் பொருத்த மிருக்க வேண்டும். அதை யருளிச் செய்வீராகவும்.

908

(இ-ள்.) கிருபை செய்ய வேண்டுமென்ற புத்திரா! நக்ஷத்திரப் பொருத்தமும், கணப் பொருத்தமும், ரச்சுப் பொருத்த

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மும், வேதப் பொருத்தமுமாகிய நான்கு பொருத்தமும் விவாகம் செய்யலா மென்றுங் கூறுக.

909

(இ-ள்.) அசுபதி நக்ஷத்திரத்திற் பிறந்த புருடன் மகர நட்சத்திரத்திற் பிறந்த பெண்ணை விவாகஞ் செய்வாராகில் புத்திரனில்லாமல் மன வெறுப்போடு கலகப்படுவார்க ளென்றும் ஒரு விதி. பிறகு அசுபதி ஒரே தாரமென்றும் பெருகிய பொருளோடு மைந்தர்களும் உண்டாகு மென்றும் ஒரு விதி. இப்படி ஒரு பாகத்திற்கு 2-வித பலன் கூறியிருப்பதால் அதன் ஞாயத்தை நுட்பமாக ஆராய்ந்து எடுத்துரைப்பீராகவும்.

910

(இ-ள்.) இன்னமும் புவியின்கண் உடலின் பொருத்தமும் உயிரின் பொருத்தமு மென்று இரண்டுண்டு கேட்பாயாக

911

(இ-ள்.) முன் கூறிய உடற் பொருத்தம் 13-ம் சரியாக வரில் உயிர் பொருத்தம்; இதற்கு விரோதமாய் வரில் சங்கடப் படுவார்க ளென்றும் கூறப்பட்டது.

912

(இ-ள்.) எனதையனே! உடற் பொருத்தங்கள் முன்னரே கூறினீர்; அதைத் தெரிந்தேன். இனி உயிர்ப் பொருத்தங்கள் விபரமாய் மொழிந்தருள வேண்டும் கிருபாநிதியே.

913-914-915

(இ-ள்.) இலக்கினாதிபதி, சுக்கிரன், சந்திரன் இவர்கள் நின்ற ராசிக்கு 1-2-7-8-ல் பாபக் கிரகங்கள் நிற்குமாகில் முழுப்பாப மென்றும், 12-ல் செவ்வாய் நிற்கில் கால்பாபமென்றும், மற்ற தீக்கோள்கள் ஆட்சி பெற்றிருந்தால் அரைபாப மென்றும், அத்தானாதிபதிகள் உச்சமாகில் முக்காற் பாப மென்றும், நட்படைந்தால் கால்பாப மென்றும், பகை பெற்றிருந்தால் முழுப்பாப மென்றும், நீசம் பெற்றால் ஒன்றேகால் பாபமென்றும் இந்தப் பிரகாரம் பாபத் தன்மையை யெடுத்துக் கொள்வாயாகவும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

916

(இ-ள்.) இவ்விதமாக பெண்ணுக்கும், புருஷனுக்கும், பங்கமாகிய பாபத்தைக் கண்டு பிறகு பெண்ணுக்கு எவ்வளவு பாபம் அமைந்ததோ அதைவிட புருஷனுக்கு இரண்டு பங்கு பாபம் வேண்டுமென்றுங் கூறப்பட்டது.

917

(இ-ள்.) இப்படிப் புருஷனுக்கு இரண்டு பாபங்கள் வருமேயாகில், திரண்ட புத்திரரும், யோகமுஞ் செழிக்குமாம். அல்லது ஒன்றுக்கு ஒன்றரைப் பாபமானாலும், பார்த்தாலும் முன்போல நற் பலனென்றுங் கூறுவார்கள்.

918

(இ-ள்.) பெண்ணின் பாபத்திற்குமேற் புருஷன் பாபம் கால் கூடியிருந்தால் விவாகம் செய்யலாம். பெண் பாவம் கால் கூடியிருந்தால் புருஷனைக் கொல்லுமென்றும் மதித்துக் கொள்க.

919

(இ-ள்.) பூமியின்கண் உடற் பொருத்தங்களும், உயிர்ப் பொருத்தங்களும் இருந்தால் விவாகஞ் செய்யலாமென்றும், புத்திரர் பெருகுமென்றுங் கூறியது.-இதில் உயிர்ப் பொருத்தமில்லாவிடிற் பாழாய்ப் போகுமாம். ஆனதால் உடற் பொருத்தத்திற்கு உயிர்ப் பொருத்தம் மேலென்றுங்கூறியது.

920

(இ-ள்.) எனதாசிரியரே! இதுவரையில் நான் கேட்டபடி உரை செய்து என் சந்தேகத்தை நிவர்த்தி செய்தீர்; இனி 12-பாவகமும் அருளிச்செய்து பூமியிலுள்ளோர் என்னை மதிக்கும்படி விதிமுறைப்படி கூற வேண்டுமாம்.

கிரக வலிமை

921

(இ-ள்.) அசைவில்லாது நிலைபெற்ற குரு ரூபமாய்த் திருவேரக மலையினிடத்துச் சிவனுக்கு வேதங்களை உபதேசித்தவராகிய சுப்ரமண்யருடைய அருளைப்பெற்று நிறைந்த கணிதமென்னுங் கடலை முற்றுமுணர்ந்து பெரிய சித்தி பெற்று வசையில்லாது பேரடைந்த வீரப்ப பிள்ளையென்னு நாமத்தை

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

யடைந்த எமது வள்ளலுடைய திருவடித் தாமரை மலரைத் துணையாய் வணைந்து பூசித்து நின்று நவ நாயகர்க் கமைந்து நின்ற திசை புத்தி விபரம் இஃது ஒருவாறு தேர்ந்த மட்டுங் கூறுவேனாகவும். ஜென்ம லக்கினம் புருஷ ராசியாகில் வலமாகவும், பெண் ராசியாகில் இடமாகவும், லக்கின முதல் 12-ராசி வரையில் இவ்வாறு கண்டு கொள்ளவும். வலமாகில் முன் பார்வையென்றும், இடமாகில் பின் பார்வை யென்றும் ராசியின் தானமும் அதுவே யென்றுங் கூறப்பட்டது.

922

(இ-ள்.) கூறிய விதிப்படி அவரவர் ராசி பலன் கண்டு கிரகத்தின் வலி குறைவு தெரிந்து ஜென்மமானது பாபமென்றும் புண்ணியமென்றுந் தெரிந்து தந்தையின் யோகம் அவ யோகமும் கண்டு முன் கூறிய விதிப்படி அமைந்த இலக்கத்தில் பொருந்திய 4-10-க்குடையவர் வலியும் கோசர விதிகளும் ஆகிய பலன்களை யெல்லாம் ஆசிரியரால் சொல்லத் தெரிந்து பிறகு திசை புத்தி அந்தரம் அந்தரா அந்தர முதலியவற்றின் உண்மையைத் தெரிந்த பிறகு பலன் கூறல் வேண்டுமாம். அப்படியில்லாது துடிதுடித்துக்கொண்டு பதட்ட ஆராய்ச்சி செய்து சொல்பவர்களுக்கும் நூல் கூறிய சோதிடர்களுக்கும் பழுது வருமென்றும் பழமையாகிய வேதங்கள் கூறுமென்பதாம்.

923

(இ-ள்.) 1-2-4-5-10-11-7 இவ் விராசிக்குடையவர்கள் சுக பலனைக் கொடுப்பா ரென்றும், இவர்களில் சிரேஷ்ட ஸ்தானதிபதி 4-10-க்குடையவ ரென்றுங் கூறியது. 6-8-3-12-க்குடையவர்கள் சொற்ப பலன் கொடுத்தபோதிலும் பாப பலனே கொடுப்ப ரென்றுங் கூறியது. இன்னும் நல்லோர்கள் திசையில் செம்பாதி நற்பலன் கொடுப்பா ரென்றும் தீயோராகில் தமது திசையில் நற்பலன் தருவது வழக்கமா யிருக்கினும், எந்நாளும் நிலைபெற்றதல்ல வென்றும், 3-க்குடையவர் உச்ச மடைந்தால் நற்பலன் கூறப்படாதென்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

றும், 12-ம் இடத்திற் சுபர்கள் கூடி நிற்க 12-க்குடையவர் திசையில் அதிலிருந்த சுபர்கள் புத்தியில் சுகமாகிய வாழ்வைத் தருபவரென்றுங் கூற வேண்டுமாம்.

924

(இ-ள்.) ஒரு ராசியில் 2-3-கிரகங்கள் ஏறியிருந்தால் அவர்களில் எவர் வலியரோ அவர் மற்றவர்கள் வலியைத் தானடைந்து தன் திசையில் மேன்மையான பலனைக் கொடுப்பாரென்றுங் கூறப்பட்டது. பிறகு இவர் பலத்தை அவர்களுக்குக் கொடுப்பரென்றும், 6-க்குடையவருக்கு 8-க்குடையவர் சுபராயிருக்கில் முன் கூறிய 6-க்குடையவர் திசையில் நற்பலன் கொடுப்பாரென்றும், மேற்கூறிய 8-க்குடையவர் பாபராயிருக்கில் 6-க்குடையவர் பாபபலனைக் கொடுப்பாரென்றும், அல்லது அவர்களிருந்த நக்ஷத்திரத்திற்குரிய திசாநாதன் அவர் பலனை யடைந்து தன் திசை பாகத்தில் தன் பலனைக் கொடுப்பரென்றும் மேலோர்கள் கூறுவார்கள். இனி சரம், ஸ்திரம், உபயம் இவ்விராசிகளிற் பிறந்தவர்களுக்கு பலன்கள் அழியுமாறு விதி முறைப்படி கூறுவோமாகவும்.

925

(இ-ள்.) சரத்திற் பிறந்தவர்களுக்கு உபயராசியும், சர ராசிக்குடையவரும் நற்பலன் கொடுப்பாரென்றும், ஸ்திர ராசியிற் பிறந்தவர்களுக்கு உபய சர ராசியோர் தீப்பலன் கொடுப்பா ரென்றும், இத் தன்மைபோல் ஸ்திர ராசியிற் பிறந்தவர்களுக்கு உபய ஸ்திர ராசிக்குடையோர் பலன் கொடுப்பாரென்றும், சரராசிக்குடையவர் தீப்பலன் கொடுப்பாரென்றுங் கூறியது. உபய ராசியில் ஜனித்தவர்களுக்கு உபய ஸ்திரராசிக்குடையவர்கள் பலன் கொடுப்பாரென்றும், சர ராசிக்குடையவர் தீப்பலன் கொடுப்பாரென்றும், 7-க்கு 10-விருந்தவர்களும் மேற்கூறிய மூவர்களும் ஆகிய நால்வர்களையும் 8-க்குடையவர் நோக்கில், அவர் பலனை ஒன்றுக முறைப்படி கொடுப்பாரென்றும், 9-க்குடையவரை 12-க்குடையவர் நோக்கில் தன் பலனை அவருக் களித்து 8-க்குடையவர் பலனைத் தானடைந்து பலன் கொடுப்பார்களாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

926

(இ-ள்.) 2-3-க்குடையவர்களை 6-க்குடையவர் சேர்ந்தாலும், பார்த்தாலும், நற்பலன் துர்பலமாகவும், துர்பலன் நற்பலமாகவும், செய்பவரென்றுங் கூறியது. இன்னமும் ஓர் சூட்சுமமுளது. ஒரு கிரகத்திற்கு இரண்டு ஆதிபத்தியமும், ராசியாதிபத்தியமும் பெற்று 8-க்குடையவர் நோக்கப்பட்டாலும், சரராசியிலிருந்தாலும், மூவர்கள் கூடி ஒருவாறு தீங்கு பெற்றும் ஒருவாறு நன்கு பெற்றிருந்தாலும், இவை யெல்லாங் கத்தி முனையில் நிற்பவர்கள் மனம்போல் கூர்மையாக நோக்கி அவர்கள் திசா புத்தி வலுவு மிடருந் தெரிந்துவரும் தீங்கெல்லாம் அற்ப மென்றும், நற்பலன் ஒன்றிற்கிரண்டு செய்வாரென்றுங் கூறியது.

927

(இ-ள்.) திசாநாதன் பாவியா யிருந்தாலும், முன் கூறிய செயலெல்லாம் பொருந்தி யிருந்தாலும், தீப்பலனெல்லாஞ் சொற்ப நற்பலனாகவும், நற்பலனெல்லாம் அதிக தீப்பலனாகச் செய்வரென்றுங் கூறியது. இன்னும் ஒருவன் திசையில் நிற்கின்றவர் வலி யடைந்தாலும் கேந்திராதிபதியும் அவரோடு கூடினாலும் அவரைப் பார்த்தவர்களும் திரிகோண ராசியில் நின்றவர்களும் அத் திசையின் பதியின் பலனை யடைந்து தங்களில் வலுத்த பேர்கள் எவரோ அவர்கள் முற்பலனைக் கொடுப்பரென்றும், 3-2-11 இதற்குடையவர்கள் திசை பொருந்தி பலமுள்ளவர்கள் பார்த்தவர்கள் அத்திசையோர் பலத்தை வாங்கி மேன்மையான பலனைக் கொடுப்பரென்றுங் கூறியது. பிறகு திசாநாதனுடைய பலனென்று கண்டு தெரிந்துள்ளோர் கூறுவார்களாம்.

928

(இ-ள்.) 8-12-க்குடையவர்கள் ஒருவர்க்கொருவர் மாறி நின்றால் அவர்கள் நடத்தும் பலனைக் கூறுகின்றனம். மேற்கூறியவரோடு இருந்தோர்கள் பார்த்தோர்கள் இவர்களுடைய பலனும், சேர்ந்தோர் பலனும் கொடுப்பரென்றும் கூறப்பட்டது. இன்னமும், இதில் ஓர் வினயங் கூறுவோமாகவும். மாரகாதிபத்தியம் எவருக்கு உரித்ததெனில் மாரகாதிபரோடு சேர்ந்தவர்கள் அவரை நோக்கினவர்கள் இவர்களை நன்றாக

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அறிந்து நிலைபெற்ற மேலான அதிகாரி திசை இன்னாரெனக் கண்டு அக் காலையில் இவ்வித வலியுடையவரெவரோ அவர் புத்தியில் மாரகம் வருமென் றறிந்து கொள்ளவும்.

முதற் பாவகம்

929

(இ-ள்.) இலக்கினத்தைக் கொண்டு கீர்த்தி, குணம், யோகம், அழகு, ஆயுள், சுதேச வாசம், விர்த்தி, கல்வி, அறிவு, பரிசுத்தம் ஆகிய பலன்களைக் கூறும் வண்ணம் ஞானரூப தயாநிதியைத் துதி செய்வோமாகவும்.

யோக்கிய தாமிசை

930



(இ-ள்.) 9-மிடத்தில் 2-3-க்குடையவர்கள் கூடி நிற்கவும், 5-க்குடையவர் 2-ல் அமரவும், சுபக் கிரகங்கள் லக்கினத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகர் யோக முடையவராம்.



[2] 9-க்குடையவரும், லக்கினாதிபதியுங் கூடி 4-ஆமிடத்தில் நிற்கவும், 2-ஆமிடத்தில் குருவோடு சுபர்கள்கூடி யமரவும் பெற்ற ஜாதகர் கல்வி புகழ் தனம் செல்வ முடையவராம்.

வாய்மை

931



(இ-ள்.) 5-க்குடையவர் உச்சமடையவும், அவரை 2-க்குடையவர் பார்க்கவும், லக்கினத்தில் சுபக்கிரகங்கள் கூடிவும், நிற்கவும் பெற்ற ஜாதகன் உவமையில்லாத கொடையாள னவனும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy



[2] 3-க்குடையவர் பகைவர் வீட்டில் மாறி நிற்கவும், அவரைக் குரு பார்க்கவும் பெற்ற ஜாதகன் சத்தியமுடையவனும். மேற் கூறிய கிரகங்கள் தேவ வர்க்கத்தில் பலம் பெற்றால் தசரதன்போலும் அதிகக் கொடையாளனுவனும்.

சற்குணம்

932

(இ-ள்.) 5-10-க் குடையவர்கள் கூடி சனிக்கு 3-ஆமிடத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகரை வஞ்சமில்லாத கொடையாளி என்றும் தனவானென்றுங்கூறப்படும்.

[2] சந்திரனுக்கு 2-க்குடையவரும், குருவுங்கூடி சந்திரனுக்கு கேந்திரமடையவும் பெற்ற ஜாதகர் குணமும் சுகமுமுடையவராம். அன்றியும் இவனைக் கண்டவர்கள் மேகத்தைக் கண்ட மயிலைப் போலச் சந்தோஷப் படுவார்களாம்.

உதார குணம்

933



(இ-ள்.) 5-க்குடையவர் 10-ல் நிற்கவும், சனிக்கு 5-மிடத்தில் 11-க்குடையவர் உச்சமடைந்து நிற்கவும் பெற்ற ஜாதகர் கொடையாளியாயும், கல்வி கேள்வியில் வல்லவனுவனும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] 5-ஆமிடம் சனி வீடாகவும், அதிற் சந்திரன் அமரவும், சூரியன் உச்சமடையவும் பெற்ற ஜாதகர் கொஞ்சமேனும் கபடமில்லாதவராயும், கபடமுள்ளவர்களைத் தெரிந்து கொள்ளுஞ் சக்தி யுள்ளவராயும், நன்னடக்கை யுடையவராயும் கொடையாளியாயு மாவராம்.

934



(இ-ள்.) புதனும், 9-5-3க்குடையவர்களும் ஆகிய நால்வருங் கூடிக் கேந்திர மடைந்து நிற்கவும் பெற்ற ஜாதகரை விஷ்ணு அம்சமென்று உலகங் கூறுமாம்.



[2] சந்திரனுக்கு 3க்குடையவர் உச்சமடையவும், 10-9க்குடையவர்கள் கூடி 3ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் கொடையிற் பெருமையுந் தனமு முடையவராம்.

தருமமு மழகும்

935



(இ-ள்.) லக்கினாதிபதியும் 4க்குடையவருங் கூடி கேந்திர மடையவும், சந்திரன் நட்பு பெற்று மேற்கூறியவர்களை பார்க்கவும் பெற்ற ஜாதகர் இராஜ சுகமுடையவராம்.



[2] லக்கினாதிபதியும், 3க்குடையவருங் கூடிக் கேந்திரமடையவும், அவர்களை 9க்குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகன் வாகனுய்த் தர்ம குண முள்ளவராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கல்வியும் செல்வமும்

936

(இ-ள்.) லக்கினாதிபதியும் 10க்குடையவருங் கூடித் திரிகோணமடையவும், இவர்களைச் சனி பார்க்கவும் பெற்ற ஜாதகர் கல்விப் பொருள், செல்வப் பொருள் உடையவராம்.



[2] லக்கினாதிபதியும் 3க்குடையவருங் குருவும் ஆகிய மூவர்களும் உச்சமடையவும் பெற்ற ஜாதகர் சுகவானும்.

[3] லக்கினாதிபதி உச்சமடையவும், அவ்விராசியாதிபதி திரிகோணம் பெற்று நிற்கவும், 5க்குடையவர் மேற் கூறியவரைப் பார்க்கவும் பெற்ற ஜாதகன் அதிக தனவானும்.

பாக்கியமும் யோக்கியமும்

937

(இ-ள்.) லக்கினாதிபதி திரிகோண கேந்திர மடையவும், அவரைச் சுபக்கிரகங்கள் பார்க்கவும் பெற்ற ஜாதகர் பாக்கியம், பூமி நிதான முடையவராம்.

[2] சந்திரனும் 2-9-1க்குடையவர்களாகிய நால்வரில் 2-கிரகங்கள் ஆட்சி உச்சமடைந்து 3க்குடையவரோடு கூடி நிற்கப் பெற்ற ஜாதகன் நல்ல தர்மவானும், தனவானும்,நெறியுள்ளவனுமாவானும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கல்வியுஞ் செல்வமும்

938



(இ-ள்.) இலக்கினாதிபதியும் 9-2-க்குடையவரும் ஆகிய மூவரும் கூடி நிற்கவும் பெற்ற ஜாதகர் பூமி, தனம், உடையவராம்; அதில் உச்சமடைந்த ராசியாதிபதியே அதிக பலன் கொடுப்பாரெனக் கொள்கவும்.

[2] இலக்கினாதிபதி கேந்திர மடையவும், 4-க்குடையவர் திரிகோணமேறி நிற்கவும் பெற்ற ஜாதகன் பாக்கியவா னவனும். இதில் திரிகோண மடைந்தவ ரெவரோ அவரே பலன் கொடுப்பாரென்றும் கேந்திர மடைந்தவர்கள் பலன் வந்து வந்து மாறு மென்றுங் கொள்க.

கலைஞான தீரம்

939



(இ-ள்.) 2-3-க்குடையவர்கள் திரிகோண மடையவும், அவர்களைச் சந்திரன் பார்க்கவும் பெற்றஜாதகன் சோதிடம், சிற்பம், நன்னூல், கணிதம் இவைகளுணர்ந்த கலைவா னவனும்.

[2] 2-க்குடையவரும், சந்திரனுங் கூடி சரராசியில் நிற்கவும், அவ் விராசியாதிபதியும், இலக்கினாதிபதியுங் கூடிக் கேந்திர மடையவும், இவர்களைக் குரு பார்க்கவும் பெற்ற ஜாதகர் இலக்கணமும், இலக்கியமும் உணர்ந்தவராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கவிதா நிரம்

940

(இ-ள்.) லக்கினாதிபதி கேந்திர மடையவும், 2-க்குடையவர் சந்திரகேந்திரத்தில் நிற்கவும், 9-க்குடையவர் ஆட்சியடையவும் பெற்ற ஜாதகர் தமிழ் நூலுக்குச் சிறந்த ஆசிரியராம்.



[2] லக்கினாதிபதி ஆட்சி யடையவும், 2-க்குடையவரும் ஆட்சியில் நிற்கவும், குரு கேந்திர மடையவும் பெற்ற ஜாதகர் புலவருக்குச் சேகரராம்.

941

(இ-ள்.) லக்கினாதிபதி 11-ல் நிற்கவும், 2-க்குடையவர் சந்திரனுக்கு 2-ல் அமரவும், 9-க்குடையவரும் புதனுங் கூடி 3-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் தமிழ் நூலுக்கு நேயராம்.



[2] லக்கினாதிபதி ஆட்சி யடையவும், 2-ல் குரு நிற்கவும், குருவுக்குக் கேந்திரத்தில் 2-க்குடையவர் அமரவும் பெற்ற ஜாதகர் பல கலைக ளுணர்ந்த கல்வியும் உண்மையு முடையவராம்.



CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பூபாக்கியமுங் கல்வியும்

942

(இ-ள்.) லக்கினாதிபதி 9ல் நிற்கவும், 2க்குடையவர் புதனுக்கு கேந்திரமடையவும் பெற்ற ஜாதகர் அரச சமானராயும், இதிகாச முதலிய நூற்களை உணருங் கல்வி நிலைமை யுடையவராம்.



[2] 12-3க்குடையவர்களாகிய இருவருங் கூடித் திரிகோணமடையவும், 2க்குடையவர் புதனுக்கு 2ல் நிற்கவும் பெற்ற ஜாதகன் இவ் வுலகத்தில் கணித நூல் ஜோதிட நூல் வல்லவனாய் அதில் நிலையுள்ளவ னாவனும்.



தனபாக்கியமுங் கல்வியும்

943

(இ-ள்.) லக்கினாதிபதி 5க்குடையவரோடு கூடி 2ல் நிற்கவும், 2க்குடையவர் லக்கினத்தில் அமரவும், 4க்குடையவர் குருவுக்கு திரிகோண மடையவும் பெற்ற ஜாதகர் நிதி யுடையவராம்.



[2] லக்கினாதிபதி கேந்திரமடையவும், லக்கினத்திற் குருவும், 2க்குடையவரும் நிற்கவும் பெற்ற ஜாதகன் தனவானாயும் கல்வியிற் றேர்ந்தவனு மாவனும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வாகடவித்தையும் ஐஸ்வரியமும்

944

(இ-ள்.) லக்கினதிபதி 11க்குடைய வரோடு கூடி 2ல் நிற்கவும், 2க்குடைய வர் 3ல் அமரவும் பெற்ற ஜாதகர் கிருபை பொருந்திய வாகட நூலில் வல் லவ ராவராம்.

	இராசிச் சக்கரம்		
செவ்	சூரி சுக்	ல	

[2] லக்கினதிபதி 12ல் நிற்கவும், 12க்குடையவர் லக்கினத்தில் மாறி நிற்கவும், திரிகோணத்தில் ராகு அமரவும் பெற்ற ஜாதகன் மிகுந்த ஐஸ்வரிய முடையவனுவனும்.

	இராசிச் சக்கரம்		கே
ராகு			பு
			ல சூரி

945

(இ-ள்.) லக்கினதிபதி சந்திரனுக் குத் திரிகோண மடையவும், 2க்குடைய வர் கேந்திரத்தில் நிற்கவும், சந்திரன் கேந்திரமடையவும் பெற்ற ஜாதகர் பெருத்த பாக்கியமும் கல்வியு முடைய வராம்.

	செ	சுக்	
	இராசிச் சக்கரம்		
சந்			
		ல	

[2] லக்கினதிபதி கேந்திர மடையவும், 2-9க்குடையவர்கள் கூடிக் குருவுக்குத் திரிகோண மடையவும் பெற்ற ஜாதகர் பூமி, கல்வி, தவம் நிறைந்த வராம்.

	இராசிச் சக்கரம்		செ
			புத
	குரு	ல சுக்	

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சகல பாக்கியம்

946



(இ - ள்.) இலக்கினாதிபதியும், 2-க்குடையவரும் ஆட்சி யடையவும், 9-க்குடையவர் 4-ல் நிற்கவும், 10-க் குடையவர் இலக்கினத்தி லமரவும், பெற்ற ஜாதகர் கல்வியுஞ் செல்வமும் நிலை பெற்று வாழ்பவராம்.

[2] 9-11-க் குடையவர்கள் கூடி 3-ல்நிற்கவும் பெற்ற ஜாதகர் சத்தியம், தர்மம், பூமி, கல்வி, நற்குணமுடையவ ராவராம்.

தனமுங் கல்வியும்

947



(இ-ள்.) இலக்கினத்திற் சூரிய னிற்கவும், 2-ல் புதன் அமரவும், 9-க்குடையவர் 11-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் பொருளுடையவராம்.



[2] 1-3-4-க்குடையவர்களாகிய மூவருங் கூடி திரிகோணமடையவும், 2-க்குடையவர் குருவுக்கு 11-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் கல்வி செல்வம் ஆகிய 2-பொருளை யுடையவராம்.

தெய்வ பத்தி பாக்கியம்

948



(இ-ள்.) 4-க்குடையவர் 4-ல் நிற்கவும், 2-க்குடையவர் மேற்கூறியவருக்கு 2-ல் நிற்கவும், 9-க்குடையவர் 12-ல் அமரவும் பெற்ற ஜாதகர் மோக்ஷ பாக்கியம் நிலைக்கும் பொருட்டு வேதாகமங்களில் மனத்தை நிறுத்துவராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy



[2] 5-க்குடையவர் இலக்கினத்திற்கு 12-லும் குருவுக்கு திரிகோணத்திலும் நிற்கவும், 4-க்குடையவர் 9-ல் அமரவும், சந்திரன் குருவுக்கு கேந்திர மடையவும் பெற்ற ஜாதகருக்கு மேற்கூறிய பலனேயாம்.

கல்வி

954



(இ-ள்.) சர ராசியில் 3-க்குடையவர் நிற்கவும், அச் சர ராசிக்குடையவரும் லக்கினாதிபதியும் கூடி கேந்திர மடையவும் பெற்ற ஜாதகருக்கு மலையில் தீபம் வைத்ததுபோல் கீர்த்தியுங் கல்வியுமுண்டாம்.

இரட்சண்யம்

955

(இ-ள்.) 9-க்கு கேந்திரத்தில் 3-க்குடையவர் நிற்கவும், அவ்விராசிக்குடையவரோடு சந்திரன் கூடி கேந்திர மடையவும் அவரைச் சுக்கிரன் பார்க்கவும் பெற்ற ஜாதகர் இரட்சிக்கும் தன்மை யுடையவராம்.

956

(இ-ள்.) 11-க்குடையவரும் செவ்வாயுங் கூடி ஒரு ராசியில் நிற்கவும், அவ்விராசியாதிபதி உச்ச மடையவும், அவரைச் சுக்கிரன் பார்க்கவும் பெற்ற ஜாதகருக்குத் தனதான்யம் பெருகுமாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வீரத்துவம்

957

(இ-ள்.) 3க்குடையவரும், இலக்கினாதிபதியும் மாறி நிற்கவும், இவர்களைக் குரு பார்க்கவும் பெற்ற ஜாதகர் வீராதி வீரமுடையவராம்.

கல்வி

958



(இ-ள்.) 4-2க்குடையவர்கள் கூடி இலக்கினத்தில் நிற்கவும், அவரைப் புதன் பார்க்கவும் பெற்ற ஜாதகர் கல்வியிற் சிறந்தவராம்.

தனாதி வாகனம்

959



(இ-ள்.) 3-2-11க்குடையவர்கள் ஆகிய மூவரும் 9ல் நிற்கவும், அவர்களை 5க்குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகர் சுகம், தனம், வாகனமும் தந்தைக்கு மேல் யோகமுமுடையவராம்.

வாய்மை

960



(இ-ள்.) 7-2க்குடையவர்கள் கூடி 4-ஆமிடத்தில் நிற்கவும், 4க்குடையவர் உச்சமடையவும், அவரைச் சுபர்கள் பார்க்கவும் பெற்ற ஜாதகர் நீதியும் உறுதியுமுள்ளவராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சற்குணம்

961



(இ-ள்.) இலக்கினாதிபதி ஆட்சியடையவும், 5-ஆமிடத்திற் சந்திரனுக்கு 4க்குடையவர் நிற்கவும், அவரைக் குரு பார்க்கவும் பெற்ற ஜாதகர் சற்குணமுடையவராம்.

புண்ணியம்

962

(இ-ள்.) சந்திரனுக்கு 3க்குடையவர் உச்சமடையவும், அவ்வுச்ச னின்ற ராசியாதிபதி 5-ஆமிடத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகர் புண்ணியகுணமுடையவராம்.

ஆசாரம்

963



(இ-ள்.) செவ்வாயும், 3க்குடையவரும் கூடி 5ல் நிற்கவும் அவர்களைப் பாபர்கள் பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகர் ஆசார முடையவராம்.

வைணவ பக்தி

964



(இ-ள்.) 3க்குடையவரை 2க்குடையவர் பார்க்கவும், இலக்கினாதிபதி 2ல் நிற்கவும், அவரை புதன் பார்க்கவும் பெற்ற ஜாதகர் நாராயணன் திருவடிக் கடிமை யாவராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கீர்த்தி



965

(இ-ள்.) குரு லக்கினத்தில் நிற்கவும், அவரை 5-2-9க்குடையவர்கள் 7ல் இருந்து பார்க்கவும் பெற்ற ஜாதகர் கீர்த்தி யுடையவராம்.

வீரத்துவம்



966

(இ-ள்.) 4-ஆமிடத்திற் செவ்வாய் ஆட்சி யடையவும், அவரைக் குரு உச்சமடைந்து பார்க்கவும் பெற்ற ஜாதகர் பொல்லாதவர்களுக்குச் சிம்மம் போன்ற அச்சமில்லாத ஆண்மையுடையவராம்.

பல பாக்கியம்



967

(இ-ள்) குருவும், இலக்கினதிபதியுங் கூடி 4ல் நிற்கவும், அவர்களை 4க்குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகர் கல்விப் பொருள், ஆளடிமை, செல்வமுடையவராம்.

கீர்த்தி

968

(இ-ள்.) இலக்கினதிபதி 9ல் நிற்கவும், 9க்குடையவர் 4ல் நிற்கவும், அல்லது சந்திரனுக்கு 3ல் 9க்குடையவர்நிற்கவும் பெற்ற ஜாதகர் கீர்த்தியை நிலைக்கச் செய்பவராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

969



(இ-ள்.) இலக்கினாதிபதி கேந்திர மடையவும், 5-ஆமிடத்திற் குரு நிற்கவும் 12க்குடையவர் குருவுக்குக் கேந்திரமடையவும் பெற்ற ஜாதகருக்கு மேற்கூறிய பலனும்.

சுதேசவாசி

970

(இ-ள்.) 9-4க்குடையவர்கள் கூடி இலக்கினத்தில் நிற்கவும், இலக்கினாதிபதியும் 2க்குடையவருங் கூடி உபய ராசியில் நிற்கவும், அவர்களோடு உபய ராசியாதிபதிகளுங் கூடி நிற்கவும் பெற்ற ஜாதகர் சுதேச வாசியாம்.

[2] இலக்கினாதிபதி ஸ்திர ராசியில் கேந்திர மடையவும், அவரை குரு பார்க்கவும், அல்லது இலக்கின ஸ்திர ராசியாயிருக்கவும், அதில் அதற்குரியவர்கள் நிற்கவும், அவர்களைச் சுபக் கிரகம் பார்க்கவும் பெற்ற ஜாதகர் மேற்கூறிய பலனுடையவராம்.

971

(இ-ள்.) இலக்கினம் சர ராசியாயிருக்கவும், அதற்குடையவர் சர ராசியில் நிற்கவும், அவரை சர ராசிக்குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகன் தனவானாய்ச் சுதேச வாசியாம்.

[2] இலக்கினம் ஸ்திர ராசியாயிருக்கவும், அதற்குடையவர்கள் உபய ராசியாதியோடு கூடி உபய ராசியில் நிற்கவும் பெற்ற ஜாதகர் மேற்கூறிய பலனுடையவரேயாம்.

சுப யோக்கியம்

972

(இ-ள்.) இலக்கினம் சர ராசியாயிருக்கவும், அந்த இலக்கினாதிபதி 2க்குடையவரோடு கூடிச் சர ராசியில் கேந்திர மடையவும் பெற்ற ஜாதகன் இந்திரனைப்போல் தன் மனையாளோடும் அன்னிய மனையாளோடும் வாழ்வானும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அன்னியவாசன்

973



(இ-ள்.) ஸ்திர ராசி லக்கினமாயிருக்கவும், அதற்குரியவர் சர ராசியில் தனித்து நிற்கவும், லக்கினத்தில் ராகு நிற்கவும், 11-ல் செவ்வாய் அமரவும் பெற்ற ஜாதகன் அன்னிய தேசம் போய்ச் சுக மடைவானும்.

974



(இ-ள்.) லக்கினம் உபய ராசியாகவும், அதற்குரியவர் உபய ராசியில் 12-க்குடையவரோடு கூடி லக்கினத்தில் நிற்கவும், செவ்வாய் 4-க்குடையவரோடு கூடி ஒரு ராசியில் நிற்கவும் பெற்ற ஜாதகன் தனக்குரிய பூமியை விற்றும் ஊரையும் விட்டு அன்னிய தேசம் போய் பாழ் நிலத்தை வாங்குவனும்.

அயோக்கியதாமிசை

975



(இ-ள்.) லக்கினுதிபதி 6-8-12-ல் நிற்கவும், 3-க்குடையவர் 8-ல் அமரவும், 9-க்குடையவர் 6-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் கர்மத்தினுல் நிந்தைகளையே பொருளாகக் கொள்பவராம்.

976



(இ-ள்.) லக்கினுதிபதியும், 2-க்குடையவருங் கூடி 6-8-12-ல் நிற்கவும், 3-க்குடையவர் 8-ல் அமரவும், 9-க்குடையவரும், 8-ல் பலஹீன மடைந்திருக்கவும் பெற்ற ஜாதகன் கீர்த்தியை எக்காலமு மடையானும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

977

(இ-ள்.) லக்கினாதிபதியும், 9-க்குடையவருங் கூடி 3-ல் நிற்கவும், அவர்களைச் சுபர்கள் பார்க்கா திருக்கவும், 6-க்குடையவர் கேந்திர மடையவும், சனி சிறப்படைந்து நிற்கவும் பெற்ற ஜாதகன் ஒரு காசு பெறாது கையில் ஓடுடையவனாவனும்.

978

(இ-ள்.) சந்திரனுக்கு 4-க்குடையவரும், 12-க்குடையவருங் கூடி 8-ல் நிற்கவும், 8-க்குடையவர் 6-ல் அமரவும், 6-க்குடையவர் 12-ல் நிற்கவும் பெற்ற ஜாதகன் உலகோர் வாந்தி செய்யத்தக்க பாவனைபோலிருந்து அந்தரங்கத்தில் கடவுளுக்கன்பனா யிருப்பனும்.

979

(இ-ள்.) சந்திரன் நீச மடையவும், அவரை சனியும், ராகுவும் பார்க்கவும், சுபக் கிரகங்களும், புண்ணிய கிரகங்களும் இவர்களைப் பாராதிருக்கவும் பெற்ற ஜாதகன் ஒரு காசு பெறாதவனாயும், துர்க்குண முடையவனு மாவனும்.

980

(இ-ள்.) லக்கினாதிபதி பகைபெற்று நிற்கவும், 3-12-க்குடையவர்கள் கூடி நின்ற ராசி நட்பும் நீசமுமாய் நிற்கவும், இவர்களைக் குரு பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகன் நீச குணத்தையுடைய கேவலனும்.



CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

981



(இ-ள்.) 8-க்குடையவர் 4-க் குடைய வரோடு கூடி இழிவடைந்து 3-ல் நிற்கவும், குரு 12-ல் நிற்கவும், மற்ற பாபர்களும் 3-ம் இடத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகன் அக்கினி குணமுடையவனும்.

982



(இ-ள்.) பாபர்கள் 4-ம் இடத்தில் நீசமடையவும், அந் நீச ராசியாதிபதி பகை பெற்று நிற்கவும், அவரை 6-க் குடையவர் பார்த்தும், நல்லோர்கள் பாராதிருக்கவும் பெற்ற ஜாதகன் பூமி, பொருள் முழுது மிழந்து அலைவானும்.

983

(இ - ள்.) 4-க் குடையவர் 8-க் குடையவர் பார்வையைக் கொடுமையாய் அடைந்து 3-ம் இடத்தில் நீசமடையவும் பெற்ற ஜாதகன் நல்லொழுக்க மில்லாத துர்க்குண முடையவனும்.

984



(இ-ள்.) 9-க்குடையவர் 12-ல் நிற்கவும், 12-க் குடையவர் 4-ல் அமரவும், 3-க் குடையவர் பகை பெற்று நிற்கவும், பாபர்கள் இலக்கினத்தை பார்க்கவும் பெற்ற ஜாதகன் தாய் தந்தை செய்த பாபமே உருவாகக்கொண்டுவந்தவனும்.

புறநடை

985

(இ-ள்.) மேற் கூறிவந்த பாபபலன்கள் நீங்கும் விதங் கூறுகின்றனம். அதாவது மேற் கூறிவந்த கிரகங்களை குரு பார்த்தாலும், அல்லது இலக்கினத்தைப் பார்த்தாலும், முற் கூறிய தோஷங்கள் நீங்கிப் புகழ் பெறுவனும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பூரண வாயுள்

986

(இ-ள்.) சனிக்கு 4-ல் 8-க்குடையவர் நிற்கவும், சனிக்கு 2-ல் சந்திரன் அமரவும், 8-க்குடையவர் நட்படைந்து இலக்கினத்தைப் பார்க்கவும் பெற்ற ஜாதகர் மாரகம் அடையாரென்றும் ஒருவாறு கூறப்படும்.

	ல		சனி
	இராசிச்		சந்
	சக்கரம்		
			செவ்

[2] 3-ம் இடத்தில் 8-க் குடையவர் நிற்கவும், 8-க் குடையவரைக் குருவும், சுக்கிரனும் முன்னும் பின்னுங் கட்டி நிற்கவும், சந்திரன் சுக்கிரனுக்கு 7-ல் அமரவும் பெற்ற ஜாதகர் 90-வயதுள்ளவராம்.

சூரி	சுக்		
குரு	இராசிச்		
ல	சக்கரம்		
		சந்	

987

(இ-ள்.) சனிக்கு 4-ல் சூரியன், செவ்வாய் இல்லாதிருக்கவும், சந்திரன் 6-8-12-லில்லாமல் நிற்கவும், 12-2-க் குடையவர்கள் 6-துர்ப்பலமின்றிச் சுபக்கிரகங்களாய் நிற்கவும் பெற்ற ஜாதகர் பூரண வயதுடையவராம்.

[2] கேந்திரத்திற்குரிய கிரகங்களெல்லாந் திரிகோணமடையவும், சனியோடு பாபர்கள் கூடாதிருக்கவும் பெற்ற ஜாதகருக்கு 100-வயது கூறியது.

988

(இ-ள்.) செவ்வாய் சனியைப் பார்க்காதிருக்கவும், சனியைக் குரு பார்க்கவும், சந்திரனோடு 3-க் குடையவரும், இலக்கினாதிபதியுங்கூடிச் சுபர் மனையில் நிற்கவும், அதில் 3-க் குடையவர் நட்படைந்து நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு 100-வயதாம்.

சனி			ல
	இராசிச்		குரு
	சக்கரம்		
சந் சூ-பு	செ		

[2] 8-க்குடையவர் சந்திர சுபாம்சத்தில் நிற்கவும், சந்திரனின்ற ராசியாதிபதியும், 8-க்குடையவர் நின்ற ராசியாதிபதியும் பலமடைந்து நிற்கப் பெற்ற ஜாதகருக்கு 100-வயது கூறப்படும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

989



(இ-ள்.) சந்திரனுக்கும் சனிக்கும் 8-ம் இடத்திற்செவ்வாயும், புதனும் நிற்கவும், 8-க்குடையவர் 12-ல் அமரவும், 7-லும் 4-ம் இடத்திலும் சுபக்கிரகங்கள் நிற்கவும், அவர்களைத் தீயர்கள் பார்க்கா திருக்கவும் பெற்ற ஜாதகருக்கு 100-வயது கூறப்படும்.

[2] 8-க்குடையவருக்கு 2-பக்கமும் சுபர்கள் நிற்கவும், சனிக்கு 7-அல்லது 4-ல் சுக்கிரனும், குருவும் நிற்கவும் சூரியனுக்கு 12-ல் சந்திரன் அமரவும் பெற்ற ஜாதகருக்கு பூரண வயதென்றுங் கூறியது.

990



(இ-ள்.) சனி கேந்திர மடையவும், குரு திரிகோணத்தில் நிற்கவும், 8-க்குடையவர், சந்திரன், சுக்கிரன் ஆகிய மூவர்கள் கூடிக் குருவுக்கு கேந்திர மடையவும் பெற்ற ஜாதகர் 100-வயதுடையவராம்.

991



(இ-ள்.) 8-க்குடையவர் சனியாயிருந்து 3-ஆமிடத்தில் நிற்கவும், அச்சனிக்கு இரண்டு பக்கமும் சுபக்ரகம் நிற்கவும், லக்கினத்திற்கு இரண்டு பக்கமும் சுபக்கிரகங்கள் நிற்கவும், குரு 10-ல் அமரவும் பெற்ற ஜாதகர் நோயில்லாது 100-வயதிருப்பாராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

992

(இ-ள்.) லக்கினத்திற்கு குரு, சுக்கிரன், சந்திரன் ஆகிய மூவர்கள் நிற்கவும், 8-க்குடையவர் 11-க்குடையவரோடு கூடி ஆட்சி உச்ச மடையவும், சனி 6-ஆமிடத்தில் நிற்கவும், லக்கினத்திற்கு 3-ல் 9-க்குடையவர் அமரவும் பெற்ற ஜாதகருக்கு 100-வயது பொருந்தி முத்தி பெறுவாராம்.

புத	சூரி செ		சனி
	இராசிச்		
ல-கு சு-சந்	சக்கரம்		

993

(இ-ள்.) 8-ஆமிடத்தில் 11-9-க்குடையவர்கள் நிற்கவும், சனி, குருவுக்கு திரிகோண மடையவும், 8-6-க் குடையவர்கள் சுக்கிரனுக்கு 11-ல் அமரவும், குரு 4-க்கு கேந்திர மடையவும் பெற்ற ஜாதகர் செல்வமும், புத்திரரும் பொருந்தி 87-வயதிருப்பவராம்.

புத	சந் சுக்		குரு
செ சனி	இராசிச் சக்கரம்		
			ல

994

(இ-ள்.) 8-க் குடையவர் சனியாகி, 4-11-2-க் குடையவர்கள் ஆகிய மூவருடன் கூடி கேந்திர மடையவும், 8-ஆமிடத்தில் புதன் நிற்கவும், சந்திரனோடு குருவுங்கூடி கேந்திரமடையவும் பெற்ற ஜாதகர் நோயில்லாது 90-வயதிருந்து சிவபத மடைவாராம்.

புத	இராசிச்		ல
சனி சு-கு	சக்கரம்		
		சந் குரு	

[2] 11-க்குடையவர் திரிகோண மடையவும், 3-ஆமிடத்தில் குரு நிற்கப் பெற்றாலும் மேற்கூறிய பலனேயாம்.

995

(இ-ள்.) 3-ஆமிடத்தில் சனி நிற்கவும் 8-க்குடையவருக்கு இரண்டு பக்கமும் சுபர்கள் நிற்கவும், லக்கினத்திற்கு இரண்டு பக்கமும் சுபர்கள் அமரவும், 8-ஆமிடம் குருவுக்கு 11-ஆமிடமாகவும், 12-க்குடையவரும், பாவர்களும் கேந்திரம் அடையவும் பெற்ற ஜாதகருக்கு 90-வயதென்றுங் கூறியது.

குரு ராகு		சந்	ல சூரி
	இராசிச்		புத
	சக்கரம்		சனி
செ			சுக் கே

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

996

(இ-ள்.) சனியும், சந்திரனுக்கு 8க்குடையவரும் ஆகிய இருவரும் சந்திர கேந்திர மடையவும், இலக்கினத்திற்கு 11ல் சூரியன் அமரவும், சந்திர கேந்திரத்தில 11க்குடையவர் நிற்கவும், 8க்குடையவர் 12ல் அமரவும், தீயர்கள் கேந்திரமடையவும் பெற்ற ஜாதகருக்கு 100 வயதிருக்கினும் 87-வயது வரையில் காலன் எதிரில் வாரானென்றுங் கூறியது.

சுக்		சந்	
ல ராகு	இராசிச்		
புத	சக்கரம்		கே சனி
சூ	செவ்	குரு	

997

(இ-ள்.) 8க்குடையவர் ஆட்சியடையவும், சனி கேந்திரத்தில் நிற்கவும் சந்திரன் 11ல் அமரவும், இலக்கினாதிபதி கேந்திர மடையவும், பாபர்களுக்குத் துணையாகச் சுபர்கள் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு83-வயதென்றுங் கூறியது.

புத	சு செ சூரி		
	இராசிச்		சந் கே
குரு ராகு	சக்கரம்		
சனி			ல

998

(இ-ள்.) இலக்கினத்தில் சுக்கிரனுங் குருவுங் கூடி நிற்கவும், 10க்குடையவர் சுபர்களுடன் கூடி அமரவும்,சனி 6-8-12ல் நிற்கவும், 8-12க்குடையவர்கள் சுபர்களாய் நிற்கவும், 12க்குடையவர் 3ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் 90-வயதிருந்து கடவுள் திருவடி சேர்வாராம்.

	இராசிச்		
	சக்கரம்		
புத		ல-சு கு சந்	சனி

999

(இ-ள்.) 8க்குடையவர் ஆட்சியில் நிற்கவும், சனி ஆட்சி உச்சம் பெற்றுக் கேந்திர மடையவும், அவரை சுபர்கள் நோக்கவும் பெற்ற ஜாதகருக்கு 100-வயதென்றுங் கூறியது.

சூரி கே	ல-சந் பு-சு		
குரு	இராசிச்		
	சக்கரம்		
	செவ்	சனி	ராகு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] 8க்குடையவருக்கு 2-பக்கமும் சுபர்கள் நிற்கவும், சனி 3ல் அமரவும், 2-7க்குடையவர்கள் நட்படையவும் பெற்ற ஜாதகருக்கு 100-வயது பூரணமாய்க் கூறவும்.

1000

(இ-ள்.) 3-8க்குடையவர்கள் ஆட்சியடையவும், இவர்களைச் சுபர்கள் பார்க்கவும், சுக்கிரன் இலக்கினத்தில் நிற்கவும், அவரையும் சுபர்கள் பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு 100-வயதென்றுங் கூறியது.

[2] 8க்குடையவர் 2ல் நிற்கவும், 7க்குடையவர் இலக்கினத்தில் நிற்கவும், 9ல் குரு, சந்திரன் முதலிய சுபர்கள் அமரவும், 8க்குடையவரைக் குரு பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு 100-வயது கூறியது.

1001

(இ-ள்.) 8-6க்குடையவர்கள் கூடி 12ல் நிற்கவும், இலக்கினத்திற்கு குரு, சுக்கிரன் அமரவும் பெற்ற ஜாதகருக்கு 100-வயதென்றுங் கூறியது.



[2] சந்திரன், சுக்கிரனுக்கு 7ல் நிற்கவும்,குரு இலக்கினத்தில அமரவும் 7க்குடையவர் 4ல் நிற்கவும், சனி நட்படையவும், பாபர்கள் கூடாது, 8க்குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு 100-வயதென்றுங் கூறியது.

1002



(இ-ள்.) இலக்கினத்தில் சுபர்கள் நிற்கவும், குருவும், 8க்குடையவருங்கூடி 2ல் அமரவும், சந்திரன் 8க்குடையவரை பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு 100-வயதென்றுங் கூறியது.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] சனி 8-க் குடையவர் சந்திரன் லக்கினாதிபதி ஆகிய நால்வர்களும் ஆட்சி உச்ச மடையவும் பெற்ற ஜாதகருக்கு 100-வயதென்றும் கூறியது.

1003

(இ-ள்.) 8-க் குடையவரும் சனியுங் கூடி கேந்திர மடையவும், சந்திரன் திரிகோணத்தில் நிற்கவும், லக்கினத்திற் குரு நிற்கவும், லக்கினாதிபதி திரிகோணமேறி நிற்கவும், 12-க்குடையவர் 6-8-12-ல் அமரவும் பெற்ற ஜாதகர் 70-வயதில் மோட்சமடைவராம்.

செவ் சனி	சூரி	புத	
	இராசிச்		
சந்	சக்கரம்		
			ல குரு

1004

(இ-ள்.) 8-க்குடையவர் திரிகோண மடையவும், 12-க்குடையவர் ஆட்சியில் நிற்கவும், லக்கினாதிபதி லக்கினத்தில் நிற்கவும், சனி 12-ல் அமரவும், சந்திரன் கேந்திர மடையவும் பெற்ற ஜாதகருக்கு 70 வயதில் மோட்ச முண்டாம்.

		செவ்	
	இராசிச்		
	சக்கரம்		சூரி சனி
சந்			ல புத

1005

(இ-ள்.) லக்கினாதிபதியும், 8-க்குடையவரும் ஒருவராகி கேந்திர மடையவும், 12-க்குடையவர் 8-ல் நிற்கவும், 2-11-க் குடையவர்கள் கூடி திரிகோண மடையவும், 3-ஆமிடத்திற் குருவிருந்து சனியைப் பார்க்கவும் பெற்ற ஜாதகர் 70-வயதிருந்து மோட்ச மடைவராம்.

	சுக்	புத	சூரி செவ்
	இராசிச்		
	சக்கரம்		சனி
குரு		ல	

1006

(இ-ள்.) சனி குருவுக்குத் திரிகோண மடையவும், 8-12-க்குடையவர்கள் 6-ல் நிற்கவும், சுக்கிரன் 8-ல் அமரவும், குரு 4-ல் நிற்கவும், 1-க் குடையவர் கேந்திர மடையவும் பெற்ற ஜாதகர் 70-வயதில் மோட்ச மடைவராம்.

புத	சுக்		
சூரி செவ்	இராசிச்		
	சக்கரம்		சனி
குரு			ல

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1007

(இ-ள்.) லக்கினாதிபதி கேந்திர மடையவும், 8-க் குடையவர் 10-ல் நிற்கவும், 8-ல் 12-க் குடையவர் அமரவும், சந்திரனுங் குருவுங் கூடி ஒரு ராசியில் நிற்கவும், கேது 2-ல் அமரவுல் பெற்ற ஜாதகர் 66-வயதில் மோட்ச மடைவராம்.

புத	சூரி ராகு		செவ்
குரு சந்	இராசிச்		
	சக்கரம்		
		கே	ல

1008

(இ - ள்.) 8-ஆமிடத்தில் சுபர்கள் நிற்கவும், சனி நட்பில் நிற்கவும், 8-2-க் குடையவர்கள் கூடி 4-ல் அமரவும், அவர்களைக் குரு பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு 86-வயதென்றுங் கூறியது.

	ல	சனி	
	இராசிச்		செ சுக்
	சக்கரம்		
	குரு சந்		

[2] சனிக்கு 2-பக்கங்களிலும் 6-ஆமிடத்திலும் சுபர்கள் நிற்கவும், 8-க் குடையவர் ஆட்சியில் அமரவும், குரு 4-ல் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு 90-வயதென்றுங் கூறியது.

சந்	ல செ		
	இராசிச்		குரு
	சக்கரம்		
	சுக்	சனி	புத

1009

(இ-ள்.) 8-க் குடையவருக்கு 12-ல் சந்திரன் நிற்கவும், அவரைக் குரு பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு 88-வயதென்றுங் கூறியது.

[2] 8-12-6-க் குடையவர்கள் ஆகிய மூவர்களும் அவரவர்கள் 4-க்கு 4-ஆக அமரவும், அவர்களைச் சுபர்கள் பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகருக்கு 83-வயதென்றுங் கூறியது.

சுக்	புத		ல குரு
	இராசிச்		
	சக்கரம்		
செவ்			சனி சந்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1010

	ல செ சனி		குரு
	இராசிச் சக்கரம்		
பு			

(இ-ள்.) 3க்குடையவர் 10ல் நிற்கவும், குரு 3ல் அமரவும், சனியும் 8க்குடையவரும் இலக்கினத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு 90-வயதென்றுங் கூறியது.

[2] சந்திரன் வலுத்து நிற்கவும், 8க்குடையவர் சுபர்வீட்டில் அமரவும், சுபர் வீட்டில் சனி நிற்கவும், இலக்கினாதிபதி ஆட்சியடையவும் பெற்ற ஜாதகருக்கு 100-வயதென்றுங் கூறியது.

1011

சந்			புத சுக்
	இராசிச் சக்கரம்		சனி சூ-ரா
கே			
	குரு	ல	செ

(இ-ள்.) பாபர்களெல்லாம் வலிகுறைந்து நிற்கவும், சுபர்களெல்லாம் வலுத்து நிற்கவும், சனி, சந்திரன் வீட்டிலும், அல்லது சூரியன் வீட்டிலாகிலும் மேற்கூறியவர்களுடன் கூடி நின்றாலும், 6-8-12 சுபர்களுடைய வீடாயிருக்கவும், குரு பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு 100-வயது பூரணமாம்; தவறினால் இந்நூலைக் கிழிக்கப்படுமாம்.

1012

		சு-கு சந்	பு
	இராசிச் சக்கரம்		சனி
ல			
	குரு		

(இ-ள்.) இலக்கினாதிபதி கேந்திரமடையவும், 8க்குடையவர், சந்திரன், சுக்கிரனோடு கூடித் திரிகோணத்தில் நிற்கவும், குரு 11லிருந்து சனியையும் 8க்குடையவரையும் சூரியனையும் பார்க்கவும், 6ல் 12க்குடையவரேனும், புதனாகிலும் நிற்கவும் பெற்ற ஜாதகர் 90-வயதிருந்து மோக்ஷமடைவனும்.

CC-0 In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1013



(இ-ள்.) 3-ஆமிடத்திற் சனி நிற்கவும், சந்திரன் இலக்கினத்தில் நிற்கவும், சுபர்கள் 11ல் அமரவும், 8-6க்குடையவர்கள் சுபர்களாய் நிற்கவும், குரு திரிகோணமடையவும் பெற்ற ஜாதகர் வேளாள குலத்திற் பிறந்து 100-வயதிருப்பராம்.

1014



(இ-ள்.) குரு கேந்திர மடையவும், குருவுக்கு திரிகோணத்தில் இலக்கினாதிபதி நிற்கவும், அல்லது இலக்கினாதிபதி தனியாகத் திரிகோண மடையவும், சந்திரன் 6ல் நிற்கவும், 12க்குடையவர் 4ல் அமரவும், இலக்கினத்தைக் குரு பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு 100-வயதும் மகா விஷ்ணு கிருபையு முண்டாம்.

1015



(இ-ள்.) கேந்திரங்களில் குருவிருந்து சனியைப் பார்க்கவும், 8க்குடையவர் திரிகோண கேந்திர மடையவும், 3-ஆமிடத்தில் சந்திரனும், 2க்குடையவருங் கூடி நிற்கவும் பெற்ற ஜாதகர் 90-வயதிருப்பராம்.

1016



(இ-ள்.) 6க்குடையவர் சந்திரனோடும் 8க்குடையவரோடுங் கூடி ஆட்சியடையவும், 12க்குடையவர் செவ்வாயோடுகூடி 10ல் நிற்கவும், இலக்கினாதிபதி 11ல்நிற்கவும் பெற்ற ஜாதகர் 90-வயதுடையவராம்,

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1017

(இ-ள்.) முன்னுரைத்த ஆயுர்பாகமெல்லாம் பிசகில்லை யென்றுங் கூறியது. ஆனல், இதற்கு உயிர்த்திசையும் உடற்றிசையும் விரோதமாகி நிறைந்த மரணம் வந்து நேர்ந்தாலும் 60-வயதுக்கு குறைந்து மாரக மடையாரென்றும் அன்றியும், 50-வயது கடந்தால் நிறைவயதென்றுங் கூறப்படும். இதில் 60க்குள் இறப்பவரெல்லாம் அற்ப வயதுடையவராம்.

1018



(இ-ள்.) செவ்வாய் புதன் வீட்டிலும், சுக்கிரன் சந்திரன் வீட்டிலும்நிற்கவும், சனி ஆட்சி பெற்று கேந்திர மடையவும், சந்திரன், குரு, ராகு ஆகிய மூவர்களும் 6ல் நிற்கவும், புதன் 8ல் அமரவும் பெற்றஜாதகர் 80-வயதுடையவராம்.

இரண்டாம் பாவகம்

1019

குரு வணக்கம்

(இ-ள்.) கற்பகத்தருக்கள் நிறைந்த திருவேரகப் பதியில் வாழும் இலட்சுமி தங்கிய புயங்களையுடைய வீரப்ப பிள்ளை யென்னும் என தாசிரியருடைய திருப்பாதங்களைப் பணிந்து 2-ஆம் பாவகத்தைக் கூறுவதற்குச் சரஸ்வதி சந்ததமும் என் நாவினிடத்து வசிக்கின்ருளென்பதாம்.

1020

(இ-ள்.) 2-ம் பாவகத்தினல் எவர்களும் நினைத்து வந்தபடி கூறவும், வாக்கு நிலைமையும், வித்தை, தனம், நேத்திரம், வன்மை, குடும்பம்,யோகம்,மங்களம், மரணம், முதலியவற்றை விபரமாய்க் கூறுகின்றனம் கேட்பாயாக.

தன பலன்

1021

(இ-ள்.) 2-9க்குடையவர்கள் கூடிக் கேந்திரமடையவும், அவர்களை இலக்கினதிபதி பார்க்கவும் பெற்றஜாதகர்சில காலந் துன்பமுற்று பிறகு தனவானயிருப்பாராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1022

(இ-ள்.) 1-11-2க் குடையவர்கள் ஆகிய மூவர்களும், அவரவர்களுக்குத் திரிகோண கேந்திர மடையவும் பெற்ற ஜாதகன் தனவானும்.

ல			குரு
	இராசிச் சக்கரம்		
சனி			செவ்

[2] 11க்குடையவர் 2ல் நிற்கவும், 9ல் 2க்குடையவர் அமரவும், 9க்குடையவர் 9ல் நிற்கவும் பெற்ற ஜாதகன் தனவானும்.

	இராசிச் சக்கரம்		சந் குரு
பு	ல		

1023

(இ-ள்.) லக்கினாதிபதியோடு 2க்குடையவர் கூடி நிற்கவும், செவ்வாய் 9ல் அமரவும், அவரை சுக்கிரன் பார்க்கவும், குரு லக்கினத்தை நோக்கவும் பெற்ற ஜாதகன் பொருள் மிகுந்த தனவானும்.

			ல-சந் புத
செ	இராசிச் சக்கரம்		
			சுக்
குரு			

[2] 3-2க்குடையவர்கள் கூடி 9ல் நிற்கவும், அவர்களைக் குரு பார்க்கவும் பெற்ற ஜாதகர் மேற்கூறிய யோக முடையவரேயாம்.

	ல		குரு
	இராசிச் சக்கரம்		
புத சுக்			

1024

(இ-ள்). 2-9-1-12க் குடையவர்கள் ஆகிய மூவர்களுங் கூடி இலக்கினத்தில் நிற்கவும், சந்திரன் 9லிருந்து 6க்குடையவரைப் பார்க்கவும், செவ்வாய் 11ல் நிற்கவும், குரு கேந்திரமேறித் தனது 4-ஆமிடத்தைப் பார்க்கவும் பெற்ற ஜாதகர் மிகுந்த பாக்கியமும் சதுரங்காதி சேர்க்கையும் இராஜரீகமும் உடையவராம்.

		சந்	குரு
	இராசிச் சக்கரம்		செ
	சனி		பு-கு சு-ல

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1025

(இ-ள்.) 2-3-க்குடையவர்கள் கூடி லக்கினத்தில் நிற்கவும், லக்கினுதிபதியும், 5-க்குடையவருங் கூடி 2-ல் அமரவும், 9-க்குடையவரை குரு பார்க்கவும் பெற்ற ஜாதகன் செல்வவா னென்றுங் கூறியது.

[2] 2-க்குடையவர் லக்கினத்தில் நிற்கவும், லக்கினுதிபதி தனியாக 4-ல் அமரவும், புதன் சந்திரனேடு கூடி கேந்திர மடையவும் பெற்ற ஜாதகர் செல்வ முடையவராம்.



1026

(இ-ள்.) 2-9-க்குடையவர்கள் சந்திரனுக்கு 2-ல் நிற்கவும், 4-7-க்குடையவர்கள் லக்கின கேந்திர மடையவும், 9-க்குடையவருக்கு கேந்திரத்தில் லக்கினுதிபதி நிற்கவும், 3-க்குடையவர் 7-ல் அமரவும் பெற்ற ஜாதகருக்குச் சுகமாகிய மனைவியும் மிகுந்த பாக்கியமும் உண்டாகிக் கொடையாளியு மாவராம்.



1027

(இ-ள்.) 9-க்குடையவர் 10-ல் நிற்கவும், 2-க்குடையவர் லக்கினத்தில் நிற்கவும், லக்கினுதிபதி கேந்திர மடையவும், 4-க்குடையவர் 12-ல் அமரவும், லக்கினத்திற்கு 2-பக்கமும் சுபர்கள் நிற்கவும் பெற்ற ஜாதகர் துயர மில்லாத தனவந்தராம்.



CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1028

(இ-ள்.) 2-க்குடையவருஞ் சந்திரனும் 12-ல் நிற்கவும், 7-க்குடையவர் 3-ல் நிற்கவும், 9-க்குடையவர் குருவுக்குத் திரிகோண மடையவும், குரு 11-ல் அமரவும், 11-க்குடையவர் ராகுவோடு கூடி 4-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் பொருளைத் தருமஞ் செய்து புகழ் பெறுவராம்.

சுக் ராகு			
சூரி புத	இராசிச்		
	சக்கரம்		
ல	சந் சனி	குரு	கே

1029

(இ-ள்.) 2-க்குடையவர் 4-11-க்குடையவர்களோடு கூடிக் கேந்திரமடையவும், 9-க்குடையவர் 12-ல் நிற்கவும், 9-ல் 10-க்குடையவர் அமரவும், 4-ம் இடத்தில் ராகுவோடு சந்திரன் கூடி நிற்கவும் பெற்ற ஜாதகன் சிம்மம்போலிருந்து குன்றாத வாழ்வுடையவனும்.

செ	கே		குரு
	இராசிச்		ல கு-சு
	சக்கரம்		
		சந் ராகு	

1030

(இ-ள்.) 9-க் குடையவர் ஆட்சியடைந்த சூரியனேடும், சந்திரனேடுங் கூடி நிற்கவும், 10-ம் இடத்தில் ஆட்சி பெற்ற சுக்கிரனேடு குருவுஞ் செவ்வாயுங் கூடி அமரவும், 11-ல் லக்கினுதிபதி வலுப்பெற்று நிற்கவும், 2-ம் இடத்தில் ராகு அமரவும் பெற்ற ஜாதகர் தனம், கனம், பூமி யுடையவராம்.

ராகு	இராசிச்		
ல	சக்கரம்		சூ சந் கே பு
	சனி	சு செ குரு	

1031

(இ-ள்.) 4-2-க்குடையவர்கள் லக்கினத்தில் நிற்கவும், 4-ம் இடத்தில் 9-க்குடையவர் அமரவும் பெற்ற ஜாதகர் எந்நாளும் தனவந்தரா யிருப்பாராம்.

	இராசிச்		ல சூ-சு
	சக்கரம்		
		குரு	

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] 7-2-க் குடையவர்கள் கூடி 7-ல் நிற்கவும், சுக்கிரன் ஆட்சி யடையவும், சுக்கிரனுக்கு 7-க்குடையவர் நட்பு வீட்டில் நிற்கவும் பெற்ற ஜாதகன் எந்நாளும் தனங் குணமுடையவனும்.

			ல செ
	இராசிச்		
	சக்கரம்		
குரு சந்		சுக்	

1032

(இ-ள்.) 9-க் குடையவர் குருவுக்குத் திரிகோண மடையவும், 11-க்குடையவர் பலம் பெற்று நிற்கவும், 7-10-க்குடையவர்கள் கேந்திர மடையவும், லக்கினாதிபதியும் 4-க் குடையவருங் கூடி 4-ல் நிற்கவும், சந்திரன் குருவுக்கு 3-ல் அமரவும் பெற்ற ஜாதகர் தனமுங் கனமும் கெடாத வாழ்வு முடையவராம்.

சுக் சனி	இராசிச்		குரு
	சக்கரம்		ல
புத	சூரி செ		சந்

1033

(இ-ள்.) 2-க்குடையவர் ராகுவோடு கூடிக் கேந்திர மடையவும், 4-க் குடையவர் 9-ல் அமரவும், சுக்கிரன் ஆட்சி பெற்றுச் சந்திரனோடு கூடி திரிகோண மடையவும், குரு 11-ல் நிற்கவும் பெற்ற ஜாதகன் தனம், பூமி, கன்று, காலி பெருக்க முடையவனும்.

		சு-கு சந்	புத
	இராசிச்		சனி ராகு
ல கே	சக்கரம்		
	குரு		செ

1034

(இ-ள்,) 2-ல் ராகு நிற்கவும், 2-க் குடையவர் 9-ல் தனித்து நிற்கவும், 4-க் குடையவர் ஆட்சி யடையவும், குரு சந்திரனோடு கூடி 11-ஆமிடத்தில் நிற்கவும், லக்கினாதிபதி 10-ல் அமரவும் பெற்ற ஜாதகர் பொருள் மிகுதியும், சத்தியமும் உடையவராம்.

கே	புத	சூரி	குரு சந்
	இராசிச்		
	சக்கரம்		ல
	செவ்		ராகு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1035

(இ-ள்.) 9-2-க் குடையவர்களும் சூரியனும் ஆகிய மூவர்களும் திரிகோண மடையவும், அவர்களை 5-க் குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகன் சன்மார்க்க முடைய பாக்கியவானும்.

			சூசெ புத
	இராசிச்		
	சக்கரம்		
சனி		ல	

[2] 2-4-க் குடையவர்கள் கூடித் திரிகோண கேந்திர மடையவும் பெற்ற ஜாதகருக்கு மேற் கூறிய பலனும்.

அவதன பாவகம்

1036

(இ-ள்.) 2-6-க் குடையவர்கள் நீச மடையவும், அவர்களைத் தீயர்கள் நோக்கவும் பெற்றஜாதகர் மனைவியினல் துயரடைந்து காலங் கழிப்பவராம்.

		சனி ராகு	ல
	இராசிச்		செ
சூரி	சக்கரம்		
	சந் கே		

1037

(இ-ள்.) சந்திரனுஞ் சூரியனும் 2-ல் அமரவும், 2-க்குடையவர் 6-ல் நிற்கவும், குரு 12-ல் அமரவும் பெற்ற ஜாதகர் தன் சுதந்தரப் பொருள் பூமிகளை யிழந்து வாடுவாராம்.

செ			
	இராசிச்		
	சக்கரம்		
	சூரி சந்	ல	குரு

1038

(இ-ள்.) 6-க்குடையவர் உச்ச மடையவும், 2-க் குடையவர் ஈனமடைந்து 12-ல் அமரவும், இவர்களோடு பாபர்கள் கூடி நிற்கவும் பெற்ற ஜாதகருக்குப் பிச்சைத் தொழிலன்றி வேறு ஜீவன மில்லையாம்.

		சனி சந்	
ல-பு சுக்	இராசிச்		
குரு சூரி	சக்கரம்		
	கே		

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1039

(இ-ள்) 1-12-க்குடையவரும் ராகுவும் ஆகிய மூவர்களும் கூடி 2-ல் நிற்கவும், அவர்களைச் சுபர்கள் பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகர் கனவிலுஞ் செல்வ மடையாராம்.



1040

(இ-ள்.) சந்திரனும் 2-க்குடையவருங் கூடி நிற்கவும், செவ்வாய் திரிகோண மடையவும், லக்கினாதிபதி நீச்சம் பெற்று 8-க்குடையவரோடு கூடி நிற்கவும் பெற்ற ஜாதகன் ஆடையின்றி தாரித்திரிய னவனும்.



1041

(இ-ள்.) சந்திரனுக்கு 2-12-6-க்குடையவர்களும், இலக்கினத்திற்கு 2-க்குடையவரும் ஆகிய நால்வர்களும் 6-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் மனத்துயரோடு காலங் கழிப்பவராம்.



1042

(இ-ள்.) சுபக்கிரகங்கள் 6-8-12-ல் நிற்கவும், பாபக்கிரகங்கள் சுபஸ்தானங்களில் அமரவும், அவர்களைச் சனி பார்க்கவும் பெற்ற ஜாதகர் கொடிய தரித்திரராவராம்.



CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வாக்கு வளம்

1043



(இ-ள்.) இலக்கினாதிபதியும், 4-க்குடையவரும், குருவும் ஆகிய மூவர்கள் கூடி நன்மையான ராசிகளில் திரிகோண கேந்திர மடையவும், சந்திரன், சுக்கிரன், புதன் இவர்களில் ஒருவர் 2-ல் நிற்கவும், பெற்ற ஜாதகர் ஜோதிட வித்துவா னென்றுங் கூறியது.



[2] குரு அழகிய கேந்திர மடையவும், சுக்கிரன் 4-ல் நிற்கவும், புதன் திரிகோண மடையவும் பெற்ற ஜாதகர் சோதிட சித்தாந்தி யாவராம்.

1044

(இ-ள்.) குரு திரிகோண மடையவும், சுக்கிரன் குருவுக்குக் கேந்திர மடையவும், புதன் கேந்திரத்தில் நிற்கவும், குருவின் கேந்திரத்திற் சந்திரனும் கேதுவுங் கூடி நிற்கவும் பெற்ற ஜாதகர் இலக்கண விலக்கிய வாகட ஜோதிட வல்லவராம்.

1045



(இ-ள்.) இலக்கினத்திற் குரு நிற்கவும், 9-ல் புதன் அமரவும், புதனுக்கு 10-ல் சுக்கிர னிற்கவும் பெற்ற ஜாதகர் காவிய நூலுணர்ச்சி யுள்ளவராம்.

[2] சுக்கிரன் உச்சமடையவும், புதன் 3-ல் நிற்கவும், தனுர் இலக்கினமா யிருந்து, 11-ல் குரு நிற்கவும் பெற்ற ஜாதகர் வாக்கிற் சிறந்தவராம்.

1046

(இ-ள்.) 2-ல் புதனிற்கவும், குரு திரிகோண மடையவும், 4-ல் சந்திர னமரவும் பெற்ற ஜாதகர் வித்வசேகரராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] 2க்குடையவர் இலக்கினத்தில் நிற்கவும், 7ல் சந்திரன், புதன் அமரவும் பெற்ற ஜாதகர் தமிழ்ப் பண்டிதராயும், பாக்கியவந்தராயும் வாழ்பவராம்.

1047



(இ-ள்.) 2க்குடையவர் இலக்கினத்தில் நிற்கவும், சந்திரனும், புதனும் கேந்திரமடையவும், 4க்குடையவர் 1ல் நிற்கவும், செவ்வாய் கேந்திரமடையவும் அல்லது சுக்கிரன், செவ்வாய்க்கு 3ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் பாக்கியம், செல்வம், பல பாஷைப் பண்டிதராய் மகா விஷ்ணுவைப் போல் வாழ்ந்திருப்பாராம்.

1048

(இ-ள்.) 2ல் புதன் நிற்கவும், 2க்குடையவர் இலக்கினத்தில் அமரவும், 4ல் சந்திரன் நிற்கவும், குரு 10ல் அமரவும், அவருக்கு 3ல் சுக்கிரன் நிற்கவும் பெற்ற ஜாதகர் யோக்கியராய், வாக்குவளம், யூகம், கல்வி யுடையவராம்.

1049



(இ-ள்.) லக்கினாதிபதி லக்கினத்தில் நிற்கவும், 2ல் புதன் அமரவும், 4ல் சந்திரன் நிற்கவும், குரு திரிகோணமடைந்து லக்கினத்தைப் பார்க்கவும் பெற்ற ஜாதகர் சாஸ்திர ஆராய்ச்சியில் அகத்தியனைப் போலுமிருந்து சிவபெருமானுக்கு மெய்யடியருமாவராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1050



(இ-ள்.) 2ல் குரு நிற்கவும், 2க்குடையவரைக் குரு பார்க்கவும், புதன் குருவுக்கு 11ல் நிற்கவும், சுக்கிரன் இலக்கினத்தில் அமரவும் பெற்ற ஜாதகருக்கு யோக்கிய பாக்கியம், கல்வி, உண்மை நிலை யுண்டாகுமாம்.

1051



(இ-ள்.) லக்கினத்திற் குரு, சுக்கிரன், சந்திரன் ஆகிய மூவரும் நிற்கவும் 3ல் புதன் அமரவும், 2ல் செவ்வாயும், 11க்குடையவருங் கூடி நிற்கவும் பெற்ற ஜாதகர் கல்வியிலும், உண்மையிலுந் தேர்ந்தவராம்.



[2] செவ்வாய் புதனுக்கு கேந்திரமடையவும், சந்திரன் சுக்கிரனோடு கூடி திரிகோண மடையவும், குரு 11ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் சாஸ்திர ஆராய்ச்சியிற் றேர்ந்தவராம்.

1052

(இ-ள்.) குருவுக்கு 2ல் 2க் குடையவர் நிற்கவும், அவரோடு சந்திரன் கூடி நிற்கவும், புதனும், 9க்குடையவருங்கூடி 3ல் அமரவும், 4ல் சுக்கிரன் நிற்கவும் பெற்ற ஜாதகர் கவி மாலை செய்து ஈசன் திருவடிக்குச் சாற்றி சுகமடைவராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1053

(இ-ள்.) சுக்கிரனும் புதனும் 2-ல் நிற்கவும், இவர்களைக் குரு பார்க்கப் பெற்றாலும்,

[2] சந்திரன், சுக்கிரன், புதன் ஆகிய மூவருங் கூடி 2-ல் நிற்கவும், இவர்களைக் குரு பார்க்கப் பெற்றாலும்,

[3] 2-3-4-5-6-7-9-10, இதற்குரியவர்கள் சுபர்களாயிருந்து ஆட்சி பெற்று நின்றாலும், இம் மூன்று ஜாதகர்களும் கல்விமானுயிருந்து புகழ் பெறுவார்களாம்.

1054

(இ - ள்) சூரியனை 2-க்குடையவர் பார்க்கவும், செவ்வாயைக் குரு பார்க்கப் பெற்றாலும்,

[2] புதனை லக்கினாதிபதி பார்க்கவும், சனி நட்பமடைந்து நிற்கப் பெற்றாலும்,

[3] சுக்கிரன் உபய ராசியில் நிற்கவும், அவருக்கு நேரில் சந்திரன், புதன், குரு இவர்கள் நிற்கவும் பெற்ற இம் மூன்று தரமுள்ள ஜாதகர்கள் ஆரிய நூலிற் சிறந்தவராயுந் தமிழ்ப் புலவருமாவராம்.

1055

(இ-ள்.) 2-க் குடையவருஞ் சுக்கிரனும் கூடி நிற்கவும், அவர்களைப் புதன் பார்க்கப் பெற்றாலும்,

[2] 2-க் குடையவரும், புதனுங் கூடி அதில் ஒருவர் உச்சமடையவும், லக்கினத்திற் குரு நிற்கப் பெற்றாலும்,

[3] 7-க் குடையவர் திரிகோண மடையவும், குரு கேந்திரமடைந்து நிற்கவும் பெற்ற இம் மூன்றுதர ஜாதகர்கள் இலக்கண நூலில் வல்லவராயும், செந்தமிழ்ப் புலவருமாவராம்.

1056

(இ-ள்.) புதனும், 2-க் குடையவரும், குருவும் ஆகிய மூவர்களும் திரிகோண மடைந்தாலும்,

[2] செவ்வாயோடு 2-க் குடையவர் கூடி 2-ல் நிற்கவும், அவரை புதன் பார்க்கப் பெற்றாலும்,

[3] செவ்வாய், புதன், பாபர்கள் கூடி 2-ல் நிற்கவும், அவர்களைக் குரு பார்க்கப் பெற்றாலும்,

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[4] புதன் 2-ல் நிற்கவும், செவ்வாய் திரிகோண மடையவும், குரு லக்கினத்தில் நிற்கவும் பெற்ற இந்நான்குகரமுள்ள ஜாதகர்களும், தமிழ்ப் புலவரென்று வெளிப்பட்டவர்களாம்.

1057

	குரு		
	இராசிச் சக்கரம்		
			ல-கு செவ்
சந்		சுக்	புத

(இ-ள்) 2-ல் புதன் நிற்கவும், செவ்வாய் திரிகோண மடையவும், சுக்கிரன் ஆட்சி பெற்று நிற்கவும், சந்திரன் நட்பில் நிற்கவும், குரு 9-லிருந்து மேற்கூறிய நால்வர்களையும் பார்க்கவும், சூரியன் லக்கினத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகர் சரஸ்வதி கிருபை யுடையவராய் உயர்ந்த காவிய நூற் செய்பவராம்.

1058

	சூரி செவ்		ல சனி
சுக் சந்	இராசிச் சக்கரம்		
		குரு	

(இ-ள்) குரு திரிகோண மேறி சூரியனையும், சுக்கிரனையும், புதனையும், சந்திரனையும், லக்கினத்தையும் பார்க்கவும், சனி லக்கின கேந்திர மடையவும் பெற்ற ஜாதகர் அழியாத கீர்த்தியாய்த் தீபம்போலு மிருந்து சிவன் முன்பாக அன்புள்ள காவியங்க ளியற்றுவராம்.

1059

(இ-ள்.) குரு 5-லிருந்து கேதுவையும், சுக்கிரனையும், லக்கினத்தையும் பார்க்கவும் பெற்ற ஜாதகர் ஞானமும், கல்வியுமுடையவராம்.

[2] 5-ல் குருவிருந்து ராகுவையும், சுக்கிரனையும், லக்கினத்தையும் பார்க்கவும் பெற்ற ஜாதகர் மேற்கூறிய பலனுடையவராம்.

1060

சுக்		புத சந்	
	இராசிச் சக்கரம்		
	ல குரு		

(இ-ள்.) லக்கினத்திற் குருவிருந்து புதனையும், சந்திரனையும், சுக்கிரனையும் பார்க்கவும், ஸ்திர லக்கினத்தில் ஜனிக்கவும் பெற்ற ஜாதகருக்குத் தனமும், கல்வியும், தவமும் உண்டாகுமாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] இலக்கினத்திற் குருவிருந்து கேது, சந்திரன், செவ்வாய், புதன் ஆகிய நால்வரையும் பார்க்கவும் பெற்ற ஜாதகர் கல்வியும், ஒழுக்கும் தனமு முடையவராம்.

1061

(இ-ள்.) 11-ல் குருவிருந்து புதன், சந்திரன், கேது ஆகிய மூவர்களையும் பார்க்கவும் பெற்ற ஜாதகர் கல்வியிலும், கேள்வியிலும் வல்லப முடையவராம்.

		சந் சு-கு	
	இராசிச் சக்கரம்		சனி ராகு
ல கே			
	குரு		

[2] 11-ல் குருவிருந்து சந்திரன், சுக்கிரன், சூரியன், சனி, ராகு ஆகிய ஐவரையும் பார்க்கவும் பெற்ற ஜாதகர் கல்விப் பொருளும், அறிவு முடையவராம்.

1062

(இ-ள்.) 11-ல் குருவிருந்து புதனையும், 9-க் குடையவரையும் பார்க்கவும் பெற்ற ஜாதகர் கல்வி, கேள்விகளில் தேர்ந்தவராம்.

	சுக் புத		சந் செ
ல ராகு	இராசிச் சக்கரம்		
			சனி கே
குரு			

[2] 11-ல் குருவிருந்து சுக்கிரன், புதன், சந்திரன், செவ்வாய், கேது, லக்கினாதிபதியாகிய அறுவர்களையும் பார்க்கவும் பெற்ற ஜாதகர் ஞான நூலுக்கு ஆசிரிய பீட முடையவராம்.

1063

	சூரி புத		சந்
	இராசிச் சக்கரம்		
ல		தரு	

(இ-ள்.) 11-ல் குருவிருந்து புதன், சூரியன், பூர்வ சந்திரன் ஆகிய மூவர்களையும் பார்க்கவும் பெற்ற ஜாதகர் கல்வியிற் றேர்ந்த உத்தமராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

செ	சூரி	சு-பு சந்	
	இராசிச் சக்கரம்		
ல			
	குரு		

[2] 11-ல் குருவிருந்து சுக்கிரன், செவ்வாய், பூர்வ சந்திரன், புதன் ஆகிய நால்வர்களையும் பார்க்கவும் பெற்ற ஜாதகர் கல்வியும் வீரத் தன்மையுமுடையவராம்.

பூரணடை யங்கம்

1064

(இ-ள்.) திண்ணமாக எடுத்து மேற்கூறிய துண்மை யெனினும், அதிற் கூறிய கிரக நாயகர்கள் தேவவர்க்கங்களில் சுபாங்கிசங்களேறி நின்றால் மேற்கூறிய கல்வி நிலைமையிற் றேர்ந்தவர்களென்றும், மேற்கூறிய கிரகங்கள் பாபவர்க்காங்கிசங்களேறிப் பலஹீனப் படுவாராகில், ஜாதகர்கள் கல்வியிற் றாழ்ந்தவர்களென்றுங் கூறியது. அப்படித் தளர்ச்சியடைந்தால் சாமான்ய வித்துவானாகவாகினு மிருப்பனும்.

1065

(இ-ள்.) மேற் கூறிய கிரகங்கள் நல்ல நிலைமைகளிற் றேய்ந்தும், சில கிரகங்கள் பாப நிலைமையிற் றேய்ந்தும் இருப்பாராகில் சொல்லிய பலன்களில் சில நடக்குமென்றும், சில தவறுமென்றுங் கூறியது. இதிற் சொல்லாத கிரகங்கள் நல்ல ஸ்தானங்களில் நிற்பாராகில் தோஷமல்ல வென்றும், வேறு பலன்களை சுகமாக செய்பவராம். அல்லாமலும், குரு இலக்கினத்திலேனும் 5-9-11-லேனும் நிற்பாராகில் கல்வி நிலைமையில் வலி பெற்றவர்களென்றுங் கூறப்படும்.

கணித நூல் வளம்

1066

(இ-ள்.) 4-க்குடையவரும், லக்கினாதிபதியுங் கூடித் திரிகோண மடையவும், அவர்களைக் குரு பார்க்கவும் பெற்ற ஜாதகர் கணித வல்லவராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

			ல
	இராசிச்	சக்கரம்	
குரு		புத சூரி	

[2] இலக்கினாதிபதி சூரியனோடு கூடி 5ல் நிற்கவும், இலக்கினத்தை குரு பார்க்கவும் பெற்ற ஜாதகர் கணித வல்லவராம்.

[3] சுக்கிரனும், குருவும் ஒருவரை ஒருவர் பார்த்து நிற்கவும் பெற்ற ஜாதகர் மேற்கூறிய பலனுடையவராம்.

வைத்திய வளம்

1067

		சனி	
	இராசிச்	சக்கரம்	
குரு			
	சுக் சூ	ல பு	

(இ-ள்.) 4ல் குருவிருந்து சனியைப் பார்க்கவும், புதன் இலக்கினத்தில் நிற்கவும், 2ல் சூரியனும், சுக்கிரனும் கூடி சனியைப் பார்க்கவும் பெற்ற ஜாதகர் வாகட நூல் பண்டித வல்லவராம்.

[2] இலக்கினத்திற்கு 4-லிலும், சுக்கிரனுக்குத் திரிகோணத்திலும் சனி நிற்கவும் பெற்ற ஜாதகர் மேற்கூறிய விதியுடையவராம்.

விநோத வித்தியா வளம்

1068

(இ-ள்.) 7-6க்குடையவர்கள் கூடி 4ல் அமரவும், இலக்கினத்தில் இராகு நிற்கவும் பெற்ற ஜாதகரும்,

[2] சூரியனும், சந்திரனுங் கூடி நட்பு உச்ச மடையவும், 2ல் 4-10க்குடைவவர் நிற்கவும் பெற்றாலும்,

[3] இலக்கினாதிபதியும், 4க்குடையவருங் கூடி 9ல் நிற்கவும், அவர்களோடு இராகு கூடவும், புதன் 5ல் நிற்கவும், இவர்களைக் குரு இலக்கினத்தில்நின்று பார்க்கவும் பெற்ற மூன்று ஜாதகர்களும் விநோத வித்தையில் கீர்த்திமானென்றுங் கூறியது.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கண் மயக்கும் வித்தியா வளம்

1069



(இ-ள்.) 2-4க்குடையவர்கள் புதன் ஆகிய மூவருங் கூடி 9ல் நிற்கவும், 8க்குடையவரும, இலக்கினாதிபதியும, உச்சமும் ஆட்சியடையவும் பெற்ற ஜாதகர் கண்கட்டி மாரூட்ட வித்தைகளைத் தெரிந்தும் மனம் திருப்தியடையா தலைவராம்.



[2] 3-ஆமிடத்தில் 8-6-4-3க்குடையவர்கள் நிற்கவும், இவர்களை 9லிருந்து செவ்வாய் பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு மேற்கூறிய பலனேயாம்.

சம்பிரதாய வித்தியா வளம்

1070

(இ-ள்.) 10-ஆமிடத்தில் 2க்குடையவரும், சனியும், செவ்வாயும் நிற்கவும், இவர்களைக் குரு பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகரும்,

[2] சந்திரனுக்கு 2க்குடையவரும், குடும்பாதிபதியுங் கூடி 7ல் நிற்கவும், இவர்களைக் குரு பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகரும்,

[3] 2க்குடையவரும், இலக்கினாதிபதியுங் கூடி 7ல் நிற்கவும், இவர்களைக்குரு பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகர்களும் சம்பிரதாயமாக உபாய வித்தை யாளர்களாம்.

வாக்கூனம்

1071



(இ-ள்.) 2க்குடையவரும், சுக்கிரனும், புதனுங் கூடி 6ல் இருக்கவும், 6-8-12ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் வாக்கறியாத ஊமையராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] 6க்குடையவருஞ் சுக்கிரனுந் தூம கிரகமுமாகிய மூவரும் 6-ல் நிற்கவும், 8-2க்குடையவர்கள் பலங் குறைந்து நிற்கவும் பெற்ற ஜாதகர் வாக்கறியாத ஊமையனும். குரு பார்த்தாலும் அவ்வித பலனேயாம்.

1072

(இ-ள்) 2க்குடையவருங் குளிகனுங் கூடி 12ல் நிற்கவும், லக்கினத்தில் யமகண்ட னமரவும், தூமன் 2-ஆமிடத்தைப் பார்க்கவும் பெற்ற ஜாதகர் மருண்ட ஊமையராம்.

[2] 2ல் குருவிருந்தாலும் வாய் குளறுமென்றுங் கூறியது.

[3] 2க்குடையவர் தூமன் யமகண்டன் ஆகிய மூவருங் கூடி 8ல் நிற்கவும், இவர்களைக்குரு பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகன் ஊமையனும். குரு 2ல் நின்றாலும் சில நேரங்களில் வாய் குளறுமாம். 2ல் சந்திரன் நிற்கில் வாக்கு பங்க மில்லையாம்.

ஊன நிவர்த்தி

1073

(இ-ள்.) சனி 4ல் நிற்கவும், லக்கினதிபதி நீச மடையவும், சந்திரனுக்கு 10ல் 8க்குடையவர் நிற்கவும் பெற்ற ஜாதகர் மிகுந்த ஊமையாயிருப்பாராம். ஆனால், இசசக்கரத்தில் 5ல் குரு நிற்கவும், 11-ஆமிடத்தில் சந்திரனும நிற்பாராகில் மேற்கூறிய ஜாதகரே காவியங்களெல்லாங் கூறுவாராம்.

பு	செவ்		
	இராசிச் சக்கரம்		சந்
குரு			
சனி			ல

1074

(இ-ள்.) 6ல் சுக்கிரனுங் கேதுவுங்கூடி நிற்கவும், சனி 11ல் அமரவும், 2-ஆமிடம் சூன்யமாயிருக்கப் பெற்ற ஜாதகனை ஊமையனென்றுங் கூறியது. ஆனால் மேற்கூறிய சக்கரத்தில் இலக்கினத்திற் குருவும் 7ல் சந்திரனும், புதனும் நிற்கவும் பெற்றால் கணிதாதி இலக்கண நூலாசிரிய கவிஞருமாவராம்.

	சுக் கே	சந் புத	
	இராசிச் சக்கரம்		
	ல குரு	ராகு	சனி

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1075

		செ	
	இராசிச் சக்கரம்		
	குரு	ல சுக்	சனி பு-சூ

(இ-ள்.) புதன், சனி, சூரியனாகிய மூவருங் கூடி 12ல் நிற்கவும், செவ்வாய் 8ல் அமரவும் பெற்ற ஜாதகர் ஊமைய னென்றுங் கூறியது. அச்சக்கரத்திற் றானே லக்கினத்திற் சுக்கிரனும் 2ல் குருவுமிருந்தால் தமிழ்ப் புலவ னென்றுங் கூறப்பட்டது.

[2] சனி சந்திரனோடு கூடி 12ல் நிற்கப் பெற்ற ஜாதக ருக்கு வாய் குளறுமென்றும், அதில் 11ல் குருவிருந்தால் அவை நீங்கி காவிய நூல் அறியுங் கவிஞ ராவராம்.

புறனடை யங்கம்

1076

(இ-ள்.) நீச னின்ற ராசிநாதன் ஆட்சி உச்சமடைந்தால் நீச பங்க ராஜயோக மென்று கூறியதுபோல் முன் கூறி வந்த ஊமையர்கள் பிறகுஉரைத்த விதியினால் வித்துவானன தன்மையைப் பிரித்து உணர்ந்து கொள்ளவும். இன்னும் குற்றமற்ற வாக்குஸ்தான வலியும், 4-5-9-11 இத் தானங்களையும், குரு-சுக்கிரன்-புதன்-சந்திரன்-செவ்வாய் இவர்களுடைய தன்மையையும், ஆய்ந்தறியவும். இதில் புதன், குரு இவ் விருவர் வலிமையுந் தீர்க்கமாய்க் கண்டு பலன் கூறல் வேண்டுமாம்.

1077

(இ-ள்.) இந்த விதமாக மேலுங் கீழும் எடுத்துரைத்த ஜாதகர்களையல்லது மற்றவர்கள் எத்தாரத்தாரென்றால், மந்தமாகிய கல்வியும், எழுதியனுப்பிய ஓலைகளை வாசிக்க வல்லவரென்றறியவும். ஆனால் இவர்கள் முன்னுரைத்த புலவர்கள் போலுமல்லர். பின்னுரைத்த முழுப்புலவருமல்லர்; ஊமையருமல்லர்;தந்தமக்கு யெழுதப் படிக்க சாமர்த்திய முள்ளவர்களாவாராம்.

துர் வசனம்

1078

புத	சுக்		
	இராசிச் சக்கரம்		செ
குரு			
			ல

(இ-ள்.) 2-3-4-1க் குடையவர்களாகிய நால்வரும் துர்ப்பல மடைந்து நிற்கப் பெற்ற ஜாதகருடைய வாக்கில் நின்றுவருவதெல்லாம் பொய்யுரையால் புனைந்த வஞ்சக வசனமேயன்றி மற்ற நல்வசன மில்லையாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] 4-5-8-க் குடையவர்கள் 12-ல் நிற்கவும் அல்லது நீசம் பெற்று நின்ருலும்,

[3] 2-4-க் குடையவர்கள் நீசமடையவும், அவர்களை 8-க் குடையவர்கள் பார்க்கப் பெற்ற இவ்விரண்டு தரமுள்ள ஜாதகர்களும் மேற்கூறிய விதி யுடையவரேயாம்.

1079

(இ-ள்) சனி 2-ல் நிற்கவும், 5-ல் ராகு அமரவும், 8-க் குடையவர் 4-ல் நிற்கவும், இலக்கினத்திற் சூரியன் அமரவும், 8-ல் புதனுஞ் சுக்கிரனும் நிற்கவும், 11-ல் ராகு அமரவும் பெற்ற ஜாதகர் வஞ்சகம், பொய்ச் சத்தியம், வீண் வார்த்தை யுடையவராம்.

புறனடை யங்கம்

1080

(இ-ள்.) மேற் கூறிய பலன்களில் புதன் வலியும், 4-ம் இடத்தில் வலியும், சுக்கிரன் வலியும், சந்திரன் வலியும், 5-ம் இடத்தின் வலியும், 2-9-11-இத் தானங்களின் வலியுங் கண்டு அறிந்தது பெரி தல்லவாம். ஆனல், குரு நிற்கும் வலிமையை நன்கறிந்து அதன் தேவரும் தானமும் நன்மையாகில் ஜாதகனும் நன்மை பெறுவனும்.

நேத்திர ஊனம்

1081

புத	சு	சனி-கு ரா-செ	
ல	இராசிச் சக்கரம்		சந்
குரு	கே		

(இ-ள்.) 2-ம் இடத்தில் 8-க் குடையவர் நிற்கவும், 4-ம் இடத்தில் பாபர்கள் நிற்கவும், இவர்களைக் குரு பார்க்கா திருக்கவும் பெற்ற ஜாதகருக்கு 2-கண்ணு மில்லை யென்றுங் கூறியது.

[2] 12-க்குடையவர் 2-ல் நிற்கவும், 4-ம் இடத்தில் ராகு அமரவும் பெற்ற ஜாதகருக்குப் புண் போல் 2-கண்களும் புகைந்து போகுமாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1082

(இ-ள்.) 3-க்குடையவர் 6-ல் நிற்கவும், 2-ம் இடத்தைச் சூரியன் பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு 2-கண்ணும் ஊனமாம்.

[2] சுக்கிரன் ஆட்சி உச்சமடையவும், புதன் திரிகோண கேந்திரத்தில் நிற்கவும், சந்திரன் 5-ல் நிற்கவும், குரு லக்கினத்தில் அமரவும் பெற்ற ஜாதகருக்கு ஒரு கண்ணு மாத்திரம் தெரியுமாம்.

1083

(இ-ள்.) 2-க் குடையவர் நீசமடையவும், அவரை இலக்கினாதிபதியும் 12-க் குடையவருங் கூடி கட்டி நிற்கவும், 8-க் குடையவர் 6-ல் அமரவும், இவரைச் சனி பார்க்கவும் பெற்ற ஜாதகன் பிறவிக் குருடனும். கடவுள் கிருபையும் அவ்விதமேயாம்.

1084

(இ-ள்.) 2-க்குடையவருஞ் சூரியனுங் கூடி 6-ல் நிற்கவும், அவர்களையும் 2-ம் இடத்தையும், சுக்கிரனையும், சனி பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு குரு, சுக்கிரன் பார்வையில்லா திருக்கில், பால் போலும்வெள்ளைநேத்திரமுடையவராம்.

1085

(இ-ள்.) கடக லக்கினத்தில் ஜெனிக்க 2-ல் சனி, செவ்வாய், 2-க் குடையவர் ஆகிய மூவரும் நிற்கவும், அவர்களைச் சுக்கிரன் பார்க்கா திருக்கவும் பெற்ற ஜாதகருக்கு நேத்திர ஊனமென்றுங் கூறியது.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy



[2] குரு, சுக்கிரன், 10-6க்குடைய வர்கள் ஆகிய மூவரும் 6ல் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு கடவுள் தண்டனையில் மத்தியில் கண் ஊனப்படுமாம்.

1086



(இ-ள்.) 2க்குடையவர், செவ்வாய், குளிகன் ஆகிய மூவரும் 2ல் நிற்கவும், அவர்களை குரு பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகர் கண் கிடைத்தும் மத்தியில் வலி நோயினால் மாறி விடுமாம்.

[2] 2க்குடையவர், சுக்கிரன், சந்திரன் ஆகிய மூவரும் பகை பெற்று ஒரு ராசியில் நிற்கவும் பெற்ற ஜாதகருக்குக் கண்ணழியாது மத்தியில் மாலைக்கண்ணுண்டாகுமாம்.

1087



(இ-ள்.) லக்கினாதிபதியும், 2-7க்குடையவர் சந்திரன் ஆகிய நால்வர்களும் 6-8ல் நிற்கவும், இவர்களை சுக்கிரன் பார்க்காதிருக்கவும் பெற்ற ஜாதகருக்கு குலை நோயினால் கண் துயருற்றுகலிக்கமிட்டாலும் கண் கரையாதென்றுங் கூறியது.

1088

(இ-ள்) சுக்கிரனுஞ் சூரியனுங் கூடி 2ல் நிற்கவும், இவர்களைக் குரு பாராதிருக்கவும் பெற்ற ஜாதகருக்கு மேகப் படலத்தினால் கண் மங்கிப் போகுமாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] சனி, சுக்கிரன், லக்கினாதிபதி ஆகிய மூவர்களும்2ல் பகைபெற்று நிற்கவும், இவர்களை குரு பாராதிருக்கவும்பெற்ற ஜாதகர் நேத்திர ஊன முடையவராம்.

1089

(இ-ள்.) 2ல் சனி நிற்கவும், 3ல் சூரியன் அமரவும், சந்திரன் 12ல் நிற்கவும், சுக்கிரன் 6ல் அமரவும் பெற்ற ஜாதகருக்கு நேத்திர நோய் 66-ம்உண்டாகுமாம்.

சுக்	இராசிச்	சக்கரம்	
			சந்
	கு	சனி	ல

[2] சுக்கிரனும் 2க்குடையவருங் கூடி 6ல் நிற்கவும் 2-ஆமிடம் சூன்யமாய் நிற்கப் பெற்ற ஜாதகருக்கு கடவுள் கிருபையால் ஒரு கண் தெரியுமாம்.

1090

(இ-ள்.) லக்கினாதிபதி 6க்குடையவர் சூரியன் ஆகிய மூவரும் லக்கினம் அல்லது 2-ஆமிடத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகருக்குப் பூனைக் கண்ணாகுமாம்.

[2] 2க்குடையவர் 8ல் நிற்கவும், சந்திரன் சனியோடு கூடி 2-ஆமிடத்தைப் பார்க்கவும், சூரியன் 2ல் நிற்கவும் பெற்ற ஜாதகருக்குப் பூனைக் கண்ணாகுமாம்.

1091

(இ-ள்.) 2க்குடையவர் 12ல் நிற்கவும், 2-ஆமிடத்தைச் சனி பார்க்கவும், 2-ஆமிடம் சூன்யமாய் நிற்கப் பெற்ற ஜாதகருக்கு கண் ஊனத்திற்கு ஏதுவாகும்.

[2] சுக்கிரன் சந்திரனுக்கு திரிகோணமடையப் பெற்ற ஜாதகருக்குக் கண்ணில் ஊன மில்லையாம்.

உண்ணும் பாத்திரம்

1092

(இ-ள்.) 2க்குடையவர், சந்திரன், குரு ஆகிய மூவர்களும் கேந்திர திரிகோணமடையவும், லக்கினாதிபதியுஞ் சுக்கிரனுங் கூடி 2ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் சுத்தமாகிய வெள்ளி பாத்திரத்தில் உண்பாராம்.

ல	சுக்		செ ச குரு
	இராசிச்	சக்கரம்	

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy



[2] 2-4-க்குடையவர்களும், சந்திரன் இராகு ஆகிய நால்வர்களுங் கூடி 2-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் வெள்ளிப் பாத்திரத்தி லுண்பாராம்.

[3] சுக்கிரன், சந்திரன், குரு ஆகிய மூவர்களுங் கூடி 2-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் வெள்ளிப் பாத்திரத்தில் உண்பாராம்.

1093



(இ-ள்.) 2-1-12-க் குடையவர்கள் ஆகிய மூவரும் இலக்கினத்தில் நிற்கவும், 2-ம் இடத்தைக் குரு பார்க்கவும், சந்திரன் 9-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் தங்கப் பாத்திரத்தி லுண்பவராம.



[2] இலக்கினாதிபதியும் குருவுங் கூடி 5-ல் நிற்கவும், அதில் ஒருவர் உச்ச மடையவும், சுக்கிரன் தன பாக்கியாதிபதியா யிருந்து கேந்திர மடையவும் பெற்ற ஜாதகர் தங்கப் பாத்திரத்தி லுண்பாராம்.

1094



(இ-ள்.) 2-க்குடையவர் இலக்கினத்தில் நிற்கவும், புதனும், சந்திரனுங் கூடிக் கேந்திர மடையவும் பெற்ற ஜாதகர் வெள்ளிப் பாத்திரத்தி லுண்பாராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] இலக்கினத்திற் சந்திரனும், சூரியனுங் கூடி நிற்கவும், 2-ல் சுக்கிரனும் புதனும் அமரவும் பெற்ற ஜாதகர் வெள்ளிப் பாத்திரத்தி லுண்பாராம்.

[3] சுக்கிரன் 10-ல் நிற்கவும், குரு 11-ல் அமரவும் பெற்ற ஜாதகர் வெள்ளிப் பாத்திரத்தில் ஜல முண்பாராம்.

1095

(இ-ள்.) வெண்கலம், இலைக்கலம், மரக்கலம், ஈயக்கலம், மண்கலம் இவைகளில் உண்பவர்களுக்குக் கூறுங்கால், பெருகி வருமென்று நிறுத்தப்பட்டது. இதிற் கிரகாதிகள் நின்ற விதமும், பதமும் பார்த்து நெடுநாளாய் மண்ணிற் புதைத்திருந்த தனங்களின் விபரத்தைக் கூறுகின்றனம் கேட்பாயாக.

1096

(இ-ள்.) 4-11-க் குடையவர்கள் கூடி 9-ல் நிற்கவும், அவர்களைச் செவ்வாய் பார்க்கவும் பெற்ற ஜாதகருக்குப் புதையல் கிடைக்குமாம்.



[2] சந்திரன், செவ்வாய், 2-4-க் குடையவர்கள் ஆகிய நால்வருங் கூடி 2-ல் நிற்கவும் பெற்ற ஜாதகருக்குப் புதையல் கிடைக்குமாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1097

		செவ்	
	இராசிச்		
	சக்கரம்		சந்
	பு-ச கு-ச	ல குரு	

(இ - ள்.) 6-4-11-க் குடையவர்கள் ஆகிய மூவரும் 2-ல் நிற்கவும், அவர்களைச் சந்திரன் பார்க்கவும், லக்கினத்திற் குரு அமரவும் பெற்ற ஜாதகருக்குப் புதையல் கிடைக்குமாம்.

1098

பு-சு கு-கு			
	இராசிச்		
சனி	சக்கரம்		சந்
	ல	செவ்	

(இ-ள்.) சந்திரனுக்கும், செவ்வாய்க்கும், 9-க் குடையவர்களும், 11-க்குடையவரும் குருவும் ஆகிய நால்வருந் திரிகோணத்திலிருக்கவும், அவர்களை 3-4-க் குடையவர்கள் பார்க்கவும் பெற்ற ஜாதகர் பூமியில் தன மெடுப்பவராம்.

1099

			குரு
	இராசிச்		சுக்
சந்	சக்கரம்		
		புத	ல

(இ-ள்.) இலக்கினுதிபதி 2-லிருக்கவும், 2-க்குடையவர் 11-ல்நிற்கவும், 11-க் குடையவரும், 4-க் குடையவரும் மேற் கூறியவர்களை பார்க்கவும் பெற்ற ஜாதகர் புதையல் எடுப்பவராம்.

புறநடை

1100

(இ-ள்.) இந்தப் பிரகாரம் மேற் கூறிய லட்சணங்களில் கிரகங்கள் தேவவர்க்க பலமடைந்து நிற்பாராகில், மிகுதியாய் புதையல் கிடைக்கும். அவ் வர்க்கங்களில் குறைந்திருக்குமாகில் சொற்பமாய் புதைபல் கிடைக்கும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மிடறு மயிர்

1101

(இ-ள்.) இராகுவும், 2-க் குடையவருங் கூடி 6-8-ல் நிற்கவும், அவர்களை 8-க் குடையவருஞ் செவ்வாயும் பார்க்கப் பெற்ற ஜாதகருக்குத் தொண்டைக்குள் தூறுபோல் மயிர் நெருங்கி யிருக்குமாம்.

[2] சந்திரனுக்கு 2-3-க்குடையவருமாகிய மூவர்களுங் கூடி 2-ல் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கும் மேற்கூறிய பலனேயாம்.

1102

(இ-ள்.) 11-க் குடையவருந் தனுதி பதிக்கு 2-க் குடையவரும், 4-க் குடைய வருக்கு 6-க்குடையவரும் ஆகிய மூவ ரும் 8 ல் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு மேற் கூறிய பலனேயாம்.



பல்

1103

(இ-ள்.) 2-ல் பாபர்கள் நிற்கவும், பார்க்கவும், 8 - 2 - க் குடையவர்கள் கொடிய பாபர்களோடும் 9-க் குடையவரோடுங் கூடி 2-ம் இடத்தைப் பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு வாளாயுதம் போல் பல்லுகள் வாய்க்குமேல் வளர்ந்திருக்குமாம்.

1104

(இ-ள்.) 2-க் குடையவர் 6-ல் நிற்கவும், சூரியன் 8-ல் அமர்ந்து நின்றாலும்,

[2] இராகு 4-ஆமிடத்திற் சுபக்கிரகங்களோடு கூடி நின்றாலும் அவருக்குப் பல் வரிசை யுண்டாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1105

(இ-ள்.) 4-ஆமிடத்தில் ராகுவோடு 4க்குடையவர் சந்திரனோடு கூடி 6-8-12ல் நிற்கப் பெற்றாலும்,

[2] லக்கினத்தில் சூரியனிற்கவும், 2க்குடையவர் 6-8-12ல் நிற்கவும் பெற்ற இரண்டு ஜாதகர்களுக்கும் வாய்க்குள் பல் பருத்து நிற்குமாம்.



1106

(இ-ள்.) சூரியன், செவ்வாய், சுக்கிரன் ஆகிய மூவர்களும் 8ல் நிற்கவும், புதனும், குருவும் நீச மடையவும் பெற்ற ஜாதகருக்கு மத்தியிற் பல்லுதிர்ந்து போகும்.



1107

(இ-ள்) 2-6க்குடையவர்கள் கேதுவோடு கூடி 6ல் இருக்கவும், 4ல் சுக்கிரன் நீசமடையவும் பெற்ற ஜாதகருக்குத் தந்த நோய் உண்டென்றுங் கூறுவாம்.

1108

(இ-ள்.) 2ல் இராகு நிற்கவும், 8ல் சுக்கிரனும், 2க்குடையவரும் அமரவும், 6ல் குரு நிற்கவும் பெற்ற ஜாதகருக்குச் சில பல் உடைபடுமாம்.

1109

(இ-ள்.) 2க்குடையவரோடு சூரியன், செவ்வாய் கூடி 8ல் நிற்கவும், புதனும், குருவும் பலஹீனப்பட்டு நிற்கவும் பெற்ற ஜாதகருக்குப் பற்களெல்லாம் மத்தியில் போய்விடுமென்றும், அதனால் சொல்வளம், வாக்குவளம், தவறுமெனவுங் கூறுவாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

செவி நோய்

1110

	சனி கே	குரு	லசெ சந்
	இராசிச்		
	சக்கரம்		
சூ	பு சுக்	ராகு	

(இ-ள்.) செவ்வாயோடு 2க்குடையவர் கூடி லக்கினத்தில் நிற்கவும், அவர்களை பாபர்கள் நோக்கவும்பெற்ற ஜாதகருக்குச் செவி நோயுண்டாம்.

1111

		சனி	
ல சுக்	இராசிச்		செவ்
	சக்கரம்		

(இ-ள்.) கும்பத்திற் சுக்கிர னிற்கவும், 6ல் செவ்வாய் நீசமடையவும், இவர்களைச் சனி பார்க்கவும் பெற்ற ஜாதகருக்குச் செவி நோயுண்டாகுமாம்.

1112

செவ்	இராசிச்		
ல	சக்கரம்		சனி புத

(இ-ள்.) 6-2க்குடையவர்கள் 8ல் பகைபெற்று நிற்கவும், அவர்களை 4க்குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகருக்குச் செவி நோயினல் செவிடுண்டாம்.

1113

(இ-ள்.) சந்திரனுக்கு 6-3க்குடையவர்களும், 8-ஆமிடத்திற்கு 9க்குடையவருமாகிய மூவரும் கும்பத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகர் காது செவிடுபடுமாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சுவை

1114

(இ-ள்.) 2-லேனும் 3-லேனும் சூரியன் நின்று 2-3-க்குடையவரை பார்க்கவும் பெற்ற ஜாதகர் கார்ப்பு சுவையில் விருப்ப முள்ளவராம்.

1115

(இ-ள்.) முன் கூறியபடி 3-ல் 2-ல் சந்திரனின்று 3-12-க்குடையவரை பார்க்கவும் பெற்ற ஜாதகருக்குகுளிர்ந்த துவர்ப்புள்ள கந்த மூலக்கறியில் விருப்பமுண்டா யிருக்கும்.

1116

(இ-ள்.) 3-லும் 2-லும் செவ்வாய் நிற்கவும், அந்த ராசியாதிபதி 2-ல் நிற்க்வும் பெற்ற ஜாதகர் சீதளமுள்ள பண்டங்களில் பிரிய முள்ளவராம்.

1117

(இ-ள்·) 3-2-க்குடையவர்கள் புதனின்ற ராசியாதிபதியோடுகூடி மேற்கூறிய ஸ்தானங்களைப்பார்க்கவும் பெற்றஜாதகன் நிறைந்த அறுசுவைப் பண்டங்களைப் புசிப்பவனும்.

1118

(இ-ள்.) 3-லும் 2-லும் குரு விருந்து அந்த 3-2-க் குடையவர்களைப் பார்க்கவும், அல்லது நட்படைந்து நிற்கவும் பெற்ற ஜாதகர் தேனிரம்பிய தித்திப்பில் பிரிய முள்ளவராம்.

1119

(இ-ள்.) 3-லும் 2-லும் சுக்கிரன் நிற்கவும் அவ் விராசியாதிபதியை நட்படைந்து பார்க்கவும் பெற்ற ஜாதகர் புளிப்பில் பிரிய முள்ளவராம்.

1120

(இ-ள்.) 3-லும் 2-லும் சனி நின்று 3-2-க் குடையவர்களைப் பார்க்கவும் பெற்ற ஜாதகன் ஈனமான கைப்பில் பிரியமுள்ளவனும் ஊனமாகிய மதுக்களையு முண்ணுபவனு யிருப்பன்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1121

(இ-ள்.) இந்த லக்கினத்திற் செனித்தா ரென்றிருந்தும் அத்தானுதிபதி கிரகங்களேயுங் கண்டு இன்னருக்கின்ன துரிய தென்று நிதானித்து முன் கூறிய வழிபோல் கூறுவாயாகில் எல்லாம் பலிக்குமாம்.

மாரக விதி

1122

(இ-ள்.) முன்கூறிய 2-ம் இடமும் ஒரு மாரக ஸ்தானமான தால், இதில் சில மாரக விதிகளைக் கூறுகின்றனம். சூரிய னும் செவ்வாயுங் கூடி 6-7-8-ல் நிற்கவும், அவர்களைச் சனி பார்க்கவும் பெற்ற ஜாதகர் வைசூரியினுல் மாரக மாவராம்.

[2] புதன் 2-ல் நீச மடையவும், அவரைச் சனி கேந்திர மடைந்து பார்க்கவும் பெற்ற ஜாதகர் ரணகளத்தில் மாரக மாவராம்.

1123

(இ-ள்.) 2-7-க்குடையவர்களிருந்த ராசியாதிபதியைச் சனி பார்க்கவும் பெற்ற பாவ ஜெனன ஜாதகர் மிகுந்த நோய்களினுல் மரண மாவராம்.

[2] 3-6-க்குடையவர்களும், 8-ம் இடத்திற்கு 6-க்குடைய வரும், 9-ம் இடத்திற்கு 7 6-க்குடையவர்களும் ஜாதகரைக் கொல்வ ரென்றும் மேற்கூறிய மாரக ஸ்தானங்களில் மாரக பல மடைந்த ராசி யறிந்து கூறல் வேண்டுமாம்.

மூன்றும் பாவகம்

1124

(இ-ள்) 3-ம் இடத்தைப் பற்றி வீரியம், யோகம், துணை வர், ஆபரணம், ஆளடிமை இன்னும் இதற்குரிய விதங்களை முறைப்படி கூறுவோமாக.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சுக சகோதரம்

1125

(இ-ள்.) திருவேரகத்தில் வாழ்வுபெருகும் என் குருவாகிய வீரப்பபிள்ளை யென்னுஞ் சாஸ்திர முகிலின் உள்ளத்தின் கண் வைத்த அழகிய கருணையினுல் ஒப்பாக நான் மூன்ரும் பாவகத்தைக் கூறுவதற்கு அவர் கிருபையே உண்மையாகக் கொடுக்குமென்பதாம்.

1126

(இ-ள்.) பூமியின்கண் மூன்ரும் பாவகத்தை ஒப்பிற் குடிமியாக வாசனை பொருந்திய துளபமாலையை யணிந்த மகா விஷ்ணுவின் உபய தாமரைப் பாதங்கள் என் முடிக்கே முடியாகக்கொண்டு கூறுவேனுகவும்.

1127



(இ-ள்.) 7-4-க்குடையவர்கள் கூடி 3-ல் நிற்கவும், 3-ககுடையவர் கேந்திர மடையவும், குரு 5-ல் நிற்கவும் பெற்ற ஜாதகருக்குச் சுகமாகிய நிலைத்த சகோதர முண்டாகுமாம்.

1128



(இ-ள்.) செவ்வாய்க்கு 3-க்குடைய வர் உச்சமடையவும், அவ்வுச்சம் நின்ற ராசியாதிபதி திரிகோண மடையவும், 3-ல் குரு நிற்கவும், அவரை சுபர்கள் பார்க்கவும் பெற்ற ஜாதகருக்குச் செல்வ முடைய துணைவர்கள் பலர்க ளுண்டாம்.

1129



(இ-ள்.) 3-க்குடையவர் திரிகோண மடையவும், செவ்வாயோடு குருவுங் கூடிக் கேந்திர மடையவும் பெற்ற ஜாத கருக்கு மகாவிஷ்ணு அம்சமாய்ச் சகோ தரர்கள் நிலைப்பார்களாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1130



(இ-ள்.) 4-9-க்குடையவர் 11-ல் நிற்கவும், 11-க்குடையவர் 3-ல் அமரவும், சந்திரன் செவ்வாய்க்கு கேந்திரமடையவும் அவரை 7-க்குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகருக்குப் பேதமில்லாத துணைவர்களுண்டாம்.

1131



(இ-ள்.) சந்திரனுக்கும் இலக்கினத்திற்கும் 3-க்குடையவர்கள் கூடி திரிகோண மடையவும், அவரை குரு பார்க்கவுஞ் செவ்வாய் திரிகோண மடையவும் பெற்ற ஜாதகருக்கு புண்ணிய சகோதரர்கள் உண்டாம்.

நிர்ப்பலித சகோதரம்

1132



(இ-ள்.) 3-ம் இடத்தில் புதனிற்கவும், 12-ல் சனி அமரவும், 5-ம் இடம் சூன்யமாய் இருக்கவும், குரு சுபக்கிரகங்களோடு கூடினாலும் பார்க்கப் பெற்ற ஜாதகருக்கு 3-சகோதர மிருந்து அந்தியத்தில் சகோதர மில்லையாம்.

1133

(இ-ள்.) 3-க்குடையவருஞ் செவ்வாயுஞ் சனியுமாகிய மூவருங் கூடி 7-ல் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு ஏக சகோதரமிருந்தும் பிரயோசன மில்லையாம்.

1134

(இ-ள்.) செவ்வாயும் 3-க்குடையவருங் கூடி 8-ல் நிற்கவும், இலக்கினாதிபதி நீசமடையவும், 3-ம் இடஞ் சூன்யமாய் நிற்கவும், பெற்ற ஜாதகருக்கு சொப்பனத்திலுஞ் சகோதர மில்லையாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1135

(இ-ள்.) 3க்குடையவர் 6ல் நிற்கவும், அவரோடு 10க்குடையவர் கூடி நிற்கவும், 3-ஆமிடம் சூன்யமா யிருக்கவும், 11க்குடையவர் 8ல் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு 3-சகோதரரும் அற்பாயுளில் மாரக மடைவார்களாம்.

1136

(இ-ள்.) 3ல் இராகு நிற்கவும், 5-ஆமிடஞ் சூன்யமாகவும், செவ்வாயோடு 8க்குடையவர் கூடி நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு முன்னும் பின்னும் சகோதர மில்லையாம்.

1137

(இ-ள்.) 3க்குடையவர் 11ல் நிற்கவும் 10க்குடையவர் திரிகோணமடையவும், 8க்குடையவர் சந்திரனோடு கூடி நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு 3-சகோதரத்தில் ஒன்று நிலைக்குமாம்.

1138

(இ-ள்.) 3க்குடையவர் செவ்வாயோடு கூடி 12ல் நிற்கவும், அவர்களை சனி பார்க்கவும், 3ல் 8க்குடையவர் நிற்கவும் பெற்ற ஜாதகருக்குச் சகோதரர் மாரகமாம்; அல்லது இருந்தாலும் பயனில்லையாம்.

1139

(இ-ள்.) சனியுஞ் சூரியனும் கூடி 11ல் நிற்கவும், அவர்களை 8க்குடையவர் நோக்கவும் பெற்ற ஜாதகருக்கு பல சகோதரர்கள் வருவார்கள்; அவர்களால் உயிர்ச் சேதமாகுமென்றும் காட்டுக் கெரித்த நிலவுபோ லாகும்.

1140

(இ-ள்) 3க்குடையவருஞ் சனியுங் கூடி 12ல் நிற்கவும், 8க்குடையவர் 3ல் அமரவும் பெற்ற ஜாதகருடைய சகோதரங்களைப் பெற்ற தாய்க்கு வீண் வேதனையும், பாவமுமே சகோதரங்களாக வருவர்களாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1141

(இ-ள்.) 10-3க்குடையவர்கள் கூடி 8ல் நிற்கவும், 8க்குடையவருஞ் செவ்வாயுங் கூடி நிற்கவும் பெற்ற ஜாதகர் சகோதரனை நம்பி யிருப்பது பனி ஜலத்தை மழையென்று நம்பி உழவோர் உழுவது போலாகும்.

ஆபரணம்

1142

(இ-ள்.) 3ல் சுக்கிரன் நிற்கவும், 3க்குடையவர் சுக்கிரன் வீட்டிலிருக்கவும் பெற்ற ஜாதகர் பிரகாசிக்கின்ற முத்து ரத்தின மாலையணியும் பொன்போன்ற தேகியாம்.

1143

(இ-ள்.) குரு 3ல் நிற்கவும், புதனோடு 3க்குடையவர் கூடி பகை யடையவும், அவர்களை செவ்வாய் பார்க்கவும் பெற்ற ஜாதகர் ரத்தினமாலை யணிவாரென்றும் வெள்ளியைச்சுள்ளி போல் மதிப்பவ ரென்றுங் கூறவும்.

1144

(இ-ள்.) இலக்கினாதிபதியோடு 2க்குடையவர் கூடி கேந்திர மடையவும், இவர்களைப் புதன் பார்க்கவும் பெற்ற ஜாதகர் ரத்தின மாலை யணிபவரெனவும், காந்தியுடையவ ரெனவுங் கூறவும்.

1145

(இ-ள்.) சந்திரன் 3ல் நிற்கவும், குரு 5ல் அமரவும் பெற்ற ஜாதகர் ரத்தின மாலையை யணிபவராம்.

1146

(இ-ள்.) இராகுவோடு 3க்குடையவர் கூடி 9ல் நிற்கப் பெற்ற ஜாதகர் வைடூரிய ரத்தின மாலை யணிபவராம்.

1147

(இ-ள்.) 3ல் கேது நிற்கவும், 3-2க்குடையவர்கள் கூடி திரிகோண மடையவும் பெற்ற ஜாதகர் ரத்தினம், பொன், முத்துமாலைகளை யணிபவராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1148

(இ-ள்.) குருவும் 3-க் குடையவருங் கூடி 7-ல் அமரவும், 7-க்குடையவர் 3-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் ரத்தினம், பொன், முத்து முதலாகிய மாலைகளை யணிபவராம்.

1149

(இ-ள்.) சந்திரன் நின்ற ராசிக்கு 2-க் குடையவர் 12-ல் நிற்கவும், அவரை செவ்வாய் பார்க்கவும் பெற்ற ஜாதகருக்குப் பலவித ஆபரண மிருந்தும் தாமு மணியாது தன் வீட்டிலிருக்கும் நாய்க்கும் ஒரு பித்தளைச் சலங்கையுங் கட்டிப் பார்க்காராம்.

1150

(இ-ள்.) 3-க் குடையவர் 8-ல் நிற்கவும், 8-க் குடையவர் 3-ல் அமரவும் பெற்ற ஜாதகருக்கு ஆடையாபரண ரத்தினங்களில் மிகுந்த ஆசை மாத்திர முண்டு; அணிய விதி யில்லாதவராம்.

1151

(இ-ள்.) சுக்கிரன் 12-ல் நிற்கவும், 12-க் குடையவர் 3-ல் அமரவும் பெற்ற ஜாதகர் மனந் துக்கமாய் ஓர் ஆபரணமும் அணிய மாட்டாதவராம்.

வீரியம்

1152

(இ-ள்.) 3-க் குடையவர் பாபரோடு கூடி 12-ல் நிற்கவும், 12-க் குடையவர் உச்ச மடையவும் பெற்ற ஜாதகர் வீரர்கள் செய்யும் யுத்தங்களை ஒரு துரும்பாக மதிப்பவராம்.

1153

(இ-ள்.) செவ்வாய் 3-க் குடையவராகிப் பலஹீன மடையவும், பாபர்கள் 12-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் போர்க்குரிய பீமனையும் காமனையும் தனக்கிணை யல்ல வென்று மதிக்கும் வீரியமும் புண்ணியமு முடையவராம்.

1154

(இ-ள்.) செவ்வாயோடு சந்திரன் கூடி 12-ல் நிற்கவும், அவர்களை 3-க் குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகர் ராஜ ரீகத்திற் சென்று புஜபல வீரிய ஜெயம் பொருந்துவராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1155

(இ-ள்.) 5-க் குடையவர், செவ்வாய், 2-க் குடையவர், குரு ஆகிய நால்வரும் 3-ல் நிற்கப் பெற்ற ஜாதகர் வீரமும் ஊக்கமும் நிதியு முடையவராம்.

1156

(இ-ள்.) செவ்வாய், சனி இவர்கள் கூடி 10-லேனும் 3-லேனும் நிற்கவும், நின்ற ராசியாதிபதி கேந்திர மடையவும் பெற்ற ஜாதகர் தனக்கு மேலாகிய வீரர்களில்லையென, வஞ்சகருடைய நெஞ்சைக் கிளப்புவ ரென்றுங் கூறுக.

1157

(இ-ள்.) ராகுவோடு 3-க் குடையவர் கூடி திரிகோண மடையவும் அவர்களை குரு பார்க்கவும் பெற்ற ஜாதகர் திருடர்களுக்குப் புலிபோலும் அரசர்களுக்குப் பட்சமுள்ள துணை போலு மாவராம்.

1158

(இ-ள்.) 3-ல் புதன் நிற்கவும், குரு கேந்திர மடையவும், 8-3-க் குடையவர்கள் 8-12-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் வீரம், ஊகம், கோப முடையவராம்.

அவ வீரியம்

1159

(இ-ள்.) சுக்கிரனும் 2-3-க் குடையவர்களுமாகிய மூவரும் திரிகோண மடையவும், இவர்களை 5-க் குடையவர் நோக்கவும் பெற்ற ஜாதகர் சாஸ்திர வல்லபராயிருந்தும் நரி ஊளையிடில் அச்சப்படும் மெலிந்த மனமுடையவராம்.

1160

(இ-ள்.) 6-3-5-க் குடையவர்கள் ஆகிய மூவரும் 12-ல் பல மடைந்து நிற்கப்பெற்ற ஜாதகர் ராஜசபையிலும் பந்துக்கள் சபையிலும் பயமும் வெட்கமு முடையவராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1161

(இ-ள்.) 4-3-க் குடையவர் கூடி நிற்கவும், அதிலொருவர் நீச மடையவும், அவர்களை 8-க் குடையவர் நோக்கவும் பெற்ற ஜாதகர் மிகுந்த ஏழையிலும், புத்தி கோழையிலும் முதன்மை யுடையவராம். ஆந்தை அலறினாலும் அச்சப்படுவராம்.

போகம்

1162

(இ-ள்.) 7-ல் இராகு நிற்கவும், 7-க் குடையவர் கேந்திர மடையவும் பெற்ற ஜாதகர் தன் மனையாளோடு மதனநூல் விதிப்படி லீலை செய்து எந்நாளும் போக சுக முடையவராம்.

1163

(இ-ள்.) 2-3-க் குடையவர்கள் கூடி திரிகோண மடைய வும், அவர்களை 8-க் குடையவர் 3-ல் இருந்து பார்க்கவும் பெற்ற ஜாதகர் அன்னிய மனைவியின் மனம் நோகாது புண ரும் லீலாவினோதராம்.

1164

(இ-ள்.) சந்திரனுக்கு 3-ல் 7-க் குடையவர் நிற்கவும், அம் மூன்றுக்குடையவர் அவரைப் பார்க்கவும் பெற்ற ஜாதகர் விலை மாதரின் மலையைப்போன்ற ஸ்தன்னியமே நிலைத்த சுகமென்றும் அடங்கி யிருப்பராம்.

1165

(இ-ள்.) சுக்கிரனும், 2-3-க் குடையவர்களாகிய மூவரும் திரிகோண மடையவும், அவர்களைக் குரு பார்க்கவும் பெற்ற ஜாதகர் பல ஸ்திரீகள் சுகமடைந்தும் மன்மதனுக்கு பட்ச முடைய ராவராம்.

அடிமை

1166

(இ-ள்.) 5-3-க் குடையவர்கள் கூடவும், சனி 3-ல் நிற்க வும், பெற்ற ஜாதகர் அடிமைகள், பல குடியோர்கள், கீர்த்தி மான்கள் ஆகியவர்களுக்குத் துணையா யிருப்பவராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1167

(இ-ள்.) 7-2-க் குடையவர்கள் கூடி 3-ல் நிற்கவும், 3-க் குடையவர் உச்சமடையவும் பெற்ற ஜாதகர் விலையாக பல சேவகர்களைக் கொள்ளும் வாழ்வும், அன்ன சத்திரம் போன்ற கிரகமு முடையவராம்.

1168

(இ-ள்.) 9-3-10-க் குடையவர்கள் கூடி 5-ல் நிற்கவும், அவர்களைப் புதன் நோக்கவும் பெற்ற ஜாதகர் தன்னிடத்தில் வரும் பரதேசிகளை ஆசையோடு உபசரித்துப் பஞ்சமாகிய வறுமையைக கெஞ்சும்படி செய்வராம்.

1169

(இ-ள்.) 4-3-க் குடையவர்களோடு புதன் கூடி கேந்திர மடையவும், அதிலொருவர் நீசமுற்றிருக்கவும் பெற்ற ஜாதகர் துஷ்ட குலத்தார்களை அடிமைபுரியச் செய்யும் சுந்தர வார்த்தையுள்ள சற்குணரா யிருப்பராம்.

போகம்

1170

(இ-ள்.) 3-க் குடையவர் 7-ல் இருக்கவும், அவரை குரு பார்க்கவும், 7-க் குடையவர் இலக்கினத்தினின்று புதனையும், சுக்கிரனையும் பார்க்கவும் பெற்ற ஜாதகர் வயது மிகுந்தகாலத்திலும் உத்தம ஸ்திரீ போக முடையவராம்.

1171

(இ-ள்.) 3-ம் இடத்தில் 7-9-க் குடையவர்கள் கூடி நிற்கவும், அவர்களைக் குரு பார்க்கவும் பெற்ற ஜாதகர் அழகிய ஸ்திரீகளால் சுக போகாதிகளை சதா அனுபவிப்பவராம்.

1172

(இ-ள்.) 5-3-க் குடையவர்கள் கூடி 7-ல் நிற்கவும், இலக்கினாதிபதி 9-ல் அமரவும், 9-க்குடையவர் இலக்கினத்தில் நிற்கவும், 5-ல் சந்திரன் அமரவும் பெற்ற ஜாதகர் மிகுதியான அடிமையாட்களை யுடையவராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1173

(இ-ள்.) 9-10க்குடையவர் 3ல் நிற்கவும், அவர்களை குரு பார்க்கவும், 11க்குடையவர் இராகுவுடன் கூடி 4ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் மேற்கூறிய அடிமை யுடையவரேயாம்.

நான்காம் பாவகம்

1174

குரு வணக்கம்

(இ-ள்.) பெருமையை யுடைய பாகவதர்களுக்கு அன்பராகிய ஜோதிட சித்தாந்தி யென்னும் வீரப்ப பிள்ளையினுடைய திருவடிகளை எனது கருத்தி னிறுத்தி நான்காம் பாவகத்தைக் கூறுகின்றனன்.

1175

(இ-ள்.) நான்காம் பாவகத்தைப் பற்றி வாகனம், நற்பலன், வர்த்தகம், வித்தை, நிதி, கன்று காலி இன்னும் இதற்குரிய தேவபக்தி முதலியவற்றைக் கூறுவோமாக.

மாதுரு பாவகம்

1176

(இ-ள்.) 4க்குடையவர் ஆட்சி பெற்று சந்திரனுக்கு திரிகோண மடைந்து நின்றாலும்,

[2] சந்திரன் 9ல் நிற்கவும், 9க்குடையவர் 4ல் நிற்கவும் பெற்றாலும்,

[3] இலக்கினாதிபதி 4க்குடையவரோடு கூடி 9ல் நிற்கவும், அவர்களை 7க்குடையவர் பார்க்கவும் பெற்றாலும் இவர்களுடைய மாதாவுக்குப் பூரண வயது கூறவும்.

1177

(இ-ள்.) 1-4க்குடையவர்கள் கூடித் திரிகோண மடையவும், இலக்கினாதிபதிக்குத் திரிகோணத்தில் குரு நிற்கவும் பெற்ற ஜாதகர் மாதாவுக்குப் பூரண வயதாம்.



CC0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] சந்திரனுக்கு 4க்குடையவரும் லக்கினத்திற்கு 4-8க்குடையவருமாகிய மூவருங் கூடி நிற்கவும், அவர்களை சனி சந்திரன் பார்க்கவும் பெற்ற ஜாதகர் மாதுரு மாரக மடைவளாம்.

1178

(இ-ள்.) 4ல் சனி நீச மடையவும், அவரை 8க்குடையவர் பார்க்கவும், நாலுக்குடையவர் 10ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் மாதா இவனை அலற விட்டு மரண மடைவளாம்.



[2] சந்திரன் தேய்ந்து 6-8-12ல் நிற்கவும், 8ல் 4க்குடையவர் நிற்கவும் பெற்ற ஜாதகருடைய மாதுருக்கு மேற்கூறிய விதியேயாம்.

[3] 6-4க்குடையவர் கூடி 9ல் நிற்கவும், சந்திரன் 7ல் அமரவும் பெற்ற ஜாதகரின் மாதுரு வேசைக்குணமுடையவளாம்.



1179

(இ-ள்.) 9-4-1க்குடையவர்களாகிய மூவரும் 4ல் நிற்கவும், குரு லக்கினத்தைப பார்க்கவும் பெற்ற ஜாதகர் மிகுதியும், வாகனம், ஆடையாபரணத்தோடு அரசர் சுகமடைவராம்.



CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy



[2] சந்திரன், 4-க்குடையவர், குரு, சுக்கிரன் ஆகிய நால்வருங் கூடியிருந்த ராசியாதிபதி நட்பு ஆட்சி உச்ச மடையப் பெற்ற ஜாதகருக்கு மேற்கூறிய பலனும்.

1180



(இ-ள்.) சுக்கிரன் நின்ற ராசிக்கு 9-10-க் குடையவர்கள் லக்கினாதிபதியோடு கூடி 4-ல் நிற்கப் பெற்ற ஜாதகர் கணக்கில்லாத பொருள், பூமி, ஏவலாட்களோடு சுகித்திருப்பராம்.



[2] குரு, 9-க்குடையவர், சுக்கிரன் ஆகிய மூவர்களும் கூடி சந்திர கேந்திரமடையவும், அவ் விராசியாதிபதி 4-ல் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு மேற்கூறிய பலனேயாம்.

1181



(இ-ள்.) 4-2-க்குடையவர்கள் கூடி 9-ல் நிற்கவும், குரு சந்திரனுக்கு 2-ல் அமரவும் பெற்ற ஜாதகர் வித்துவானவராம்.

[2] 2-க்குடையவர் 4-ல் நிற்கவும், 4-க்குடையவர் 2-ல் மாறி நிற்கவும், இவர்களைச் சுபர்கள் பார்த்து நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு மேற்கூறிய பலனேயாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

		சந்	
	இராசிச்		குரு
	சக்கரம்		
	சு-பு செ		ல

[3] 10-9-3-க் குடையவர்களாகிய மூவரும் 4-ல் நிற்கவும், அவர்களைச் சுபர்கள் நோக்கவும் பெற்ற ஜாதகர் மேற்கூறிய பலனுடையவரேயாம்.

1182 - 1183

செ			ல
	இராசிச்		
	சக்கரம்		
			சனி கு-பு

(இ-ள்.) 4-ம் இடஞ் சுபர் வீடாகி அதற்குரியவர் குருவினோடும் 9-க்குடையவரோடுங் கூடி செவ்வாய் பார்வையடைந்து நிற்கவும் பெற்ற ஜாதகர் கருங்கல், செங்கல, சுண்ணாம்பு சர்ந்துகளால் கட்டிய கெட்டி மாளிகையில் வாழ்பவராம்.

[2] 4-9-க்குடையவர்கள் கூடி 12-க்குடையவருக்கு 2-ல் நிற்கப் பெற்ற ஜாதகருக்கு மேற்கூறிய பலனேயாம்.

[3] சந்திரனுக்கு 12-க்குடையவர் உச்ச மடைந்து 4-3-க் குடையவரோடு கூடி 12-க்குடையவருக்கு 12 ல் நிற்கப் பெற்ற ஜாதகருக்கும் மேற்கூறிய பலனேயாம்.

[4] இன்னுமொரு விதி 12-க்குடையவரோடு எத்தனை கிரகங்கள் கூடி யிருந்தனவோ அத்தனை கிரகங்க ளுண்டாம்.

[5] இன்னும் வலுமையாக கிரகம் நின்ற நிலை யறிந்து பலன் கூறல் வேண்டுமாம்.

1184

(இ-ள்.) 4-க்குடையவர் பகை யடையவும், அவரை 8-க் குடையவர் பார்க்கவும், 12-க்குடையவர் 4-ல் பலமடைந்து நிற்கப் பெற்ற ஜாதகருக்கும்,

[2] சந்திரனுக்கு 8-4-க்குடையவர்களும், சுக்கிரனுங் கூடி 4-ல் நிற்கப் பெற்ற ஜாதகருக்கும்,

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[3] 4-ஆமிடத்திற்கு 2-பக்கமும் பாபர்கள் நிற்கப் பெற்ற ஜாதகருக்கும்,

1185

(இ-ள்.) சந்திரனுக்கு 4ல் 8க்குடையவர் நின்று 12க்குடையவர் பார்வை பெற்று நின்ற ஜாதகருக்கும் கூரை வீடு உண்டாம். இல்லாவிடில் சொந்த மனையில்லாமல் அடுத்த வீட்டிலும், சத்திரம் மடாலயங்களிலும் இணங்கி வாழ்பவராம்.

1186



(இ-ள்.) ஆட்சி பெற்ற சந்திரனோடு 4க்குடையவரும், சுக்கிரனுங் கூடி நிற்கவும், அவர்களைக் குரு பார்க்கவும் பெற்ற ஜாதகர் சிவந்த பசுவின் பாலைப் புசிப்பவராம்.

[2] 4க்குடையவரும், சந்திரனுக்கு 4க்குடையவருங் கூடி 5ல் நிற்கவும், அவர்களை சுபர்கள் பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு வெள்ளை நிறமுள்ள பசுவின் பால் பெறுவராம். இன்னும் மலட்டுப் பசுவாயினும் பால் கொடுக்குமாம்.

1187

(இ-ள்.) 4க்குடையவர் சுபராயிருந்து 5ல் இருக்கவும், சுக்கிரனோடு 5க்குடையவர் கூடி 4ல் நிற்கவும் பெற்ற ஜாதகருக்குப் பலவித பசு வர்த்திகள் மிகுதியாயுண்டாகுமாம்.

[2] குருவும், 4க்குடையவருங் கூடி சந்திரனுக்கு 4ல் நிற்கவும், அவ் விராசியாதிபதி இலக்கினத்திற்கு 4ல் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு மேற்கூறிய பலனேயாம்.

1188

(இ-ள்) சூரியனும், 4க்குடையவருங் கூடி 10ல் நிற்கவும், 4-ஆமிடத்தில் 8க்குடையவர் அமரவும், அவரைச் சனி பார்க்கப் பெற்றாலும்,

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] சந்திரனும், 4க்குடையவரும் 3ல் நிற்கவும், அவரை 10க்குடையவர் பார்க்கப் பெற்றாலும்,

[3] சந்திர லக்கினாதிபதியை 10க்குடையவர் கூடி 9ல் நிற்கவும், சந்திரனும் 8க்குடையவருங் கூடி 4ல் நிற்கவும் பெற்றாலும்,

1189

(இ-ள்.) 5-4க்குடையவர்களும், குருவும் ஆகிய இவர்கள் நின்ற ராசியாதிபதிகள் பகை, அஸ்தமனம், நீச முதலிய மெலிவடைந்து நிற்கப் பெற்றாலும், காமதேனுவிடத்தில் சென்றாலும் பால் கிடைப்பது அரிதாகுமாம்.

1190

(இ-ள்) சந்திரனும், 4க்குடையவருங் கூடி வலுப்பெற்று 4ல் நிற்கவும், அவர்களைக் குருவும், 11க்குடையவரும் பார்க்கவும் பெற்றாலும்,

[2] 9க்குடையவரும், குருவுங் கூடி 4ல் நிற்கவும், 4க்குடையவர் பலம் பெற்றுச் சுபர் நோக்க மடைந்தாலும்,

[3] 5-4க்குடையவர்கள் மாறி நிற்கவும், 7ல் குரு ஆட்சி பெற்று நின்றாலும்,

1191

(இ-ள்.) 9ல் 4க்குடையவர் சுக்கிரன் பார்வை பெற்று நிற்கவும், 9க்குடையவர் 4-ஆமிடத்தில் மாறி நின்று சுபர் நோக்கப் பெற்றாலும், இந்திர சுகமடைந்து பிறர் மனையில் சென்றும் இன்பம் அனுபவிப்பர்களாம்.

1192

(இ-ள்.) 12ல் 4க்குடையவர் நிற்கவும், சந்திரனுக்கு 4க்குடையவர் பகை நீசமடைந்து நின்றாலும்,

[2] சந்திரனுக்கு 4க்குடையவரும், லக்கினத்திற்கு 4க்குடையவரும், பகை நீச மடையவும், 4ல் 8க்குடையவர் நிற்கப் பெற்றாலும்,

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[3] சனி 4-ல் நிற்கவும், 4-க்குடையவர் சூரியனோடு கூடி 6-ல் அமரவும், 8-க்குடையவர் பார்க்கப் பெற்றாலும்,

1193

(இ-ள்.) சுகமிருந்த ஊரிலேனும் இருந்து அறியாதவர்களென்றும், பின்னும் பிறரால் நற்சுகங் கிடைத்தாலும் சுகித்திருக்கத் தெரியாதவர்களென்றும், அப்படி அனுபவித்தாலும், மனத்துயரத்தால் இறந்து போவார்களென்றும், சுகமுடையாரைக் கண்டு பொறாமைப் படுவார்களென்றுங் கூறலாம்.

ஐந்தாம் பாவகம்

1194

குரு வணக்கம்

(இ-ள்.) அருமையான வேதத்தின் மகா வாக்கியத்தை சொற்பொருளா யருளிச் செய்த குருவாயும், மறைவில்லாமல் அன்பர்களுக்கு வேதத்தினின்று வரங்கொடுக்கும் பெம்மானாகிய சுப்ரமண்யக் கடவுள் அழகிய வேதமே வடிவாகச் செழித்த திருவேரகத்தில் வளருஞ் செல்வன் இங்கு எனக்கு நன்னூலாகிய வேதத்தினது தேன்களை வடித்து அருளிச் செய்த வீரப்பபிள்ளை யவர்கள் மலர்த்தாள் வாழக்கடவது.

1195

(இ-ள்.) 5-ம் பாவகத்தைப் பற்றித் தாம் ஆதரிக்குந் தெய்வங்கள் பிதுர்பாகங்களைக் கருமம், யோகம், பரவிஷயம் இவைகளை என் குருவின் பாதங்களைத் தஞ்சமென்றடைந்து கூறுவேனாகவும்.

தெய்வ வழிபாடு

1196

(இ-ள்,) 5-ம் இடத்திற் புருஷ கிரகம் நிற்கவும், அவர்களைப் புருஷக்கிரகம் பார்க்கவும், 5-க்குடையவர் ஒற்றை ராசியில் நிற்கவும் பெற்ற ஜாதகர் ஆண் தெய்வத்தைக் கொண்டாடுவராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] 5-ம் இடம் பெண் ராசியாகி அதில் பெண் கிரகம் நிற்கவும், பெண் கிரகங்கள் பார்க்கவும் பெற்ற ஜாதகன் பெண் தேவதையைக் கொண்டாடுவனும்.

[3] சூரியன் வீட்டில் 5-க்குடையவர் நிற்கவும், அவரைச் சூரியன் பார்க்கவும் பெற்ற ஜாதகன் 5-எழுத்தென்னும் பஞ்சாக்ஷர ரூபியாகிய சிவபிரான் அடியை வணங்குவனும்.

1197

(இ-ள்.) 5-ல் சந்திரன் நிற்கவும், 5-க்குடையவர் செவ்வாயோடு கூடி அமரவும் பெற்ற ஜாதகர் மயிலேறுஞ் சுப்ரமண்யக் கடவுளைக் கொண்டாடுவராம்.

[2] 5-க்குடையவரும், புதனும் மாறி நிற்கவும் அல்லது புதன் 5-க்குடையவரைப் பார்க்கவும் பெற்ற ஜாதகன் மகாவிஷ்ணுவை மனதிற் கொண்டாடுவனும்.

1198

(இ-ள்.) குரு 5-ல் நிற்கவும், 5-க்குடையவர் கன்னியாகிய புதன் வீட்டில் அமரவும் பெற்ற ஜாதகர் பலகோடி ஜகங்கள் பெற்ற கௌரியம்மையைப் போற்றுவராம்.

[2] இலக்கினாதிபதியும் 5-க்குடையவரும் பகை பெற்றுப் பகை ராசியில் நிற்கவும் பெற்ற ஜாதகனுக்கு ஒரு தெய்வமுமில்லை யென்னும் இடும்பன் கசடனும்.

புத்திர லாபம்

1199

(இ-ள்.) சனியோடு 5-க்குடையவர் கூடி 3-ல் நிற்கவும், குருவுடன் 5-க்குடையவர் நட்பாய்க் கூடி 9-ல் அமரவும் பெற்ற ஜாதகருக்கு அந்திய காலத்திற் புத்திர ருண்டாம்.

[2] குருவும், 5-க்குடையவருங் கேந்திர மடையவும், பாபர்கள் 5-ல் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு விருத்த பருவத்தில் புத்திர ருண்டாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1200

(இ-ள்.) சூரியனும், 5க்குடையவருங் கூடி சனி வீட்டில் நிற்கவும், அவர்களைச் சனி பார்க்கவும் பெற்ற ஜாதகர் மனைவியை கோபிக்காது ரகசியமாய் இருப்பராகில் புத்திரன் நிலைக்குமாம்.

[2] சந்திரனும், 8-5க்குடையவர்களாகிய மூவர்களுங் கூடிச்செவ்வாய் வீட்டில் நிற்கவும், அவர்களைச்சனி செவ்வாய் பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கும் மேற்கூறிய பலனும்.

1201

(இ-ள்.) 4-5க்குடையவர்கள் மாறி நிற்கவும், 8க்குடையவர் சுபரோடு கூடி ஆட்சி யடையவும், லக்கினதிபதி கேந்திரத்திருக்கவும், அவரோடு பூர்வ சந்திரன் கூடவும், 12-9க்குடையவர்கள் கேந்திர மடையவும், 2க்குடையவர் சந்திரகேந்திர மடையவும் பெற்ற ஜாதகர் புத்திர பௌத்திரருடன் வாழ்பவராம்.

1202

(இ-ள்.) குரு 3ல் நிற்கவும், 3க்குடையவர் 5க்குடையவரைப் பார்க்கவும், சந்திரன் 2ல் நிற்கவும், அவரைச் சுபர்கள் பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு மிகுதியாகிய புத்திரருண்டாம்.

[2] லக்கின முதல் 9-ராசிக்குள் 5க்குடையவர் நிற்கவும், அவர் நின்ற ராசியாதிபதி 5-ஆமிடத்தில் நிற்கவும், 6ல் சனி நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு 6-7-புத்திரர் நிலைப்பராம்.

1203

(இ-ள்.) சந்திரனுக்கு 5க்குடையவரோடு 2க்குடையவர் கூடி 5ல் நிற்கவும், 5க்குடையவர் உச்சம்பெற்று சுபர்பார்வை யடைந்து நிற்கவும் பெற்ற ஜாதகர் நற்குண புத்திரரைப் பெறுவராம்.

[2] 5-2-4க்குடையவர்கள் ஆகிய மூவரும் 3ல் நிற்கவும், அவர்களைக் குரு பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு புத்திர பௌத்திராதிகளுண்டாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1204

(இ-ள்.) 5-4க்குடையவர்களும், புதனும் ஆகிய மூவரும் ஆட்சி யுச்சமடையவும், 7க்குடையவர் சூரியனோடு கூடி ஆட்சியில் நிற்கவும், 8க்குடையவர் லக்கினத்தி னிற்கவும், சுக்கிரன், சந்திரன், குரு ஆகிய மூவரும் திரிகோண கேந்திர மடையவும், புதன் குரு வீட்டில் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு யௌவன காலத்தில் புத்திர ருண்டாம்.

புத்திர ஹீனம்

1205

(இ-ள்.) 7க்குடையவர் பாபரோடு கூடி 5ல் நிற்கவும், அவரைச் செவ்வாய் சனி பார்க்கவும், 5க்குடையவர் 12ல்மேவ பாபர்கள் நோக்க, 5-ல் ராகுமேவ, சந்திரன் குரு இவர்களுக்கு 5க்குடையவர் நீச மூற்றிருக்கவும் பெற்ற ஜாதகர் பிள்ளை யில்லாத பதடியாவராம்.

1206

(இ-ள்.) குருவும், 7-5க்குடையவர்களும், லக்கினாதிபதியாகிய நால்வர்களும் பலஹீனமடைந்து நின்றாலும்,

[2] 4க்குடையவர் 5ல் நிற்கவும், 8க்குடையவர் 8ல் அமரவும், அவரைப் பாபர்கள் பார்க்கவும் பெற்றாலும்,

[3] 2-4-8க்குடையவர்கள் 12ல் நிற்கவும், அவர்களைச் சுபக் கிரகங்கள் பார்க்கப் பெற்றாலும், இம்மூன்று தரமுள்ள ஜாதகர்களும் பிள்ளை பெறாத மலடர்களாம்.

1207

(இ-ள்.). அப்படி இவர்களுக்குப் பிள்ளையுண்டான போதினும் குரங்கு போலும், பேய் போலும் இருக்குமாம்.

[2] கன்னியா லக்கினத்தில் செனிக்க மீனத்திற் சூரியன் செவ்வாய் நிற்கவும், 5ல் சனி நிற்கவும் பெற்றாலும்,

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[3] 5-9-க் குடையவர்கள் 7-ல் நிற்கவும், அவரைச் சனியும், 8-க் குடையவரும் பார்க்கவும் பெற்ருலும் இவ் விரண்டு ஜாதகர்களுக்கும் புத்திரன் பிறந்து அரிஷ்டப் படுவனும்.

1208

(இ-ள்) சூரியனும், 9-க் குடையவரும் நட்பாகக் கூடி 5-ல் நிற்கவும், அவர்களைச் சுபர்கள் பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கும்,

[2] 5-க் குடையவர் சுபராகிச் சுபருடன் கூடி நிற்கவும், சூரியன் சுபரோடு கூடி நட்படையவும், சுபர்கள் 5-ல் பலமடைந்து நிற்கவும் பெற்ற ஜாதகருக்கும்,

1209

(இ-ள்.) சரராசியில் சூரியனேடு 9-க் குடையவருங் கூடி நிற்கவும், அச் சரராசியாதிபதி திரராசியில் திரிகோணமடையவும், அவரைக் குரு பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கும்,

[2] சந்திரனுக்கு 9-க்குடையவர் உச்சமடையவும், இலக்கினத்தில் 4-க் குடையவர் நிற்கவும், அல்லது நீசமடையவும் பெற்ற ஜாதகருக்கும் பிதிர் நெடுநா ளிருப்பராம்.

1210

(இ-ள்.) இலக்கினுதிபதியோடு 5-க் குடையவர் கூடிப் பகை செய்யவும், அவர்களைச் சனியும், 9-க் குடையவரும் பார்க்கவும் பெற்ற ஜாதகருடைய பிதிர் மாரகமாவராம்; ஆனுல் இவனைப் பெற்ற தாய் பணிவிடை புரிந்து பிதா மாரகமே யாவராம்.

[2] 9-க் குடையவரும், சனியுங் கூடி 2-ல் நிற்கவும், 5-க் குடையவரும் சூரியனுங் கூடி 12-ல் அமரவும் பெற்ற ஜாதகருடைய பிதிர் மாரக மாவராம்.

1211

(இ-ள்.) சூரியனும், சந்திரனுங் கூடிச் சனி வீட்டில் நிற்கவும், அச் சனி இவர்களைப் பார்க்கவும், 4-9-க் குடையவர்கள் பகை வீட்டில் நிற்கவும் பெற்ற ஜாதகருடைய தாய் தந்தை யிருவர்களும் மாரக மடைவார்கள்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] சந்திரன், சூரியன், 4-9-க் குடையவர்கள் ஆகிய நால்வரும் நீசம், அஸ்தமனம் பகை யடையவும் பெற்ற ஜாதகருடைய தாய் தந்தைக்கும் மேற்கூறிய பலனேயாம்.

1212

(இ-ள்.) 4-5-க் குடையவர்கள் 8-12-ல் நிற்கவும், அவ்விராசியாதிபதி 9-ல் அமரவும், 10-க் குடையவர்கள் 6-க்குடையவரோடு கூடி 7-ல் நிற்கவும் பெற்ற ஜாதகனிருந்தும் தந்தை கருமஞ் செய்யானும்.

[2] 5-க் குடையவர் பாவியாகி 4-ல் நீசமடையவும், அவ்விராசியாதிபதி 9-ல் நிற்கவும், இலக்கினுதிபதி இராகுவோடு கூடி நிற்கவும் பெற்ற ஜாதகன் பிதாவுக்குக் கர்மஞ் செய்யானும்.

[3] 5-க் குடையவர் 9-10-க் குடையவர்களுக்கு 12-ல் நிற்கவும், செவ்வாய், புதனுங் கூடி 10-ல் அமர்ந்து நின்றாலும்,

[4] 5-க் குடையவரும் சூரியனுங் கூடி 8-ல் நிற்கவும், 8-க் குடையவர் 10-ல் அமரவும், குரு 12-ல் நிற்கவும் பெற்றாலும், பிதாவுக்குக் கருமஞ் செய்யார்களாம்.

1213

(இ-ள்.) குரு, புதன், சுக்கிரன் ஆகிய மூவர்களும் 5-ல் நிற்கவும், லக்கினுதிபதியும், 9-க் குடையவருங் கூடி 4-ல் அமரவும், அவ் விராசியாதிபதி குரு வீட்டில் நிற்கவும் பெற்ற ஜாதகர் சக்கராதிபதியாய் உலகினை யாண்டு தன் மகனுக்குச் செல்வ பாக்கியங்களைக் கொடுத்துவிட்டுப் பிறகு முத்தி யடைவராம்.

1214

(இ-ள்.) குருவும், 5-9-க் குடையவர்களுமாகிய மூவர்களும் 9-ல் நிற்கவும், இலக்கினுதிபதி லக்கினத்தி லமரவும் பெற்ற ஜாதகர் சக்கராதிபதியாய் வாழ்பவராம்.

ஆறும் பாவகம்

1215

(இ-ள்.) ஆறும் பாவகத்தினுல் கடன், பகை, சத்துரு, பீடை, இகழ்ச்சி, தண்டனை, ரோகம், விரணம், காயம்,

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வேதனை ஆகியபலன்களைக் கூறுவதற்கு எமது குருவாகிய வீரப்ப பிள்ளைபாதங்களை வணங்குவேனாகவும்.

1216 - 1217

(இ-ள்.) 12-க்குடையவர் 2-ல் நிற்கவும், 2-க்குடையவர் 6-ல் அமரவும், 9-க்குடையவர் பலஹீன மடையவும் பெற்றாலும்,

[2] 6-க்குடையவர் கேந்திரத்தில் உச்ச மடையவும், 9-க்குடையவர் 12-ல் நிற்கவும் பெற்றாலும்,

[3] 12-க்குடையவர் குருவோடு கூடி 2-ல் நிற்கவும், சந்திரனுக்கு 2-க்குடையவர் நீச மடையவும் பெற்றாலும்,

[4] சந்திரனுக்கு 2-12-க்குடையவர்கள் லக்கினத்தில் நிற்கவும், உபய ராசியாதிபதி சந்திரனுக்கு 6-ல் நிற்கவும் பெற்றாலும்,

[5] 8-9-க்குடையவர்கள் 12-ல் நிற்கவும், அவர்களை 12-க்குடையவர் பார்க்கவும் பெற்றாலும்,

[6] இலக்கினாதிபதி 2-ல் நிற்கவும், 7-க்குடையவர் 12-ல் அமரவும், சந்திரனுக்கு 6-க்குடையவர் உச்ச மடைந்து நிற்கவும் பெற்றாலும்,

(7) 9-க்குடையவர் 6-க்குடையவரோடு கூடி உச்ச மடையவும், 12-க்குடையவர் 2-ல் நிற்கவும் பெற்றாலும்,

[8] குரு 8-ல் நிற்கவும், 7-க்குடையவர் 12-ல் அமரவும் சந்திரனுக்கு 6-க்குடையவர் உச்ச மடைந்து நிற்கவும் பெற்றாலும்,

[9] 6-க்குடையவரோடு 2-க்குடையவர் கூடி 12-ல் உச்ச மடைந்து நிற்கவும் பெற்றாலும்,

[10] 6-க்குடையவரோடு 9-க்குடையவர் கூடி உச்சமடையவும், 12-க்குடையவர் 4-ல் நிற்கப் பெற்றாலும், (11) ஜாதகர்களும் மிகுந்த ரொணவாளராகி முன் பொருள்களைத் துலைத்துவிட்டுப் பாதகராகியே மாரகப்படுவார்களென்றும், பின்பு புத்திரர்களால் கடன் தீருமென்றுங் கூறுக. ஆனால், இவர் மரணமடைந்த பிறகு தான் கடன் விட்டதென்று உலகோர் கூறுவர்களாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1218

(இ-ள்-) புதனும் 6-க்குடையவரும், சந்திரனும் ஆகிய மூவர்களும் இலக்கினத்தில் நிற்கவும், இவர்களைச் சூரியன் பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு ஆண் குறியாகிய ஸ்தானத்தில் புண்ணடைந்து மரண மடைவராம்.

[2] சந்திரனும் 6-7-க்குடையவர்களுமாகிய மூவர்களும் 8-ல் நிற்கவும், அவர்களைப் பாபர்கள் நோக்கவும் பெற்ற ஜாதகருக்குத் திரேகத்திற் புண்களாகி மனம் வாடுவராம்.

[3] 8-ல் 4-க்குடையவரும், சூரியனும், 3-க்குடையவரும் ஆகிய மூவர்கள் நிற்கவும், 4-க்குடையவர் நீச மடையவும் பெற்ற ஜாதகர் மார்பு நோயினுல் மெலிந்து மாரக மாவராம்.

[4] இலக்கினத்தில் 6-க்குடையவர் உச்ச மடையவும், இலக்கினதிபதி 8-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் மேக ரணத்தால் மாரக மடைவராம்.

1219

(இ-ள்) சூரியன், 6-க்குடையவர், லக்கினதிபதி ஆகிய மூவரும் கூடித் திரிகோண மடையவும், அவ் விராசியாதிபதி நீச மடைந்து 8-ல் இருக்கவும் பெற்ற ஜாதகர் சுர ரோகத்தினுல் மரண மாவராம்.

[2] இலக்கினதிபதி, 4-க்குடையவர், 8-க்குடையவர் ஆகிய மூவரும் 8-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் கொடுமையான உஷ்ண நோயினுல் மாரக மாவராம்.

[3] குருவோடு 8-க்குடையவர் கூடி 6-ல் இருக்கவும், அவர்களைச் சனி பார்க்கவும் பெற்ற ஜாதகர் கபரோக முடையவராம்.

[4] சுக்கிரனும், லக்கினதிபதியுங் கூடி 8-ல் இருக்கவும், 8-க்குடையவர் 7-ல் இருக்கவும் பெற்ற ஜாதகர் மேக நீரினுல் மாரக மாவராம்.

[5] 8-க்குடையவர் இராகுவோடு கூடி 9-ல் நிற்கவும், செவ்வாய் லக்கினத்தி னிற்கவும், அவரை நீசர்கள் பார்க்கவும் பெற்ற ஜாதகர் அம்மை நோயினுல் மரண மாவராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1220

(இ-ள்.) இலக்கினத்தில் சனியும் அமர, சந்திரனும்பாப ரோடு கூடி நிற்கவும், 6க்குடையவர் 9ல் அமரவும் பெற்ற ஜாதகர் குன்ம நோயினல் வருத்தப்படுவராம்.

[2] சந்திரனுக்கு6க்குடையவர் 3ல் இருக்கவும்,அவரைச் சூரியன், செவ்வாய் பார்க்கவும் பெற்ருலும்,

[3] 12ல் 6க்குடையவர் நீச மடையவும், லக்கினதிபதி 8ல் நிற்கவும் பெற்ருலும்,

[4] 1-2க்குடையவர்கள் 8ல் நிற்கவும், அவர்களைச் சனி பார்க்கவும் பெற்ருலும்,

[5] 9க்குடையவர் உச்ச மடையவும், லக்கினதிபதி 6ல் இருக்கவும் பெற்ருலும், நான்கு தரமுள்ள ஜாதகர்களும் திட சரீரமுள்ளவர்களாய்க் கனவிலும் நோயில்லாதவர்களாய் வாழ்பவராம்.

1221

(இ-ள்.) இலக்கினதிபதியுஞ் சூரியனும் பகை பெற்று நீச மடையவும், பாபர்கள் இலக்கினத்தில் நிற்கவும் பெற்ருலும்,

[2] 2-6க்குடையவர்கள் கூடிச் சந்திர கேந்திர மடைய வும், 3க்குடையவர் 6ல் இருக்கவும் பெற்ருலும்,

[3] செவ்வாயோடு 2க்குடையவரும், சனியுங் கூடித் திரி கோணமடையவும் பெற்ருலும்,

[4] இலக்கினத்தில் 6க்குடையவர் நிற்கவும், இலக்கின திபதி நீசமடைந்து நிற்கவும் பெற்ருலும், இந்த நான்கு தர முள்ள ஜாதகர்களும், உடன் பிறந்தவர்கள் முதலிய நெருங் கிய லாபத்தையுடையவர்களால் தொந்தமாகிய பகையைக் கொண்டு நேர்வரினும் துணிந்து கூருர்களாம்.

[5] 4-8க்குடையவர்கள் 6ல் நிற்கவும், 6க்குடையவர் இராகுவோடு கூடி 4ல் மேவினுலும்,

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[6] இலக்கிஞதிபதி 12ல் நிற்கவும், 12க்குடையவர் 9ல் அமரவும், 6-9க்குடையவர்கள் உச்சமடைந்து நிற்கப் பெற்ரு லும்,

1222

(இ-ள்.) இவ்விரண்டு ஜாதகர்களும் இராஜாங்கத்தில் ஜென்ம தண்டனே யடைவார்களாம். அஞல் கிரக பலமறிந்து சிறைநீங்கும் காலங் கூறுக. இதுவரையில் ஆரும் பாவகத்தை யுரைத்தனம். இன்னும் இதில் தங்கள் தங்கள் புத்தியைக் கொண்டு மேன்மேலும் கூறுவதில் புகழுண்டாகுமெனக் கொள்க. இன்னும் கடல் சூழ்ந்த பூமியின்கண் முறையோடு நிறைந்த உண்மையாகிய கணிதநூல் வழிப்படி ஏழாம் பாவ கங்களேக் கூறத் துணிவு கொண்டனம்.

ஏழாம் பாவகம்

1223

(இ-ள்.) இந்த ஏழாம் பாவகத்தைப்பற்றி களத்திரம், லாபம், விவாகங் கூடுங் காலம், மரணம் இன்னும் முன்ஞல் கூறியபடி என் குருவின் பாதங்களேத் துதிசெய்து கூறுகின் றனம்.

1224—1225

(இ-ள்.) 10-9க்குடையவர்கள் கூடி 5ல் நிற்கவும், 9-ஆமி டத்தைப் பாபர்கள் பார்க்காதிருக்கவும், 7க்குடையவர் சுப ராசியில் நிற்கப் பெற்ருலும்,

[2] 9ல் சுக்கிரன் நிற்கவும்,2க்குடையவர் சுபராயிருந்து உச்சமடையவும், 7க்குடையவர் 3ல் நிற்கப் பெற்ருலும்,

[3] 7-ஆமிடத்தில் பாபர் நிற்கவும், 7-2க்குடையவர்கள் 9ல் நிற்கப் பெற்ருலும்,

[4] சந்திரன் லக்கினத்தில் நிற்கவும், சுக்கிரனுக்கு 7க் குடையவர் திரிகோண மடையவும், 2-ஆமிடத்தைச் சுபர்கள் பார்க்கப் பெற்ருலும்,

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[5] 2-க் குடையவர் 3-லிருக்கவும், 3-க் குடையவர் 7-ல் அமரவும், 9-க் குடையவர் 4-க் குடையவரைப் பார்க்கப் பெற்றாலும்,

[6] 4-ல் 7-க் குடையவர் நிற்கவும், 4-க் குடையவர் சந்திரனுக்கு 12-க் குடையவரோடு கூடி 9-ல் நிற்கப் பெற்றாலும்,

[7] சந்திரனுக்கு 7-2-க் குடையவர்கள் கூடி பகை யில்லாது திரிகோண மடைந்து குரு பார்வை பெற்று நின்றாலும்,

[8] 3-ல் 7-க் குடையவர் நிற்கவும், அவரைச் சந்திரனுக்கு 7-க் குடையவர் பார்க்கப் பெற்றாலும்,

இந்த 8-தாரமுள்ள ஜாதகர்களும் ஆயுள் பரியந்தம் ஏக தாரமாகவே வாழ்பவர்களாம்.

இனி 2-3-4-தாரம் வரும் வகையைக் கேட்பாயாகவும். 11-க் குடையவர் கூட்டமாய் நிற்கவும், 7-க் குடையவர் 2-ல் அமரவும், 11-ம் இடத்தில் சுக்கிரன் பாபரோடு கூடி நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு 3-தார முண்டாகுமாம.

1226

(இ-ள்) சந்திரனுக்கு 7-ல் சனி நிற்கவும், பாபர்கள் 2-ல் அமரவும், 11-க் குடையவரும் சுக்கிரனும் கூடி ஒரு ராசியில் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு நாலுதார முண்டாகுமாம்.

[?] 7-ல் 8-க்குடையவர் நிற்கவும், சந்திரனும் 2-க்குடையவருங் கூடி 11-ல் அமரவும், சுக்கிரனோடு சேர்ந்தவர்கள் தொகையே தாரமென்று கூறவும். 11-ல் சனி, சுக்கிரன், 7-க் குடையவர்கள் ஆகிய மூவர்களும் நிற்கவும், 11-க் குடையவர் 2-ல் அமரவும், அவரைச் செவ்வாய் பார்க்கவும் பெற்ற ஜாதகருக்கு 3-களத்திர முண்டாம்.

CC0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[3] சந்திரனுக்கு 7-க் குடையவர் 2-11-க் குடையவர்களோடு கூடி சுக்கிரனுக்கு 11-ல் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு 4-களத்திர முண்டாகுமாம்.

1227

(இ-ள்.) சுக்கிரனோடு சேர்ந்தவர்கள் பார்த்தவர்கள் தொகையைக் கண்டு இத்தனை களத்திரமென்று கூறவும். இனி யோகம், அவயோகம், திசை புத்தி கிரகங்களின் நோக்கங்களையும், ஆய்ந்தறிந்து களத்திரத்தின் தொகையைக் கூற வேண்டுமாம். இனிப் பாதகமாகிய புணர்ச்சியின் வகையைக் கூறுவோமாக.

[2] பாபர்கள் 7-ல் நிற்கவும், 7-க் குடையவர் பாபியாயிருந்து பாபரோடு கூடி நிற்கவும் பெற்ற ஜாதகன் அன்னிய ஸ்திரீயைப் புணர்வனும்.

[3] 7-ல் 11-க் குடையவருஞ் சுக்கிரனுங் கூடி நிற்கவும், அதில் சுக்கிரன் பலஹீனப்படவும், 7-3-க் குடையவர்கள் 4-ல் நிற்கவும் பெற்ற ஜாதகன் அன்னிய ஸ்திரீ போக முடையவனும்.

1228

(இ-ள்) சுக்கிரனுக்கு 7-க் குடையவரும், லக்கினத்திற்கு 7-க் குடையவரும், செவ்வாயும் ஆகிய மூவரும் சந்திரனுக்கு 7-ல் நிற்கவும் பெற்றாலும்,

[2] செவ்வாய் 7-க் குடையவருக்கு 6-ல் நிற்கவும், அவரைச் சனி பார்க்கவும் பெற்றாலும்,

[5] செவ்வாய், சுக்கிரன் இவர்கள் 7-ல் நிற்கவும், 7-க் குடையவர் 6-ல் அமரவும் பெற்றாலும் இம் மூன்று தரமுள்ள ஜாதகர்களும் பரத்தையரையும், விதவைமாதரையும், நீச மங்கையரையும், தன் குலத்திற் பிறந்த கன்னியர்களையுந் தழுவிப் புணர்வர்களாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[4] இனி ஜாதகர்களுக்கு விவாகஞ் செய்யுங் காலங் கூறுவோமாக. 7-2க்குடையவர்கள் சுக்கிரனோடு கூடி சந்திரனுக்கு 2-7-10ல் நிற்கவும், இவர்களை 2-7-10க்குடையவர்கள் பார்க்கவும், அப்படிப் பார்த்தவர்களுடைய திசை புத்தி வருங் காலம் விவாகமாகுமாம்.

1229

(இ-ள்.) இனி வர்த்தகஞ் செய்யும் விபரம் கூறுவோமாக. 4-9க்குடையவர்கள் இலக்கினத்தில் நிற்கவும், இலக்கினதிபதி உச்சமடையவும் பெற்ற ஜாதகர் கெம்பு, வச்சிர முதல் நவரத்தின வியாபாரஞ் செய்பவராம்.

[2] 7க்குடையவரும், இலக்கினதிபதியுங் கூடி 3ல் நிற்கவும், அவர்களை 9க்குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகர் நவமணி முதலாகிய தங்கம், பொன்னுடை விற்பவராம்.

[3] 7க்குடையவர், சந்திரன், சுக்கிரன் ஆகிய மூவருங் கூடி 1-5-9ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் யானை, குதிரை விற்பவராம்.

[4] செவ்வாய்க்கு 7க்குடையவர் 4ல் நிற்கவும், அவரை 11-12க்குடையவர் நோக்கமடைந்து முன்பாகத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகர் நவதானியங்கள் விற்பவராம்.

[5] 4க்குடையவர் 7க்குடையவருக்கு 8ல் நீசமடையவும், 4-7க்குடையவர் 12ல் நிற்கவும், 12க்குடையவர் 2ல் அமரவும் பெற்ற ஜாதகர் புலால் விறகு முதலியன விற்பவராம்.

1230

(இ-ள்.) ஜாதகர்களுடைய மாரக கால திசை புத்தி விபரங்களைக் கூறுவதற்கு பிரமனுக்கும் அரிதாகியதை சிறியே

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ளுகிய யான் எவ்வாறு கூறமாட்டுவேன். ஆனுல் முன்னேர்கள் கூறிய சாஸ்திர முறையைக் கொண்டு சொல்லத் துணிவேனுக.

[2] 7க்குடையவர் 3-லேனும், சந்திரனுக்கு 8-லேனும் நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு 7க்குடையவர் திசையில் மாரகமென்றுங் கூறவும்.

[3] 7க்குடையவர் 2க்குடையவருமாகி 6-ஆமிடத்திலுஞ் சனிக்கு 8க்குடையவருமாகி நிற்கவும் பெற்ற ஜாதகருக்கு 7க்குடையவர் திசையே மாரகமெனவுங் கூறியது.

[4] இவ்வண்ணமாக வினயங்களெல்லாஞ் சிறப்பாகவெடுத்து சக்கரத்தின் பலமும், அட்டமத்தின் பலமுங் கண்டு நெருப்பாற்றில் வைரப்பாலஞ்சேர்ந்ததுபோல் ஆன்றோர்கள் கூறுவர்களாம்.

எட்டாம் பாவகம்

1231

(இ-ள்.) 8-ம் பாவகத்தினுல் ஆயுள், அக்ரமச் செய்கை, ருணம், அறிவீனங்கள், அதர்மம், பிணி, இரணநோய், அரசர் தண்டனை முதலியவற்றைக் கூறுவதற்குச் சோலை சூழ்ந்த திருக்குடந்தையில் வாழ்பவராகிய என் மாமனுங் குருவுமாகிய வீரப்ப பிள்ளை யென்னும் நாமமுடைய சுந்தரம் போன்ற வரது பாத தாமரையைத் துணையாகக் கொள்வேனுகவும்.

1232—1233

(இ-ள்.) குரு 8ல் நிற்கவும், 9க்குடையவர் சந்திர திரிகோணமடைந்து நீசம் பெற்ருலும், 8க்குடையவர் பார்வை பெற்று நின்ருலும்,

[2] 4க்குடையவர் 6ல் நிற்கவும், 6க்குடையவர் 10ல் நிற்கவும் பெற்ருலும்,

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[3] 6-க்குடையவர் உச்ச மடைந்து 11-க் குடையவரோடும் சனியோடுங் கூடி 12-ல் நிற்கப் பெற்றாலும்,

[4] குரு 4-ல் நிற்கவும், 10-க்குடையவரோடு சந்திரனுக்கு 10-க்குடையவர் கூடி 12 ல் நிற்கப் பெற்றாலும்,

[5] சனியும், 8-6-க்குடையவர்கள் ஆகிய மூவரும் 6-ல் நிற்கவும் பெற்றாலும்,

[6] 9-8-க்குடையவர்கள் கூடி 8-ல் நிற்கவும், சந்திரனுக்கு 8-க்குடையவர் 9-ல் நிற்கவும் பெற்றாலும்,

[7] சந்திரனுக்கு 6-ல் 6-4-க்குடையவர்கள் நிற்கவும், அவர்களைச் சனி பார்க்கவும் பெற்ற 7-தரமுள்ள ஜாதகர்களும் திருடர் ஆவார்களாம்.

ஆயுள் விதி

1234 - 1235

(இ-ள்.) 8-க்குடையவர் 3-ம் இடத்தில் நிற்கவும், சந்திரனுக்கு 8-க்குடையவர் சுப ராசி 3-ல் அமரவும், இலக்கினாதிபதி திரிகோண மடையவும் பெற்றாலும்,

[2] 1-8-3-க் குடையவர்களாகிய மூவரும் 12-ல் நிற்கவும், அவர்களைக் குரு பார்க்கவும், சந்திரனுக்கு 8-க்குடையவர் 3-ல் அமரவும், இலக்கினத்திற்கு 8-க்குடையவர் பலமடைந்து நிற்கவும் பெற்றாலும்,

[3] சந்திரனுக்கு 8-ல் சனி நிற்கவும், 6-ல் 8-க்குடையவர் அமரவும், லக்கினாதிபதி திரிகோண மேறி நட்பு பெற்று நின்றாலும்,

[4] சந்திரனுக்கும், இலக்கினத்திற்கும், 8-க்குடையவர்களும் சனி யிருந்த இராசியாதிபதியும் ஆகிய மூவர்களும் அவரவர்கள் கேந்திர மடையப் பெற்றாலும்,

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[5] சர ராசி லக்கினமாகி அதில் 8-க்குடையவர் நிற்கவும் பெற்றாலும், இந்த 5-தரமுள்ள ஜாதகர்களும் பூரண வயதைப் பெற்றுப் பிணியில்லா திருப்பார்களாம்.

1236

(இ-ள்.) 50-வயதுக்குள் மாரக மடையும், அற்பாயுளர் விதியைக் கூறுகின்றனம்.

[2] சனிக்கு 8-க்குடையவரோடு லக்கினாதிபதியும், 12-க்குடையவருங் கூடி திரிகோண கேந்திரமடைந்து நிற்கப் பெற்றாலும்,

[3] 8-3-க்குடையவர்களும், சந்திரனுக்கு 8-க்குடையவருமாகிய மூவரும் 4-ல் நிற்கவும், 6-8-12-ல் லக்கினாதிபதி நிற்கவும் பெற்றாலும்,

1237

(இ-ள்.) பாபர்கள் சந்திரனுக்கு 8-ல் நிற்கவும், 8-2-க்குடையவர்களும் செவ்வாயும் ஆகிய மூவருங் கூடி 8-ல் பகை பெற்று நின்றாலும்,

[2] 8-க்குடையவரும் சந்திரனின்ற ராசியாதிபதியுங் கூடி சந்திரன், சனி பாபர்களுக்கு 12-ல் நிற்கப் பெற்றாலும், இதிற் பிறந்த நால்வரும் வாழ்வுடையவர்களாயும், அற்பாயு ளுடையவர்க ளென்றுங் கூறியது. இன்னும் அவர்கள் மரண மடையும் வகையை விரித்துக் கூறுவோமாக.

1238

(இ-ள்.) செவ்வாயும், 6-8-க்குடையவர்கள் ஆகிய மூவரும் சந்திரனுக்கு 6-8-ல் நிற்கவும், அவர்களையும் சந்திரனையும் 8-க்குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகர் பகைவர் கையாயுதத்தால் மாரக மடைவராம்.

[2] 4-8-க்குடையவர்களும், சந்திரனுக்கு 4-க்குடையவரும் ஆகிய மூவர்களும் நீசர்களோடு கூடி 12-ல் நிற்கவும் பெற்ற ஜாதகன் மிருகங்களினால் மாரக மடைவனும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1239

(இ-ள்.) 8-க் குடையவர், சூரியன், செவ்வாய் ஆகிய மூவர்களும் 8-ல் நிற்கவும், அவர்களைச் சனி, இராகு பார்க்கவும் பெற்ற ஜாதகன் நெடிய மலை, கோபுரம், மரம் இவைகளின் மீதேறித் தன்னிலை தவறி வீழ்ந்து மாரக மாவனும்.

[2] 8-ல் செவ்வாய் சனியுங் கூடி நிற்கவும், சந்திரனுக்கு 8-ல் சூரியன் அமரவும் பெற்ற ஜாதகன் தண்ணீரி லிறந்து போவனும்.

[3] சனி, அமர சந்திரன், சூரியன், செவ்வாய் ஆகிய நால்வரும் திரிகோண மேறி நிற்கவும், அவர்களைப் பாபர்கள் பார்க்கவும் பெற்ற ஜாதகன் அக்கினியால் மாரக மாவானும்.

1240

(இ-ள்.) 6 8-க் குடையவர்களோடு செவ்வாய் கூடி 6-8-12-ல் நிற்கப்பெற்ற ஜாதகன் கையாயுதத்தால் மாரகமாவானும். செவ்வாயும் இலக்கினதிபதியும் பகைபெற்று நின்றால், வெட்டு படுவனென்றும், சூரியன், சந்திரன், இராகு இலக்கினதிபதி நீச மடையவும் பெற்ற ஜாதகன் காயப்பட்டும் மாரக மாவானும்.

1241

(இ-ள்.) 1-8-க் குடையவர்களும் செவ்வாய் ஆகிய மூவரும் சந்திரனுக்கு 8-ல் நிற்கவும், அவர்களை இராகு சனி பார்க்கவும் பெற்ற ஜாதகன் இடிவிழுந்து மாரக மடைவனும்.

[2] 6-1-8-க் குடையவர்களாகிய மூவர்களும் திரிகோண கேந்திர மடையவும் பெற்ற ஜாதகன் அவர்கள் திசை புத்தியில் பிளவை நோய் கண்டு மாரக மடைவனும்.

[3] சனியும் 8-க் குடையவரும் லக்கினதிபதியோடு கூடி நிற்கில் அவர் திசை புத்தியில் கிரிகி மாரக மடைவனும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1242

(இ-ள்.) செவ்வாய், சனி, குரு, சந்திரன், இராகு ஆகிய ஐவர்களும் 8-ல் நிற்கவும் பெற்ற ஜாதகன் அவர் திசை புத்தியில் பேய் புத்திகொண்டு மாரகமாவனும்.

[2] 7-க்கு 2-9-8-9-க் குடையவர்கள் திசை புசிப்பிலும், சந்திரனுக்கு 2-6-8-9-க் குடையவர்கள் திசை புசிப்பிலுஞ் சுர ரோக வாதனையினுல் மாரக மாவனும். இன்னும் ஒரு கிரகத்திற்கு 2-ஆதிபத்தியம் உண்டு. அந்த ராசிக்குரிய திசையில் பாவர்கள் புசிப்பில் பயத்தினுல் மாரக மாவனும்.

1243

(இ-ள்.) குளிகனிருந்த இராசியாதிபதி நின்ற அம்ச திரிகோணத்திற் சூரியன் வருங் காலத்தில் பகல் பிறந்த ஜாதகருக்கு அவர் திசையில் மாரக மாவரென்றுங் கூறியது.

[2] 8-க் குடையவரிருந்த இராசியாதிபதியின் அம்ச திரிகோணத்திற் சூரியன் வருங்கால் ஜாதகன் மாரகமடைவனும். சூரியனுஞ் சந்திரனுங்கூடியிருந்த இராசியாதிபதிக்குரிய அம்ச திரிகோணத்தில் சந்திரன் வரில் ஜாதகன் மாரகமாம். இலக்கினுதிபதி இருந்த இராசி அம்ச திரிகோண இலக்கினத்தில் ஜாதகன் மாரகமாம்.

ஜாதக மாரகம் வருமாறு

1244

(இ-ள்.) சத்துச் சித்தானந்தமாய்ச் சகலமுந் தானுப் இருவினையு மற்றுச் சர்வ சாட்சியாய் வித்தும் விளைவுமாகி விகற்ப மற்ற பெரிய பிரகாசமாய் வானம் பூமி முதலிய எவ்விதத்தாலும அறியக்கூடாத அறிவாய் நிற்கின்ற ஏகாந்தமாகிய பிரம சைதன்னியத்தை என் இதயமென்னும் வீட்டில் வைத்து ஆதி நிலையாயுள்ள கிரகாதிகளின் ஸ்புடத்தினுலே மாரக பாவங்களை அவரவர்களும் எளிதாக அறியும் வண்ணம் அணியணியாகக் கூறுகின்றனம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1245

(இ-ள்.) 8க்குடையவர் ஸ்புடத்தைச் சனி ஸ்புடத்தினல் பெருக்கி, அதனேடு காலனுடைய ஸ்புடமுங் கூட்டி 12ல் வகுக்க மீதி வந்த தொகையை ஆண் ராசியாகில் வலமாக மேட முதலெண்ணி வந்த நட்சத்திர பாகத்தில் சனி வருங் காலம் ஜாதக மாரகமாம். பெண் ராசியாகில் அந்த அம்ச திரிகோணத்தின் சனி வருங் காலம் ஜாதக மாரகமாம். இன்னும் கோள் நிலையும் பார்த்து ஆயுள் நிலை தெரிந்து கூறல் வேண்டுமாம்.

1246

(இ-ள்.) சனி யிருந்த ராசியாதிபதி ஸ்புடத்திற் குருவின் ஸ்புடத்தை நீக்கி முன்போல பெருக்கி கழித்து மீதியான நட்சத்திர பாகத்தில் குரு வருங் காலம ஜாதக மாரகமாம்.

[2] சூரிய ஸ்புடமும், குளிகனுடைய ஸ்புடமுங் கூட்டி முன் போலச் செய்து வந்த நட்சத்திர பாகத்தில் சூரியன் வருங் காலம் ஜாதக மாரகமாம்.

1247

(இ-ள்.) சந்திரன் ஸ்புடத்தில், குளிகன் ஸ்புடத்தைக் கூட்டி 12ல் வகுக்க நின்ற ராசி நட்சத்திரத்திற் சந்திரன் வருங் காலம் ஜாதகர் மாரகமாம்.

[2] சந்திரன், குளிகன், லக்கினம் ஆகிய 3-ஸ்புடத்தையுங் கூட்டி முன்போல் வகுத்து வந்த ராசி லக்கினமே மாரகமெனக் கொள்க. இப்படிச் சூரியனல் மாதமும், சந்திரனல் நட்சத்திரமுங் கொள்க.

பிதிர் மாரகம்

1248

(இ-ள்.) 9க்குடையவர் ஸ்புடமும், சூரியனுடைய ஸ்புடமுங் கூட்டி 7ல் பெருக்கி, அதனேடு குளிகன் ஸ்புடமுங் கூட்டி

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

முன் விதிபோல் 12ல் வகுத்து வந்த நட்சத்திர பாதத்தில் சனி வரினும், ராகு ஸ்புடத்தையும், இயமகண்ட ஸ்புடத்தையுங் கூட்டி சூரியஸ்புடத்தால் பெருக்கி முன்போல் வகுத்த நட்சத்திர பாதத்தில் சனிவரினும் ஜாதகனுடைய பிதிர் மாரகமாம்.

[2] ஆனல் உன்னுடைய மதியூகத்தையும் பொருத்தி எவர்க்குங் கூறுவாயாகில் சுப்ரமண்யக் கடவுளால் கூறிய வாக்கியம் வழுவு பெருதாம்.

மாதுர் மாரகம்

1249

(இ-ள்) சூரியன் ஸ்புடத்தில் சந்திரஸ்புடத்தைக் கழித்து முன்போல் வகுத்து நின்ற ராசியின் கலையில் குரு வருங் காலமும்,

[2] சந்திர ஸ்புடத்தில் சனி ஸ்புடத்தைக் கழித்து முன் போல் வகுத்து நின்ற ராசியின் கலையில் சனி வருங் காலமும்,

[3] சந்திர ஸ்புடத்தில் சூரிய ஸ்புடத்தை நீக்கி முன் போல் வகுத்த ராசியின் கலையிற் சூரியன் வருங் காலமும், சந்திர ஸ்புடத்தில் சந்திரனுக்கு 4க்குடையவர் ஸ்புடமுங் கூட்டி முன்போல் வகுத்த ராசி, பாகை, கலை, சந்திரன் வருங் காலம், ஜாதகருடைய மாதுர் நிரியாணமாம்.

சகோதர மாரகம்

1250

(இ-ள்.) லக்கின ஸ்புடத்தில் 3க்குடையவர் ஸ்புடத்தை நீக்கி முன்போல் வகுத்து நின்ற பாகையில் சனி வருங் காலமும்,

[2] ராகு ஸ்புடத்தில் செவ்வாய் ஸ்புடத்தை நீக்கி முன் போல் வகுத்து நின்ற பாகையில் குரு வருங் காலமும்,

[3] 3க்குடையவர் ஸ்புடத்தைச் செவ்வாய் ஸ்புடத்தினல் பெருக்கி அதனேடு சூரியன் ஸ்புடமுங் கூட்டி முன்போல

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வகுத்துவந்த இராசியில் சூரியன் வருங்காலமும்,ஜாதகருடைய சகோதரன் நிரியாணமாம்.

களத்திர மாரகம்

1251

(இ-ள்.) 2-க்குடையவர் ஸ்புடத்தில் குளிகன் ஸ்புடத்தை நீக்கி முன்போல் பெருக்கி வந்த இராசி பாகையில் சனிவருங் காலமும்,

[2] 2-க்குடையவர் ஸ்புடத்தில் இயமகண்டன் ஸ்புடத்தை நீக்கி முன்போல் வகுக்க வந்த ராசியில் குரு வருங் காலமும்,

[3] 7-க்குடையவர் ஸ்புடத்தில் காலன் ஸ்புடத்தை நீக்கி முன்போலப் பெருக்கிவந்த கலையில் சூரியன் வருங் காலமும்,

[4] சுக்கிரன் ஸ்புடமும், சந்திரன் ஸ்புடமுங் கூட்டி முன் போல வகுத்து நின்ற ராசியில் சந்திரன் வருங் காலமும் ஜாதகருடைய களத்திர மாரக மென்றுங் கூறப்பட்டது.

புத்திர மாரகம்

1252

(இ-ள்.) சனியின் ஸ்புடமும் 5-க்குடையவர் ஸ்புடமுங் கூட்டி முன்போல வகுத்து வந்து நின்ற ராசியில் சனி வருங் காலமும்,

[2] சனியின் ஸ்புடத்தையுங் குருவின் ஸ்புடத்தையுங் கூட்டி இதில் 9-க்குடையவர் ஸ்புடத்தை நீக்கி முன்போல வகுத்து வந்த கலையில் குரு வருங் காலமும்,

[3] சூரியன் ஸ்புடத்தில் குருவிருந்த ராசியாதிபதி ஸ்புடத்தை நீக்கி முன்போல வகுத்து வந்த கலையில் சூரியன் வருங் காலமும் இச்சாதகருடைய புத்திர மாரகமாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1253

(இ-ள்.) 5-க்குடையவர் ஸ்புடத்தில் புதனுடைய ஸ்புடத்தை நீக்கி சந்திரனுக்கு 7-க்குடையவர் ஸ்புடத்தைக் கூட்டி முன் சொல்லிய விதிப்படி வகுக்க வந்த கலையில் சனி வருங் காலமும்,

[2] சூரியன், இலக்கினம், குளிகன் ஆகிய 3-ஸ்புடங்களை யுங் கூட்டி முன்போல் வகுத்து நின்ற கலையில் குரு வருங் காலமும், இச்சாதகருடைய மாமன் மாரகமென்றுங் கூறுக. இதை வஞ்ச மற்றவர்கள் இக்கணிதப்படி சோதித்துக் கூறு வாராகில் தவறு திருக்குமாம்.

விவாக காலம்

1254

(இ-ள்.) சந்திரனின்ற இராசியாதிபதி ஸ்புடமும் சந்திரனுக்கு7-க்குடையவர் ஸ்புடமுங் கூட்டி முன் விதிப்படி வகுக்க வருங் கலையில் குரு வருங் காலமும்,

[2] இலக்கினதிபதி ஸ்புடத்தை 2-க்குடையவர் ஸ்புடத்தால் பெருக்கி அதனோடு சூரியன் நின்ற இராசியாதிபதி ஸ்புடமுங் கூட்டி முன்போல் வகுத்து வந்த கலையில் சூரியன் வருங் காலத்தில், இச்சாதகன் இலட்சுமிக்கு ஒப்பாகிய பெண்ணை விவாகஞ் செய்வானும்.

ஒன்பதாம் பாவகம்

1255

குரு வணக்கம்

(இ-ள்.) ஒன்பதாம் பாவக மென்னும் பாக்கிய பாகத்தைப் பற்றித் தவம், ஆசான் பத்தி, பாக்கியம், பலகலை யுணர்ச்சி, தந்தையின் செயல்கள் முதலியவற்றை ஒன்றுக்கு இரண்டு பாகங் கூறுவதற்கு எமது ஆசிரியராகிய வீரப்ப பிள்ளையவர்களுடைய பாதங்களைச் சிரசில் வைப்பேனுகவும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பாக்கிய யோகம்

1256—1257

(இ-ள்) இலக்கினத்தில் 3-2க்குடையவர்கள் நிற்கவும், இவர்களைச் சுபர்கள் நோக்கவும், லக்கினாதிபதி 9ல் நிற்கவும் பெற்றாலும்,

[2] இலக்கினாதிபதி இலக்கினத்தில் நிற்கவும், செவ்வாயும், குருவுங் கூடி 9ல் நிற்கவும் பெற்றாலும்,

[3] சுபர்கள் குருவுடனே கூடி 9ல் நிற்கவும் அல்லது 10ல் நிற்கவும் பெற்றாலும்,

[4] சந்திர லக்கினாதிபதி 2-9க்குடையவர்களாகிய மூவர்களும் 10ல் நிற்கவும், இலக்கினாதிபதி 9ல் நிற்கவும்பெற்றாலும்,

[5] இலக்கினாதிபதி 10ல் நிற்கவும் 10க்குடையவர் இலக்கினத்தினின்று 2க்குடையவரோடு கூடி நிற்கவும், அல்லது 2க்குடையவரும், வளர்பிறைச் சந்திரனும்பார்க்கவும் பெற்றாலும்,

[6] இலக்கினாதிபதி 5ல் நிற்கவும், 5க்குடையவர் 9ல் அமரவும், 9க்குடையவர் 5ல் நிற்கவும், இலக்கினத்தில் 7க்குடையவர் நிற்கவும் பெற்றாலும்,

[7] சந்திரனும், 4க்குடையவருங் கூடி குரு வீட்டில் நிற்கவும், குருவும், 4க்குடையவருங் கூடி 10ல் நிற்கவும் பெற்றாலும் இந்த 7-ஜாதகர்களும் பாக்கிய சுக முடையவர்களாய் உலகில் வாழ்வார்களாம்.

அவ யோகம்

1258

(இ-ள்.) குருவும், 8-6-9க்குடையவர்களும், பாபர்களுமாகிய இவர்கள் இரண்டிரண்டு கிரகமாக நோக்கினாலும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] சனி, செவ்வாய், 2க்குடையவர் ஆகிய மூவர்களும் 12ல் நிற்கவும், 9-4க்குடையவர்கள் கூடி 2ல் நிற்கவும் பெற்ருலும்,

[3] 4-2-10க்குடையவர் அவரவர்கள் ராசிக்கு 6-8-12ல் நிற்கப் பெற்ருலும்,

[4] 2ல் 4க்குடையவரும், செவ்வாயுங் கூடி நிற்கவும், 2க்குடையவரோடு 4-2க்குடையவரும், செவ்வாயுங் கூடி நிற்கவும் பெற்ருலும்,இந்நான்கு தரமுள்ள ஜாதகர்களும் பாபஜென்ம மெனவுங் கூறியது.

1259

(இ-ள்.) 9க்குடையவர் 6ல் நிற்கவும், 6க்குடையவர் 2ல் அமரவும், இலக்கினதிபதி 12ல் நிற்கவும் பெற்ருலும்,

[2] சூரியன் 3ல் நிற்கவும், சூரியனுக்கு 12ல் சந்திரன் அமரவும், 10க்குடையவர் 6ல் நிற்கவும் பெற்ருலும், இவ்விரண்டு தரமுள்ள ஜாதகர்களும் தவ யோகிபோலிருந்து சந்திக்கரை, தெருத் திண்ணை, தலைக்கடை, அன்னிய தேச சஞ்சார முடையவர்களாய், அவயோக சிரோன்மணியாய், ரொண பாதகராய், ஆடையன்னங் கிடையாமல் அலைந்திடுவார்களாம்.

1260—1261

(இ-ள்.) இலக்கினதிபதி 9ல் நிற்கவும், சந்திரன் வலுப் பெற்று நிற்கவும், 9க்குடையவர் 2ல் அமரவும், குரு 10ல் நிற்கவும் பெற்ருலும்,

[2] 7க்குடையவர் 9ல் நிற்கவும், 2ல் 2க்குடையவர், அமரவும், குருவும், 9க்குடையவருங் கூடி நிற்கவும் பெற்ருலும்,

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[3] குருவும், இலக்கினாதிபதி, 9-க்குடையவர், சுக்கிரன் ஆகிய நால்வரும் 10-ல் நிற்கவும், 10-க் குடையவர் 9-ல் நிற்கவும் பெற்றாலும்,

[4] 10-க் குடையவர் பலமடையவும், இலக்கினாதிபதி 2-ல் நிற்கவும், குரு 5-ல் நிற்கவும் பெற்றாலும்,

[5] 10-9-க் குடையவர்கள் பாபர் நோக்கமின்றி இலக்கினத்தில் அமரவும், இலக்கினாதிபதி 2-ல் நிற்கவும், அவரைச் சனி பார்க்காதிருக்கவும் பெற்றாலும்,

[6] இலக்கினாதிபதியும் 10-க் குடையவரும் 9-ல் நிற்கவும் அவர்களைச் சுபர்கள் பார்க்கவும் பெற்றாலும்,

[7] புதனும் 4-9-க் குடையவர்களுமாகிய மூவரும், சந்திரன் 10-ல் நிற்கவும், அவரைக் குரு பார்க்கவும் பெற்றாலும், இந்த ஒன்பது தரமுள்ள ஜாதகர்கள் சத்துச் சித்தானந்த மயமான சிவரூபமாகிச் சற்குரு வென்னும் பெயரை வதிந்து மோட்ச மடைவார்களாம்.

குருத் துரோகி

1262

(இ-ள்.) குரு வணக்க மில்லாதவர்களுடைய நிலைமையை யொருவாறு கூறுகின்றனம் கேட்பா யாகவும்.

[2] 9-க் குடையவர் 6-ல் நிற்கவும், சனி குருவுக்கு 8-ல் அமரவும், சந்திரன் 9-க் குடையவருக்குச் சுபக்ரகமாய் நிற்கவும் பெற்ற ஜாதகன் குருவின் பெண்ணை விரும்புவனும்.

[3] குருவுக்கு 2-ல் இலக்கினாதிபதியும் 8-க் குடையவரும் நிற்கவும், 4-க் குடையவர் 10-ல் அமரவும், அவரை சனி நோக்கவும் பெற்ற ஜாதகன் குருவின் மகளைப் புணர்வனென்றுங் கூறுக.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[4] சூரியன், சனி, செவ்வாய் ஆகிய மூவரும் 9-ல் நிற்க வும், அவரை 7-க் குடையவர் பார்க்கவும், 12-ல் 2-க்குடையவர் நிற்கவும் பெற்ற ஜாதகர் முன் கூறிய வண்ண முடையவரே யாம்.

1263

(இ-ள்.) 2-10-க் குடையவர்களுஞ் சந்திரனும் ஆகிய மூவ வரும் 8-ல் நிற்கவும், இவர்களைச் சனியும் 8-க் குடையவரும் பார்க்கவும், இலக்கினாதிபதி சுபஸ்தானங்களேறி நிற்கவும் பெற்ற ஜாதகன் முன் கூறியவர்களுக்கு நல்லவனும்.

[2] 2-9-5-க் குடையவர்களாகிய மூவர்களுங் கூடி சந்திர னுக்கு 8-ல் நிற்கவும், அவர்களைச் சனி, குளிகன் பார்த்தா லும், அல்லது சேர்ந்தாலும், 2-க் குடையவர் 12-ல் நிற்கவும் பெற்ற ஜாதகன் குருமொழி தவறி, மன நோகவுஞ் செய்பவ னும் தீயர்களில் ஒருவனுமு முள்ளவராம்.

1264

(இ-ள்.) 4-7-5-9-க்குடையவர்கள் ஆகிய நால்வரும் பகை வருடன் கூடி 8-க் குடையவர் நோக்கமு மடைந்து, சந்திரனோடு கூடி நிற்கவும் பெற்ற ஜாதகர் குருவின் மனம் நோகச் செய்யும் பாவியு மாவனும்.

[2] 9-ல் 6-9-க் குடையவர்கள் நிற்கவும், 2-ல் சனி 12-க் குடையவர் சந்திரனும் ஆகிய மூவர்களும் அமரவும், 2-ம் இடத்தைச் செவ்வாய் பார்க்கவும் பெற்ற ஜாதகர் குருமொழி தவறும் தோஷியு மாவராம்.

அவபுத்திர பாவகம்

1265 - 1266

(இ-ள்.) பிதாவின் யோக சுகங்களைக் கெடுக்கும் புத்திர விதிகளைக் கூறுகின்றனம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] 5-ம் இடத்திலேனும், 2-ம் இடத்திலேனும், 3-10-9-க்குடையவர்கள் நிற்கவும், அவர்களை 6-க்குடையவருஞ் சூரியனும் பார்க்கவும் பெற்றாலும்,

[3] சனி, சுக்கிரன், சந்திரன் ஆகிய மூவர்களுங் கூடி 2-ல் நிற்கவும், 6-ல் சூரியனும் 9-க்குடையவரும் நிற்கவும் பெற்றாலும்,

[4] லக்கினத்திற் சந்திரனும், 8-க்குடையவரும் நிற்கவும், 2-க்குடையவரைச் சூரியன் பார்க்கவும் பெற்றாலும்,

[5] 2-9-க்குடையவர்கள் 2-ல் நிற்கவும், குரு, சுக்கிரன், சூரியன் ஆகிய மூவர்களுங் கூடி, ஒரு ராசியில் நிற்கவும், அவரைச் சனியும 8-12-க்குடையவர்கள் பார்க்கவும் பெற்றாலும்,

[6] சனி 9-ல் நிற்கவும், சந்திரனுக்கு 8-ல் 9-க்குடையவர் அமரவும், சனிக்கு 3-ல் சூரியன் நிற்கவும் பெற்றாலும,

[7] 3-9-துலாம் இந்த ராசிகளில் சந்திரனுக்கு 9-க்குடையவர் நிற்கவும், சூரியனை நீசர்கள் பார்க்கவும் பெற்றாலும் இந்த 6-தரமுள்ள ஜாதகர்களும் தவத்தினாற் பெற்ற பிதாவின் பொருள் அடையார்களென்றும், பிதாவுக்குப் பணிவிடை செய்யாது உலகத்திலேயும் பாதகரென்று உலகர் சொல்லும்படி பழிப்புக்கு உடலெடுத்தவர்களென்றுங் கூறியது.

1267

(இ-ள்,) செவ்வாய் 9-ல் நிற்கவும், 2-க்குடையவர் 9-ல் அமரவும், 3-க்குடையவரும், சூரியனும 8-ல் நிற்கவும், அவரைப் பாபர்கள் பார்க்கவும், சுபர்கள் 6-8-12-ல் நிற்கவும், பாபர்களெல்லாம் சுப ஸ்தானங்களிலடையவும் பெற்ற ஜாதகர் தந்தையினால் கொடுக்கப்பட்ட பொன் பூமி முதலியவற்றை வேசியர்கள், சூதர்கள், பாதகர்களுக்குங் கொடுத்துவிட்டு ஒரு காசும் பெறாதவராகி, நல்லோர் இவனை சித்திரத்திலுமெழுதார்களாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வித்தை பாவகம்

1268 - 1269

(இ-ள்.) 9-ல் சந்திரன் நிற்கவும், 9-க்குடையவர், லக்கினாதிபதி, புதன் ஆகிய மூவரும் 4-ல் நிற்கவும், 4-க்குடையவர் 2-ல் நிற்கவும் பெற்றாலும்,

[2] 2-லேனும் 5-லேனும் சந்திரன் நிற்கவும், 9-ல் சுக்கிரனும் 4-க்குடையவரும் அமரவும், 2-ல் சுபர்கள் நிற்கவும், சந்திரனை 9-க்குடையவர் பார்க்கவும் பெற்றாலும்,

[3] 9-க்குடையவரைச் சுக்கிரனுங் குருவும் பார்க்கவும், அவர்களை எதிர்ப்பார்வையாகப் புதனும் பார்க்கவும், சந்திரனும் 4-க்குடையவருங் கூடி 2-ல் நிற்கவும் பெற்றாலும்,

[4] லக்கினத்தில் சந்திரனுக்கு 4-க்குடையவர் நிற்கவும், 9-ல் சுக்கிரன், புதன், சந்திரன், லக்கினாதிபதி ஆகிய மூவர்களும் வலி பெற்று நிற்கவும், அவர்களைக் குரு பார்க்கவும், பெற்றாலும்,

[5] கேந்திரத்தில் குரு நிற்கவும், 9-ல் 2-4-க்குடையவர்கள் நிற்கவும், அவர்களை 5-க்குடையவர் பார்க்கவும், லக்கினாதிபதி சிம்மாசனாங்கிஷத்தில் வலி பெற்று நின்றாலும்,

[6] 9-க்குடையவரும், லக்கினத்திற்கு அங்கிஷாதிபதியும் ஆகிய இருவரும் 2-ல் நிற்கவும், அவர்களோடு சுக்கிரனும் 2-க்குடையவருங் கூடி நிற்கவும், 5-ம் இடத்தைக் குரு பார்க்கவும் பெற்றாலும்,

[7] 4-ம் இடத்தில் 8-9-2-க்குடையவர்களும், குரு, சந்திரன், சுக்கிரன் ஆகிய அறுவர்களும் நிற்கவும் பெற்றாலும், இந்த ஏழுதரமுள்ள ஜாதகர்களும் வித்தையில் வல்லவர்களாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1270

(இ-ள்.) 2க்குடையவர் ஆட்சி உச்சம் பெற்று செவ்வாய் சூரியனோடு கூடி கேந்திர மடையவும், இலக்கினாதிபதியும் கேந்திரத்திருக்கவும், 4க்குடையவர் திரிகோண மடையவும், புதனுக்கு 5ல் சந்திரன் ஆட்சி பெற்று நிற்கவும், கேது குருவுக்கு கேந்திர மடையவும் பெற்ற ஜாதகர் ஞானம், உண்மை, வித்தை, பொருள், பலம் களத்திர சுக முடையவராம்.

பிதிர் யோகம்

1271

(இ-ள்.) சந்திரன் 5ல் நிற்கவும், அவரைக் குரு பார்க்கவும், சூரியன் திரிகோணங்களில் வலிபெற்று நின்றாலும்,

[2] சந்திரனின்ற ராசியாதிபதியும், செவ்வாய் நின்ற ராசிபாதிபதியும், தனபாக்கியாதிபதி ஆகிய மூவர்களும் திரிகோண கேந்திர மடையவும், அவர்களைக் குரு பார்க்கவும், இலக்கினத்தில் சூரியன் நிற்கப் பெற்றாலும்,

[3] 9ல் 12க்குடையவரும், இலக்கினாதிபதியும், குரு ஆகிய மூவரும் நிற்கவும், அவர்களை 9க்குடையவர் பார்க்கவும் அல்லது கூடி நிற்கவும், சூரியன், குரு இவர்கள் கூடி கேந்திர மடையவும் பெற்ற 3-தரமுள்ள ஜாதகர்களுடைய தந்தை சுக மாகிய யோக முடையவராம்.

1272

(இ-ள்.) செவ்வாய்க்கு 9க்குடையவர் 9ல் நிற்கவும், 6-10 க்குடையவர்கள் சந்திர கோணமடைந்து வலி பெற்று நின்றாலும்,

[2] 12க்குடையவர் 9ல் நிற்கவும், 9க்குடையவர் 12ல் அமரவும், 6க்குடையவர் லக்கினத்தில் வலிபெற்று நின்றாலும்,

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[3] குருவினோடு 12-9க்குடையவருங் கூடி திரிகோண கேந்திர மடையவும், சூரியனும், சந்திரனுக்கு 9க்குடையவருங் கூடி 2ல் நின்றாலும்,

[4] 12க்குடையவர் 5ல் நிற்கவும், 9க்குடையவர் 6ல் அமரவும், அவர்களைச் சந்திரனுக்கு 9க்குடையவர் பார்க்கவும்,சூரியன் உச்சமடைந்து நின்றாலும்,

1273

(இ-ள்.) 5ல் குரு நிற்கவும், குருவின் கேந்திரத்திற் சூரியன் உச்சமடைந்து ஆட்சியடைந்த செவ்வாயுடன் கூடி நிற்கவும், 5க்குடையவர் கேந்திர மடையவும்,சுக்கிரன் சந்திரனுக்கு 1 ல் நிற்கவும் பெற்ற 5-கரமுள்ள ஜாதகர்களும் செல்வம், பூரண வயது தந்தையின் பொருள்உடையவராய் வாழ்பவராம்.

பிதிர் மாரகம்

1274

(இ-ள்.) பிதாவினுடைய மாரகங்கள் வரும் திசை புசிப்புகளைச் சொல்லுமாறு என் குருவின் அருளைத் துணையாகக் கொண்டு துணிந்தனம்.

9க்குடையவரோடு கூடினவர் 2க்குடையவர் இவர்களைப் பார்த்தவர்களும், சந்திரனுக்கு 9க்குடையவர் நின்ற ராசிக்கு மேற்கூறியபடி நின்றவர்களுடைய திசையிலும், 9க்குடையவருக்கு இரண்டு பாரிசத்தினின்றவர்கள் திசையிலும், 9க்கு 8க்குடையவரோடு நின்றவர்களும், பார்த்தவர்களுடைய திசையிலும், 2க்கு 9க்குடையவர் திசையிலும், 9க்கும், 8க்கும், 7க்குடையவர் புசிப்பில் பிதிர் மாரகமென்றும் ; இன்னும்,

1275

(இ-ள்.) 10க்குடையவர் திசையில் சூரியனுக்கு 7-8க்குடையவர் புசிப்பினும் 2க்குடையவர் திசையிலும், சந்திரனுக்கு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

8-9-க்குடையவர் புசிப்பினும், சந்திரனுக்கு 9-க்குடையவர் திசையினும், சூரியனோடு சேர்ந்தவர் புசிப்பினும், 3-க்குடைய வர் திசையிலு ர, சூரியனுக்கு 7-க்குடையவர் புசிப்பினும், 9-க் குடையவர் திசையில் சூரியனுக்கு 8 க்குடையவர் புசிப்பினும் பிதாவின் மாரகங்களென்று கூறல் வேண்டுமாம்.

1276

(இ-ள்) சந்திரனுக்கு 9-க்குடையவர் திசையிலும், சந்திர னுக்கு 7-க்குடையவர் புசிப்பினும், சந்திரனுக்கு 8-க்குடைய வர் புசிப்பினும் பிதா மாரகமென்றுங் கூறப்படுமாம்.

முன்கூறிய திசை புசிப்பில் பிதுர் மாரகங் கூறி யிருக் கின்றமையால், அதற்கு லக்கினங்களைச் சுத்தப்படுத்தி நன் ருக வறிந்து முன் கூறிய தீபம்போலுள்ள சக்கரங்களையும், உயிர்த்திசை வலியும், கோசரச் சனி குரு பலங்களும், நின்ன வாக வறிந்து 9-க்கு 8-10-க்குடையவர், சூரியன் இவர்க ளுடைய வலியறிந்து பிதாவின் மாரகங்கள் கூறல் வேண்டு மாம்.

1277

(இ-ள்.) இன்னமும் இதில் வினய முண்டென்று கூறிய கணிதநூ லிலக்கண மறிந்த ஜெயம் பொருந்திய சித்தர்க ளுடைய கருத்தையுங் கூறுகின்றனம்: பிதாவின் ஆயுள் பலத்தும், ஜாதகன ஆயுள் குறைந்தும், சராசியென்றும், திர ராசி யெனறும் சுழன்ற பேதகமும், கணித கிரகஸ்புடத் தினல் எடுத்த லக்கினத்தி னுரிமையும், லக்கினுதி னின்ற முறையும், சூரியன், சந்திர னின்ற உரிமையும், புத்திமான்க ளாகிய கற்றறிந்தவரிட முணர்ந்த துணிவினுல் இப்படியுங் காட்டுவார்களாம்.

பத்தாம் பாவகம்

1278

(இ-ள்.) பத்தாம் பாவகத்தில் மேன்மையான வேதாந்த மும், கங்கா ஸ்நானமும், கருமங்களும், புத்திர கர்மமும், தான்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

செப்புங் கருமங்களும், சன்னிபாச முதலியவற்றைக் கூறுவதற்கு கடவுளின் பாதங்களை வணங்கினேனாகவும்.

குரு வணக்கம்

1279

(இ-ள்.) பலவித வேதங்களையும் உணர்ந்த அகஸ்தியரானவர் தம் அடியார்களுடைய குறைகளை நீக்குவதுபோல் முல்லை நிலத்தில் வாசஞ் செய்யும் ஆயர் குலத்திற் பிறந்த திருக் குடந்தைப் பதியில் வாழும் வீரப்பபிள்ளை அவர்கள் என்னும் அவதாரம் பூண்டு நன்மை பொருந்திய என்னுடைய ஆசிரியபாது இருபாதங்களும் எந்நாளும் நம்மை விடாதென்று கூறுகின்றனம்.

சன்னியாச பாவகம்

1280

(இ ள்.) 1-9-12-க்குடையவர்கள் ஆகிய மூவருங் கேந்திரமடையவும், அவர்களைக் குரு பார்க்கவும் பெற்றாலும்,

[2] 11-9-10-க்குடையவர்கள் உச்சமடையவும், 2-க்குடையவர் 4-ல் நிறகவும் பெற்றாலும்,

[3] 8-10 க்குடையவர்கள் சந்திரனுக்கு 9-ல் நிற்கவும், அவர்களைச் சுக்கிரன் பார்க்கவும் பெற்றாலும்,

[4] 9-ல் சந்திரனோடு குரு கூடி நிற்கவும், இலக்கினத்திற் சனி அமரவும், 10-க்குடையவர் உச்சமடையவும் பெற்றாலும்,

[5] சுக்கிரன் இலக்கினத்தினின்று சனியைப் பார்க்கவும் பெற்ற 5-தரமுள்ள ஜாதகர்களும் சாகாதிருக்கும்படி மும்மலங்களையுங் கடந்து கன்மத்தை நீக்கி உண்மைச் சமாதிகளைக் காண்பவர்களாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1281

(இ-ள்) 9-1-10-5-7க்குடையவர்களாகிய ஐவரும் 9ல் நிற்கவும், அவர்களைக் குரு பார்க்கப் பெற்றாலும்,

[2] 1-4-5க்குடையவர்களாகிய மூவர்களும் 2ல் நிற்கவும், அவர்களைக் குரு பார்க்கப் பெற்றாலும்,

[3] சந்திரனுஞ் சனியு மிருந்த ராசியாதிபதிகளை இலக்கினாதிபதி பார்க்கவும் பெற்றாலும்,

[4] சந்திரனுக்கும் இலக்கினத்திற்கும் 4க்குடையவர்களாகிய இருவர்களும் குரு பார்வையடைந்து 10ல் நிற்கப் பெற்றாலும், இந்த நான்கு தரமுள்ள ஜாதகர்களும் பரிசுத்தமாகிய சைவ சித்தாந்த துறையில் மூழ்கி, உண்மை ஞான பரிசுத்த நீராடி, சிவானந்த அமுதத்தில் உறைந்திருப்பவர்களாம்.

தீர்த்த யாத்திரா பர்வம்

1282

(இ-ள்.) 12ல் புதனும், சூரியனும் நிற்கவும், 10க்குடையவர் குருவோடு கூடி திரிகோணமடைந்தாலும், 10க்குடையவர் உச்சமடையவும், 10ல் சந்திரன் நிற்கவும், இலக்கினாதிபதி 10க்குடையவரைப் பார்த்து நின்றாலும், 10க்குடையவரும், சுக்கிரனும் உச்சமடைந்த சந்திரன் பார்வையைப்பெற்று திரிகோணமடைந்தாலும், சுக்கிரனோடு இராகு கூடி 10ல் நிற்கவும்,10-2-9க்குடையவர்கள் ஆகிய மூவரும் 9ல் நிற்கவும் பெற்றாலும், இந்நான்கு தரமுள்ள ஜாதகர்களும் சிவாகம விதி நெறியிற்றேர்ந்து பிரதானமாகிய தெய்வத்தன்மை பொருந்திய கங்கை நீராடி மூவர்களுங் கூறிய வேதங்களைப் படித்து முடிவினிற் சிவபுரம் அடைவார்களாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

யாகாதி கருமம்

1283

(இ-ள்.) 10க்குடையவர், சனி, புதன் ஆகிய மூவர்களும் சந்திரனுக்கு 10ல் நிற்கவும், அவர்களைக் குரு பார்க்கப் பெற்றாலும், இலக்கினாதிபதி சந்திரனோடு கூடி 2ல் நிற்கவும், அவரைக் குரு பார்க்கப் பெற்றாலும், சந்திரனுக்கு 10க்குடையவர் உச்ச மடையவும், அவரை இலக்கினத்திற்கு 10க்குடையவருங் குருவுமாகிய இருவரும் பார்க்கப் பெற்றாலும், புதன், குரு, இராகு ஆகிய மூவர்களுமிருந்த இராசியாதிபதிகள் சூரியன் வீடாகிய சிம்மத்தில் நிற்கவும, இவர்களை 9க்குடையவர் பார்க்கவும் பெற்றாலும், கேது, புதன், 10க்குடையவர்களாகிய மூவர்களும் குருவுக்கு 10ல் நிற்கவும், அவர்களை 9க்குடையவர் பார்க்கவும் பெற்றாலும், 12-9க்குடையவர்களாகிய இருவரும் 10ல் நிற்கவும், உச்சமடைந்த புதனோடு கேது பகை பெற்று நின்றாலும், இந்த ஆறு தரமுள்ள ஜாதகர்களும் வேள்விக்குடையவர்களாம்.

ஜீவன பாவகம்

1284

(இ-ள்.) சந்திரன், செவ்வாய் 10க்குடையவர்களாகிய மூவர்களுங் கூடி 4ல் நிற்கப் பெற்ற ஜாதகர் ஜபத்தினாலும், நிலத்தினாலும் ஜீவன முடையவராம்.

[2] 4க்குடையவரோடு சந்திரனுக்கு 4க்குடையவர் கூடி 10ல் நிற்கவும், இவர்களை 9க்குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகர் செட்டாகிய ஜீவனம் செய்பவராம்.

[3] 9-3க்குடையவர்கள் கூடி 4-ஆமிடத்தில் நட்படைந்து நிற்கப் பெற்ற ஜாதகர் கணக்கில்லாத பொருளை வைத்து வியாபாரஞ் செய்பவராம்.

[4] 1-10-4-7க்குடையவர்களாகிய நால்வருங் கூடி 7ல் நிற்கப் பெற்ற ஜாதகர் மந்திரி எனக் கூறுக.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[5] 9-10-க் குடையவர்கள் 9-ல் நிற்கவும், 11-க்குடையவர் 10-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் உத்தியோகமும் கீர்த்தியும் அடைபவராம்.

1285

(இ-ள்.) லக்கினத்தில் 10-7-க் குடையவர்களாகிய இருவரும் நிற்கவும், 1-2-க் குடையவர்கள் 2-ல் நிற்கவும் பெற்ற ஜாதகன் உத்தியோகத்தை யிழந்து அலைபவனும்.

[2] 9-க் குடையவரும், 9-10-க் குடையவரும், சந்திரனும் ஆகிய மூவர்களும் ஒரு ராசியில் நிற்கவும், அவ்விராசிக்கு 9-ல் குரு நின்று மேற் கூறியவர்களைப்பார்க்கவும் பெற்ற ஜாதகர் உலகம் வணங்கத்தக்க மந்திரி யாவராம்.

[3] 2-ம் இடத்தில் 1-2-க் குடையவர்களாகிய இருவரும் நிற்கவும், 5-க் குடையவரும், குருவும் ஆகிய இருவருங் கூடி சந்திரனுக்கு 10-ல் அமரவும் பெற்ற ஜாதகர் ராஜரீகத்தில் சேவகஞ் செய்பவராம்.

[4] 7-4-10-1-க் குடையவர்களாகிய நால்வர்களுங் கூடி 10-ல் நிற்கப் பெற்ற ஜாதகர் ராஜரீகத்தில் உண்மை உத்தியோகமும், கீர்த்தியு முடையவராம்.

1286

(இ-ள்.) 7-10-க் குடையவர்கள் லக்கினத்தில் நிற்கவும், லக்கினுதிபதி 2-க் குடையவருடன் கூடி 2-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் சத்திய மந்திரியாய் வாழ்பவராம்.

[2] 4-க் குடையவரும், சந்திரனுக்கு 4-க் குடையவருங் கூடி 10-ல் நிற்கவும், அவர்களைச் செவ்வாய் பார்க்கவும் பெற்ற ஜாதகர் ராஜர் கையின் செங்கோலாகித் துஷ்டர்களைச் சுட்டு விடுவராம்.

CC0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[3] 12-9-க் குடையவர்களுஞ் சந்திரனுக்கு 9-க் குடைய வருமாகிய மூவருங் கூடி 10-ல் நிற்கவும், அவர்களைக் குரு பார்க்கவும் பெற்ற ஜாதகர் வேளாண்மைத் தொழிலால் வாழ் பவராம்.

[4] 9-ல் 4-9-க் குடையவர் அமரவும், 10-க் குடையவர் உச்ச மடையவும் பெற்ற ஜாதகர் பூமி, செல்வம், உத்தியோக முடையவராம்.

கரும பாவகம்

1287

(இ-ள்.) 9-க் குடையவர் 10-ல் நிற்கவும், 10-க் குடையவர் 9-லும் நிற்கவும், குரு 3-8-லிருந்து பல மடையவும் பெற்ற ஜாதகர் தாய் தந்தையர்களுக்குச் சமீபத்திலிருந்து கருமஞ் செய்பவராம்.

[2] 10-4-9-க் குடையவர்களாகிய மூவர்களுங் கூடி 7-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் இரண்டு கருமங்களையுஞ் செய்து, தர்மங்கள் பலவுஞ் செய்து முடிப்பவராம்.

[3] சந்திரனுக்கும், லக்கினத்திற்கும், 4-க் குடையவர்க ளாகிய இருவரும் 10-ல் நிற்கவும், 9-க் குடையவர் சுபனு யிருக் கவும் பெற்ற ஜாதகன் தாய் தந்தையின் கருமங்களைக் கனி வாகச் செய்வன். மேற்கூறிய 9-க் குடையவர் பாபராகில், தாய் தந்தையர்களுக்கு அன்னியரால் கருமம் நடக்குமாம். அதற்கு ஜாதகன் அறிவில்லாதவனு மன்று. ஆனல் மன தின்கண் அன்பிலாதவ னென்றுங் கூறுக.

1288

(இ-ள்.) சூரியனுஞ் சந்திரனுங் கூடி திரிகோண மடைய வும், சந்திரனுக்கும், லக்கினத்திற்கும் 10-க் குடையவர்கள் தங்கள் தங்களில் ஆட்சி உச்ச மடையவும் பெற்ற ஜாதகர் கலியாணஞ் செய்வதுபோல் கருமங்கள் செய்பவராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] சந்திரனுக்கு 10க்குடையவர் வலுப் பெற்று ஆட்சி யுச்சமடைந்து நிற்கவும்,10க்குடையவர் தனித்து வலுவடைந்து நிற்கவும் பெற்ற ஜாதகர் பிதிர் முதலிய கருமங்கள் 7-செய்ப வராம்.

[3] 10க்குடையவர் உச்ச மடையவும், 12க்குடையவர் 7ல் நிற்கவும், அவரை 7க்குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகர் தாய் தந்தையர்கள் கருமஞ் செய்து பிறகு மனையாள் கரும முஞ் செய்பவராம்.

[4] 10-3-6-4க்குடையவர்களாகிய நால்வரும் ஆட்சியுச்ச மடையப் பெற்ற ஜாதகர் தாய், தந்தை, சகோதரமாகிய மூன்று கருமஞ் செய்பவராம்.

1289

(இ-ள்.) 1-3க்குடையவர்கள் கூடி 10ல் நிற்கவும், 10க்கு டையவர் 3ல் அமர்ந்து, பலஹீனமடைந்து 5க்குடையவரைப் பார்க்கவும் பெற்ற ஜாதகர் தன் புத்திரனுக்குக் கருமஞ் செய்பவராம்.

[2] 9-5-10க்குடையவர்களாகிய மூவருஞ் சந்திரனுக்கு 10ல் நிற்கப் பெற்ற ஜாதகர் 1-2-புத்திரர்களுக்குக் கருமஞ் செய்து மாரக மாவராம்.

[3] சந்திரனுக்கு 5க்குடையவர் 10ல் நிற்கவும், அவரைச் சந்திரனுக்கு 10க்குடையவர் பார்க்கவும் பெற்றாலும்,

[4] 2க்குடையவரும் குருவுங் கூடி 10ல் நிற்கவும், அவர் களைச் செவ்வாய் பார்க்கவும் பெற்றாலும்,குரு, சுக்கிரன்,சனி, 10க்குடையவர்களாகிய நால்வர்களுங் கூடி 5ல் நிற்கப் பெற் றாலும், 8க்குடையவர், செவ்வாய், 10க்குடையவருமாகிய இம் மூவர்களுங் கூடி 5ல் நிற்கவும் பெற்றாலும், இந்நான்கு தர முள்ள ஜாதகர்களுந் தம் புத்திரர்களுக்குக் கருமஞ் செய்பவர் களாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1290

(இ-ள்.) இதுவரையில் கூறிய கரும விதிகளில் கணித மறிந்த ஒரு புத்திமான் கூறுகின்றனர். என்னவென்றால் கருமாதிபதி கரும ஸ்தானத்தில் நின்றவர்கள், கருமாதிபதியைப் பார்த்தவர்கள், சேர்ந்தவர்கள், சந்திரனுக்கு 10க்குடையவர் ஆகிய இவர்கள் மேற்கூறியவர்களைப்போல் செயலடைந்து வலுப் பெற்றவர்கள் திசையிலும், குருவோடு சேர்ந்தவர்களுடைய திசையிலும், கரும ஸ்தானத்திலிருந்த கருமாதிபன் அவரை அவர்களைப்போல் வலி பெற்றவரெவரோ அவர் பொசிப்பிலும்,புண்ணிய கருமங்கள் மற்றொன்று அமையாத காலத்தினும் கோசரங்களிற் சனி, குரு பலன்களை முற்றும் அறிந்து கருமங் கூறுவார்களாம். இம் மார்க்கமல்லாது ஒன்றை விட்டொன்று பிதற்றுவாராகில் இந்த ஜோதிட சாஸ்திரத்திற்கும், சொல்பவர்களுக்கும் கீர்த்தி யில்லையாம்.

பதினொராம் பாவகம்

1291

குரு வணக்கம்

(இ-ள்.) பாக்கியம், இலாபம், நல்லறிவு, செல்வம், முன்னோன் ஆகிய பலன்களை 11-ஆமிடப் பாவகத்தால் கூறுவதற்கு கணித வல்லவராகியும், என் குருவாகியும், திருக்குடந்தையில் வளரும் வீரப்ப பிள்ளை என்னும் ஜோதிடக் களஞ்சியத்தினது உபயபாதங்களும் என் நாவினிடை நின்று சொற்பிறளாமல் நடத்துமென்று உறுதியாகத் துணிந்தது.

பாக்கிய பாவகம்

1292

(இ-ள்.) 10-11க்குடையவர்கள் 9ல் நிற்கவும், 9க்குடையவர் 2ல் அமரவும், 2க்குடையவர் 2ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் பாக்கியமும், யோக்கியமும் உடையவராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] 11-க்குடையவர் உச்சம் பெற்று கேந்திர மடையவும், அவரை 4-க்குடையவரும், புதனும் கூடி பார்க்கவும், செவ்வாய் திரிகோண மடையவும் பெற்ற ஜாதகருக்குக் கல்வியும் பொருளும் அஸ்வ யோகமும் உண்டாகுமாம்.

1293

(இ-ள்.) 2-11-க்குடையவர்கள் கூடி கேந்திர மடையவும், அவர்களை இலக்கினாதிபதியும், 4-க்குடையவரும் பார்க்கவும் பெற்ற ஜாதகர் 2-3-வீடுகள் கட்டித் துணைவரோடு செல்வ மோங்கி யிருப்பவராம்.

[2] 11-10-க்குடையவர்கள் இலக்கினத்தில் நிற்கவும், 7-5-க்குடையவர்கள் 11-ல் நிற்கவும், அவர்களைக் குரு பார்க்கவும் பெற்ற ஜாதகர் கல்வியுஞ் செல்வமும் பெற்று சைதன்ய சிவாநுபவ மடைவராம்.

1294

(இ-ள்.) இலக்கினத்திற்கும், சந்திரனுக்கும் 11-க்குடையவர்கள் கூடி 5-ல் நிற்கவும், 10-9-க்குடையவர்கள் கூடி இலக்கினத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகர் கல்வி, செல்வம், வாகனமுடையவராம்.

[2] 5-க்குடையவர் கேந்திர மடையவும், அக் கேந்திராதிபதி 5-ல் நிற்கவும், 11-க்குடையவரும், 11-க்குடையவருக்கு 11-க்குடையவரும் ஆகிய இருவரும் கேந்திர மடையவும் பெற்ற ஜாதகருக்குக் கல்வி செல்வ முண்டாகுமாம்.

1295

(இ-ள்.) 8-9-க்குடையவர்கள் ஆகிய மூவரும் 8-12-ல் நிற்கப் பெற்றாலும்,

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] சந்திரனுக்கு 11-2-க்குடையவர்கள் ஆகிய இருவரும் 8-ம் இடத்தில் நிற்கவும், அவர்களைச் செவ்வாய் சனி பார்க்கவும், குருவும் 8-க்குடையவருங் கூடி 6-12-ல் நிற்கவும் பெற்றாலும்,

[3] இலக்கினாதிபதிக்கும், இலக்கினத்திற்கும், 11-க்குடையவரும், சந்திரனும் ஆகிய மூவரும் கூடி 9-12-ல் நிற்கவும் பெற்றாலும், இச் சாதகர்கள் தீனர்களென்றுங் கூறுக.

1296

(இ-ள்.) 10-4-க்குடையவர்கள் 11-ல் நிற்கவும், இவர்களைப் புதன் 11-ல் இருந்து பார்க்கவும், இலக்கினாதிபதி 4-ம் இடத்தில் நட்பு பெற்று நிற்கவும் பெற்ற ஜாதகர் செல்வ முடையவராம். 11-க்குடையவரும், 11-க்குடையவ ரிருந்த இராசிக்கு 11-க்குடையவரும், சந்திரனுக்கு 11-க்குடையவரும், 11-க்குடையவ ரிருந்த இராசியாதிபதியு மாகிய நால்வரும் ஒருவருக்கொருவர் கேந்திர மடைந்து நிற்கப் பெற்ற ஜாதகர் செல்வ முடையவராம்.

1297

(இ-ள்.) சந்திரனுக்கு 11-க்குடையவரும், 9-2-க்குடையவர்களாகிய மூவரும் சந்திரனுக்கு 11-ல் நிற்கவும், 7-ம் இடத்தை சனி பார்க்கவும் பெற்றாலும், 1-11-2-க்குடையவர்கள் ஆகிய மூவரும் கேந்திர மடையவும், 4-க்குடையவர் ஆட்சி நட்பில் நிற்கவும், பாபர்கள் 6-8-12-ல் மறைந்து நிற்கவும் பெற்றாலும், இந்த இரண்டு தரமுள்ள ஜாதகர்களும் இலக்குமிக்குச் சமானமுள்ள பெண்ணை விவாகம் செய்பவராயும், விஷ்ணு அம்ஸ முடையவர்களாயு மிருப்பவர்களாம்.

1298

(இ-ள்.) குருவும் சந்திரனுக்கு 4-க்குடையவருங் கூடி கேந்திர மடையவும், சூரியன் 4-ல் நிற்கவும், 11-ல் சந்திரனுக்கு 10-க்குடையவர் நிற்கவும் பெற்றாலும், சுபர்களுடைய மத்தி

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

யில் 11-க் குடையவர் உச்ச மடையவும், அவ் விராசியாதிபதி 11-ல் நிற்கவும், பெற்றாலும், இந்த இரண்டு தரமுள்ள ஜாத கர்கள் எத்தொழிலைச் செய்தாலும் லாபமுண்டாம்.

1299

(இ-ள்.) 1-11-க் குடையவர்களோடு 5-க் குடையவர் வலுப் பெற்று நிற்கவும், அவர்களைக் குளிகன் பார்க்காதிருக்கவும் பெற்றாலும், 9-5-க் குடையவர்கள் லக்கினத்தில் நிற்கவும், சந் திரனுக்கு 5-க் குடையவர் 11-ல் அமரவும், 1-4-க் குடையவர் கள் சுப ஸ்தானங்கள் அடையவும் பெற்ற இவ் விரண்டு ஜாத கர்களும் சத்தியந் தவறாது பொருள் மிகுதி யுடையவராம்.

1300

(இ-ள்.) 5-1-க் குடையவர்கள் கூடி 11-ல் நிற்கவும், 5-ம் இடத்திற் குருவும், 11-க் குடையவரும் அமரவும், 2-க் குடைய வர் திரிகோணமடையவும் பெற்றாலும், லக்கினாதிபதி, சந்திர லக்கினாதிபதி, 11-க் குடையவர் ஆகிய மூவர்களுங் கூடி 5-ம் இடத்தில் சுப முகூர்த்தராய் நிற்கவும் பெற்றாலும், கன்னியா லக்கினமாகி அதிற் புகன், சுக்கிரன், செவ்வாய் ஆகிய மூவ ருங் கூடி நிற்கவும் பெற்றாலும், இம் மூன்று தரமுள்ள ஜாத கர்களும் செல்வ முள்ளவர்களாம்.

1301

(இ-ள்.) சந்திரனுக்கு 2-க் குடையவர் 12-ல் நிற்கவும், 11-க் குடையவர் 5-ல் அமரவும் பெற்ற ஜாதகர் பொருள் மிகுத்து நல்லறிவோடிருந்தும் நேத்திர நோயுண்டாகுமாம்.

[2] இலக்கினத்தில் 3-10-க் குடையவர்கள் நிற்கவும், அவர்களை லக்கினாதிபதி பார்க்கவும், செவ்வாய் சூரியனோடு கூடி ஆட்சி யடைந்து நிற்கவுட் பெற்ற ஜாதகர் மிகுந்த செல் வத்தை நீக்கிவிட்டு தன் மனைவியோடு மயங்கி அயல் தேசம் போவாராம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1302

(இ-ள்.) 8-ம் இடத்தில் 2-க் குடையவர் நிற்கவும், 2-ல் 11-க் குடையவர் அமரவும், செவ்வாய் 5-ல் நிற்கவும், அவரை குரு பார்க்கவும், 4-க்குடையவர் சந்திரன் வீடாகிய கடகத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகர் 3-சகோதரரை ஆயுள் வரையில் தன்னருகில் வைத்துச் சகல பொருளு மடைந்து சிவபதஞ் சேர்வர்களாம்.

1303

(இ-ள்.) குரு 11-ல் நிற்கவும், 11-க் குடையவர் சந்திரனுக்கு 11-ல் செவ்வாய் பார்வை பெற்று நிற்கவும், 7-5-க் குடையவர்கள் மாறி நிற்கப் பெற்றாலும்,

[2] இலக்கினாதிபதியும், செவ்வாயும், 11-க் குடையவருமாகிய இம் மூவர்களும் நின்ற ராசியாதிபதி மூவர்களும் 11-ல் நிற்கவும், சந்திரனுக்கு 11-ல் குரு நிற்கவும் பெற்றாலும், இவ்விரண்டு தரமுள்ள ஜாதகர்களுடைய தமையன் எந்நாளும் செல்வ முடையவராம்.

1304

(இ-ள்.) 11-ல் இலக்கினாதிபதியும், 2-க்குடையவரும் நிற்கவும், 2-ல் 10-க்குடையவரும், சந்திரனும், 8-க் குடையவரும் ஆகிய மூவரும் நிற்கவும், அவர்களை குருபார்க்கவும், பெற்ற ஜாதகருடைய தமையன் செல்வ முடையவராம்.

[2] செவ்வாய், குரு, 9-11-க்குடையவர்களாகிய நால்வரும் இலக்கினத்தில் நிற்கவும், 7-2-க் குடையவர்கள் ஆகிய மூவரும் 2-ல் நிற்கவும், 11-க் குடையவர் வலு குறைந்து நிற்கவும் பெற்ற 2-தரமுள்ள ஜாதகர்களும் பொய்யாகிய வித்தையிலும், புதையலின் இச்சைக்குள்ளாவார்களாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1305

(இ-ள்) 8-12ல் 2-8-9க்குடையவர்களாகிய மூவரும் நிற்கவும், சந்திரனுக்கு 11-2க்குடையவர்களாகிய இருவரும 2-5க் குடையவர்களையும், செவ்வாயையும் பார்க்கவும் பெற்றாலும்,

[2] 8-ஆமிடத்தில் 4க்குடையவர் நிற்கவும், 9க்குடையவர் 12-ஆமிடத்தில் மாறி நின்றாலும், அல்லது 12ல் நிற்கப் பெற்றாலும்,

[3] லக்கினாதிபதிக்கு 11க்குடையவரோடு லக்கினத்திற்கு 11க்குடையவரும், சந்திர லக்கினாதிபதியாகிய மூவரும் ஒருவருக்கொருவர் 6-12ல் பலங் கெட்டு நிற்கவும் பெற்றாலும், இந்த 3-தரமுள்ள ஜாதகர்கள் கதிவிதியில்லாது கெடுவார்களாம்.

1306

(இ-ள்.) 11ல் 4க்குடையவருக்கு 11க்குடையவர் நிற்கவும், 8ல் லக்கினாதிபதியும், 9க்குடையவரிருந்த ராசியாதிபதிக்கு 11க் குடையவர் அமரவும் பெற்ற ஜாதகன் மண், பொன், பெண் முதலிய செல்வமிருந்தும் ஒரு லாபமு மில்லாத மார்க்கமற்ற மூடனும்.

[2] 11க்குடையவரோடு 3க்குடையவரும் சுபர்களுங் கூடி 11ல் நிற்கவும், அவர்களைக் குரு பார்க்கவும், 7ல் சந்திரனும் 8ல் சுக்கிரனும் நிற்கவும் பெற்ற ஜாதகன், முன்னோர்கள் தேடிய பொருளை வேசையர்க் கழித்துத் துயரப்படும் ஈனனும்.

1307

(இ-ள்.) சந்திர னின்ற ராசியாதிபதியும் குருவிருந்த ராசியாதிபதியும், 7க்குடையவருமாகிய மூவர்களும் 2ல் நிற்க

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வும்; இவர்களை 11க்குடையவர் பார்க்கவும், 11ல் 6-9-12க்குடையவர்கள் நிற்கவும் பெற்ற ஜாதகன் வம்பர் திருடர்களுக்குப் பொருளெல்லாந் தோற்பானும்.

[2] குருவிருந்த ராசியாதிபதி 11ல் நிற்கவும், 11க்குடையவர் 12ல் அமரவும், அவரை 4-8க்குடையவர்கள் பார்க்கவும், பெற்ற ஜாதகன் தொட்ட காரியமெல்லாம் விழலுக் கிறைத்த நீர் போலும் ஆகுமாம்.

1308

(இ-ள்.) 6-8-12ல் 11க்குடையவர் நிற்கவும், 8க்குடையவரும், லக்கினதிபதியும் அதில் மாறி நிற்கவும், 2க்குடையவர் சந்திரனுக்கு 6ல் அமரவும் பெற்ற ஜாதகன் தொட்ட தொழிலெல்லாம் சமுத்திரத்திற் கரைத்த பெருங்காயமே யாம்.

[2] 6-ஆமிடத்தில் 2க்குடையவர் நிற்கவும், 4-ஆமிடத்தில் சந்திரனுக்கு 4க்குடையவர் அமரவும், 5ல் 8க்குடையவர் நிற்கவும், அவரைச் சந்திரன் பார்க்கவும், குரு 7ல் அமரவும் பெற்ற ஜாதகன் மரணம் வரையில் இன்பமில்லா தலைவனும்.

1309

(இ-ள்.) 11-3க்குடையவர்களாகிய இருவரும் 12ல் நிற்கவும், இவர்களைச் சனி பார்க்கவும் பெற்ற ஜாதகன் செய்யும் தொழில்களெல்லாம் பழுதுண்டாகுமாம்.

[2] 4-5-6க்குடையவர்களாகிய மூவரும் 12ல் நிற்கவும், 1-11க்குடையவர்களும், குருவும், சந்திரனும் ஆகிய நால்வர்களுங் கூடி பலங் கெட்டு 6-8ல் நிற்கவும் பெற்ற ஜாதகன்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

குணங்கெட்டுக் களவு சூது செய்பவனாய்ப் பொய்பேசித் துயரப் படுந் தோஷியாம்.

1310

(இ-ள்.) 2-11-க்குடையவர்களாகிய இருவருங் கூடி 2-ல் நிற்கவும், இவர்களை 9-க்குடையவர் பார்க்கவும், 4-க்குடைய வர் 3-ல் நிற்கவும், லக்கினாதிபதி பலம் குறைந்து நிற்கவும் பெற்ற ஜாதகன் சூது, பொய், கொலைத்தொழிற் குரியவ னாவனும்.

[2] சனியும் லக்கினாதிபதியு மாகிய இருவரும் 12-ல் நிற்க வும், 5-ம் இடத்தில் 8-9-க்குடையவர்கள் நிற்கவும், 5-க்குடை யவர் 11-ல் நீச மடைந்து தங்கள் தங்களில் பலங் குறைந்து நிற்கவும் பெற்ற ஜாதகன் கனவிலும் நற் செயலில்லாத வனாய் நரகிகளுக்குக் குருவா யிருந்து நாட்டைவிட்டு அப்பால் வாழ்பவனும்.

1311

(இ-ள்) 5-4-க்குடையவர்கள் கூடி 11-ல் நிற்கவும், 8-ம் இடத்தில் 2 க்குடையவர் பலங் குறைந்து நிற்கவும் பெற்ற ஜாதகன் தாரித்திரியனும்.

[2] குருவும் 11-க்குடையவருமாகிய இருவரும் 12-ல் நிற்க வும், அல்லது சந்திரனுக்கு 4-ல் அமரவும், 3-க்குடையவர் சூரியனோடு கூடி 4-ல் நிற்கவும, அவர்களை நீசர்கள் இருபாலும் நோக்கவும் பெற்ற ஜாதகன் மாய சூதாட்டிற் றிரிந்து வயிறு வளர்க்கும் வம்பனும்.

1312

(இ-ள்.) 11-12-க் குடையவர்கள் கேந்திர மடையவும் சூரியனைச் சந்திரன் பார்க்கவும், 11-ல் செவ்வாய் நிற்கவும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பெற்ற ஜாதகனுக்கு இளைய சகோதரத்தால் நன்மை யில்லை யென்றும், ஜேஷ்ட சகோதரமே யில்லை யெனவுங் கூறுக.

[2] 8-ம் இடத்தில் இலக்கினத்திற்கும், சந்திரனுக்கு 11-க் குடையவராகிய இருவரும் நிற்கவும், 8-க்குடையவர், சூரியன், செவ்வாய் ஆகிய மூவரும் கூடி 11-ல் அமரவும் பெற்ற ஜாதகன் தன் தமையன் என்று மாரக மாவாரென்று எண்ணி யெண்ணித் தானே மாரக மடையும் வஞ்சகனும்.

[3] 10-ல் 11-க்குடையவர் நிற்கவும், 11-ல் சந்திரனுக்கு 10-க்குடையவர் அமரவும், 8-ல் 8-க்குடையவர் நிற்கவும் அவரைச் செவ்வாய் பார்க்கவும் பெற்ற ஜாதகன் முன் கூறிய பலனுடையவனேயாம்.

1313

(இ-ள்.) 11-க்குடையவரும், சந்திரனுக்கு 11-க்குடையவருங் கூடி 8 -ல் நிற்கவும், அவர்களைப் பகையுடன் சனி பார்க்கவும், 2-க்குடையவர் 12-ல் நிற்கவும், 6-8-12-க்குடையவர்கள் வலுவடையவும், சுபஸ்தானாதிபதிகள் பலங் குறையவும் பெற்ற ஜாதகன், தந்தைக்குச் சமானமாகிய தமையனோடு காலமுழுதுந் துன்புவம்புசெய்து அவர்களுக்கு முன்பாகவே மாரக மாவனும். இந்த வகை யனைத்தும் அறிவினால் அளந்து கண்டவர்க ளத்திசை புசிப்பு மறிந்து சொல்வார்களாம்.

பனிரெண்டாம் பாவகம்

1314

(இ-ள்.) 12-4-க் குடையவர்களும், குருவும் ஆகிய மூவர்களுங் கூடி 9-ல் நிற்கப் பெற்ற ஜாதகருக்குச் செல்வமும் புகழும், அஸ்வ யோகமு முண்டாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] 12க்குடையவரை 6க்குடையவர் பார்த்துப் பாபரோடு கூடி நிற்கவும் பெற்ற ஜாதகன் 8க்குடையவர் திசையில் அவர் புசிப்பில் துயரமடைந்தும் பொருளோடு தந்தையையு மிழந்து சோர்வு படுவனும்.

1315

(இ-ள்.) பாபர்கள் 2ல் நிற்கவும், 7-ஆமிடத்தைச் செவ்வாய் பார்ப்பதோடும், பாபிகளுடன் கூடி நிற்கவும் பெற்ற ஜாதகர் தம் மனைவியால் தவறுண்டு மற்றொரு பெண்ணை மணஞ் செய்து புத்திர செல்வமும், புகழு மோங்கி வாழ்பவராம்.

1316

(இ-ள்.) சந்திரனுக்கு 8க்குடையவர் சுபஸ்தான மேறி நிற்கவும், 9க்குடையவர் ஆட்சி உச்சமடையவும், அவரை குரு பார்க்கவும் பெற்ற ஜாதகர் இராஜ செல்வமடைந்து குறைவில்லாமல் வாழ்பவராம்.

1317

(இ-ள்.) 10க்குடையவர் பகையின்றி மித்துருவோடுகூடி திரிகோண மடையவும், அவரைப் பூரண சந்திரனும், 4க்குடையவரும் பார்க்கவும் பெற்ற ஜாதகன் மிகுந்த பாக்கியவானென்றும், பகை, பிணி யில்லாதவ னென்றும், புத்திர மித்திர களத்திர சுகமும், ஆயுள் விருத்தியு முடையவனும்.

1318

(இ-ள்.) 2க்குடையவர் 9க்குடையவரோடு கூடி 12ல் நிற்கவும், அவர்களைச் சுபர்கள் நோக்காது பாபர்கள் பார்க்கவும் பெற்ற ஜாதகன் ஏழையாயும், மனத்தின்கண் எப்பொழுதும் கவலை யுள்ளவனயும், நன்மை யடையாது தீயனு மாவனும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1319

(இ-ள்.) 8ல் 3க்குடையவர் நிற்கவும், இவரை சுக்கிரன் பார்க்கவும், 8க்குடையவர் சுபஸ்தானத்தில் நிற்கவும் பெற்ற ஜாதகன் நேத்திர வியாதியினால் துன்ப மடைவனும்.

[2] 12க்குடையவர் சனியோடு கூடி திரிகோண மடையவும், இவர்களை 9க்குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகர் சிவ யோக மார்க்கத்தில் நிற்பவராம்.

1320

(இ-ள்.) 6க்குடையவர் 12-ஆமிடத்தைப் பார்க்கப் பெற்ற ஜாதகன் படுபாதகனாகி நரககதி யடைவானும்.

[2] இலக்கினத்தைச் சந்திரன் பார்க்கவும் பெற்ற ஜாதகன் தந்தையினுடைய பொருளிழந்து அயல் தேசம்போவனும்.

[3] சூரியன் 7-8-9ல் நிற்கவும், உபய ராசிகளாகிய நான்கும் கிரக மில்லா திருக்கவும் பெற்ற ஜாதகர் பரதேசி யென்றும் கூறுக.

1321

(இ-ள்.) 12க்குடையவரைச் சனியும், 4க்குடையவரும் பகைத்துப் பார்க்கவும் பெற்ற ஜாதகன் அயல் தேசங்களில் பிரயோசன மில்லாது அலைவானும்.

[2] சுபர்கள் 12ல் நிற்கவும், 6-8ல் சுபக் கிரகம் 12க்குடைய சனியோடு கூடி நிற்கவும், அல்லது சனி பார்க்கவும் பெற்ற ஜாதகன் தன் செயலற்றுத் துணைவர்களையு மிழந்து காடு மலைகளில் அலைவனும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

1322

(இ-ள்.) 8-க் குடையவரும், இராகுவும், சனியும் ஆகிய மூவர்களும் கூடி வலுப்பெற்று 12-ல் நிற்கப்பெற்ற ஜாதகன் கெடுதி யுடையவனாய் ரௌரவாதி நரக மடைவானும்.

[2] பாபர்களோடு சுக்கிரன் கூடி 12-ல் நிற்கப் பெற்ற ஜாதகன் தாய்க்குச் சமானமானவர்களைப் புணருபவனும்.

[3] சுக்கிரன் செவ்வாயோடு கூடி 1-2-ல் நிற்கப் பெற்ற ஜாதகன் கீழ்ச் சாதிகளைப்போல் சுக மடைவானும்.

1323

(இ-ள்.) 12-ல் பாபர்கள் பகைபெற்று நிற்கப் பெற்றாலும்,

[2] சந்திரன், சனி, செவ்வாய் ஆகிய மூவரும் 12-ல் நிற்க அல்லது பார்க்கப் பெற்றாலும், சந்திரனும், சூரியனுங் கூடி 12-ல் நிற்கப் பெற்றாலும்,

[3] 6-8 க் குடையவர்கள் பாபர்களாகி 12-ல் நிற்கவும் பெற்றாலும்,

[4] 12-ல் நால்வர்கள் கூடி நின்றாலும், இந் நான்கு தரமுள்ள ஜாதகர்களுக்கும் பூமி, பொருள் சிதைந்து போகுமாம்.

1324

(இ-ள்.) 2-ல் சுபர்கள் 4-க் குடையவரோடு கூடி நிற்கப் பெற்ற ஜாதகன் சினேகிதருக்காக நன்மையான செலவு செய்து பொருள் இழப்பானும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

[2] குரு 12-ல் நிற்கப்பெற்ற ஜாதகர், புலவர்கள், வேதியர்கள், சொந்த பந்துக்கள், தாரித்திரியர்கள் இவர்களுக்குத் தன் சுயத்தில் பொருள்களை யெல்லாம் வாரி தானங் கொடுப்பவராம்; மேலும், வறுமையில் வாடாதவரென்றும் கூறுக.

1325

(இ-ள்.) 12-க் குடையவர் உச்ச மடையவும், அவரை ஆட்சியடைந்த 9-க் குடையவர் பார்க்கவும் பெற்ற ஜாதகர் பொருள் மிகுதி யுடையவராம்.

[2] 12-க் குடையவர் சுபர்களோடும், சுக்கிரனோடுங் கூடி நிற்கவும், இவர்களைச் சுபர்கள் பார்க்கவும் பெற்ற ஜாதகர் பொன் ஊஞ்சல் சயனத்தில் சுகிப்பா ரென்றுங் கூறுக.

[3] சந்திரனும், சூரியனுங், கூடி 12-ல் நிற்கவும் பெற்ற ஜாதகர் சில நாள் வாழ்ந்து பிறகு செல்வக் குறை யுள்ளவராம்.

1326

(இ-ள்.) சுக்கிரனும், சனியும், சந்திரனுமாகிய மூவர்களுங் கூடி 9-ல் நிற்கப்பெற்ற ஜாதகர் இராஜயோக மடைந்து பாக்கியத்திற் சிறந்தவருமாவராம். 12-க் குடையவர் உச்ச மடைந்தால் உப்பரிகையின் மீது ஊஞ்சலில் உறங்குவராம். சந்திரன், சுக்கிரன் இவர்கள் கூடி 12-ல் நிற்கப் பெற்ற ஜாதகர் மிகுந்த செல்வ முடையவராம்.

கடைப்பூட்டுப் புறநடை

1327

(இ-ள்.) இதுவரையில் கூறிய இலட்சணங்களை முதல் 12-பாகம் வரையில் உணர்ந்ததில் சுப பலன்கள் உயர்ந்திருக்குமாகில் செல்வவானென்றும், பாப பலன் உயர்ந்திருக்குமாகில் தாரித்திரியவான் என்றும் கூறல் வேண்டுமாம்.

சுகர்நாடி என்னும் ஜோதிட சிகாமணி முற்றுப் பெற்றது.

திருமகள் அச்சகம், சென்னை-1—1967

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

M. Gopalakrishnan,
Grad. I.T.E.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy